




தமிழரசு

ஜூலை 1 - 15, 1998 ரூ.3









நமது அன்றாட
பழக்கவழக்கங்களால்,
எய்ட்ஸ் வராது.
அதற்கு நீங்களே
ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

218689
JL
V211 M, N707A
N98. 27. 1.6

## இந்த இதழில்...

★ கலைஞருக்குத் தமிழக ஆளுநர் புகழாரம் ..... 2
★ கலைஞர்கள் எந்நேரமும் ஒன்றுபட்டு இருக்கவேண்டும் - முதலமைச்சர் கலைஞர் உரை ..... 3
★ குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழாவில் - முதலமைச்சர் கலைஞர் உரை ..... 5
★ மனித தெய்வங்களுக்காக நடத்தப்படும் திருவிழா - முதலமைச்சர் கலைஞர் உரை ..... 9
★ தலைமைச் செயலகச் சங்கம் பொன்விழா - முதலமைச்சர் கலைஞர் உரை ..... 13
★ காவிரிப் பிரச்சினை - முதலமைச்சர் கடிதம் ..... 18
★ கலைமாமணி விருது பெற்றோர் ..... 20
★ பெருந்தலைவர் காமராஜர் - கலைஞர் கவிதை ..... 23
★ அரசு ஆணைகள் ..... 24
★ கடலூரில் முதலமைச்சர் கலைஞர் பேச்சு ..... 26
★ விமோசனம் ..... 35
★ பட்டயக் கணக்கர் பயிலகப் பொன்விழாவில் கலைஞர் ..... 41
★ வாழி தோழி! (இலக்கியம்) ..... 44
★ உலகக் கால்பந்தாட்டப் போட்டி ..... 46

**தமிழரசு**
திருவள்ளுவர் ஆண்டு 2029
ஆனி
ஜூலை 1-15, 1998.
மலர் : 29 இதழ் : 1

verified
K

### திருக்குறள்

*பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த*
*மக்கட்பே றல்ல பிற.*

- அறிவில் சிறந்த நல்ல பிள்ளைகளைவிட இல்வாழ்க்கையில் சிறந்த பேறு வேறு எதுவுமில்லை. (கலைஞர் உரையிலிருந்து)

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 4-7-98 அன்று தலைமைச் செயலகத்தில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தும் வகையில், ரூ.38.75 இலட்சம் செலவில், அங்கன்வாடி மையங்களுக்கு 2500 மிதிவண்டிகளை வழங்கினார்.





# கலைஞர் சிறந்த நிர்வாகி - மக்கள் தலைவர்

## தமிழ்மொழியில் அரிய சாதனைகள் செய்பவர் !

*தமிழக ஆளுநர் பாத்திமா பீவி புகழாரம்!*



"கலைமாமணி விருது" வழங்கும் சிறப்பான இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தியாவின் கலாச்சாரம் வளர்வதற்குப் பல்வேறு கலைகள் முக்கியப் பங்கு வகித்துள்ளன. தங்களது பாரம்பரியப் பழங்கால நாகரிகத்தால் இந்தியர்கள் கலாச்சாரத்தின் உச்சிக்கே சென்றுள்ளனர். அதன் காரணமாகச் சீரிய இலக்கியங்கள், கலை நுட்பங்கள் போன்றவைகளை அவர்களால் படைக்க முடிந்தது.

### வளம் மிக்க தமிழ்

அந்த வகையில் தமிழ் மக்கள் முக்கியப் பங்காற்றியுள்ளனர். தமிழின் வரலாறு வித்தியாசமானது மட்டுமல்ல; வியப்பானதும் ஆகும். தான் கொண்டுள்ள இலக்கிய வளங்களால் தமிழ்மொழி தொடர்ந்து செழுமையாக இருந்து வருகிறது !

சங்க காலம் முதலே தொடர்ந்து, தமிழ்ச் சமுதாயம் இயல், இசை, நாடகத் தமிழைத் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது.

இங்கு கர்நாடக இசை பிறப்பதற்கு முன்னரே 'பண்ணிசை' புழக்கத்தில் இருந்து வந்துள்ளது. நாடோடி இசையும், பாடலும் தொடர்ந்து இருந்திருக்கிறது. சங்க இலக்கியத்திலேயே நாடகம் குறிப்பாக இடம் பெற்றுள்ளது. ஆனாலும், அவை தமிழகத்தில் தாமதமாகத்தான் சிறப்பெய்தி வளர்ச்சி பெற்றுள்ளது. நாடகத்தின் விஞ்ஞான ரீதியான பரிணாம வளர்ச்சி என்று கூறப்படும் திரைப்படக்கலை வியக்கத்தக்க வகையில் இந்தியர்களின் வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளது.

இன்றைக்கு, சென்னையும் மும்பையும் போட்டி போட்டுக்கொண்டு 'ஹாலிவுட்' தயாரிப்புகளுக்கு இணையாகத் திரைப்படங்களைத் தயாரித்து வருகின்றன. நமது தயாரிப்பாளர்கள் பல விருதுகளைப் பெற்று, தமிழ் மாநிலத்திற்குச் சிறப்புச் சேர்த்துள்ளனர். 'சங்கீத நாடக சங்கம்' என்று சொல்லப்பட்ட இந்த மன்றம் 1955 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. பின்னர் 1973 ஆம் ஆண்டு இதன் பெயரைத் தமிழக முதலமைச்சர் கலைஞர். மு. கருணாநிதி அவர்கள் 'இயல், இசை, நாடக மன்றம்' என்று மாற்றி புதிய பெயரைச் சூட்டினார்.

### பல்வேறு சாதனை

எழுத்தாளராக, கவிஞராக, நாடக ஆசிரியராக எனப் பல்வேறு விதங்களில் தமிழ்மொழியில் முதலமைச்சர் அவர்கள் அளவிற்கரிய சாதனைகளைச் செய்துள்ளார். பல காவியங்களைப் படைத்துள்ளார். பலதரப்பட்ட துறைகளிலும் சாதனை செய்யக்கூடிய வல்லமை பெற்றவராக முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார்.

அவர் ஒரு சிறந்த நிர்வாகி, மக்கள் தலைவர். ஆனாலும், உங்களுக்கெல்லாம் தெரியும் - அவர் தன்னைக் 'கலைஞர்' என்று அழைத்துக் கொள்வதையே விரும்புகிறார். அந்த அளவிற்குக் கலைகளின் மேல் அவருக்கு ஆர்வம்.

தமிழ் இலக்கியம், நுண்கலை, கைத்திறன் ஆகியவைகள் இங்கே நிச்சயமாகச் சிறந்து விளங்கும் என நான் உறுதியாகக் கூறுகிறேன். இந்த மாநிலத்தின் கலாச்சாரப் பாரம்பரியம் வளத்தோடும், உண்மையாகவும் தொடர்ந்து வளர்ந்துகொண்டே இருக்கும்.

### முதல்வருக்கு வாழ்த்து

இந்த நிகழ்ச்சியில், பவள விழா கண்ட முதல்வர் அவர்களை, மென்மேலும் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

இன்றைக்குக் கலைமாமணி விருது பெற்ற கலைஞர்களையும், படைப்பாளிகளையும் பாராட்டி என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*(10.7.98ல் சென்னையில் நடைபெற்ற கலைமாமணி விருது வழங்கு விழாவில் பேசியதில் இருந்து.)*





# கலைஞர்கள் எந்நேரமும் ஒன்றுபட்டு இருக்கவேண்டும் !

**கலைமாமணி விருது வழங்கு விழாவில் முதலமைச்சர் கலைஞர் வேண்டுகோள்**

"இங்கே இந்த மன்றம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த விழா, மிகப்பெரிய விழா. ஏனென்றால், சிறிய மண்டபங்களிலே அல்லது நடுத்தர மண்டபங்களிலே நடைபெற்றுக்கொண்டிருந்த விழா இன்றைக்கு வள்ளுவர் கோட்டத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த வள்ளுவர் கோட்டத்தை மேலும் வசதியுள்ளதாக, எழில் உள்ளதாக அமைக்க வேண்டும் என்று ஏற்புரையாற்றிய ஆர்.எம்.வீ. இங்கே குறிப்பிட்டார்.

ஆனால், உங்களுக்குத் தெரியும். 72-ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்டு, 75 அல்லது 76-ஆம் ஆண்டு நிறைவுற்று, ஆனால், இதனுடைய திறப்புவிழாவிற்கு நான் கலந்து கொள்ளமுடியாத சூழ்நிலை ஏற்பட்டு, அதற்குப் பிறகு 13 ஆண்டுக்காலத்திற்குப் பிறகு இந்த வள்ளுவர் கோட்டத்திலே நான் நுழைந்தேன் என்பதும், அதன் பின்னர் இடைக்காலம் ஒரு . 5 . ஆண்டுக்காலம், வள்ளுவர் கோட்டத்தினைச் செம்மைப்படுத்துகின்ற பணிகளை, சீர்படுத்துகின்ற பணிகளை மேற்கொள்ள முடியாமல், இந்த வள்ளுவர் கோட்டம் எந்த அளவிற்குப். பாழடைந்து கிடந்தது என்பதையும் நானல்ல, நாட்டில் இன்றைக்கும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நாளேடுகள், கிழமை ஏடுகள் படம் பிடித்துக் காட்டியிருக்கின்றன.

இந்த வள்ளுவர் கோட்டம் எந்த அளவிற்குப் பாழ்பட்டுக் கிடந்தது என்பதைச் சொல்லவே எனக்கு நா கூசுகிறது. மனம் கூசுகிறது. அந்த அளவிற்கு இது யார் யாரோ பயன்படுத்தக்கூடிய இடமாக ஒரு நான்கைந்து ஆண்டு காலம் மாறியிருந்ததையும், இப்பொழுது தமிழக அரசு எடுத்துக்கொண்ட பெரு முயற்சியின் காரணமாக, ஏறத்தாழ 80 இலட்ச ரூபாய் செலவிட்டு, இந்தக் கோட்டம் இப்பொழுது பழுதுபார்க்கப்பட்டிருக்கிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

### எழில் மிக்கதாக மாற்றப்படும்

இதற்குக் குளிர்சாதன வசதி செய்யவேண்டும் என்று ஆர்.எம்.வீ. கேட்டுக்கொண்டார். நாங்களும் அதை எண்ணிக்கொண்டிருக்கின்றோம். விரைவில், இதற்கான குளிர் வசதி செய்யப்பட்டு, அவர் விரும்பியதைப் போல உலகத்திலே பல நாடுகளும் மெச்சத்தகுந்த வகையில், விரும்பத்தகுந்த வகையிலே இந்த வள்ளுவர் கோட்டம் சீரோடு எதிர்காலத்திலே விளங்கும் என்ற நம்பிக்கையினை இங்கே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மன்றத்தினுடைய உறுப்பினர் செயலாளர் நடிகர் சந்திரசேகர் பேசியபோது, சில கோரிக்கைகளை வைத்தார். கோரிக்கைகளை வைத்து "நான் வைப்பது கோரிக்கை. கலைஞர் அமர்ந்து இருப்பதோ இருக்கை. ஆகவே, இந்த கோரிக்கை நிறைவேறும்" என்றார். கலைஞர் இருக்கையிலே இருக்கின்ற காரணத்தினால், கோரிக்கை நிறைவேறும் என்று சந்திரசேகர் நம்பிக்கை பெறலாம் என்று நான் அவருக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏனென்றால், கோரிக்கையினுடைய ஆழம், அகலம், ஒன்றும் அதிகமில்லை. கோடிக்கணக்கிலே இல்லை, இலட்சக்கணக்கிலேதான் இருக்கின்ற காரணத்தால், அந்தக் கோரிக்கைகள் அரசின் சார்பாக நிறைவேற்றித் தரப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஉலகப் பெருமக்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ளவேண்டும். 75 கலைஞர்கள் இங்கே விருது பெற்றிருக்கின்றார்கள். அதிலே, மூத்த கலைஞர்கள் இன்றைக்கு ஒளி. விட்டுக்கொண்டிருக்கின்ற நட்சத்திரக் கலைஞர்கள், இந்தக் கலை உலகத்திலே தங்களுடைய ஆற்றலால், அறிவின் திறத்தால், எத்தனையோ புதுமைகளைச் செய்து காட்டிய கலைஞர்கள், இசைவாணர்கள், கர்நாடகக் கலைஞர்கள், கிராமப்புறக் கலைகளிலே ஈடுபட்ட கலைஞர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள், நாடகத்தின் மூலம் நல்லறிவு ஊட்டியவர்கள், சமுதாயத்தொண்டு ஆற்றியவர்கள் இப்படி75 கலைஞர்கள் இங்கே பாராட்டப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு விருது வழங்கப்பட்டிருக்கிறது.

### பெருந்தன்மை உடையவர்கள்

எனக்கு உள்ள ஒரு ஆதங்கம். அந்த 75 கலைஞர்களும் அவர்கள் விருது பெறுகிற நேரத்திலே, அவர்களைப் பாராட்டுகின்றவர்களும் இந்த மண்டபத்திலே நிரம்பியிருந்தால் இன்னும் நான் கொஞ்சம் மகிழ்ச்சியாக இருந்திருப்பேன். கலை உலகத்திலே உள்ள ஒருவருக்கு ஒரு விருதோ, பெருமையோ கிடைக்கிறதென்றால், அவருடைய சக கலைஞர்களும் அதைப் பார்த்து மகிழ, பாராட்ட அவர்களும் இந்த மண்டபத்திலே குழுமியிருப்பார்களேயானால், அவர்களுக்கும் ஒரு எழுச்சியாக இருக்கும். எனக்கும் இன்னும் மகிழ்ச்சியாக இருக்கும்.

இந்த ஆண்டு அது இல்லாவிட்டாலுங்கூட, அடுத்த ஆண்டு முதலாவது அத்தகைய முனைப்போடு எல்லாக் கலைஞர்களும், ஒரு கலைஞர் பெறுகின்ற விருது நமக்குத்





தரப்படாவிட்டாலும், நாம் பெறாவிட்டாலும், நாம் ஏற்கெனவே பெற்றிருந்தாலும், இன்றைக்கு நாமே அந்த விருதைப் பெறுகிறோம்' என்கின்ற அந்த உணர்ச்சியோடு எல்லாக் கலைஞர்களும் கலந்துகொள்ளவேண்டும்.

சொல்லப்போனால், எப்படி கோரிக்கை வைப்பதற்காக பேரணி நடத்த எல்லாக் கலைஞர்களும் ஒன்றுபட்டீர்களோ, அதைப்போலக் கலைஞர்களுக்கு விருதும், பெருமையும் கிடைக்கும் நேரத்திலும், எல்லாக் கலைஞர்களும் ஒன்றுபட்டு இருந்தால் பரவாயில்லை. கோரிக்கைக்காக மாத்திரம் இவர்கள் கூடுபவர்கள் அல்ல. ஒரு கலைஞன் புகழப்பட்டால், அதைப் பார்த்து மற்ற கலைஞர்களும் மகிழ்ச்சி அடைவார்கள் என்று அந்தப் பெருந்தன்மை உடையவர்கள், பெருமனது படைத்தவர்கள் கலைஞர்கள் என்ற எண்ணம் எனக்கு ஏற்படும். எனவே இந்த ஆண்டு எனக்கு ஏற்பட்டுள்ள இந்த ஆதங்கத்தை அடுத்த ஆண்டாவது நீங்கள் தீர்த்துவைக்கவேண்டும் என்று கலை உலகப் பெருமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

விருது பெற்றுள்ள கலைஞர்கள், நடிகர்கள், நடிகைகள், எழுத்தாளர்கள், நல்ல புத்தகங்களை எழுதியது மாத்திரமல்ல; எழுதியவைகளை எடுத்துச்சொல்லக் கூடிய அளவிற்குப் பேச்சாற்றல் படைத்தவர்கள், இயல், இசை, கூத்து என்கின்ற இந்த மூன்று முத்தமிழிலே ஈடுபாடு கொண்ட அத்தனை பேரும் இன்றைக்கு விருது பெற்றிருக்கின்றீர்கள்.

சில பேர் எனக்குக் கடிதம் எழுதினார்கள். உங்கள் கையால் நாங்கள் விருது பெறுகிறோம். அதற்காகப் பெருமையடைகிறோம் என்று எல்லாம் சொன்னார்கள். இங்கேகூட விருதுகளைப் பெற்ற போது, என்னைப் பார்த்து உங்கள் கையால் விருது பெறுவது எங்களுக்குப் பெருமை என்று சொல்லிவிட்டுப் போனார்கள். நான் அவர்களுக்குச் சொல்லுகிறேன். உங்களுக்கு விருது வழங்குகின்ற அளவிற்கு எனக்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. அது எனக்குப் பெருமை என்று கூறி விருது பெற்றவர்களையெல்லாம் மீண்டும், மீண்டும் வாழ்த்துகிறேன்.

*(10-8-98 அன்று கலைமாமணி விருது வழங்கு விழாவில் பேசியதிலிருந்து)*



*ஒழுக்கம் என்பது*
*உயர்வானதுதான்.*
*ஆனால்*
*அந்த வார்த்தை*
*பாமர மக்களை*
*ஏமாற்றி வாழப்*
*பயன்படுத்தப்படும்*
*சூழ்ச்சி ஆயுதமாகி*
*விடக் கூடாது!*

**- தந்தை பெரியார்**



# மறைந்தும் மறையாமல் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற பெரியவர் குமாரசாமி ராஜா

**குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழாவில் முதலமைச்சர் கலைஞர் உரை (8-7-98)**

"மறைந்தும் மறையாமல் நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற பெரியவர், தேசத் தியாகி, தமிழகத்தினுடைய மக்களின் உள்ளங்களைப் பெருமளவுக்கு ஈர்த்துக் கொண்டிருக்கின்ற நல்லவர், வல்லவர் பி.எஸ். குமாரசாமி ராஜா அவர்களுடைய நூற்றாண்டு விழா நடைபெறுகின்ற நேரத்தில் அதில் பங்குகொள்கின்ற வாய்ப்பை இன்றைய தமிழக அரசு பெற்றமைக்கும், அந்த வாய்ப்பைப் பெற்ற தமிழக அரசின் தலைமை அமைச்சனாக நான் இருப்பதற்கும் மிகுந்த பெருமை அடைகிறேன்.

ராஜபாளையம் நகரம் இன்றைக்கு விழாக்கோலம் பூண்டிருக்கின்றது. ராஜபாளையத்திற்கு வருகின்ற சாலைகளெல்லாம் ஆர்த்தெழுந்து அலங்காரம் பூண்டு நிற்கின்றன. எல்லோருடைய இதழ்களிலும் குமாரசாமி ராஜா அவர்களின் பெயர் இன்றைக்கு உச்சரிக்கப்பட்ட வண்ணம் இருக்கின்றது. மூப்பனார் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, அவர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையிலே இங்கே இந்த விழா நிகழ்ச்சி மாத்திரமல்ல; என்றென்றும் நிலையாக இருக்கக்கூடிய அளவிற்கு, மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவிற்குத் திருமண மண்டபம், 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறந்த நூல்கள் நிறைந்துள்ள ஒரு நூலகம், மற்றும் சில மண்டபங்கள் - இப்படி பலப்பல பயனுள்ள காரியங்கள் நூற்றாண்டு விழாவையொட்டி இன்றைக்கு நடைபெற்றிருக்கின்றன.

**அரசே விழாவை நடத்துகிறது**

இந்த விழாவை ராஜபாளையத்தில் நடத்தவேண்டுமென்று என்னுடைய அருமை நண்பரும், சட்டப்பேரவை உறுப்பினருமான அழகர்ராஜா அவர்கள், சட்டப்பேரவையிலே கேட்டபோது, "நடத்தப்படும்" என்று நான் சொன்னேன். "அரசே முன்னின்று நடத்தும்" என்றும் நான் கூறினேன். அழகர்ராஜா அவர்களுக்குக்கூட சந்தேகம் வந்திருக்கலாம். அன்றைக்குச் சொன்னாரே, இன்றைக்கு அரசே நடத்தமுடியுமா? என்ற சந்தேகம் இருந்திருக்கலாம். காரணம், அதுவரை அரசு இருக்குமா? - என்ற சந்தேகம். ஆனால், அரசும் இருக்கிறது. அரசேதான் இந்த விழாவை நடத்துகிறது.



இந்த விழா நடத்துவதற்கு ஒத்துழைக்கின்ற வகையில், விழாக்குழுவினா்–அதிலும் குறிப்பாக, நமது அன்பிற்குரிய ராமசுப்பிரமணிய ராஜா அவா்களும், அவரோடு இணைந்து செயலாற்றுகின்ற பிற உறுப்பினா்களும், சிறந்த முறையிலே தங்களுடைய பங்கை ஏற்று, இந்த விழா எல்லாவகையிலும் சிறப்படையக்கூடிய ஒரு நிலையை இன்றைக்கு உருவாக்கியிருக்கின்றாா்கள். அவா்களுக்கு நான் என்னுடைய நன்றியைப் பாராட்டுக்களை, வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**யாருக்கும் பின் தங்கியவன் அல்ல**

இங்கே இலக்கியச் செல்வா் குமரி அனந்தன் பேசும்போது, "தேசத் தலைவா்கள், தேசத் தியாகிகளை மதிக்கின்ற இயல்பு படைத்தவா் முதலமைச்சா் கலைஞா்" என்று குறிப்பிட்டாா்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகின்றேன். குமாரசாமி ராஜா அவா்களுடைய பெயரை இந்த மாவட்டத்தின் ஆட்சியா் அலுவலகத்திற்குச் சூட்ட வேண்டும் என்று இராமசுப்பிரமணியராஜா குறிப்பிட்டு, அந்த வேண்டுகோளை நான் 89-90ல் ஏற்றுக்கொண்டதை நன்றிப் பெருக்கோடு வரவேற்புரையில் இங்கே குறிப்பிட்டாா்.

**ஓமந்தூராா் நூற்றாண்டு விழா**

மாவட்ட ஆட்சித்தலைவரின் அலுவலக வளாகத்திற்கு 89-ஆம் ஆண்டிலேயே குமாரசாமி ராஜா அவா்களுடைய பெயா் சூட்டப்பட்டிருக்கின்றது. இன்னொன்றையும் சொல்ல விரும்புகின்றேன். குமாரசாமி ராஜாவைப் போல, இன்னொரு பெயா் சொன்னால், நீங்களெல்லாம் நினைவில் கொள்ளக்கூடிய பெயா்தான் - தமிழகத்திலே, அதிககாலம் ஆட்சி நடத்தாவிட்டாலும்கூட, அதிக காலம் மக்களுடைய உள்ளத்திலே இடம் பிடிக்கின்ற அளவிற்கு, அந்த குறைந்த காலத்தில் ஆட்சி நடத்திய, திராவிட இயக்கத் தலைவா்களால், தாடி இல்லாத பெரியாா் என்று அழைக்கப்பட்டவா் ஓமந்தூா் இராமசாமி ரெட்டியாா்.

## "சென்னை - கிரீன்வேய்ஸ் சாலைக்குக் குமாரசாமி ராஜா பெயர் சூட்டப்படும்!"

இன்று நேற்றல்ல, என்றைக்குமே எத்தனை ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்கூட, நாட்டிற்காக, மொழிக்காக, இனத்திற்காக தங்களை ஒப்படைத்துக் கொண்டு பாடுபட்டவா்கள் யாராக இருந்தாலும் அவா்களை போற்றுவதிலும், புகழ்வதிலும் அவா்களுடைய நினைவு என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்று எண்ணி காரியமாற்றுவதிலும், நான் என்றைக்கும் யாருக்கும் பின்வாங்கியவன் அல்ல என்பதை நீங்களெல்லாம் மிக நன்றாக அறிவீா்கள்.

அந்த வகையிலே எத்தனை நினைவுச் சின்னங்கள் தமிழகத்திலே தி.மு.கழக ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதையெல்லாம் இங்கே பட்டியலிட்டுக் காட்டி இருக்கின்றாா்கள். அதிலும், இலக்கியச் செல்வா் அவா்களும், அவரே வேண்டுகோள் என்ற பெயரால் விடுத்து, எப்போதுமே இத்தகைய வேண்டுகோள்களை ஆணைகளாக ஏற்றுக்கொள்கின்ற நான், அந்த ஆணையை நிறைவேற்றுகின்ற வகையிலே, விஸ்வநாததாஸ அவா்களுக்கான நினைவ மண்டபம் பெரிய அளவிலே மதுரை திருமங்கலத்திலே இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கின்றது.

**தியாகிகள் மணிமண்டபம்**

அதைப் போலவே சென்னையில் அவா் ஒரு விழாவிலே எடுத்துச்சொன்னதை ஏற்றுக்கொண்டு கிண்டி பகுதியில் தியாகிகளுடைய மணிமண்டபம் அமைக்கப்பட்டு வருகிறது.

நான் நேற்றைக்குகூட அவா் ஒரு தொலைக்காட்சியிலே சொன்னதைப் பாா்த்தேன். அந்த மணிமண்டபத்திலே வைப்பதற்கான தியாகிகளின் படங்களெல்லாம் தயாராகிக் கொண்டிருக்கின்றன என்று சில படங்களைக் கூட தொலைக்காட்சியிலே காட்டியபொழுது, எனக்குப் பெருமிதமாக இருந்தது. மகிழ்ச்சியாக இருந்தது. விரைவிலே தியாகிகளுடைய மணிமண்டபம் தயாராகும்.

அந்த ராமசாமி ரெட்டியாருடைய நூற்றாண்டு விழா 1995-ஆம் ஆண்டு வந்தது. நான் ஆட்சியில் இல்லாத காலம் அது. 95- ஆம் ஆண்டு அவா்களுடைய நூற்றாண்டு விழா வந்தது. அந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக அப்போது இருந்த அரசு ஏதாவது முயற்சியில் ஈடுபட்டதா என்று நான் பழைய கோப்புகளையெல்லாம் புரட்டிப் பாா்த்தேன். முயற்சியிலே ஈடுபட்டு, அதற்காக மூன்றரை இலட்ச ரூபாய் செலவு செய்வது என்று என்று கோப்பிலே குறிப்பிட்டு, ஆனால் நிகழ்ச்சி நடத்தப்படவில்லை. ஒதுக்கப்பட்ட மூன்று இலட்ச ரூபாய் செலவு செய்யப்படவில்லை.

நான் சில போ் செய்த நல்லவைகளைத் தொடா்ந்து செய்யக்கூடியவன். எப்படியாவது செய்து காட்டக்கூடியவன். செய்ய விட்டுவிட்டதையும், எப்படியாவது செய்து காட்டக்கூடியவன். அது என்னுடைய பெருமையைக் காட்டுவதற்காக அல்ல; பெரியவா்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமையைச் செய்வதற்காக. அந்த வகையிலே ஆகஸ்டு மாதம் 25ஆம் - தேதி மறைந்த ஓமந்தூா் இராமசாமி ரெட்டியாா் அவா்களுடைய பிறந்தநாள் வருகிறது. அந்த நாளில் ஓமந்தூா் இராமசாமி ரெட்டியாா் அவா்களின் நூற்றாண்டு விழா 95ல் நடத்துவதாக இருந்து நடத்தாமல் விடப்பட்ட அந்த விழா 98-ஆம் ஆண்டு ஆகஸ்ட 25-ஆம் தேதி சென்னை மாநகரில் மிகச் சிறப்பாக நடைபெறும்.

அதிலும் நம்முடைய மூப்பனாா் அவா்களும், மற்ற கட்சித் தலைவா்களும் கலந்துகொள்வாா்கள் என்று இப்போதே நான் அறிவிக்கிறேன். ஏனென்றால், குமாரசாமி ராஜா அவா்கள் எந்த அளவிற்குச் சாதாரண–சாமான்ய மக்களிடத்தில் பரிவுகொண்டு ஆட்சி நடத்தினாரோ. பொது வாழ்க்கையில் ஈடுபட்டாரோ; அதைப்போல ஓமந்தூா் இராமசாமி ரெட்டியாா் அவா்களும், எளிமையாக





> "சாதிமத பேதங்கள்
> மூடவழக்கங்கள்
> தாங்கிநடை பெற்றுவரும்
> சண்டை உலகிதனை
> ஊதையினில் துரும்புபோல்
> அலைக்கழிப்போம்; பின்னர்
> ஒழித்திடுவோம்; புதியதோர்
> உலகம் செய்வோம்!"
>
> - புரட்சிக் கவிஞர்

எல்லோரிடத்திலும் பழகுவதில் இனிமையாக வாழ்ந்தவா். அதே நேரத்தில், தான் கொண்ட கொள்கைக்காகப் பதவி போனாலும் பரவாயில்லை என்று இங்கே உள்ள தலைவா்களிடத்தில் அல்ல, ஆசியாவின் ஜோதி பண்டித ஜவகா்லால் நேரு அவா்களிடத்திலேயே எடுத்துச்சொல்லி, தான் கொண்ட கொள்கையை நிறைவேற்றிக் காட்டியவா். அப்படிப்பட்ட ஓமந்தூராருக்கு ஆகஸ்ட மாதத்திலே நூற்றாண்டு விழா - விடுபட்டுப் போன நூற்றாண்டு விழா. இரண்டு, மூன்றாண்டு காலம் தாமதித்தாலும் நிச்சயமாக நடைபெறும் அது என்பதை இந்த விழாவிலே தெரிவிப்பது பொருத்தம் என்று கருதுகிறேன்.

**குமாரசாமி ராஜா போலவே**

ஏனென்றால், ஒரு முன்னாள் முதலமைச்சருக்கு நடைபெறுகின்ற நூற்றாண்டு விழாவில், இன்னொரு முன்னாள் முதலமைச்சருடைய நூற்றாண்டு விழா நடைபெறும் என்று இந்நாள் முதலமைச்சராகிய நான் அறிவிப்பது மிகமிகப் பொருத்தம் என்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன். குமாரசாமி ராஜா அவா்களுடைய வாழ்க்கையைப் பாா்த்தால், அதை ஒரு வரி விடாமல் படித்துப் பாா்த்தால், இங்கே நம்முடைய முல்லைவேந்தன் பேசும்போது குறிப்பிட்டாா்–

'குமாரசாமி ராஜாவும் சில கொள்கைகளுக்காகத் தன்னுடைய பதவியை இழக்க நோிட்டது. கலைஞரும் அவ்வாறே இழக்க நோிட்டது' என்று குறிப்பிட்டாா். இந்த ஒரு சம்பவம் மாத்திரமல்ல. இளமைக்காலத்திலேயே பல சம்பவங்கள் எனக்கும் அவருக்கும் பொருத்தமாக இருக்கின்ற சம்பவங்களை நான் காண்கின்றேன்.

குமாரசாமி ராஜா உயா்நிலைப் பள்ளியிலே படித்தபொழுது, ராஜபாளையத்திலிருந்து, திருவில்லிப் புத்தூருக்கு ஏழு மைல் தூரம் நடந்தே வந்துதான் படித்தாா் என்று அவரே தன்னுடைய வாழ்க்கைக் குறிப்பில் எழுதி இருக்கிறாா். மூப்பனாா் அவா்களுக்குத் தெரியும். நான் பிறந்த திருக்குவளைக்கும், திருவாரூருக்கும் 15 கல் தொலைவு. அங்கே உள்ள திருநெல்லிக்காவல் என்ற ஊருக்குச் சென்று, ரயிலேற ஏழு மைல் தூரம் நான் நடந்தே செல்லவேண்டும். நானும் ஏழு மைல்தூரம் நடந்துசென்றுதான் இரயிலேறி திருவாரூா் சென்றுதான் படித்தேன்.

**பொதுவாழ்வில் ஈடுபட்டதால்...**

எனவே, இந்த ஏழு மைல் எனக்கும் குமாரசாமி ராஜாவுக்கும் மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கிறது. அந்த ஒரு பொருத்தம்கூட நான் இந்த விழாவிலே கலந்து கொள்ளக் காரணமாக இருக்குமோ என்று கூட, நான் கருதுகிறேன். இன்னொன்று, அவரும் எஸ்.எஸ்.எல்.சி.யிலே பெயிலானவா்; நானும் அவ்வண்ணமே.

அவரும் எஸ்.எஸ்.எல்.சி.யில் பெயிலானவுடன் நண்பா்கள் வருத்தப்பட்டாா்களாம். அப்போது குமாரசாமி ராஜா "ஏன் வருத்தப்படுகிறீா்கள்? இதற்கெல்லாம் வருத்தப்படலாமா?" என்று சொன்னாராம். அதே மாதிரிதான் நானும் வருத்தப்படாதது மாத்திரமல்ல. பெரியாரோடு சோ்ந்து சுற்றுப்பயணம் போய்விட்டேன். பெரியாரோடு சுற்றுப் பயணம் போனதினால்தான் அப்போது பெயில் கூட ஆனேன்.

அதேபோல, பொது வாழ்க்கையில் ஈடுபட்டத்ன் காரணமாக குமாரசாமி ராஜா அவா்களும் எஸ்.எஸ்.எல்.சி.யிலே பெயிலானவா். அதற்கு யாரும் வருத்தப்படக்கூடாது. நானும் வருத்தப்படமாட்டேன் என்று சொல்லியிருக்கிறாா்.

இன்னொன்று அவருக்கு விளையாட்டுக்களிலே கால்பந்து விளையாட்டிலேதான் அதிகப் பிரியம் என்றும் அந்த விளையாட்டிலே கீழே விழுந்து ஒரு பாதிப் பல்லை உடைத்துக்கொண்டேன் என்றும் குறிப்பிட்டிருக்கிறாா்.

அவருடைய இளமைக்கால வாழ்க்கை வரலாற்றில். எனக்கும் கால்பந்து விளையாட்டில் மிகுந்த ஈடுபாடு உண்டு. திருவாரூரில் படித்த காலத்தில் கால்பந்து பந்தயங்கள் பலவற்றில் கலந்துகொண்டிருக்கின்றேன். பல்லை உடைத்துக்கொள்ளவில்லை. ஆனால், நெற்றியில் ஒரு காயம். இன்றைக்கும் இருக்கிறது. கால்பந்து விளையாட்டின்போது விழுந்ததால் ஏற்பட்ட தழும்பு அது.

இப்படி பலவகையிலும் இளமைக்காலத்திலே குமாரசாமிராஜா அவா்களின் வாழ்க்கையும், என்னுடைய வாழ்க்கையும், பொருந்தி இருக்கின்ற காரணத்தால், இரண்டு பேருடைய வாழ்க்கை வரலாற்றையும் சோ்த்துப் படித்த இராமசுப்பிரமணிய ராஜா, நான் இந்த விழாவிற்கு வரவேண்டுமென்று என்னை வலியுறுத்தி இருப்பாரோ என்று நான் கருதுகின்றேன்.

**சாதித் துவேஷம்**

இந்த மாவட்டத்தை எண்ணிப் பாா்க்கிறேன்; சுற்று வட்டாரத்தைப் எண்ணிப் பாா்க்கிறேன்.

குமாரசாமி ராஜா அவா்களுடைய வாழ்க்கையில் அவரே குறிப்பிட்டிருக்கின்ற இன்னொரு சம்பவம் என்னவென்றால், அவருக்கு ஒரு அய்யங்காா் சமுதாயத்தைச் சோ்ந்த மாணவா் நண்பராக இருந்திருக்கிறாா். இருவரும் ஒருநாள் கடைவீதிக்குப் போகும் போது, ஒரு அய்யா் கடையில், அந்தக் கடையில் அந்த அய்யங்காா் சமுதாயத்தைச் சோ்ந்த மாணவா் சென்று ஒரு வடையை வாங்கிச் சாப்பிட்டுவிட்டாராம். அய்யா் கடை வடையை வாங்கிச் சாப்பிட்டவா் அய்யங்காா். குமாரசாமி ராஜாவின் நண்பா். அந்த அய்யங்காா் பிள்ளை வடை வாங்கி சாப்பிட்டது தந்தைக்குத் தெரிந்தது. அடாத காியம் செய்துவிட்டாய். அய்யா் கடை வடையைச் சாப்பிடலாமா என்று அந்த அய்யங்காா் பையனை அடித்து உதைத்தாா். அடித்து

உதைத்தது மாத்திரமல்ல; தோஷம் கழிப்பதற்காகப் பால், தண்ணீர் இவைகளையெல்லாம் கலந்து அதிலே சாணத்தையும் கலந்து அதிலே கோமியத்தையும் கலந்து "இதைக் குடி. அப்போதுதான் தோஷம் கழியும்" என்று சொல்லி குடிக்க வைத்திருக்கிறார் - அப்போதே அய்யருக்கும் அய்யங்காருக்கும் சாதித் துவேஷம் இருந்திருக்கிறது - அதனுடைய சாயல் இன்றைக்கும் இருக்கிறது.

இந்த மாவட்டத்திலும் மற்ற மாவட்டங்களிலும் நூறாண்டு காலத்திற்கு முன்பே அய்யரும், அய்யங்காரும் ஜாதித் துவேஷத்திலே இருந்தார்கள் என்பதை குமாரசாமி ராஜா சொல்லித்தான் நமக்குத் தெரிகிறது. இப்படிப்பட்ட ஜாதி வேறுபாடுகள், மத வேறுபாடுகள், மத மோதலகள், சாதி மோதலகள் இவைகளெல்லாம் நூற்றாண்டு காலமாகத் தமிழகத்திலே இருக்கின்றன. அதற்காக் மனம் வெதும்பியவர்கள், அது தீர வேண்டும், அது அகற்றப்பட வேண்டும் என்று கருதியவர்கள் பலர் இருந்தார்கள். அப்படிப்பட்டவர்களிலே குமாரசாமி ராஜா போன்றவர்கள் இடம் பெற்றிருந்தார்கள் என்று எண்ணுகின்ற நேரத்திலே நமக்குள்ள பணி எவ்வளவு பெரிது என்பதை நாம் எண்ணிப் பார்க்க முடிகிறது.

**நாட்டிற்காகத் தன்னை அர்ப்பணித்தவர்**

பெரிய ராஜ குடும்பத்திலே பிறந்தவர். செல்வந்தர், செல்வம் செழிக்கின்ற அளவிற்கு நிலபுலன்களும், தோட்டம், துரவுகளும் கொண்டவர். அந்த இனிய வாழ்வை, சுக வாழவை விரும்பாமல் ஒரு முறை ஓராண்டு காலமும் இன்னொருமுறை ஒன்பது மாத காலமும் சிறையிலே அடைக்கபபட்டு நாட்டிற்காக, மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார் என்கிறபோது இளமைக் காலத்திலே இந்தத் துடிப்பு அவருக்கு ஏறபட்டிருக்கிறது. அந்த இளமைக் கால நினைவுகளைப் படித்தால் தமிழகத்திலே இன்றைக்கு உள்ள இளைஞர்கள் திருந்துவார்களா? குமாரசாமி ராஜாவைப் போன்று நாங்களும் ஆக வேண்டும் என்று எண்ணுவார்களா? என்ற ஆதங்கம் கூட எனக்கு ஏற்படுகிறது. ஏனென்றால் நான் மிகுந்த வருத்தத்திற்கும் கவலைக்கும் ஆளானவனாக இருக்கிறேன்.

இன்றைக்கு உள்ள இளைஞர்கள் எதிர்காலத்தில் இந்த நாட்டையும், சமுதாயத்தையும், மொழியையும், இனத்தையும் காப்பாற்றுவதற்கு எந்த வகையிலே பயன்படப் போகிறார்கள் என்பதுதான் அந்தக் கவலை. ஒரு 50 ஆண்டு காலத்திற்கு முன்பு இளைஞர்கள் மாணவப் பருவத்தில் அவர்கள் எந்த இயக்கத்திலே தங்களை ஒப்படைத்துக் கொண்டவர்களாக இருந்தாலும்; அது காங்கிரஸ் இயக்கமானாலும், திராவிட இயக்கம் ஆனாலும், கம்யூனிஸ்ட் இயக்கமானாலும் அந்த இயக்கத்திலே தங்களை ஒப்படைத்துக் கொண்டவர்கள் கல்லூரிகளில், பள்ளிகளில் இலக்கியச் சொற்பொழிவுகளில் காவியங்களைக் கற்றல், சரித்திரங்களைப் படித்தல், சரித்திர நாயகர்களைப் பற்றி விமர்சித்தல் அவர்கள் வழி நடக்க வேண்டும் என்பதைப் பற்றி ஒருவருக்கொருவர் அளவளாவுதல், உரையாடுதல், விவாதித்தல், இவைகளெல்லாம் பழைய கால இளைஞர்களுடைய பழக்க வழக்கங்களாக இருந்தது. ஆனால் இன்றைய இளைஞர்கள்; நான் எல்லோரையும் சொல்லவில்லை. சிலர் இன்றைக்கும் அந்த முனைப்போடு இருக்கிறார்கள்.

**வாழ்க்கைப் பாடம்**

இந்தச் சமுதாயத்தைக் காக்கும் ஈட்டி முனைகளாக, இந்தச் சமுதாயத்திற்குப் பாடுபட வேண்டும் என்ற தொண்டு உள்ளம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இளைஞர்கள் பலர் இன்றைக்குக் கேளிக்கைகள், கூத்துகள், சினிமாக்கள், ஆடம்பரங்கள், இதில் தங்கள் நேரத்தைச் செலவழித்தால் போதும் என்று உல்லாச புரியே தங்களது வாழ்க்கையின் குறிக்கோள் என்று எண்ணுகின்ற காலத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது மாற வேண்டும். இது மாறுவதற்குக் குமாரசாமி ராஜா போன்றவர்களுடைய இளமைக்கால வாழ்க்கை பாடமாக அமையும் என்று நான் நம்புகிறேன்.

அத்தகைய ஒரு பாடத்தை நமக்கு வழங்கியவர் முன்னாள் முதலமைச்சரும், ஒரிசா மாநில முன்னாள் ஆளுநருமான பி.எஸ்.குமாரசாமி ராஜா அவர்கள். இந்த "பி.எஸ்" என்கின்ற அவருக்கு முன்னால் இருக்கின்ற அந்த இன்சியல் - இரண்டு ஆங்கில எழுத்துக்கள். அது அவருடைய குடும்ப - தகப்பனாருடைய - பாட்டனாருடைய பெயர்களாக நான் எண்ணவில்லை. பி.எஸ்.என்பது 'பப்ளிக் சர்வன்ட்' என்ற முறையிலே அவர் பப்ளிக் சர்வன்டாகவே வாழ்ந்து காட்டினார்.

அவர் வெற்றி தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாதவர். பரீட்சையிலே மாத்திரமல்ல; படிப்பிலே மாத்திரமல்ல; அவர் ஈடுபட்ட அரசியலிலே கூட வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்த நேரத்தில் இரண்டையும் ஒன்றுபோல் கருதி நாடு முக்கியம், சமுதாயம் முக்கியம் என்ற அளவிலே பாடுபட்டவர். அப்படிப்பட்ட அந்தப் பெரியவருடைய புகழை இன்றைக்கு நாம் நினைத்து மகிழ்ந்தால் மட்டும் போதாது. எதிர்கால இளைஞர்களுக்கு நல்ல பாடமாக அமையவேண்டும் என்று வேண்டி இந்த விழாவை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

இங்கே சில கோரிக்கைகளை நம்முடைய ராமசுப்பிரமணிய ராஜா அவர்கள் வைத்திருக்கிறார்கள். இரண்டு, மூன்று கோரிக்கைகள் இருக்கின்றன. அதற்கெல்லாம் உடனடியாக நான் இங்கு பதில் அளிக்க முடியாவிட்டாலும் முக்கியமான ஒரு கோரிக்கை சென்னையிலே அமைச்சர்கள் வாழகின்ற இடம் கிரீன்வேஸ் சாலை. அந்தச் சாலையின் பெயரை மாற்றி குமாரசாமி ராஜா சாலை என்று பெயர் வைக்க வேண்டும் என்று நம்முடைய வரவேற்புக் குழுத் தலைவர் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு விரைவில் இன்னும் இரண்டொரு நாளில் அந்தப் பெயர் மாற்றப்படுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும். இதற்கு சென்னை மாநகராட்சி மன்றமும், ஒத்துழைக்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து வாழக குமாரசாமி ராஜாவின் புகழ் என்று உரைத்து விடைபெறுகிறேன்". ★






# மனித தெய்வங்களுக்காக நடத்தப்படும் திருவிழா

**ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளின் பராமரிப்பில்**

**தொழில் நிறுவனங்களின் பங்கேற்புத் திட்டத்தின் தொடக்க விழாவில்**

**முதலமைச்சர் கலைஞர் பெருமிதம்**

"இந்த இனிய மாலை நேரத்தில் நம்முடைய இதயமெல்லாம் பூரிக்கின்ற அளவிற்கு இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தமிழ்நாட்டில் எல்லாப் பிரிவு மக்களுடைய அன்போடும், ஆதரவோடும், நல்வாழ்த்துக்களோடும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அரசு - அந்த மக்களில் ஒரு பகுதியாக விளங்குகின்ற - தொழில் வளர்ச்சியின் மூலம் நாட்டில் பல்வேறு வளங்களை வளர்க்க முடியுமென்ற உறுதியோடு செயல்பட்டு, அரசுக்கு உறுதுணையாக இருக்கின்ற தொழில் அதிபர்கள் தங்களுடைய கடமையைச் செய்கின்ற ஒரு நிகழ்ச்சியே இந்த நிகழ்ச்சியாகும்.

**மக்கள் துணையோடு அரசு ஆற்றிவரும் பணிகள்**

அவர்கள் சொந்த முறையில், அவர்களாகவே முன் வந்து சில பணிகளை அவர்களுடைய தொழில் நிறுவனங்களின் சார்பாக மக்களுக்கு என்ற நிலையிலே ஆற்றிக் கொண்டிருந்தாலுங்கூட, அரசின் துணையோடு, அரசின் வேண்டுகோளை யேற்று, அந்தப் பணிக்குத் தங்களை ஒப்படைத்துக்கொண்டிருக்கின்ற விழா நிகழ்ச்சியாகும் இந்த நிகழ்ச்சி. தமிழ்நாட்டிலே இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த அரசு, தானே முன்நின்று எல்லாப் பணிகளையும் மக்களுக்கு ஆற்ற முடியுமென்கின்ற அந்த தன்னம்பிக்கையை மாத்திரம் கொள்ளாமல் இதற்கு எல்லா மக்களுடைய துணையும் வேண்டுமென்ற அடக்க உணர்வோடு அனைவருடைய உதவியையும் பெற்று - அந்த மக்களுக்காகப் பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கின்றது. அதற்கு அடையாளம்தான் இந்த இரண்டாண்டு காலத்திலே அரசு அறிவித்துள்ள இரண்டு புதிய திட்டங்கள். ஒன்று 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' - மற்றொன்று 'நமக்கு நாமே திட்டம்'.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்படி தமிழகத்திலே இருக்கின்ற ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், ஒவ்வொரு ஆண்டும் ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டு, அந்தக் கிராமத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் செய்து முடிப்பது என்று உறுதிபூண்டு, அந்தப் பணிகளைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கின்றது. நமக்கு நாமே திட்டம் என்பது, எல்லாக் கிராமங்களிலுமே, மக்களுடைய ஒத்துழைப்போடு வள்ளல் தன்மை வாய்ந்தவர்கள், பெரியவர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ அவர்களுடைய பொருள் உதவியோடு கூட, அரசின் ஒத்துழைப்பையும் அரசின் ஆக்கப்பூர்வமான ஊக்கத்தையும் வழங்கி, அதன் மூலமாக அந்தக் கிராமத்திற்குத் தேவையான எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றிக் கொள்வது.

**குறைபாட்டை நீக்கிய நமக்கு நாமே திட்டம்**

நீங்கள் அண்மையிலே 'இந்து' பத்திரிகையிலே வந்த ஒரு செய்தியைப் படித்திருக்கக்கூடும். நமக்கு நாமே திட்டம் எப்படி செயல்படுகின்றது என்பதற்கு உதாரணமாக அந்தச் செய்தி விளங்குகிறது. திருச்சி மாவட்டத்தில் மணிகண்டம் என்ற கிராமப் பகுதியில் அந்த ஊர் மக்கள் எல்லாம் ஒன்று கூடி தங்களுக்கு கால்நடை மருத்துவமனை ஒன்று தேவை. அந்தத் தேவை நிறைவு செய்யப்படவில்லை என்ற குறைபாட்டை எழுப்பியபோது, நமக்கு நாமே திட்டத்தின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக அந்தப் பகுதிக்குச் சென்று, நமக்கு நாமே திட்டத்தினுடைய கோட்பாடுகளை எடுத்துரைத்து, அந்தப் பகுதி மக்கள் உடனடியாக அதை ஏற்றுக்கொண்டு, அவர்களும் தங்களால் இயன்ற தொகையை அதற்காகத் தந்து, சில மணி நேரங்களிலே கால்நடை மருத்துவமனை உருவாகின்ற ஒரு அற்புதமான காரியம் அங்கே நடைபெற்றது என்று இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இதை நான் சொல்வதற்குக் காரணம் ஒரு அரசே முன்நின்று எல்லாக் காரியங்களையும் செய்வதற்கு நேரம் இல்லை. நினைப்பில்லை என்பதை விட, நிதி இல்லை என்பதுதான் மிக முக்கியமான காரணம். அந்த நிதித் தேவையை அனைவரும் பகிர்ந்துகொள்ள வேண்டும். அதற்கு நல்ல உள்ளங்கள் வேண்டும், அந்த உள்ளங்களை நாங்கள் நாடிச் சென்றபோது தரப்பட்ட ஒத்துழைப்பின் அடையாளம்தான் இந்த மண்டபத்தில் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்தப் பெரு விழா - என்னுடைய மனமார்ந்த அன்போடு, பாசத்தோடு சொல்லவேண்டுமேயானால் திருவிழா. திருவிழா ஆலயங்களிலேதான் நடைபெறும். ஆனால் இது மனித தெய்வங்களுக்காக நடத்தப்படுகின்ற திருவிழா. அந்தத் திருவிழாவிலே பங்குகொள்ள இசைவு தந்து இன்றைக்கு அதற்கான ஒப்பந்தப் பத்திரங்களை உங்கள் முன்னிலையிலே பெற்றுக்கொண்டிருக்கின்ற தொழில்துறை அதிபர்கள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே ஏறத்தாழ 1,400 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அவைகளில் பலவற்றிற்குச் சொந்தக் கட்டடங்கள் இல்லை. மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி அவர்கள் இங்கே சுட்டிக் காட்டியதைப் போல, அவைகளைச் சொந்தக் கட்டடங்களிலே - நல்ல நல்ல கட்டடங்களிலே இயங்கச் செய்ய வேண்டிய முயற்சியை இந்த அரசு ஏற்கெனவே 89-90ல் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது - அந்த இரண்டாண்டுக் காலத்தில் 136 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்களைக் கட்டி முடித்தது. அதற்குப் பிறகு ஐந்தாண்டுகாலம் நடைபெற்ற ஆட்சியில் - 93 சுகாதார நிலையங்கள்தான் கட்டி முடிக்கப்பட்டன. நாங்கள் கட்டியதைப் போன்ற அதே கட்டடங்கள்தான்.

**சொந்தக் கட்டடங்களில் அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள்**

அதற்குப் பிறகு 96-97ல் மீண்டும் நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்துள்ள இந்த நிலையில் 300 ஆரம்பச் சுகாதார



நிலையங்களுக்கு ஓராண்டில் கட்டடங்கள் கட்டித் தருவதென்று தீர்மானித்து 18 கோடி ரூபாய் செலவிலே அவைகள் எல்லாம் கடந்த ஆண்டு கட்டப்பட்டு ஏறத்தாழ அந்தப் பணிகள் முற்றுப்பெறும் நிலையிலே இருக்கின்றன. மேலும் இந்த 97-98 ஆம் ஆண்டில் 352 சுகாதார நிலையங்களுக்கு 24 கோடியே 64 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு - அந்தப் பணிகளும் தொடங்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் தமிழகத்திலே உள்ள அனைத்து ஆரம்பச் சுகாதார நிலையங்களும் சொந்தக் கட்டடங்களிலே இயங்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடிய அரிய வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கின்றது.

அதுமாத்திரமல்ல; பல ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நகர்ப்புறங்களிலிருந்து சற்று விலகியே இருக்கின்றன. அப்படி விலகியிருக்கின்ற காரணத்தால், தேவைப்படுகின்ற அவசர மருத்துவ வசதிகளைப் பெற, ஆலோசனைகள் பெற முடியாத சூழ்நிலையில் அந்தச் சுகாதார நிலையங்களுக்கெல்லாம் தொலைபேசி வசதி செய்து தரவேண்டுமென்று திட்டமிட்டு, இப்போது இந்த இராண்டாண்டு காலத்தில், 424 சுகாதார நிலையங்களுக்குத் தொலைபேசி வசதியும் செய்து தரப்பட்டிருக்கின்றது.

24 மணி நேரமும் பணியாற்றக்கூடிய, சிகிச்சை வழங்கக் கூடிய நிலையங்களாக 400க்கு மேற்பட்ட நிலையங்கள் மாற்றப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டு - இது வரையிலே அவ்வாறு 250 நிலையங்கள் 24 மணி நேரமும் பணியாற்றக்கூடிய நிலையங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. 24 மணி நேரமும் பணியாற்றுகிறார்களா என்பதைச் சென்னையிலிருந்து நானோ, வீராசாமியோ மாத்திரம் கண்டுபிடிக்க முடியாது. ஆங்காங்கு இருக்கின்ற மக்களும் கண்டுபிடித்து எதற்கெதற்கோ சாலைமறியல் செய்கின்ற மக்கள் அப்படி அங்கே நடைபெறாவிட்டால் அதை எங்களுக்கு உணர்த்தச் சாலைமறியல் செய்தால், அந்தச் சாலை மறியலை நான் நிச்சயமாக ஏற்றுக்கொள்வேன். நல்ல காரியங்களுக்காக நடத்தப்படுகின்ற சாலை மறியலுக்கு சான்றிதழ் வழங்கப்படும். வேண்டுமென்றே திட்டமிட்டு சாலைமறியல் செய்பவர்கள் சட்டப்படி நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள். இந்த இரண்டு வித்தியாசங்களையும் சாலைமறியல் செய்பவர்கள் உணர்ந்துகொண்டால் 24 மணி நேரமும் ஒழுங்காக மருத்துவமனைகள் நடைபெறுவதற்கு வசதி வாய்ப்பு ஏற்படும்.

இந்த 250 நிலையங்கள் போக, மீதம் 174 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 24 மணி நேரம் பணியாற்றக்கூடிய நிலையங்களாக மாற்றப்பட வேண்டியிருக்கிறன. 24 மணி நேர மருத்துவமனை என்று அறிவித்து விட்டால் மாத்திரம் போதாது. அங்கே பணியாற்றுவதற்கு முதற்கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த 24 மணி நேர மருத்துவமனைகளுக்கு 250 மருத்துவர்கள் பதவிகளும், 250 செவிலியர் பதவிகளும் இந்த அரசால் கூடுதலாக உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே ஒன்றிரண்டு விட்டுப் போயிருந்தால் நாளைக்குப் பத்திரிகையிலே செய்தி வெளியிடுவார்கள். 250 மருத்துவ மனைக்கு மருத்துவர்கள், செவிலியர்கள் என்று சொன்னார்கள்; இன்ன ஊரிலே மருத்துவரே இல்லை, மருத்துவர் இருந்தாலும் செவிலியர் இல்லை என்கிற செய்தி வரக்கூடும்.

**பத்திரிகைச் செய்தியைப் பார்த்து, குறைபாடுகள் நீக்கப்படுகின்றன**

ஒன்றை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். காலையில் நான் ஐந்தரை மணிக்கு எழுகிறேன். ஆறு மணிக்கு



என்னுடைய "வாக்கிங்"கை முடிக்கிறேன். அதற்குப் பிறகு நான் தொடருகின்ற வேலை - பத்திரிகைகளைப் படிப்பது. எல்லாப் பத்திரிகைகளையும் படிக்கிறேன். எல்லா பத்திரிகைகளையும் படிப்பதால் அரசாங்கத்தைப் பற்றி, என்னென்ன குறைபாடுகள் வந்திருக்கின்றன. எந்த ஊரில் என்ன சிக்கல், என்ன பிரச்சினை என்பதையெல்லாம் படிக்கிறேன். நான் படித்த பிறகுதான் அமைச்சர்களுக்கே சொல்கிறேன். பிறகுதான் அவர்கள் படிக்கிறார்கள். உண்மையைச் சொல்கிறேன். நான் படித்த பிறகு தான் அதிகாரிகளுக்கே கூறுகிறேன். அதனால்தான் உடனுக்குடன் அதற்கான விளக்கங்கள், பதில்கள் வந்துகொண்டிருக்கின்றன. நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். முதலமைச்சர் நம்முடைய பத்திரிகையை முதன்முதலாகத் தமிழ்நாட்டிலேயே படிக்கிறார் என்பதை வார ஏட்டார்களும், நாளிதழாளர்களும் தெரிந்துகொள்ளலாம். அதற்குப் பிறகு - திருத்தங்கள், விளக்கங்கள், பரிகாரங்கள் எல்லாம் வருகின்றன என்றால், படித்துப்பார்த்து, உடனடியாக என்னுடைய அலுவலகச் செயலாளர்களை விரட்டு விரட்டென்று விரட்டி, அவர்கள் தொடர்பு கொண்டு மற்ற அதிகாரிகளிடம் கேட்டு - அது குமரிமுனையிலே நடைபெறுகின்ற காரியமானாலும் சரி - சென்னை மாநகரத்திலே நடைபெறுகின்ற காரியமானாலும் சரி - அதற்கெல்லாம் இன்றைக்குப் பரிகாரங்கள் காணப்படுகின்றன. அப்படிப்பட்ட ஒரு நிலையிலே இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த ஆட்சிக்கு நம்முடைய தொழில் அதிபர்கள் தங்களுடைய தூய உள்ளத்தோடு துணை புரிய வந்திருக்கின்றார்கள். அவர்களை யெல்லாம் நான் நேசக்கரம் கொண்டு வரவேற்றிருக்கிறேன்.

தொழில் அதிபர்கள் தமிழகத்தைத் தொழில் வளமாக ஆக்குவதற்கு இன்றைக்குத் துணை புரிந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்கள் ஏற்றிருக்கும் தொழில் வளர்க்கும் பணியோடு, தமிழகத்திலே உள்ள மக்களின் சுகாதாரமும் செம்மைப்பட வேண்டும் என்ற அந்தப் பணியையும் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

எனக்குக்கூட ஒரு சந்தேகம். ஏதோ முதலமைச்சர் சொன்னார், அமைச்சர்களும் சொன்னார்கள். ஆர்க்காடு வீராசாமி வற்புறுத்தினார், அதற்காக ஒப்புக்கொண்டு தொலைத்தோம் என்று ஒப்புக்காக இந்தக் காரியத்தைச் செய்யாமல் உண்மையிலேயே செய்கிறார்கள் என்பதற்கு நம்முடைய வேணு ஸ்ரீனுவாசன் - இண்டியா சிமெண்ட்ஸ் சீனிவாசன் போன்றவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்களே, இது மாத்திரம் போதாது, பள்ளிக் கூடங்களையும் நாங்கள் எடுத்து நடத்தத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னதிலிருந்து இவர்கள் எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் இந்தப் பணியை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

"அவர்களுடைய பரந்த உள்ளத்தை - பெரிய உள்ளத்தை நான் பாராட்டுகிறேன். இந்த விழா நடைபெறுவது இவர்களைப் பாராட்டுவதற்காக என்று யாரும் கருதக்கூடாது. இந்த விழா நிகழ்ச்சி நடைபெறுவது - அவர்களுக்கு ஒப்பந்தப்பத்திரங்களைத் தருவதற்காக என்று கருதக்கூடாது. இந்த விழா நடைபெறுவது நாளைக்குப் பத்திரிகைகளிலே செய்தியாக வந்து - தமிழ்நாட்டிலே உள்ள மற்ற தொழில் அதிபர்களும் இதைப் போன்றதொரு நல்ல பணிகளிலே ஈடுபட வேண்டும் என்கிற எண்ணத்தை அவர்களுக்கு உருவாக்குவதற்காக நடைபெறுகின்ற ஒரு விளம்பர விழாவே தவிர, இது இவர்களைப் பாராட்டுகின்ற விழா அல்ல; எங்களைப் பாராட்டிக் கொள்கின்ற விழா அல்ல என்பதை எடுத்துச் சொல்லி, இதற்கு உதவிய நம்முடைய தொழில் அதிபர்கள் தங்களுடைய அன்பையும், ஆதரவையும் அரசுக்கு வெளிப்படுத்தியிருப்பது மாத்திரமல்லாமல் ஏனைய தொழில் அதிபர்களிடத்திலும் இந்தத் தொண்டு மனப்பான்மையை எடுத்துக்கூறி, அனைவருடைய துணையையும் இந்த அரசுக்கு, மக்களுக்குப் பெற்றுத் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு மீண்டும் மீண்டும் என்னுடைய நன்றியை அவர்களுக்கெல்லாம் காணிக்கையாக ஆக்குகிறேன்".

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார் (28.6.98).

★ ★ ★

*"நான் நபிகள் நாயகத்தின் வரலாற்றைப் படித்திருக்கிறேன். நபிகள் நாயகத்தின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள், அவருடைய எண்ணங்களுக்கு விரோதமாக இருந்தவர்கள் அவரைப் பழித்தனர். இழித்துப் பேசினர். அவர் எரிச்சல் அடைவார் என்று எண்ணி ஏதேதோ காரியங்களில் ஈடுபட்டனர். அவர் தினந்தோறும் நடந்து செல்கிற வழி ஒன்று உண்டு. அப்படி அவர் நடந்து செல்லும்போது ஒரு வீட்டு மாடியிலிருந்து ஒரு அம்மையார் நாள்தோறும் அவருடைய தலையில் குப்பையைக் கொட்டிக்கொண்டே இருப்பாராம். நபிகள் நாயகமும் தலையில் விழுந்த குப்பையைத் தட்டிவிட்டுவிட்டு மெல்லப் புன்னகை செய்தவாறு தொடர்ந்து தெருவில் நடந்து போவாராம்.*

*இது ஒவ்வொரு நாளும் நடைபெற்ற நிகழ்ச்சி. ஒருநாள் நபிகள் நாயகம் அவர்கள் அப்படி தெருவில் செல்லும்போது அந்த மாடியிலிருந்து யாரும் குப்பை கொட்டவில்லையாம். நபிகள் நாயகத்திற்கு ஆச்சரியம்! என்ன நாள்தோறும் கொட்டப்படுகின்ற குப்பை இன்றைக்குக் கொட்டப்படவில்லையே என்று ஆச்சரியப்பட்டாராம். அதைப்பற்றி உடனே விசாரித்தாராம். "எங்கே அந்த அம்மையாரைக் காணவில்லை", என்று கேட்டாராம்.*

*அதற்கு "அந்த அம்மையாருக்கு உடல் நலம் சரியில்லை, படுத்திருக்கிறார். ஆகவேதான் குப்பை கொட்டவில்லை" என்று பதில் கூறினார்களாம். உடனே நபிகள் நாயகம் பதைத்துப்போய் மாடிக்குச் சென்று அந்த அம்மையாரைச் சந்தித்து "உடல் நலமா?" என விசாரித்தார் என்று நபிகள் நாயகம் வரலாற்றில் குறிப்பு ஒன்று உண்டு.*



*நான் நபிகள் நாயகம் அல்ல; ஆனால் குப்பை கொட்டுகிற அம்மையார்கள் நாட்டில் இருக்கின்றார்கள். அவர்கள் கொட்டாவிட்டால் ஏன் கொட்டவில்லை என்று கேட்பேனே தவிர, கொட்டிக் கொண்டே இருந்தால் அதற்காக நான் கவலைப்பட மாட்டேன் என்பதற்காகத்தான் நபிகள் நாயகத்தின் வரலாற்றை இங்கே குறிப்பிட்டேன்".*

**- முதலமைச்சர் கலைஞர்**
**(5.7.98 அன்று கடலூரில் ஆற்றிய உரையிலிருந்து)**

**வேளாண்மை:**

# பயிர்களில் நூற்புழுக்களின் தாக்குதலைக் கண்டறிவது எப்படி?

பயிர்களுக்குச் சேதத்தை உண்டாக்கும் கண்ணிற்குப் புலப்படாத நூற்புழுக்களின் தாக்குதலை, பொதுவான அறிகுறிகளான ஆங்காங்கே திட்டுத்திட்டாகக் காணப்படும் உரிய வளர்ச்சியற்ற வெளிறிய மஞ்சள் நிறமடைந்த பயிர்கள், போதிய ஈரமிருந்தும் பகலில் வாடிய தோற்றத்துடன் காணப்படுதல் இதர பயிர் நோய்க் கிருமிகளான பூஞ்சாளம், பாக்டீரியா போன்றவைகளால் விரைவாகவும், அதிகமாகவும் பாதிக்கப்படுதல், அதிகமான அளவில் நாற்றுகள் மடிதல், மகதல் குறைதல் மூலம் கண்டறியலாம். எனினும் தனிப்பட்ட நூற்புழுக்களின் சேதத்தை, சில குறிப்பிட்ட அறிகுறிகள் மூலம் எளிதாக ஊகிக்கலாம். அவையாவன :

| நூற்புழுக்கள் | பாதிக்கப்படும் பயிர்கள் | அறிகுறிகள் |
|---|---|---|
| 1. வேர்முடிச்சு நூற்புழு | காய்கறி, எண்ணெய்வித்து, மலர், பழவகை மற்றும் இதர பயிர்கள். | வேர்களில் காணப்படும் வேர் முடிச்சுகள். |
| 2. முட்டைக்கூடு நூற்புழு | பருப்பு வகைப் பயிர்கள் மற்றும் எள் | குறைவான விதை உற்பத்தியுடன் கூடிய சோடையான காய்கள் உரிய வேர் வளர்ச்சி இல்லாதிருத்தல். |
| 3. உருளைக்கிழங்கு முட்டைக்கூடு நூற்புழு | உருளைக்கிழங்கு | வளர்ச்சி குன்றிய வேர்களில் சிறு கடுகு போன்ற வெண்ணிற நூற்புழுக்கள் காணப்படுதல். |
| 4. எலுமிச்சை நூற்புழு | எலுமிச்சை | குறைவான மங்கிய அழுக்கு நிறத்துடன் மண் துகள்கள் ஒட்டிய வண்ணம் இருக்கும் வேர்ப் பகுதிகள். |
| 5. மொச்சை வடிவ நூற்புழு | பருத்தி, பப்பாளி, ஆமணக்கு, காய்கறிப் பயிர்கள் | நாற்றுகள் (அ) நட்ட பின்பு அதிக அளவில் செடிகள் பட்டுப் போகுதல், வேர்களின் வளர்ச்சி இல்லாதிருத்தல், பருத்திப் பயிர்கள் இலைகள் பகலில் ஒளிரும் தன்மையுடனும், விளிம்புகள் மடிந்து மேல் நோக்கியும் இருத்தல். |
| 6. குடையும் நூற்புழு | வாழை, தென்னை, மஞ்சள், இஞ்சி, மிளகு, பாக்கு | வேர் மற்றும் கிழங்குகளின் வெளியேயும், உள்ளேயும் ஆங்காங்கே கருமை கலந்த அழுகிய பகுதிகள் காணப்படுதல். |
| 7. வேர்கருகல் நூற்புழு | வாழை, காய்கறிகள், கனகாம்பரம், நிலக்கடலை மற்றும் இதர பயிர்கள் | வேர்களில் செந்நிறம் கலந்த கருமை நிறக் கீறல்கள் போன்ற கோடுகள் காணப்படுதல். |
| 8. நெல்வேர் நூற்புழு | நெல் | கருமை கலந்த செந்நிறத்துடன் கூடிய வேர்ப்பகுதியுடைய நெற்பயிர்கள், அறுவடைக்குத் தயாராகத் தாமதமாகும். |
| 9. நெல் வெண் நுனி இலை | நெல் | இலைகளில் நுனிப்பகுதி வெளிர்ந்து காய்ந்து சாட்டை போன்று சுருங்கிக் காணப்படுதல். கதிர்களில் பதர் எண்ணிக்கை அதிகமாக இருத்தல். |
| 10. நிலக்கடலை காய்வடு | நிலக்கடலை | காய்களின் மேற்பகுதியில் திட்டுத்திட்டாகக் கருமை கலந்த பகுதிகள் காணப்படுதல். |
| 11. வளைய நூற்புழு | நிலக்கடலை | வேர்களில் வளர்ச்சிப் பாதிப்பு, நிலக்கடலை போன்றவற்றின் பகுதிகளில் மேற்பரப்பு திட்டுத்திட்டாகக் கருமை நிற மாற்றமடைதல். |


**தகவல்**

எஸ். இராமகிருஷ்ணன், கே.பூர்ணிமா, சி.வி.சிவகுமார்
நூற்புழுவியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோவை - 3.



**வெளியீடு**

தகவல் தொடர்புப் பணி மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோவை - 3.






# வெளிச்சத்திற்காகத்தான் விளக்கு வைக்கவேண்டுமே தவிர, விளக்கிற்காக யாரும் விளக்கு வைக்கமாட்டார்கள் - அதுபோல பிரச்சினைகளுக்குத்தான் போராடவேண்டுமே தவிர, போராட்டத்திற்காகப் போராட்டங்கள் கூடாது !

*தலைமைச் செயலகச் சங்கப் பொன்விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் உரை !*

இந்த அரசு பொதுவாக அரசு அலுவலர்களுக்கு - ஆசிரியர்களுக்கு, குறிப்பாகவும், சிறப்பாகவும் தமிழ்நாடு தலைமைச் செயலகத்தினுடைய சங்கத்திலே உள்ளவர்களுக்கு 67-ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்ற காலந்தொட்டு என்னென்ன கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றியிருக்கின்றது என்பதை ஒன்றிரண்டை இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். மேலும் சிலவற்றை நான் சுட்டிக்காட்ட வேண்டிய கடமை உள்ளதால் சுட்டிக்காட்டுகிறேன்.

68-ஆம் ஆண்டுதான் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அந்தக் காலக்கட்டத்தில் அவர்கள் இங்கே - இதே தலைமைச் செயலகத்தினரால் அளிக்கப்பட்ட வரவேற்பைப் பெற்றுக் கொண்டு, அளிக்கப்பட்ட கோரிக்கைகளில் ஒன்றான நகர ஈட்டுப்படியை அரசு அலுவலர்களுக்கு வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள் என்பதை நீங்கள் யாரும் மறந்திருக்க மாட்டீர்கள்.

72-ஆம் ஆண்டு இந்த அரசு மூலம் தான் முதன்முதலாகப் பல்லாண்டு காலமாக உங்களுடைய பெரும் போர்க்குரலாக இருந்த ரகசியக் குறிப்பேட்டு முறை ஒழிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நான் நிறைவேற்றித்தந்தேன்.

நிறைவேற்றியதற்காகப் பாராட்டு விழா ராஜாஜி மண்டபத்தில் தந்தை பெரியார் முன்னிலையில் நடைபெற்று, பலபட புகழ்ந்து பெரியார் அவர்கள் பேசிய அந்தப் பேச்சு இன்னமும் என்னுடைய செவிகளிலே இன்பமாக ரீங்காரம் செய்து கொண்டிருக்கின்றது.

**ஊழியர்களுக்குச் சலுகைகள்**

அதற்குப் பிறகு ஊதியக் குழுவின் பரிந்துரைகளையேற்று வீட்டு வாடகைப்படியை உயர்த்த இந்த அரசு தான் வழிவகை செய்தது என்பதையும் நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். விடுப்பில் செல்லாமலேயே ஈட்டிய விடுப்பைச் சரண் செய்துவிட்டு அதற்குப் பதிலாகத் தொகையைப் பெறும் சலுகையை அரசு ஊழியர்களுக்கு இந்த அரசு தான் வழங்கியது.

74-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ஆம் தேதி முதல் அரசு ஊழியர்களுக்குச் சிறப்புக் குடும்ப நலத்திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி முதன்முதலாக அந்தத் திட்டம் தொடங்கப்பட்ட போது, அரசு ஊழியர்கள் பணிக்காலத்திலே இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அது மெல்ல வளர்ந்து 60 ஆயிரம் என்று உயர்ந்து, இப்போது ஒரு இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தி வழங்கப்படுகிறதென்றால் - இந்தத் திட்டத்தைத் தொடங்கியதும் 74-ஆம் ஆண்டு இந்த அரசுதான்.

75-ஆம் ஆண்டு சென்னை, மதுரை, கோவை ஆகிய நகரங்களுக்கு வழங்கப்பட்ட நகர ஈட்டுப்படியைப் போலவே திருச்சி, சேலம் ஆகிய நகரப்பகுதிகளுக்கும் நகர ஈட்டுப்படி வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. பெண் அலுவலர் மற்றும் மகளிர் திருமணத்திற்காக அரசு கடன் வழங்குகின்ற திட்டத்தை 69-ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன்முதலாக அறிமுகப்படுத்தியது இந்த அரசுதான். இத்திட்டத்தின்கீழ் பெண் பணியாளர் அல்லது அரசு ஊழியரின் மகள் ஆகியோரின் திருமணங்களுக்கு வழங்கப்படும் முன்பணத்தொகை தொடக்கத்தில் 3,000 ரூபாய் என்பதை, 89-90 ஆம் ஆண்டு நான் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது 5,000 ரூபாயாக உயர்த்தி - பிறகு நான்காவது முறையாக நான் இந்தப் பொறுப்புக்கு வந்த நேரத்தில் அதைப் பத்தாயிரம் ரூபாயாக உயர்த்தியிருப்பதும் இந்த அரசின் சார்பாகத் தான்.

அதைப்போலவே ஆண் அரசு அலுவலர் மற்றும் அவரது மகன் திருமணத்திற்கு வழங்கப்படும் முன் பணம் 89-90இல் 1,500 ரூபாயாக இருந்து பிறகு 3,000 ரூபாயாகவும், பின்னர் 96-97இல் 6,000 ரூபாயாகவும் வழங்கப்படுவது இந்த அரசில் தான்.

மிக முக்கியமாக அரசு அலுவலர்களுக்கு வாகனக் கடன் வழங்கும் திட்டத்தை 71-72 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தினேன். இத்திட்டத்தின்படி 96-97 ஆம் ஆண்டில் மிதிவண்டி வாங்க வழங்கப்பட்ட முன் பணத்தொகை 1000 ரூபாய் என்பது 1500 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதேபோல் மோட்டார் சைக்கிள் வாங்க வழங்கப்பட்ட முன்பணம் 25,000 ரூபாய் என்பது 35,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதேபோல் கார் வாங்க அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட முன் பணம் 1.4 இலட்சம் ரூபாய் என்பது 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் - அரசுப் பணியாளர்கள் ஓய்வூதியத்திலிருந்து மாதம் 20 ரூபாய் செலுத்தி, ஓராண்டு காலத்திற்குப் பின் அவர்கள் இறந்து போய்விட்டால் அவர்களின்

குடும்பத்திற்கு 25 ஆயிரம் ரூபாய் பாதுகாப்பு நிதி வழங்கும் திட்டமும் இந்த அரசுதான் செயல்படுத்தியது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

**மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதியம்**

இங்கே உரையாற்றியவர்கள் எடுத்துக்காட்டினார்கள். மத்திய அரசுக்கு இணையான ஊதியம் 1989-ஆம் ஆண்டு முதன்முதலாகப் பல்வேறு மாநிலங்கள் எல்லாம் முன்வராத நேரத்தில் இந்தியாவிலே முதன்முதலாக முன் வந்து மத்திய அரசுக்குச் சமமான ஊதியத்தை மாநில அரசு அலுவலர்களுக்கு வழங்கியதும் இந்த அரசு தான் என்பதை முன்னால் பேசியவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். அது மாத்திரமல்லாமல் மைய அரசினுடைய ஐந்தாவது ஊதியக் குழு பரிந்துரை செய்த ஊதிய விகிதங்களும் தென் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகத்தில் இந்த அரசு 1.1.96 முதல் முன்தேதியிட்டு ஆண்டு ஒன்றுக்கு 1,230 கோடி ரூபாய் செலவும், நிலுவைத் தொகை 2,400 கோடி ரூபாய் வழங்கவும் ஆணையிட்டதும் இந்த அரசுதான்.

இவைகள் மாத்திரம் கோரிக்கைகள் அல்ல. அன்றாடம் தேவைகள் வளருகின்றன. எனவே, கோரிக்கைகளும் எழுகின்றன. குறிப்பாக ஒரு கோரிக்கையைப் பற்றி இங்கே மாநாட்டின் தலைவரும், சங்கத்தின் தலைவருமான முருகேசன் குறிப்பிட்டுச் சொன்னார். துரைப்பாக்கம் பகுதியில் வீட்டுமனை வழங்குவதற்காக 23 எக்டேர் நிலம் ஒதுக்கீடு செய்து 28.2.97 அன்று இந்த அரசு ஆணையிட்டுள்ளது. ஆனாலும் நிலத்தை ஒப்படை செய்வதற்காக ஆணைகள் இன்னும் வெளியிடப்படாமல் நிலுவையிலே உள்ளது என்று அவரே குறிப்பிட்டார்.

குறிப்பிடும் போது அழுத்தந்திருத்தமாகச் சொல்லாமல் மேலோட்டமாக ஒன்றைச் சொன்னார். நாம் செய்கின்ற தவறுகளும் இருக்கிறது. நம்மிடத்திலும் குறைகள் இருக்கிறது என்று கூறினார். ஏனென்றால், தலைமைச் செயலகத்திலே உள்ள அலுவலர்களுக்குத் துரைப்பாக்கம் பகுதியிலே அரசு 23 எக்டேர் நிலம் ஒதுக்கிவிட்டது. ஆனால் அதற்கான ஆணை இன்னும் வெளியிடப்படாமல் இருப்பதற்குக் காரணம் நான் அல்ல. நான் ஆணையிட்டுவிட்டேன்.

கோரிக்கையை ஏற்றுக் கொண்டுவிட்டேன். ஆனால் ஓராண்டு காலமாக இன்னும் அந்தக் கோப்பு நகரவில்லை என்றால் அதற்குக் காரணம் நானல்ல. இதை அவர் சொன்ன காரணத்தினால் நான் சொல்ல நேரிட்டது. இல்லாவிட்டால் சொல்லாமல் மறைத்திருப்பேன். உங்களைக் காப்பாற்றியிருப்பேன்.

தலைமைச் செயலக அலுவலர்களின் ஒரு பிரச்சினைக்கே தலைமைச் செயலகத்திற்குள்ளேயே ஒரு கோப்பு நகர ஓராண்டு காலம் என்றால் குப்பைக்காட்டில் இருக்கின்ற குப்பன், சுப்பனுடைய கோப்பு நகர்வதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்ற எண்ணம் சாதாரண, ஏழையெளிய பாமரிகளுக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காகத் தான் இதைச் சொல்லுகிறேன்.

இதைப்பற்றி நான் மேடையிலே இருந்தவாறே விசாரித்தேன். அப்போது எனக்குச் சொல்லப்பட்ட காரணம் - இதற்காக நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதும், ஒக்கியம் துரைப்பாக்கத்தைச் சேர்ந்த நேதாஜி குடிசை வாழ்வோர் சங்கத்தின் தலைவர் கணேசன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்திலே ஒரு





# இந்த அரசிலேதான்...

*★ நகர ஈட்டுப்படி ★ ரகசியக் குறிப்பேட்டு முறை ஒழிப்பு ★ வீட்டு வாடகைப்படி உயர்வு ★ பெண் அலுவலர், மகளிர் திருமணத்திற்காக அரசு கடன் ★ வாகனக் கடன் ★ அரசுப் பணியாளர் பாதுகாப்பு நிதித்திட்டம் ★ மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்க்கு ஊதியம்...*

வழக்குத் தொடுத்துள்ளார் என்றும், மேற்படி புல எண்களில் ஏறத்தாழ 12 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்படி சங்க உறுப்பினர்கள் வசித்துவருவதாகவும், அவர்களை அங்கிருந்து வெளியேற்றக் கூடாதென்றும் இடைக்காலத் தடை கோரும் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் நிலத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதாகவும், அவற்றை அகற்ற நடவடிக்கை எடுப்பதாகவும், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் 13-4-98 தேதியிட்ட கடிதத்தில் அரசுக்குத் தெரிவித்துள்ளார். இது குறித்து சட்டத்துறை கலந்தாலோசிக்கப்பட்டது. நீதிமன்றத்தால் தடை ஆணை எதுவும் பிறப்பிக்கப்படாத நிலையில் நில மாற்றத்திற்குரிய முன்மொழிவு குறித்த செயற்குறிப்பினை ஆய்வு செய்யலாம் என்று சட்டத்துறை கருத்து தெரிவித்துள்ளது. இடைக்காலத் தடை ஆணை நீதிமன்றம் தரவில்லை. இருந்தாலுங்கூட, இதற்கு என்ன செய்யலாம் என்று யோசனையைச் சட்டத்துறையிடம் கேட்க, சட்டத்துறை ஆய்வு செய்யலாம் என்று கருத்து தெரிவித்து, இந்தக் கருத்து நில நிர்வாக ஆணையருக்குத் தெரிவிக்கப்பட்டு, அதற்குரிய செயற்குறிப்பினை விரைவில் அனுப்பிவைக்கும்படி 19-5-98 அன்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

**போராட்ட உணர்வு தேவை - ஆனால் தொடர்ந்து போராடவேண்டுமென்பதல்ல**

இப்படிச் சில கோப்புகள் சுற்றி வருகின்ற நிலை ஏற்படுகின்ற காரணத்தினாலேதான் நடக்க வேண்டிய காரியங்கள் நடக்காமல் போய் விடுகின்றன. நல்லவேளை தலைவலியும், காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்பதைப் போல, தலைமைச் செயலக அலுவலர்களுக்கே இந்தத் தலைவலியும் காய்ச்சலும் வந்த காரணத்தால், தமிழ்நாட்டு மக்கள் விரைவிலேயே இதுபோன்ற காரியத்தை உடனடியாகப் பெறக்கூடிய சூழ்நிலை இனியாவது பிறக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் - இங்கே ஒரு நண்பர் பேசும்போது குறிப்பிட்டார். சங்கரய்யா கூட அதுபற்றி என்னிடம் விளக்கம் கேட்டார். நல்லக்கண்ணு அவர்களும் அதுபற்றி என்னிடம் விளக்கம் கேட்டார். கழக ஆட்சி நடைபெறும்போது ஒருமுறை அங்கீகாரம் ரத்து செய்யப்படக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டதையும், அதைக் கேள்விப்பட்டு உடனடியாக நான் சென்னைக்கு விரைந்து வந்து, ரத்து செய்யப்பட்ட அந்த ஆணையை ரத்து செய்து, பிரதிநிதிகளோடு கலந்து பேசி பிரச்சினையைத் தீர்த்து வைத்ததையும் இங்கே குறிப்பிட்டார்கள்.

நாம் போராட்ட உணர்வோடு இருக்கவேண்டும். ஆனால் தொடர்ந்து போராடிக்கொண்டே இருக்கவேண்டும் என்பதல்ல. போராட்ட உணர்வு ஒவ்வொரு மனிதனுக்கும் தேவை. அதிலும் குறிப்பாக அலுவலர்கள், தொழிலாளர்கள், பாட்டாளி மக்கள் இவர்களுக்குப் போராட்ட உணர்வு தேவை. ஆனால் ஒரு போராட்டம் என்பது பிரச்சினைக்காக இருக்க வேண்டுமே தவிர, இப்போதெல்லாம் பார்க்கிறோம் - ஏன் இந்தப் போராட்டம் என்றால், போராட்டத்திற்காகப் போராட்டம் என்று இப்படிப் பல போராட்டங்கள் நடைபெறுகின்றன.

பிரச்சினைகளுக்காகத்தான் போராட்டம் நடைபெற வேண்டும். வெளிச்சத்திற்காகத்தான் விளக்கு வைக்கவேண்டுமே தவிர - விளக்கிற்காக யாரும் விளக்கு வைக்கமாட்டார்கள். விளக்கு வைப்பது வெளிச்சத்திற்காகத் தான். விளக்கிற்காக விளக்கு வைப்பது கூடாது. அதைப்போலப் போராட்டத்திற்காகப் போராட்டங்கள் கூடாது. பிரச்சினைகளுக்காகப் போராட்டங்கள் வந்தால் அந்தப் பிரச்சினைகளின் ஆழத்தை உணர்ந்து, அந்தப் பிரச்சினைகளின் தன்மைகளை உணர்ந்து அதை உடனடியாக நிறைவேற்றி வைக்கக்கூடிய ஒரு 'முதல் ஊழியனாகத்தான்' உங்களுடைய முதலமைச்சர் இருக்கிறார் என்ற நம்பிக்கையை நீங்கள் பெறலாம்.

நீங்கள் இங்கே எடுத்துவைத்துள்ள பல்வேறு கோரிக்கைகள், இப்போதுதான் பல்வேறு கோரிக்கைகள் நிறைவேறியுள்ள சூழ்நிலையில், நல்ல முறையிலே ஆடை அணிந்து, அலங்காரங்கள் எல்லாம் முடிந்து, தலை வாரி, பூச்சூடி இவ்வளவும் முடிந்த பிறகு ஒரு திருஷ்டிப் பொட்டு கன்னத்திலே வைக்கவில்லையே என்று குறைபடுவதைப் போல, நீங்கள் அந்தத் திருஷ்டிப் பொட்டுக்காகச் சில கோரிக்கைகளை இங்கே வைத்திருக்கிறீர்கள். தேவைப்பட்டால், உரிய நேரத்தில் உங்களோடு கலந்துபேசி அந்தப் பொட்டும் வைக்கப்படும் என்ற உறுதியை உங்களுக்கு வழங்கி இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்து உங்களுக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் நெஞ்சார தெரிவித்துக் கொள்கிறேன்.

*- தலைமைச் செயலக ஊழியர்கள் சங்கப் பொன்விழாவில் 30-6-98 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.*

# காவிரி பிரச்சினை: தமிழகத்தின் நியாயத்தை நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்து நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்தும் திட்டத்தை அரசிதழில் வெளியிட வலியுறுத்துவீர் !

தமிழகம் - புதுவை அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு **கலைஞர்** கடிதம்

**கா**விரி பிரச்சினையில் தமிழகத்தின் பக்கம் உள்ள நியாயத்தை நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்து, நடுவர் மன்றம் வழங்கியுள்ள இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதற்கான மத்திய அரசின் திட்டத்தை அரசிதழில் வெளியிட வலியுறுத்துவீர் என்று தமிழகம் மற்றும் புதுவையைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 12-7-98 அன்று எழுதியுள்ள விளக்கக் கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூறியுள்ளார்.

காவிரிப் பிரச்சினை தொடர்பாகத் தமிழகம் மற்றும் புதுவையைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கலைஞர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தின் முழுவிவரம் வருமாறு:

காவிரி நதிநீர் தாவா குறித்து தமிழ்நாடு மற்றும் கர்நாடகா மாநிலங்களுக்கிடையே 22 ஆண்டுகளாகச் சுமார் 26 முறை மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் பலனளிக்காத நிலையில் தமிழ்நாடு அரசு மத்திய அரசிடம் ஒரு நடுவர்மன்றத்தினை அமைக்கக் கோரி, 20 வருடங்களுக்கு பிறகு 1990-ம் ஆண்டு, சூன் திங்களில் மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் தாவா சட்டம், 1956ன் கீழ் காவிரி நதிநீர் தாவா நடுவர் மன்றத்தினை 'ஏற்படுத்தியது தங்களுக்குத் தெரிந்ததே. உச்சநீதிமன்றம், சட்டப்படி நடுவர் மன்றத்தினை ஏற்படுத்த ஆணை பிறப்பித்த பிறகே காவிரி நடுவர் மன்றத்தினை மத்திய அரசு ஏற்படுத்தியது.



### இடைக்கால ஆணை

நீண்ட நாள், சட்ட விவாதங்களுக்குப் பிறகும், உச்சநீதி மன்றத்தின் ஆணையின்படியும், 25-6-91 அன்று காவிரி நடுவர் மன்றம் அதன் இடைக்கால ஆணையைப் பிறப்பித்தது. ஆணை வெளியிட்டு ஆறு மாதங்களுக்குப் பின்னர், அவ்வாணையை மத்திய அரசு, 10-12-1991ஆம் நாளன்று அரசிதழில் வெளியிட்டது.

மேற்கூறிய சட்டம் பிரிவு 6-ன் கீழ், இவ்வாணையானது வெளியிடப்பட்டால், இது இறுதியானது மற்றும் தாவாவில் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அதைச் செயல்படுத்த சட்டப்படி கட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அதனைச் செயலாக்கம் செய்யவும் வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயலாக்க கர்நாடகா முன்வரவில்லை.

மாறாக, 'கர்நாடாக காவிரிப்படுகை பாசனப் பாதுகாப்பு அவசரச் சட்டம் - 1991' என்று ஓர் அவசரச் சட்டத்தை இயற்றி (பிறகு அது சட்டமாக இயற்றப்பட்டது) இடைக்கால ஆணைக்கு விளக்கம் கோரி நடுவர் மன்றத்தில் மனுச் செய்தும், நடுவர் மன்ற இடைக்கால ஆணை செல்லாது என்று ஆணை பிறப்பிக்க உச்ச நீதிமன்றத்தில் கர்நாடகா அரசு வழக்குத் தொடுத்தது.

இறுதியாக, இந்தியக் குடியரசுத் தலைவர், உச்ச நீதிமன்றத்தின் கருத்தினை அளிக்கும்படி கோரியதன்பேரில், கர்நாடகாவின் அவசரச் சட்டம் மற்றும் அதன் சட்டம், அவ்வரசின் சட்டம் இயற்றும் வரம்பிற்குள் இல்லை என்றும், அவைகள் அரசியல் சாசனச் சட்டத்தின்படி செல்லத்தக்கது அல்ல என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

### உச்ச நீதிமன்றம் கருத்து

நடுவர்மன்றம் இடைக்கால ஆணை வழங்க அதிகாரம் உண்டு என்றும் உச்ச நீதிமன்றம் கருத்துக்கூறியது. கர்நாடக அரசு நடுவர்மன்றத்தின் இடைக்கால ஆணையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. பின்னர் 1995-ஆம் ஆண்டு கர்நாடகா அரசு அவ்வழக்கினைத் தாமே முன்வந்து விலக்கிக்கொள்ள அனுமதி கோரியதன் அடிப்படையில், வழக்கை விலக்கிக் கொண்டதாகக் கருதி உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

நடுவர்மன்றம் மற்றும் உச்சநீதிமன்றம் ஆகியவற்றின் ஆணைகளுக்குப் பிறகும், நடுவர்மன்ற இடைக்கால ஆணையினைச் செயல்படுத்தாமல் இருப்பதில் கர்நாடகா உறுதியாக இருந்து வருகிறது. மேற்கூறிய சூழ்நிலையில், மேற்கூறிய சட்டம், பிரிவு 6ஏ-ன் கீழ், இடைக்கால ஆணையினைச் செயல்படுத்துவதற்காக ஒரு திட்டத்தைத் தீட்டி அரசிதழில் வெளியிடுமாறு மத்திய அரசை இவ்வரசு கோரி வந்தது. மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் சட்டம் 1956, பிரிவு 6ஏ-ன் படி நடுவர் மன்றத்தின் ஆணையினைச் செயலாக்குவதற்காக, ஒரு திட்டத்தை மத்திய அரசு தீட்ட, சட்டப்படி கடமைப்பட்டுள்ளது என்பது தெரியவரும்.

பிரிவு6 - நடுவர் மன்றத்தின் ஆணையை மத்திய அரசு அதன் அரசிதழில் அறிவிக்கையாக வெளியிடப்பட வேண்டும். அப்படி வெளியிடப்பட்டால் அந்த ஆணையானது, இறுதியானது மற்றும் தாவாவில் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அதைச் செயல்படுத்த சட்டப்படி கட்டுப்படுத்துவதோடுமல்லாமல், அதனைச் செயலாக்கம் செய்யவும் வேண்டும்.



### சட்டப்படி தீர்ப்பைச் செயல்படுத்த மத்திய அரசு திட்டம் தீட்டவேண்டும்

பிரிவு 6ஏ(1)-பிரிவு 6ன் கீழ் உள்ள சரத்துகளுக்குப் பாதகம் இல்லாமல், நடுவர் மன்றத்தின் தீர்ப்பினைச் செயல்படுத்தும் பொருட்டு, மத்திய அரசு ஒரு திட்டத்தைத் தீட்டி, அதை அறிவிக்கை மூலம் அரசிதழில் வெளியிடலாம்.

(2) உட்பிரிவு (1)ன் கீழ் தீட்டிய திட்டத்தில் பின்வரும் வழிவகைகள் சேர்க்கலாம்.

(a) நடுவர் மன்றத்தின் ஆணை மற்றும் அறிவிக்கைகளைச் செயலாக்கும் பொருட்டு ஓர் ஆணையம் (ஆணையம் அல்லது குழு அல்லது ஏதாவது ஒரு அமைப்பு) நிறுவப்பட வேண்டும்.

சட்டப்படி ஆற்றவேண்டிய கடமையை நிறைவேற்ற மத்திய அரசு முன்வராத காரணத்தினால், இடைக்கால ஆணையினைச் செயல்படுத்த கர்நாடகாவிற்கு ஆணையிடவும், ஒரு திட்டத்தைத் தீட்டுவதற்கு மத்திய அரசுக்கு ஆணையிடவும், 1992-ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கினைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்தது. பல விவாதங்களுக்குப் பிறகு கணிசமான சட்ட நுணுக்கம் மற்றும் அரசியல் அமைப்பிற்கு விளக்கங்கள் தேவை ஏற்படுவதால் இந்த வழக்கினை உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசனப் பிரிவின் விசாரணைக்கு, எடுத்துக்கொள்ள 1997, மார்ச் மாதம் உச்சநீதி மன்றம் உத்தரவிட்டது.

உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசனப் பிரிவு இவ்வழக்கின் விசாரணையை, 1997, ஏப்ரல் மாதம் துவக்கியது. உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணை மற்றும் விவாதத்தின் முடிவில், மத்திய அரசு, சட்டப்படி ஒரு திட்டத்தைத் தீட்ட முன்வருகிறது என்று 9-4-97 அன்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் எழுத்து மூலமாகக் கூறினார்.

உச்ச நீதிமன்றத்தில் அளித்த உறுதிமொழியை நிறைவேற்றும் பொருட்டு, மத்திய அரசு ஒரு வரைத் திட்டத்தைத் தயாரித்து, 30-5-1997-ஆம் நாளன்று சம்பந்தப்பட்ட மாநிலங்களின் கருத்தை அனுப்புமாறு கேட்டுக்கொண்டது. தமிழ்நாடு அந்த வரைவுத் திட்டத்தை, சட்டத்திற்குட்பட்டு ஒரு சில கருத்துக்களுடன் பொதுவாக ஏற்றுக்கொள்வதாக மத்திய அரசுக்கு 23-6-1997 அன்று தெரிவித்தது.

பின்னர் 20-8-1997 அன்று உச்ச நீதிமன்றம் கொடுத்த அறிவுரையின்படி, திட்டத்தை மத்திய அரசு இறுதி செய்ய நடவடிக்கை மேற்கொண்டு உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும். இவ்வழக்கு உச்ச நீதிமன்றத்தில் 21-7-1998 அன்று மீண்டும் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

நடுவர்மன்றத்தின் ஆணையைச் செயல்படுத்துவதில் தாமதத்தைத் தவிர்க்கும் வண்ணம், திட்டத்தை இறுதி செய்து அரசிதழில் வெளியிட வேண்டும் என்று, 9-7-1997, 23-7-1997, 29-9-1997, 1-11-1997, 6-11-1997 ஆகிய நாட்களில் முன்னாள் பிரதமருக்கு (திரு.ஐ.கே.குஜ்ரால்) நான் எழுதிய நேர்முகக் கடிதங்களிலும், மேலும் 27-7-1997 மற்றும் 29-9-1997 அன்று நேரில் சந்தித்தும், இந்த வரைவுத் திட்டத்தை விரைவில் இறுதி செய்து அரசிதழில் வெளியிடும்படி கேட்டுக்கொண்டேன்.

30-9-1997 அன்று முன்னாள் மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சரின் தலைமையில், காவிரிப் படுகை மாநிலங்களின் பாசனத்துறை அமைச்சர்களின் கூட்டத்தில் கர்நாடகா, இத்திட்டமே தேவையில்லை என்றும் அப்படி ஒரு திட்டம் இருந்தால் காவிரி நதிநீர் ஆணையத்திற்குப் பதிலாகச் சட்டப்படி அதிகாரம் பெறாத ஒரு ஆலோசனைக் குழு அல்லது ஒரு ஒருங்கிணைப்புக் குழு ஏற்படுத்தினால் போதும் என்று தெரிவித்தது. ஆனால் ஏற்கெனவே மத்திய அரசு தீட்டிய திட்டம் சரியான திட்டம் என்பதாலும் கர்நாடகா கூறிய ஒருங்கிணைப்புக் குழுவிற்குச் சட்டரீதியான அதிகாரம் ஏதும் இருக்க வாய்ப்பில்லை என்பதாலும், நடுவர்மன்றத்தின் ஆணையைச் செயலாக்கத்திற்குக் கொண்டு வருவதற்கு மத்திய அரசு இப்பொழுது

> *கொள்கை அளவில் ஏற்றுக்கொண்ட எதனையும் நடைமுறைப்படுத்தும் பொழுது ஏற்படும் மாறுதல்களை நாம் மறந்துவிடக் கூடாது; மற்றவர்கள் கருத்தை மதிக்கத் தவறவும் கூடாது.*
>
> **- கலைஞர்**

தீட்டிய திட்டம்தான் சிறந்த வழி என்றும் அத்திட்டத்தை விரைவில் இறுதி செய்ய வேண்டும் என்றும் தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர் வலியுறுத்தினார்.

7-11-97 அன்று முன்னாள் பிரதமர் மற்றும் முன்னாள் மத்திய நீர்வளத்துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து, மத்திய அரசின் வரைவுத் திட்டத்தை இறுதி செய்து மத்திய அரசிதழில் வெளியிடுமாறு தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார். இதுகுறித்து மத்திய அரசின் பதில் மனநிறைவு அளிக்காத நிலையில், 10-11-1997 அன்று மத்திய அரசு வரைவுத் திட்டத்தை இறுதி செய்து மேற்படி திட்டத்தை அரசிதழில் வெளியிட அக்கறை செலுத்தாத நிலையிலுள்ளதால் மத்திய அரசை மேற்படி திட்டத்தை உடன் அமல் செய்யக்கோரி ஆணையிட உச்சநீதிமன்றத்தில் தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் முறையீட்டு மனு ஒன்றைத் (affidavit) தாக்கல் செய்தார்.

தமிழக அரசு இத்திட்டத்தை அரசிதழில் வெளியிட வேண்டி தொடர்ந்து வலியுறுத்தி வந்தபோதிலும் இது குறித்து மத்திய அரசு ஒரு முடிவு எடுக்காத நிலையில் 28-3-1998, 6-4-1998 மற்றும் 31-5-1998 ஆகிய நாட்களில் தற்போதைய பிரதமருக்கு எழுதிய நேர்முகக் கடிதங்களிலும் மற்றும் 7-4-1998 அன்று நேரில் சந்தித்தும், இந்த வரைவுத் திட்டத்தை விரைவில் இறுதிசெய்து அரசிதழில் வெளியிடுவதன் அவசியத்தைக் குறித்து வலியுறுத்தினேன்.

9-4-1997 அன்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு கொடுத்த உறுதிமொழிக்கேற்ப 1956-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் தாவா சட்டம், பிரிவு 6ஏ-ன் கீழ் மத்திய அரசு தீட்டிய திட்டத்தை அரசிதழில் வெளியிட வேண்டியுள்ளது. ஆனால், மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் உறுதிகூறி 15 மாதங்கள் ஆகியும் இத்திட்டத்தை இறுதி செய்து அரசிதழில் மத்திய அரசால் வெளியிடப்படவில்லை. இதற்குப் பிறகு உச்சநீதிமன்றத்தின் முன் தமிழ்நாடு தொடர்ந்த வழக்கு 8 முறை விசாரணைக்கு வந்தபோதெல்லாம் ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி அந்த வழக்கை மீண்டும் மீண்டும் ஒத்திவைக்க மத்திய அரசு கோரி வந்தது. இதன் அடிப்படையில், இவ்வழக்கு 21-7-1998 அன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் பொருட்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### திட்டத்தை அரசிதழில் வெளியிடுக

இத்திட்டத்தை அறிவிக்கை மூலம் அரசிதழில் வெளியிட்டவுடன் மேற்படி சட்டம் பிரிவு 6ஏ(7)-ன் கீழ் பாராளுமன்றத்தின் முன் வைக்கப்படவேண்டும்.

காவிரி நதிநீர் தாவா குறித்து தமிழ்நாட்டின் நியாயத்தினை நிலைநாட்டுவதற்காகப் பாராளுமன்றத்திலும் மற்றும் தகுந்த தருணத்திலும் செயல்படுவதற்கு ஏதுவாக, காவிரி நதிநீர் தாவா பற்றித் தயாரித்த ஒரு குறிப்பினைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் இக்கடிதம் மூலம் தங்களுக்கு அனுப்புகிறேன். பாராளுமன்றத்தில் இந்தப் பிரச்சினை குறித்து தமிழ்நாட்டின் பக்கம் உள்ள நியாயத்தை தாங்கள் எடுத்துரைத்து இத்திட்டத்தை விரைவில் இறுதிசெய்து அரசிதழில் மத்திய அரசு வெளியிட, தாங்கள் ஆக்கபூர்வமாகச் செயல்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

- இவ்வாறு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அந்தக் கடிதத்தில் கூறியுள்ளார். ★

**கலை மாமணி விருது வழங்கும் விழா : வள்ளுவர் கோட்டம் 10-7-98**

மேதகு தமிழக ஆளுநர் நீதிபதி செல்வி மீ.பாத்திமா பீவி அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களும் பங்கேற்க - தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் கலைமாமணி விருது வழங்கும் விழா 10.7.98 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மேதகு ஆளுநர் அவர்கள் விழாத் தலைமையேற்றுக் 'கலைமாமணி' விருது வழங்கிட - மாண்புமிகு கலைஞர் அவர்கள், விருது பெற்றோர்க்குப் பொற்பதக்கமும், 'கலைமாமணி' விருது பெற்று அகவை முதிர்ந்த நலிந்த கலைஞர்களுக்குப் 'பொற்கிழியும்' சிறந்த நாடகக் குழுவிற்குச் சுழற்கேடயமும், சிறந்த கலை நிறுவனத்திற்குக் கேடயமும் வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அவர்கள், அனைவருக்கும் பொன்னாடை அணிவித்தார். துறைச் செயலாளர் திரு. த.ரா. சீனிவாசன் வாழ்த்திப் பேசினார்.

விழாத் தொடக்கத்தில் இயல்-இசை-நாடக மன்றத் தலைவர் திரு.இராம. நாராயணன் வரவேற்புரையாற்றினார்; விழா முடிவில் மன்றத் துணைச் செயலாளர் திரு. கி.சொர்ணம் நன்றி கூறினார். மன்ற உறுப்பினர் செயலாளர், திரு.சி.சந்திரசேகர் அறிக்கை படித்தார்.

இவ்விழாவில் 'கலைமாமணி' விருது பெற்ற 75 கலைஞர்கள் விவரம் வருமாறு :

| | |
|---|---|
| முனைவர் சிலம்பொலி க.செல்லப்பன் | - இயற்றமிழ்க் கலைஞர் |
| திரு. மீ.ப. சோமசுந்தரம் | - இயற்றமிழ்க் கலைஞர் |
| கவிஞர் முடியரசன் | - இயற்றமிழ்க் கவிஞர் |
| கவிஞர் கா.வேழவேந்தன் | - இயற்றமிழ்க் கவிஞர் |
| முனைவர் சாரதா நம்பிஆரூரன் | - இலக்கியப் பேச்சாளர் |
| திரு.வலம்புரி ஜான் | - இலக்கியப் பேச்சாளர் |
| குளிக்கரை திரு. பி.பிச்சைலிங்கம் | - குரலிசைக் கலைஞர் |
| திரு.வி.எஸ்.கே. சக்கரபாணி | - வயலின் கலைஞர் |
| திரு.ஏ.பிரேம்குமார் | - மிருதங்கக் கலைஞர் |
| திருமதி ரேவதி கிருஷ்ணா | - வீணைக் கலைஞர் |
| ஸ்ரீரங்கம் திரு.கண்ணன் | - முகர்சிங் கலைஞர் |
| திருப்பாம்புரம் சகோதரர்கள் | |
| திரு.டி.கே.எஸ்.சுவாமிநாதன் | - நாதசுரக் கலைஞர் |
| திரு.டி.கே.எஸ். மீனாட்சிசுந்தரம் | - நாதசுரக் கலைஞர் |
| திருவிடைமருதூர் திரு.பி.எஸ்.வீ.ராஜா | - நாதசுர ஆசிரியர் |
| திருக்கண்ணபுரம் திரு.எஸ். ஜெயசந்திரன் | - தவில் கலைஞர் |
| இடும்பாவனம் திரு.கே.எஸ். கண்ணன் | - தவில் கலைஞர் |
| திரு.டி.கே.எஸ். கலைவாணன் | - தமிழிசைக் கலைஞர் |
| திரு.டி.எல். மகராஜன் | - தமிழிசைக் கலைஞர் |
| திருமதி. சரஸ்வதி சீனிவாசன் | - இறைவருட் பாடற் கலைஞர் |
| திரு. அருணாசல மாசிலாமணி | - சமயச் சொற்பொழிவுக் கலைஞர் |
| திரு. எஸ்.ஆர். ஜானகிராமன் | - இசை ஆராய்ச்சிக் கலைஞர் |
| திரு. எம்.வி.எம். செல்லமுத்துப் பிள்ளை | - மாண்டலின் கலைஞர் |
| திருமதி (சாமி) கே.சுப்புலட்சுமி | - பரதநாட்டிய ஆசிரியர் |
| திருமதி அனிதா ரத்தினம் | - பரதநாட்டிய ஆய்வுக் கலைஞர் |
| திருமதி பிரியதர்ஷினி கோவிந்த் | - பரதநாட்டியக் கலைஞர் |
| செல்வி பிரியா சுந்தரேசன் | - பரதநாட்டியக் கலைஞர் |


20 தமிழரசு

| | |
|---|---|
| திருமதி பத்மா ராஜகோபாலன் | - பரதநாட்டிய இசைக் கலைஞர் |
| திருமதி ஸ்ரீ கலா பரத் | - நாட்டிய நாடகக் கலைஞர் |
| திருமதி உமா முரளிகிருஷ்ணா | - குச்சுப்புடி கலைஞர் |
| திரு. எம்.எஸ். இராஜாராம் | - நாடக ஆசிரியர் |
| காஞ்சி திருநாவுக்கரசு | - நாடகத் தயாரிப்பாளர் |
| திரு. போலீஸ் வெங்கடேசன் | - நாடக இயக்குநர் |
| திரு. கு. சண்முகசுந்தரம் | - நாடக நடிகர் |
| திரு. டி.என். கிருஷ்ணன் | - நாடக நடிகர் |
| திருமதி கௌசல்யா செந்தாமரை | - நாடக நடிகை |
| திரு. எஸ்.ஆர். கோபால் | - நாடக நகைச்சுவை நடிகர் |
| திரு.வே.பா. பலராமன் | - தொழில் முறையல்லாத நாடக ஆசிரியர் |
| திரு.கே.ஏ.வரதப்பன், காஞ்சிபுரம் | - நாடக ஆர்மோனியக் கலைஞர் |
| திரு. விகடம் கிருஷ்ணமூர்த்தி | - விகடக் கலைஞர் |
| திரு. இராம. வீரப்பன் | - திரைப்படத் தயாரிப்பாளர் |
| திரு. ஏ.வி.எம். சரவணன் | - திரைப்படத் தயாரிப்பாளர் |
| திரு. கேயார்ஜி | - திரைப்படத் தயாரிப்பாளர் |
| திரு. அகத்தியன் | - திரைப்பட இயக்குநர் |
| கிரு. பட்டாபிராமன் (பட்டு) | - திரைப்பட இயக்குநர் |
| திரு. இரத்னகுமார் | - திரைப்பட வசனகர்த்தா |
| திரு. பழநிபாரதி | - திரைப்படப் பாடலாசிரியர் |
| திரு. சித்தார்த்தா | - திரைப்பட இசையமைப்பாளர் |
| திரு. ஜெயச்சந்திரன் | - திரைப்படப் பின்னணிப் பாடகர் |
| திருமதி ஜமுனாராணி | - திரைப்படப் பின்னணிப் பாடகி |
| திரு. பி.சி.ஸ்ரீராம் | - திரைப்பட ஒளிப்பதிவாளர் |
| திரு. தோட்டா தரணி | - திரைப்பட அரங்க அமைப்பாளர் |
| திரு. வோஸ் | - திரைப்படப் புகைப்படக் கலைஞர் |
| திரு. எஸ்.எம்.உமர் | - திரைப்பட வளர்ச்சிப் பணிக் கலைஞர் |
| சினிமா எக்ஸ்பிரஸ் திரு. இராமமூர்த்தி | - திரைப்படப் பத்திரிகை ஆசிரியர் |
| டாக்டர். மேக்னட் ஏ.இராஜாராம் | - திரைப்பட ஆய்வாளர் |
| சிவகாசி திருமதி காந்திமதி | - வில்லுப்பாட்டுக் கலைஞர் |
| திருமதி எஸ்.ஆர். மாரிக்கண்ணு | - கரகக் கலைஞர் |
| திரு. எம்.குமாரராமன் | - தேவராட்டக் கலைஞர் |
| திரு. எம். பிச்சையப்பா | - காவடிக் கலைஞர் |
| திரு. ஏ.எஸ். பாலசுப்ரமணியம் | - பொம்மலாட்டக் கலைஞர் |
| திரு. டி.பி.செல்லப்பா | - இசை நாடக நடிகர் |
| புதுக்கோட்டை திருமதி கே.எஸ்.கலா | - இசை நாடக நடிகை |



| | |
|---|---|
| திரு. நெப்போலியன் | - திரைப்பட நடிகர் |
| திரு. விஜய் | - திரைப்பட நடிகர் |
| திரு. பிரசாந்த் | - திரைப்பட நடிகர் |
| செல்வி மீனா | - திரைப்பட நடிகை |
| செல்வி ரோஜா | - திரைப்பட நடிகை |
| திரு. குமரிமுத்து | - திரைப்பட நகைச்சுவை நடிகர் |
| திரு. தியாகு | - திரைப்பட நகைச்சுவை நடிகர் |
| திரு. மணிவண்ணன் | - திரைப்பட குணச்சித்திர நடிகர் |
| திரு. நாசர் | - திரைப்பட குணச்சித்திர நடிகர் |
| திரு. ரகுவரன் | - திரைப்பட குணச்சித்திர நடிகர் |
| திரு. எம்.டி.சுந்தர் | - திரைப்படக் கதாசிரியர் |
| திரு. விசு | - திரைப்பட வசனகர்த்தா |
| திரு.ஆர்.யக்ஞராமன் | - பண்பாட்டுக் கலை பரப்புநர் |

## பொற்கிழி பெற்ற கலைஞர்கள்

| | |
|---|---|
| கலைமாமணி திருமதி. பி.எஸ்.ரஞ்சனி | - இசை நாடக நடிகை |
| கலைமாமணி திரு.பி.எஸ் நடராஜ பாகவதர் | - இசை நாடக நடிகர் |
| கலைமாமணி திருக்குவளை திரு.டி.எம்.தவசித்த தியாகராஜன் | - நாதசுரக் கலைஞர் |
| கலைமாமணி திரு.எம்.எஸ். வெங்கடாசலம் | - இசை நாடக ஆர்மோனியக் கலைஞர் |
| கலைமாமணி திருக்கடையூர் திரு.டி.கே. தட்சிணாமூர்த்தி | - கஞ்சிராக் கலைஞர் |
| சுழற்கேடயம் பெறும் சிறந்த நாடகக் குழு | - திரு.வி.கோபாலகிருஷ்ணன் அவர்களின் கோபி தியேட்டர்ஸ் |
| சிறந்த கலை நிறுவனம் | - கார்த்திக் பைன் ஆர்ட்ஸ், சென்னை. |







# தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றக் கூட்டம்

தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றக்கூட்டம், பழங்குடியினர் இன்றளவில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விவாதித்து, அவற்றிற்கு முடிவு காண - சேலத்தில் 29-6-98 அன்று மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் திரு.சமயநல்லூர் எஸ்.செல்வராஜ் அவர்களின் தலைமையில் கூடியது.

கூட்டத்தில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.வீரபாண்டி ஆறுமுகம் அவர்களும் கலந்துகொண்டு பழங்குடியினர் பிரச்சினைகளைக் குறித்து விரிவாக உரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் 17 அலுவல் சாரா உறுப்பினர்கள் (3 சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்து) அரசு செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மேலாண்மை இயக்குநர் 'தாட்கோ' தனி அலுவலர் (பழங்குடியினர் நலம்) பழங்குடியினர் நல இயக்குநர், உதகை - பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் உட்பட பல அலுவலர்கள் கலந்துகொண்டார்கள்.

### நிலம் விற்பனை

நீண்ட விவாதங்களுக்குப்பின் பழங்குடியினர் நிலத்தை மற்ற இனத்தவர்களுக்கு விற்பதைத் தடை செய்யவும், ஏற்கெனவே உடைமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்களைத் திரும்பப் பெற்று, பழங்குடியினருக்கு ஒப்படை செய்யவும், பழங்குடியினருக்காகத் தனியாகக் கடன் நிவாரணச் சட்டம் இயற்றவும், இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பழங்குடியினர் சான்றிதழ் பெறுவதில் ஏற்பட்ட சிக்கலைத் தவிர்க்க, பழங்குடியினர் அதிகமாக வாழும் பகுதிகளுக்கு அலுவலர்கள் நேரில் சென்று சான்றிதழ் வழங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

### தனியே பள்ளிகள்

பழங்குடியினர் குழந்தைகள் அனைவருக்கும் 12ஆம் வகுப்பு வரை கல்வி பெற அனைத்துப் பழங்குடியினக் குடியிருப்புகளிலும் பள்ளிகள் திறக்கப்பட வேண்டும் என்றும் நல்ல தரமான மேற்கல்வி அளிக்க மாதிரிப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

பெரும் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறு வன விளை பொருட்களைச் சேகரிக்க முழு உரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும், இந்த மகசூலைச் சேகரிக்கத் தனியாருக்கு உரிமை அளிக்கக் கூடாது என்றும், இந்த மன்றம் வலியுறுத்தியது.

இதில் உள்ள குறைபாடுகள் களையப்பட்டு, ஊட்டுதவி கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கவேண்டும் என்று வனத்துறைக்குத் தக்க அறிவுரைகள் வழங்க வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

பழங்குடியினர் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்த ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் முகமை, தக்க தகுதி வாய்ந்த, போதிய அளவில் அலுவலர்களுடன் ஏற்படுத்தலாம் என்று அரசுக்குப் பரிந்துரை செய்தது.

பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு நல்ல தரமான கல்வி அளிக்க 6 முதல் 12-க்குரிய இல்லங்களுடன் இணைந்த பொதுப்பள்ளிகளுக்கு நிகரான பள்ளிகள் ஆங்காங்கே ஏற்படுத்தி பழங்குடியின மாணவர்கள் பல்வேறு துறைகளில் முன்னேற வகை செய்யவேண்டும் என்றும் இம்மன்றம் தீர்மானித்தது.





# காமராசர் பிறந்த நாள்

## முதலமைச்சர் கலைஞர்



இன்றைக்கு உன்றன் பிறந்தநாள் - கொள்கைக்
குன்றுக்கு எங்கணும் திருவிழா!

விருதையில் பிறந்து வீரனாய் வளர்ந்தாய்
சரிதையில் நிறைந்த தலைவனாய் நின்றாய்!

சிறையின் கொடுமையும் சித்ர வதையும்
சிரித்த முகத்துடன் ஏற்ற தியாகி

ஆயிரம் உண்டு கருத்து மோதல் - எனினும்
அழியாத் தொண்டு மறந்திடப் போமோ?

தமிழ்நிலம் மணக்க வந்த திருவே!
அமிழ்தெனும் பொதுப்பணியின் உருவே!

கருத்திருக்கும் உன்றன் உடல் என்றாலும் - நெஞ்சில்
கருத்திருக்கும் காலமெல்லாம் உழைப்பதற்கு!

கதராடை மேனிதனை அலங்கரிக்கும் -
கதறுகின்ற ஏழைகளைக் கரம் அணைக்கும்!

கட்சிகளை நோக்கி, நீ கடுமொழிகள் தொடுத்திடுவாய் - பிற
கட்சித் தலைவர்க்கோர் இன்னலென்றால் துடித்திடுவாய்!
பெரியாரின் கல்லறையில் உன் கண்ணீர்!

பேரறிஞர், மூதறிஞர் மறைந்தபோதும் உன் கண்ணீர்!
பெற்ற தாய்தனை நான் இழந்தபோதும்
உற்றார் உறவுபோல் நீ வந்து உகுத்தாய் கண்ணீர்!
பெருமகனே! உனக்காக எம் கண்ணீர்
பேராற்றுப் பெருக்கெனவே பாய்ந்த தன்றோ?
தனிமனிதன் வாழ்வல்ல உன் வாழ்வு
தன்மானச் சரித்திரத்தின் அத்தியாயம்!

குமரி முதல் இமயம்வரை உன்கொடி பறக்கக்
கோலமிகு தமிழகத்தின் புகழ் பொறித்தாய்
"குணாளா! குலக்கொழுந்தே!" என்று பண்பின்
மணாளர் எங்கள் அண்ணன் உனை அழைத்தார்.
பச்சைத் தமிழன் எனப் பகுத்தறிவுத் தந்தை
இச்சையுடன் உன் உச்சி முகர்ந்தார்.
கருப்புக் காந்தியென உன்னை - இந்தக்
கடல்சூழ் நாடு கைகூப்பித் தொழுததன்றோ!
வாழ்க்கையின் ஓரத்தில் நீ எம்மிடம் வாஞ்சையும் காட்டினாய்! - உன்
வாழ்வையே ஒரு பாடமாய் அனைவர்க்கும் நிலை நாட்டினாய்!
இன்றைக்கு உன்றன் பிறந்தநாள் -
என்றைக்கும் அது சிறந்த நாள்!

- 15-7-76 'முரசொலி'யில் வெளிவந்தது.

## குண்டு வெடிப்பில் இறந்தவர் தங்கைக்கு உடனடியாக வேலை

கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஈரோடு அருகில் தொட்டிப் பாளையத்தில் நடந்த ரயில் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர் திரு.கல்யாணசுந்தரம் என்பவர் இறந்துபோனார். இறந்துபோன கல்யாணசுந்தரத்தின் தங்கை செல்வி. மஞ்சுளா தனது கல்லூரி படிப்புச் செலவை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், படிப்பு முடிந்தபின் தனக்கு அரசுத்துறையில் வேலை வாய்ப்பு வழங்கவேண்டும் என்றும் அரசுக்குக் கோரிக்கை விடுத்திருந்தார். அக்கோரிக்கையை ஏற்று முதல்வர் கலைஞர் அவர்கள், செல்வி மஞ்சுளாவுக்குக் கல்லூரிப் படிப்புக்குரிய செலவை அரசு ஏற்கும் என்றும், கல்லூரிப் படிப்பு முடிவடைந்த உடன், அவருடைய கல்வித் தகுதிக்கேற்ப திண்டுக்கல் மாவட்டத்தில் காலியாக உள்ள இடத்தில் பணி வழங்கப்படும் என்றும் 12.2.1998 அன்று ஆணையிட்டார்.

தற்போது, பழநியிலுள்ள அருள்மிகு பழநியாண்டவர் கலைக் கல்லூரியில் முதலாண்டு பட்டப்படிப்புபடித்துவரும்செல்வி. மஞ்சுளா, தனது அண்ணன் மரணத்தினால் பாதிக்கப்பட்ட மனநிலையுடன் உள்ள பெற்றோரைப் பாதுகாக்க வேண்டி யிருப்பதாலும், தான் மேலும் 2 ஆண்டுகள் படிக்க முடியாத சூழ்நிலையில் இருப்ப தாலும், தனது கல்வித் தகுதிக்கேற்ப தற்போது அரசுத்துறையில் தனக்கு வேலைவாய்ப்பு வழங்கக் கோரி மாவட்ட ஆட்சியர் மூலம் அனுப்பிய விண்ணப்பத்தினைப் பரிவுடன் பரிசீலித்து, செல்வி மஞ்சுளாவுக்குத் திண்டுக்கல் மாவட்டத்தில் தற்போது காலியாக உள்ள இளநிலை உதவியாளர் - தட்டச்சர் பணியிடங்கள் ஒன்றில் நியமனம் செய்திட முதல்வர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

## காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம்

25.5.98-ல் சட்டமன்றப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1971 முதல் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் நாகை மாவட்டக் காவல் அலுவலகத்திற்கு, நாகை வெள்ளிப்பாளையம் என்ற இடத்தில் 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாகை மாவட்டம் காவல் தலைமை அலுவலகத்தைக் கட்ட இந்த அரசு முடிவு செய்துள்ளது என அறிவித்திருந்தார். அந்த அறிவிப்பின்படி நாகப்பட்டினம் மாவட்ட அனைத்து காவல் சிறப்புப் பிரிவுகளும் ஒரு வளாகத்தில் இயங்கும் வகையில் 'T' வகை வடிவமைப்புக் கொண்ட மாவட்டக் காவல் அலுவலகக் கட்டடத்தினை நாகப்பட்டினம் வெளிப்பாளையத்தில் கட்டுவதற்கு நிர்வாக அனுமதியும், இதற்காகும் செலவினத்தில் முதல்கட்டப் பணிக்காக 1998-99 ஆம் ஆண்டில் ரூ.62 இலட்சம் ஒதுக்கீடு செய்தும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

★ நலிவுற்ற நிலையிலிருக்கும் 18 கூட்டுறவு நூற்பாலைகளை ரூ.145 கோடி முதலீட்டில் புனரமைத்துச் சீர்செய்திட முதலமைச்சர் கலைஞர் ஆணை.

★ தமிழ்நாட்டிலுள்ள 1,228 காவல் நிலையங்களுக்கும், மேசை, நாற்காலி முதலிய தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கென, தலா ரூ.20,000 வீதம் ரூ.2.46 கோடி நிதி ஒதுக்கி முதலமைச்சர் கலைஞர் ஆணை.

★ கைத்தறி, கைத்தறிப் பொருட்காட்சிகள், துணிநூல் மற்றும் கதர்த் துறை போன்றவற்றிற்கு, பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.2 கோடி நிதி ஒதுக்கி முதலமைச்சர் கலைஞர் ஆணை.

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ-மாணவியர்கள் பயனடையும் வகையில், ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழுள்ள 52 உயர்நிலைப் பள்ளிகளில், ரூ.50 இலட்சம் செலவில், கணிப்பொறிப் பாடவகுப்புகள் தொடங்கிட அரசு ஆணை.

★ ஊராட்சி மன்றங்கள் தங்களிடம் உள்ள உபரியான பொதுநிதியிலிருந்து சிறுசிறு முதலீட்டுப் பணிகளை எடுத்துச் செய்யும் பொழுது, அவற்றிற்கான தொழில்நுட்ப அனுமதி, மதிப்பீடு தயாரித்தல், அளவு, மேல் அளவு செய்தல் போன்றவற்றில் ஏற்படும் தேவையற்ற காலதாமதங்களைத் தவிர்த்திடும் வகையில் ரூ.1 இலட்சத்திற்குக் குறைவான மதிப்பீடுள்ள இத்தகு பணிகளை பொறியியல் பட்டம் பெற்ற பட்டயப் பொறியாளர்களைப் (தனியார்) பயன்படுத்திக் கொள்ள ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கி அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ கடலில் காணாமல் போய்த் தேடப்படும், தமிழக மீனவர் குடும்பங்களுக்கு, அவர்கள் திரும்பி வரும் வரை வருவாய் இன்றி உணவுக்குச் சிரமப்படும் அவர்தம் குடும்பத்தினருக்கு, நாளொன்றுக்கு ரூ.50 வீதம் மாதத்திற்கு ரூ.1,500 வழங்கிட, முதலமைச்சர் கலைஞர் ஆணை.

★ 50 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஊரகச் சந்தைகளை மேம்படுத்திடத் தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.2.50 கோடி ஒதுக்கி அரசு ஆணை!

★ வருவாய் குறைந்த, நலிந்த ஊராட்சி களுக்கு மின்கட்டணம் செலுத்திட ரூ.2.80 கோடியும், தெருவிளக்கு இல்லாத கிராமக் குடியிருப்புகளுக்கு 30,000 தெரு விளக்குகள் அமைத்திட ரூ.12.60 கோடியும், 10,000 குழாய் விளக்குகளை சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றி அமைக்க ரூ.2.65 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

★ வீட்டுவரி வசூல் இணைமானியமாக ரூ.28.46 கோடி ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.



## உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு உதவிகள்

1998-99 ஆம் ஆண்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்களுக்கு வாகனம் வாங்குவதற்காக ரூ.6.45 இலட்சம் வழங்கியும், ஓசூர், மாதவரம், அருப்புக்கோட்டை, திண்டுக்கல் மற்றும் சங்கரன் கோயில் நகராட்சி களுக்குக் குடிநீர்த் திட்டங்களுக்கென ரூ.150 இலட்சம் மான்யமாக வழங்கியும், 65 நகராட்சிகளில் கொசுக்கள் மூலம் பரவும் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு ரூ.50இலட்சம் மான்யமாக வழங்கியும் ஆக, நகராட்சிகளின் வளர்ச்சிக்கு ரூ.206.45 இலட்சங்கள் வழங்கப் பட்டுள்ளன.

பேரூராட்சிகளைப் பொருத்த மட்டில் பேரூராட்சிகளில் உள்ள 100 உலர்ந்த பொதுக் கழிப்பிடங் களுக்கு நிரந்தரமாகத் தண்ணீர் வசதி செய்வதற்கு ரூ.40இலட்சமும், பேரூராட்சிகளின் குடிநீர்த் திட்டத்தினை மேம்படுத்து வதற்கு ரூ.121.30 இலட்சமும், பேரூராட்சி களின் பொதுக் கட்டணக் கழிப்பிடங்களுக்குத் தொடர்ந்து தண்ணீர் வசதி செய்வதற்கு 15 பேரூராட்சிகளுக்கு ரூ.750 இலட்சமும் வழங்கப் பட்டுள்ளது.

திருச்சி, மதுரை, கோவை பேரூராட்சிகளில் உதவி இயக்குநர் களுக்குப் பழைய வாகனங்களுக்குப் பதில் புதிய வாகனங்கள் வாங்கு வதற்கு ரூ.8.50 இலட்சமும் ஆக - பேரூராட்சிகளின் வளர்ச்சிக் காக 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ.177.30 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளது.




## காவிரி நதி நீர் தமிழக அரசு மனு

கர்நாடக மாநிலத்தில், தமிழ்நாட்டின் எல்லைக்கு மேல் சுமார் 30 கி.மீ. தொலைவில் காவிரி நதியில் குறுக்கே சிவசமுத்திரம் என்ற இடத்தில் 1899 ஆம் ஆண்டு முதல் 42 மெகாவாட் திறன் கொண்ட ஓர் நீர்மின் நிலையம் செயல்பட்டு வருகிறது.

1987ல் ஏற்கெனவே உள்ள சிவசமுத்திரம் நீர்மின் நிலையத்திற்கு அருகே 270 மெகாவாட் திறன் கொண்ட மேலும் ஓர் நீர்மின் நிலையம் அமைக்க கர்நாடகா ஓர் திட்டத்தைத் தீட்டியது. அந்தத் திட்ட அறிக்கையில் கொடுக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் ஆய்வு செய்ததில் மேட்டூருக்குக் கிடைக்கப்பெறும் நீர் குறைந்து, சுமார் 125 டி.எம்.சி.நீர் வரத்துதான் கிடைக்கும். என்றும், இந்த அளவு சில ஆண்டுகளில் மேலும் குறையக்கூடும் என்றும் தெரியவந்தது.

எனவே, இந்த திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு அதன் இசைவினை வழங்க மறுத்துவிட்டது. மத்திய அரசும், தமிழ்நாட்டின் இசைவினைப் பெற்று, திட்ட அறிக்கையை மீள அனுப்புமாறு கூறி அந்த அறிக்கையைக் கர்நாடகாவிற்குத் திருப்பி அனுப்பிவிட்டது. இதுவரையில் இத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கவில்லை.

1992 ஆம் அண்டில் பத்திரிகைச் செய்தி மூலம் கர்நாடகா இத்திட்டத்தை மீண்டும் இத்தாலி நாட்டின் தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் மூலம் மேற்கொள்ளப் படவுள்ளது என்று அறியப்பட்டது. எனவே அந்தத் திட்டத்திற்குத் தடை விதிக்குமாறு கோரி காவிரி நடுவர் மன்றத்தில் 1992 அக்டோபரில் ஓர் பலவகை உரிமையியல் மனுவை (C.M.P.No.24/1992) தமிழ்நாடு தாக்கல் செய்தது.

இந்த மனுவை நடுவர் மன்றத்தால் 2.4.1993 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போது மேலே கூறிய ஒப்பந்தத்தைச் செயல்படுத்தப் போவதில்லை என்று கூறியும், அதற்கான ஆணை ஒன்று கர்நாடகாவின் சார்பில் நடுவர் மன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டது. எனவே நடுவர் மன்றத்தின் ஆலோசனையின் படி, சட்டப்படி தேவை ஏற்படுமே யானால், இதுகுறித்துப் புதிதாக ஒரு மனுவை மீண்டும் தாக்கல் செய்யலாம் என்ற உரிமையின் அடிப்படையில் இந்த மனுவைத் தமிழ்நாடு அரசு திரும்பப் பெற்றுக்கொண்டது.

கர்நாடகா அரசு, இத்திட்டத்தை மீண்டும் மேற்கொள்ளப்போவதாக, 1998 மார்ச் மாதம், கர்நாடகா அரசு வழக்கறிஞரால் தமிழகத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. இத்திட்டம் பற்றிய தொழில்நுட்ப விவரங்கள் மற்றும் திட்ட அறிக்கையை அனுப்பக் கோரி தமிழகத்தின் சார்பில் கர்நாடக அரசு கேட்டுக் கொள்ளப்பட்டது. இதற்குக் கர்நாடகா அரசிடமிருந்து தக்க பதில் வராத நிலையில், இத்திட்டம் பற்றிய முன் வரலாற்றை விரிவாக எடுத்துரைத்து, இதனால் தமிழகத்தின் காவிரிப் பாசனத் திற்கு ஏற்படும் பாதிப்பையும் தெளிவுபடுத்தி, இத்திட்டத்தைக் கர்நாடகம் செயல்படுத்தத் தடை விதிக்கக்கோரி, தமிழகத்தின் சார்பில் காவிரிநடுவர் மன்றத்தில் ஒரு பல்வகை உரிமையியல் மனு 30.6.1998 அன்று தாக்கல் செய்யப் பட்டது. காவிரி நடுவர் மன்றம் விசாரணையை மீண்டும் தொடங்கும் போது இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு தகுந்த ஆணையை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படும்.

★ வருவாய் குறைவான, நலிந்த ஊராட்சிகளின் குடிநீர்க் கட்டணத் தொகை செலுத்திட ஏதுவாகவும் மற்றும் குடிநீர் வசதி செய்து தருவதற்கும் ரூ.15 கோடி அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ சுற்றுலா, ஆலயப் பயணம் செய்யும் நகரமைப்புகளை ஒட்டியுள்ள ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்திடும் வகையில், அத்தகு ஊராட்சிகளுக்கு ரூ.3 கோடியும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.8.52 கோடியும் அரசு ஒதுக்கியுள்ளது.

# கலைஞர் ஆட்சியில் கடலூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

- கடந்த ஆட்சியில், நிலுவையாக விடப்பட்டிருந்த 8,303 தொகுப்பு வீடுகள், 156 பள்ளிக் கட்டடங்கள், 174 ஊராட்சி மன்றக் கட்டடங்கள், 61 சத்துணவுக் கூடங்கள், 86 கி.மீ. தூரமுள்ள சாலைகள், 380 ஏனைய பணிகள், 78 ஜீவன்தாரா கிணறுகள், வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் 104 பணிகள், பரவலாக்கப்பட்ட திட்டத்தில் 123 பணிகள், நாடாளுமன்ற உறுப்பினர் வளர்ச்சித் திட்டத்தில் 93 பணிகள் ஆகிய வளர்ச்சிப் பணிகள் இவ்வாட்சியில் கடந்த 2 ஆண்டுகளில் முடிக்கப்பட்டுள்ளன.

- மேலும், கடந்த 2 ஆண்டுகளில், 4,344 தொகுப்பு வீடுகள், 314 கி.மீ. தூரமுள்ள தார்ச்சாலைகள், 95 பள்ளிக் கட்டடங்கள், 37 நியாயவிலைக் கடைகள், 58 சத்துணவுக் கூடங்கள், 9 ஊராட்சி மன்றக் கட்டடங்கள், 791 தொலைக்காட்சிப் பெட்டி அறைகள், 1,954 பல்வகைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 163 ஏரி/குளம்/குட்டை/ஊரணிகள் பழுது பார்க்கப்பட்டுள்ளன. 307 ஜீவன்தாரா கிணறுகளும், பாராளுமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 113 பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

- ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 12,154 நபர்களுக்கு மானியத்துடன் கூடிய கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஊரக இளைஞர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1,412 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

- நடப்பு நிதியாண்டில் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 2,728 தொகுப்பு வீடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 324 நபர்களுக்கு ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் கிணறு வெட்டவும், 47 பள்ளிக் கூடங்களில் கழிப்பிட வசதி செய்து கொடுக்கவும், 2,825 வீடுகளுக்கு நவீன கழிப்பறை வசதி செய்து கொடுக்கவும், 5,355 நபர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கவும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

- மேலும் 42 பள்ளிக் கட்டடங்கள் கட்டவும், 84 நியாயவிலைக் கடைகள் கட்டவும், 2 ஊராட்சி மன்றக் கட்டடங்கள் கட்டவும், 52 சமையலறை கட்டடங்கள் கட்டவும், 37 சத்துணவுக் கூடங்கள் கட்டடவும், 5 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க கட்டடங்கள் கட்டவும், 175 தொலைக்காட்சிப் பெட்டி அறைகள் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. 135 கி.மீட்டர் தார்ச் சாலை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

- 418 மயானப் பாதை சாலைகள் அமைக்கவும், 260 சிறு பாலங்களும், 348 தடுப்புச் சுவர்களும், 21 பயணிகள் நிழற்குடைக் கட்டவும், 34 தரைப் பாலங்கள் கட்டவும் திட்டம் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

- 535 இளைஞர்களுக்கு ஊரக இளைஞர் வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தில் பயிற்சி அளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏரி/குளம்/குட்டை/ஊரணி பணிகள் பழுது பார்க்க 221 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. 45 எண்ணிக்கை கரிம எரிவாயுக் கலன் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

- முதியோர் உதவித்தொகைத் திட்டங்களின் கீழ், 6,22,406 நபர்கள் பயனடைகின்றனர். கடந்த 2 ஆண்டுகளில் விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் 105 பயனாளிகளுக்கு ரூ.6 இலட்சத்து 70 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. நலிந்தோர் நலத்திட்டத்தின் கீழ் 2,576 பயனாளிகளுக்கு ரூ.87 இலட்சத்து 40 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இலவச வேட்டிகள் 6,20,000 மற்றும் 6,07,000 இலவசச் சேலைகள் இரண்டாண்டுகளில் வழங்கப்பட்டுள்ளன. 1996-97ல் வெள்ளப்பெருக்கில் வீடிழந்த 92,469 பயனாளிகளுக்கு ரூ.9 கோடியே 26 இலட்சத்து 49 ஆயிரம் வெள்ள நிவாரண உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 1997-98ல் வெள்ள நிவாரண உதவித்தொகையாக வீடிழந்த 3,745 பயனாளிகளுக்கு ரூ.20,64,500 வழங்கப்பட்டுள்ளது.

- கடந்த 2 ஆண்டுகளில், 680.43 ஏக்கர் பரப்பளவுள்ள சாகுபடி நிலங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. 26,630 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

- ஆதிதிராவிட இன மக்களுக்குக் கடந்த 2 ஆண்டுகளில் 4,427 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 10,800 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- கடந்த 2 ஆண்டுகளில், 1,01,542 ஆதி-திராவிட மாணவ-மாணவியர்க்கு ரூ.3 கோடியே 35 இலட்சத்து 75 ஆயிரம் கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டிற் கென ரூ.1 கோடியே 23 இலட்சத்து 50 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- இவ்வாண்டையும் சேர்த்து 3 ஆண்டுகளில் 1,03,962 இலவசப் பாடப்புத்தகங்களும், 1,62,727 நபர்களுக்கு இலவசக் குறிப்பேடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

- கடந்த 2 ஆண்டுகளில் 51,877 ஆதிதிராவிட மாணவ-மாணவியர்க்கு இலவசமாகச் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

- தாட்கோ நிறுவனத்தின் மூலம், விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த திட்டங்களுக்கென 2,335 ஆதிதிராவிடர்கள் பயனடையும் வகையில் ரூ.2 கோடியே 58 இலட்சத்து 52 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

### சமத்துவபுரம்

- சுதந்திரத் திருநாள் பொன்விழா ஆண்டை யொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சமத்துவபுரங்கள் உருவாக்கும் திட்டத்தின்படி, இம்மாவட்டத்தில், பண்ருட்டி வட்டம் - திருவாமூர் கிராமத்தில், 11 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 15-8-98 அன்று 100 குடும்பங்களைக் குடியேற்றும் வகையில், பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. இதேபோன்று விருத்தாசலம் வட்டம் - ஜவாதுகுடி கிராமத்தில், சமத்துவபுரம் உருவாக்கிட 13 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

- பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில், இவ்வாட்சியில், புவனகிரி, எம்ஃபரூர் ஆகிய இடங்களில் 2 மாணவர் விடுதிகளும், குறிஞ்சிப்பாடி, காடாம்புலியூர், சேத்தியாத்தோப்பு ஆகிய இடங்களில் 3 மாணவியர் விடுதிகளும் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன.



இதேபோன்று மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கென, வல்லம்படுகையில் ஒரு மாணவர் விடுதியும், வடலூரில் ஒரு மாணவியர் விடுதியும் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. கல்லூரி மாணவர் விடுதி ஒன்றும் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளது.

### பொது விநியோகம்

- இம்மாவட்டத்தில், நகர்ப்புறத்தில் 28 முழுநேர நியாயவிலைக் கடைகளும், கிராமப்புறத்தில் 56 நியாயவிலைக் கடைகளும், இவை தவிர 80 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் திறக்கப்பட்டுள்ளன.

- கடலூர் மாவட்டத்திலுள்ள 5 நகராட்சிகளில் 72,468 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. கிராமப்புறங்களில் மொத்தம் 3,06,242 குடும்ப அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

- கடந்த இரண்டாண்டுகளில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் 2,583 ஏழைப்பெண்களுக்குத் தலா ரூ.10,000 வீதம், ரூ.2



கோடியே 58 இலட்சத்து 30 ஆயிரம், திருமண நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

- டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமண உதவித் திட்டத்தின்கீழ் - 23 பேருக்கும், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் - 30 பேருக்கும், ஏழை விதவைகளின் பெண்கள் திருமண உதவித் திட்டத்தின்கீழ் - 70 பேருக்கும், ஆதரவற்ற பெண் திருமண உதவித் திட்டத்தின்கீழ் - 3 பேருக்கும் ரூ.7.13 இலட்சம் நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

- இலவச தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் - 185 பெண்களுக்கு ரூ.3 இலட்சத்து 70 ஆயிரம் செலவில், இலவசமாகத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. 1,200 விதவைகளின் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் - 19,546 கருவுற்ற ஏழைப் பெண்களுக்கு 39 இலட்சத்து 9 ஆயிரத்து 200 ரூபாய் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

- ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறையின்கீழ் 3,628 பயனாளிகளுக்கு ரூ.11 இலட்சத்து 84 ஆயிரத்து 212 நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

- கிராம குடிநீர்த் திட்டத்தின்கீழ் கடந்த இரண்டாண்டுகளில் ரூ.13 கோடியே 70 இலட்சம் செலவில் புதிய குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன; ரூ.2 கோடியே 29 இலட்சம் செலவில் குடிநீர்த் திட்டப் புனரமைப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையின் சார்பில், கடந்த 2 ஆண்டுகளில், நபார்டு திட்டத்தின்கீழ் 5 கோடியே 22 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் செலவில் 57.25 கி.மீ. தூரமுள்ள பேருந்து தடச்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

- 1996-97ல் - சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் 18 கி.மீ. நீளச் சாலைகள் ரூ.210 இலட்சம் செலவில் மேம்பாடு செய்யப்பட்டன; விபத்து தவிர்ப்புத் திட்டத்தின்கீழ் 1 கி.மீ. சாலை ரூ.15 இலட்சம் செலவில் செயலாக்கப்பட்டது; நபார்டு திட்டத்தின்கீழ் 14 பேக்கேஜ் பணிகள் ரூ.622 இலட்சங்கள் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன; நவம்பர் மற்றும் டிசம்பர் '98இல் பெய்த மழை காரணமாக நிவாரணப் பணிகள் ரூ.406.50 இலட்சங்கள் செலவில் மேற்கொள்ளப்பட்டன; 146.252 கி.மீ. நீளச் சாலைகள் ரூ.591.21 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டன.

- 1997-98ல் - அக்டோபர் மற்றும் நவம்பர் '97இல் பெய்த மழை காரணமாக பழுதுபட்ட சாலைகள் ரூ.250 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டன; குறிஞ்சிப்பாடி உட்கோட்டத்தில் 28.45 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.187.45 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன; சிதம்பரம் - கவரப்பட்டு சாலை கி.மீ.2/4ல் பாலம் கட்டும் பணி ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது; நபார்டு திட்டத்தின்கீழ் விருத்தாசலம் - தொழுதூர் சாலை (0/0 - 16/0) இரண்டாம் கட்டப் பணி ரூ.353.56 இலட்சம் செலவில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டது; 11 சிறுபாலங்கள் ரூ.26.50 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டன; டிசம்பர் '96ல் பெய்த மழை காரணமாகப் பாதிக்கப்பட்ட சாலைகள் 11 பேக்கேஜ்களாகப் பிரிக்கப்பட்டு ரூ.2500 இலட்சத்தில் மேம்பாடு செய்யப்பட்டு

வருகின்றன; 143.92 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.424.27 இலட்சம் செலவில் சீரமைக்கப் பட்டுள்ளன.

- பொதுப்பணித்துறை வெள்ளாறு வடிநிலக் கோட்டத்தின் சார்பில், கடந்த இரண்டு ஆண்டுகளில்:
  - விருத்தாசலம் வட்டம் - வரம்பனூர் கிராமத்தில் ரூ.15 இலட்சம் செலவில் ஒரு புதிய ஏரி அமைக்கும் பணி முடிவுற்றுள்ளது.
  - திட்டக்குடி வட்டத்திலுள்ள நாங்கூர் ஓடையின் குறுக்கே அணைக்கட்டு, தச்சூர் மற்றும் எழுத்தூர் ஏரிகளுக்கு கூடுதல் நீர்வரத்து ஏற்படுத்தும் பணிகள் ரூ.19.6 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.
  - பண்ருட்டி வட்டம் பணிக்கன்குப்பம் கிராமத்தில் கெடிலம் கரையில், ரூ.6.48 இலட்சம் செலவில், வெள்ளத் தடுப்புக் கரை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.
  - விருத்தாசலம் நகர் கண்மாய் மற்றும் வரத்துக் காலவாயில் தூர்வாருதல் மற்றும் புனரமைத்தல் ரூ.10 இலட்சத்திலும்; நல்லான் ஏரி ரூ.5.60 இலட்சத்திலும்; வயலூர் ஏரி ரூ.14 இலட்சத்திலும்; கொண்டங்கி ஏரி ரூ.10 இலட்சத்திலும்; முனியன் ஏரி ரூ.10 இலட்சத்திலும்; ஒரையூர் கண்மாய்க்கு ரூ.6.10 இலட்சத்திலும்; குறிஞ்சிப்பாடி பெரிய ஏரி ரூ.10 இலட்சத்திலும், தூர்வாரிப் புனர் அமைக்கும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.
  - இவ்வாண்டில், 11 ஏரிகளில் தூர்வாரும் பணிகளுக்கென ரூ.116 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
  - பொதுப்பணித்துறை கொள்ளிடம் வடிநிலக் கோட்டத்தின் சார்பில், சிதம்பரம் வட்டம் சாக்காங்குடி கிராமத்தின் அருகே, வெள்ளாற்றில், 26 கிராமங்களில் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ள அபாயத்திலிருந்து காத்திடும் வகையில், ரூ.161 இலட்சம் மதிப்பீட்டில் 4 ஸ்லூயிஸ் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- கடந்த 2 ஆண்டுகளில் மாவட்டத் தொழில் மையத்தில், 5,447 புதிய தொழில்கள் தொடங்கப் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன; பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், கடந்த 2 ஆண்டுகளில் 822 நபர்களுக்குக் கடன் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன; தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் கடந்த 2 ஆண்டுகளில், 90 நபர்களுக்குத் தொழிற்கடனாக ரூ.7 கோடியே 3 இலட்சத்து 20 ஆயிரமும், 340 நபர்களுக்கு வாகனக் கடனாக ரூ.4 கோடியே 60 இலட்சத்து 57 ஆயிரமும் வழங்கப்பட்டுள்ளன.
- வேளாண்மைத் துறையின் சார்பில் கடந்த இரண்டு ஆண்டுகளில் நெல் மற்றும் சிறுதானிய விதை உற்பத்தி, பயிறு வகைகள், எண்ணெய் வித்து மற்றும் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டங்களின்கீழ் 5 கோடியே 74 இலட்சத்து 65 ஆயிரத்து 600 ரூபாய் செலவிடப்பட்டு, குறியீடுகள் எய்திடப்பெற்றுள்ளன.
- வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில், மண்வளப் பாதுகாப்பு, சிறுபாசனம் மற்றும் வெள்ள நிவாரணப் பணிகள் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.
- இம்மாவட்டத்தில், இவ்வாண்டையும் சேர்த்து மூன்றாண்டுகளில், 23 புதிய துவக்கப்பள்ளிகள், 13 புதிய நடுநிலைப்பள்ளிகள், 7 புதிய உயர் நிலைப்பள்ளிகள், 3 புதிய மேல்நிலைப்பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன.

*சாமானிய மக்களின் நலம்தான் மிகவும் முக்கியமானது; ஒரு சிலருக்காக நாம் மிகப் பலரைப் பலிகொடுக்க முடியாது!*

**- ஜவகர்லால் நேரு**

- மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின்கீழ் 405 ஆசிரியர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 36 தொடக்க/நடுநிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 26 பள்ளிகளுக்கு ரூ.15.60 இலட்சம் மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ரூ.19.80 இலட்சம் மதிப்பீட்டில் 4 மேல்நிலைப் பள்ளிகளுக்கும், ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் 6 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், ஆய்வுக் கூடங்கள் கட்டப் படுகின்றன.
- கடந்த இரண்டு ஆண்டுகளில் முன்னாள் படைவீரர் நலத்துறையின் மூலம் 1,021 பயனாளிகளுக்கு ரூ.10.59 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் 2,851 விவசாய மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. 13,083 குடிசைகளுக்கு விளக்கு இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. 3,556 தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. 25,508 குடியிருப்பு இணைப்புகளும், 233 குடிநீர்த் திட்டங்களுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 385 மையங்கள் மூலமாக 6 வயதிற்கு உட்பட்ட 1,09,791 குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி, சொட்டு மருந்து போடப்படுகின்றன.
- மீனவர் நலனுக்கெனக் கடந்த இரண்டு ஆண்டுகளில் சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், 689 குடும்பங்களுக்கு ரூ.2 கோடியே 20 இலட்சத்து 48 ஆயிரம் செலவில் இலவச இல்லங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 413 வீடுகள் ரூ.20.65 இலட்சம் செலவில் பழுதுபார்க்கப்பட்டன. 107 கட்டுமரங்களுக்கு ரூ.11.32 இலட்சம் செலவில் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மீனவர் சேமிப்பு நிவாரணத் திட்டத்தின்கீழ் 14,506 பயனாளிகளுக்கு ரூ.103.58 இலட்சம் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. குழுகாப்புறுதித் திட்டத்தின்கீழ் 39 நபர்களுக்கு ரூ.11.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மீனவக் கிராமங்களுக்கு 146 தெரு விளக்குகள் ரூ.6.11 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.
- பேரூராட்சிகளின் மேம்பாட்டுக்கெனக் கடந்த 2 ஆண்டுகளில், அடிப்படைத் தேவைகள், திட்டங்கள், 10வது நிதிக்குழு மானியத்திட்டங்கள், பகுதித் திட்டங்கள், வெள்ள நிவாரண மானியம், குடிசைமாற்றுத் திட்டம் போன்ற 1,589 பணிகள் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- கூட்டுறவு வங்கிகளின் மூலமாக, விவசாயிகளுக்குக் கடந்த 2 ஆண்டுகளில் குறுகிய காலக் கடனாக ரூ.67.39 கோடியும், மத்திய காலக் கடனாக ரூ.3.45 கோடியும், நகைக் கடனாக ரூ.131.88 கோடியும், பண்ணைசாராக் கடனாக ரூ.1.90 கோடியும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★



# கடலூர் மாவட்டத்தில், இரண்டே ஆண்டுகளில் ரூ.156 கோடி அளவிற்கு நலத்திட்டங்கள் !

## பயன்துய்ப்போரிடையே முதலமைச்சர் கலைஞர் பெருமிதம் !

*"இன்று ஒரு மாநாடு போல் கடலூரில் நடைபெறுகின்ற இந்த அரசு நிகழ்ச்சியில் உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பு பெற்றமைக்காக மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் கொள்கின்றேன்.*

*இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த இரண்டாண்டுகளில் ரூ.156 கோடி அளவிற்கான திட்டங்கள் தீட்டப்பெற்று, அதற்கான தொகை ஒதுக்கப்பட்டு எல்லாத் துறைகளிலும் அந்தப் பணிகள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. இன்றைய இந்த நிகழ்ச்சியின் வாயிலாக மேலும் 157 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டு இந்த ஆண்டு அந்தப் பணிகள் தொடங்கி நிறைவுற இருக்கின்றன.*

### இணைந்து செயல்பட வேண்டும்

*என்னதான் திட்டங்களைத் தீட்டினாலும், அறிவித்தாலும் அவைகள் நிறைவுற மக்களால் பாராட்டப்பட ஒத்துழைக்க வேண்டியவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள், ஊராட்சி மன்றத்திலேயிருந்து சட்ட மன்றம், நாடாளுமன்றம் வரையிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகள், அரசின் அதிகாரிகள், அந்த அதிகாரிகளோடு இணைந்து பணியாற்றுகின்ற பல்வேறு துறையின் அலுவலர்கள்.*

*இவர்களெல்லாம் அந்தத் திட்டத்தோடு தங்களை இணைத்துக்கொண்டு ஆர்வத்தோடு பணியாற்றினால்தான் இது ஒரு அரசின் திட்டம். நாம் அதிகாரியாக இருக்கிறோம். நாம் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறோம். ஆகவே, நம்முடைய கடமையைச் செய்யவேண்டும் என்று வெறும் கடமைக்காக மட்டும் செய்யாமல் அந்தக் கடமையையும் மறந்துவிடாமல் உள்ளுணர்வோடு இந்த திட்டங்களிலே தங்களை ஒன்றிக் கலந்திடக்கூடிய இதயம் பெற்றவர்களாக விளங்கிட வேண்டும்.*

*இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சித் தலைவர் அப்படி ஒருங்கிணைந்து இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. நான் அவர் வரவேற்புரையாற்றும்போது கவனித்தேன். அவர் வேறு மாநிலத்துக்காரர். மிகுந்த சிரமத்திற்கிடையே தமிழைக் கற்றுக்கொண்டிருக்கிறார் என்பதை அவர் உரையாற்றிய போதே நீங்களெல்லாம் உணர்ந்து கொண்டீர்கள்; நானும் உணர்ந்து கொண்டேன். அது கொச்சைத் தமிழாக இருந்தாலும் கொஞ்சும் தமிழாக இருந்தது.*

*அந்த உரையில் நீங்கள் கவனித்தீர்களோ இல்லையோ, நான் உன்னிப்பாகக் கவனித்தேன். அந்த உரையிலே அவர் சொன்ன இரண்டொரு சொற்றொடர்கள் உங்களுடைய கையொலியைக்கூட பெற்றன.*



*அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று அந்தச் சொற்றொடரை அப்பழுக்கில்லாமல் சுத்தமாக இங்கே உச்சரித்தார். நீங்களெல்லாம் கைதட்டி வரவேற்றீர்கள். நமக்கு நாமே என்ற சொல்லையும் அப்படியே உச்சரித்தார். நீங்கள் கைதட்டி வரவேற்றீர்கள். சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம் என்ற சொற்றொடரை உச்சரித்தார்; நீங்கள் கைதட்டி வரவேற்றீர்கள்.*

### மாவட்ட ஆட்சியர் உறுதி

*இதிலிருந்து என்ன புரிகிறது என்றால், இந்தத் திட்டங்களோடும், அந்த வைராக்கியத்தோடும் அவர்*

ஒன்றிக் கலந்திருக்கிற காரணத்தால், அதை அடிக்கடி அவர் மனதிலே பதியவைத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால் ஏழை, எளிய மக்களை, சாதாரண மக்களை, பட்டிக்காட்டிலே இருக்கின்ற பாமர மக்களை, கிராமப்புறத்து மக்களை சென்றடையக்கூடிய பல்வேறு திட்டங்களை உள்ளடக்கிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டமானாலும், மக்கள் தங்களைத் தாங்களே ஒப்படைத்துக் கொண்டு, தங்களுக்காக நிறைவேற்றிக் கொள்கின்ற நமக்கு நாமே திட்டமென்றாலும், அல்லது அரசு இன்றைக்குப் பலகோடி ரூபாய்களைச் செலவழித்து மக்கள் நல்வாழ்வுக்காகத் தீட்டுகின்ற திட்டங்கள் ஆனாலும் அவைகளையெல்லாம் சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம் என்கின்ற அந்த உறுதிமொழியோடு நிறைவேற்றுவேன் என்ற பொறுப்பை இந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் சக்ஸேனா அவர்களைப்போல எல்லா மாவட்டங்களுடைய ஆட்சித் தலைவர்களும் பெறவேண்டும், பெற்றிருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையோடு தான் நான் இந்தக் கருத்தைச் சொல்கின்றேன்.

இன்று பல சட்டமன்ற உறுப்பினர்கள் உரையாற்றினார்கள். தங்களுடைய தொகுதியினுடைய நிலைகளையும் தொகுதிக்கு இந்த அரசு செய்திருக்கின்ற சாதனைகளையும், நிறைவேற்றியுள்ள திட்டங்களையும் எடுத்துக்காட்டி பெருமிதம் கொண்டார்கள்.

குறிப்பாக, இது கடலூரில் நடைபெறுகின்ற விழா என்கின்ற காரணத்தால், மாவட்டத்தின் தலைநகர் என்கின்ற முறையில் தம்பி புகழேந்தி இந்தக் கடலூர் பகுதியிலே மாத்திரம் கடந்த பல ஆண்டு காலமாகப் பேசப்பட்டு, நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டு நிறைவேறாமல் இருந்துவிட்ட சிங்காரத் தோப்பு பாலத்தை ஒன்பது கோடி ரூபாயிலே கட்டிமுடிக்க இப்போது டெண்டர் விடப்படுகின்ற நிலை வரையிலே அதற்கான அனுமதி கிடைத்திருக்கின்றது என்பதை நான் புகழேந்திக்கும், உங்களுக்கும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

### மின் உற்பத்தி நிலையம்

கடலூர் துறைமுகத்தின் வளர்ச்சிக்கான, மேம்பாட்டிற் கான ஆய்வுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடலூர் நகர குடிநீர்ப் பிரச்சினை தீர்வதற்கு 17 கோடி ரூபாய்க்கான திட்டம் சட்டமன்றத்திலே தம்பி.கோ.சி.மணி அவர்களால் உள்ளாட்சித்துறை அமைச்சர் என்கின்ற முறையிலே அறிவிக்கப்பட்டு அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதையும் நான் இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். கடலூர் தொகுதிக்கு மின் உற்பத்தி நிலையம் போன்ற புதிய திட்டங்களும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அழகிரி இங்கே பேசும்போது சொன்னார்; தஞ்சை மாவட்டத்திற்குத் தந்துள்ளதைப்போல இல்லாவிட்டாலும், மின்சாரத் திட்டத்தில் இங்கே உள்ள விவசாயிகளுக்கு ஒரு 500 பம்புசெட்டுகளுக்காவது அனுமதி தரவேண்டும் என்று கேட்டேன். நினைவாற்றல் உள்ள முதலமைச்சர் மறந்திருக்கமாட்டார் என்று கருதுகிறேன் என்று குறிப்பிட்டு அந்தக் கோரிக்கையை மறைமுகமாக வலியுறுத்தி இருக்கின்றார்.

நான் நேரடியாகச் சொன்னாலும், மறைமுகமாகச் சொன்னாலும் புரிந்துகொள்ளக்கூடியவன் என்று

## பராந்தகச் சோழனும் கலைஞரும்

வீராணம், வடவாறு, வாய்க்காலை மேம்படுத்தி பலப்படுத்திடும் திட்டம் ரூ.26.39 கோடியிலும், வீராணம் ஏரியை மேம்படுத்தி, பலப்படுத்திட ரூ.10.68 கோடியும், வீராணம் ஏரி மற்றும் வடவாறு பாசன பரப்பு வாய்க்கால்களை நவீனப்படுத்தி மேம்படுத்திட ரூ.26 கோடியும் ஒதுக்கப்பட்டு திட்டப்பணிகள் விரைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, கரைகள் பலப்படுத்தப்பட்ட கால்வாய்களையும், ஏரிகளையும், ஆறுகளையும் பார்வையிட்டவாறே சென்ற முதல்வர் கலைஞர் அவர்களை வயது முதிர்ந்த ஒரு விவசாயி சந்தித்து, "பராந்தகச் சோழன் காலத்திலிருந்து யாருமே இந்தப் பகுதிக்கு வந்ததாகத் தெரியவில்லை. இதுபோன்ற பணிகளை செஞ்சதில்லை. பராந்தகச் சோழனுக்குப் பிறகு நீங்கள்தான் வந்திருக்கிறீங்க...!" என்று பொக்கை வாயெல்லாம் பூரித்திட சொன்னபோது எல்லோருமே மெய்சிலிர்த்து நின்றனர்.

<u>கரிகாலன் என்ற புனைபெயர்</u>

தூர்வாரும் பணியைப் பார்வையிட்டவாறே சென்ற முதல்வர் கலைஞர் அவர்களிடம் ஒரு செய்தியாளர் - 'இன்றைக்கு இந்தக் கரையை உயர்த்தும் பணியைச் செய்வதற்காகத்தான் - அன்றைக்கே 'கரிகாலன்' என்ற புனைபெயர் வைத்துக்கொண்டு எழுதினீர்களா ?" என்று வினவினார். அதைக் கேட்டுப் புன்னகை பூத்தார் கலைஞர்.

- தஞ்சை, கடலூர், பெரம்பலூர், மாவட்டங்களில் 5.7.98 அன்று தூர்வாரும் பணிகளை நேரில் பார்வையிடக் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின் போது நிகழ்ந்தவை!

அழகிரிக்குத் தெரியும். எனவே நான் உடனடியாக மின்சாரத்துறை அமைச்சர் அருமை நண்பர் வீராசாமி அவர்களிடத்தில் ஆணை பிறப்பித்திருக்கின்றேன். இந்த ஆண்டே அந்த 500 பம்புசெட்டுகளுக்கும் அனுமதி கிடைத்துவிடும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### சோழர் காலத்திற்குப் பிறகு

நான் காலை முதல் இதுவரையிலே குடந்தை தொடங்கி கடலூர் வரையில் பல்வேறு ஏரிகளையும், ஆற்றுப் பாசனங்களையும், வாய்க்கால்களையும் பார்வையிட்ட நிகழ்ச்சியை உரையாற்றியவர்கள் வியந்து போற்றினார்கள். நூற்றாண்டுக் காலமாக நடைபெறாத இந்த ஆய்வுகளும், தூர்வாரும் பணிகளும் சோழர் காலத்திற்குப் பிறகு இன்றைக்கு நடைபெறுகின்றது என்று புகழ்ந்துரைத்தார்கள்.

அது மாத்திரமல்ல; அவைகள் சரிவர நடைபெறுகின்றதா என்பதைக் காண, நான் நேரிலேயே தஞ்சை மாவட்டத்திற்கும், திருச்சி மாவட்டத்திற்கும், இன்றைக்கு கடலூர் மாவட்டத்திற்கும் வந்திருப்பதை, தம்பி துரைமுருகனும், மற்றவர்களும் இங்கே கட்டிக் காட்டியிருக்கின்றார்கள்.

நான் இன்று காலையிலே அணைக்கரை தொடங்கி, பிற்பகல் 1.30 மணியளவிலே கடலூர் வரையில் பல ஆறுகள், ஏரிகள் இவைகளையெல்லாம் பார்வையிட்டு வந்தேன். கடந்த கிழமை தஞ்சை மாவட்டத்திலே இரண்டு நாள்





சுற்றுப்பயணம் மேற்கொண்டு அங்கே 14 ஆயிரம் கிலோ மீட்டர் அளவுக்கு காவிரி டெல்டா பகுதியில் உள்ள ஆறுகள், வாய்க்கால்கள் இவற்றிலே வடிகால் பகுதிகளையும், பாசனவசதிகளையும், ஒழுங்குபடுத்த ஏறத்தாழ 150 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை ஒதுக்கப்பட்டு கடந்த ஆண்டு 10 அல்லது 11 கோடி ரூபாயும், இந்த ஆண்டு 20 கோடி ரூபாயும் அதற்காக செலவழிக்கப்படுகின்ற சூழ்நிலையும், அவைகள் எப்படி நடைபெறுகின்றன என்பதைச் சோதித்துப் பார்க்கக்கூட அல்ல; எனக்கே ஒரு மன ஆறுதலுக்காக, எனக்கே ஒரு மன மகிழ்ச்சிக்காக ஆர்வத்தோடு அவைகளைக் கண்டு களித்தேன்.

இன்றைக்குக் காலையிலேயிருந்து தம்பி பன்னீர்செல்வத்தினுடைய வற்புறுத்தலின் காரணமாக மாத்திரமல்ல; எனக்கே ஏற்பட்ட ஆர்வத்தின் காரணமாகத் தஞ்சை மாவட்டத்திலே விட்டுப் போயிருந்த அணைக்கரை பகுதியிலேயும் மண்ணையாறு பகுதியிலே வெட்டப்பட்ட ஆழப்படுத்தப்பட்ட அந்த ஆறுகள், வாய்க்கால்களில் தண்ணீர் நிரம்பிச் செல்கின்ற காட்சிகளையும் கண்டுவிட்டு அதற்குப் பிறகு இந்த மாவட்டத்திலே பல பகுதிகளில் நான் கவனம் செலுத்தினேன்.

பொதுப்பணித் துறை அமைச்சர் இங்கே சுட்டிக் காட்டியதைப்போல், வடவாறு பல ஆண்டுக்காலம் செம்மைப்படுத்தப்படாமல், ஆழப்படுத்தப்படாமல் பல இடங்களிலே திசைமாறி இது ஆறா, வயலா, இது கரையா, கழனியின் வரப்பா என்றே தெரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அலங்கோலமாக இருக்கின்ற காட்சியைப் பல பகுதிகளிலே கண்டோம்.

### வடவாறு பணிகள்

ஆனால் ஏறத்தாழ 20 அல்லது 22 கிலோ மீட்டர் நீளமுள்ள அந்த வடவாறு மற்ற ஆறுகளைப் போலச் சாதாரணமாக மண்ணெடுத்து ஆழப்படுத்தி பொக்லின் போன்ற இயந்திரங்களை வைத்து தூர் எடுத்துவிட்டால் மட்டும் போதாது. அகலப்படுத்தி, ஆழப்படுத்தி, செம்மைப்படுத்தப் பட்டால் மட்டும் போதாது. அவைகளில் வருகின்ற தண்ணீர் கொஞ்சம்கூட சேதாரம் இல்லாமல், கரைகள் உறிஞ்சி விடாமல், வயல்கள் தங்கள் பக்கம் வலித்துக்கொள்ளாமல் அவைகள் நேரடியாக வீராணம் ஏரிக்கு வந்து அதனுடைய கொள்ளளவை; அழகிரி குறிப்பிட்டதைப்போல பாதி அளவுக்குக் குறைந்துவிட்ட அந்தக் கொள்ளளவை நிறைவு செய்கின்ற அளவுக்கு வீராணம் நிரம்புமேயானால் - ஒரு காலத்திலே வீராணம் சென்னைக்குத் தேவைப்பட்டது. கிருஷ்ணா வந்துவிட்ட காரணத்தால் வீராணம் சென்னைக்குத் தேவையில்லை - எங்கே உற்பத்தியாகிறதோ அந்த வீராணம் ஏரியின் தண்ணீர், அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு அது பாதுகாக்கப்பட்ட குடிநீராகப் பயன் படட்டும் என்று முடிவெடுத்து, அதற்காகப் பல கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தால் வடவாறிலே வருகின்ற தண்ணீர் கொஞ்சமும் வீணாகாமல் அப்படியே வீராணத்திலே வந்து நிரம்ப வேண்டும் என்பதற்காகச் சிமெண்டு போடப்படுகின்ற அளவுக்கு இரு கரைகளும், அதைப்போலவே கீழ் மட்டத்திலே அடித்தளமும் சிமெண்டு போடப்பட்டிருக்கின்றது.

அதைப் பார்த்தபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை என்னாலேயே வர்ணிக்க முடியாது. அவ்வளவு மகிழ்ச்சிக் கடலிலே நான் ஆழ்ந்துபோனேன்.

அதனுடைய கரைகளிலே இருக்கின்ற மேடு பள்ளங்களைப் பார்த்தபோது பொன்முடியிடத்திலே சொன்னேன்; இந்த 22 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ள கிராமங்களையெல்லாம் இணைக்கின்ற அளவுக்கு ஒரு ஐந்தாறு மினி பஸ்களை இந்தக் கரைகளிலே விட முடியுமா என்று கேட்டேன். இப்பொழுது உயர்த்தப்படுகின்ற, அகலப்படுத்தப்படுகின்ற கரைகள் எல்லாம் வந்தபிறகு பெரிய பேருந்துகளைக்கூட விடலாம். அதுவரையிலே மினி பேருந்துகளை இங்கே இயங்கச் செய்யலாம் என்று மனத் திருப்தியோடு அவர் என்னிடத்திலே சொன்னார்.

### 22 கி.மீ. சிமெண்ட் தளம் போடப்பட்ட ஆறு வேறு எங்கும் கிடையாது

எனக்கேகூட அந்த இடத்திலே தோன்றிற்று; இந்தக் கரையிலே காரிலே போய்க்கொண்டிருப்பதை விட இறங்கி அந்தக் காரையே ஆற்றிலேயே விட்டுச் செல்லலாம் என்கின்ற அளவுக்கு அப்படிப்பட்ட அழகான தளம். நீங்கள்கூட சென்று பார்க்க வேண்டும்; நான் பார்த்தேன். உங்களில் பலர் பார்த்திருக்கமாட்டீர்கள். சென்று பார்க்க வேண்டும். பார்த்தால் தெரியும், நான் ஏன் அதை இவ்வளவு புகழ்கிறேன் என்று. நான் மிகைப்படுத்திச் சொல்லவில்லை. உண்மையைச் சொல்கின்றேன்.

அந்த அளவுக்கு வீட்டிலே போடப்பட்டிருக்கின்ற தளவரிசையைப் போல இந்தியாவிலே வேறு எந்த ஒரு ஆறும் 22 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சிமெண்டு தளம் போடப்பட்ட ஆறு எங்கும் கிடையாது. இங்கே அப்படிப்பட்ட ஒரு ஆறு அமைக்கப்பட்டிருக்கின்றது.

இப்படி பல திட்டங்கள் அக்கறையோடு, ஆர்வத்தோடு இந்த அரசில் இந்த நாட்டு மக்களுக்காக, விவசாயி வாழ்ந்தால்தான் மற்றவர்கள் வாழ முடியும் என்ற அடிப்படை நோக்கத்தோடு இன்றைக்கு நடத்தப்பட்டு வருகின்ற அப்படி நடத்தப்பட்டு வருகின்ற அந்த அடிப்படையிலேதான் அதன் தொடர்ச்சியாகத்தான் இரண்டாண்டுகளிலே 157 கோடி ரூபாயும் வரும் ஆண்டிற்கு மேலும் 157 கோடி ரூபாயும் இன்றைக்குச் செலவிடுகின்றோம்.

இவைகளெல்லாம் மக்களுக்குச் சென்று சேருகின்றதா என்று அதிகாரிகளிடத்திலே கேட்கின்ற நேரத்தில் இதைக் கண்காணிக்கின்ற பொறுப்பு, ஒவ்வொரு சிற்றூரிலும் இருக்கின்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குத்தான் இருக்க முடியும் என்ற காரணத்தால், பல ஆண்டு காலம் நடைபெறாமல் கிடந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலை ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனே நடத்தி முடித்திருக்கின்றோம்.

அந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் ஆங்காங்கு இருக்கின்ற ஊராட்சி கவுன்சிலர்கள், மாவட்ட ஊராட்சி கவுன்சிலர்கள் இவர்களெல்லாம், நாம் தேர்ந்தெடுக்கப் பட்டது, இவைகளையெல்லாம் பார்ப்பதற்காக - கண்காணிப்பதற்காக - மேலும் இவைகளையெல்லாம் ஊக்கப்படுத்துவதற்காக என்கின்ற அளவிலே தங்களுடைய பணிகளைத் தொடர வேண்டும்.

### தமிழக மக்களின் உள்ளங்களையெல்லாம் பெற்றிருக்கின்றேன்

என்னுடைய தம்பி போன்ற என்னுடைய அன்புக்குரிய அழகிரி இங்கே சொன்னார்; இழந்தது அதிகம்; பெற்றது குறைவு என்று சொன்னார். இழந்தது அதிகம் என்று சொன்னார். ஆனால் அவர் இலக்கியங்களைக் குறிப்பிட்டார். ஒரு கம்பராக, இளங்கோவடிகளாக இருந்திருக்கலாம். அவர் அரசியலுக்கு வந்த காரணத்தால் அவைகளையெல்லாம் அவர் இழந்துவிட்டார் என்று சொன்னார்.

நான் அவருக்கும் சொல்கின்றேன். அவரை மறுத்துப் பேசியதாக ஒரு பட்டிமன்றத்தைப்போல இங்கே வாதிட்ட தம்பி பொன்முடிக்கும் சொல்லிக் கொள்கின்றேன். நான் எதையும் இழக்க மாட்டேன். இழந்ததைப்போலத் தோன்றும். ஆனால் நான் எதையும் இழக்க மாட்டேன். ஏனென்றால் இவைகளுக்கெல்லாம் மேலாக நான் தமிழ்நாட்டு மக்களுடைய உள்ளங்களையெல்லாம் பெற்றிருக்கின்றேன். அவர்களுடைய இதயங்களையெல்லாம் பெற்றிருக்கின்ற காரணத்தால், எதை இழந்தாலும் இந்த இதயங்கள் என்பால் இருக்கின்ற காரணத்தால் அதற்கு இவைகளெல்லாம் ஈடாகி விடும் என்கின்ற அந்த உணர்வோடுதான் உங்களுக்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றேன்.

என் பணியைப் பாராட்டிய சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். இந்த 75 வயதிலே இவ்வளவு கஷ்டப்பட்டு காலை முதல் மாலை வரை சுற்றி வருகிறார் என்று சொன்னால் மாத்திரம் போதாது; என்னைப் பாராட்டினால் மட்டும் போதாது. உங்களையும் தொகுதி மக்கள் பாராட்டுகின்ற அளவுக்கு நடந்து கொள்ள வேண்டும். நீங்களும் தொகுதிகளுக்குச் செல்ல வேண்டும்.

நான் குறிப்பிட்டு - யார், யார் செல்லவில்லை என்று சொல்லமாட்டேன். அவர்களுடைய உள்ளுணர்வு அவர்களை உறுத்தும் என்று கருதுகின்றேன். சென்றவர்களுக்கு உறுத்தாது; செல்லாதவர்களுக்கு உறுத்தும்.

### மக்களோடு மக்களாக இருக்கவேண்டும்

ஆனால் தொகுதியிலே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த மக்களோடு மக்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசியவர்களிலே சிலபேர் இருக்கின்றார்கள். எனக்குத் தெரியும்.

நான் அவர்களைப் பாராட்டி, மற்றவர்களைப் பாராட்டாவிட்டால் அடையாளங் கண்டுவிடும். யார், யார் என்று உங்களுக்கு அதை நான் சொல்லவில்லை. மற்றவர்களுக்கே தெரியும். நான் உள்ளூர யார் யாரைப் பாராட்டுகிறேன். உள்ளூர யார் யார் இங்கே வந்து இப்படிப் புகழ்ந்தார்கள். அவர்கள் மக்களைச் சென்று சந்திக்கவில்லை என்ற மனக்குறையோடு இருக்கின்றேன் என்று அவர்களுக்குத் தெரியும். அந்த மனக்குறையைத் தீர்க்கின்ற அளவுக்கு அந்தச் சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அதிகாரிகளும் நடந்துகொண்டு தூய பணியாற்றுவார்களேயானால் நம்முடைய தொண்டு தொடரும்.

இது தொடரக் கூடாது என்று சிலபேர் கருதுகிறார்கள். ஆனால் இது தொடராவிட்டால், இன்றைக்குத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நல்ல காரியங்கள் தொடராமல் போய்விடும் என்பதை எண்ணிப் பார்த்து எங்களுக்கு நீங்கள் எல்லாம் துணை புரியவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

- இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்
6.7.98 அன்று கடலூரில்
உரையாற்றினார்.



# தொழில்துறையில் முதலிடத்தை நோக்கி தமிழகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது!

## “எக்கனாமிக் டைம்ஸ்” ஆங்கில ஏட்டின் படப்பிடிப்பு

“தொழில்துறையில் முதலிடத்தை நோக்கி தமிழகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது” என்று சென்னையிலிருந்து வெளிவரும் “எக்கனாமிக் டைம்ஸ்” ஆங்கில ஏடு சிறப்புச் செய்திக் கட்டுரையொன்று வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து ‘எக்கனாமிக் டைம்ஸ்’ ஏடு வெளியிட்டுள்ள செய்திக்கட்டுரையின் தமிழக்கம் வருமாறு:-

தமிழ்நாட்டில் இரண்டாண்டுக் கால தி.மு.க. ஆட்சியில் தொழில்துறையில் 33,560 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த முதலீட்டில் இது 17.6 சதவிகிதமாகும். இதன் மூலம் தொழில்வளர்ச்சியில் நாட்டின் மூன்றாவது இடத்தைத் தமிழ்நாடு பிடித்துள்ளது.

1991-92 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து 6,781 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 1996-97 ஆம் ஆண்டில் 18,500 கோடி ரூபாய்க்கு உயர்ந்த ஏற்றுமதி, 1997-98 ஆம் ஆண்டில் இருபதாயிரம் கோடி ரூபாயை எட்டிப் பிடிக்கும். இது இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் 17 சதவிகிதமாகும்.

### தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு இரண்டாவது இடம்

‘பிஸினஸ் டுடே’ அண்மையில் நடத்திய ஒரு ஆய்வின்படி இந்தியாவிலேயே முதலீடு செய்வதற்குச் சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடுதான் திகழுகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்தியாவின் தொழில்வளர்ச்சியில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் இருப்பதாகச் சொல்லப்பட்டாலும், ‘பிஸினஸ் டுடே’ நடத்திய ஆய்வின்படி தமிழ்நாடு தொழில்வளர்ச்சியில் இரண்டாம் இடத்தைப் பிடித்திருக்கிறது.

### தி.மு.க.அரசு பொறுப்பேற்ற பின், அந்நிய முதலீடு ரூ.43,515 கோடி

தி.மு.கழக அரசு பொறுப்பேற்ற பின்னர் 43,515 கோடி ரூபாய்க்கு அந்நிய முதலீடுகள் பெறப்பட்டுள்ளன. இந்தத் தொகையில், ஒப்புதல் அளிக்கப்படாத முதலீடான 8,522 கோடி ரூபாயைக் கழித்துப் பார்த்தால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த அந்நிய முதலீடு 34,993 கோடி ரூபாய்களாகும்.

இதில் இரசாயனத் தொழிற்சாலைகளில் 16,329 கோடி ரூபாய்களும், பெட்ரோலியப் பொருட்கள் தொழிற்சாலைகளில் 2,264 கோடி ரூபாய்களும், உரத்தொழிற்சாலைகளில் 1,125 கோடி ரூபாய்களும், இரும்பு கலவாத தாதுப்பொருட்களுக்கான தொழிற்சாலைகளில் 936 கோடி ரூபாய்களும், தொழில்துறை இயந்திரங்களுக்கான தொழிற்சாலைகளில் 913 கோடி ரூபாய்களும், மின்னணு தொழிற்சாலைகளில் 242 கோடி ரூபாய்களும், வாகனத் தொழிற்சாலைகளில் 1,157 கோடி ரூபாய்களும், மின் உற்பத்தித் துறையில் 28,392 கோடி ரூபாய்களும், தொலைத்தொடர்புத் துறையில் நூறு கோடி ரூபாய்களும் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் வரவிருக்கும் தொழிற்சாலைகள் பற்றிய விவரமாவது :-

### இருபது இடங்களில் மின் உற்பத்தி செய்யத் தமிழக அரசு திட்டம்

தமிழ்நாட்டில் இருபது இடங்களில் மின் உற்பத்தி செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. இவற்றில் இரண்டு மின் உற்பத்தி நிலையங்கள் தூத்துக்குடியிலும், எண்ணூர், கள்ளிக்குடி, ஒதூர் ஆகிய இடங்களில் தலா ஒரு மின் உற்பத்தி நிலையமும் அமையும். இந்த மின் உற்பத்தித் திட்டங்களுக்கெல்லாம் எரிவாயு இணைப்பிற்காக மத்திய அரசு ஏற்கெனவே ஒப்புதல் அளித்துவிட்டது.

இந்த ஐந்து மின் உற்பத்தி நிலையங்களும் 480 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் படைத்தவை. மீதமுள்ள பதினைந்து மின் உற்பத்தி நிலையங்களுக்கும் மத்திய அரசு ஒப்புதல் கிடைக்கப்பெற்றுவிட்டால் 2,300 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும்.

### நாங்குநேரியில் ரூ.800 கோடியில் ஏற்றுமதிப் பூங்கா

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) அமெரிக்காவின் ஹைடெக் டெக்னாலஜி இண்டஸ்ட்ரியல் பார்க், ஆக்ஸஸ் டெக்னாலஜிஸ் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நெல்லை மாவட்டம் நாங்குநேரியில் தனியார் துறையில் ஏற்றுமதிப் பூங்கா ஒன்றை நிறுவ உள்ளது. நிலம் மற்றும் பூங்கா அமைப்புப் பணிகளுக்கு 800 கோடி ரூபாய் செலவழிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்றுமதிப் பூங்காவில் மட்டும் 12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னையை அடுத்த மறைமலை நகரில் 1,200 ஏக்கரில் தொழிற்பேட்டை ஒன்று அமைகிறது. வாகனங்களுக்கான உதிரிப் பாகங்கள் இங்கு உற்பத்தி செய்யப்படும்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த செயின்ட் கால்ரின் நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து பிரம்மாண்டமான கண்ணாடித் தொழிற்சாலை ஒன்று திருப்பெரும்புதூர் தொழில்வளர்ச்சிப் பூங்காவில் 450 கோடி ரூபாய் முதலீட்டில் அமைகிறது. அடுத்த ஆண்டு இறுதியில் இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி தொடங்கும்.

சென்னை எண்ணூரில் உள்ள பெட்ரோலியப் பொருள் தொழிற்சாலைப் பகுதியில் டென்மார்க் நாட்டைச் சேர்ந்த நார்த் சைட்ரோ நிறுவனம் கூட்டுத் துறையில் பி.வி.ஆர். இரசாயன மெழுகு (ரெசின்) தொழிற்சாலை ஒன்றை அமைக்கிறது. 350 கோடி ரூபாய் முதலீட்டில் அமையும் இந்தத் தொழிற்சாலை ஆண்டுக்கு ஒன்றரை இலட்சம் டன் இரசாயன மெழுகு (ரெசின்) உற்பத்தி செய்யும்.

எம்.சி.சி. சாக்ரட் ஆக்ரோ லிமிடெட் நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) பொள்ளாச்சி அருகே உள்ள கிணத்துக்கடவு கிராமத்தில் தேங்காய் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை அமைக்கிறது. இங்கு தேங்காய் எண்ணெய், தேங்காய்ப் பால், தேங்காய் நார் ஆகியவை உற்பத்தி செய்யப்படும்.

**சிறுசேரியில் உயர்ரக பயோ-டெக்னாலஜி தொழிற்சாலை**

டாக்டர் எம்.எஸ்.சாமிநாதன் ஆய்வு நிறுவனம், மத்திய அரசின் பயோ - டெக்னாலஜி துறை, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆகிய மூன்றும் கூட்டுச் சேர்ந்து சிறுசேரியில் உயர் ரக பயோ டெக்னாலஜி தொழிற்சாலை ஒன்றை நிறுவுகிறது. இதற்காகந் தமிழக அரசு இருபது ஏக்கர் நிலத்தை ஒதுக்கியுள்ளது. இங்கு காய்கறிகள், பழவகைகளின் உற்பத்தி அதிகரிக்க ஆய்வு மேற்கொள்ளப்படும். அரிய மூலிகைச் செடிகள் பயிரிடப்படும். விதைப் பெருக்கத்துக்ந வழி காணப்படும்.

தமிழ்நாட்டில் வாகனத் தொழில் வெகுவாக முன்னேறி உள்ளது. போர்டு, ஹூண்டாய், மிட்சுபிஷி, அசோக் லேலண்டு, இத்தாலியின் இதேகா ஆகிய நிறுவனங்கள் புதிய வாகனத் தொழிற் சாலைகளை நிறுவியுள்ளன. இந்தத் துறைக்கு மேலும் ஊக்கம் தரும் வகையில் சர்வதேச நிதி நிறுவனம் (I.L.F.S) ஜெர்மனியின் டி.ஜி.ஜி. நிறுவனம் ஆகியவற்றுடன் கூட்டுச் சேர்ந்து இருபது கோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் புதிய தொழிற்சாலை ஒன்றை அமைக்கவிருக்கிறது.

வெகுவாக முன்னேறி வரும் கம்ப்யூட்டர் துறையை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும் சர்வதேச நிதி நிறுவனமும் இணைந்து முப்பது கோடி ரூபாய் முதலீட்டில் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கவிருக்கிறது.

> ***முயற்சி உன் நண்பனானால், அனுபவம் உனக்கு ஆசான் ஆனால், முன் ஜாக்கிரதை உன் அண்ணனானால், நம்பிக்கையே உன் பெற்றோரானால் நிச்சயம் வாழ்க்கையில் நீ வெற்றி பெற்றுவிடலாம்!***
>
> **- அடிஸன்**

**இந்தியாவிலேயே முதலாவதாக அமையவுள்ள தகவல் தொழில்நுட்ப மையம்**

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தகவல் தொழில்நுட்பம் ஒரு முக்கியத் தேவை எனத் தமிழக அரசு உணர்ந்திருக்கிறது. இதனடிப்படையில் தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்ப மையம் ஒன்றை அமைக்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. அப்படி அமைக்கப்பட்டால் இந்தியாவிலேயே முதலாவது தகவல் தொழில்நுட்ப மையமாக அது இருக்கும். இந்தத் தொழில்நுட்ப மையத்தில் இளைஞர்களுக்கு கம்ப்யூட்டர் கிராபிக்ஸ், மென்பொருள் பொறியியல், வன்பொருள் துறை, தொலைத்தொடர்பு ஆகிய துறைகளில் சிறந்த பயிற்சி அளிக்கப்படும். TANITEC என்ற பெயரில் இது இயங்கும்.

**அதி நவீன மென்பொருள் தயாரிக்கும் தொழிற்சாலைகள்**

தகவல் தொழில்நுட்பத் தேவைகளை ஈடுசெய்யும் பொருட்டு, 'டிட்கோ'வும் எல்காட்டும் இணைந்து சென்னை தரமணியில் 160 கோடி ரூபாய் முதலீட்டில் 7.5 ஏக்கர் பரப்பில், அதி நவீன மென்பொருள் தொழில் பூங்கா ஒன்றை அமைத்து வருகிறது.

கோவை விமான நிலையம் அருகில் 6 ஏக்கர் நிலப்பரப்பில் இன்னொரு அதி நவீன மென்பொருள் தயாரிக்கும் தொழிற்சாலை வர உள்ளது. 'எல்காட்டும்', 'சிப்காட்டும்' இணைந்து 50 கோடி ரூபாய் முதலீட்டில் இதைக் கூட்டுத் தயாரிப்பாக நிர்மாணிக்கிறது.

**முதல்வர் தலைமையில் உயர்மட்டக் குழு**

நூறு கோடி ரூபாய் மற்றும் அதற்கு அதிகமான முதலீட்டுடன் கூடிய தொழில் திட்டங்களுக்குப் பரிசீலனை செய்து பின் உடனடியாக அனுமதி வழங்குவதற்காக முதலமைச்சர் தலைமையிலான உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அதேபோல், நூறு கோடி ரூபாய்க்கும் குறைவான முதலீட்டுடன் கூடிய தொழில்நிறுவனங்களுக்கு அனுமதி அளிப்பது தொடர்பாக, தலைமைச் செயலாளர் தலைமையில் அதே போன்றதொரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

கழக ஆட்சியில் கடந்த இரண்டாண்டுகாலத்தில் 33 புதிய தொழிற்சாலைகள் அமைப்பதற்காக 33 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. அவைகளில் 8 தொழிற்சாலைகள் தனது உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இவ்வாண்டு ஆறு தொழிற்சாலைகள் உற்பத்தியைத் துவங்க உள்ளன. அவைகளில் மூன்றில் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து விட்டன. எந்திரங்கள்தான் அவைகளில் அமைக்கப்பட வேண்டும்.

12 தொழிற்சாலைகளில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

***- இவ்வாறு 'எக்னாமிக் டைம்ஸ்' நாளேடு தனது செய்தியில் தெரிவித்துள்ளது.***



# விமோசனம்

*உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்மொழித்துறை, டாக்டர் மா.இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம் - ஆகியவை இணைந்து நடத்திய 'இந்திய விடுதலைக்கு முந்திய தமிழ் இதழ்கள்' கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை*

"விமோசனம்" ராஜாஜி நடத்திய மாத இதழாகும். இமைப்பொழுதும் தம் நெஞ்சின் நீங்காத மதுவிலக்கை ஓர் இயக்கமாக்கிச் செயல்பட அந்நாளில் ராஜாஜிக்குப் பயன்பட்ட படைக்கருவியே விமோசனம் ஆகும். இன்புறுத்துவதை நோக்கமாகக் கொள்ளாமல் அறிவுறுத்துவதையே இலட்சியமாகக் கொண்டு அறிவுறுத்தி, நெறிப்படுத்தி, நலவாழ்வை நோக்கி ஆற்றுப்படுத்தும் பணியைத் திறம்படச் செய்தது விமோசனம் ஏடு.

**விமோசனம் - வரலாறும் அமைப்பும்**

இந்திய அரசியல் வரலாற்றில் இடம் பெற்றதைப் போலவே தமிழ் இதழியல் வரலாற்றிலும் தடம் பதித்தவர் ராஜாஜி. இந்திய அரசியலிலோ தமிழ் இலக்கிய உலகிலோ அதிகம் அறியப்படாதவராக இருந்த நாட்களிலேயே தமிழ் வளர்ச்சி பற்றிச் சிந்தித்தவர் இவர்.

**கலைச் சொல்லாக்க இதழ்**

விமோசனத்திற்கு முன்பே இதழ் நடத்திய அனுபவம் பெற்றவர் ராஜாஜி. சேலத்தில் புகழ்மிக்க வழக்கறிஞராக வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த காலத்திலேயே தம் நண்பர்கள் சிலரோடு சேர்ந்து, 'விஞ்ஞானத் தமிழ்ப் பதங்கள் சங்கம்' என்ற ஒன்றை 1916 அக்டோபரில் இவர் தோற்றுவித்தார். அதுவே தமிழைப் பொறுத்த வரையில், கலைச் சொல்லாக்கத்திற்கென முதன் முதலில் அமைக்கப்பட்ட சங்கமாகும்.

அச்சங்கத்தின் சார்பில் அக்டோபர் திங்களிலேயே தமிழ்சாஸ்திர பரிபாஷைச் சங்கத்தாரின் பத்திரிகை (Journal of the Tamil Scientific Terms Society) என்ற பெயரில் கலைச்சொல்லாக்கத் திங்கள் இதழ் ஒன்று தொடங்கப்பட்டது. ராஜாஜியும் வேங்கடசுப்பையர் என்பவரும் ஆசிரியர் பொறுப்பில் இருந்தனர். கலைச்சொல்லாக்கத்திற்கு எனத் தமிழில் தொடங்கப்பட்ட முதல் இதழ் இதுவேயாகும்.



"தாய்மொழியில் நூல்கள் வெளியிட விரும்புகிறவர்களை எதிர்நோக்கும் மிகப்பெரிய துன்பம், அறிவியல் கருத்துக்களைக் கூறப் போதிய அளவில் சரியான கலைச்சொற்கள் இல்லாததுதான்" என்று முதல் இதழ் கூறியது. இந்தப் பத்திரிகையால் தமிழ்நாட்டாருக்கு மிகப்பெரிய பயன் விளையும் என்பதில் சந்தேகம் இல்லை என்று பாரதியார் பாராட்டியுள்ளார்.

"தற்கால சாஸ்திரிய பதங்களுக்குச் சரியான தமிழ் வார்த்தைகளை ஆராய்ந்து கண்டுபிடிக்கவோ அல்லது நூதனமாகச் சிருஷ்டிக்கவோ என்ற ஒரே நோக்கத்துடன் இப்பத்திரிகை வெளிப்போந்திருக்கிறது. இது மிகவும் உயர்ந்த நோக்கமென்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை" என்று சுப்பிரமணிய சிவம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

"வெளிவந்துள்ள நான்கு சஞ்சிகைகளில் அப்பத்திரிகை நல்ல வேலை செய்துள்ளது" என்று அமாதவையா குறித்துள்ளார்.

பயிரியல், உயிரியல், வேதியியல், இயற்பியல், வானியல், கணிதம் ஆகிய பிரிவுகளில் ஆங்கிலக் கலைச் சொற்களுக்கு இணையாக இன்னின்ன தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தலாம் என்று ராஜாஜியின் கலைச் சொல்லாக்க இதழ் அறிவுறுத்தியது. உயர்ந்த நோக்கத்தோடு

**பேராசிரியர் மா.ரா. அரசு**

> **தன்னை அடக்கிப் பழகிக்கொண்டவன், புறத்தேயுள்ள எதற்கும் வசப்படமாட்டான்; அவனுக்கு அதன்பின் அடிமைத்தனம் இல்லை. அவனது மனம் விடுதலை பெற்று விட்டது. அத்தகையவனே உலகத்தில் நன்றாக வாழும் தகுதி பெற்றவனாவான் !**
>
> **- சுவாமி விவேகானந்தர்**

தொடங்கப்பட்ட இவ்விதழ் நான்கு. திங்கள்களே வெளிவந்தது.

1916 அக்டோபர் முதல் 1917 சனவரி வரை வெளிவந்த இவ்விதழ் பின்னர், 1917 செப்டம்பரில் சென்னையில் தொடங்கப்பட்ட 'தமிழர்நேசன்' என்ற இதழுடன் இணைக்கப் பட்டது.

## 'விமோசனம்' பிறந்தது

விமோசனம் இதழைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் நீண்ட காலமாகவே ராஜாஜியின் மனத்தில் இருந்து வந்தது. 1923 அக்டோபரில் கல்கி, 'நவ சக்தி'யில் சேருவதற்காகச் சென்னைக்குப் பயணமானார். அதே வண்டியில் பயணம் செய்த ராஜாஜியைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார். அப்போது இருவருக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல் இங்குக் குறிக்கத்தக்கது.

"மதுவிலக்குப் பிரசாரத்துக்காக நானே ஒரு பத்திரிகை நடத்தலாம் என்று எண்ணிக் கொண்டிருந் தேன். உங்களைக் கூட அதில் சேர்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தேன்.

நான் அதை ஆரம்பிக்கச் சில மாதங்களோ, வருஷங்களோ கூட ஆகலாம். பெயரை மட்டும்தான் இப்போதைக்கு யோசித்து வைத்திருக்கிறேன்".

"என்ன பெயரோ ?"

"விமோசனம். மது விலக்குப் பிரச்சாரத்தை வலியுறுத்திடும் கருத்து தொனிக்கும் படியாய் அப்படி வைத்திருக்கிறேன்".

நடைமுறையில் விமோசனம் ஆகஸ்டு 1929ல் தான் வெளிவந்தது. ஆனால், அதற்கு ஏறக்குறைய ஆறு ஆண்டுகளுக்கு முன்பே அதைத் தொடங்கும் எண்ணம் ராஜாஜியின் மனத்தில் வேரூன்றி இருந்தது என்பதையே மேற்கண்ட உரையாடல் உணர்த்துகின்றது.

நவசக்தியில் சேருவதற்காகச் சென்னைக்குச் செல்லும்போது (1923) புகைவண்டியில் ராஜாஜியைச் சந்தித்த கல்கி, நவசக்தியில் இருந்து விலகியபோதும் (1928) எதிர்பாராமல் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு அமைந்தது. அப்போது ராஜாஜி கல்கியிடம்,

"முன்னொரு தடவை சொன்னேனே நினைவிருக்கிறதா ? மதுவிலக்குப் பத்திரிகை ஒன்று ஆசிரமத்தில் தொடங்கப் போகிறேன். மூன்று மாதத்துக்குள் வரமுடியுமா ?" என்று கேட்டார்.

1928 - ராஜாஜி அரசியலில் வெகுதூரம் சென்றுவிட்ட நேரம். காந்தியடிகளின் வலக்கரமாகிக் காங்கிரசுப் பேரியக் கத்திலும், விடுதலைப் போரிலும் பல பெரும் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்த காலம். அந்தப் பணிச்சுமை மிகுந்த காலகட்டத்திலும் கூட, ராஜாஜி விமோசனத்தை மறக்கவில்லை என்பது வியப்புக்குரிய செய்தியாகும். எந்த அளவு மதுவிலக்குச் சிந்தனை ராஜாஜியின் நினைவுகளில் ஆழப்பதிந்திருந்தது என்பதை இது உணர்த்தவல்லது.

"ஆசிரமத்துக்கு நான் போய்ச் சேர்ந்த சில மாத காலத்துக்குப் பிறகு ராஜாஜி ஒருநாள் என்னை அழைத்து 'மதுவிலக்கு வேலையைத் தீவிரமாக ஆரம்பிக்கத் தீர்மானித்திருக்கிறேன். மதுவிலக்குப் பத்திரிகையையும் உடனே ஆரம்பித்துவிட வேண்டியதுதான்' என்றார். அந்த வேலைக்காகவே நான் ஆசிரமத்துக்குச் சென்றேனாதலால், கணக்கு எழுதும் வேலையை இன்னொருவரிடம் ஒப்படைத்து விட்டு, ஆசிரமக் காரியாலயத்தில் இருந்து ராஜாஜியின் சொந்தக் காரியாலயத்திற்கு வேலை பார்ப்பதற்காகச் சென்றேன்.

ஆண்டு பலவாக ராஜாஜியின் கனவிலும் கற்பனையிலும் வளர்ந்து செழித்திருந்த விமோசனம், இதழ் உருவம் பெறுவதற்கான காலம் கனிந்தது.

விமோசனத்தைத் தொடங்குவதற்கு முன்னால் கல்கிக்குச் சில ஐயங்கள் தோன்றின. ராஜாஜி அவற்றை எப்படித் தீர்த்து வைத்து இதழின் வெற்றிக்கு வழிவகுத்தார் என்பதைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு 'பாங்கர் விநாயகராவ்' என்ற நூலின் முகவுரையில் கல்கி விவரித்துள்ளார்.

"பத்திரிகையின் பக்கங்கள் எத்தனை ?"

"நாற்பது பக்கங்கள்".

"நாற்பது பக்கங்களும் மதுவிலக்கு விஷயமேயா ?"

"ஆமாம்".

"நாற்பது பக்கங்களுக்கு மதுவிலக்கு விஷயம் எப்படித் திரட்டுவது ? அப்படித் திரட்டிப் பத்திரிகை கொண்டுவந்தாலும் ஜனங்கள் வாங்குவார்களா ?"

"ஏன் வாங்க மாட்டார்கள் ? வாங்காவிட்டால் வாங்கச் செய்ய வேண்டும்".

"எப்பபடி வாங்கச் செய்வது ? அடிபிடி கட்டாயம் செய்ய முடியுமா ? படிக்கச் சுவாரஸ்யமாய் இருந்தால்தானே பத்திரிகையை வாங்குவார்கள் ?"

"படிக்கச் சுவாரஸ்யமாய் இருக்கும்படி செய்யலாம். நீ பார்த்துக்கொண்டே இரு. முதல் இதழை நான் தனியாகவே தயாரித்துக் காட்டுகிறேன்".

இவ்வாறு கல்கியின் அவநம்பிக்கையிலும், ராஜாஜியின் நம்பிக்கையிலுமாக விமோசனம் முதல் இதழ் உருவானது. ஒரு வாரத்தில் ராஜாஜி முதல் இதழின் தயாரிப்பு வேலைகளை முடித்துவிட்டதாகக் கல்கி தெரிவிக்கிறார்.



முதல் இதழ் ஆயிரம் படிகள் அச்சிடப் பட்டது. சந்தாதாரர்களுக்கு அனுப்பியவை போக, எஞ்சியவை காதிபவன்களுக்கு விற்பனைக்காக அனுப்பப்பட்டன. ஆயிரம் படிகளும் விற்றுத் தீர்ந்தன. விற்பனை, இதழுக்கு இதழ் கூடியது. ஒன்பதாவது, பத்தாவது இதழ்கள் நான்காயிரம் படிகள் அச்சிடப்பட்டன. அக்காலச் சூழலில் ஒரு தனிப்பட்ட செய்தியைப் பற்றிய இதழ் அத்தனைப் படிகள் விற்பனையானது மாபெரும் வெற்றியாகக் கருதப்படுகிறது.

விமோசனம் வெளிவந்து கொண்டிருந்த நாட்களில் சென்னை அரசாங்கம், மாநிலத்தில் மதுவின் தீமைகளை மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் குழுக்களையும், பரப்புநர்களையும் ஏற்படுத்தியது. 'டெம்பரன்ஸ் கமிட்டி' என்று அழைக்கப்பட்ட அந்தக் குழுக்கள் பல்வேறு இடங்களில் திறம்படச் செயலாற்றின. அந்தக் குழுக்களின் பணிகளுக்கு, விமோசனம் பெரிதும் பயன் பட்டது. அக்குழுக்களில் சில பத்துப்படிகள், பதினைந்து படிகள் என்று வாங்கி மதுவிலக்குப் பரப்பு நபர்களுக்குக் கொடுத்தன. இந்த வகையிலும் விமோசனத்தின் விற்பனை வளர்ந்தது.

எத்தனை மகத்தான சாதனை புரிந்த இதழாக இருந்தாலும் ஏதாவது ஒரு காரணத்தால் நிற்கவேண்டிய நிலை ஏற்படுவது தவிர்க்க இயலாத இயற்கை. விமோசனமும் ஒரு கட்டத்தில் தன் இயக்கத்தை நிறுத்திக்கொள்ள வேண்டியதாயிற்று.




விமோசனம் ஒன்பதாவது இதழ் ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோது காந்தியடிகளின் புதியதொரு போராட்ட அறிவிப்பு வெளியாகியது. அதுதான் உப்புப் போர். தண்டியில் காந்தியடிகளும், திருமறைக் காட்டில் (வேதாரண்யம்) ராஜாஜியும் சட்டத்தை மீறியமையால் கைதானார்கள். போராட்டத்தில் கலந்துகொள்ள விரும்பிய கல்கி, விமோசனத்தை அத்துடன் நிறுத்திவிட முடிவு செய்தார். ஆனால், கல்கி போராட்டத்தில் கலந்துகொள்ளக் கூடாது என்றும், விமோசனத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும் ராஜாஜி வற்புறுத்தினார். அப்படி இருந்தும் ராஜாஜி சிறை புகுந்த பிறகு ஒரே ஒரு விமோசனம் இதழ் மட்டுமே வெளிவந்தது. அந்த இதழ் அச்சாகிக் கொண்டிருந்தபோதே, கல்கி ராஜாஜிக்குப் பல கடிதங்கள் எழுதினார்; அவையாவும் விமோசனத்தைப் பத்தாவது இதழோடு நிறுத்திக் கொள்ள அனுமதி வேண்டி எழுதப்பட்ட கடிதங்கள். ஒருவாறு அனுமதி கிடைத்தது. பத்தாவது இதழோடு விமோசனம் நிறுத்தப்பட்டது.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ராஜாஜி மதுவிலக்கைப் பற்றிச் சிந்தித்ததைப்போல, சென்ற நூற்றாண்டின் இறுதியில், தி.மானியல் என்பவர் மதுவின் கொடுமைகளை எண்ணிக் கவலை கொண்டார். விளைவு, 'மதுவிலக்குத் தூதன்' என்னும் திங்கள் இதழ் பிறந்தது. தமிழில் தோன்றிய முதல் மதுவிலக்கு இதழாகக் கருதப்படும் இவ்விதழ் 1899இல் பிறந்தது. இவ்விதழின் படிகள் 1900 ஏப்ரலில் (அரசாங்க அறிக்கையின்படி) ஐந்நூறும் 1901 ஏப்ரலில் (அரசாங்க அறிக்கையின்படி) முந்நூறும் விற்பனையாகியுள்ளன. இதழின் விற்பனை, கால ஓட்டத்தில் குறையத் தொடங்கியதை அரசாங்க அறிக்கைகள் காட்டுகின்றன; 1905 ஆம் ஆண்டிலும் இவ்விதழ் வெளிவந்ததை அறிய முடிகிறது. இதழைப் பற்றிய பிற விவரங்கள் எதுவும் அறியுமாறில்லை.

## உருவமும் உள்ளடக்கமும்

விமோசனத்தின் அளவு 20.5x13.5 செ.மீ; பக்கங்கள் நாற்பது; ஆண்டுச் சந்தா, தபாற்கூலி உட்பட ரூ.1. தனிப்பிரதி அணா ஒன்று; தபால் கூலி தனி. அயல்நாட்டுக்குத் தபால்கூலி 0-2-0 சேர்த்து அனுப்ப வேண்டும். இதழின் முகவரி : புதுப்பாளையம், காந்தி ஆசிரமம், திருச்செங்கோடு.

தனக்குத் தெரிந்ததைத் தெரியும் என்றும்,
தெரியாததைத் தெரியாதென்றும் கூறுவது
எதுவோ - அதுதான் அறிவாகும்.

- கன்பூஷியஸ்

ஆசிரியரும் வெளியிடுபவரும் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சுக்ல ஆண்டு ஆவணியில் (ஆகஸ்டு 1929) முதல் இதழ் வெளிவந்தது. கடைசி இதழ் பிரமோதூத ஆண்டுவைகாசியில் (மே 1930) வந்தது. தொகுதி, பகுதி என்று பகுக்கப்பட்டுள்ளது. முதல் தொகுதியே முழுமையாக வரவாய்ப்பில்லாமல் போனது. பத்து இதழ்களே வெளிவந்தன.

பூரண மதுவிலக்குச் சட்டமே இன்றைய தேவை என்பதை 'மதுவிலக்கு ஏன் ?' என்னும் தலைப்பிலான முதல் இதழின் தலையங்கம் வற்புறுத்துகிறது; இதன் மூலம் இதழின் நோக்கமும் உணர்த்தப்படுகிறது.

> "பாடுபட்டு வயிறு வளர்க்கும் ஜனங்களின் பொருளை நாசமாக்குவன கள்ளும், சாராயமும். தேகத்திற்குக் கள்ளு, சாராயம் ஒரு நன்மையும் செய்யாது. மயக்கத்தை மருந்தென்றும், போதையைப் பரிகாரமென்றும், குடிவெறியைப் பலமென்றும் தைரியமென்றும் நினைப்பது அறியாமை. மது பானத்தினால் சிரமபரிகாரம் அடையலாம் என்று எண்ணுவது, கடன் வாங்கின பணத்தை ஆஸ்தியென்று நினைப்பது போலாகும்".

என்று தொடங்கும் தலையங்கத்தை எழுதியவர் ராஜாஜி.எளியநடையில் எழுதப்பட்டுள்ள இந்தத் தலையங்கம் மூன்று பக்கங்களில் அமைந்துள்ளது.

'கடன் வாங்கின பணத்தை ஆஸ்தியென்று நினைப்பதுபோல' என்னும் அருமையான உவமையைக் கையாண்டுள்ள ராஜாஜி பல்வேறு புள்ளி விவரங்களையும், சான்றுகளையும் எடுத்தாண்டு, மது விலக்கின் தேவையைத் தெளிவாக - மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

இதழின் முதல் பக்கம் பாரதியாரின், 'ஜயபேரிகை கொட்டடா' பாடல் மாற்றம் பெற்று மதுவிலக்குப் பின்னணியில் தரப்பட்டுள்ளது; ஒருவன் மலர்ந்த முகத்துடன் முரசு அறைவது போன்றதொரு படம் வரையப் பட்டுள்ளது. விமோசனத்தின் வருகை தீய கள் அரக்கனை அழிக்கும்; கள்ளினை ஒழிப்பதே விமோசனத்தின் இலட்சியம் என்பதையெல்லாம் உணர்த்தும் விதத்தில் முதல் இதழின் முதல் பக்கத்தில் படமும் பாடலும் அமைந்துள்ளன.

பத்து இதழ்களிலும் முதல் பக்கம் படமும் விளக்கமுமாகவே அமைந்துள்ளது. இரண்டாம் பக்கம் தலையங்கப் பக்கமாகும். ஏதாவது ஒரு தலைப்பில் செய்தி ஒன்றினைப் பற்றிய கருத்துக்கோவை எல்லா இதழ்களிலும் இடம்பெற்றுள்ளது. தலையங்கத்தை அடுத்து, பெரும்பாலும் கதை தரப்பட்டுள்ளது. ஆறு இதழ்களில் கதையும், இரண்டு இதழ்களில் நாடகமும், ஒன்றில் கட்டுரையும், மற்றொன்றில் படமும் பாடலும் இடம்பெற்றுள்ளன. அடுத்து பலவகைப்பட்ட செய்திகள் தொடர்கின்றன. இது விமோசனத்தின் பொதுவான அமைப்பு.

## கருத்துப் படங்கள் (Cartoons)

கருத்துப்படம் விமோசனம் இதழின் தனிச்சிறப்பு வாய்ந்த பகுதி; தனித்த - விரிவான ஆய்வுக்கு உரிய ஒன்று. தன் தனித்தன்மையால் தமிழ் இதழியலின் கருத்துப்பட வரலாற்றில் நிலைத்த புகழுக்கு உரியது.

தகுதி கருதியும் தன்மை நோக்கியும் பயன்பாட்டு நிலையிலும் கருத்துப்படம் இக்கட்டுரையில் விரிந்த அளவிலான ஆய்விற்கு உரியதாகிறது. அதனால், அதுபற்றிய செய்திகள் முதன்மையாகவும், இதழின் பிற செய்திகள் சுருங்கிய அளவில் அடுத்த நிலையிலுமாகத் தரப்பட்டுள்ளன.

## தமிழ் இதழ்களில் கருத்துப்படம் - தொடக்க காலம்

விமோசனத்தில் வெளிவந்த கருத்துப் படங்களைப் பற்றி அறியும் முன், தமிழ் இதழியலில் கருத்துப் படங்களின் தோற்றம் பற்றி அறிவது அவசியமாகும்.

தமிழ் இதழியலைப் பொறுத்தவரையில், கருத்துப் படங்கள் வெளியிடும் வழக்கம் பாரதியில் இருந்தே தொடங்குகிறது.

பாரதி, தாம் ஆசிரியராகப் பொறுப் பேற்றிருந்த 'இந்தியா' இதழில் முதன் முதலில் கருத்துப்படங்களை அறிமுகம் செய்தார். சென்னையில் இருந்து 'இந்தியா'வை புதுச்சேரிக்கு மாற்றிய பிறகு, அதை விரிவாக்க எண்ணியபோது பாரதி எழுதிய குறிப்பு ஒன்று இங்குக் குறிக்கத் தக்கது :

> "தமிழ்நாட்டு வர்த்தமானப் பத்திரிகைகளிலே நமது பத்திரிகை யொன்றுதான் விகட சித்திரங்கள் பதிப்பித்து வருவதென்ற விஷயம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். அடுத்த வாரம் முதல் இன்னுமொரு புதிய அலங்காரம் நமது பத்திரிகைக்குச் செய்யக் கருதியிருக்கிறோம். அதாவது தலைப்பக்கத்திலுள்ள ஒரு சித்திரம் மட்டுமேயன்றி, பக்கத்துக்குப் பக்கமுள்ள முக்கியமான வர்த்தமானங்களை விளக்குவதன் பொருட்டு அங்கங்கே சிறிய படங்களும் சித்திரங்களும் போடுவதாக உத்தேசம். தென்னிந்தியாவிலேயே இம்மாதிரி ஏற்பாடு தமிழ், இங்கிலிஷ், தெலுங்கு, கன்னடம் முதலிய எந்த பாஷைப் பத்திரிகைகளிலும் இதுவரை கிடையாது. நாம் நூதனமாகச் செய்யப்போகிறோம்".

மேற்கண்ட குறிப்பு, தமிழ் இதழியலின் கருத்துப்பட வரலாற்றில் பாரதியின் இடத்தைப் புலப்படுத்தும்.

## தேசபக்தன் - விநோதினி

திரு.வி.க.விற்குப் பிறகு 'தேச பக்த'னின் ஆசிரியராக வ.வே.சு.ஐயர் பொறுப்பேற்றார். ஏறக்குறைய பதின்மூன்று திங்கள்கள் (31.7.1920 - 28.8.1921) அதன் ஆசிரியராக இருந்த அவர், வாரம் ஒருமுறை



கருத்துப்படம் வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அந்நாளில் பெரும்புகழோடு விளங்கிய கருத்துப்பட ஓவியர் (Cartoonist) கே.ஆர்.சர்மா, 'விநோதினி' என்ற பெயரில் இதழொன்றை நடத்தினார். டி.என்.நடராசப் பிள்ளை என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த அந்த இதழில் கருத்துப்படங்கள் மிகுதியாக இடம்பெற்றன.

## தமிழ்நாடு

டாக்டர் பா.வரதராசுலு நாயுடு, தம்முடைய தமிழ்நாடு வார, நாள் இதழ்களில் கருத்துப் படங்களைத் தொடர்ந்து வெளியிட்டு இதழின் ஓர் அங்கமாக அதனைப் பிறர் கருதும் நிலையை உருவாக்கினார்.

பலரையும் கவரும் விதத்தில் கருத்துப் படங்கள் வெளியிட்டவரான பா.வரதராசுலு கருத்துப்படங்களின் காதலராகக் குறிக்கப்படுகிறார்.

முள் நிறைந்த செடியில்தான் அழகிய
ரோஜாவானது மலர்கிறது. அதேபோல் -
சொல்லொணாத் துயரங்களும், தாளமுடியாத
எதிர்ப்புகளுக்கும் இடையில்தான் உண்மை
பூத்து மலரும் !

- மகாத்மா காந்தியடிகள்

## பிற இதழ்கள்

எஸ்.எஸ். வாசன் பொறுப்பில் ஆனந்தவிகடன் பிப்ரவரி 1928 முதல் வெளிவந்தது. ஆனந்தவிகடன் மூலமாகத் தமிழ் இதழியலில் கருத்துப்படம் புத்தெழுச்சி பெற்றது. என்றாலும், 1928,1929 ஆகிய ஆண்டுகளில் அதில் கருத்துப்பா.ங்கள் இடம் பெறவில்லை.

சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடர்ந்து வெளியான சுதந்திரச்சங்கு (சனவரி 1930) என்ற வாரம் மும்முறைக் காலணா இதழும் கருத்துப்படங்களை வெளியிடுவதில் பேரார்வம் கொண்டு செயல்பட்டது. இடைவெளிகளுக்கு இடையே நான்கு கால கட்டங்களில் வெளிவந்தது. சுதந்திரச்சங்கு, முதல் காலகட்டத்து (26.1.1930 - 12.5.1930) இதழ்களில் கருத்துப் படங்கள் இடம் பெறவில்லை. இரண்டாவது கட்ட (11.4.1931-8.1.1932) இதழ்களிலேயே கருத்துப்படங்களைக் காண முடிகிறது.

ராஜாஜியின் விமோசனம் இதழ் நடைபெற்ற காலத்தும் (1929-1930) அதற்கு முன்னும் தமிழ்இதழியலில் கருத்துப்படங்கள் இடம் பெற்ற வரலாற்றை மேற்குறித்த செய்திகளிலிருந்து அறியலாம். இதைத் தொகுப்பின், பின்வருமாறு அமையும் :

தமிழ் இதழியலில், கருத்துப்படம் என்னும் பகுதியைத் தொடங்கிவைத்தவர் பாரதி. பாரதியின் இந்தியா, விஜயா, சூரியோதயம் ஆகிய இதழ்களைத் தவிர, பாரதியின் சமகாலத்தும் அதைத் தொடர்ந்தும் எந்த இதழும் கருத்துப் படங்களில் ஆர்வம் காட்டவில்லை.

ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்குப் பிறகு வ.வே.சு.ஐயர் தேச பக்தனிலும், கே.ஆர்.சர்மா விநோதினியிலும், பா.வரதராசுலு தமிழ்நாடு இதழிலும் கருத்துப் படங்களுக்கு முதன்மை தந்தனர். அவர்களுக்குப் பிறகு ராஜாஜியின் பார்வையில் கருத்துப்படம் புத்துரு பெற்றது.

## ராஜாஜியின் கருத்துப் படங்கள்

ராஜாஜிக்கு முன் கருத்துப்படங்கள் அரசியல் நிகழ்வுகளைச் சுட்டுவதற்கே பெரிதும் பயன்படுத்தப்பட்டன. ராஜாஜியின் பார்வை வேறுவிதமாக அமைநதது. சமுதாயத்தை அழித்துக் கொண்டிருக்கும் மதுவை அறவே ஒழிக்க வேண்டும் என்றும் நோக்கத்தோடு தொடங்கப்பட்ட இதழானதால், விமோசனம் வெளியிட்ட கருத்துப் படங்களும் அந்த நோக்கிலேயே அமைந்தன. மதுவின் பிடியிலிருந்து ஏழைமக்களை விடுவிக்க ஒரு சமுதாயப் புரட்சியை மௌனமாக நிகழ்த்திக் கொண்டிருந்த ராஜாஜி தம் மனம், மொழி, மெய்களால் ஒருமுகப்பட்டு உருவாக்கிய இதழ் விமோசனம். அதன் ஒவ்வொரு பக்கத்தையும் ஒவ்வொரு செய்தியையும் எண்ணி எண்ணி, பார்த்துப் பார்த்து உருவாக்கிய ராஜாஜி கருத்துப்படங்களிலும் அதே அளவு ஈடுபாட்டைக் காட்டினார்.

இன்ன படம், இன்ன கருத்தை, இன்னவாறு வெளிப்படுத்த வேண்டும் என்பதையெல்லாம் ராஜாஜியே முடிவு செய்வார். விமோசனத்தின் கருத்துப்பட ஓவியர், ராஜாஜியின் கருத்துக்களுக்கு வடிவம் தருவார். நலக்குறைவினால் இளம் வயதிலேயே அவர் காலமானார். ஐந்தாம் இதழ் வரையில் அவர் கைவண்ணத்தைக் காணமுடிகிறது. எஞ்சிய ஐந்து இதழ்களில் உள்ள படங்களை வரைந்து கொடுத்தவர் யார் என்பதை அறியமுடியவில்லை. ஆனால், இரு படங்களின் கீழ் (இதழ் ஆறு, பக்.231-232; இதழ் பத்து, ப.389) 'சர்மா பிரதர்ஸ்' என்ற குறிப்பு உள்ளது. அந்த இரண்டு படங்கள் மட்டும் அவரால் வரையப்பட்டனவா அல்லது பின் ஐந்து இதழ்களின் கருத்துப்படங்களும் பிறபடங்களும் முழுமையாக அவரால் தீட்டப்பட்டனவா என்பது அறியுமாறு இல்லை.

விமோசனம் பத்து இதழ்களிலும் மொத்தம் பதினேழு கருத்துப்படங்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத் தகுந்தவை ஐந்து, 'பார்த்தாயா தம்பி' (இதழ் ஒன்று, பக்.27) 'மிதமாகக் குடிப்பவன் கதி' (இதழ் இரண்டு, ப.64), 'வேண்டாம்' (இதழ் மூன்று, ப.81) 'யானை(யின்) வளர்ச்சி' (இதழ் ஆறு, பக்.231-232) 'மிதக்குடி' (இதழ் பத்து, ப.389).

## கருத்துப் படம் - ஒன்று

'பார்த்தாயா தம்பி' என்ற தலைப்பில் அமைந்த இந்தக் கருத்துப்படம் விமோசனத்தில் வெளிவந்துள்ள கருத்துப் படங்களில் முதன்மையானதாகக் கொள்ளத் தக்கது.

'வீட்டு விலங்குகளெல்லாம் ஏற்றுக் கொள்ளாத சாராயத்தை, விலை கொடுத்து வாங்கிப் பகுத்தறிவுள்ள மனிதன் குடிக்கிறானே' என்று கேலி செய்திருந்தது அப்படம். அது மிகவும் ரசிக்கும்படியாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### கருத்துப் படம்-இரண்டு

'மிதமாகக் குடிப்பவன் கதி' என்ற தலைப்போடு அமைந்த இந்தக் கருத்துப்படம், ராஜாஜியின் சிந்தனை ஆற்றலையும் எதையும் கலை உணர்வோடு வெளிப்படுத்தும் இயல்பையும் உணர்த்துகிறது. நான் அளவாகத்தான் குடிக்கிறேன்; அதனால் 'எனக்குத் தீமை ஒன்றும் வாராது' என்று தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்பவர் எண்ணிக்கை அதிகம். அத்தகையவர் இந்தக் கருத்துப்படத்தைப் பார்த்தால் மிதமாக ஆரம்பிப்பது எதில் போய் முடியும் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். படம் நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது.

முதல் வருடம், இரண்டாம் வருடம், மூன்றாம் வருடம், நான்காம் வருடம் என்று பிரிக்கப்பட்டுள்ளது. இதில் குடி, முதலையாக உருவகிக்கப்பட்டுள்ளது. முதலைக் குட்டியின் வளர்ச்சியைப் போல், மிதக்குடியும் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து, பெருங்குடியாகி, குடிப்பவனை விழுங்கும் நிலையைக் கருத்துப்படம் நயம்பட தெரிவிக்கின்றது.

### கருத்துப் படம்-மூன்று

மிகவும் உணர்வுபூர்வமாக உருவாக்கப்பட்டுள்ளது இது. ஒரு மனிதனின் முன்னே கள் நிரப்பப்பட்ட சீசா நீட்டப்பட்டுகிறது. அந்த மனிதன் அதை நோக்கி முன்னேறுகிறான். மனைவியும், சின்னஞ்சிறு குழந்தைகளும் அவனைப் பின்நோக்கி இழுக்கின்றன. வருமானம் முழுவதையும் குடியில் தொலைத்துவிட்டு, மனைவி மக்களை நடுத்தெருவில் நிறுத்தும் ஆண்களைத் தடுத்து நிறுத்தி, சிந்திக்கத் தூண்டும் வகையில் அமைந்துள்ள இந்தக் கருத்துப் படம் தனித்தன்மை வாய்ந்தது.

படத்தின் கீழ் இடம்பெற்றுள்ள விளக்கம் இதுதான்: "நீ கள்ளுக் கடைக்குப் போகிறாயா? போகும்போது மனைவி மக்களை நினைத்துக் கொள். அவர்கள் உன்னை வேண்டாம், வேண்டாம் என்று பின்னுக்கு இழுக்கிறார்கள். கடையில் செலவு செய்யும் காசை அவர்களிடம் கொடுத்தால் எவ்வளவு சுகம் உண்டாகும்; யோசித்துப் பார்; அவர்களை ஏமாற்றாதே".

### கருத்துப் படம்-நான்கு

'யானை வளர்ச்சி' என்னும் தலைப்பில் அமைந்த கருத்துப் படம் அடுத்து குறிக்கத்தக்கது. மூன்று நிலைகளாக யானையின் வளர்ச்சி காட்டப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கத்தின் கலால் வருமானம் எப்படி வளர்ந்துகொண்டே போகிறது என்பதையும், அதன் அசுர வளர்ச்சியின் விளைவாகக் குடிப்பழக்கம் உள்ளவர்கள் கதி என்னவாகிறது என்பதையும் இது விளக்குகிறது. ஒவ்வொரு பகுதியின் கீழும் ராஜாஜியால் தரப்பட்டுள்ள வாசகம் அறியத்தக்கது.

### பகுதி - 1

சின்னஞ்சிறு யானைக்குட்டி, குழந்தைகள் கூடத் தொட்டு விளையாடலாம். (1860 ஆம் வருடத்தில் இந்திய அரசாங்கத்தின் கலால் வருமானம் ஒரு கோடி ரூபாய்தான்).

### பகுதி - 2

குட்டி வளர்ந்து இளம் யானையாயிற்று. ஆனாலும், பாகனை மீறி இது என்ன செய்துவிடும்? கையில் அங்குசம் இருக்க அச்சம் என்ன? (1900 ஆம் வருடத்தில் கலால் வருமானம் ஆறுகோடி ஆயிற்று. ஆனாலும், ஏழை இந்தியர்கள் தாங்க முடியாத சுமையன்று.)

### பகுதி - 3

ஐயோ! இளம் யானை இராட்சத யானையாய் வளர்ந்து கட்டுமீறிப் போய்விட்டது. யானைப்பாகன் பிழைத்தல் கடவுள் புண்ணியந்தான். (1929 ஆம் ஆண்டில் கலால் வருமானம் இருபத்து நான்கு கோடி. ஏழைக் குடியானவர்கள் பாரந்தாங்காது நசுக்கப்படுகிறார்கள்.)

அங்கதப் போக்கில் கருத்துப் படம் அமைக்கப்பட்டுள்ளது. தொடக்கத்திலேயே தடுக்கப்படாவிட்டால் விளைவு கடுமையானதாக இருக்கும் என்பதைப் படிப்படியாகச் சுட்டி எளிதாக விளங்கிக்கொள்ள வகை செய்கிறது படம்.

### கருத்துப் படம்-ஐந்து

இந்தப் படத்தில் ஒரு மனிதன் படகில் மகிழ்ச்சியாகச் செல்லுகிறான். அவன் மிதமாகக் குடிப்பவன். குறைந்த அளவுதானே என்ற அலட்சியம், 'பெருங்குடி' என்னும் நீர்வீழ்ச்சியில் தள்ளி, 'நாசம்' என்னும் முடிவை நோக்கி அவனை இட்டுச் செல்லுகிறது. கருத்துப் படத்தின் கீழே தரப்பட்டுள்ள விளக்கம், மிதக்குடியனின் வீழ்ச்சியைப் பின்வருமாறு புலப்படுத்துகிறது.

"இதோ படகில் அமர்ந்து கவலை இன்றிச் செல்லும் மனிதனைப் பாருங்கள். அடுத்த கணத்திலே அவன் இந்தப் பெரிய நீர்வீழ்ச்சியில் அகப்பட்டு அதலபாதாளத்தில் வீழ்ந்து நாசமடையப் போகிறான். எனினும், அவன் அப்பேரபாயத்தை உணரவில்லை. மிதமாகக் குடிக்க ஆரம்பிக்கிறவர்கள் கதி இதுவேயாகும்."

### விமோசனக் கருத்துப் படங்கள் - தனித்தன்மைகள்

பொதுவாக, கருத்துப்படங்கள் உயர்ந்த முறையில் அமைந்திருப்பதால் படிப்பவர்களால் ரசிக்கப்பட்டு, பாராட்டப்படுவது வழக்கம். மிகச் சிறப்பானவை என்று கருதப்படும் சில, பிற இதழ்களில் எடுத்தாளப்படுவதும் உண்டு. இதுவே பொதுவான நிலை. விமோசனத்தில் வெளிவந்த கருத்துப் படங்கள் முற்றிலும் வேறான தன்மையன. அவை, குடியின் தீமையைப் பாமரரும் உணர வேண்டும்; உணர்ந்து தெளியவேண்டும்; தெளிந்து திருந்தவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் வரையப்பட்டவை. அதனால் அந்தக் கருத்துப் படங்கள் பன்முகநோக்கில் பயன்பாடுடையனவாக அமைந்தன.

விமோசனக் கருத்துப் படங்களின் பயன்பாட்டின் ஒரு கோணத்தை, 'பாங்கர் விநாயகராவ்' என்னும் நூலின் முகவுரையில் விரிவாகக் கூறிச் செல்கிறார் கல்கி. அதில் குறிப்பிடத்தக்க சில பகுதிகள் இங்கு அறியத்தக்கன.

> காந்தி ஆசிரமத் தொண்டர்கள் தீவிரமான மதுவிலக்குப் பிரசாரம் செய்தார்கள். விமோசனத்தில் வெளியான படங்கள் பிரசாரத்துக்கு மிக்க உதவியாயிருந்தன. மேற்படி படங்களைப் பெரிதாக எழுதச் செய்து துணியில் ஒட்டி வைத்திருந்தோம். இந்தப் படங்களையும் எடுத்துக் கொண்டு ஆசிரமத்தின் பெரிய கட்டை வண்டியில் ஏறி வாரத்துக்கு இரண்டு நாள் கிராமப் பிரசாரத்துக்குப் போவோம்.

*அடுத்த இதழில் முடியும்*





## பரிசுப் பொருட்கள் : முதலமைச்சரின் நடைமுறை!
## பட்டயக் கணக்கர் பயிலகப் பொன்விழாவில் கலைஞர் விளக்கம்

*"பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு நான் உரையாற்றியிருக்கிறேன். பல்வேறு பொருள்களில் பேசியிருக்கிறேன். தரப்பட்டுள்ள பல்வேறு தலைப்புகளில், கல்லூரிகளில், உயர்நிலைப்பள்ளிகளில், மன்றங்களில் சொற்பொழிவாற்றியிருக்கிறேன். கவிதை கூட பாடியிருக்கிறேன். இன்று காலையிலே நண்பர்களிடத்தில் சொல்லிக்கொண்டிருந்தேன்— இன்றைக்குத்தான் எனக்குத் தெரியாத ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசப்போகிறேன் என்று! ஏனென்றால், எந்தவொரு விஷயத்தைப் பற்றி மிக அதிகமாகத் தெரிந்தவர்கள் இங்கே நிரம்பியிருக்கிறீர்களோ உங்கள் மத்தியிலே நான் எனக்குத் தெரியாத ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசுவது உள்ளபடியே நானே ஆச்சரியப் பட்டுக் கொள்ளக் கூடிய ஒரு சம்பவம் தான்.*

**ஒழுங்காக வருமான செலுத்தி வருகிறேன்**

*நான் உங்களோடு பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்ற வாய்ப்பைப் பெறாவிட்டாலும் உங்களில் ஒரு சிலரோடு ஐம்பதாண்டு காலமாக ஒட்டி உறவாடி வருகின்றேன். அப்படியென்றால். ஐம்பதாண்டு காலமாக நான் ஒழுங்காக வருமான வரி செலுத்தி வருகின்றேன் என்று பொருள். ஒழுங்காக வருமான வரி செலுத்துமாறு என்னை உங்களில் சிலர் பழக்கி வைத்திருக்கின்றீர்கள்.*

*ஏறத்தாழ ஐம்பதாண்டுகளுக்கு முன்பே நான் கலையுலகத்தில் ஈடுபாடு கொண்டிருந்தபோது சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ்ஸில் கதை வசனம் எழுதுகின்ற பொறுப்பை ஏற்றிருந்த காலத்தில் அப்போது எனக்கு மாதந்தோறும் தரப்பட்ட அந்த ஊதியத்தில் வருமான வரியைப் பிடித்தம் செய்து கொண்டுதான் கொடுப்பார்கள்.*

*எனவே, வரி செலுத்த வேண்டிய கட்டாயம் எனக்கு இல்லை. அவர்களே வரியை எடுத்துக் கொண்டு கொடுப்பார்கள். இப்படி தொடங்கியது தான் வருமான வரி செலுத்துகின்ற வழக்கம் என்பதை முதலில் உங்களிடத்திலே நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

**வரி விதிப்பு முறையில் கழக அரசின் சீரமைப்பு நடவடிக்கைகள்**

*வணிக வரி கட்டாய தணிக்கை முறை மற்றும் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை முறை தனியாராகிய உங்களிடம் கொடுக்கும் திட்டம் கொண்டு வரவேண்டுமென்று கோரிக்கைகள் வைத்துள்ளீர்கள். இதுபற்றி நிச்சயமாக அதிகாரிகளிடம் பேசப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இங்கே உரையாற்றியவர்கள் தெரிவித்ததைப் போல, ஏற்கெனவே சென்ற இரண்டு ஆண்டுகளில் வரி விதிப்பு முறைகளில் பல சீரமைப்பு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. நாணயமாக வரி செலுத்துவோருக்கு நடைமுறைகளை எளிதாக்கி வரி விதிப்பு அமைப்பின் கடுமையைக் குறைத்திருக்கிறோம். இதன் ஒரு தொடர் நடவடிக்கையாகத்தான்*

இங்கே சுட்டிக் காட்டியதைப் போல் , பத்து இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டும், இருபது இலட்ச ரூபாய்க்கு உட்பட்டும் மொத்த விற்பனை தொகையுடைய வியாபாரிகள் தமது விருப்பத்தின் பேரில் பதிவு பெற்ற பட்டயக் கணக்கர் (சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட்) ஒருவரால் தம்முடைய கணக்குகளைத் தணிக்கை செய்து சான்றளிக்கப்பட்ட கணக்கு விவரங்களின் நகல் ஒன்றை அந்த வணிகர் வரி விதிப்பு அதிகாரிக்கு அனுப்புதல் வேண்டும். அத்தகைய நேர்வுகளில் வரி விதிப்பு அலுவலர் அந்த வணிகர்களின் வரி விதிப்பு கணக்குகளைக் காட்டும்படி கேட்காமலேயே பட்டயக் கணக்கர் அளித்த அறிக்கையினை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கேற்ப, தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு 1.4.98 முதல் அது செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன்படி பட்டயக் கணக்கர்களுக்கு கூடுதல் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதனைக் கட்டாயமாக ஆக்கவேண்டுமென்றும், மின்வாரியம் போன்ற பல்வேறு துறைகளில் வாய்ப்புகளை அளிக்க வேண்டுமென்றும் நீங்கள் கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். அது நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும். பரிசீலிக்கப்படும் என்பது ஏதோ அரசாங்க பாஷையல்ல. அப்படிக் கருதிக்கொள்ளக் கூடாது. ஏனென்றால் என்னை உங்களுக்குத் தெரியும். நான் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தாலும் கூட, தமிழகத்தை ஆளுகின்ற தி.மு.கழகத்தின் தலைவன். ஒரு ஒற்றுமையை நீங்கள் பார்க்கலாம்.

1949 - ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த கணக்கர் நிறுவனம் பொன் விழாவைக் கொண்டாடுகின்றது. 49 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் இப்பொழுது பொன்விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. எனவே இருவரும் - என்னுடைய தலைமையிலே உள்ள கழகத்திற்கும் பொன்விழா, உங்கள் அமைப்புக்கும் பொன்விழா. என்னை அழைத்திருக்கிறீர்களே, எனக்குப் பொன்விழா அல்ல - பவளவிழா.

முதலிலே ஒன்றை நான் குறிப்பிட்டேன். நிறுவனங்களுக்கு மாத்திரமல்ல. கழக அமைப்பிலே கூட, வேறு எந்தக் கட்சியில் இருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது. தி.மு.கழகத்தினுடைய பொதுக்குழுவில், தணிக்கைக் குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்படுகிறது. பொதுக் குழு உறுப்பினர்கள் வாக்களித்து தணிக்கைக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், கழகத்தின் வரவு, செலவு கணக்குகளைப் பார்த்து, அதற்குப் பிறகு அந்தக் கணக்குகளைச் சரிபார்ப்பதற்குத் தலைமைக் கழகத்திலேயே இரண்டு பட்டய கணக்கர்களை நியமித்திருக்கிறோம். அவர்களும் அந்தக் கணக்குகளைச் சரி பார்க்கிறார்கள்.

இதற்கெல்லாம் மேலாக யோசனைகளைக் கேட்க நம்முடைய நண்பர் ஆடிட்டர் ஜெகதீசன் அவர்களும் எங்களுக்கு அரும் துணையாக இருந்து வருகிறார். எனவே தணிக்கை விஷயத்திலே நாங்கள் மிகத் தாராளமாக இருக்கிறோம் என்பதையும், தணிக்கைக்கு உட்பட்டேதான் எங்கள் கட்சியின் கணக்குகளே கூட வைக்கப்படுகின்றன என்பதையும் இங்கே நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

**பரிசுப் பொருள்கள் நடைமுறை**

தணிக்கை அதிகாரிகளின் உதவி வரி செலுத்துவோருக்கு எந்த அளவிற்கு தேவைப்படுகிறது என்பதை என்னை விட நீங்கள் மிக அதிகமாக அறிந்திருக்கிறீர்கள். எனவே கொல்லர் தெருவிலே ஊசி விற்பதைப் போல இங்கே நான் அதனை விளக்க விரும்பவில்லை. உதாரணம் சொல்ல வேண்டுமேயானால், இன்றைக்கு நான் ஒரு முதலமைச்சர். ஒரு கட்சியினுடைய தலைவன்.

இந்த இரண்டு நிலைகளிலும் பரிசுப் பொருள்கள் எனக்குச் சில இடங்களிலே வழங்கப்படுகின்றன. அரசு விழாக்களில் பரிசுப் பொருள்கள் - நினைவுச் சின்னங்கள் - நினைவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. என்னுடைய கட்சி சார்பில் நடத்தப்படுகின்ற விழாக்களில் நினைவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. அதிலும் குறிப்பாக இது பவள விழா ஆண்டு என்ற காரணத்தினால் நான் கலந்து கொள்கின்ற எல்லா நிகழ்ச்சிகளிலும் கழக அமைப்புகளிலே உள்ளவர்கள் பல இடங்களிலே உள்ள கிளைகள் ஒன்றியங்களின் சார்பாக வசூலித்து அந்த நிதியிலிருந்து நினைவுப் பொருட்களை வழங்குகிறார்கள்.

அவைகளை எல்லாம் நான் எனக்கென்று வைத்துக் கொள்வதில்லை. அவைகளை கட்சி விழாவிலே தரப்படுவதை கட்சிக்கு ஒப்படைத்து விடுகிறேன். அரசு விழாக்களிலே வழங்குவதை, அரசின் தலைமைச் செயலகத்திலே

**நாட்டில் நல்ல அரசியல் மரபை உண்டாக்கவும், உண்மை ஜனநாயகம் மலரவும் எல்லா அரசியல் கட்சியினரும் பாடுபட வேண்டும்.**

**- அறிஞர் அண்ணா**



## முதல் பக்க அட்டை...

முன்னாள் முதல்வர் பி.எஸ்.குமாரசாமி ராஜா
நூற்றாண்டு விழா நிகழ்ச்சி

## கடைசிப்பக்க அட்டை....

மக்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்.**

தூர்வாரும் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் பார்வையிடுதல்.

இன்றைக்குச் சென்று பார்த்தாலும் நீங்கள் காணலாம். அங்கே கொண்டுபோய் வைத்துவிடுகின்றேன். இதுதான் நான் அனுசரித்து வருகின்ற வழக்கமான நிலை.

அந்த நிலையை எனக்குச் சொல்லிக் கொடுத்தவர்கள் நீங்களேதான். நானே கூடத் தெரியாமல், அதை வைத்துக் கொண்டிருந்தால் சில நேரங்களில் ஆபத்துக்கு ஆளாகலாம். அப்படி ஆபத்துக்கு ஆளாகும்போது நான் ஆடிட்டர் சொல்லைக் கேட்காத அந்தக் குற்றத்திற்காக வருந்த நேரிடும். ஆடிட்டர் சொன்னால் என்ன, யார் சொன்னால் என்ன? நான் வைத்துக்கொண்டுதான் இருப்பேன், அதைப்பற்றிக் கவலைப்படமாட்டேன் என்று சொல்கின்றவர்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. நீங்களும் கவலைப்படமாட்டீர்கள்.

**எனது கவலை**

ஆனால் நான் என்னைப் பற்றியும், என்னுடைய ஒழுக்கத்தைப் பற்றியும் - சமுதாயத்திற்கு ஏற்பட்டுத் தீரவேண்டுமென்று விரும்புகின்ற அந்த ஒழுக்கத்தைப் பற்றியும் மெத்தவும் கவலைப்படுகின்றவன் என்ற காரணத்தினாலேதான் அண்மையில் கூட - என்னுடைய பவளவிழா நிகழ்ச்சியில் பல பேர் அங்கே வைக்கப்பட்ட உண்டியலில் நிதி செலுத்தினார்கள். அவைகளையெல்லாம் மாலை நேரத்திலே கட்சியினுடைய தணிக்கைக் குழு உறுப்பினர்களையும், தணிக்கையாளர்கள் இருவரையும் வைத்துக்கொண்டு அவைகளை எண்ணி, ஏறத்தாழ 11 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையை உடனடியாக அரசாங்க கஜானாவிலே செலுத்தி அது பத்திரிகையிலே வெளிவந்திருப்பது உங்களுக்குத் தெரியும்.

அதைப் போலவே வேறு சில பொருள்கள் கடந்த சில வாரங்களாகப் பவள விழா என்கின்ற பெயரால் எனக்குத் தரப்பட்டுள்ளன. அவைகளையெல்லாம் கூட ஆடிட்டர் ஜெகதீசன் யோசனையின் பேரில் அவைகளையும் நான் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக் கழகத்திற்கு ஒப்படைக்க இருக்கிறேன் என்பதையும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு இங்கே கூறுவது சாலவும் பொருத்தமுடையது என்று கருதுகிறேன்.

**எந்த பயமுமில்லை**

எனவே, வருமான வரி என்பது ஏதோ ஒரு பயமுறுத்துகின்ற பயங்கரமான ஒன்றல்ல. நாம் ஒழுங்காக நடந்து கொண்டால், வருமான வரித்துறையால் எந்தப் பயமும் கிடையாது. அதை ஏமாற்ற நினைத்தால்தான் சில நேரங்களிலே நமக்கு ஆபத்து, ஆடிட்டர்களுடைய துணையும் அதிகமாக தேவைப்படும்.

ஒழுங்காக வரி செலுத்துபவர்களுக்கு ஆடிட்டர் துணை வேண்டாமா என்றால் நிச்சயமாக அவர்களுக்கும் வேண்டும். உடல் நலத்தோடு இருப்பவர்களுக்குக் கூட சித்த வைத்திய மூலிகைகள் பயன்படுவதைப் போல ஆடிட்டர்களுடைய யோசனை பயன்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. அந்த வகையிலே ஆடிட்டர்கள் எனப்படும் தணிக்கையாளர்களுடைய பெரும் உதவி வருமானவரி செலுத்தக்கூடிய அளவிற்கு வருவாய் ஈட்டுகின்ற ஒவ்வொருவருக்கும் தேவை.

மூன்று பேர்களிடத்தில் - பொய் சொல்லக்கூடாது. வைத்தியரிடத்திலே பொய் சொல்லக்கூடாது. வக்கீலிடத்திலே பொய் சொல்லக்கூடாது. மூன்றாவது ஆடிட்டர் இடத்திலே பொய் சொல்லக்கூடாது. உண்மையைச் சொன்னால்தான் ஆடிட்டர் கூட அவரைக் காப்பற்ற முடியும். அப்படிப்பட்ட வைத்தியர், வழக்கறிஞர், ஆடிட்டர் என்ற இந்த மூன்று பேரைக் கொண்ட இந்தப் பெரும் பட்டியலிலே இணைத்துக் கொண்டிருக்கின்ற இந்த நிறுவனம் நிறுவனத்திலே உள்ள உறுப்பினர்கள் இன்றைக்குப் பொன்விழாவைக் கொண்டாடுகின்றீர்கள்.

அந்தத் தொடக்க விழாவை இந்தப் பிராந்தியத்திலே என்னைக் கொண்டு நடத்தியிருக்கிறீர்கள். தொடர்ந்து இந்த விழா நிகழ்ச்சிகள் நடைபெற விருப்பதாக அறிகிறேன். இங்கே வரவேற்புரையாற்றிய விஷ்ணுபரத் குறிப்பிட்டார். விரைவில் இந்தப் பொன்விழா பல இடங்களில் நடைபெறும் என்றார். பிரதமர் அவர்களே கூட இந்தப்பொன்விழாவின் துவக்க நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு தெரிவித்துள்ள கருத்துக்கள் என்றென்றும் நினைவில் நிற்கக்கூடிய கருத்துக்கள்.

இந்த பொன்விழாக் கொண்டாடுகின்ற இந்த அமைப்பு தொடர்ந்து மணிவிழா, பவள விழா, முத்து விழா, நூற்றாண்டு விழா, அதற்குப் பிறகு பல நூற்றாண்டு விழாக்களைக் கொண்டாட வேண்டும்.

- இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 11.7.98ல் நடைபெற்ற விழாவில் உரையாற்றினார்.

★ ★ ★

அன்றும் வழக்கம்போல் திணைப்புனத்தைக் காவல் புரியத் தன் தோழியுடன் சென்றாள் தலைவி.

திணைப்புனத்தின் நடுவே அமைக்கப்பட்ட பரண்மீது ஏறிநின்று கவண்வீசி காக்கை, குருவிகளை விரட்டிக் கொண்டிருந்தாள். அவ்வழியாக ஓர் இளைஞன் சென்றுகொண்டிருந்தான். அவன் அணிந்திருக்கும் ஆடை அணிகலன்கள் செல்வக்குடியில் பிறந்தவன் என்பதை எடுத்துக் காட்டின.

தலைவி வீசிய கவண் கல் ஒன்று, அந்த இளைஞன் நெற்றியில் பட்டது. 'ஆங்ங்...' என்ற வேதனைக் குரல் எழுப்பி அப்படியே அமர்ந்துவிட்டான் அவன். அந்த வேதனைக் குரல் தலைவியின் காதில் விழுந்து பார்வையை அவன் பக்கம் திருப்பியது.

தான் வீசிய கவண் கல்தான் அவன் நெற்றியில் பட்டிருக்கும் என்பதைப் புரிந்துகொண்டாள். மென்மையான அவள் உள்ளம் துடித்தது. அடுத்த வினாடியே அவனிருக்கும் இடத்திற்கு விரைந்து சென்றாள். தலைவி விரைந்து செல்வதைக் கண்ட தோழி ஒன்றும் புரியாமல் அவளை அழைத்த வண்ணம் அவள் பின் தானும் ஓடினாள்.

தலைவன், தன்னை நோக்கி ஓர் அழகு மங்கை ஓடி வருவதைக் கண்டு, இது அவள் செயல்தான் எனப் புரிந்துகொண்டான். அவளுக்குச் சரியான தண்டனை கொடுக்க முடிவு செய்தான். மேலும் பலத்த வேதனைக் குரல் எழுப்பி நடிக்கத் தொடங்கினான்.

அவனருகில் வந்த தலைவி, நெற்றியில் குருதி சிந்துவதைப் பார்த்ததும் உள்ளம் நடுங்கிப் போனாள். முந்தானையில் ஒரு பகுதி கிழித்துக் குருதியைத் துடைத்துவிட்டாள். பக்கத்திலிருந்த மூலிகைச் செடியிலிருந்து சில தழைகளைப் பறித்துவந்து, அதைக் கசக்கி அடிபட்ட நெற்றியில் வைத்து ஒரு கட்டுப் போட்டுவிட்டாள். இத்தனையும் பரபரப்போடு செய்து முடித்துவிட்டு நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டாள்.

அவள் செயலைக் கண்டு தன் வேதனையை மறந்தான் தலைவன். இல்லை... இல்லை;தன்னையே மறந்தான். அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்த வண்ணம் இருந்த அவனைக் கண்டு, "இப்போது எங்கே வலிக்கிறது? .சொல்லுங்கள்" என்றாள் தலைவி.

அது அவன் காதில் விழுந்தால்தானே! மீண்டும் தனது மென்கையால் மலை போன்ற அவனது தோளைப் பற்றிக் குலுக்கிவிட்டு "உங்களைத்தான்...வலிக்கிறதா சொல்லுங்கள்?" என்றாள்.

தலைவன் எழுந்து நின்றான். "நெற்றியில் வலி இல்லை. ஆனால்..." சொல்லத் தயங்கினான்.

"ஏன் நிறுத்திவிட்டீர்கள் - சொல்லுங்கள்?" தலைவி கேட்டாள்.

"நெஞ்சில் வலிக்கிறது!" ஏக்கத்தோடு அவளையே நோக்கினான் தலைவன்.

அதற்கும் அவளிடத்தில் மருந்து இல்லாமல் இல்லை. கனியிதழின் கடையில் புன்னகையைத் தவழவிட்டாள். மூங்கிலன்ன அவளது மென்தோளைத் தனது வலிமை பொருந்திய கையால் பற்றினான், தலைவன்.

எங்கே மென்தோள் உடைந்துவிடுமோ என்று அச்சமடைந்த தலைவி, அவன் மார்மீதே சாய்ந்துவிட்டாள். அந்தக் காதல் காட்சியைக் கண்டுவிட்ட தோழி மறைவிடம் சென்றுவிட்டாள், நாணத்தோடு!

அவர்தம் காதல் வளர்ந்தது.

பகலிலும் இரவிலும் சந்தித்து இன்புற்றனர்.

அவர்களுக்குத் துணையாய் இருந்தாள் தோழி.

நாளடைவில் தலைவியின் நடவடிக்கைகளில் மாற்றம் கண்ட அவள் அன்னை வெளியே போகவொட்டாமல் தடுத்துவிட்டாள்.

தலைவன் வந்து ஏமாற்றத்துடன் திரும்பலானான். பிரிவைத் தாங்கமாட்டாத தலைவி தோழியிடம் தன்னை மணம் செய்து கொள்ளும்படி தலைவனைக் கண்டு சொல்லும்படி வேண்டினாள்.

தோழி தலைவனைக் கண்டு, "இனி தலைவியைச் சந்திப்பது அரிது. உடனடியாக அவளை மணம் செய்து கொள்ளுங்கள். காலம் நீடித்தால் அவள் உயிர் நிலைக்காது" என்றாள்.








**வைரம் குப்பையிலே கிடந்தாலும், எடுத்துக் கொஞ்சம் தூசியைத் தட்டினால் மீண்டும் ஒளிவிடும். ஆனால், இழிநிலையில் மங்கிப்போன பித்தளைகளை யாரும் தீண்டமாட்டார்கள்!**

\- கலைஞர்

தலைவனும் முறையாகப் பெண் கேட்க தலைவி வீட்டிற்கு மறுநாளே வருவதாகக் கூறிச் சென்றான். இந்தச் செய்தியைத் தலைவிக்குத் தெரியப்படுத்தினாள் தோழி.

அடுத்த நாள் விடிந்தது.

இரவெல்லாம் இன்பநினைவில் உறக்கமின்றிக் கழித்த தலைவி, பொழுது விடிவதற்குள் எழுந்து நீராடி புத்தாடை அணிந்து பொன்நகைகள் பூட்டி, புதிய பொலிவோடு விளங்கினாள், வீட்டிற்கும் வாசலுக்கும் நடை பயின்றுகொண்டிருந்தாள். தோழி வந்தாள். அவளிடம், "தலைவன் இன்னும் வரவில்லையடி! நிச்சயமாக வருவாரா?" என்று ஏக்கமுடன் வினவினாள் தலைவி.

"என்ன அவசரமடி உனக்கு. அவர்மட்டும் வருவதாக இருந்தால் எப்போதோ வந்திருப்பார். உடன் பெற்றோர்களையும் உறவினர்களையும் அழைத்து வரவேண்டுமல்லவா? அவர்களெல்லாம் ஒன்று கூடியல்லவா புறப்பட்டு வரவேண்டும்!"

"தோழி, அவர்கள் வந்து பெண்கேட்டும் நம் பெற்றோர்கள் மறுத்துவிட்டால் என்ன செய்வது?"

"போடி பைத்தியக்காரி! ஏன் மறுக்கப் போகிறார்கள். அவருக்கென்ன அழகில்லையா? அறிவில்லையா? மேலும் நம்மைவிட செல்வத்தில் குறைந்தவருமல்லர். மனத்தை அலட்டிக் கொள்ளாமல் பேசாமல் இரு. அதோ! நம் தலைவரும் வந்துவிட்டார். அவரோடு அவர்தம் பெற்றோரும் உறவினரும் வருகிறார்கள். நீ உள்ளே போய் இரு. நான் இங்கு நடப்பதை அறிந்துவந்து சொல்கிறேன்" என்று அவளை உள்ளே அனுப்பிவிட்டு, தலைவியின் பெற்றோர்களிடம் யாரோ விருந்தினர்கள் வருவதாகத் தெரியப்படுத்தினாள்.

தலைவியின் பெற்றோர்கள் வீடு தேடி வந்தவர்களை மலர்ந்த முகத்தோடு வரவேற்று இருக்கச் செய்தார்கள். வந்தவர்களில் தலைவனும் அவனுடைய பெற்றோரும் தவிர மற்ற இருவரும் வயது முதிர்ந்தவர்கள் என்பதை நரைத்த முடியும், தலைக்கட்டும், கையிலே தடியும் எடுத்துக் காட்டின. அவ்விருவரில் ஒருவர் தங்கள் மகன் வந்திருப்பதாகவும் இன்னாருடைய மகன் இவன் என்று தலைவனையும் பெற்றோரையும் அறிமுகப்படுத்தினார்.

தலைவனைக் கண்டதும் தலைவியின் பெற்றோர்க்குப் பிடித்துவிட்டது. தம் பெண்ணையும் அழைத்து வரச்சொல்லி வந்தவர்களுக்குக் காண்பித்தார்கள். அவர்களுக்கும் பெண் பிடித்துவிட்டது. பெண்ணை உள்ளே அழைத்துப் போகச் சொல்லிவிட்டு மற்றவை பற்றிப் பேசத் தொடங்கினார்கள்.

தலைவனின் உறவினரும் பெற்றோரும் தாங்கள் இன்னது இன்னது தருகிறோம். இன்னது இன்னது செய்கிறோம் என்று சொல்ல, தலைவியின் பெற்றோர்கள் தாங்கள் இன்னது இன்னது செய்கிறோம், இன்னது இன்னது தருகிறோம் என்று சொல்ல, தலைவனின் உறவினர் "நன்று, நன்று" என்று சொல்ல, தங்கள் வருகையால் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம். இந்நாள் எங்களுக்குப் பெருமை தரக்கூடிய நன்னாளாகும் என்று தலைவயின் பெற்றோர் சொல்ல, அடுத்த நல்ல நாளிலேயே திருமணத்தை வைத்துக் கொள்வோம் என்று இரு. தரப்பினரும் முடிவெடுக்க அந்த நல்ல முடிவை தலைவிக்குச் சொல்ல விரைகிறாள் தோழி.

சிரித்த முகத்தோடு வரும் தோழியைப் பார்த்து தலைவி வினவுகிறாள், "தோழி, நல்ல முடிவுதானா?".

தோழி, "நல்ல முடிவுதான். அடுத்த நல்ல நாளிலேயே திருமணம்" என்று சொல்லிவிட்டு, "தோழி, இன்று நம் இல்லத்தில் கூடிய அவையில், பிரிந்தவர்களைக் கூட்டி மகிழும் சான்றோரும் நம்மூரிலும் இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டேன். கையிலே தடியும், தலையிலே நரைத்த முடியும், தலைக்கட்டும் கொண்டு ஆண்டிலும், அறிவிலும் முதிர்ந்த தலைவனின் உறவினர்கள் நம் பெற்றோர்கள் சொன்னதற்கெல்லாம் நன்று, நன்று எனக் கூறினார்கள். அவர்கள் வருகையால் இன்று பெருமையுடைய நன்னாளாகும் என்று நம் பெற்றோர்கள் கூறி மகிழ்ச்சியடைந்தார்கள். தோழி! நீ வாழ்க" என வாழ்த்தி மகிழ்ந்தாள்.

–மேலே தீட்டிக் காட்டிய சொல்லோவியம் வெள்ளிவீதியார் என்னும் புலவர் பாடிய பாடலாகும்.

அப்பாடல்:

"அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர்
இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர்
வெண்தலைச் சிதலவர்
நன்றுநன் றென்னு மாக்களோ
டின்று பெரிதென்னும் ஆங்கண
தலையே"

(குறுந்தொகை - 146)

# உலகக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டி

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் உலகக் கால்பந்து கோப்பைக்கான மாபெரும் போட்டி - 1998 ஜூன் 10ஆம் தேதி தொடங்கி, ஜூலை 12ஆம் தேதியோடு 33 நாட்கள் நடைபெற்று முடிவுற்றிருக்கிறது. 38 நாடுகள் இதில் கலந்து கொண்டன.



பிரரன்ஸ் நாட்டு அதிபர் ஜாகுவாஸ் சிராக், அந்நாட்டுத் தலைநகரான பாரீசில் தொடங்கிவைத்து நடைபெற்ற இந்தப் போட்டியில், நான்குமுறை சாம்பியன் பட்டத்தை வென்ற பிரேசிலை வீழ்த்தி, உலகக் கால்பந்துக் கோப்பையைத் தட்டிச் சென்று விட்டது பிரான்ஸ்.

பாரீஸ் மற்றும் அதைச் சுற்றியுள்ள 8 நகரங்களில் இப்போட்டிகள் நடைபெற்றன; தொடக்கப் போட்டியும் நிறைவுநாள் போட்டியும் பாரீஸ் அருகே செயின்ட் டெனிஸ் நகரில் உள்ள ஸ்டேட்-டி-பிரான்ஸ் ஸ்டேடியத்தில் நடைபெற்றன.

இந்த இறுதிநாள் போட்டிக் கால்பந்தாட்டத்திற்கு, மொராக்கோவைச் சேர்ந்த சாய்த் பெல்கோலா நடுவராக இருந்திருக்கிறார்.

1930ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகக்கோப்பை போட்டியில், முதல் கோல் போட்டவர் பிரான்ஸ் விளையாட்டு வீரர்தான்; இந்த இருபதாம் நூற்றாண்டின் கடைசியில் நடைபெற்ற இப்போட்டியில் கடைசியாகக் கோல் போட்டவரும் பிரான்ஸ் நாட்டுக் கால்பந்தாட்ட வீரர்தான்!

ஒலிம்பிக் போட்டியை விட அதிக அளவில், கோடிக்கணக்கான ரசிகர்கள் நேரில் இதைக் கண்டு களித்திருக்கிறார்கள்.

அர்ஜெண்டினாவில் நடந்த போட்டிக்குப்பின், இருபதாண்டுக் காலம் கழித்து இத்தகைய அதிசயம் நடைபெற்றிருக்கிறது. அதாவது, போட்டியை நடத்தும் நாட்டு அணியினரே வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

**தங்கக் காலணி**

முதல்நாள் போட்டியில் பிரேசிலும் ஸ்காட்லாந்தும் மோதின; நிறைவுநாள் போட்டியில் பெரும்பாலோர் எதிர்பார்த்தவாறே பிரேசிலும், பிரான்சும் மோதியதில் - பிரான்சு வென்றிருக்கிறது.

இதுவரை நடைபெற்றுள்ள 15 உலகக் கோப்பை போட்டிகளிலும் பங்கேற்ற ஒரேநாடு பிரேசில்தான். இருந்தும் என்ன பயன்?



மற்றொரு அதிசயம் - முதன்முதல் களத்தில் இறங்கிய புதிய நாடான குரோஷியா, மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. அந்த அணியைச் சேர்ந்த சுகேர் என்பவர், அதிகபட்சமாக ஆறு கோல்களைப் போட்டு, தங்கக் காலணி (Boots) பரிசு பெற்றிருக்கிறார்.

போட்டியின் தொடக்கம் முதலே, உலகக் கோப்பையைப் பெறப்போவது பிரேசில்தான் என்று பெரும்பாலானோர் ஆரூடம் கணித்தனர்; செய்தித் தாள்களில் பலவும் அந்நாட்டு அணி வீரர் ரொனால்டோவை ஒரேயடியாகப் பாராட்டி அவ்வாறே எழுதின. இந்த எதிர்பார்ப்பிற்கும் காரணம் இருந்தது.

1930ஆம் ஆண்டு முதல் 1996 வரை எல்லா உலகக் கோப்பைப் போட்டியிலும் பிரேசில் அணியினர்தான் விடாமல் பங்கேற்று வந்தார்கள்.

1994-இல் அமெரிக்காவில் விளையாடி உலகக் கோப்பையைப் பெற்றது முதல், சேர்ந்தாற்போல அவர்களே பல வெற்றிகளையும் குவித்து வந்தார்கள். 1994 முதல் 1997 வரை பிரேசில் கால்பந்தாட்ட அணியே 'ஆண்டின் சிறந்த அணி' என்கிற பட்டத்தையும் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டிருந்தது.

ஆனால் இந்த முறை? 'யானைக்கும் அடிசறுக்கும்' என்கிற உதாரணத்திற்கு ஆளாகிவிட்டார்கள் பிரேசில் அணியினர்.

உலக அளவில் சாதனை படைத்துவிட்டது பிரான்ஸ். பிரான்ஸ் அதிபர் சிராக், வெற்றிபெற்ற தமது நாட்டுக் கால்பந்தாட்ட வீரர் 'ஜிதானி' என்பாருக்குத் தங்கக்கோப்பை வழங்கிப் பாராட்டியுள்ளார்.

கடந்த ஆண்டு அமெரிக்காவில் நடந்த உலகக் கோப்பை கால்பந்து போட்டியில்தான் - டெட்ராய்ட் நகரில் முதன்முதல் உள்ளரங்கில் - ஒளி வெள்ளத்தில் கால்பந்தாட்டப் போட்டி நடத்தப்பட்டது.

ஆசிய நாடுகளில் - ஜப்பான், தென்கொரியா, சவூதி அரேபியா, ஈரான் ஆகிய 4 நாடுகள் மட்டுமே உலகக் கோப்பைக்கான கால்பந்தாட்டப் போட்டியில் பங்கேற்க முடிந்தது.

இன்னும் ஒரு நான்காண்டு கழித்து, அடுத்த உலகக் கோப்பைக்கான கால்பந்தாட்டப் போட்டி முதன்முதல் ஆசியாவில் நடைபெறவிருக்கிறது.



ஜப்பானும், தென்கொரியாவும் இணைந்து - அதை நடத்த இருக்கின்றன.



**கால்பந்தாட்டத்தின் தோற்றம்**

கால்பந்தாட்டம் மிகவும் பழமையான விளையாட்டாகும். சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்னால் சீனாவில்தான் இந்தக் கால்பந்தாட்டம் முதன்முதல் தோன்றியது!

ஒரு கடினமான உருண்டைப் பொருளை இரு அணியினர் உதைத்து விளையாடுவார்கள். 'டுசு-ச்சூ' எனப் போட்டிருந்த அந்த விளையாட்டிற்கு அவர்கள் அப்போது தனிப்பட எந்தச் சட்டதிட்டங்களும் வகுத்து வைத்திருக்கவில்லை.

பிறகு, அதே விளையாட்டைக் கிரேக்கர்கள் 'எப்பிஸ் கிரோ' என்ற பெயரில் விளையாடத் தொடங்கினர்.

ரோமாபுரியில் 'ஹெரா் பாஸ்டம்' என்ற பெயரில் விளையாடலானார்கள். மாமன்னன் ஜூலியஸ் சீசரின் படைவீரர்கள் மூலம் இந்த விளையாட்டு புகழ் பெறலாயிற்று; மெல்லமெல்ல அவர்களால் இந்த ஆட்டம் 12ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்திலும் பரவிடலாயிற்று.

**பெயர் வைத்தவர்கள்**

காலால் உதைத்து விளையாடும் ஆட்டம் என்பதால் இதற்குக் 'கால்பந்தாட்டம்' (Foot Ball) என்று ஆங்கிலேயர்களே முதன்முதலில் பெயர் வைத்தார்கள்; சில சட்டதிட்டங்களையும் வகுத்தார்கள்.

போர் வீரர்கள் இவ்விளையாட்டில் பெரிதும் ஆர்வம் காட்டவே, இதனால் மற்ற வீர விளையாட்டுப் பயிற்சிகள் கெட்டுவிடுமோ என்று அஞ்சினார் மன்னர் இரண்டாம் எட்வர்டு; இதனால் அப்போது இதற்குத் தடையும் விதித்தார்.




அவரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த மூன்றாவது எட்வர்டு, இரண்டாவது ரிச்சர்டு; நான்காம் ஹென்றி ஆகியோரும் இந்தக் கால்பந்தாட்டத்திற்குத் தடைவிதித்தனர். மக்கள் பெரும் ஆர்வத்தோடு இவ்விளையாட்டில் ஈடுபட இத்தகைய தடைகளும் காரணமாக அமைந்தன; நாளடைவில் தடைகள் தகர்ந்தன.

17ஆம் நூற்றாண்டில் ஆட்சிக்கு வந்த இரண்டாம் சார்ல்ஸ் மன்னர், கால்பந்தாட்டம் மக்களிடையே பரவ வழிவகைகள் செய்தார். எல்லா வயதினரும் ஆர்வத்தோடு விளையாடலாயினர்.

**மாணாக்கர் ஈடுபாடு**

19ஆம் நூற்றாண்டின் இடையே பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களெல்லாம் அதற்கென்று நேரம் ஒதுக்கி உற்சாகத்தோடு கால்பந்தாட்டத்தில் ஈடுபடலாயினர்.

1922ஆம் ஆண்டில், சுவிட்சர்லாந்தில் உள்ள ஜூரிச் நகரில் அனைத்து நாடுகளின் கால்பந்துக் கழகம் அமைக்கப்பட்டது; இப்போது அதில் 200 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

**உலகக் கோப்பை**

1930ல், உருகுவே நாட்டில் நடைபெற்ற அனைத்து நாடுகள் கால்பந்தாட்டப் போட்டியின் போதுதான், 'உலகக் கோப்பைப் பரிசு அறிவிக்கப்பட்டது.

தங்கமுலாம் பூசப்பட்ட அந்தக் கோப்பைக்கு 'ஜூல்ஸ் ரிமே' என்று பெயர் சூட்டினர்.

இதற்கு முன்புவரை நடைபெற்றுள்ள கால்பந்தாட்டப் போட்டிகளில் மிகச்சிறந்த கால்பந்தாட்ட வீரர் என்று பெயரெடுத்தவர் பிரேசில் நாட்டைச் சேர்ந்த பீலி என்பவராவார்; குறிப்பிடத்தக்க கோல்களைப் போட்ட பெருமை பெற்றவர் அர்ஜெண்டினா அணித்தலைவராக இருந்த மாரடோனா.

1900-ல், பாரீசில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில்தான் முதன்முதலாகக் கால்பந்தாட்டம் இடம்பெற்றது. அந்த ஆட்டத்தின்போது, பிரான்சை இங்கிலாந்து தோற்கடித்தது.

'இதை ஆண்கள் மட்டும்தான் ஆடலாமா?' என்று கேட்காமல் கேட்டு - 1996-ல் கால்பந்தாட்டத்தில், அர்ஜெண்டினாவில் மகளிர் அணியினரும் இறங்கினார்கள்! ஆனால், அதற்குப் பிறகு பெரிய அளவில் பெண்கள் அணியினரிடையே கால்பந்தாட்டம் வளர்ச்சி பெற்றதாகத் தெரியவில்லை.

## முதல் போட்டியில்...



முதன்முறையாக பிரான்ஸ் உலகக் கோப்பை போட்டியை நடத்தியபோது, கால் இறுதி ஆட்டத்திலேயே இத்தாலியிடம் தோற்று இடமிழந்தது, பிரான்ஸ் அணி 60 ஆண்டுகளுக்குப் பிறகு மறுபடியும் இப்போது பிரான்ஸ் நடத்தியது 16வது உலகக் கோப்பைக்கான கால்பந்தாட்டப் போட்டி. இதற்காக 6,000 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறது பிரான்ஸ் நாட்டு அரசு.

1930ஆம் ஆண்டிலிருந்து உலகக் கோப்பைக்கான இப்போட்டி கோலாகலமாக நடந்து வருகிறது. 1942, 1946 ஆகிய இரண்டு ஆண்டுகள் மட்டும், இரண்டாம் உலகப் போர் காரணமாக கால்பந்தாட்டப் போட்டி எங்கும் நடத்தப்படவில்லை.

கிரிக்கெட் போட்டியைப் போல 12 நாடுகள் மட்டுமே சம்பந்தப்பட்ட விளையாட்டல்ல இது; 172 நாடுகள் இப்போட்டியில் கலந்துகொள்ள விண்ணப்பித்திருந்தன. பலவகைத் தகுதிகள் ஆராயப்பட்ட பிறகு, கடைசியாக 32 நாடுகள் மட்டுமே அவற்றில் விளையாடத் தேர்ந்தெடுக்கப் பட்டன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

## இந்தியாவின் நிலை

நம் இந்திய நாடோ இந்தப் போட்டிக்காக விண்ணப்பிக்கவும் இல்லை; தேர்வு பெறவும் இல்லை. காரணம் வேடிக்கையானது. 1948-ல் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற இந்தியக் கால்பந்தாட்ட அணியினர் காலில் பூட்ஸ் அணியாமல் விளையாடினராம்; காரணம் அப்படியெல்லாம் நம்மவர்களுக்கு விளையாடிப் பழக்க மில்லை என்பதுதான்.

உலகக் கோப்பைப் போட்டியிலும் வெறுங் காலுடனேயே விளையாட விருப்பம் தெரிவித்ததாகவும், அதற்கு அனைத்து நாடுகள் கால்பந்தாட்டச் சம்மேளனம் மறுத்துவிட்டது என்றும் சொல்லப்படுகிறது.

இவ்வாறான நிலைமை மாறவேண்டும்; உலகளவில் நடைபெற்ற ஒரு போட்டியைத் தொலைக்காட்சியிலும், பெரும் செலவிட்டு நேரிலும் பார்த்து மகிழ்ந்த பார்வையா ளராகவே இத்தனையாண்டுக் காலமும் நாம் இருந்து வந்திருக்கிறோம்.

கிராமச் சிறுவர்களும் கூட காகிதத்தைக் கசக்கியும், வைக்கோலை உருண்டையாகத் திரட்டி சணலால் கட்டியும் வீதிகளில் கால்பந்தாடுவதை இப்போதும் நாம் பார்க்கிறோம். ஆர்வம் மிக்க அந்த இளைஞர்களைப் போன்றவர்களைத் தேடிப்பிடித்து ஊக்கப்படுத்தியாவது - 2002-ல் வரவிருக்கும் உலகக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டியில் விளையாடும் தகுதியை நாமும் பெற்றாக வேண்டும்.

முதல்முறையாக உலகப் போட்டியில் ஈடுபட்டே, இந்த முறை மூன்றாவது இடம் பெற்றிருக்கிற மிகச் சிறிய நாடான குரோஷியாவைப் பார்த்தாவது நாமெல்லாம் வேகம் கொள்ளவேண்டும்.

ஒருகாலத்தில் ஹாக்கி விளையாட்டில் இந்தியாவுக்கு நிகரில்லை என்ற நிலைமை இருந்தது.

பிறகு, கிரிக்கெட் விளையாட்டில் அவ்வாறான நிலை இருந்து - அதிலும் ஊசலாட்டம் ஏற்பட்டிருக்கிறது.

அண்மைக்காலமாக டென்னிஸ் விளையாட்டு மோகம் அதிகரித்து வருகிறது.

இதெல்லாம் கூடாது என்று கூறவில்லை. எல்லாம் இருக்கட்டும்; உலகளாவிய தங்கக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டியில் பங்கேற்று உலகச் சாதனை படைப்பதற்கு அதெல்லாம் நிகராகுமா?

- பி.எல்.ராஜேந்திரன்

பெருமைமிக்க 16-வது உலகக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டி நடைபெற்ற பாரீஸின் - செயின்ட் டெனிஸ் நகரக் கால் பந்தாட்ட ஸ்டேடியமான 'ஸ்டேட் டி. பிரான்ஸ் ஸ்டேடியம்' - 80 ஆயிரம் பேர் உட்கார்ந்து பார்க்கக் கூடிய வசதியோடிருந்தது.

33 நாட்கள் நடைபெற்ற இந்தப் போட்டியில் மொத்தம் 64 ஆட்டங்கள் நடைபெற்றன. அத்தனை நாட்களுக்குமாக 25 இலட்சம் டிக்கட்டுகள் அச்சிடப்பட்டன. அவற்றில் 60 சதவிகிதம் பிரஞ்சு ரசிகர்களுக்கு எனப் போட்டி அமைப்பாளர்களால் முடிவு செய்யப்பட்டது. மீதமுள்ளவையே வெளிநாட்டினருக்கு.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்

பதிவு எண். M. 86.
Licence No.TN/MS(C)/P












## நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98




# தருமபுரி மாவட்டச் சிறப்பிதழ்

### அட்டைப் படம்

**முதல் அட்டை**

சென்னையில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.கே.ஆர். நாராயணன் அவர்கள்.

**நான்காம் அட்டை**

10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் மாநில - மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற 235 மாணவ - மாணவிகளுக்கு மேல்படிப்புச் செலவை அரசே ஏற்கும் விழா.

### திருக்குறள்

*அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு.*

அன்பு இல்லாதவர், எல்லாம் தமக்கே என உரிமை கொண்டாடுவர்; அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவர்.

*(கலைஞர் உரையிலிருந்து...)*


**தமிழரசு**
திருவள்ளுவர் ஆண்டு 2029
ஆடி
ஜூலை 16-31, 1998
மலர் : 29 இதழ் : 2
விலை ரூ.3




# "இந்தியாவிலேயே முதன்முதலாக மகளிர்க்கான உயிர் தொழில் நுட்பவியல் பூங்கா அமைப்பதில் தமிழக முதல்வரின் தொலைநோக்குப் பார்வை வெகுவாகப் பாராட்டுக்குரியது!"

- குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் உரை



"இந்தத் தொழில்நுட்ப மையத்தை இன்றைக்கு நான் துவக்குவதிலும் பெண்கள் தொழில் முனைவோர்களுக்கான உயிர் தொழில் நுட்பவியல் பூங்காவிற்கான கால்கோளை அமைப்பதிலும் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

## முதலமைச்சருக்குப் பாராட்டு

இந்திய அரசின் உயிர் தொழில்நுட்பவியல் துறை மற்றும் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்துடன் தொடர்பு கொண்டு இதற்கான முயற்சியில் ஈடுபட்டதற்காகத் தமிழக முதலமைச்சரை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதில் தலைவர்கள் அதிக அக்கறை எடுத்துக் கொண்டுள்ளனர். மகாத்மா காந்தி அடிகளும், பிரதமர் நேருவும் இயற்கைச் சூழலை வலியுறுத்தியுள்ளனர்.

வாய்ப்பிற்கான வசதிகள் ஏராளமாக உள்ளதைப் பல்வேறு உதாரணங்கள் மூலம் தெரிவிக்கலாம். இந்த ஆய்வுமையக் கட்டடத்திலும் அருகாமையில் உள்ள கட்டடத்திலும் சூரிய சக்தி மூலம் தயாரிக்கப்படும் மின்சாரத்தைப் பயன்படுத்தி, அங்குள்ள கணிப்பொறிகளை எவ்விதத் தடங்கலும் இன்றிச் செயல்பட வைக்கின்றனர். இதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

## தமிழக அரசைப் பாராட்டுகிறேன்

சூரிய ஒளி மூலமும், காற்றாடி மூலமும் மின்சாரம் உற்பத்தி செய்வதில் முன்னணியில் இருந்துவரும் தமிழக அரசை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். மரபு சாரா எரிசக்தி துறையையும் இதற்காக நான் பாராட்டுகிறேன்.

* இயற்கை வளத்திற்கு குறிப்பாகத் தண்ணீர் உபயோகத்திற்கு மத்திய அரசு அதி முக்கியத்துவம் கொடுத்து வருவதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதேசமயம் மாறிவரும் மழையின் அளவால் எதிர்பாராத சூழல்கள் இந்தியாவில் ஏற்பட வாய்ப்புள்ளது. அதை எதிர் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளைச் செய்ய நாம் தயாராக இருக்க வேண்டும். தண்ணீரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்வதற்காகத்தான் பஞ்சாயத்து ராஜுக்கு (உள்ளாட்சி மன்றங்களுக்கு) அதிகாரம் அளித்துள்ளோம்.

## பூங்காவிற்கு அடிக்கல்

இங்கு மைய அரசுடன், மாநில அரசும், சுவாமிநாதன் ஆராய்ச்சி மையமும் ஒருங்கிணைந்து ஏற்படுத்தியுள்ள இந்த மகளிருக்கான பொன்விழா உயிர் தொழில் நுட்பவியல் பூங்காவிற்கான அடிக்கல்லை நாட்டுவதற்காக, என்னை அழைத்த தமிழக முதலமைச்சருக்கு எனது பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயிர்தொழில் நுட்பவியல் துறையில், குறிப்பாக உடல் பாதுகாப்பு, வேளாண்மைத் துறையில் ஆராய்ச்சி செய்து, வளர்ச்சி பெறச் செய்வதில் அரசு முக்கிய முயற்சிகளை எடுத்துள்ளது.

ஊரக மற்றும் நகர்ப்புற மகளிர்க்கு, மகளிர் தொழில் முனைவோர்க்கு, மகளிர் தொழில்நுட்பத் துறையினர்க்கு, பெண் விஞ்ஞானிகளுக்கு என அனைத்துத் தரப்பு மகளிர்க்கும் முறையான பயிற்சி அளிப்பதில் உலகிலேயே முதன் முறையாக இந்த சென்னை உயிர் தொழில்நுட்பவியல் நிலையம் ஒரு எடுத்துக்காட்டாகத் திகழும். அந்த வகையில் மற்ற முக்கிய நகரங்களுக்குச் சென்னை ஒரு எடுத்துக்காட்டாகத் திகழும் என நான் நம்புகிறேன்.

இந்த சென்னை உயிர் தொழில் நுட்பவியல் பூங்கா சுற்றுச் சூழலுக்குச் சிறந்து விளங்கும் என்பதிலும், புதிய யுக்திகளுடன் விவசாயிகள் போதிய வாய்ப்பு இல்லாத நிலையிலும் அதிகம் உற்பத்தி செய்ய ஒத்துழைப்பு நல்கும் என்பதிலும் நம்பிக்கை கொண்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மகளிர் தொழில் முனைவோர்க்கு உயிர் தொழில் நுட்பவியல் பூங்கா அமைப்பதில் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்ட தமிழக முதல்மைச்சரை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

*- மேதகு குடியரசுத்தலைவர் திரு.கே.ஆர்.நாராயணன் அவர்கள் மகளிர் உயிர் தொழில்நுட்பவியல் பூங்காவிற்கான அடிக்கல்லை நாட்டியும், ஜெ.ஆர்.டி.டாடா தொழில்நுட்ப மையத்தைத் துவக்கிவைத்தும் ஆற்றிய உரை.*



# உயிர் தொழில்நுட்பம் - தகவல் தொடர்புத் துறைகளுக்கு தமிழக அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

*- முதலமைச்சர் கலைஞர்*

*"தமிழ்நாட்டிற்கு இன்று ஒரு முக்கியமான நாளாகும். இந்திய நாட்டில் மகளிருக்கென்று முதன்முதலாக உயிர் தொழில் நுட்பவியல் பூங்கா ஒன்று இங்கு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.*

*இந்த முன்னோடித் திட்டத்திற்குக் குடியரசுத் தலைவர் அடிக்கல் நாட்டுவது நமது மகிழ்ச்சியை மேன்மேலும் பன்மடங்காக்குகிறது.*

*மகளிருக்கான இந்தத் தொழில் நுட்பவியல் பூங்காவை அமைப்பதற்குத் திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுத்ததற்காக மத்திய அரசையும், எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தையும், "டிட்கோ" நிறுவனத்தையும், நான் பாராட்டுகிறேன்.*

*நமது நாட்டின் சுதந்திரதினப் பொன்விழா ஆண்டில், இந்த உயர் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கப்படுவது மிகவும் சாலப் பொருத்தமுடையதாக உள்ளது.*




*மகளிருக்கென்றே தனியாக உயிர் தொழில்நுட்பவியல் பூங்கா ஒன்றை அமைப்பது குறித்து, தமிழ்நாடு அரசின் ஆதரவைக்கோரி, டாக்டர் சுவாமிநாதன் கடந்த ஆண்டு என்னைச் சந்தித்தபோது, இது உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும் எனக் கருதி நான் ஆணையிட்டதை இப்போது நினைவுபடுத்த விரும்புகிறேன்.*

*தொழிற்சாலைகளை அமைத்து, அவற்றை வெற்றிகரமாக நிர்வகிப்பதில் நம் மகளிருக்குள்ள திறமை குறித்து எவ்வித ஐயப்பாடும் யாருக்கும் இல்லை. இது மகளிர், தங்களுக்குள் புதைந்து கிடக்கும் தனித்தன்மைகளை வளர்த்து, தங்களுடைய திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ள உதவும் என நான் நம்புகிறேன்.*

*டாக்டர் சுவாமிநாதன் அவர்கள், இத்திட்டத்தைத் தொடரவும், பணிகளை மேற்கொள்ளவும் ஊக்கமளிக்கும் வகையில் இத்திட்டத்திற்காக, இருபது ஏக்கர் நிலம் உடனடியாக ஒதுக்கப்பட்டது.*

*27.3.1998 அன்று 1998-99 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், இந்தப் பூங்காவை அமைத்திட டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களுக்கு இந்த அரசு உதவும் என்று நான் அறிவித்திருந்தேன்.*

தமிழ்நாடு அரசின் சார்பில், "டிட்கோ" நிறுவனம் இத்திட்டத்திற்குப் பங்கு மூலதனத்தை அளித்துள்ளது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதிலும் டிட்கோ உதவி வருகிறது. தமிழ்நாடு அரசும் இத்திட்டத்திற்குத் தேவைப்படும் நிலத்தை வழங்கியுள்ளது.

இந்திய மனிதவள அமைச்சர் மாண்புமிகு டாக்டர் முரளி மனோகர் ஜோஷி அவர்கள், இந்திய அரசு உயிர் தொழில் நுட்பவியல் துறையின் மூலம், பெண்களுக்கென்றே இந்த உயிர் தொழில் நுட்பப் பூங்காவை ஏற்படுத்துவதற்குத் தமிழ்நாட்டை முதலாவது மாநிலமாகத் தேர்ந்தெடுத்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்களுக்கான, பொன்விழா உயிர் தொழில் நுட்பவியல் பூங்கா என்ற பெயரில் நிறுவனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், இந்த நிறுவனத்தில் பத்து கோடி ரூபாய்க்கும் கூடுதலாக முதலீடு செய்யக் கருதப்பட்டுள்ளதாகவும் எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பூங்கா சுமார் 1,000 மகளிருக்கு வேலை வாய்ப்பை அளிக்கக் கூடும் என்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

1988 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட இந்த நிறுவனம், 10 ஆண்டுகள் என்ற குறுகிய கால அளவில் மிகப் பெரியதோர் ஆராய்ச்சி அமைப்பாக வளர்ந்துள்ளது.

ஜப்பான் நாட்டின் ''அசஹர் கிளாஸ் பவுண்டேஷனிடமிருந்து" "புளு பிளாண்ட்" பரிசை 1996 ஆம் ஆண்டில் ஆசியாவிலேயே முதன்முதலாகப் பெற்றது, இந்த நிறுவனமாகும். இந்நிறுவனம், புதிய தொழில்நுட்பப் புதுமைகளுக்கான நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதையே உயரிய நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதையும் நான் அறிகிறேன்.

சமுதாய ரீதியிலும், பொருளாதாரத்திலும் பின்தங்கியுள்ள பிரிவு மக்களுக்கு, அறிவியல் ஆய்வின் பலன்கள் கிடைக்கச் செய்வதே இந்நிறுவனத்தின் நோக்கமாகும்.

மகளிர் - குழந்தை நலன்தொடர்பான பணிகளுக்கும், பசிப்பிணியை அறவே நீக்கும் பணிகளுக்கும் இந்த ஆராய்ச்சி மையம் முன்னுரிமை அளிக்கிறது.

சுவர்களுக்குள் மட்டும் முடங்கிக் கிடக்காமல், பரந்த கருத்துக்களுடன் இந்த ஆராய்ச்சி மையம், மிகவும் புதிய அணுகுமுறையுடன் செயல்பட்டு வருகிறது. அதனை இந்த ஆராய்ச்சி மையத்தின் செயல்பாடுகள் கிராமங்களுக்கும், பல நிறுவனங்களின் மூலமாகச் சென்றடைவது புலப்படுத்துகிறது.

தேசியப் பன்னாட்டு, பொது மற்றும் தனியார் அமைப்புகள் இம்மையத்திற்கு நிதி வழங்குகின்றன.

இம்மையம் பல்வேறு தேசிய, பன்னாட்டு அமைப்புகளிடமிருந்து பெற்றுள்ள அங்கீகாரமே இதற்குக் காரணமாகும்.

இந்திய குடியரசுத் தலைவர், ஜே.ஆர்.டி. டாட்டா உயிர் வாழ்க்கைச் சூழல் தொழில் நுட்ப மையத்தைத் தொடங்கி வைக்கும் இந்நிகழ்ச்சியில் நானும் கலந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்நாடு அரசும் இம்மையத்திற்காக இரண்டு ஏக்கர் நிலம் அளித்துள்ளது.

பாரம்பரியத் தகவல் தொடர்பு முறைகளுடன் நவீன முறைகளையும் இணைத்து இம்மையம் பயிற்சி அளிக்கக்கூடிய வசதிகளை உருவாக்கும் என்றும் நான் அறிகிறேன்.

கணினி அடிப்படையிலான பயிற்சியும், அத்துடன் மரபு வழி மக்கள் தொடர்பு முறையை இணைத்து இந்த ஆராய்ச்சி மையம் மேற்கொள்ளக்கூடிய பயிற்சி முறை தமிழ்நாட்டில் பின்பற்றப்படுவதற்குப் பொருத்தமான முறையாக இருக்கும் என நான் நம்புகிறேன்.

சுற்றுச்சூழல் கெடுதல், மக்கள் தொகைப் பெருக்கம் மற்றும் இவை போன்றவை உட்பட சில சமகாலத்து வளர்ச்சி நிலையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு, நிரந்தரமான நிவாரணத்தைப் பெற்றுத் தருவதில் இந்த ஆராய்ச்சி மையம் உறுதியுடன் இருக்கும் என்பதைக் குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மையத்திற்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக தாராளமாக நிதி உதவி வழங்கியுள்ள திரு. சூராப்ஜி டாட்டா அறக்கட்டளைக்கும், மக்களின் முன்னேற்ற நடவடிக்கைகள் - ஊரகத் தொழில் நுட்பவியல் அமைப்புக்கும்

**ம**களிர்க்கான பொன்விழா உயிர் தொழில்நுட்பவியல் பூங்காவிற்கான கால்கோள் விழாவும், ஜெ.ஆர்.டி.டாடா சூழல் தொழில்நுட்ப மையத் துவக்க விழாவும் 29.7.98 அன்று தரமணியில் உள்ள எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தில் நடந்தது.

விழாவிற்கு மேதகு ஆளுநர் செல்வி. பாத்திமா பீவி தலைமை ஏற்றார்.

தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எட்டாவது ஆண்டறிக்கையை வெளியிட, குடியரசுத் தலைவர் திரு.கே.ஆர்.நாராயணன் அதைப் பெற்றுக்கொண்டார்.

நிறைவாக - குடியரசுத்தலைவர் கே.ஆர்.நாராயணன் மகளிர் உயிர் தொழில் நுட்பவியல் பூங்காவிற்கான அடிக்கல்லை நாட்டியும் ஜெ.ஆர்.டி.டாட்டா சூழல் தொழில் நுட்ப மையத்தைத் துவக்கி வைத்தும் உரையாற்றினார்.






எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டாண்மை நடவடிக்கைகளிலும், ஆராய்ச்சிகளிலும் பங்கு கொள்வதன் மூலம், இந்த மையம், வேலைவாய்ப்பைப் பெருக்கக்கூடிய பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கக் கூடிய முறைகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

நம்முடைய கிராமப் புறங்களில் காணப்படும் கருத்துப் பரிமாற்ற முறைகளைப் பயன்படுத்திக் கருத்துக்களைப் பரப்புவதில் ஒரு புதிய முயற்சியை இந்த மையம் உருவாக்கும் என்று நான் நம்புகிறேன்.

தமிழ்நாடு அரசு, தொழில்மயமாக்கும் திட்டங்களை விரைந்து செயல்படுத்தி வருகிறது.

எனவே, அடுத்த நூற்றாண்டில் நம் நாட்டை முன்னணியில் நிறுத்தக்கூடிய இரண்டு எழுச்சிமிகு துறைகள் - உயிர் தொழில்நுட்பவியல் துறையும், தகவல் தொழில்நுட்பவியல் துறையுமே என்பதை நாம் அனைவரும் நன்கறிவோம்.

இவ்விரு துறைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கக்கூடிய தொடர் நடவடிக்கைகளை நாம் எடுத்துள்ளோம்.

இந்தியாவிலும், வெளிநாடுகளிலுமுள்ள சிறந்த தொழிலதிபர்கள் இத்துறைகளில் முதலீடு செய்து, சாதனை படைக்க, நாங்கள் என்றும் உண்மையான உள்ளார்ந்த ஆதரவை அளிப்போம் என்ற உறுதியை இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூற்றாண்டின் கடைசி இந்திய அறிவியல் காங்கிரஸ் மாநாடு 1999-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில், சென்னையில் நடைபெறும் என்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

அண்ணா பல்கலைக்கழகம் முன்நின்று நடத்தும் இந்த மாநாட்டின் வெற்றிக்கு அனைத்து ஆதரவையும் இந்த அரசு அளிக்கும்.

ஆக்கப்பூர்வமான, பயனளிக்கத்தக்க கூட்டாண்மை ஒன்றை நாம் உருவாக்குவோம். அது அனைவருக்கும் பயனளிப்பதோடு, தமிழ்நாடு வளமுடைய மாநிலமாக மாறுவதற்கும் வழிவகுக்கும்.

இந்த உயிர் தொழில்நுட்பவியல் பூங்காவை அடுத்த ஆண்டில் தொடங்கி வைக்க நான் விழைகிறேன். இனிவரும் ஆண்டுகளில் இந்த ஆராய்ச்சி மையமும், இது தொடர்புடைய மற்ற அமைப்புகளும் பெரும் வெற்றி பெற நான் வாழ்த்துகிறேன்.

இந்த சிறப்பு வாய்ந்த மையங்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடியரசுத் தலைவர் அவர்களுடைய திருக்கரங்களால் திறந்து வைக்கப்படுகின்ற இந்த பவுண்டேஷன்கள் எல்லாமே குடியரசுத் தலைவருடைய பரந்த உள்ளம் போல் விரிந்து பெருகி, குறிக்கோளில் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையோடு என் வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கிறேன்.

- இவ்வாறு முதலமைச்சர் கலைஞர்
அவர்கள் உரையாற்றினார்.



# கலைஞர் ஆட்சியில் தழைத்தோங்கும் தருமபுரி மாவட்டம்

கோடையிலே
இளைப்பாறிக்கொள்ளும்
வகைகிடைத்த குளிர் தருவாக...
தரு நிழலாக...
நிழல் கனிந்த கனியாக...
ஓடையிலே ஊறுகின்ற
தீஞ்சுவைத் தண்ணீராக...
உகந்த தண்ணீரிடை மலர்ந்த
சுகந்த மணமலராக...
மேடையிலே வீசுகின்ற
மெல்லிய பூங்காற்றாக...
மென்காற்றில் விளைசுகமாக...
சுகத்திலுறும் பயனாக...

ஆறுகோடித் தமிழர்கள் வாழும் அன்னைத் தமிழகத்தின், அற்புதத் தலைவராம் முத்தமிழறிஞர் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தருமபுரி மாவட்டம் பெற்ற சிறப்புகள் அளவற்றவை. மிகவும் பின்தங்கிய மாவட்டமாகிய தருமபுரி மாவட்டம், முதலமைச்சர் கலைஞர் அவர்களின் பல்வேறு வழிகாட்டும் வளர்ச்சித் திட்டங்களால் வளம்பெற்று வருகிறது.

**கலைஞரின் சிந்தையில் உதித்த சமத்துவபுரம்**

இந்திய சுதந்திரத் திருநாள் பொன்விழா ஆண்டினையொட்டி, அனைத்து மதத்தினரும், அனைத்துச் சாதியினரும் ஒரே இடத்தில் ஒற்றுமையோடு, நல்லிணக்கத்துடன் வாழ்ந்திட வழிவகுக்கும் முதலமைச்சர் கலைஞரின் சிந்தையில் உதித்த சமத்துவபுரம் திட்டம், இந்தியத் துணைக் கண்டத்திற்கே



திரு.வ.முல்லைவேந்தன் அவர்கள்
மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்





வழிகாட்டும் திட்டமாகத் தமிழகம் முழுவதும் விரைந்து செயலாக்கம் பெறுகிறது. இதனடிப்படையில் தருமபுரி மாவட்டத்தில் இரண்டு இடங்களில் சமத்துவபுரம் உருவாக்கப்படுகின்றது.

பாப்பிரெட்டிபட்டி வட்டத்தில் அரூர்-சேலம் நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள அலமேலுபுரத்தில் 9.57 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு சமத்துவபுரம் உருவாக்கும் பணிகள் நடைபெறுகின்றன.

ஒசூர்-பாகலூர் நெடுஞ்சாலையை ஒட்டி, ஒசூர் நகரிலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள நல்லூர் கிராமத்தில் 17.40 ஏக்கர் நிலத்திலும் சமத்துவபுரம் உருவாக்கும் பணிகள் நடைபெறுகிறது.

இந்த இரு சமத்துவபுரங்களிலும் 5 செண்ட் வீதம் 100 வீட்டு மனைகள் அமைக்கப்பட்டு ஆதிதிராவிடர்கள் 40, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 25, பிற்படுத்தப்பட்டோர் 25, இதர வகுப்பினருக்கு 10 என்ற விகிதாச்சார அடிப்படையில் பயனாளிகள் குடியமர்த்தப்படுவார்கள். ஒவ்வொரு வீட்டிற்கும் அரசு மானியமாக ரூ.35 ஆயிரமும், பயனாளிகளுக்குக் கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்கள் மூலமாகக் குறைந்த வட்டியில் ரூ.20 ஆயிரமும் ஆக மொத்தம் ரூ.55,000 மதிப்பீட்டில் ஒவ்வொரு வீடும் 327 சதுர அடியில் தருமபுரி கட்டிட மையத்தின் மூலம் கவினுற உருவாகி வருகிறது.

**அடிப்படை வசதிகள்**

ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் 3 ஆழ்துளைக் கிணறுகள் தோண்டி, நீரேற்றும் அறை கட்டி முடிக்கப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச்சாலை, ஒரு இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டில் பூங்கா ஆகியவை அமைக்கப்படுகின்றன. ரூ.5 இலட்சத்தில் சமுதாயக் கூடம் அமைக்கப்படுகிறது. தொலைக்காட்சிப் பெட்டி அறை ரூ.20 ஆயிரத்திலும், நூலகம் ரூ.1 இலட்சத்து 50 ஆயிரத்திலும், சத்துணவுக் கூடம் ரூ.1 இலட்சத்து 30 ஆயிரத்திலும், குடிமைப்பொருள் வழங்கு கடை ரூ.1 இலட்சத்து 32 ஆயிரம் மதிப்பீட்டிலும், துவக்கப்பள்ளிக் கட்டடம் ரூ.2 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டிலும் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஆக மொத்தம் இந்த வகையில் தலா 24 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாய் அரசு மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இப்பணிகள் துரிதகதியில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு ஏழைப்பெண்கள் திருமண நிதியுதவித்திட்டம்:**

பெண்களின் முன்னேற்றத்திற்கென, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 1989-90ல் வழிகாட்டும் திட்டமாக - எட்டாம் வகுப்புவரை படித்த ஏழைப்பெண்களுக்கு ரூ.5,000 திருமண நிதிஉதவி வழங்கிடும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1996ல் நான்காம் முறையாகத் தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கலைஞர் அவர்கள், இந்த நிதியுதவி ரூ.5,000/-த்தை ரூ.10,000/- ஆக உயர்த்தி வழங்கிட ஆணை பிறப்பித்தார்.

தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில் 2,195 பேர் மட்டுமே பயனடைந்துள்ளனர். ஆனால் கலைஞர் ஆட்சி மலர்ந்தபின், இவ்விரண்டாண்டுகளில் மட்டும் 2,949 ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவியாக 2 கோடியே 94 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிதியாண்டில் 1,853 ஏழை, எளிய பெண்களுக்கு 1 கோடியே 85 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரையில் 107 ஏழைப் பெண்கள் பயனடைந்துள்ளனர்.



எஞ்சியுள்ள 1,750 ஏழைப்பெண்களுக்கு 10.8.98 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திருக்கரங்களால் ஒரு கோடியே 75 இலட்சம் ரூபாய் வழங்கப்படவுள்ளது என்பது பெரு மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.



### நமக்கு நாமே

இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டும் வகையில், மக்களாட்சி முறைமைக்கே மணிமகுடமாகப் பயனாளிகளே தங்களுக்குத் தேவையான அடிப்படை வசதியைத் தாங்களாகவே தேர்வு செய்து, திட்டப்பணிகளில் பங்கேற்கும் திட்டம்தான் கலைஞரின் சிந்தையில் உதித்த "நமக்கு நாமே திட்டம்".

அவற்றில் 5 கட்டடங்கள், 106 சாலைகள், சத்துணவு மையம் பழுது பார்த்தல், சிறுபாசன ஏரிகள் பழுதுபார்த்தல், பள்ளிக் கட்டடங்களுக்குச் சுற்றுச்சுவர் அமைத்தல் ஆகிய பிற பணிகள் செயல்படுத்தப்பட்டன.

காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் பிக்கனஹள்ளி கிராமத்தில் 6 கி.மீ. சாலை அமைப்புப் பணியும், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் தொலுவபெட்டா கிராமத்தில் 6 கி.மீ. சாலை அமைத்ததும் குறிப்பிடத்தக்க பணிகளாகும்.

### நபார்டு மூலம் நலன்

தேசிய விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியான 'நபார்டு' மூலம் தருமபுரி மாவட்டம் பெற்றுவரும் நலம் அளவிடற்கரியதாகும்.

குறிப்பாகச் சொல்லுவதானால் - இம்மாவட்டச் சாலை வசதிகளைப் பெருக்க மாநில அரசு எடுத்துள்ள சீரிய பணியில் நபார்டும் தன்னுடைய பங்கை ஆற்றி வருகிறது.

இதுவரை சுமார் 250 கிலோ மீட்டருக்கு மேலான கிராமப்புறச் சாலைகள் அமைக்க ரூ.10 கோடி வரை இந்த மாவட்டத்திற்கு நபார்டு நிதியுதவி அளித்திருக்கிறது. அது மட்டுமல்ல; தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட ரூ.3.69 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

பெண்ணாகரம் ஒன்றியத்தில், ரூ.7 இலட்சம் செலவில் நீர்த்தேக்கம் ஏற்படுத்தவும் நபார்டு நிதி உதவியுள்ளது.

### நியாயவிலைக் கடைகள்

நாடு நலம் பெறவும், நலிவுற்ற மக்கள் வாழ்வு வளம்பெறவும் தக்க பல திட்டங்களை நாடுபோற்றத் தீட்டிச் செயல்படுத்திவரும் நமது முதல்வர் கலைஞர் அவர்களால், நாடெங்கும் உணவுப் பொருள் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வகை செய்திடும் நியாயவிலைக் கடைகள் பல திறக்கப்பட்டுள்ளன.

13.5.96க்கு முன்பு தருமபுரி மாவட்டத்தில் 803 நியாய விலைக் கடைகள் இயங்கிவந்தன. 107 பகுதிநேர நியாயவிலைக் கடைகள் இயங்கிவந்தன. மகளிர் நியாயவிலைக் கடைகள் 13 நடைபெற்றன.

கடந்த ஆட்சியின்போது இம்மாவட்டத்தில் எங்கும் எந்த ஒரு நியாயவிலைக் கடையும் திறக்கப்படவில்லை.

ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள், ஆட்சியில் பொறுப்பேற்றபின், தருமபுரி மாவட்டத்தில் முழுநேர நியாயவிலைக் கடைகள் 26 தொடங்கப்பட்டன. பகுதிநேர நியாயவிலைக் கடைகள் 179 திறக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

### பொதுச்சுகாதாரம்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது முதுமொழி. அத்தகைய நல்வாழ்வு தமிழக மக்களுக்கெல்லாம் அமைந்திடத் தளராத முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது கலைஞர் அரசில் இந்த வகையில் தருமபுரி மாவட்டம், எந்த ஒரு மாவட்டத்திற்கும் இளைத்ததல்ல என்ற நிலை நாளொருமேனி பொழுதொரு வண்ணம் வலுப்பெற்று வருகிறது.

இம்மாவட்டத்தில் 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு எனக் கட்டப்பட்டிருந்த கட்டடங்கள் 12 மட்டுமே! ஆனால், - "பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்தூட்டும்" பாச உணர்வோடு நாட்டு மக்கள் நலன் காத்துவரும் நம் முதல்வர் கலைஞர் ஆட்சி மலர்ந்தபின், இந்த மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள கிராம சுகாதார நிலையங்களுக்கான புதிய கட்டடங்களோ 42 ஆகும்!

### பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன்

கலைஞர் அவர்கள் ஓய்வு ஒழிச்சலின்றி அல்லும் பகலும், அயராது பாடுபட்டு சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவினர்க்கெனப் பல்வேறு வழிகாட்டும் திட்டங்களைச்

தொடர்ச்சி 41 - ஆம் பக்கம்





# தருமபுரி மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

தருமபுரி மாவட்டம், அடிப்படையில் கிராமப்புறப் பகுதிகளை அதிகமாகக் கொண்டதாகும். இம்மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பான 9616 சதுர கி.மீட்டரில் 5342 சதுர கி.மீட்டர் ஊரகப் பகுதியாகும். இம்மாவட்டத்தில் வாழ்கின்ற மொத்த மக்கள் தொகையில், அதாவது 24,28,596ல் 21,87,921 மக்கள் இம்மாவட்டத்தின் கிராமப்பகுதிகளில் வாழ்கின்றனர். பரந்து விரிந்து காணப்படும் இம்மாவட்டத்தில் பல்வேறு கிராமப் பகுதிகளில் இன்றைய நிலையிலும் அடிப்படை வசதிகள் முழுவதும் இல்லாத நிலையில் உள்ளன. இந்த ஊரகப் பகுதிகள் முன்னேற்றம் அடைந்தால் மட்டுமே தருமபுரி மாவட்டம் வளர்ச்சி அடைய முடியும்.

இதனைக் கருத்திற்கொண்டு அரசு ஒவ்வொரு ஆண்டும் சுமார் ரூ.40 கோடி ஊரக வளர்ச்சி மேம்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்து ஊரகப்பகுதியில் வாழும் மக்களுக்கு அடிப்படை வசதிகளைப் பெருக்கவும், வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்கின்ற மக்களின் வசதிகளை மேம்படுத்தவும் செலவிடுகிறது.

இம்மாவட்ட அளவில் ஊரக வளர்ச்சிப் பணிகளை ஒருங்கிணைத்துச்செயல்படுத்தும் பணியினைத்தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம் என்ற அமைப்பு மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு செயலாற்றிவருகிறது.



இம்மாவட்டத்தில், மொத்தம் 588 ஊராட்சிகளும், 18 ஊராட்சி ஒன்றியங்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளால் நிர்வாகிக்கப்படுகின்றன.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

கடந்த ஆண்டு சுமார் 8282 குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் அடைந்துள்ளனர். இதற்காக ரூ.323.384 இலட்சம் மானியமாக இம்மாவட்டத்தில் அரசினால் விடுவிக்கப்பட்டுள்ளது. அதற்கு இணையாக ரூ.639.621 இலட்சம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலமாகக் கடனாக விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டும் சுமார் 9230 குடும்பங்களுக்கு உதவ இத்திட்டத்தின்கீழ் ரூ.1051.34 முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ரூ.365 தொகை மானியமாகவும், ரூ.686.345 தொகையைத் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடனாகவும்வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம்

கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளித்திடும், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்திற்குக் கடந்த ஆண்டு (1997-98) ரூ.773.44 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. அதனால் 22.84 இலட்சம் வேலை நாட்கள் உருவாக்கப்பட்டன. மேலும் 1979 பணிகள் எடுக்கப்பட்டு கிராம வளர்ச்சிக்கு நிறைவேற்றப்பட்டன. இதன் அடிப்படையில் 1998-99ஆம் ஆண்டு இம்மாவட்டத்திற்கு ரூ.837.11 இலட்சம் பெறப்பட்டு ஊராட்சி ஒன்றியங்கள் (15%), ஊராட்சிகள் (70%) மாவட்ட ஊராட்சி (15%) ஆகியவைகளுக்கு விகிதாச்சார முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டு நிதிஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஊராட்சி அமைப்புகள் தங்களின் பகுதி வளர்ச்சிக்காக மொத்தம் 1993 பணிகளைத் தேர்ந்தெடுத்து இப்பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

### வேலை உறுதியளிப்புத் திட்டம்

1997-98ஆம் ஆண்டு இம்மாவட்டத்திற்கு ரூ.2006.250 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 1110 பணிகள் எடுத்துச் செய்யப்பட்டன. இம்மாவட்டத்திலுள்ள ஊராட்சிகள் அனைத்தும் வறட்சிக்கு இலக்காகும் பகுதியாக அமைந்துள்ள காரணத்தினால் ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் இத்திட்டம் நிறைவேற்றப்படுகின்றது. இம்மாவட்டத்தில் 28.51 இலட்சம் மனித நாட்கள் உருவாக்கப்பட்டு 2.68 இலட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டது. 1998-99ஆம் ஆண்டு ரூ.2006.25 இலட்சத்திற்குத் திட்டம் தீட்டப்பட்டு மொத்தம் 369 பணிகள் எடுத்துச் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டம்

மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்திற்குத் தேவையான அடிப்படை கட்டுமானப் பணிகள் எடுத்துச் செய்யப்படுகின்றன. இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.399.24 இலட்சத்தில் 60% ஊரகப் பகுதிகளுக்கும், 40% நகர்ப் பகுதிகளுக்கும் செலவிடப்படுகின்றது.

- மோகன் பியாரே, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர், தருமபுரி மாவட்டம்



1997-98ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் ரூ.399.24 இலட்சத்தில் 2719 பணிகள் எடுத்துச் செய்யப்பட்டு அடிப்படை வசதிகள் செய்யப்பட்டன.

**கிராமப்புற இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் 950 இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புப்பயிற்சி அளிக்கப்பட்டது. 1998-99ஆம் ஆண்டு, 560 இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சி பெற்று வருகின்றனர்.

**மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் 120 பெண் குழுக்கள் அமைக்கப்பெற்று அவற்றால் 1800 மகளிர் பயன்பெறுகின்றனர். இத்திட்டத்தினால் கிராமப்புற மகளிர் அந்தந்தக் கிராமங்களின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப குழுக்களாக அமைத்து கிடைக்கப்பெறும் அடிப்படை மூலதனங்களின் அடிப்படையில் தொழில் செய்து முன்னேற்றமடைகின்றனர்.

**புகையில்லா அடுப்புத் திட்டம்**

கிராமப்புறப் பெண்கள் ஆரோக்கியமான சூழ்நிலையில் சமைப்பதற்கு ஏற்ற வகையில் பெண்களின் வசதிக்காகப் புகையில்லா அடுப்புக்கள் நிறுவப்படுகின்றன. கடந்த ஆண்டு இம்மாவட்டத்தில் 4685 புகையில்லா அடுப்புக்கள் அமைக்கப்பட்டன. இவ்வாண்டும் 4685 புகையில்லா அடுப்புக்கள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

**சாண எரிவாயு திட்டம்**

சாண எரிவாயு திட்டத்தின்கீழ் கிராமப்புறங்களில் தொழில் நுட்பம் பரவலாக்கப்படும் நோக்கத்துடன் 100 சாண எரிவாயு கலன்கள் அமைக்கப்பட்டன.

**இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் 1997-98ல் 2371 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. நடப்பாண்டில் 2422 வீடுகள் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வீடுகள் கட்டும் பணிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

**நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

தருமபுரி மாவட்டத்தில் இரண்டு நாடாளுமன்றத் தொகுதியும் ஒரு ராஜ்ய சபை உறுப்பினரும் உள்ளனர். மூன்று நாடாளுமன்ற உறுப்பினரின் பரிந்துரையின்படி பணிகள் தலா ஒரு கோடி ஒதுக்கீட்டில் செய்யப்பட்டது. அதைக்கொண்டு தேவை அடிப்படையில் மொத்தம் 163 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு முன்னேற்றத்திலுள்ளன. 1998-99ஆம் ஆண்டிற்குத் தொகை அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

தருமபுரி மாவட்டத்தில் 10 சட்டமன்றத் தொகுதிக்கும் 1997-98ல் தொகை விடுவிக்கப்பட்டு 239 பணிகள் அங்கீகரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன.

1998-99ல் சட்டமன்ற உறுப்பினர்களின் ஒதுக்கீடு ரூ.35 இலட்சமாக உயர்த்தப்பட்டு இதுவரை 74 பணிகள் சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரை அடிப்படையில் நிர்வாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.





**அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் 10 சட்டமன்றத் தொகுதிகள் அடங்கியுள்ளன. எனவே 10 ஊராட்சிகள் 1997-98ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டது. தார்ச்சாலைகள் மற்றும் பிற சாலைகள் அமைத்தல், குடிநீர் வழங்கல் நீர்ப்பிரி முகடு ஆதாரப்பணிகள், கூடுதல் பள்ளிக்கட்டடங்கள், பொதுவிநியோகக் கடைகள், நூல் நிலையங்கள், சத்துணவுக் கூடங்கள், தொலைக்காட்சி அறைகள், கால்நடை மருந்தகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்ற பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் அரசு ஒதுக்கீடு ரூ.292.39 இலட்சம் மட்டுமின்றி இதர துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு அளிக்கப்பட்ட நிதியில் இக்கிராமங்களில் எடுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்ற அந்தந்தத் திட்டங்களின் நிதியிலிருந்து ஒதுக்கீடு ரூ.625.64 இலட்சம் சேர்த்து ரூ.918.03 இலட்சம் செலவில் இத்திட்டம் சென்ற ஆண்டு நிறைவேற்றப்பட்டு 2482 பணிகள் முடிக்கப்பெற்றுவிட்டன.

இதுபோன்று 1998-99ஆம் ஆண்டு ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு கிராமம் சட்டமன்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கிராம சபையால் தேர்வு செய்யப்பட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**நமக்கு நாமே திட்டம்**

தருமபுரி மாவட்டத்தில் 1997-99ஆம் ஆண்டு 'நமக்கு நாமே' திட்டத்தின்கீழ் 18 ஊராட்சி ஒன்றியங்களில் 77 கிராமங்களில் 132 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இதற்குப்பொதுமக்கள் ரூ.30.876 இலட்சம் தங்களுடைய பங்காக அளித்துள்ளனர். அரசு நிதியிலிருந்து ரூ.61.540 இலட்சம் அளிக்கப்பட்டு மொத்தம் ரூ.92.416 இலட்சத்தில் இப்பணிகள் நிறைவேற்றப்பட்டன. இவற்றில் 5 கட்டடங்கள், 106 சாலைகள், சத்துணவு மையம் பழுதுபார்த்தல், சிறுபாசன ஏரிகள் பழுதுபார்த்தல், பள்ளிக் கட்டடங்களுக்குச் சுற்றுச்சுவர் அமைத்தல் ஆகிய 11 பிற பணிகள் செயல்படுத்தப்பட்டன. இவற்றில் காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் பிக்கனஹள்ளி கிராமத்தில் 6 கி.மீ. சாலை அமைப்புப் பணியும் கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் தொலுவபெட்டா கிராமத்தில் 6 கி.மீ. சாலை அமைத்ததும் குறிப்பிடப்படவேண்டிய பணிகளாகும்.

**சாலை மேம்பாடு**

ஊரக வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்குவது தரமான போக்குவரத் தாகும். தருமபுரி மாவட்டத்தில் ஊராட்சிப்பகுதிகளில் 1062.65 கி.மீ. ஊராட்சி ஒன்றிய சாலைகள் 3,315.25 கி.மீ. ஊராட்சி சாலைகள் மண் மற்றும் கப்பி சாலைகளாகவும், மழை மற்றும் கடுமையான காற்று வீசும் காலங்களில் போக்குவரத்திற்கு உகந்ததாக இல்லாமல் மாறிவிடுகின்றன. எனவே சாலை மேம்பாட்டிற்கு அரசு முக்கியத்துவம் வழங்குகிறது. 1997-98ஆம் ஆண்டில் அரசின் உத்தரவின்பேரில் பல்வேறு திட்டங்களின்கீழ் இம்மாவட்டத்தில் 397.24.கி.மீ. சாலைகள் கப்பி சாலையிலிருந்து தார் சாலைகளாக மாற்றப்பட்டன. இவ்வாண்டும் 398 கி.மீ. நீளமுள்ள கப்பி சாலைகளைத் தார் சாலையாக மாற்ற அரசின் உத்தரவிற்கிணங்க அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.



**குடிநீர் வசதி**

இம்மாவட்டத்தில் 3534 கிராமங்கள் முழுமையாக குடிநீர் வசதி பெற்றுள்ளன. 2008 கிராமங்களில் குடிநீர் பற்றாக்குறை காணப்படுகின்றது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இக்கிராமங்களுக்குத் தேவையான குடிநீர் வசதி கொடுப்பதற்குத் திட்டங்கள் தீட்டி செயல்படுத்தி வருகின்றது. ஆயினும் ஊராட்சி பகுதிகள் தேவையான உடனடி தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்படுகின்றன. கடந்த வருடம் அரசின் இத்திட்டத்தின்கீழ் 253 ஆழ்துளை குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. மேலும் மாவட்ட ஊராட்சி நிதியிலிருந்து ரூ.33.60 இலட்ச மதிப்பீட்டில் 112 ஆழ்துளை குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன.

**மின்சாரம்**

கடந்த ஆண்டு இம்மாவட்டத்தில் அரசின் நிதி ஒதுக்கீட்டின் மூலமாகவும், மாவட்ட ஊராட்சியின் நிதி ஒதுக்கீட்டின் மூலமாக 3224 தெருவிளக்குகள் புதியதாக வழங்கப்பட்டன.

**நீர் ஆதார அமைப்பு**

பரந்து விரிந்த தருமபுரி மாவட்டத்தின் முக்கியமான நீர்ப்பாசன ஆதாரம் கிணற்றுப் பாசனம் ஆகும். ஆனால் பெரும்பாலான விவசாய நிலங்கள் மழை நீரை நம்பியே விவசாயம் செய்யப்படுகின்றன. எனவே இம்மாவட்டத்திலுள்ள நிலத்தடி நீர் ஆதாரத்தினை மேம்படுத்துவதின் மூலமும் மற்றும் மழை நீரினை சேமிப்பதின் மூலமும் மட்டுமே இம்மாவட்ட விவசாயத்தை மேம்படுத்த முடியும். எனவே வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் கடந்த வருடம் ரூ.600 இலட்சம் செலவில் 475 நீர்நிலை ஆதாரங்கள் உருவாக்கப்பட்டன. இதில் 202 சிறுபாசனக் கண்மாய்களின் கரைகள் உயர்த்தப்பட்டு மேம்பாடு செய்யப்பட்டன. மேலும் புதியதாக 85 கசிவு நீர்க்குட்டைகள் உருவாக்கப்பட்டன. இவற்றின்மூலம் பல இலட்சக்கணக்கான விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இந்த ஆண்டு, இம்மாவட்டத்தில் நீர்நிலை ஆதாரங்களைப் பெருக்குவதற்கு ரூ.800 இலட்சம் மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ஒரு ஊராட்சிக்குக் குறைந்த பட்சம் ஒரு நீர்நிலை ஆதாரங்களையாவது புதியதாக உருவாக்குவது அல்லது ஏற்கெனவே உள்ள நீர் நிலை ஆதாரங்களை மேம்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒருங்கிணைந்த நீர் பிரிமுகடு திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் 58 நீர்பிரி முகடு சங்கங்கள் அமைக்கப்பட்டு மக்களின் ஒத்துழைப்புடன் ரூ.750 இலட்சம் செலவில் திட்டங்கள் தீட்டப்பட்டு, நீர் ஆதாரங்களின் மேம்படுத்தும் பணி சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**பள்ளிக் கட்டடங்கள்**

அரசின் உத்தரவின்படி கிராமப்புறங்களில் கல்வி நிலையங்களுக்குத் தேவையான கட்டட வசதியினைச் செய்து கொடுப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் கடந்த ஆண்டு பல்வேறு திட்டங்களின்கீழ் 225 பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இம்மாவட்டத்தில் 1996-97 மற்றும் 1997-98ல் புதியதாக துவங்கப்பட்ட கல்வி நிலையங்களுக்குப் பள்ளிக் கட்டடங்கள் உடனடியாக இத்துறையின் மூலம் கட்டி வழங்கப்பட்டது. இந்த ஆண்டு கிராமப்புறங்களில் உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் கட்டுமானப் பணிகள் எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளதால் இவ்வாண்டு இம்மாவட்டத்தில் 84 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க உத்தரவிடப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**நியாய விலைக்கடைகள்**

கிராமப்புறப்பகுதியில் மக்களுக்குத் தேவையான பொருட்களை நியாயமான விலைக்கு வழங்குகின்ற நியாய விலைக் கடைகள் பொருட்களைத் தரமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருப்பதற்குத் தேவையான கட்டடங்களைக் கட்டித்தர ஊரக வளர்ச்சித்துறை ஏற்றுக்கொண்டுள்ளது. கடந்த ஆண்டு இம்மாவட்டத்தில் மொத்தம் 110 நியாய விலைக்கடைகள் கட்டடம் கட்டி கொடுக்கப்பட்டன. இந்த வருடமும் 117 நியாய விலைக் கடைகள் கட்டிக் கொடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று குழந்தைகள் சுகாதாரமான முறையில் சத்துணவு உண்பதற்காக 18 சத்துணவு மையங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

கிராமப்புற மக்கள் நாட்டு நடப்பினைத்தெரிந்து கொள்வதற்கு வசதியாக 1191 தொலைக்காட்சி அறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோன்று பயணிகள் அமர்ந்து கொண்டு இருப்பதற்கு வசதியாக 137 பயணிகள் நிழற் கூடங்கள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன.

மிகவும் பிற்படுத்தப்பட்ட மாவட்டமான தருமபுரி மாவட்டம், கிராமப்புற வளர்ச்சிக்காகப் பெற்ற, தமிழக அரசின் உதவிகள் அனைத்தும், தரமானதாகவும் விரைவாகவும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ★



மனிதன்
தனக்குள்ளாகவே,
தான் மற்றவனைவிடப்
பிறவியில் தாழ்ந்தவன்
என்கின்ற உயர்வு
தாழ்வு உணர்ச்சியைப் போக்கித்
தன்னம்பிக்கையும், சுயமரியாதையும்
பெறவேண்டும்.

- தந்தை பெரியார்





# முன்னேற்றப் பாதையில் பெண்கள்

**செல்வி. அபூர்வா** இ.ஆ.ப., சார் ஆட்சியர், ஓசூர்

இயற்கை எழில் கொஞ்சும் வனச்சூழல், மிதமான தட்பவெட்பம், இந்திய மொழிகள் அனைத்தையும் பேசக்கூடிய மக்களைக் கொண்ட பகுதி உலகளவில் பெயர்தாங்கி நிற்கும் பெரிய தொழிற்சாலைகள், இயற்கையினை நினைவூட்டும் யானை, சிறுத்தை, கரடி போன்ற விலங்கினங்களைத் தன்னகத்தே கொண்டு தனிச்சிறப்புப் பெற்றுள்ள இந்நகர் தமிழக-கர்நாடக எல்லைப் பகுதியில் தருமபுரி மாவட்டத்தினுள் தருமபுரியிலிருந்து மேற்குத் திசையில் சுமார் 100 கி.மீ. தூரத்திலும், பெங்களூரிலிருந்து கிழக்குத் திசையில் சுமார் 40 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது.

சிறப்புகள் பல பெற்றுள்ள இக்கோட்டத்தில் மகளிர் நிலை என்ன என்பதைச் சற்றே சிந்தித்துப் பார்ப்போம்.

ஓசூர் கோட்டத்தில் ஆண்கள் 3,00,013 பேர், பெண்கள் 2,89,000 பேர் என மொத்தம் சுமார் 5,87,000 பேர் உள்ளனர்.

**மன்னர் காலத் தாக்கம்**

விஜயநகரப்பேரரசு முதல் மராட்டியர்கள், திப்புசுல்தான் எனப் பல மன்னர்கால ஆட்சிகளின் போதும், இவர்களின் நேரிடை ஆளுகைக்குட்படாமல் விஜயநகர பாளையக்காரர்களின் கட்டுப்பாட்டிலேயே ஓசூர் கோட்டம் இயங்கி வந்ததால், இக்கோட்ட மக்களின் சமூகப் பழக்க வழக்கங்கள் பாளையக்காரர்களைப் பின்பற்றியே வந்துள்ளது.

பின்னர் இப்பகுதி மூதறிஞர் ராஜாஜி அவர்களால் (இவர் ஓசூர் அருகேயுள்ள தொரப்பள்ளியில் பிறந்தவர் என்பதால்) வரலாற்றில் ஒரு நிரந்தர இடம் பெற்றுவிட்டது.

**மகளிர் நிலை**

சிறப்புகள் பல கொண்ட இக்கோட்டத்தின் பெண்கள் நிலை பல்வேறு காரணங்களால் மிகவும் பின்னடைந்து காணப்படுகிறது.

இதற்கு முக்கியக் காரணம் போதிய கல்வியறிவு பெண்களுக்கு வழங்கப்படாததுதான்.

இக்கோட்டம் பரவலான குடியிருப்புகளைக் கொண்டு, அதிகளவு மானாவாரி விவசாயத்தில் ஈடுபடும் மக்களைக் கொண்டதாகும். குறிப்பாக விவசாயத்தில் பெண்கள் அதிக அளவு ஈடுபடுத்தப்படுவதால் அவர்களுக்குப் போதிய கல்வியறிவும், சமூகச் சிந்தனைகளையும் பெறும் வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. மேலும் தொலைவில் உள்ள பள்ளிகளுக்குப் பெண்களை அனுப்பும் பழக்கமும் இக்கோட்டத்தில் குறைந்தே காணப்படுகிறது.

இக்கோட்டத்தில் பெண்களின் கல்வி என்பது தங்கள் பகுதியில் உள்ள பள்ளிகளின் நிலைமையைப் பொறுத்தே அமைகிறது. அதிக பட்சக் கல்வி என்றால் மேல்நிலைப் படிப்பாகத்தான் இருக்கும். இப்பகுதிகளில் கல்லூரியோ, உயர் கல்வி நிலையங்களோ இல்லாததும் ஒரு காரணமாகும்.



இக்கோட்டப் பெண்களின் பின்னடைவிற்குச் சமூகச் சூழ்நிலைகளும் காரணமாகிவிடுகின்றன. அதிகளவு விவசாயத்தில் ஈடுபடுதல், குறைந்த வயதிலேயே திருமணம், இளம் வயதிலேயே கணவனால் கைவிடப்படுதல், பெற்றோர்களின் பொருளாதாரப் பின்னடைவு போன்ற பல காரணங்கள் உண்டு.

பாதிப்பிற்குள்ளாகும் பெண்கள் தங்கள் வளர்ச்சிக்குக் குறுக்கேயுள்ள தடைகளைப் பற்றி உணர்ந்தாலும் அவைகளை நீக்கப் போதிய முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. காரணம், அவர்களுக்குத் தன்னம்பிக்கையை வளர்க்க யாரும் முன்வராததுதான்.

"உடையார் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார் உடை உடையரோ மற்று" எனும் வள்ளுவர் குறளுக்கு ஏற்ப, பின்தங்கியுள்ள ஓசூர் கோட்டப் பெண்களின் நிலையை உயர்த்தி அவர்களுக்குத் தேவையான தன்னம்பிக்கையும் ஊக்கமும் தர அரசு பல்வேறு திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது.

**அறிவொளியும், பெண்களும்**

பெண்களின் தன்னம்பிக்கை குறைவிற்குக் காரணம் நாட்டு நடப்புகளும், சமூக மாற்றங்களும் உணராததால்தான் என்பதால் அரசின் அறிவொளி இயக்கம், இக்கோட்டத்தில் செம்மையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அறிவொளி 'வெறும் கல்வி கற்க' மட்டுமே என்றில்லாமல் பெண்களின் தன்னம்பிக்கையை வளர்க்கும் விதமாக சுயஉதவிக்



குழுக்களை (Self Help Groups) அமைத்தல், சிறுசேமிப்பு, வங்கிக் கணக்கு போன்றவற்றை தொடங்குதல், பெண்கள் தங்கள் குறைகளைக் கூறி ஆலோசனை பெறுதல் போன்ற பல விவரத் தொகுப்பாக அறிவொளி இயங்கிவருகிறது.

அது மட்டுமின்றி, பெண்கள் அதிக அளவு கல்வி பயிலும் கிராமங்களில் முன்னுரிமையின் அடிப்படையில் கிராம நூலகங்களையும் அமைத்துத் தருகிறது.

பெண்களின் தன்னம்பிக்கை வளரும் விதமாக 96-97-ஆம் ஆண்டு அரசு குடிசைமாற்று வாரியத்தின் மூலம் இலவச வீட்டுமனைகள் வழங்கப்பட்டன. ஏழைக் குடும்பப்பெண்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் போன்றவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

**'டோக்ரா' மூலமாக அறிவொளியில் பயிலும் பெண்கள்**

தங்களுக்குள் ஒரு குழு அமைத்துக் கொண்டு அதன் மூலம் ஒரு சிறுதொகையை ஒவ்வொருவரும் சேமிக்கும் போது, அத்தொகைக்கு ஈடான தொகையை அரசு அளித்து உதவுகிறது.

இத்தொகை மூலம் பெண்கள் குழுவில் உள்ள உறுப்பினர்கள் தாங்கள் ஒரு சிறிய தொழில் தொடங்கி முன்னேற வழிவகை செய்கிறது. இதன் மூலம் மேடை அலங்காரம், அப்பள வியாபாரம், முட்டுக்கடைகளை வாடகைக்கு விடுதல் போன்றவைகளும் இக்கோட்டத்தில் அதிக அளவு உற்பத்தியாகும் காய்கறி, பூ வகைகள் போன்றவற்றை விற்பனை செய்யவும் இத்திட்டம் உதவுகிறது

**மகளிர் மேம்பாட்டுத் திட்டம் (IFAD)**

இத்திட்டம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் முக்கிய நோக்கம் பெண்களைப் பொருளாதார ரீதியாக மேம்படுத்துதல் ஆகும்.

கிராமப்புறங்களில் பெண்கள் மூலம் இயங்கும் சுயஉதவி குழுக்களை அமைத்தல், சேமிப்பைத் தொடங்குதல், வங்கிக் கணக்கு ஆரம்பித்தல், கணக்கு விவரங்களைச் சரிபார்த்தல் போன்ற பல பொருளாதார ரீதியான செயல்பாடுகள் கொண்டதாக இத்திட்டம் உள்ளது.

இவ்வாறு கணக்கு வழக்குகளைப் பெண்கள் மேற்கொள்ளும் போது ஒரு நிர்வாகப் பொறுப்பும் கடமை உணர்வும் பெண்களுக்குக் கிடைக்கிறது.

இதுமட்டுமன்றி, இத்திட்டத்தின் மூலம் பெண்கள் அமைத்துள்ள சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தங்கள் பணக்கஷ்ட நேரத்தில் ஒருதொகையைக் கடனாக பெற்று அவற்றைத் திரும்பச் செலுத்தவும் முடிகிறது. இச்சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளும் கடன்உதவி அளித்து பெண்களின் வளர்ச்சியில் பங்கு கொள்கிறது.

சுயஉதவிக் குழுக்கள் பெறும் கடன்களைக் கொண்டு உறுப்பினர்கள் பட்டுவளர்ப்பு, விவசாயம், கால்நடை, கால்நடைத் தீவனம் தயாரித்தல், விவசாய நீர்ப் பிடிப்புப் பகுதிகளை உருவாக்குதல் போன்றவைகளையும், தையல் தொழில், புகைப்படம் எடுத்தல், கூடை பின்னுதல், பாய் நெய்தல் போன்ற சிறுதொழில்களையும் 'ஐபாட்' திட்டத்தின் மூலம் நிறைவேற்றிக்கொள்ள முடிகிறது. கடன் வழங்குதல், திருப்பிச் செலுத்துதல் வருடந்தோறும் கணக்குகளைச் சரிபார்த்தல் போன்றவைகளைச் சுய உதவிக் குழுக்களே மேற்கொள்வது இதன் சிறப்பம்சமாகும்.

**வனத்துறையின் பங்கு**

பெண்களின் முன்னேற்றத்திற்கு ஓசூர் கோட்டத்தில் வனத்துறையும் உதவி வருகிறது.

வனத்துறை சார்பாக தமிழ்நாடு வனவளர்ப்புத் திட்டத்தின் மூலம் கால்நடை வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் வனப் பகுதிகளில் விறகு வெட்டி எடுக்கும் பணிகளில் அதிகளவு பெண்கள் ஈடுபடுகின்றனர். இவ்வாறு



தருமபுரி மாவட்டச் சிறப்பிதழ்

வனப்பகுதிக்குச் செல்லும் பெண்கள் காட்டு மிருகங்களின் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும் சூழ்நிலையும் உள்ளது. அத்துடன் வனப்பகுதியும் அழிக்கப்படுகிறது.

இதனைத் தடுக்கும் விதமாக இத்திட்டத்தின் மூலம் பெண்களுக்குச் சுய வேலையளிப்பும் மேற்கொள்ளப்படுகிறது. ஊதுவத்தி தயாரித்தல், மாட்டுத் தீவனம் தயாரித்தல் போன்றவைகள் இதில் அடங்கும்.

கிராம வனப்பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டு, அதில் கண்டிப்பாக பெண்கள் இடம்பெற வழிவகை செய்கிறது.

மேலும் ஓசூர் கோட்டத்தில் கங்காபுரம் கிராமத்தில் மானாவாரிப் பயிர் வகைகளால் போதிய வருமானம் கிடைக்கவில்லை என்பதால் 13 பேர் கொண்ட பெண்கள் குழுவிற்குத் தலா அரை ஏக்கர் நிலம் வழங்கப்பட்டு, அந்நிலத்தில் ரோஜா செடிகளை வளர்க்க வனத்துறை உதவியுள்ளது. இதில் சிறப்பம்சம் என்னவென்றால் ரோஜா செடிகள், உரம் போன்றவற்றையும் வனத்துறையே வழங்கி, விளையும் ரோஜாப் பூக்களை வனத்துறையே விற்பனை செய்யவும் ஏற்பாடுகளைச் செய்து தருகிறது.

இதனால் விவசாய விளைபொருட்களைவிட அதிக லாபம் ரோஜா விளைச்சலில் பெண்கள் பெறுகிறார்கள்.

**பஞ்சாயத்துக்களில் பெண்கள்**

இக்கோட்டத்தில் உள்ள பஞ்சாயத்துக்களில் 33 சதவீதம் பெண்களே தலைவிகளாக இருப்பதால், தங்கள் பகுதி பிரச்சினைகளைத் தலைவிகளிடம் நேரிடையாக எடுத்துக்காண பெண்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது.

இதன் மூலம் தங்கள் பகுதித் தண்ணீர்ப் பிரச்சினை, கள்ளச் சாராயப் பிரச்சினை போன்றவற்றை எடுத்துக் கூறி வருகின்றனர். இவர்களுள் தீவிர விழிப்புணர்வு ஏற்பட்டு வருவதை அறிய முடிகிறது.

**பெண்களின் பாதுகாப்பு**

இக்கோட்டத்தில் பெண்களுக்குத் தன்னம்பிக்கையும், ஊக்கமும், மனோதிடமும் வளர்ந்து வருவதற்கு ஆதாரமாக ஓசூர் மகளிர் காவல் நிலையப் பட்டியலே போதும்.

காவல் நிலையம் என்றாலே கஜ தூரம் ஓடிப்போகும் நிலை மாறி, இன்று தங்கள் குறைகளையும் கொடுமைகளையும் தைரியமாகப்புகார் கொடுக்க அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு வருகின்றனர் பெண்கள். 1995ஆம் ஆண்டு பதிவான பெண்கள் தொடர்பான வழக்குகள் 54 மட்டுமே. ஆனால் 1996-ம் ஆண்டில் 134 வழக்குகளும், 1997ம் ஆண்டில் 167 வழக்குகளும், 1998 ஜூலை வரை 95 வழக்குகளும் பதிவாகியுள்ளன.



பெண்கள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க விழிப்புணர்வோடு செயல்படுவதையே இது காட்டுகிறது.

மறைக்கப்பட்டு வந்த வரதட்சணைக் கொடுமைகளும், வரதட்சணைக் கொலைகளும் பெண்களால் புகார்களாகத் தரப்படுகிறது. இதற்குக் காரணம் பெண்களின் புகார்கள் மீது உடனடி நடவடிக்கை எடுத்துவருவதுதான்.

இந்த ஆண்டு ஜூலை முடியப் பதிவான 95 வழக்குகளில் 21 வழக்குகள் பெண்களின் சந்தேக மரணங்கள் ஆகும். இவற்றில் 5 வழக்குகள் வரதட்சணைக் கொடுமைகளாகும். இந்த 5ல் இரண்டு வரதட்சணைக் கொலைகள் எனக்கண்டறிந்து நடவடிக்கைக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

இக்கோட்டத்தில் ஆதரவற்ற பெண்கள் பயன்பெறும் வகையில் விதவை கருணைத் தொகை, ஓய்வூதியம் இவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா, மூவலூர் இராமாமிர்தம் திட்டம் மூலம் திருமண உதவித்தொகை ரூ.10,000/- வழங்குதல் போன்றவை தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தொழிற்சாலைகள் நிறைந்த இக்கோட்டத்தில் தனியார் தொழிற்சாலைகளும் பெண்களின் முன்னேற்றத்திற்கு உதவி புரிந்து வருகின்றன. தமிழக அரசையும் பங்குதாரராகக் கொண்ட டைட்டான் கடிகாரத் தொழிற்சாலை தன்னார்வத் தொண்டு நிறுவனம் மூலம் பெண்களுக்குக் கடிகார செயின் கோர்க்கும் பணி அளித்து உதவி வருகிறது.

அரசின் பல்வேறு திட்டங்கள் மூலம், சுயஉதவிக் குழுக்களாகச் செயல்பட்டு தங்கள் குறை நிறைகளை மாதமிருமுறை கூடி விவாதித்து தாங்களே நிவர்த்தி செய்து கொள்ளும் திறனையும், சுயதொழில், அறிவொளி போன்றவற்றில் பங்கு கொண்டு தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டு தலைமைப் பொறுப்பேற்று வழி நடத்தி செல்லும் துணிவும் கொண்டவர்களாக "சாதம் படைக்கவுஞ் செய்வோம்தெய்வச் சாதி படைக்கவுஞ் செய்திடுவோம்" என்ற பாரதி பாடலுக்கேற்றவாறு ஓசூர் கோட்ட மகளிர் செயல்பட்டு வருகிறார்கள்.




ஓசூரில் சிப்காட் தொழில் வளாகம் 1974-இல் தொடங்கப் பட்டது. ஓசூர் தொழில் வளாகம் வேகமாக வளர்ந்து தமிழ்நாட்டில் உள்ள தொழில் வளாகங்களுக்கெல்லாம் முன்மாதிரியாக விளங்குகிறது.

சிப்காட் தொழில் வளாகத்தின் முதல்பகுதி பெங்களூர் ஓசூர் தேசிய நெடுஞ்சாலையில் 1235.86 ஏக்கரில் அமைந்துள்ளது. இதில் 970.05 ஏக்கர் நிலம் 184 தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 137 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கி செயல்பட்டு வருகின்றன. மற்றவை பல்வேறு நிலைகளில் அமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன.

வளாகத்தின் இரண்டாவது பகுதி ஓசூர் - கிருஷ்ணகிரி சாலையில் 456.82 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 70 தொழில் நிறுவனங்களுக்கு 388.12 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31 தொழில்நிறுவனங்கள் உற்பத்தியை தொடங்கி செயல்பட்டு வருகின்றன.

ஓசூர் சிப்காட் தொழில் வளாகத்தில் முதல் பகுதியில் ரூ.2,500 கோடியும், இரண்டாவது பகுதியில் ரூ.700 கோடியும் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலைகள் மூலம் 32,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

### வளர்ச்சி

சிப்காட் தொழில் வளாகம் தொடங்குவதற்கு முன் ஓசூரின் மக்கள்தொகை 10,000. ஆனால் தற்போது 1,50,000 ஆகும்.

இவ்வளாகத்தின் மூன்றாவது பகுதியில் 'மின்னணுத் தொழில் பூங்கா' ஓசூர் - கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையில் 5,500 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட உள்ளது. இது இரண்டு கட்டமாக அமைக்கப்படும். முதல் கட்டத்தில் 3,000 ஏக்கரிலும் 2வது கட்டத்தில் 2,500 ஏக்கரிலும் அமைக்கப்படும்.

இந்த இரண்டு பிரிவிலும் தொழிற்சாலைகள் தொடங்க எல்லா அடிப்படை வசதிகளையும் சிப்காட் செய்து தருகின்றது.

இங்கு முழுமையான காவல் நிலையம் இயங்கி வருகின்றது. 50 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையும், ஒரு தனியார் மருத்துவமனையும் இயங்கி வருகின்றன. முதல் உதவி நிலையம் ஒன்றும் இயங்கி வருகிறது.

1400 இணைப்புகளை கொண்ட தொலைபேசி இணைப்பகம் இயங்கி வருகிறது. தபால் நிலையம் ஒன்றும் இங்கு உள்ளது. இதற்கு முதலில் 0.74 ஏக்கர் பிறகு 0.73 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தீயணைப்பு நிலையம்

சிப்காட் ஒரு தீயணைப்பு நிலையத்தை அமைத்துள்ளது.

### போக்குவரத்து

அரசு மற்றும் தனியார் பேருந்துகள் இவ்வழியில் அடிக்கடி இயக்கப்படுகின்றன. நகர பேருந்துகள் (Town Bus) இயக்கப்படுகின்றன. இங்கு ரயில்வே நிலையம் உள்ளது. சேலம் - பெங்களூர் ரெயில்கள் இவ்வழியே செல்கின்றன.

### வங்கி

வங்கி வசதியும் இங்கு உண்டு. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் ஸ்டேட் பாங்க் இங்கு தங்களது கிளையினை அமைத்துள்ளன.

உணவு விடுதி ஒன்று உள்ளது. இதற்கு 100 ச.மீ. இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது குத்தகை முறையில் நடத்தப்படுகிறது.

மேல்நிலைப் பள்ளி ஒன்றும் உள்ளது. இதில் 2,600 மாணவர்கள் பயில்கிறார்கள். இதற்கு 9.74 ஏக்கர் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### வீட்டுவசதி

291 மனைகள் கொண்ட வீட்டு வசதி வளாகம் அமைந்துள்ளது. 307 மனைகள் கொண்ட ஊழியர் வீட்டு வசதி வளாகமும் அமைக்கப்பட்டுள்ளது. 370 வீடுகள் கொண்ட குடியிருப்பும் அமைக்கப்பட்டுள்ளது. 210 மனைகளும் உள்ளன.

### வணிகவளாகம்

இரண்டு அடுக்கு கொண்ட, 24 கடைகள் கொண்ட வர்த்தக வளாகம் அமைந்துள்ளது. இவற்றில் சில விற்பனை செய்யப்பட்டுள்ளன. சில தவணை முறையிலும், சில வாடகைக்கும் அளிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின்வாரியம் 110/11 கி.வா. துணை மின்நிலையம் ஒன்றினை 10.63 ஏக்கர் பரப்பில் அமைத்துள்ளது.

இந்த வளாகத்தில் டைட்டான் தொழிற்சாலை 35.98 ஏக்கரிலும், எல்காட் தொழிற்சாலை 7.70 ஏக்கரிலும், இங்கிலீஷ் எலக்ட்ரிக் கம்பெனி 21.56 ஏக்கரிலும், கார்பொரண்டம் யுனிவர்சல் 24.52 ஏக்கரிலும், இந்துஸ்தான் லீவர் கம்பெனி 16.58 ஏக்கரிலும், பாட்டா கம்பெனி 10.31 ஏக்கரிலும், டி.டி.கே. பிரிஸ்டீல் லிமிடெட் 13.83 ஏக்கரிலும், இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் 15.09 ஏக்கரிலும், சிட்கோ 95.15 ஏக்கரிலும், அசோக் லேலண்ட் 102.58 ஏக்கரிலும், தொழிற்சாலைகளை அமைத்துள்ளன. அங்கு அமையப் பெற்ற தொழிற்சாலைகளில் குறிப்பிடத்தக்க சில மேலே குறிப்பிடப்பட்டுள்ளன.

★ ★ ★








கடந்த இரண்டு ஆண்டுகளில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் தகுதியுடைய 2,949 ஏழைப் பெண்களுக்குத் திருமண நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில், ரூ.2 கோடியில் 2,000 ஏழைப்பெண்கள் பயனடைகின்றனர்.

**அஞ்சுகம் அம்மையார் நினைவுக் கலப்புத் திருமண நிதியுதவித்** திட்டத்தின்கீழ் 35 இணைகளுக்கு நிதியுதவிகள் அளிக்கப்பட்டுள்ளன. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 17 நபர்களுக்கு ரூ.1,07,000 நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் ரூ.50,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**விதவையர் மகள் திருமண நிதியுதவித்** திட்டத்தின்கீழ், ரூ.4 இலட்சத்து 8 ஆயிரம், 157 விதவையர் பெண்களுக்குத் திருமண உதவிகள் அளிக்கப்பட்டன. இவ்வாண்டிற்கென, இத்திட்டத்தின் கீழ் 50 பேர்கள் பயனடையும் வகையில், ரூ.2.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று ஆதரவற்ற 11 மகளிர்க்கு ரூ.28,000 திருமண உதவித்தொகை அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டிற்கு ரூ.25,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நலிவடைந்த பிரிவினைச் சார்ந்த பெண்கள்** மற்றும் உடல் ஊனமுற்றோர்க்குச் சுயதொழில் அடிப்படையில் ரூ.3.80 இலட்சம் செலவில் 210 நபர்களுக்கு இலவசத் தையல் இயந்திரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

**டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித்** திட்டத்தின்கீழ், 1996-97ல் ரூ.200 வீதம் 9,334 கருவுற்ற மகளிர்க்கு ரூ.18.67 இலட்சமும்; 1997-98ல் ரூ.500 வீதம் 12,500 பெண்களுக்கு ரூ.62.50 இலட்சமும் மகப்பேறு நிதியுதவிகளாக வழங்கப்பட்டுள்ளன.

**பெண்குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்** கீழ், 1996-97ல் 1143 பெண்குழந்தைகளுக்கு ரூ.1,500 வீதம் ரூ.17.15 இலட்சமும், 1997-98ல் ரூ.1,500 வீதம் 614 பெண்குழந்தைகளின் பெயர்களில் ரூ.9.20 இலட்சமும், ரூ.3,000 வீதம் 23 பெண் குழந்தைகளின் பெயர்களில் ரூ.69 ஆயிரமும், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக்கழகத்தில் காப்பீட்டுத் தொகைகளாக முதலீடு செய்யப் பட்டுள்ளன.

### இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

மகளிர் மேம்பாட்டு தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் வாயிலாக 1,699 பெண்கள் சுயவேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். 1996-97ல் இச்சங்கங்களுக்கு ரூ.32.82 இலட்சமும், 1997-98ல் ரூ.34.26 இலட்சமும் தையற்கூலிகளாக வழங்கப்பட்டுள்ளன. 1996-97 ஆம் ஆண்டில் 900 நபர்களுக்கு 1,64,700 மதிப்புடைய இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் 120 நபர்களுக்கு 2,16,000 மதிப்புடைய இலவச தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.



### இலவசப் பாடநூல் வழங்கும் திட்டம்

1996-97 ஆம் ஆண்டில் 144 மாணவர்களுக்கு மொத்தம் ரூ.17,760 மதிப்புடைய இலவச பாடப் புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப் பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் 2,307 குழந்தைகளுக்கு ரூ.59,928/- மதிப்புடைய இலவச பாடநூல் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப் பட்டுள்ளன. நடப்பு 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ.60,000/- நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

# வேளாண்மை வளர்ச்சி

தருமபுரி மாவட்டம் சேலம் மாவட்டத்திலிருந்து 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் நாள் பிரிக்கப்பட்டு தனி மாவட்டமாகச் செயல்பட்டு வருகிறது. அதன் மொத்த பரப்பளவு 9,640 ச.கி.மீ. ஆகும். மாவட்டத்தின் மொத்த பரப்பளவில் 3-ல் ஒரு பகுதி காடுகளைக் கொண்டதாகும்.

தருமபுரி மாவட்டத்தில் போதிய நீர்ப்பாசன ஆதாரங்கள் இல்லை. அனைத்து நீர்ப்பாசன ஆதாரங்களையும் கொண்டு பாசனம் பெறும் பயிர்களின் மொத்த பரப்பளவு 1.34 இலட்சம் எக்டேர்கள் ஆகும். இது நிகர சாகுபடிப் பரப்பளவில் 34.80 சதவிகிதம் ஆகும். அனைத்து நீர்த்தேக்கங்களின் மூலமாக 17,237 எக்டேர் பரப்பளவு பாசனம் பெறுகிறது.

## பயிர்ச் சாகுபடி விவரம்

தருமபுரி மாவட்டத்தில் நிலக்கடலைப் பயிர் அதிகப் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மொத்த சாகுபடி பரப்பளவில் 21.0 சதம் நிலக்கடலை பயிரும் 19.0 சதம் இராகிப் பயிரும், 13.0 சதம் நெல்பயிரும், 10.0 சதம் சோளப் பயிரும் குறைந்த மகசூல் தரும் சாமை, வரகு போன்ற இதர சிறுதானியப் பயிர்கள் 14.0 சதம் பரப்பிலும் சாகுபடி செய்யப்படுகின்றன. தருமபுரி மாவட்டத்தில் நெல் பயிர் சாதாரணமாக 52,500 எக்டேரில் சாகுபடி செய்யப்படும். 1996-97 ஆம் ஆண்டில் 66,000 எக்டேர் பரப்பளவிலும், 1997-98 ஆம் ஆண்டில் 68,000 எக்டேர் பரப்பளவிலும் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இம்மாவட்டத்தில் பெருமளவு பயிர்ச் சாகுபடிப் பரப்பு மானாவாரிப் பயிராகவே சாகுபடி செய்யப்படுகிறது. தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழையையே நம்பி இப்பயிர்ச் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. சிலசமயம் பருவம் தவறிப் பொழியும் மழையினால் விதைப்பு பாதிக்கப்பட்டு சாகுபடிப் பரப்பில் இழப்பும் ஏற்படுவது இயல்பாக உள்ளது.

## பயிர்களில் சாகுபடி மற்றும் உற்பத்தி

1996-97 ஆம் ஆண்டு அரிசி உற்பத்தியில் 2.09 இலட்சம் மெ.டன்னும், சிறுதானியத்தில் 2.11 இலட்சம் மெ.டன்னும், பயறுவகைப் பயிர்களில் 0.74 இலட்சம் மெ.டன்னும், பருத்தியில் 0.38 இலட்சம் பேல்களும், கரும்பில் 1.52 இலட்சம் மெ.டன், வெல்லமும், எண்ணெய்வித்துப் பயிர்களில் 1.54 இலட்சம் மெ.டன்னும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

1997-98 ஆம் ஆண்டு அரிசி உற்பத்தியில் 2.14 இலட்சம் மெ.டன்னும், சிறுதானியத்தில் 1.96 இலட்சம் மெ.டன்னும், பயிறுவகைப் பயிர்களில் 0.59 இலட்சம் மெ.டன்னும், பருத்தியில் 0.28 இலட்சம் பேல்களும், கரும்பில் 1.85 இலட்சம் மெ.டன் வெல் எண்ணெய்வித்துப் பயிர்களில் 1.46 இ மெ.டன் வெல்லமும் உற்பத்தி செ பட்டுள்ளன.



## விதைப் பெருக்குத் திட்டம்

விளை பொருட்களுக்கான உற்பத் உயர்த்தி விவசாயிகளின் பொருள நிலையினை மேம்படச் செய்ய இம்மா திலுள்ள 30 வேளாண்மை விரிவாக்க மை மூலம் தரமான சான்று பெற்ற வி விநியோகம் செய்யும் பணி நடை வருகின்றன.

1996-97 ஆம் ஆண்டில் 496 மெ.ட விதைகளும், 33 மெ.டன் சிறுத விதைகளும், 59 மெ.டன் பயறு விதைகளும், 200 குவிண்டால் ப விதைகளும் மற்றும் 452 மெ எண்ணெய்வித்து விதைகளும் விவசாயி விநியோகம் செய்யப்பட்டன.

1997-98ம் ஆண்டில் நி பருவநிலையினாலும், நீர் ஆதாரங்கள நிலைமையின் அடிப்படையிலும், 378 நெல் விதைகளும், 49 மெ.டன் சிறு விதைகளும், 110 மெ.டன் பயிறு விதைகளும், 136 குவிண்டால் ப விதைகளும் மற்றும் 482 மெ எண்ணெய்வித்து விதைகளும் விநி செய்யப்பட்டுள்ளன.



தருமபுரி மாவட்டச் சிறப்பிதழ்

தென்னைப் பயிர்களின் சாகுபடி அதிகரித்து தேங்காய் உற்பத்தியைப் பெருக்கிட, 1996-97 ஆம் ஆண்டில் 398 எக்டேர் பரப்பு நெட்டை இரகத்திலும், 240 எக்டேர் பரப்பு வீரிய ஒட்டுத் தென்னை இரகத்திலும் சாகுபடி செய்வதற்கான தென்னங் கன்றுகளும், அதேபோல் 1997-98ம் ஆண்டில் 475 எக்டேர் நெட்டை இரகத்திலும், 215 எக்டேர் வீரிய ஒட்டுத் தென்னை இரகத்திலும் சாகுபடி செய்யத் தேவையான தரமான நெட்டை மற்றும் வீரிய ஒட்டு இரகத் தென்னங்கன்றுகள் பி.ஜி.புதூர் மற்றும் அகசிப்புள்ளி தென்னை நாற்றுப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப் பட்டுள்ளன.

## உரம் மற்றும் உயிரின உரங்கள் விநியோகம்

1996-97 ஆம் ஆண்டில் தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்துக்கள் முறையே 21,050 மெ.டன், 10,050 மெ.டன் மற்றும் 9,075 மெ.டன். உரங்கள் விநியோகம் செய்யப்பட்டன. உயிரின உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா மற்றும் ரைசோபியம் முறையே 98,373 எண் 43,190 எண் மற்றும் 1,21,319 எண். என்கிற அளவில் வேளாண் பெருமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

1997-98 ஆம் ஆண்டில் 19,153 மெ.டன். தழைச்சத்து, 9,170 மெ.டன் மணிச்சத்து மற்றும் 9,772 மெ.டன் சாம்பல் சத்து தரவல்ல இரசாயண உரங்களைத் தருமபுரி மாவட்டத்தில் உள்ள தனியார் மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டன. உயிரின உரங்களைப் பொறுத்த மட்டில் அசோஸ்பைரில்லம் 1,15,970 எண்களும், பாஸ்போபாக்டீரியா 49,441 எண்களும், ரைசோபியம் 80,658 எண்களும் வழங்கப் பட்டன.

## கரும்பு ஒட்டுண்ணி உற்பத்தி

இம்மாவட்டத்தில் பாப்பாரப் பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு பயோ கண்ட்ரோல் லேப் ஒன்று இயங்கி வருகிறது. இதில் வருடந்தோறும் கரும்பைத் தாக்கும் இடைக்கணுப் புழுக்களை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த ட்ரைக்கோ டெர்மா முட்டை ஒட்டுண்ணிகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு 15 சி.சி. ரூ.17.50 வீதம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 1996-97ம் ஆண்டில் 727 எக்டேரிலும், 1997-98ம் ஆண்டு 520 எக்டேரிலும் கரும்பு ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மைத்துறை மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் பின்வருமாறு விவசாயிகளுக்குப் பல பயனுள்ள திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டம் (அரிசி)

இத்திட்டத்தின் கீழ் விவசாயி களுக்கு மானிய விலையில் நெல் மற்றும் சிறுதானிய விதைகளும் வேளாண்மைக் கருவிகளும் விநியோகம் செய்யப்படுகின்றன. 1996-97 ஆம் ஆண்டு ரூ.13.65 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டதில் ரூ.13.97 இலட்சம் சாதனை எய்தப்பட்டுள்ளது. இதேபோல் 1997-98ம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் ரூ.9.44 இலட்சம் ஒதுக்கீட்டில் ரூ.9.45 இலட்சம் சாதனை எய்தப்பட்டுள்ளது.

## தேசியப் பயறுவகை அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிறுவகை பயிர்களில் உற்பத்தியினையும், சாகுபடிப் பரப்பினை கூடுதலாக்கிடும் பொருட்டு, மானிய விலையில் விதைகளை விநியோகம் செய்யவும், அவ்வாறு விநியோகம் செய்யப்பட்ட விதைகளின் மூலம் விதைப்பண்ணை அமைக்கவும், கொள்முதல் மானியம், வழங்கவும், மேலும், செயல் விளக்கத்திடல்களுக்கு விதைகள், உரம், நுண்ணூட்டச்சத்து ஆகியவை வழங்கவும் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் 1996-97 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டில் ரூ.10.6 இலட்சத்திற்கு முழுமையான சாதனை எய்தப்பட்டுள்ளது. அதேபோல் 1997-98-ம் ஆண்டில் ஒதுக்கீடு பெறப்பட்ட ரூ.11.295 இலட்சத்திற்கு ரூ.11.4 இலட்சம் சாதனை எய்தப்பட்டுள்ளது.

## சுபாக்ஸ்

மத்திய சார்புத் திட்டத்தின் கீழ் கரும்பு செயல்விளக்கத் திடல்கள், உழவர்களுக்கான பயிற்சி, வேளாண்மைக் கருவிகள் ஆகியவை மானிய விலையில் வழங்கப்படுகிறது. 1996-97 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.9.55 இல்ட்சத்திற்கு முழுமையான சாதனை எய்தப்பட்டுள்ளது. அதேபோல் 1997-98ம் ஆண்டில் ரூ.2.76 இலட்சத்திற்கு முழுமையான சாதனை எய்தப்பட்டுள்ளது.

## நெல் சிறுதளை விநியோகம்

புதியதாக வெளியிடப்பட்ட நோய் எதிர்ப்புத் தன்மை கொண்ட மகசூல் கூடுதலாகத் தரத்தக்க ரகங்களை உழவர்களிடையே பிரபலப்படுத்தும் முக்கிய நோக்கத்துடன்



இத்தகைய சிறுதளைகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இதில் 1996-97ம் ஆண்டு ரூ.0.22 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டதில் முழுமையான சாதனை எய்தப்பட்டுள்ளது. 1997-98ம் ஆண்டு ரூ.0.175 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு முழுமையாக சாதனை எய்தப்பட்டுள்ளது.

இதேபோல் சிறுதானிய தீவிர சாகுபடி திட்டத்திற்கென செயல்விளக்கத் திடல்களை ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்கான சிறப்பு விநியோகத் திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. இதற்காக 1996-97 ஆம் ஆண்டு ஒதுக்கீடு பெறப்பட்டு ரூ.0.14 இலட்சம் முழுமையாக சாதனை எய்தப்பட்டுள்ளது. 1997-98 ம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.0.17 இலட்சம் முழுமையாகச் சாதனை புரியப்பட்டுள்ளது.

### மானிய விலையில் வேளாண்மை இயந்திரங்கள் வழங்குதல்

அறிவியல் தொழில் நுட்பங்கள் முக்கியத்துவம் பெற்றுவரும் இந்நாளில் பாரம்பரியம் மிக்க வேளாண்மைக் கருவிகளுக்குப் பதிலாக விவசாயிகளின் சிரமங்களைக் குறைக்கும் நோக்கத்துடன் இயந்திரங்களைக் கொண்டு இயக்கும் வேளாண்மைக் கருவிகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. இதில் 30 எச்.பி. டிராக்டர் விநியோகத்தில் 1996-97 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு பெறப்பட்டு ரூ.3.6 இலட்சம் முழுமையாகச் சாதனை எய்தப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டு ஒதுக்கீடு பெறப்பட்ட ரூ.6.3 இலட்சம் முழுமையாக சாதனைச் எய்தப்பட்டுள்ளது.

பவர் டில்லர்களில் 1996-97 ஆம் ஆண்டு ஒதுக்கீடு பெறப்பட்டுள்ள ரூ.2.4 இலட்சம் முழுமையும் சாதனை எய்தப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு பெறப்பட்டுள்ள ரூ.3 இலட்சமும் முழுமையாகச் சாதனை எய்தப்பட்டுள்ளது.

இவ்வாறு விவசாயிகளுக்குப் பயனுள்ள விதை, உரம், கூடுதல் மகசூல் பெறுவதற்கான தொழில் நுட்ப உழவியல் முறைகளை எளிதாக்கும் வேளாண்மைக் கருவிகள் ஆகியன தொடர்ந்து விநியோகம் செய்யப்பட்டு இரண்டாவது பசுமைப் புரட்சிக்கு வித்திட இம்மாவட்டம் சிறப்பு முயற்சியினை மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறது.

### மானாவாரி நிலங்களுக்கான தேசிய நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம், தருமபுரி மாவட்டத்தில் மத்தூர், அரூர், காரிமங்கலம், கிருஷ்ணகிரி ஆகிய 4 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1996-97 ஆம் ஆண்டில் ரூ.31.91 இலட்சங்களும் 1997-98 ஆம் ஆண்டில் ரூ.37.82 இலட்சங்களும் திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களில் உள்ள வேளாண் பெருமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு இனங்களின் கீழ் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் பென்னாகரம் வட்டாரத்தில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் தாவரத் தடுப்பு அமைத்தல், தோட்டக்கலை மரம் வளர்ப்பு, மரம் வளர்ப்பு, செயல்விளக்கத் திடல்கள் அமைத்தல், வேளாண்மைக் கருவிகள் வழங்குதல் மற்றும் வேளாண் பெருமக்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகிய இனங்களில் 1996-97ம் ஆண்டில் ரூ.4.997 இலட்சங்களும் 1997-98ம் ஆண்டில் ரூ.1.423 இலட்சங்களும் செலவிடப்பட்டுள்ளன.

### தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் சான்று விதை விநியோகம், இனக்கவர்ச்சிப் பொறி செயல்விளக்கம், என்பிவைரஸ் செயல்விளக்கம், பெருவிளக்கப்பண்ணை அமைத்தல், உழவர் வயல்வெளிப்பள்ளி, தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் அமைத்தல் மற்றும் விவசாயிகள் பயிற்சி முதலிய இனங்களுக்கு (1996-97 ம் ஆண்டு) ரூ.16.72 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 15.75 இலட்சம் சாதனை அடையப்பட்டது. இதேபோல் சென்ற ஆண்டு (1997-98) ரூ.18.91 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 18.90 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப் பட்டது.

எண்ணெய்வித்துப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தில் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டும், 1996-97ம் ஆண்டில் எண்ணெய் வித்துப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க ரூ.55 இலட்சம் மானியத் தொகைக்கான இடுபொருட்களும் விவசாயிகளுக்கு வழங்கப் பட்டன.

மேலும், 1997-98ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 46 இலட்சம் மானியத் தொகைக்கான இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப் பட்டன.

இம்மாவட்டத்திலுள்ள கால்நடைகளுக்குச் சத்துள்ள தீவனப் பயிர் அளித்து பால் உற்பத்தியை பெருக்கிட 1996-97ம் ஆண்டில் ரூ.66,000/- செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மூலம் புல் கரணைகள் மற்றும் தீவனப் பயிர்களின் விதைகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மானாவாரி நிலங்களில் உர உபயோகத்தினை அதிகரிக்கும் பொருட்டு 1996-97ம் ஆண்டில் 4,250 சிறு/குறு விவசாயிகளுக்கு சிறிய பைகளில் உர விநியோகம் ரூ.96,625/-, திருந்திய முறையில் கம்போஸ்ட் தயாரிக்க ரூ.1,12,500/-ம் ஒருங்கிணைந்த உர உபயோகச் செயல் விளக்கத்திடல் அமைக்க ரூ.1,17,000/- மானியம் வழங்கப்பட்டது. அதேபோல் 1997-98ம் ஆண்டில் மேற்கூறிய திட்டங்களின் கீழ் உழவர் பெருமக்களுக்கு ரூ.3,54,500/- மானியம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 1997-98ம் ஆண்டில் பசுந்தாள் உர விதை விநியோகத்திற்கு ரூ.7,500/-ம் புளூரோட்டனி பூஞ்சானம் கொண்டு எரு தயாரிக்க ரூ.18,760- இரசாயன உரம் பயன்படுத்தி கம்போஸ்ட் தயாரிக்க ரூ.1,21,444/- மானியம் வழங்கப்பட்டுள்ளது.

### பயிர் விளைச்சல் போட்டி

1997-98ம் ஆண்டில் நெல், நிலக்கடலை (மானாவாரி) உளுந்து (மானாவாரி) பச்சைப் பயிறு (மானாவாரி) பயிர்களில் அறுவடை செய்யப்பட்டு முதல் மற்றும் இரண்டாம் பரிசுகள் ரூ.36,000/- வழங்கப்பட்டது.

### டான்வா

தமிழ்நாடு பண்ணை மகளிர் பயிற்சித்திட்டம் (டான்வா) டென்மார்க் நாட்டின் உதவியுடன், தருமபுரி மாவட்டத்தில் 1994-95ம் ஆண்டு முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், தருமபுரி, ஊத்தங்கரை, பாலக்கோடு, அரூர் மற்றும் கிருஷ்ணகிரியில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சிறு,குறு விவசாயக் குடும்பங்களைச் சார்ந்த திருமணமான பண்ணை மகளிர் பயன்பெற்று வருகின்றனர். பண்ணை மகளிருக்குக் கிராம அடிப்படைப் பயிற்சி, சிறப்பு பயிற்சி, பண்ணை மகளிர் கருத்தரங்கு ஆகியவை நடத்தப்படுகிறது. கற்றுத் தரப்பட்ட தொழில் நுட்பங்களைக் கடைப் பிடிப்பதில் உள்ள சிரமங்கள் மற்றும் சந்தேகங்களைப் போக்கத் தொடர்பணி நடிவடிக்கைப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

1996-97ம் ஆண்டு இத்திட்டத்தின் மூலம் பயிற்சிக்காக ரூ.9.83 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. 1997-98ம் ஆண்டு இத்திட்டத்தின் பயிற்சிகளுக்காக ரூ.9.77 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் இதுவரை 2,625 சிறுகுறு விவசாய குடும்பங்களைச் சார்ந்த பண்ணை மகளிரும், 20,250 சக பண்ணை மகளிரும் பயனடைந் துள்ளனர். உதவி வேளாண்மை அலுவலர் பகுதிகளில் 95 பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன.



20 தமிழரசு 29

தருமபுரி மாவட்டச் சிறப்பிதழ்

# ஒசூர் கால்நடைப்பண்ணை

*தமிழகத்தின் கால்நடைப் பண்ணைகளுள் சிறப்பிற்குரிய இப்பண்ணை தருமபுரியில் உள்ள ஒசூரில் அமைந்துள்ளது. இப்பண்ணையின் வரலாறு நம் நாட்டின் வரலாற்றுடனேயே பின்னிப்பிணைந்துள்ளது. மைசூர் பேரரசர் திப்பு சுல்தானால், அவர் தம் படைகளுக்கு வேண்டிய நேர்த்தியான குதிரைகளை உற்பத்தி செய்ய துவக்கப்பட்டது. பின்னர் ஆட்சிபுரிந்த ஆங்கிலேயர் இப்பண்ணையின் இயற்கை அழகையும், வசதிகளையும், அயல்நாடுகளுக்கு ஒப்பான இதன் தட்பவெப்ப நிலையையும் அறிந்து இராணுவக் குதிரைகள் வளர்க்க பொருத்தமான இடம் எனத் தேர்வு செய்து, பேரரசர் திப்புவிடமிருந்து கி.பி.1824ல் கைப்பற்றி மேலும் விரிவுபடுத்தினர்.*



*கடல் மட்டத்திற்கு மேல் 3,015 அடி உயரத்தில் அமைந்துள்ள இப்பண்ணையின் மொத்தப் பரப்பளவு 1641.41 ஏக்கர் ஆகும். இப்பகுதியின் தட்பவெட்ப நிலை அதிக அளவு 30° செ.கி. குறைந்த அளவு 15° செ.கி. ஈரப்பதம் 30% மற்றும் ஆண்டு சராசரி மழை அளவு 84 செ.மீ. ஆகும்.*

*பண்ணையில் தற்பொழுது செயலாற்றி வரும் பிரிவுகள் :*

### வம்சாவழிச் சோதனைத் திட்டம்

*வம்சாவழிச் சோதனைத் திட்டமானது 1972ல் மைய அரசு உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு தற்சமயம் தமிழக அரசே ஏற்று சிறந்த முறையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இச்சோதனைத் திட்டம் அதிகப் பால் கொடுக்கும் இனமான "சிந்தி" இனத்தில் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டமானது காளைகளைச் சோதனை செய்யும் திட்டமாகும்.*

*காளைகள் பார்ப்பதற்கு வலிமையாகவும், திடகாத்திர உடலமைப்பு கொண்டவைகளாகவும் இருந்தால் கூட இது சிறந்த காளை என்று சொல்லி விட முடியாது. அதற்கு இருக்கும் பால் கொடுக்கும் திறன், அதற்குப் பிறக்கும் பெண் கன்றுகளுக்கு செல்கிறதா என்று சோதனை செய்யும் திட்டம் தான் இந்த வம்சாவழி சோதனைத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் பரிசோதிக்கப்பட்ட பொலிகாளைகளைத் தான் சிறந்த காளைகள் என்று நிர்ணயம் செய்ய முடியும். இத்திட்டத்தினால் தான் பல நாடுகள் பால் உற்பத்தியை அதிகப்படுத்தி உள்ளன. ஒரு நாட்டினுடைய பால் உற்பத்தித் திறனை அதிகப்படுத்த வேண்டுமானால் இது போன்ற ஆராய்ச்சித் திட்டம் செயல்படுக்கப்பட்டாக வேண்டும்:*

### கள வம்சாவழிச் சோதனைத் திட்டம்

*இத்திட்டத்தில் சிறந்த அதிக பால் கொடுக்கக் கூடிய பசுவின் கன்று, காளைகளைத் தேர்ந்தெடுத்து அதிக அளவில் எங்கெங்கு பசுக்கள் அதிகம் உள்ளதோ, அப்பசுக்களுக்கு இக்காளைகளின் விந்துகளை செயற்கை முறைக் கருவூட்டல் மூலம் செலுத்தி, அதற்கு பிறக்கும் பெண் கன்றுகளைத் தேர்ந்தெடுத்துப் பெரும் அளவில் சோதனை செய்யும் திட்டமாகும். இதன் மூலம் பொதுமக்களுக்குச் சிறந்த பெண் கன்றுகள் கிடைப்பதுடன், பால் கொடுக்கும் திறன் அதிகரிக்கிறது. இத்திட்டத்தின் கீழ் உட்படுத்தப்பட்ட பொதுமக்களின் கால்நடைகளுக்கு இலவசக் காப்பீடும், கிடேரி கன்றுகளுக்குச் சில சலுகைகளும் வழங்கப்பட்டு வருகிறது.*

### பால் பண்ணைப் பிரிவு

*பால் பண்ணைப் பிரிவில் கலப்பினக் கால்நடைகள் (சிந்தி ஃபிரீசியன், சிந்தி ஜெர்சி) போன்ற கலப்பினக் கால்நடைகள் பராமரிக்கப்பட்டு வருகிறன. மேலும் இப்பால்பண்ணைப் பிரிவில் சிறந்த கலப்பினக் காளைகள் உற்பத்தி செய்வதுடன், சிறந்த கலப்பினக் கிடாரிக் கன்றுகளும் உற்பத்தி செய்து காளை மற்றும் தாய்*

பண்ணை எனப் பராமரிக்கப்படுவதுடன் இதில் உற்பத்தியாகும் பால் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

### கால்நடை மருத்துவமனை

இப்பண்ணையில் இருக்கும் கால்நடைகள் நோய்வாய்ப்பட்டால், அதனை உடனடியாக கவனிக்கும் பொருட்டு, இக்கால்நடை மருத்துவமனை இயங்குவதுடன், கால்நடைகளின் ஆரோக்கியத்தினைக் கருதி தடுப்பூசி போடுதல் குடற்புழு நீக்கம் செய்தல், நோய் வாய்ப்பட்ட கால்நடைகளுக்குச் சிகிச்சையளித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### ஆய்வுக்கூடப் பிரிவு

நோய்வாய்ப்பட்ட கால்நடைகளின் இரத்தம், மலம், இதர நோய்களின் அறிகுறிகளை ஆராய இவ்வாய்வுக்கூடம் பயன்பட்டு வருகிறது.

### குதிரை வளர்ப்பு

இப்பண்ணை, குதிரைகள் வளர்ப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட பண்ணையாகும். அதனால் இக்குதிரைகள் அழிந்துவிடக் கூடாதென்று சுத்தியவார்தரோ கலப்பினக் குதிரைகளும், உயர் ரகக் குதிரைகளும், மைய அரசின் உதவியுடன், மாநில அரசு ஏற்று மிகச் சிறந்த முறையில் இனப்பெருக்கம் செய்யப்பட்டு, காவல்துறை, இராணுவத்துறை, விளையாட்டுத்துறை போன்ற அரசு ஏற்று நடத்தும் நிறுவனங்களுக்கு அனுப்பத் தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### உறைவிந்து உற்பத்தி நிலையம்

இப்பிரிவில் மத்தியப் பிரிவிலிருந்து அனுப்பப்படும் காளைகளின் விந்துவைச் சேகரித்து பரிசோதனை செய்து அவ்விந்துவை உறைவிந்துக் குச்சிகளாக உற்பத்தி செய்து, பாதுகாக்கப்பட்டு வருகிறது. நம் நாட்டினமான சிந்தி, காங்கேயம், அலிகார் போன்ற காளைகளின் உறைவிந்துக் குச்சிகள் பாதுகாக்கப்பட்டு வருவதுடன், விநியோகம் செய்யப்பட்டும் வருகிறது. உயரினக் காளைகளான ஃபிரீசியன், ஜெர்சி, தூய மற்றும் கலப்பினக் காளைகளின் விந்துகளை சேகரித்துச் உறைவிந்துக் குச்சிகளில் சேமித்துப் பாதுகாக்கப்பட்டு இம் மாநிலம் முழுவதும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

சென்ற ஆண்டு 7.5 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் தயாரிக்கப்பட்டு, மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்பட்டது. இச்செயற்கை முறைக் கருவூட்டலினால் பொதுமக்கள் வளர்க்கும் பசுக்களுக்கு பிறக்கும் கன்றுகள் சிறந்தவைகளாக திகழ்வதுடன், பால் கொடுக்கும் திறனும் அதிகரிக்கப்பட்டு வருகிறது.

தொலைதூரக் கிராமங்களில் எங்கெங்கு செயற்கை முறைக்கருவூட்டல் இல்லையோ அங்கெல்லாம் கலப்பினக் காளைகள் பொது மக்களுக்கு வழங்கப்படுகிறது. இதுவரை இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 160 காளைகள் அனுப்பப்பட்டுள்ளன.

### ஆட்டுப் பிரிவு

இப்பிரிவில் கர்நாடக மாநில மாண்டியா இன ஆடுகளும், நியூசிலாந்து இன கோரிடேன் என்ற இனத்தினைக் கலப்பினம் செய்து, மாண்டியா தூய இனம், கோரிடேல் கலப்பினம் உற்பத்தி செய்யப்படுகிறது.

### செம்மறி ஆடு மாண்டியா தூய இனம்

இது கறிக்குச் சிறந்த ஆடாக இருப்பதுடன், இதனுடைய உரோமம் கம்பளம் செய்யப் பயன்பட்டு வருகிறது. இதனுடைய பூர்வீகம், மாண்டியா மாவட்டம், கர்நாடக மாநிலம் ஆகும். தலை, கழுத்து செம்மண் நிறம் உடல் வெள்ளை நிறம். ஆண் ஆடு 35 லிருந்து 45 கிலோ எடை, பெண் ஆடு 30லிருந்து 35 கிலோ எடை உடையது ஆகும்.

### வெள்ளாடு

கொடி, வள்ளி, ஜமுனாபாரி, தெலிச்சேரி போன்ற இனங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்பிரிவில் உற்பத்தியாகும் நல்ல சிறந்த கிடாக்களை வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் ஏழை விவசாயிகளுக்குச் சந்தை விற்பனை விலையை விட மிகக் குறைந்த விலையிலேயே வழங்கப்பட்டு வருகிறது. இதனால் ஏழை விவசாயிகள் அவர்கள் வளர்க்கும் ஆட்டின உற்பத்தித் திறனை அதிகரித்துப் பயனடைகின்றனர்.

### பன்றிப்பிரிவு

இப்பிரிவில் பெரிய வெண்பன்றி இனமான யார்க்ஷயர், லேண்ட்ரேஸ், ஹேம்ப்ஷயர் போன்ற இனங்கள் இனவிருத்தி செய்யப்பட்டு பால்







மறந்த குட்டிகளை ஏழை விவசாயிகள் மற்றும் வறட்சிக்கு இலக்காகும் பகுதி மக்கள் பொருளாதார முன்னேற்றம் அடையும் வகையில் பன்றிகள் வளர்க்க அதிக அளவில் பன்றிக் குட்டிகள் வளர்க்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இப்பன்றிகள் வளர்ப்பு அதிக இலாபம் தரக்கூடியது. தற்பொழுது எல்லா மாவட்டங்களிலும் பன்றி இறைச்சி உண்ணும் வழக்கம் அதிகரித்து வருகிறது.



### கோழி விரிவாக்க நிலையம்

இப்பிரிவில் பேப்காக், எச்.எச்.260 போன்ற இனங்கள் முட்டைக்காக வளர்க்கப்பட்டு இம்முட்டைகள் இப்பண்ணையிலுள்ள உறைவிந்து பிரிவிற்கு வழங்கப்படுவதுடன், பொதுமக்களுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், 1 வாரக் குஞ்சுகள், 12 வாரக் குஞ்சுகள் முட்டையிடும் தருவாயிலுள்ள கன்னிக்கோழிகள், புழக்கடைக் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் எல்லா மாவட்ட விவசாயிகளுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் கிரிராஜா, ஆர்.ஐ.ஆர் போன்ற கோழிகளும், நம் நாட்டினமான அசீல் என்ற பலவகை அசீல் இன சண்டைக் கோழிகளும் உற்பத்தி செய்யப்பட்டு, ஏழை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

வான்கோழி வளர்ப்புத் திட்டமும் விரைவில் செயல்படுத்தத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### புல்வெளிப் பிரிவு

இப்பிரிவில் இப்பண்ணையைப் பாதுகாக்கவும் காவல்புரியவும் காவலாளிகளை நியமித்தல், விருந்தினர் மாளிகை பராமரித்தல், காய்ந்த புல் கால்நடைகளுக்கு வழங்க ஏதுவாக வறட்சி மாதங்களுக்கும், மழைக் காலங்களுக்கும் தேவைப்படும் காய்ந்த புல்லை உற்பத்தி செய்து வழங்க இப்பிரிவு செயல்படுவதுடன், மேய்ச்சல் நிலங்களில் நல்ல சத்துள்ள புற்கள் வளர, மாடுகள் மேய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



### தோட்டப்பிரிவு (விவசாயப் பிரிவு)

இப்பிரிவில் இப்பண்ணை கால்நடைகளுக்குத் தேவையான பசும்புல் வளர்ப்பு மற்றும் இதில் புரதச் சத்து மிக்க இனமான மக்காச்சோளம், காராமணி, குதிரை மசால், பெர்சிம், ஓட்ஸ், ஸ்டைலோ போன்றவைகளை உற்பத்தி செய்தும், வருடாந்திரப் பயிர்களான கோ.1, கோ.2, கோ.3, என்.பி.சாரி, கினியாபுல், ரோட்ஸ் புல், பாராபுல், கொழுக்கட்டை புல் போன்றவைகளை உற்பத்தி செய்து கால்நடைகளுக்குத் தேவைப்படும் அளவிற்கு வழங்கப்படுகின்றன.

எனவே, இவ்வகையில் நன்மை பயக்கும் இப்பண்ணை தமிழ் மக்களுக்கு - குறிப்பாக தருமபுரி மாவட்டப் பொது மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றால் அது மிகையாகது.

★ ★ ★

# மகளிர் மேம்பாடு

பெண்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காகத் தமிழக அரசு பல்வேறு வளர்ச்சி மற்றும் நல்வாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இத்தகைய திட்டங்களில் ஒன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் ஆகும்.



இத்திட்டத்தின் மூலம் பெண்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதுடன் அவர்களின் தன்னம்பிக்கை மற்றும் பொது அறிவினையும் மேம்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்தத் திட்டம் தமிழ்நாடு மேம்பாட்டுக் கழகம் என்னும் அரசு நிறுவனத்தின் மூலம் செயல் படுத்தப்படுகிறது.

**தருமபுரி மாவட்டத்தில் மகளிர் மேம்பாட்டுத் திட்டம்**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் மகளிர் மேம்பாட்டுக்காக ஒரு தன்னிகரற்ற திட்டம், ரோம் நாட்டிலுள்ள 'பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தில்' (International Fund for Agricultural Development - IFAD) உதவியுடன் 1989ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

இந்தத் திட்டம் ஆசியாவிலேயே - அதிலும் குறிப்பாக இந்தியாவில் தருமபுரி மாவட்டத்தில் தான் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமே, பொருளாதாரத்தில் பின்தங்கிய மகளிரை முன்னேற்றுவதாகும். கிராம அளவில், வறுமைக்கோட்டிற்குக்கீழ் இருக்கும் மகளிர் அனைவரும் குழுக்களாக அமைந்து, தங்களது முன்னேற்றத்திற்காக ஒத்துழைத்து, முன்னேறுவது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இந்தத் திட்டத்தில் 15 முதல் 20 பெண்கள் இணைந்து குழுக்களாகச் செயல்படுகின்றனர். இவ்வாறு பெண்கள் குழுக்களாக இணைந்து செயல்படுவதால் அவர்களது பொதுப்பிரச்சினைகளையும் தனிப்பட்ட குடும்பப் பிரச்சினைகளையும் தங்களுக்குள் விவாதித்துத் தீர்த்துக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், குழுவில் உள்ள பெண்கள் எந்தத் தொழிலை மேற்கொள்ள வேண்டுமென்று தாங்களாகவே முடிவு செய்ய இயலுகிறது. அரசு சாரா அமைப்புகளின் மூலம் (Non Governmental Organisation) இந்தக் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு, இவற்றின் சமூகப் பொருளாதார முன்னேற்றம் மெதுவாகவும் படிப்படியாகவும் உயர நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மகளிர் குழுக்கள் அமைப்பதோடு மட்டுமின்றி, சமூக நலத்திட்டங்கள் குறித்து பெண்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்குவதும், சுற்றுப்புறச் சுகாதாரம் பற்றி எடுத்துக்கூறுவதும் இந்தத் திட்டத்தின் மற்றொரு குறிக்கோளாகும்.

குழுவின் சேமிப்பு நிதிக்காக, முறையாகச் சேமிப்பு செய்யும் பழக்கம் குழு உறுப்பினர்களிடையே வலியுறுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் மகளிர் குழுவிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் மாதம் அவர்களால் இயன்ற அளவு சேமிக்க வேண்டும். இவ்வாறு சேமிக்கப்பட்ட பணம் குழுவின் பெயரில் வங்கிகளில் போடப்படுகிறது. ஒவ்வொரு சேமிப்புக் குழுவிலும் 20 உறுப்பினர்கள் இருப்பர். 18 முதல் 55 வயதுக்குள் இருக்கும் மகளிரே, அதிலும் குறிப்பாக, திருமணமான பெண்களே இந்தத் திட்டத்தில் சேரத் தகுதியுடையவர்களாவர்.

குழு உறுப்பினர்களது சொந்த அவசரத் தேவைகளுக்காகச் சிறு கடன்களைக் குழு சேமிப்பு நிதியிலிருந்து கொடுத்து உதவுவது இத்திட்டத்தின் மற்றொரு சிறப்பு அம்சமாகும். வட்டி விகிதத்தையும் கடனை அடைக்கும் காலக்கெடுவையும் குழுவே தீர்மானிப்பதால் கிராமப் பெண்கள் தங்களது அவசரத் தேவைகளுக்காகத் தனி நபர்களிடம் மிக அதிக வட்டியில் கடன் பெறுவது தவிர்க்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்தில் இதுவரை 1,145 மகளிர் குழுக்கள் உருவாக்கப்பட்டு, இதன்மூலம் 28,536 பெண்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் குழுக்கள் ரூ.262.51 இலட்சம் தொகையைச் சேமிப்பாக வங்கிகளில் போட்டிருக்கிறது. இந்தக் குழுக்களின் மூலம் இதுவரை சங்கக் கடனாகச் சுழற்சி முறையில் ரூ.1102.38 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளது.







**ஒவ்வொரு குழுவிலும் ஒரு ஊக்குநர்:**

ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு ஊக்குநர் நியமிக்கப்படுவார். இவர் அந்தக் குழுவில் ஒரு உறுப்பினராக இருப்பதோடு, குழு உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவராகவும் இருக்க வேண்டும். இந்த ஊக்குநருக்கு ஐபாட் திட்டத்தின் மூலம் மாதம் ரூ.180 மதிப்பூதியமாக அளிக்கப்படுகிறது. அரசு சாரா அமைப்புகளின் மூலம் இந்த ஊக்குநர்களுக்குச் சிறந்த முழுமையான பயிற்சி அளிக்கப்படும். ஊக்குநர்களின் பணியைக் கண்காணிக்க 12 முதல் 15 ஊக்குநர்களுக்கு ஒரு மேற்பார்வையாளர் உள்ளார். இந்த மேற்பார்வையாளர்கள் பெண்கள் குழுக்களை நல்ல முறையில் இயங்கச் செய்வதுடன் கிராமங்களிலுள்ள எல்லாக் குழுக்களும் முன்னேற்றம் அடைய வழிவகை செய்கிறார்கள்.

பட்டப்படிப்புப் படித்த பெண்களே மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு மாதம் ரூ.1,500 நிலையான ஊதியமாக வழங்கப்படுகிறது. மகளிர் குழுக்களுக்கும் திட்டத்துக்கும் இடையே ஒரு தொடர்பாளராக இருந்து செயல்படுவதும் மேற்பார்வையாளர்களின் ஒரு முக்கியப் பணியாகும்.



**கடன் உதவி:**

குழு உறுப்பினர்களின் வருகை, சேமிப்பு அளவு ஆகியவற்றைக் கண்காணித்து, குழுக்கள் நிலையான வளர்ச்சியை அடைந்த பிறகு (சுமார் 6 மாதங்களுக்குப் பிறகு), பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் மானியத்துடன் தருமபுரி மாவட்டத்திலுள்ள இந்தியன் வங்கியின் மூலம் இக்குழுக்களுக்குக் கடன்உதவி அளிக்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின்கீழ் விவசாயம், வேளாண் காடுவளர்ப்பு, தோட்டக்கலை, பட்டுப்பூச்சி வளர்ப்பு, பூச்செடி வளர்த்தல், கால்நடை மற்றும் கிராமக் கைத்தொழில்கள் போன்ற நிலம் சார்ந்த தொழில்களுக்கு மகளிர்க்குக் கடன்உதவி வழங்கப்படுகிறது. மேற்கண்ட தொழில்கள் சம்பந்தப்பட்ட துறையின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படுகிறது.

மானியமாக வழங்கப்படும் தொகை, பயன்பெறுபவரின் பெயரில் கடன் வழங்கப்படும் வங்கியிலேயே வைப்புத்தொகையாகச் செலுத்தப்பட்டு, கடன் தொகை முழுமையாகச் செலுத்தப்பட்ட பின் மானியத்தொகை பயனாளிக்கு வழங்கப்படும்.

குழு உறுப்பினர்களுக்குச் சம்பந்தப்பட்ட துறையின் மூலம் தேவையான பயிற்சி அளிக்கப்படும். மேற்கொள்ளப்படும் தொழிலுக்கு ஏற்பப் பயிற்சியின் கால அளவும் மாறுபடும்.

**திட்ட ஒருங்கிணைப்புக் குழு:**

மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தலைவராகவும், மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் திட்ட அலுவலரைச் செயலாளராகவும் கொண்டு ஒரு திட்ட ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இந்த ஒருங்கிணைப்புக் குழுவில் இந்தியன் வங்கியின் மண்டல மேலாளர் ஒருவரும், சம்பந்தப்பட்ட துறையின் அலுவலர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள். இந்தக் குழு இரு மாதத்திற்கு ஒருமுறை கூடி மகளிர் குழுக்களின் முன்னேற்றம் குறித்து ஆராயும்.

இது தவிர, விவசாய நிலம் உள்ள உறுப்பினர்களுக்கு, பாசனக் கிணறுகளை ஆழப்படுத்துதல், சுவர்கட்டுதல், குழாய் அமைத்தல் போன்ற வேளாண் பொறியியல் சம்பந்தமான தொழில்களுக்கும் கடனுதவி வழங்கப்படும். மேற்கண்ட வேளாண் பொறியியல் சம்பந்தமான பணிகளுக்குத் தேவையான மொத்தத் தொகையும் ஐபாட் திட்டத்தின் மூலமே கடனாக வழங்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்தில் தளி, கெலமங்கலம், சூளகிரி, தருமபுரி, நல்லம்பள்ளி, பென்னாகரம், பாப்பிரெட்டிப்பட்டி, மொரப்பூர், அரூர், ஊத்தங்கரை, மத்தூர், ஒசூர், கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், வேப்பனப்பள்ளி, காரிமங்கலம், பாலக்கோடு மற்றும் பர்கூர் ஆகிய 18 வட்டாரங்களில் மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் 1998-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் முடிவுறும்.

இந்தத் திட்டத்தின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் கடந்த ஆண்டுகளில் 21,190 பேர் பயனடைந்துள்ளனர். இவர்களுக்குக் கடன் மற்றும் மானியமாக ரூ.1439.73 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் (1998-1999) 2,000 நபர்களுக்கு 70 இலட்சம் மானியத்துடன் ரூபாய் இரண்டு கோடி அளவுக்கு வங்கிக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டசபையில் அறிவிக்கப்பட்டபடி, மகளிர் மேம்பாட்டுத் திட்டம் இந்த மாவட்டத்தில் தொடங்கி செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக மகளிர் குழுக்கள் அமைத்து, உரிய பயிற்சிகள் வழங்கி சுயஉதவிக் குழுக்களாகச் செயல்பட வைக்கப்படும். வங்கிகளிடம் நேரடியாகக் கடன்பெற்று குழு உறுப்பினர்கள் வாழ்வில் முன்னேற வழி செய்யப்படும். தற்போது 258 மகளிர் திட்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 4,896 மகளிர்கள் குழு உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தக் குழுக்களின் மொத்தச் சேமிப்பு 30-6-98 வரை ரூ.47.20 இலட்சங்கள் ஆகும். ★

# கி.பி.2000-க்குள் அனைவருக்கும் கல்வி

அத்தானி மண்டபத்திலே அதியமான் சத்தாக விழவேண்டும் என்று அருங்கனியாம் 'நெல்லிக் கனி'யை அவ்வையார் வழங்கிய தகடூர் மாவட்டத்தில் உள்ள பெண்களின் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை தேசிய சராசரியை விடக் குறைவாக உள்ளதால் தொடக்கக் கல்வித் திட்டம் இம்மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது. தேசிய அளவில் பெண்கள் 52.2% தருமபுரி மாவட்டம் 35.8%.

**திட்டத்தின் குறிக்கோள்கள்:**

பள்ளி வயது எய்திய குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்து அவர்களை 5ஆம் வகுப்பு வரை தொடர்ந்து கற்கச் செய்தல்.

ஒவ்வொரு நிலையிலும் குறைந்த அளவு கற்றல் திறன்களை வளர்த்துக் கொள்ளும் வகையில் தரமான கல்வி அளிக்க வகை செய்தல்.

கற்றல் கற்பித்தலுக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கப் போதிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**திட்டத்தின் செயல்பாட்டு விவரங்கள்:**

இத்திட்டம் 7 ஆண்டுகள் செயல்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு உலக வங்கி மொத்தம் ரூ.40 கோடி நீண்ட காலக் கடன் அடிப்படையில் வழங்குகிறது. இதில் 85% மத்திய அரசும் 15% மாநில அரசும் ஏற்றுக்கொள்கிறது.

இத்திட்டத்தின் மூலம் கற்றல் கற்பித்தல் சிறப்பாக அமைய 97-98ஆம் ஆண்டில் 487 கூடுதல் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் மூலம் 94-95 முதல் 96-97 வரை மொத்தம் 300 கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 330 பள்ளிகளில் கழிப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் 5 ஒன்றியங்களில், மாற்றுப் பள்ளி மையங்கள் 247 ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் 6,686 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் திறன் அதிகரிக்க ஒரு ஆசிரியருக்கு ரூ.500 வீதமும், பள்ளி அடிப்படை வசதியை பெருக்க ஒரு பள்ளிக்கு ரூ.2,000 வீதமும் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் 2,096 பள்ளிகளும், 6,531 ஆசிரியர்களும் பயன் பெற்று வருகிறார்கள்.

இம்மாவட்டத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்திலுள்ள மகளிர் சங்கங்களைக் கொண்டு டி.பி.இ.பி.யின் நோக்கங்களைக் குறிப்பாக நலிந்த பிரிவு பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கும் ஊனமுற்ற குழந்தைகளை வாழ்க்கையில் உயர்த்தவும் டி.பி.இ.பி. பாடுபடுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளின் கல்வித்தரம் உயர சிறப்புப் பயிற்சி வகுப்புக்கள் மாலை நேரங்களில் 303 மையங்களில் நடத்தப்பட்டு 7,175 மாணவிகள் பயனடைகிறார்கள்.

இத்திட்டத்தினால் இம்மாவட்டத்திலுள்ள 18 ஒன்றியங்களில் 18 ஒன்றிய பயிற்சி மையங்கள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையங்கள் மூலம் முதன்மைப் பயிற்சியாளர்களைக் கொண்டு அவ்வொன்றியத்திலுள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சிகள் மற்றும் பணிமனைகள் நடத்தப்பட்டு வருகிறது. இதனால் கல்வித் தரம் உயர்த்தப்படுகிறது. பள்ளி வயதுக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பது மற்றும் இடையில் நின்றுவிடாமல் தொடர்ந்து படிக்கவைப்பது, தொடர்பாகப் பெற்றோர்களுக்கும் பொதுமக்களுக்கும் கல்வி விழிப்புணர்வு முகாம்கள் 96-97 மற்றும் 97-98ஆம் ஆண்டுகளில் ஒன்றிய அளவிலும், கிராம அளவிலும் நடத்தப்பட்டன.

இதன் மூலம் மாணவர்கள் சேர்க்கை 1996-97ஆம் ஆண்டு 2,87,723 ஆகும். 1997-98ஆம் ஆண்டில் 2,90,367 ஆக உயர்ந்துள்ளது. இடையில் நின்றவர்களின் சதவிகிதம் முறையே 1995-96ல் 23%, 1996-97ல் 20% ஆகக் குறைந்துள்ளது. மேலும் இத்திட்டத்திற்குப் பிறகு மாணவர்களின் சேர்க்கை அதிகரித்துள்ளதால் தமிழக அரசால் 1995-96ல் 6 பள்ளிகள், 1996-97ல் 88 பள்ளிகள், 1997-98ல் 42 பள்ளிகள், 1998-99ஆம் ஆண்டில் 50 புதிய பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன.

பள்ளியில் தயாரிக்கப்பட்ட உபகரணங்கள் - 1997ல் ஏப்ரலில் நாகபுரியில் நடைபெற்ற உபகரணங்கள் மேளாவில் தருமபுரி மாவட்டத்திற்கு இரண்டு பரிசுகள் கிடைத்துள்ளன.

மாநில அளவிலுள்ள கருத்தாளர்களைக் கொண்டு தருமபுரி மாவட்டத்தில் 4ஆம் வகுப்புப் பாட புத்தகங்கள் தயாரிக்கும் பணி சிறப்பான முறையில்ல முடிக்கப்பட்டுள்ளது.

பள்ளி மேம்பாட்டுத் திட்டம் தொடர்பாகப் பள்ளி வரைபடம் மற்றும் நுண்ணலகு திட்டப்பணிகளில் 2,096 தலைமை ஆசியர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

முடிவாக படிக்காதவனெல்லாம் 'பதர்'; 'பிச்சை எடுத்தும் படிக்க வை'; 'வயிற்றுக்குச் சோறு வேண்டும். இங்கு வாழும் மனிதர்களுக்கெல்லாம் கல்வி வேண்டும்' என்ற கவிஞர்களின் 'கனவு' இம்மாவட்டத்தில் நனவாகிறது என்பதில் ஐயமில்லை.







# பாலக்கோடு சர்க்கரை ஆலை

தருமபுரி மாவட்டத்தில் உள்ள வட்டங்களில் பாலக்கோடு வட்டத்தில் கரும்பு உற்பத்தி அதிக அளவில் இருந்து வந்தது. கரும்பு சாகுபடியாளர்களில் பலர் அருகில் உள்ள வெல்ல உற்பத்தியாளர்களுக்கே சரியான விலையில்லாமல் தங்கள் கரும்பைக் கொடுக்க வேண்டியிருந்தது. சிலர் பல இடையூறுகளுக்கிடையில் அதிகப் போக்குவரத்து செலவு செய்து சுமார் 150 கி.மீ. தொலைவிலுள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கோ அல்லது 110 கி.மீ. தொலைவிலுள்ள ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கோ தங்கள் கரும்பினை எடுத்துச்சென்று விற்று வந்தனர்.

இந்நிலையில் சேலம் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு 1965 அக்டோபர் 2-ம் நாள் காந்தியடிகள் பிறந்த தினத்தன்று தருமபுரியை தலைமையிடமாகக் கொண்டு தருமபுரி மாவட்டம் உருவாக்கப்பட்டது. கரும்பு சாகுபடியாளர்கள் தங்கள் விளைச்சலுக்குச் சரியான விலையைப் பெறவும் கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் இம்மாவட்டத்தில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க முயற்சி எடுக்கப்பட்டு 1966-ம் ஆண்டு மத்திய அரசு அனுமதி பெறப்பட்டது.

**பணியாளர்கள் விவரம்**

இவ்வாலையில் 778 நிரந்தரம் மற்றும் பருவகால ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**கணக்குகளும் நிதி நிலைமையும்**

ஆலை நிலைச் சொத்துக்களின், மதிப்பு ரூ.1,236.37 இலட்சம்.

**கரும்பு விலை**

1997-98 ஆம் ஆண்டு குறைந்த அடிப்படை விலையாக ரூ.484.50 மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாலை கரும்பின் விலை டன்னுக்கு ரூ.586.50 ஆகிறது. ஆனால் மாநில அரசு ரூ.660/- நிர்ணயித்துள்ளது. மாநில அரசால் 1997-98ஆம் ஆண்டு கரும்புக்கு ரூ.815.30 வழங்கப்பட்டு வருகிறது.

**கரும்பு பதிவும் கரும்பு உற்பத்தியும்**

இவ்வாலை நாள் ஒன்றுக்கு 2,000 டன்கள் கரும்பு அரைவை செய்யும் திறன் கொண்டது. இதன் 100%



அரைவைக்கு ஒவ்வொரு ஆண்டும் 3,44,000 டன்கள் கரும்பு அரைவை செய்யப்பட வேண்டும். கடந்த ஆண்டுகளில் அரைவை செய்த விவரம், 1996-97 ஆம் ஆண்டு 2,56,330 டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டு 3,98,585 டன் உற்பத்தி செய்யப்பட்டது. இது 115.9 விழுக்காடு ஆகும்.

**ஆலை விவசாயிகளுக்கு வழங்கும் சலுகைகளும், கரும்பு அபிவிருத்தித் திட்டங்களும்**

ஆலைக்கு கரும்பு பதிவு செய்யும் ஆலை அங்கத்தினர்களுக்கு ஆலையின் மூலம் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்படுகிறது.

**உயர்ரகக் கரும்பு மான்யம்**

நடவு/மறுதாம்பு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.5/- வீதம் ஊக்குவிப்பு மான்யம் வழங்கப்படுகிறது.

**நாற்றங்கால்**

விவசாயிகளுக்கு நோயற்ற நல்ல தரமான விதைக்கரும்புகள் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக நாற்றங்கால் கரும்பு பயிர்செய்யப்பட்டு, இதன் மூலம் இளம் வயதுடைய தரமான விதைக்கரும்பு வழங்கப்படுகிறது. முதல் நிலை நாற்றங்கால் நடவிற்கு அங்கத்தினர்களுக்கு விதைக்கரும்புக்குண்டான முழுக் கிரயத்தொகையும், வாகன போக்குவரத்து செலவும் முழுமையாக ஆலையாரால் மான்யமாக வழங்கப்படும்

**நுண்ணுயிர் உரம் மான்ய விலையில் வழங்குதல்**

நுண்ணுயிர் உரம் மண்ணின் வளத்தை மேம்படுத்தவும் இயற்கை உரமாகவும் பயன்படுகிறது.

அசோஸ்பிரில்லம், அசிட்டோபேக்டர் மற்றும் பாஸ்போபேக்டீரியம் போன்ற உயர் உரங்கள் 50 சதம் மான்ய விலையில் ஆலையாரால் வழங்கப்படுகிறது.

**கரும்பு வயலில் களையைக் கட்டுப்படுத்துதல்**

கரும்பு வயலில் களையைக் கட்டுப்படுத்த களைக்கொல்லி மருந்து 25 சதம் மான்ய விலையில் ஆலையாரால் அங்கத்தினர்களுக்கு வழங்கப்படுகிறது.

**பூச்சி மருந்துகள் மான்ய விலையில் வழங்குதல்**

பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த பயிர் பாதுகாப்பு மருந்துகள் 25 சதம் மான்ய விலையில் ஆலையாரால் அங்கத்தினர்களுக்கு வழங்கப்படுகிறது.

**நுண்ணுயிர் பூச்சிக்கொல்லிகள் வழங்குதல்**

கரும்பைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த நுண்ணுயிர் பூச்சிக்கொல்லிகள் 50 சதம் மான்ய விலையில் ஆலையாரால் அங்கத்தினர்களுக்கு வழங்கப்படுகிறது.

**போக்குவரத்து வாடகை மான்யம்**

ஆலையிலிருந்து 10 கி.மீ. தூரத்திற்குமேல் கரும்பு பயிரிட்டு ஆலைக்குப் பதிவு செய்து சப்ளை செய்யும் கரும்பு விவசாயிகளுக்கு 10 கி.மீ.க்கு மேல் உள்ள வாகன வாடகை ஆலையாரால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மாநில அரசு இது தொடர்பாக மறு உத்தரவு வழங்கினால் அதன்படி செயல்படுத்தப்படும்.

**ஒருங்கிணைந்த உழவியல் பரிசோதனை வயல்கள்**

நமது பகுதிக்கேற்ப கரும்பு ரகங்களைக் கண்டறிய கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்த ஒருங்கிணைந்த உழவியல் பரிசோதனை வயல்கள் அமைக்கும் பட்சத்தில் ஏக்கருக்கு ரூ.3,000/- வீதம் பரிசோதனை வயல்களுக்கு ஆலையாரால் மான்யமாக வழங்கப்படுகிறது.

**சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை**

**கோபாலபுரம், அரூர் வட்டம்**

*முதலமைச்சர் கலைஞர் அவர்களால், ரூ.20 கோடி மூலதன மதிப்பீட்டில் இச்சர்க்கரை ஆலைக்கு 13.5.1990 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, ரூ.33 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு, 1992-93லிருந்து அரவை துவக்கப்பட்டு சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது.*

*ஆலையின் செயற்பாட்டு எல்லைகளாக, தருமபுரி மாவட்டத்திலுள்ள அரூர், பாப்பிரெட்டி வட்டங்கள், கிருஷ்ணாபுரம் பகுதியிலுள்ள 5 வருவாய்க் கிராமங்கள், சேலம் மாவட்டத்தில் ஓமலூர் வட்ட 2 வருவாய்க் கிராமங்கள், சேலம் வட்டம் 2, தூரமங்கலம், வலசையூர், காரிப்பட்டி, வாழப்பாடி மற்றும் பேரூர் பகுதிகள் ஆகியவைகள் உள்ளன.*

*தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் ரூ.1.34 கோடி செலவில், நாளொன்றுக்கு 27,440 யூனிட்டுகள் மின்சாரம் தயாரிக்கும் திட்டமும், சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 19.6.98 முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது.*







**கிராமக் கூட்டங்கள்**

திருந்திய கரும்பு சாகுபடி முறைகள் பற்றி விளக்குவதற்கும், விவசாயிகளின் கோரிக்கைகளை ஆராயவும் கிராமக் கூட்டங்கள் ஆலை அரைவைக் காலத்தில் ஒன்றும் அரைவையில்லாத காலத்தில் ஒன்றும் ஆக ஆண்டிற்கு இரண்டு கூட்டங்கள் ஒவ்வொரு கரும்பு கோட்டங்களிலும் நடத்தப்படுகிறது.

**அங்கத்தினர்களுக்குப் பயிற்சி முகாம் நடத்துதல்**

50 முன்னோடி ஆலை அங்கத்தினர்களைத் தேர்வு செய்து திருந்திய கட்டுக்கோப்பு சாகுபடி முறைகள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**கரும்புச் சாகுபடி அங்கத்தினர்களுக்குச் சர்க்கரை வழங்குதல்**

ஆலைக்கு 'சப்ளை' செய்யும் கரும்பு டன் ஒன்றுக்கு அரை கிலோ சர்க்கரை வீதம், கரும்பு வழங்கிய அங்கத்தினர்களுக்குச் சலுகை விலையில் சர்க்கரை வழங்கப்படுகிறது. லெவி சர்க்கரை விலை வெளி மார்க்கெட் சர்க்கரை எக்சைஸ் வரியில் கூடுதலே சலுகை விலையாக இருக்கும்.

**தொழில்நுட்பக் கையேடுகள் மற்றும் பிரதிகள் அச்சடித்தல்**

கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் திருத்திய கட்டுக்கோப்பு சாகுபடி முறைகள் பற்றி கையேடுகள் மற்றும் பிரதிகள் அச்சிட்டு அங்கத்தினர்களுக்கு வழங்கப்படுகிறது.

**பாதை அமைத்தல்**

விவசாயிகளின் வயல்களிலிருந்து ஆலைக்குச் சுலபமாக கரும்பு எடுத்துவர ஆங்காங்கே புதிய பாதைகள் மற்றும் பழுதான பாதைகளை ஆலை மூலம் செப்பனிடப்பட்டு வருகிறது. கரும்புசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 9 சாலைகள் 50.026 கி.மீ. தூரம் மற்றும் ஒரு பாலம் ஆகியவை ரூ.170.70 இலட்சம் செலவில் இதுவரை அமைக்கப் பட்டுள்ளது. மேலும் 2.00 கி.மீ. சாலை மற்றும் ஒரு பாலம் ரூ.31.50 இலட்சம் செலவில் வெவ்வேறு கிராமங்களில் அமைக்கப்பட உள்ளது.

வட்டார அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ஒரு பாலம், ஒரு கல்வெர்ட் மற்றும் 25 சாலையும் ரூ.9,90,672 அமைக்கப்பட்டுள்ளது.

**கரும்பு சாகுபடி கடன்**

நடப்பு ஆண்டில் பதிவுக்கரும்பு சாகுபடி செய்யத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் 2,481 அங்கத்தினர்களுக்கு, 3,701 ஏக்கர்களுக்கு ரூ.206.66 இலட்சங்களும், இதர வங்கிகள் மூலம் 571 அங்கத்தினர்களுக்கு 889 ஏக்கர்களுக்கு ரூ.62.55 இலட்சங்களும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**மண்வாரும் மற்றும் கட்டை பெயர்க்கும் இயந்திரம் அளித்தல்**

அங்கத்தினர்கள் தங்கள் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக நாள் ஒன்றுக்கு குறைந்த வாடகை ரூ.90/- வசூலித்து மண்வாரும் இயந்திரம் அனுப்பப்பட்டு வருகிறது. மேலும் மறுதாம்பு கரும்பு வெட்டிய பிறகு கரும்பு கட்டை பெயர்க்க ஏக்கர் ஒன்றுக்கு ரூ.350/- மட்டும்

கட்டணமாக வசூலித்து கட்டை பெயர்க்கும் இயந்திரம் அனுப்பப்பட்டு வருகிறது.

**தொழிலாளர் நலம் - வீட்டு வசதி**

ஆலையின் வளாகத்தில் மொத்தம் 252 குடியிருப்புகள் கட்டப்பட்டு அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு குறைந்த வாடகையில் வழங்கப் பட்டுள்ளது.

**மருத்துவ வசதி**

ஆலையின் வளாகத்தில் மருத்துவமனை ஒன்று அமைக்கப்பட்டு ஒரு மருத்துவர், ஒரு மருந்தாளுநர், ஒரு பெண் செவிலியர் மற்றும் மூன்று உதவியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. பணியாளர்களுக்கு மற்றும் அவரைச் சார்ந்துள்ள குடும்பத்தினருக்கும் மருத்துவ சிகிச்சை இலவசமாக அளிக்கப் படுகிறது. மேலும் ஆலையில் ஆம்புலன்ஸ் வேன் ஒன்றும் வாங்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.



**சீருடை மற்றும் காலணி**

ஆலையின் தொழிலாளர்களுக்கு இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை மூன்று ஜோடி டெரிக்காட்டன் சீருடைகள், தையல் கூலியுடன் வழங்கப் படுகிறது. மேலும் தொழிலாளர்களுக்கு இராண்டாண்டிற்கு ஒருமுறை ஒரு ஜோடி காலணியும் மற்றவர்களுக்கு ஆண்டிற்கு ஒரு ஜோடி செருப்பும் ஆலையாரால் வழங்கப்படுகிறது.

**சிற்றுண்டிச்சாலை**

ஆலையில் உள்ள பணியாளர்களின் தேவைக்காக மிகக்குறைந்த விலையில் உணவுப்பண்டங்கள் ஆலையினரால் நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலை மூலம் பணிநேரங்களில் அளிக்கப்படுகிறது.

**கூட்டுறவு சங்கங்கள்**

பணியாளர்களின் மளிகை சாமான்கள் தேவைக்கு ஒரு கூட்டுறவு பண்டகசாலையும், சேமிப்பு மற்றும் கடன்பெறும் வசதிக்கு ஒரு கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கமும் சிறப்பாக இயங்கி வருகின்றது.

**பொழுதுபோக்கு**

பணியாளர்களின் பொழுதுபோக்கிற்கான மூன்று மனமகிழ் மன்றங்களும் மற்றும் விளையாட்டு மைதானங்களும் உள்ளன. மனமகிழ் மன்றங்கள் மூலமாக வருடத்திற்கு ஒருமுறை ஆலை பணியாளர்கள் சுற்றுலா செல்கின்றனர். ஆலைப் பணியாளர்கள் மாநில அளவில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகளும் விருதுகளும் பெற்று வருகிறார்கள்.

**பள்ளிக் குழந்தைகளுக்கு வாகன வசதி**

பணியாளர்களின் குழந்தைகளின் கல்வி வசதிக்காகத் தருமபுரி மற்றும் பாலக்கோடு ஆகிய ஊர்களில் உள்ள பள்ளிகளுக்குச் சென்றுவர வசதியாக இரண்டு பள்ளி வாகனங்களை ஆலை நிர்வாகம் இயக்கி வருகின்றது.

**பணியாளர் மற்றும் பொதுநலன்**

மெட்ரிகுலேசன் பள்ளி ஒன்று பணியா ளர்கள் மற்றும் பொது மக்களுக்காக நடத்தப்பட்டு வருகிறது. இப் பள்ளியில் 16 ஆசிரியர்கள் மற்றும் 3 உதவியாளர்கள் ஆகியோர் பணி புரிகின்றனர். இவர்களுக்கு அரசு சம்பளவிகிதத்தில் சம்பளம் அளிக்கப் பட்டு வருகிறது. இப்பள்ளியில் நடப்பு ஆண்டில் 284 மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். சென்ற 1993-94 ஆம் வருடம் முதல் 10 வகுப்பு மாணவர்கள் அரசுத் தேர்வு எழுது அனுமதிக்கப்பட்டு அனைவரும் வெற்றிபெற்றுள்ளனர்.

**பல்தொழில்நுட்பப் பயிலகம்**

ஆலையின் விவசாய அங்கத்தினர் பிள்ளைகள், ஆலைத்தொழிலாளர்களின் பிள்ளைகள் மற்றும் இந்த மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் ஆகியோர் பல்தொழில் நுட்பப் பயிலக கல்வி வசதி செய்து இம்மாவட்டத்தில் தொழில் முன்னேற்றம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் அங்கத்தினர்கள் வேண்டுகோளுக்கிணங்க தமிழக அரசு இந்த ஆலையில் பல்தொழில்நுட்பப் பயிலகம் ஒன்றைச் சுயநிதி ஏற்பாட்டின் கீழ் துவங்க அனுமதி வழங்கப்பட்டது.

• • •





தருமபுரி மாவட்டத்தில் 14365.00 ஏக்கர் பரப்பளவில் 22408 விவசாயிகளால் மல்பெரி சாகுபடி செய்யப்படுகிறது. தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பட்டு வளர்ச்சிக்கு ஏற்ற சீதோஷ்ண நிலை தருமபுரி மாவட்டத்தில் நிலவி வருவதே இதற்குக் காரணம் ஆகும். பட்டு வளர்ப்புத் தொழில் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏக்கருக்கு 5 நபர்கள் வீதம் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு பெறுகின்றனர்.

இந்த பட்டு விவசாயிகளினால் 45.00 இலட்சம் கிலோ கிராம் பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் மதிப்பு சுமார் ரூ.45 கோடி ஆகும். இது தவிர 10 கோடி உள்நாட்டின விதைக்கூடுகளும் 4 கோடி அயல் நாட்டின விதைக் கூடுகளும் தேன்கனிக்கோட்டை மற்றும் ஒசூரில் உற்பத்தி செய்து தமிழ் நாட்டிலுள்ள 32 வித்தகங்களுக்கு (அரசு 10 மற்றும் தனியார் 22) அனுப்பப் படுகிறது.

விவசாயிகளுக்குத் தேவையான கலப்பினப் பட்டு முட்டைகளைத் தயார் செய்ய 5 அரசு வித்தகங்களும் 3 மத்திய பட்டு வாரிய வித்தகங்களும் 14 தனியார் வித்தகங்களும் ஆகமொத்தம் 22 வித்தகங்கள் செயல்படுகிறது. இவ்வித் தகங்கள் மூலம் ரூ.2.50 கோடி மதிப்புள்ள 1 கோடி நோயற்ற பட்டு முட்டைகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்படுகிறது. விவசாயிகளால் உற்பத்திச் செய்யப்படும் பட்டுக்கூடுகளை விற்பனை செய்ய, தருமபுரி மாவட்டத்தில் 5 பட்டுக்கூடு அங்காடிகள் மூலம் 15 கோடி மதிப்புள்ள 17 இலட்சம் கிலோ பட்டுக்கூடுகள் விற்பனை செய்யப் படுகிறது.

இம்மாவட்டத்தில் 695 நூற்பு இயந்திரங்களும், 123 பட்டு முறுப்பகங்களும், 87 பட்டுக் கைத்தறிகளும் 95 பட்டு விசைத்தறிகளும் இயங்கி வருகிறது. இதன்மூலம் சுமார் ரூ.15 கோடி மதிப்புள்ள 1.50 இலட்சம் கிலோ கச்சாப்பட்டும், சுமார் 6 கோடி ரூபாய் மதிப்புள்ள 50,000 கிலோ பாவு மற்றும் ஊடை பட்டும் உற்பத்தி செய்யப் படுகிறது. பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றுதலில் சுமார் 4,000 தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர்.

பட்டுத் தொழிலை மேம்படுத்த அடிப்படை வசதிகள் தமிழ்நாடு அரசால் செய்து தரப்பட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு:

**மல்பெரி விரிவாக்கம்:**

தருமபுரி மாவட்டத்தில் பட்டு விரிவாக்கப் பணிகளை மேற்பார்வை செய்யவும், அரசின் திட்டங்களை நிறைவேற்றவும் ஐந்து உதவி இயக்குநர் அலுவலகங்கள் செயல்பட்டு வருகிறது.

உதவி இயக்குநர் அலுவலகம், தருமபுரி
உதவி இயக்குநர் அலுவலகம், கிருட்டிணகிரி
உதவி இயக்குநர் அலுவலகம், பென்னாகரம்
உதவி இயக்குநர் அலுவலகம், ஒசூர்
உதவி இயக்குநர் அலுவலகம், தேன்கனிக்கோட்டை

இவ்வலுவலகங்களின் கட்டுப்பாட்டின் கீழ் மொத்தம் 26 தொழில்நுட்பச் சேவை மையங்கள் செயல்படுகிறது. தொழில் நுட்பச் சேவை மைய அலுவலர்கள் விவசாயிகளை நேரடியாகத் தொடர்பு கொண்டு மல்பெரி நடுதல், பட்டுப்புழு வளர்ப்பு, தொழில் நுட்பங்கள் வழங்குதல், தேவைப்படும் பயிற்சி, முட்டைகள் வழங்கும் பணிகளைச் செய்கின்றனர்.

**வித்தகங்கள்:**

தருமபுரி மாவட்டத்திற்குத் தேவைப்படும் பட்டு முட்டைகளை உற்பத்தி செய்ய 22 பட்டு முட்டை வித்தகங்கள் செயல்படுகிறது.

**அரசு பட்டுக்கூடு அங்காடிகள்:**

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளை நியாய விலையில் விற்பனை செய்யவும், தொகையை விற்பனை செய்த அன்றே பெறவும் பட்டுக்கூடு அங்காடிகள் ஆறு இடங்களில் செயல்படுகிறது.

இவ்வங்காடியில் லெவித் தொகையாக விற்பனைத் தொகையின் மொத்த மதிப்பில் விவசாயிகளிடமிருந்து 0.75%ம், நூற்பாளர்களிடமிருந்து 0.75% வசூலிக்கப்படுகிறது.

**விதைப் பண்ணைகள்:**

பட்டுத் தொழிலுக்குத் தேவைப்படும் ஆதார விதைகளை உற்பத்தி செய்யப் பல்வேறு நிலைகளைக் கொண்ட விதைப் பண்ணைகள் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இப்பண்ணைகளில் பி3, பி2, பி1 என்ற நிலைகளைக் கொண்ட விதை உற்பத்திப் பணிகள் செயல்பட்டு வருகிறது.

**விளக்கப் பண்ணைகள்:**

பட்டுத் தொழிலை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்த அரூரில் ஒரு பட்டுப் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.

**பயிற்சிப் பண்ணை:**

விவசாயிகளுக்கு தேவைப்படும் பட்டுத் தொழில் சம்மந்தமான பயிற்சி அளிக்க சோகத்தூரில் (தருமபுரி) ஒரு பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.



**பட்டு நூற்பகங்கள்:**

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளின் ஒரு பகுதியைக் கொள்முதல் செய்து நூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றும் தொழிலை விளக்கி, அத்தொழிலை ஊக்குவிக்க ஓசூர், சோகத்தூர் ஆகிய இடங்களில் நூற்பு மற்றும் முறுக்கேற்றும் தொழிலை அரசே மேற்கொண்டுள்ளது.

**பட்டு நூற்பு பயிற்சி மையங்கள்:**

புதிய தொழில் முனைவோர்கட்கு பட்டு நூற்புத் தொழிலில் பயிற்சியளிக்க பென்னாகரம் மற்றும் ஓசூரில் பட்டு நூற்புப் பயிற்சி மையங்கள் செயல்படுகிறது.

**அரசு பட்டு பயிற்சிப்பள்ளி:**

துறையின் அலுவலர்கட்கு வளர்ந்து வரும் புதிய தொழில் நுட்பங்கள் அவ்வப்பொழுது விளக்கவும், விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கவும் ஓசூரில் ஒரு அரசு பட்டுப் பயிற்சிப்பள்ளி துணை இயக்குநர் மேற்பார்வையில் செயல்படுகிறது.



**1998-99ஆம் ஆண்டின் பட்டு வளர்ச்சிப் பணிகள்:**

ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தில் பரிந்துரைத்து, திட்டக் கமிஷனுக்கு அனுப்பிய பிரேரணையில் தெரிவித்துள்ளதற்கு இணங்க, நடப்பு ஆண்டில் 2028.00 ஏக்கரில் மல்பெரி பயிரிடப்பட உள்ளது.

இதனால் 4,000 விவசாயக் குடும்பத்தினர் நேரடியாக பயன்பெறுவர். மல்பெரி நடவுப் பணி ஜூலை '98 முதல் ஆரம்பித்து டிசம்பர் '98க்குள் முடிக்கப்படும்.

**கடன் வசதி:**

வங்கிகள் மூலம் மானியமில்லாக் கடன் 1,000 நபர்கட்கு ரூ.144.20 இலட்சம் கடனாக வழங்கப்பட உள்ளது. வங்கி மூலம் போதிய நிதி ஒதுக்கீடு வங்கிகள் கடன் திட்டத்தில் ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

**பகுதி - 2ன் திட்டங்கள்:**

1998-99ஆம் ஆண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் பட்டு வளர்ச்சிக்குத் தமிழ்நாட்டிற்குத் திட்ட ஒதுக்கீடாக ரூ.50.350 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**மல்பெரி விரிவாக்கம்:**

தற்பொழுது பயிரிடப்பட்டுள்ள எம்-5 மற்றும் லோக்கல் இன மல்பெரிக்குப் பதிலாக உயர் விளைச்சல் கொண்ட வி-1, எஸ்.36, எஸ்-13 ஆகிய மல்பெரி இனங்களைப் பயிரிட இத்திட்டம் உதவி செய்கிறது. இத்திட்டத்தின் மூலம் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகள் பயன்பெறுவர். விவசாயிகளுக்கு புதிய ரக இனங்களை வெளியிலிருந்து பெற்று, விதைக்குச்சிகள் இனாமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தில் தமிழகத்தில் 1,200 விவசாயிகள் ரூ.8 இலட்சம் அளவில் பயன்பெறுவர்.

**புதிய விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல்:**

புதிய விவசாயிகளுக்கு இரண்டு நாள் பயிற்சி வழங்கப்படும் இரு நாட்களுக்கும் தங்கும் செலவு, உணவு, பட்டு வளர்ப்பு வெளியீடுகள் ஆகியவற்றிற்கு ஒரு விவசாயிக்கு ரூ.250 வீதம் செலவு மேற்கொள்ளப்படும்.

பயிற்சியின் முதல் நாளில் மல்பெரி நடவு, புழு வளர்ப்பு பயிற்சியும், இரண்டாம் நாள் மல்பெரி வளர்ப்பை ஒட்டிய சுற்றுலா மேற்கொள்ளப்படும்.

தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் 1375 புதிய விவசாயிகளுக்கு ரூ.3.44 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்படும்.

**சிறிய பட்டு நூற்பாளர்கட்கு நிதி உதவி:**

தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு பகுதியில் 7 சிறிய நூற்பாளர்கள் (ஏழ்மை நிலையில் உள்ளவர்கள்) பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயற்படுத்தப்படும். 14 சர்க்கா ஏனங்கள் நிறுவப்படும். இதனால் 35 நபர்கட்கு தொடர்ந்து வேலைவாய்ப்புக கிடைக்கும்.

இதனால் நூற்பாளர்கட்குத் தொடர்ந்து நூற்புத் தொழில் மூலம் வேலைவாய்ப்புக் கிடைக்கும் இதற்கென ரூ.5.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. □





# ஓசூர் வீட்டுவசதி வாரியம்

தமிழகத்தில் பின் தங்கிய மாவட்டங்களுள் ஒன்றான தருமபுரி மாவட்டத்தின் வளர்ச்சிக்காக, தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு மக்கள்நல மேம்பாடு திட்டங்களின் மூலம் மகத்தான முன்னேற்ற பாதையில் வழிநடத்திச் செல்கிறார்கள். வளர்ந்து வரும் இம்மாவட்டத்தில், பெருகிவரும் மக்கட்தொகையின் வீட்டுவசதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இதுவரை மகத்தான பணிகளைச் செய்துள்ளது. மேலும் செய்து வருகிறது. இதுவரை அதாவது 1996 மே திங்களுக்கு மேல் நிறைவேற்றிய திட்டங்கள், நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்டங்கள், நடைபெற உள்ள திட்டங்கள் பின்வருமாறு:

**1996 மே திங்களிலிருந்து திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து நிறைவேற்றிக் கொண்டிருக்கும் திட்டங்கள்:**

| திட்டத்தின் பெயர் | வீடுகள் மனைகள் | மதிப்பீடு இலட்சத்தில் ரூ. |
|---|---|---|
| ஒசூர் பகுதி-6 | 65 வீடுகள் | 185.70 |
| ஒசூர் பகுதி-7 | 100 வீடுகள் | 481.59 |
| கிருஷ்ணகிரி | 100 வீடுகள் | 215.81 |
| ஒசூர் பகுதி-7 | 627 மனைகள் | 788.07 |
| ஒசூர் பகுதி-16 | 1589 மனைகள் | 2084.77 |
| மொத்தம் | 2481 | 3655.84 |

**நிறைவேற்றப்பட உள்ள திட்டங்கள்:**

| திட்டத்தின் பெயர் | வீடுகள்/நில அபிவிருத்தி | மதிப்பீடு இலட்சத்தில் ரூ. |
|---|---|---|
| ஒசூர் | 664 வீடுகள் | 602.53 |
| கிருஷ்ணகிரி | 213 வீடுகள் | 641.25 |
| மாம்புரி ஏ.ஜெட்டிஹள்ளி நிலை-2 | 257 மனைகள் | 235.20 |
| மொத்தம் | 1134 | 1478.98 |

**தருமபுரி மாவட்டத்தில் வீட்டுவசதி வாரியத்தின் நிலம் கையகப்படுத்தப்படும் பணிகள் விவரம்:**

"அனைவருக்கும் வீடு" என்ற அரசின் திட்டத்திற்கிணங்க - இதுவரையில் தருமபுரி மாவட்டத்தில் 1150.53 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 8581 குடியிருப்புகள் கட்டப்பட்டு ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு மக்கள் பயனடைந்துள்ளனர். இவையன்றி 1148 வீடுகள் மற்றும் 6173 மனைகள் அபிவிருத்தி திட்டம் செயலாக்கத்திலும், எதிர்காலத் திட்டத்திலும் உள்ளது.

எதிர்கால அபிவிருத்திக்காக ஒசூர் நகர்ப் பகுதியில் 1,259 ஏக்கர், பாகலூர் பகுதியில் 10 ஏக்கர், கிருஷ்ணகிரியில் 113 ஏக்கர், தருமபுரியில் 20 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான குடியிருப்பு வசதியை அனைத்துத் தரப்பு மக்களும் பெற்றிட வேண்டும் என்ற அரசின் சீரிய கொள்கைக்காகத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தருமபுரி மாவட்டத்தில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. ★



# தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி

★ இவ்வங்கியின் மூலம் குறுகியகாலக் கடனாகக் கடந்த ஆண்டில் ரூ.46.67 கோடியும், இவ்வாண்டில் இதுவரையில், ரூ.20.68 கோடியும் வழங்கப் பட்டுள்ளது.

★ இதேபோன்று, கடந்த ஆண்டில் ரூ.20.65 கோடியும், இந்நிதியாண்டில் இதுவரையில், ரூ.2.38 கோடியும் மத்தியகாலக் கடன்களாக வழங்கப்பட்டுள்ளன.

★ ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம், 1,835 பயனாளிகளுக்கு ரூ.2 கோடி நிதியுதவியளிக்கப் பட்டுள்ளது.

★ 246 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம், சங்க உறுப்பினர் ஒருவர்க்கு 2 கறவை மாடுகள் வாங்க ரூ.18,000 வீதம் சுமார் 18 கோடி ரூபாய் மத்தியகாலக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

★ 30 விவசாயிகளுக்கு டிராக்டர் வாங்கக் கடனுதவியாக ரூ.93 இலட்சம் அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

★ பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்திட்டத்தின் கீழ் குறைந்த வட்டி விகிதத்தில் (8%) 81 நபர்களுக்குத் தொழிற்கடனுதவியாக ரூ.31 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ நடுத்தர விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்கென, வேளாண் மற்றும் வேளாண் சார் தொழில்களுக்கென, "வேளாண் தற்காப்பு வேலை வாய்ப்புப் பண்ணைத்திட்டத்தின்" கீழ், ஒருங்கிணைந்த திட்ட மதிப்பீடாக ரூ.6.74 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

★ விவசாயிகளுக்குத் தேவையான உரங்களை வழங்கிட, தொடக்க வங்கிகளுக்கு ரூ.3 கோடியும், நகைக் கடனாகக் கடந்த ஆண்டில் ரூ.53.25 கோடியும், இவ்வாண்டில் ரூ.12.51 கோடியும் வழங்கப்பட்டுள்ளன.

★ 7 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.95 இலட்சம் காசுக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

★ 6 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு ரூ.2.61 கோடி காசுக் கடனாக அனுமதிக்கப் பட்டுள்ளது. பொது விநியோகத் திட்டத்தைத் திறம்படச் செயற்படுத்திட அனைத்துத் தொடக்க வங்கிகளுக்கும் ரூ.3.75 கோடி காசுக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

★ பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு ரூ.17 கோடியும், சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு ரூ.35.20 கோடியும் காசுக் கடன்களாக அனுமதிக்கப்பட்டுள்ளன.



தருமபுரி மாவட்டத்திலுள்ள தொரப்பள்ளியில் முதறிஞர் ராஜாஜி நினைவு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலை

★ ஊத்தங்கரை கூட்டுறவு நூற்பாலைக்கு ரூ.3.80 கோடி காசுக்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

★ பட்டு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 754 பயனாளி களுக்கு ரூ.92 இலட்சம் கடனுதவிகள் அளிக்கப் பட்டுள்ளன.

★ பண்ணை சாரா மற்றும் சிறு வாகனக் கடன்களாக ரூ.60 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மக்களுக்கு குறைந்த வட்டியில் (15%) மிக அதிக அளவில் பெண்கள் பயனடைந்திடும் வகையில் தலா ரூ.2,000 வீதம் 2,779 நபர்களுக்கு ரூ.43 இலட்சம் கடனுதவிகள் அளிக்கப் பட்டுள்ளன.

★ வங்கிச் சேவையை நவீனமயமாக்கிடும் வகையில், தலைமையகம் மற்றும் 22 கிளைகளின் கணக்குகள் பராமரிப்பு, கணிப்பொறிமயமாக்கப் பட்டுள்ளது. டெலக்ஸ், ஃபேக்ஸ் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

*கிழக்குத் தொடர்ச்சி மலை - மேற்குத் தொடர்ச்சி மலை இரண்டும் ஒன்றுகூடும் தருமபுரி மாவட்டம் வனவளம் மிக்கது ஆகும்; மாவட்டத்தின் மொத்தப்பரப்பான 9,645சதுர கிலோ மீட்டரில் - 1,700 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் காடுகளே பரவியுள்ளன.*





# தாட்கோ

ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த மக்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட்டங்களை 'தாட்கோ' நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

### தனிநபர் தொழில் முனைவோர் திட்டம்

இந்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களிடையே தனி நபர் தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதற்காக இத்திட்டத்தின் கீழ் உயர்ந்த பட்சமாக தலா ரூ.5,00,000 வரை நிதியுதவி செய்து தரப்படுகிறது. இதில் தாட்கோ மானியம் அதிகபட்சம் ரூ.25,000 அல்லது திட்ட மதிப்பீட்டில் 30 சதவீதம் இதில் எது குறைவோ அத்தொகையுடன் திட்ட மதிப்பீட்டில் 20 சதவீதம் தாட்கோ விளிம்புத் தொகையாகவும் இதில் அதிகபட்சம் ரூ.1,25,000 வரை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் லாரிகள், சுற்றுலா வாடகைக் கார்கள், ஆட்டோ ரிக்ஷா, வேன் மற்றும் டிராக்டர் போன்ற வாகனக் கடன்களும் இயந்திரக் கலப்பை, கதிரடிக்கும் இயந்திரம் போன்ற சாதனங்கள் வாங்கவும், கோழிப் பண்ணை, பால்பண்ணை ஏற்றுமதிக்கான ஆயத்த ஆடைகள் தயாரித்தல், கல்உடைத்தல், தளவிசைக் கற்கள் மெருகு ஏற்றுதல், சிறு மருத்துவமனைகள் அமைத்தல் போன்ற பல்வேறு தொழில்களுக்காகவும் நிதிஉதவி வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2 ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ், 97 பயனாளிகளுக்கு ரூ.26 இலட்சம் நிதியுதவி வழங்கப் பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் இதுவரை, 79 பயனாளிகளுக்கு ரூ.35 இலட்சம் நிதியுதவி வழங்கப் பட்டுள்ளது.

### விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த திட்டங்கள்

ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த சிறு விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு, டீசல் மற்றும் மின்சார பம்ப் செட்டுகள் வாங்கவும் உழவு மாடுகள், டயர்வண்டி மாடுகளுடன், பவர் ஸ்பிரேயர் வாங்கவும் 50 விழுக்காடுகள் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்படி கடந்த 2 ஆண்டுகளில், 359 பயனாளிகளுக்கு, ரூ.21 இலட்சமும், இவ்வாண்டில் இதுவரையில் 177 பயனாளிகளுக்கு ரூ.12.50 இலட்சமும் நிதியுதவிகளாக வழங்கப்பட்டுள்ளன.

### சிறுதொழில் திட்டம் 20 அம்சத்திட்டத்தின் கீழ் உள்ள திட்டம்

இத்திட்டத்தின் கீழ் காய்கறி வியாபாரம், கூடையில் பழ வியாபாரம், தள்ளுவண்டிப் பொருள்கள் வியாபாரம் போன்ற தொழில்களுக்குக் கடன்உதவி செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் உயர்ந்த பட்ச திட்ட மதிப்பீடு ரூ.2,000 ஆகும். இதில் ரூ.1,000/- தாட்கோ மானியமாக வழங்கப்படுகிறது. மீதம் ரூ.1,000/- வங்கிக் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் 70 நபர்களுக்கு ரூ.70,000 நிதியுதவியளிக்கப்பட்டுள்ளது.

### சிறுதொழில் தொடங்க திட்டம்

இத்திட்டம் 1997-98 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதன்படி சுயதொழில் சிறு அளவில் தொடங்க ரூ.10,000/-



மொத்த மதிப்பீட்டில் ரூ.5,000/- மான்யம் மற்றும் ரூ.5,000/- வங்கிக் கடனாக வழங்கப்படுகிறது. இதன் மூலம் இதுவரையில் 8 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

**சுயவேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்**

இத்திட்டம் தாட்கோ நிறுவனத்தின் மூலம் ஆதிதிராவிட இளைஞர் மற்றும் மக்களுக்காகச் செயல்படுத்தப்படும் மிக முக்கியமான வறுமை ஒழிப்புத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட இளைஞர் மற்றும் மகளிர்களுக்கு ஆறுமாத காலத்திற்கு சுயதொழில் தொடங்க பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக மாதம் ரூ.350/- ம் நிறுவனத்தாருக்குப் பயிற்றுவிக்கும் தொகை ரூ.200/- மற்றும் மூலப்பொருள் வாங்க ரூ.75/-ம் வழங்கப்படுகிறது. பயிற்சியின் முடிவில் ஒவ்வொருவருக்கும் ரூ.600/- மதிப்புள்ள தொழிற்கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றது. பெயர் பெற்ற தனியார் நிறுவனங்கள் மூலமாகவும் அரசு தொழில் பயிற்சி நிறுவனங்கள் மூலமாகவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின் முடிவில் சான்றிதழ் அளிக்கப்படுகிறது. சுயதொழில் தொடங்குவோர்க்கு தாட்கோ மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கி, தொழில் தொடங்க உதவி செய்யப்படுகிறது.

இத்திட்டத்தினடிப்படையில் கடந்த 2 ஆண்டுகளில் ரூ.5.72 இலட்சம் செலவில் 152 ஆதிதிராவிட இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் ரூ.5.7 இலட்சம் செலவில் 130 இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் தையற்பயிற்சி ரேடியோ, டி.வி.பழுதுபார்த்தல், கணிப்பொறிப் பயிற்சி, கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, லேப்டெக்னீஸியன் மற்றும் மோட்டார் போன்ற பயிற்சிகள் பெற்று வருகிறார்கள்.

**என்.எஸ்.எப்.டி.சி. (தேசிய பட்டியலினத்தோர் நிதியுதவி மற்றும் மேம்பாட்டுக் கழகம், புதுதில்லி)**

இப்புதிய திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் வாகனம் வாங்க கடன் முழுமையாகத் தாட்கோ மூலம் வழங்கப்படவுள்ளது. இதில் லாரி, மினிலாரி, டூரிஸ்ட் வேன், கார், ஆட்டோ, பிக்அப் வேன், டிராக்டர் முதலான அனைத்து வாகனங்களும் வாங்க நிதியுதவி செய்யப்பட்டு வருகிறது. இதற்கு இந்து, ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த ஓட்டுநர் உரிமம் பெற்றவர்கள் தகுதியுடையவர்கள். இவர்களுக்கு வருட வருமானம் கிராமப்புறத்தில் ரூ.22,000/- நகர்புறத்தில் ரூ.23,700/-க்கு உட்பட்டு இருக்க வேண்டும். திட்ட மதிப்பில் 5% தனி நபர் தொழில் முதலீடு செய்ய வேண்டும். சொத்து ஜாமீன் 25% அல்லது பணவிடையாக 12.5% செலுத்த வேண்டும். திட்ட மதிப்பில் அதிக பட்ச மானியமாக ரூ.25,000/-மும், 4% வட்டி விகிதத்தில் 20% விளிம்புத் தொகையாகவும் அதிக பட்சம் ரூ.1,25,000/- மீதத் தொகை 6% வட்டி விகிதத்தில் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரையில், 9 பயனாளிகளுக்கு ரூ.28.66 இலட்சம் நிதியுதவியளிக்கப்பட்டுள்ளது.

**துப்புரவுத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்**

துப்புரவுத் தொழிலாளர்கள் மறுவாழ்வுத் திட்டம் 1992-ம் ஆண்டு முதல் மத்திய அரசால் துவக்கப்பட்டு மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை விடுவித்து வேறு பல தொழிற்களில் ஈடுபடுத்தி அவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் மறு வாழ்வு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் அரசு ஆணைப்படி இத்தொழிலில் ஈடுபட்டோர்களது எண்ணிக்கை கணக்கெடுப்பு 1990-91ம் ஆண்டில் நடத்தப்பட்டது. இக்கணக்கெடுப்பின்படி இம்மாவட்டத்தில், இத்தொழிலில் 136 குடும்பங்கள் ஈடுபட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டு உள்ளது. இக்குடும்பங்களில் உள்ளோரின் மொத்த நபர்களின் எண்ணிக்கை 1035. இவர்களில் 328 பேர்கள் ஆண்கள், 270 பேர்கள் பெண்கள் மற்றும் 437 பேர்கள் சிறுவர்கள். இதுவரையில் ரூ.21.50 இலட்சம் நிதியுதவியில், 140 நபர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் பெண் குழந்தைகளுக்கான கல்வி ஊக்குவிப்புத் திட்டம்**

கிராமப்புற இந்து, ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த மிகவும் ஏழை குடும்பத்தில் உள்ள பெண் குழந்தைகள் 2-ஆம் வகுப்பிற்குப் பின் நின்றுவிட நேர்வதால் அவர்கள் தொடர்ந்து படிக்க கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இதில் 3-ஆம் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை படிக்க மாதம் ஒன்றுக்கு ரூ.50/- வீதம் பத்து மாதத்திற்கு மட்டும் ரூ.500/- ஒரு குழந்தைக்கு அளிக்கப்படுகிறது.

அடுத்து 6வது வகுப்பு கல்வியை நிறுத்தாமல் தொடர்ந்து படிக்க வசதியான ஆதிதிராவிட பெண் குழந்தைகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் பத்து மாதத்திற்கு ரூ.1,000 ஒரு குழந்தைக்கு வழங்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட தொகைகளை அக்குழந்தைகளின் தாயார் பெயரில் அஞ்சலகச் சேமிப்புக் கணக்கு மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் மிகவும் வறுமையில் உள்ள ஏழை ஆதிதிராவிட குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. இதில் விதவைத் தாயார் குழந்தைகள், உடல் ஊனமுற்ற குழந்தைகள், பள்ளிக்கு வெகுதூரத்திலிருந்து வரும் குழந்தைகள் போன்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தினால் 1996-97ஆம் ஆண்டு 4,899 மாணவிகளும், 1997-98 ஆம் ஆண்டு 4,889 மாணவிகளும் பயனடைந்தனர்.

**வணிக வளாகக் கட்டடங்கள்**

இம்மாவட்டத்தில் பர்கூர், காவேரிப்பட்டினம், காரிமங்கலம், கெலமங்கலம், பாலக்கோடு ஆகிய ஐந்து பேரூராட்சிகளுக்குச் சொந்தமான இடங்களில் தாட்கோ மூலம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக 48 வணிக வளாகக்கடைகள் ரூ. 25 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன.

மேற்கண்ட வணிக வளாகக் கடைகள் பொது ஏலத்தில் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த மக்களுக்கு மாத வாடகைக்கு விடப்பட்டுள்ளது. ★



தருமபுரி மாவட்டச் சிறப்பிதழ்



# காவிரியாள் கால்பதிக்கும் மாவட்டம்

- பாவலர் கருமலைத் தமிழாழன்

வெண்மஞ்சு பொதிமிதக்கும் கல்லின் மீது
வெண்மதியின் ஒளிநழுவி விழுதல் போலக்
கண்ணாடி மீனேறும் அருவி கொட்டக்
காவிரியாள் கால்பதிக்கும் ஒகே னக்கல்
கண்ணொளியை வழங்கியநல் கருணா நிதிதம்
கருணையினால் மின்னொளியின் திட்ட மிங்கே
கண்சிமிட்டக் காத்துளது! குடிக்கும் நீராய்க்
கடுகிகுழாய் புகுந்துவரப் பார்த்துளது!

புறமுதுகு காட்டாதத் தமிழர் வீரம்
புலப்படுத்தும் புறநானூறு புகழைப் போற்ற
அறம்வழுவா அதியன்செந் தமிழைப் போற்ற
அருநெல்லிக் கனியமுதை ஔவைக் கீந்து
சிறப்புற்ற. தகடூராம் தருமபுரியில்
சிதையாமல் வரலாற்றைச் சித்தி ரிக்கும்
அறமுரைத்த வள்ளுவனார் கோட்டம் போல
அதியமான் கோட்டத்தின் அழகு கொஞ்சும்!

வீரத்தின் வரலாற்றை எழுத வைத்த
இருளபட்டி நடுகற்கள்; தலையைக் கொய்தே
ஆரமெனத் தந்தநவ கண்டம் காட்டும்
அருஞ்சிற்பக் குந்தாணி; புதிய பாணி
பாரமகால் கோட்டைகள்; குகையி னுள்ளே
பண்டையோவி யம்திகழும் மல்லப் பாடி
போரணியாய் விழுப்புண்பூண்ட பெரும்பாலை
போன்றபல ஊர்களுடன் திகழ்மா வட்டம்!

தலையில்லா முண்டத்தில் சண்டை யிட்ட
தனிச்சரிதச் சின்னமெனும் செய்து பாட்சா
மலையிருக்கும் ஒருசாணாம் குளத்து நீரோ
மலர்த்தேனின் சுவைமிஞ்சும்! பந்தர் தொங்கும்
குலைதிராட்சை மாங்கனியின் விளைச்சல் விஞ்சும்
குறுகுறுத்து நடையிலும் பெண்ணை யாற்றின்
அலைதடுக்கும் முத்தூரின் அணையால் பசுமை
அணிபுனைந்த கிருட்டினகிரி எழிலின் தோட்டம்!

சித்தர்கள் வாழ்ந்தமலை மூலி கைகள்
செழித்திருக்கும் தீர்த்தமலை; பாடல் பெற்ற
சந்திரசூ டேசுவரர் அருளும் மலை
சாதிமதப் பேதமின்றிக் களிதெலுங்கும்
சிந்தையொன்றிக் கன்னடமும் கைகள் கோத்துச்
சிரிக்கின்றப் பன்னூறு தொழிற்கூடங்கள்
சந்தனமாய் மும்மாநிலப் பண்பில் மணக்கும்
சந்ததியர் வாழ்ஓசூர் பட்டின் பேரூர்!

தீரமுடன் வெள்ளையனை எதிர்த்தத் தீர்த்த
கிரியாரை; சிறைக்குள்ளே அடைத்து வைத்தும்
வீரமுடன் போராடிப் பெருநோய் பெற்ற
தியாகிசுப்ர மண்யசிவா; அடிமை யென்ற
வேரறுக்க வேதாரண்ய உப்பெ டுத்த
மூதறிஞர் இராஜாஜி என்றே நாட்டின்
போதனை உயர்த்திநின்ற சான்றோர் தம்மைப்
பெற்றதனால் புகழ்கொண்ட நல்மா வட்டம்!

# வனம் சார்ந்த மக்களின் வாழ்வில் ஒரு புதுவசந்தம் !



அதிகமான வனப்பரப்பைக் கொண்டுள்ள மாவட்டமாக தருமபுரி மாவட்டம் திகழ்கிறது. இங்குள்ள 3,660 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள வனப்பகுதி மாவட்ட நிலப்பரப்பில் சுமார் 38% நிலப்பரப்பை அடக்கியுள்ளது. இந்த விதத்தில் தருமபுரி மாவட்டம் தமிழகத்தில் உள்ள மாவட்டங்களில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. இவ்வளவு வனப்பரப்பு இருப்பினும், தருமபுரி மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டமாகவே இருந்து வருகிறது. ஏராளமான வனப்பரப்பு கொண்டுள்ளதால், இங்குள்ள மக்களில் ஏராளமானோர் வனத்தைச் சார்ந்து வாழ்வது இயற்கையே. இந்நிலையில், வனத்துறை, மக்கள் ஈடுபாடின்றி செயல்படுத்தும் திட்டங்கள் முழு வெற்றியைக் காணாது சமீப காலத்தில் அறிதாகிவிட்டது. எனவே மக்கள் ஈடுபாட்டுடன் செயல்படுத்தப்படும் விதத்தில் திட்டங்களை நிறைவேற்ற வேண்டி, ஒரு புதுமையானத் திட்டத்தை தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம் என்ற பெயரில் தமிழக அரசு ஜப்பானிய நிதி உதவியுடன் சென்ற ஆண்டு முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் கிராம மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. கடந்த ஓர் ஆண்டில், இத்திட்டத்தில் கிராம மக்களுக்காக, கிராம மக்களுடன் இணைந்து செயல்படுத்திய சில அடிப்படை வசதி முன்னேற்றப் பணிகள் குறித்து இக்கட்டுரையில் தொகுத்து வழங்கப்படுகிறது.

தருமபுரி மாவட்டத்தில் 1997-98 நிதியாண்டில் 22 திட்டக் கிராமங்களும், நடப்பு ஆண்டில் 17 திட்ட கிராமங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்:**

1. தரம் குன்றிய காடுகளை நீர்பிடிப்புப் பகுதி (Water-shed) அடிப்படையில் தேர்வு செய்யப்படும்.
2. அவ்வனத்தைச் சார்ந்துள்ள கிராம மக்களால், ஒரு கிராம வன நிர்வாகக் குழு மூலம் திட்டம் செயல்படுத்தப்படும்.
3. கிராம வன நிர்வாகப் பகுதி நுண்ணிய நீர்பிடிப்புத் திட்டம் குறித்து கிராம வனக்குழுவுடன் கலந்து நுண்ணிய திட்டம் (Micro-Plan) பங்கு பெறும் கிராமிய மதிப்பீடு (Participatory Rural Appraisal P.R.A.) அடிப்படையில் தயார் செய்யப்படும்.
4. கிராம வனக்குழு விருப்பப்படி, உள்ளூர் மக்களைக் கொண்டு திட்ட வேலைகள் செயல்படுத்தப்படும்.
5. திட்ட வேலைகள் மொத்த மதிப்பீட்டில் சுமார் 10% தொகை கிராம நலன் மற்றும் மேம்பாட்டிற்கு மக்கள் விருப்பப்படி செலவிடப்படும்.
6. கிராமம் சார்ந்த வனப்பகுதியில் (சுமார் 700 ஏக்கர்) உள்ள தாங்கும் விளைச்சல் பொருள் வருவாய் (Sustained Yield) அனைத்தும் கிராம மக்களுக்கே சேரும்.

**கிராம மக்கள் பங்கின் அவசியம்:**

வனத்துறையில் 150 ஆண்டு வரலாற்றில், வனம் சார்ந்த கிராம மக்களுக்கு நேரடியாகப் பயன்பெறும் விதத்தில் எந்தத் திட்டத்தையும் அறிமுகப்படுத்தாத காரணத்தாலும், கிராம மக்களின் அத்தியாவசியத் தேவையைப் பூர்த்தி செய்வதில் வனத்துறை ஈடுபடாமையாலும், கிராம மக்களுடன் வனத்துறையின் தொடர்பு சுமுகமாக இருக்கவில்லை. இதனால் வனப்பாதுகாப்பில் கிராம மக்களின் ஈடுபாடு இல்லாமையால், வனச் செல்வங்களை அளவிற்கு மேல் பயன்படுத்தியதன் விளைவாக வன அழிவும் ஏற்பட்டு வந்துள்ளது. இதனைக் கருத்திற்கொண்டே, கிராம மக்களுடன் இணைந்து வன மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தும் விதத்தில் ஒரு புதிய திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் ஆலோசனையின் பேரில், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால், ஜப்பானிய நிதி உதவியுடன் ஒரு 5 ஆண்டுத் திட்டம் ரூ.500 கோடி நிதியுடன் செயல்பாட்டிற்கு வந்துள்ளது.

**கிராம மக்களின் ஈடுபாட்டினைப் பெறுதல்:**

பொதுவாக வனத்தை ஒட்டியுள்ள கிராம மக்கள் பெரும்பாலும் வறுமையிலேயே உள்ளனர். அக்கிராமங்களுக்கு நிறைய அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன. இந்நிலையில், இத்தேவைகள் வனத்துறை மூலம் பூர்த்தி செய்யப்படின், நிச்சயம் அக்கிராம மக்களின் ஈடுபாடு வன மேம்பாட்டிற்குக் கிடைக்கும். இதனைக் கருத்தில் கொண்டே, கிராம மக்களின் மிக அத்தியாவசியத் தேவைகளையும், பல ஆண்டு காலமாக நிறைவேறாமல் ஏங்கித் தவிக்கும் குறைகளையும், பங்கு பெறும் கிராமிய மதிப்பீடு (P.R.A) மூலம் கண்டறிந்து மாவட்ட ஆட்சியர் மூலம் பிற துறைகளின் உதவியினாலோ செயல்படுத்த முடிவு செய்யப்பட்டு ஒவ்வொரு திட்ட கிராமமும் தத்தெடுக்கப்பட்டு அதற்குரிய நுண்திட்டமும் தயார் செய்யப்படுகிறது. இத்திட்டத்தில், நிர்வாகப் பகுதியில் உள்ள கிராம வனப்பகுதியில் கிடைக்கும் வன வருவாய் கிராம மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதன் காரணமாக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட கடந்த ஆண்டு முதல் ஏராளமான கிராம முன்னேற்றப்பணிகள், அக்கிராம மக்கள் எதிர்பாரா விதத்தில் கிடைத்துள்ளன. இத்திட்டத்தில் மற்றொரு சிறப்பு அம்சம், இத்திட்டத்தில் பல அரசு சாரா பொதுநல நிறுவனங்களை (N.G.O.) ஈடுபடுத்தி மக்கள் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. கடந்த ஓராண்டு காலத்தில் நிறைவேற்றப்பட்ட சில கிராம முன்னேற்றப் பணிகள் வருமாறு:

**சாலை வசதி:**

பொதுவாக வனப்பகுதியில் இருக்கும் கிராமங்களுக்குச் சாலை வசதி ஒரு தீராப் பிரச்சனை ஆகும். இதனை நிறைவேற்றுவதன் மூலம் மக்களுக்கு வேண்டிய ஒரு முக்கியமான அடிப்படை வசதி நிறைவேற்றப்படுகிறது. மக்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையும் பெற முடிகிறது. சமீபத்தில் இத்திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட மூன்று சாலை வசதிகள் கிராம மக்களின் பல ஆண்டுகளின் ஏக்கத்தைப் போக்கியுள்ளன என்பதை அம்மக்கள் மூலம் தெரிந்துகொள்ளலாம். இச்சாலைகள் அனைத்தும் வனத்தின் வழியாகச் செல்பவை. ஊட்டமலை-பிலிகுண்டுலு-நாற்றம்பாளையம் வனச்சாலை இத்திட்டத்தின் மூலம் வாகனப் போக்குவரத்து துவக்கப்பட்டதன் மூலம் சுமார் 1000 வனப்பகுதியில் வாழும் குடும்பங்கள் பெரும் மகிழ்ச்சி வெள்ளத்தில்







திளைக்கின்றனர். இதே போன்று பென்னாகரம் வட்டம், மலையூர் மலைச்சாலை (7 கி.மீ) அம்மக்களின் பங்கேற்புடன் சீர் செய்யப்பட்டுள்ளது. மேலும் தருமபுரி வட்டம் கோம்பேரி கிராம மக்கள் தற்போது சீர் செய்யப்படும் சாலை வசதியால், தாங்கள் தற்பொழுது தான் சுதந்திரம் பெற்றதாகக் கூறி மகிழ்ச்சியில் திளைக்கின்றனர். இச்சாலை வசதியினால், வனப்பாதுகாப்பில் அக்கிராம மக்களுக்கு அதிக ஈடுபாடு ஏற்பட்டு, திருட்டு மரம் வெட்டுவது அவர்களால் தடுக்கப்பட்டு வருவது இத்திட்டத்திற்குக் கிடைத்த வெற்றிகளில் ஒன்றாகும்.

மேலும் மாவட்ட ஆட்சியர் முயற்சியால், பிக்கிலி, பெரியூர் திட்டக் கிராமங்களுக்கு நடப்பாண்டில் சாலை வசதி செய்து பேருந்து வசதி இணைப்பு செய்யப்பட்டுள்ளது. இதேபோல் கோம்பை-மூலக்கோம்பை இணைப்புச் சாலை சுமார் 1.7 கி.மீ. தூரம் சீரமைக்கப்பட்டு மக்களால் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பாலக்கோடு வட்டம் எரிமலை கிராமத்திற்கு ஒரு பாலமும், எலுமல்மந்தை கிராமத்தை இணைக்கும் ஒரு ஓடு பாலமும் மக்களின் பாராட்டைப் பெற்றவை.

**குடிநீர் வசதி:**

அனைத்துக் கிராமத்திற்கும் குடிநீர் வசதி என்பது மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் கனவாகும். அதை நிறைவேற்றுவதில் வனத்துறையும் தனது பங்கினைச் செய்து வருகிறது. மிகவும் உள்ளே அமைந்துள்ள பல வனக்கிராமங்களுக்குக் குடிநீர் பிரச்சினை தீர்க்கும் விதத்தில் இத்திட்டத்தில் கீழ்க்கண்ட கிராமங்களுக்கு ஆழ்கிணறு மற்றும் நீர்தேக்கத் தொட்டிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தருமபுரி கோட்டம் பரிகம், பெரியூர், பிக்கிலி-கொல்லப்பட்டி, ஒசூர் வட்டம் இராமச்சந்திரம் ஆகியவையாகும்.

**மருத்துவ வசதி:**

வனத்தின் உள்ளே அமைந்திருக்கும் கிராமங்களுக்கு மருத்துவ வசதி ஒரு வரப்பிரசாதமாகும். இதனைக் கருத்தில் கொண்டே, வனத்துறை, பல மருத்துவர்களைக் கொண்ட மருத்துவ முகாம்களைத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் ஏற்படுத்தி மக்களின் உடல் நலத்தைப் பேணி வருகிறது. தருமபுரி மாணவர் நற்பணி மன்றம் மூலம் பெரிய அளவிலான மருத்துவ முகாம்கள் மாவட்ட ஆட்சியரின் தலைமையில், பென்னாகரம் வட்டம் வத்தலாபுரம் மற்றும் பிக்கிலி பெரியூர் திட்டக் கிராமங்களில் நடத்தி மக்களின் பாராட்டினைப் பெற்றுள்ளது. சமீபத்தில் தருமபுரி ரோட்டரி சங்க உதவியுடன் தருமபுரி கோட்டம் கோம்பேரி திட்டக் கிராமத்தில் மூன்று டாக்டர்கள் கொண்ட குழுவால் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் ஆயிரக்கணக்கான கிராம மக்கள் பயன்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய மருத்துவ வசதியை இத்திட்டத்தின்கீழ் தொடர்ந்து வழங்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

**கால்நடை மருத்துவ முகாம்:**

கிராம மக்கள் மேம்பாட்டில் கால்நடைகள் ஒரு முக்கியப் பங்கு வகிக்கின்றன. எனவே அவற்றின் முன்னேற்றம் ஒரு முக்கியத் தேவை ஆகிறது. வனத்துறை இத்திட்டத்தில், கால்நடைகளுக்கான தீவன தழை அதிகமாகப் பயிரிடுவதுடன், கால்நடை உடல் நலனைப் பேணிப் பாதுகாக்க இலவச கால்நடை முகாம்களை அவ்வப்போது திட்ட கிராமங்களில், மாவட்டக் கால்நடைத்துறையின் உதவியுடன் நடத்தி வருகிறது. இதுவும் கிராம மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்தகைய முகாம்கள், வத்தலாபுரம், கோம்பை, பிக்கிலி, பெரியூர் மற்றும் ஊட்டமலை திட்டக் கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு ஆயிரக்கணக்கான கால்நடைகளுக்கு இலவச மருத்துவப் பரிசோதனை செய்து சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

**உணவுப் பொருள் வழங்கும் வசதி [ரேசன்]**

பொதுவாக வனக்கிராமங்கள் சரியான போக்குவரத்து வசதி இல்லாமையாலும், போதிய எண்ணிக்கை கொண்ட வீடுகள் இல்லாமையாலும், இக்கிராம மக்கள் பல மைல் தூரம் நடந்து சென்று தங்களுக்குரிய ரேசன் பொருட்களைப் பெற்று வருகின்றனர். இது ஒரு முக்கியமான தீர்க்கப்படாத பிரச்சினையாக இருந்து வந்துள்ளது. இதனைப் போக்கும் விதத்தில் இத்திட்டத்தில், தமிழ்நாடு வனத்துறை, சம்பந்தப்பட்ட துறையினரை அணுகி உணவுப் பொருட்கள் வழங்க வசதியை ஏற்படுத்தி அம்மக்களின் துயரினைப் போக்கியுள்ளது. இத்தகைய வசதி தேன்கனிக்கோட்டை வட்டம் ஜார்க்கலைஹட்டி, பாலக்கோடு சரகம் எலுமல்மந்தை மற்றும் எரிமலை திட்டக் கிராமங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக எரிமலை மலைக் கிராமத்திற்கு வனத்துறையினரால் **கழுதைகள் மூலம் ரேசன் உணவுப் பொருட்கள் ஏற்றிச் செல்லப்பட்டு** விநியோகிக்கப்படுகின்றன. மேலும் கிருஷ்ணகிரி சரகம், பெம்மரசன்பள்ளி திட்ட கிராமத்தின் மக்கள் நிதிஉதவியுடன் வனத்துறை ஒரு புதிய ரேசன் கடைக்கான கட்டிடம் கட்டித் தந்துள்ளது.

**மாற்று வேலைவாய்ப்புத் திட்டம்:**

பல திட்டக் கிராமங்களில், அநேக மக்கள் விறகு வெட்டிப் பிழைப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்களுக்குத் தகுந்த வருவாய் தரக்கூடிய தொழில் அல்லது வேலை வழங்கினால், இவர்களை மரம் வெட்டுவதிலிருந்து திசை திருப்ப முடியும் என்ற நோக்கத்தில், மாற்று வேலை வாய்ப்புத் திட்டத்தையும் பல கிராமங்களில் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது. இதற்கென 20க்கும் மேற்பட்ட பலதரப்பட்ட மாற்று வேலை வாய்ப்புத் தொழில்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவை அந்த அந்தக் கிராமங்களுக்கு ஏற்றவாறு செயல்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இத்திட்டத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பொதுவாக அனைத்துத் திட்டக் கிராமங்களிலும் பெண்களுக்கு இலவசமாகத் தையல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக தருமபுரி சரகம் அப்பனஹள்ளி கோம்பை திட்டக் கிராமத்தில், வனத்துறைக்கு தேவையான நாற்றுகள் எழுப்பும் பைகளை தைக்கும் பணி, தையல் இயந்திரம் வழங்கப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டதன் மூலம், அவர்களின் வருமானத்தைப் பெருக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதேபோல் பெண்களுக்குக் கறவை மாடுகள், கயிறு திரிக்கும் இயந்திரங்கள், நெசவு இயந்திரங்கள், சிறு கடை வியாபாரம் செய்ய நிதியுதவி, மக்கள் நாற்றங்கால் எழுப்புதல், செங்கல் தொழில், அரப்புத்தூள் தயாரித்தல், ஊதுபத்தி தயாரித்தல், பாய்முடைதல், கூடை முடைதல் மற்றும் கூரைப் புல் சேகரித்தல் போன்ற பல்வேறு சுயவேலை வாய்ப்புத் தொழில்கள் அனைத்துக் கிராமங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக, தருமபுரி கோட்டம், போடூர் திட்டக் கிராமத்தில் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் நடைபெறும் செங்கல் தயாரித்தல் இலாபகரமாகச் செயல்பட்டு சுமார் 15 பேருக்கு வேலைவாய்ப்புக் கிட்டியுள்ளது. அதே

கிராமத்தில் மரம் வெட்டிப் பிழைத்தோருக்கு இலவசக்கருவிகள் வழங்கப்பட்டு, ஒரு இசைக்குழு செயல்பட்டு வருவதை மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் அவரது சட்டசபைக் கூட்ட உரையில் குறிப்பிட்டு கூறியுள்ளார். மேலும் நடப்பு ஆண்டில், கோம்பேரி திட்டக் கிராமத்தில் மகளிர் பால் கூட்டுறவுச் சங்கம் தொடங்கவும், ஊட்டமலை திட்ட கிராமக் குழுவின் மூலம் ஒகேனக்கல்லில் "டான்டீ" (TANTEA) தேயிலை தேனீர் விற்பனை நிலையமும் துவக்கப்பட உள்ளது. ஓசூர் சரகம், பெத்தசிகரலபள்ளி திட்டக் கிராமத்தில், 15 பெண்கள் கொண்ட சுயவேலை வாய்ப்புக் குழு ரூ.10,000 வனத்துறையின் நிதிஉதவியுடன் ஊதுபத்தி தயாரித்து வருகிறது. இதன் இலாபத்தில் மாதந்தோறும் ரூ.1000 திரும்பப் பெறப்பட்டு, மாதா மாதம் மேலும் இரண்டு பெண்களுக்குத் தலா ரூ.500 நிதியுதவி இத்தொழிலுக்கு வழங்கப்படுகிறது. இத்தகைய வருவாய் சேர்க்கும் வேலை வாய்ப்புத் திட்டங்களுக்கு மக்களிடையே பெரும் வரவேற்பு இருப்பதால், மக்களிடம் வனப்பாதுகாப்பில் ஈடுபாடு அதிகரித்துள்ளது.

**நமக்கு நாமே பணிகள்:**



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் 'நமக்கு நாமே' திட்டமும், தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு மக்களின் ஈடுபாட்டுடன் பல வேலைகள் செய்யப் பட்டுள்ளன. குறிப்பாக பிக்கிலி திட்ட கிராமத்தில் ரூ.2 இலட்சம் மதிப்புள்ள பள்ளிக் கட்டடம் ஒன்று வனத்துறையின நிதியுதவியுடன் (வனத்துறையின் பங்கு ரூ.75,000-மும், மக்களால் ரூ.125 இலட்சமும் சேர்த்து) கட்டப்பட்டுள்ளது. இதேபோல் கோடிஹள்ளி (பென்னாகரம் வட்டம்) திட்ட கிராமத்தில் 85 ஆயிரம் மதிப்புள்ள பள்ளிக் கட்டடம் ரூ.60,000 வனத்துறையின் நிதிஉதவியுடனும், மீதித்தொகை மக்களின் பங்களிப்பிலும் கட்டப்பட்டுள்ளது. ஓசூர் சரகம் தேலகிரி வட்டம் இராமசந்திரம் திட்டக் கிராமத்தில் ரூ.3 இலட்சம் மதிப்புள்ள சமுதாயக்கூடம் (வனத்துறையின் உதவி ரூ.75,000-யுடனும் மக்களால் ரூ.2.25 இலட்சமும் வழங்கப்பட்டு) கட்டப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி வட்டம் ஸ்ரீனிவாசபுரம் திட்ட கிராமத்தில் ரூ.40,000 மதிப்பில் குளம் தூர்வாருதல் பணி வனத்துறையினரின் உதவி ரூ.30,000-த்தைப் பெற்று, மக்களால் முடிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் பென்னாகரம் வட்டம் மலையூர் திட்டக் கிராம மக்கள் தங்கள் ஊருக்கு வேண்டிய ரூ.3 இலட்சம் மதிப்புள்ள சாலை மேம்பாட்டுப் பணிகளை வனத்துறையினரின் உதவி ரூ.50,000 உடன் மேற்கொண்டு சிறப்பாகச் செய்துவருகின்றனர். தருமபுரி சரகம் கோம்பேரி திட்டக் கிராமத்திலும், கிராம மக்களின் உழைப்புடனும், வனத்துறையில் நிதியுதவியுடனும் சாலை மேம்பாட்டுப் பணி நடைபெற்று வருகிறது. கிருஷ்ணகிரி சரகம் துடுக்கனஹள்ளி திட்ட கிராமத்தில், சாலை மேம்பாட்டுப் பணி, சமுதாயக் கூடம், குளம் வெட்டுதல் பணிகள் சுமார் 2 இலட்சம் செலவில் வனத்துறையால் மக்களின் நிதியான ரூ.70,000 மூலம் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், பொம்மரசம் பள்ளி திட்டக் கிராமத்தில் புதிய ரேசன் கடை கட்டடம் ஒன்று மக்களின் நிதியுதவி ரூ.25,000-யுடன் வனத்துறையினரால் கட்டப்பட்டுள்ளது. இதேபோல் ஏராளமான சிறிய, பெரிய பணிகள் மக்களின் ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும் "நமக்கு நாமே" கோட்பாட்டுடன் செயல்படுத்தப்பட்டிருப்பது பெருமைக்குரிய செயலாகும்.

**திட்டங்களும் எதிர்பார்ப்புகளும்:**

தருமபுரி மாவட்டத்தில், இந்தச் சிறப்புத் திட்டமான "தமிழ்நாடு வனவளர்ப்புத் திட்டம்" ஒரு புதிய நோக்குடன் புரட்சிகரமாகச் செயலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆண்டொண்டிற்கு இம்மாவட்டத்தில் 20 கிராமங்கள் வீதம் ஐந்து ஆண்டுகளில் சுமார் 100 கிராமங்களைத் தத்தெடுத்து ஒரு கிராமத்திற்கு ரூ.30 இலட்சம் வீதம் செலவு செய்யப்பட்டு, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் திட்ட முடிவில் சுமார் 10,000 ஹெக்டேர் தரம் குன்றிய காடுகளை மேம்படுத்த முடியும்.

இக்காடுகள் அனைத்திலும் கிடைக்கும் வருவாய், அக்கிராம மக்களையே சென்றடைவதால் மக்கள் வாழ்க்கைத் தரம் உயரும். இத்திட்டத்தின்கீழ் துவங்கப்பட்ட மாற்று வேலைவாய்ப்புத் திட்டங்களும் சம்பந்தப்பட்ட ஏழை மக்களின் வருவாயை அதிகரிக்கும் என்பது நிச்சயம். சமீபத்தில் பல துறைகளின் அலுவலர்களைக் கொண்ட உயர்நிலைக் குழுக்கள், மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர் தலைமையிலும், மாநில அளவில் தலைமைச் செயலர் செயல்பாடுகளை ஆய்வு செய்யவுள்ளது. இதன் மூலம் பல்வேறு துறைகளின் வளர்ச்சிப் பணிகளையும் இத்திட்டக் கிராமங்களுக்கு எடுத்துச் சென்று, கிராம

மக்கள் தங்களுக்குத் தேவையான அனைத்து வசதி வாய்ப்புக்களைப் பெற்று முன்னேற வழிவகை செய்யப் பட்டுள்ளது. வனம் சார்ந்த மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் பொழுது, பக்கத்தே உள்ள வனத்தின் தரமும் உயரும், வனத்தைப் பாதுகாப்பதில், மக்களிடம் விழிப்புணர்வும், ஈடுபாடும் அதிகரித்து வருவதை அனைத்துத் திட்டக் கிராமங்களிலும் கண்கூடாகக் காண்கிறோம். இந்தத் திட்டத்தின் மூலம் பல திட்டக் கிராம மக்களின் கனவுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை அறியும்பொழுது, வனத்துறைப் பணியின் தரம் மேலும் ஒருபடி உயர்ந்துள்ளது என்பது மிகையாகாது. வருங்காலத்திலும், மக்களுக்குச் சேவை செய்ய வனத்துறைக்கு இத்திட்டத்தின் மூலம் அரசு வழங்கிய இந்த வாய்ப்பு நல்ல முறையில் பயன்படுத்தப்படும் என்பதோடு, மலைப்பகுதிகளை ஒட்டியுள்ள ஏழை, எளிய மக்களுக்கும் வனத்துறை அலுவலர்களுக்கும் இடையே இதுவரை இருந்துவந்த முரண்பாடுகள் அடியோடு களையப்படுகின்றன; இரு சாராரும் தோளோடு தோள் நின்று வனவளத்தைக் காப்பதிலும், அதே நேரத்தில் அப்பகுதி மக்களின் வறுமையகற்றப்பட்டு பொருளாதார வளம் மேலோங்கிடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என்பது உறுதியே!

*"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்*
*வளமான வனமென்று*
*சங்கே முழங்கு..."*

- என்ற கீதம் கிராம மக்களிடையே எப்பொழுதும் ஒலிக்க 'நமக்கு நாமே' என்ற புதிய முழக்கத்திற்குச் செயல் வடிவம் கொடுக்க ஒத்துழைப்போம், உயர்வு காண்போம் என உறுதிமேற்கொள்வோம். □



தருமபுரி மாவட்டச் சிறப்பிதழ்

8 - ஆம் பக்கத் தொடர்ச்சி

செயல்படுத்தி வருகிறார் என்பதை நாடறியும். அந்த அருளாளர் ஆட்சியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டம் பெற்றுள்ள பேறு பெருமைக்குரியதாகும். இம்மாவட்டத்தில் 1991ஆம் ஆண்டு வரையிலே பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் 39 விடுதிகளே மாணவ, மாணவிகளுக்காகச் செயல்பட்டு வந்தன. அதற்குப்பிந்திய ஆட்சிக் காலத்தில் ஏழெட்டு விடுதிகளே உருவாயின!

மாண்புமிகு **கலைஞர்** அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற இந்த இரண்டாண்டுகளிலேயே 17 விடுதிகள் - பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பிலே புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கின்றன.

**ஆதிதிராவிடர் நலத்துறை**

சுதந்திரத்திருநாள் பொன்விழா கொண்டாடவிருக்கும் இந்நேரத்தில் எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சாக உள்ளது. ஆனால் ஆதிதிராவிடப் பெருமக்கள் இதந்தரும் சுதந்திரக் காற்றைச் சுவாசித்துச் சுகம் காணப் பாடுபட்டு வருகிறது **கலைஞர்** அரசுதான் என்பது உண்மை - வெறும் புகழ்ச்சியில்லை!

குறிப்பாகச் சொல்லுவதானால் 1991 ஆம் ஆண்டு வரையிலே தருமபுரி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் 33 மாணவ, மாணவியர் விடுதிகளே இயங்கிவந்தன. கடந்த ஆட்சிக் காலத்திலோ, அதாவது ஐந்தாண்டுகளில் அவர்கள் 4 விடுதிகள் மட்டுமே கட்டினர்.

**கலைஞர்** அரசு அமைந்த இந்த இரண்டாண்டு காலத்திலேயே ஏழை, எளியோருக்கும் கல்விக்கண் திறந்து வைத்து ஆதிதிராவிட மாணவ, மாணவியர் தம் இல்லங்களிலும் ஒளி விளக்கேற்றும் வகையிலே 8 விடுதிகள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. அன்றைய ஆட்சியில், ஐந்தாண்டுகளில் 25,739 ஆதிதிராவிடப் பெருமக்களுக்கு மட்டுமே அவர்கள் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியிருந்தனர். இன்று நம் **கலைஞர்** ஆட்சி இந்த இரண்டாண்டுகளிலேயே 10,296 ஆதிதிராவிடச் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.



**நிதி நிருவாகம்**

சட்டம், ஒழுங்கு, அமைதி காப்பதில் இந்த மாவட்டம் இணையற்றுத் திகழ்கிறது; காவல் துறைக்கெனப் புதிய கட்டடங்கள் சில உருவாக்கப்பட்டுள்ளன.

'மனுநீதிச் சோழன்' என மங்காத புகழ்பெற்ற **கலைஞர்** அரசில் - தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தில் இருந்த தற்காலிக நீதிமன்றம், 'முன்சீஃப் கோர்ட்' ஆக நிலை உயர்த்தப் பட்டிருக்கிறது.

தருமபுரியிலே ஒரு நீதிமன்றக் கட்டடமும், ஊத்தங்கரையிலே ஒரு நீதிமன்றக் கட்டடமும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன.

**நீர்வள ஆதார அமைப்பு**

இம்மாவட்டத்தில், பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் கீழ், ரூ.36.03 இலட்சம்

## தருமபுரி மாவட்ட மண்வளம்

1965 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் நாளன்று சேலம் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட தருமபுரி மாவட்ட மக்களின் முக்கியத் தொழிலாக விளங்குவது வேளாண்மை.

இம்மாவட்டத்தில் 43 சதவிகிதப் பரப்பில் பயிர்ச் சாகுபடி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

14 வித மண் வகைகள் கொண்ட தருமபுரி மாவட்ட ஆண்டு சராசரி மழையளவு 850 மி.மீ. ஆகும். மாநில மழை அளவில் இது 10 சதவிகிதம் மட்டுமே குறைவு.

இம்மாவட்டத்தில் மானாவாரி நிலங்களுக்கான தேசிய நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 1991-92 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.27.961 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை ரூ.27.663 இலட்சம் செலவிடப் பட்டிருக்கிறது.





மதிப்பீட்டில் செயலாக்கம் பெற்று, விவசாயத்தில் ஈடுபாடுகொண்டோர் பெரும் பயன் பெறும் வகையில் 18 பணிகள் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன.

மேலும், பாசன நீர் நிலைகள் சீரமைத்தல் திட்டத்தில் 25 பணிகள் ரூ.10.10 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன.

இதன்மூலம், பெரும் அளவு பாசனப் பரப்புகள் பயன்பெற்று வருகின்றன.

### தருமபுரி மாம்பழம்

"சேலத்து மாம்பழம்" என்று பெயராகிவிட்டது என்றாலும் - அப்பெயரைத் தாரை வார்த்துக் கொடுத்ததே தருமபுரிதான்! ஆம், வகை வகையான மாம்பழங்கள் விளைச்சல் தருமபுரி மாவட்டத்தில்தான் அதிகம்!

இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவரான டாக்டர் ராஜேந்திர பிரசாத் பரம்பரையைச் சேர்ந்த சில குடும்பத்தார், தருமபுரியில் உள்ள சிந்தூரில் வந்து குடிபுகுந்துள்ளனர். அன்று முதல் இன்று வரை, அவர்கள் இங்கே செய்து வரும் தொழில் ஒட்டுமாஞ் செடிகள் பயிரிடுவதேயாகும்!

அப்படி அவர்கள்
உருவாக்கும் ஒட்டு
மாஞ்செடிக்குத் தமிழகமெங்கும்
நல்ல கிராக்கியிருக்கிறது.
சந்தூர் ஒட்டுமா என்றே
அதற்குப் பெயர்.

### அனைவருக்கும் கல்வி

இரண்டாயிரமாவது ஆண்டிற்குள் கல்விக்கூடங்கள் இல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலையை உருவாக்குவோம் என்கிற முதல்வர் கலைஞர் அவர்களின் உயரிய திட்டத்தை நிறைவேற்றிடும் வகையில் - தருமபுரி மாவட்டக் கல்விப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. கடந்த ஐந்தாண்டுகளில் இம்மாவட்டத்தில் 10 தொடக்கப்பள்ளிகளும், 5 நடுநிலைப்பள்ளிகளும் மட்டுமே திறக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த மூன்றாண்டுகளில் கலைஞர் அரசில் 105 தொடக்கப்பள்ளிகளும், 18 நடுநிலைப் பள்ளிகளும், 20 உயர்நிலைப் பள்ளிகளும், 15 மேல்நிலைப் பள்ளிகளும், புதியதாகத் தொடங்கப்பட்டுச் சாதனை படைக்கப்பட்டிருக்கிறது.

முந்திய அரசில், அதாவது ஐந்தாண்டுகளில் 168 இடைநிலை ஆசிரியர்கள் மட்டுமே புதிதாகப் பணியமர்த்தப்பட்டிருந்தனர். ஆனால் இந்த மூன்றாண்டுகளில் 1,734 இடைநிலை ஆசிரியர்கள், 48 உடற்கல்வி ஆசிரியர்கள், 29 ஓவிய ஆசிரியர்கள் புதிதாகப் பணி நியமனம் செய்யப் பட்டிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் மாவட்டத்





தொடக்கக் கல்வித்திட்டத்தின் மூலம் 1,473 ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்கி நிரப்பப்பட்டுள்ளன. குறிப்பாக, மொரப்பூர் தொகுதியிலுள்ள, தகுதி பெற்ற அனைத்துக் கிராமங்களிலும், தொடக்கப் பள்ளிகள் 100 சதவிகிதம் என்கிற அளவிற்கு குறியீடு எய்தப்பட்டுள்ளது.

### மலைவாழ் மக்கள் மேம்பாடு

சுதந்திரத் திருநாள் பொன்விழா ஆண்டினையொட்டி, இம்மாவட்டத்தில் உள்ள மலைவாழ் மக்கள் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளை உருவாக்கிடும் வகையில் பல்வேறு நற்பணிகள் மேற்கொள்ளப் படவிருக்கின்றன.

குறிப்பாக, குடிநீருக்காக ரூ.25.62 இலட்சம், தெருவிளக்கு வசதிக்கென ரூ.16.56 இலட்சம், சாலை வசதிக்காக ரூ.98.30 இலட்சம், ஆரம்பப் பள்ளிகளுக்கு ரூ.12.50 இலட்சம், மருத்துவ வசதிக்கு ரூ.19 இலட்சம், சத்துணவுக்கென ரூ.7.70 இலட்சம், குடிமைப்பொருள் அங்காடி வசதிக்கென ரூ.2.80 இலட்சம் - ஆக மொத்தம் 182.42 இலட்சம் செலவிடுவதற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இவ்வாறெல்லாம் -

*நினைந்து நினைந்து,*
*உணர்ந்து உணர்ந்து,*
*நெகிழ்ந்து நெகிழ்ந்து,*
*அன்பே நிறைந்து நிறைந்து,*
*ஊற்றெழும் கண்ணீரதனால்*
*உடம்பு நனைந்து நனைந்து,*

எல்லாத்தரப்பு மக்களும் போற்றிப் புகழ்ந்து பாராட்டுமளவிற்கு அரசின் சாதனைப் பட்டியல் தொடர்ந்து கொண்டே போகிறது.



*அதில், தருமபுரி மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள - நிறைவேற்றப் பட்டு வருகிற நலப்பணித் திட்டங்களின் ஒரே ஒரு துளிதான் இது.*

கலைஞர், தம் சாதனையால் வளர்ச்சிப் பணிகளிலே 25 ஆம் இடத்திலிருந்த பின் தங்கிய மாவட்டமான தருமபுரி, இப்போது அவ்வகையில் முதல் மூன்றாம் இடத்தினைப் பெற்றிருக்கிறது என்கிற ஒன்றே, தமிழ்நாடு அரசின் தன்னிகரற்ற ஆக்கப்பணிகளாம் மணிமகுடத்தில் மேலும் ஒரு மாணிக்கக் கல்லாகச் சுடர் விடுகிறது அல்லவா!

★ ★ ★

### தருமபுரி மாவட்டம்

### பிற சாதனைகள்

- ★ 1989ல் முதன்முதலாகச் சித்தேரி மலைப்பகுதி கிராமத்திற்கு நகர்ப் பேருந்து இயக்கப்படுகிறது.
- ★ ரூ.2 கோடியில், மொரப்பூரில் பால் குளிரூட்டும் நிலையம்.
- ★ மாவட்டக் கிளை நூலகங்கள் 41 திறக்கப்பட வேண்டும் என்ற குறியீட்டில் 32 அமைப்பு.
- ★ தருமபுரியில் முதன் முதலாக கூட்டுறவுப் பயிற்சி நிலையம்.
- ★ மாவட்ட மாணவ மாணவிகள் பயனுக்கெனத் தருமபுரியிலேயே தொழிற்கல்வி நுழைவுத்தேர்வு.
- ★ பர்கூர், பாப்பிரெட்டிப்பட்டியில் தாலுகா அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள்.
- ★ 5 ஊரகப்பகுதிகளில் புதிதாக மத்திய கூட்டுறவு வங்கியின் கிளைகள்.
- ★ ஒசூர், அரூர் நகரக் கூட்டுறவு வங்கிகள் புதிதாக உருவாக்கம்.

# “இந்தியாவிலேயே தமிழகத்து மாணவர்கள் மிகச்சிறந்தவர்கள் என்ற நிலைக்கு இந்த அரசு உயர்த்தும்!”

## - முதலமைச்சர் கலைஞர்



**235 மாணவ, மாணவியர்கட்குப் பாராட்டும் - சான்றிதழ்களும்**

“சிறந்த மதிப்பெண் பெறுகின்ற மாணவர்களுடைய உயர்கல்விச் செலவை அரசாங்கமே ஏற்கும் ஒரு திட்டத்தை இந்த ஆட்சி கொண்டுவந்து, அதை நடைமுறைப்படுத்துகின்ற ஒரு நிலையிலேதான், இன்றைக்கு 235 மாணவ-மாணவியர்களுக்குப் பாராட்டும், சான்றிதழ்களும் வழங்குகின்ற விழாவான இதிலே எனக்கொரு மகிழ்ச்சி. பிளஸ்-2 மாணவர்கள் என்று பார்த்தால், நாற்பதுக்கு மேற்பட்ட மாணவிகள் அதிலே இடம் பெற்றிருக்கிறார்கள். அதைப்போல நாற்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

**கல்வி அறிவு பெறுவதில் ஆண்களோடு பெண்களும் போட்டி**

ஆண்களுக்குச் சமமாக இன்றைக்குப் பெண்களும் கல்வி அறிவு பெறுகின்ற அந்தத் துடிப்போடு தமிழகத்திலே முன்வருகிறார்கள்; அதிலும் போட்டி போட்டுக்கொண்டு பரிசு பெறுகிறார்கள். முதலாம் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை என்கிற இடங்களை எப்படியும் நாம் பிடித்தாக வேண்டுமென்ற முனைப்போடு கல்வியைக் கற்கின்றார்கள் என்பது இந்த அரசினுடைய எண்ணத்திற்கு மேலும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஏற்படுத்துகிறது என்பதை நான் இங்கே தெளிவாக்க விரும்புகிறேன்.

இந்தத் திட்டத்தின்படி 1996-97ஆம் ஆண்டு முதல், தமிழை முதன்மைப் பாடமாகக் கொண்டு, 10, 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில அளவிலும், 97-98ஆம் ஆண்டு முதல் மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ, மாணவியர்களின் உயர் கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்கும். இந்தத் திட்டத்தைத்தான் இன்றைக்கு நாம் இங்கே நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

**மேல் படிப்பிற்கான செலவை அரசே ஏற்பதற்கான விழா**

இதன்படி பத்தாம் வகுப்புத் தேர்விலே மாவட்டந்தோறும் முதல் மூன்று இடங்கள் பெறும்



*10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில - மாவட்ட அளவில் மூன்று இடங்களைப் பெற்ற 235 மாணவ - மாணவிகளுக்கு மேல்படிப்புச் செலவை அரசு ஏற்கும் விழா 27-7-98 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.*

*235 மாணவ - மாணவிகளுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார். மேலும், பிற்பட்ட சௌராஷ்டிர சமுதாயத்தைச் சேர்ந்தவரும், கேரளாவில் முதல் வகுப்பிலேயிருந்து கல்லூரி புதுமுக வகுப்பு வரை தமிழை முதல் மொழியாகக் கொண்டு படித்து இப்போது ஐ.ஐ.டி.யில் முதலாண்டு பி.டெக் படிப்பவருமான மாணவர் கிருஷ்ணராம் படிப்புச் செலவிற்காக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் நிதியினை விழாவில் வழங்கினார்.*

*மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் தலைமையுரையாற்றினார்.*

மாணவ-மாணவியரின் மேல்நிலைக் கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்கின்றது.

அவ்வாறே 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட்ந்தோறும் மூன்று இடங்கள் பெறும் மாணவ-மாணவியர் படிக்க விரும்பும் மருத்துவம், பொறியியல் போன்ற தொழில் பட்டப் படிப்புகள் உட்பட, அவர்கள் எந்தப் படிப்பைப் படித்தாலும் அதற்குரிய செலவு முழுவதையும் இந்த அரசே ஏற்றுக்கொள்கின்றது. அதுதான் இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்படுகின்ற இந்த விழா.

**இவ்வாண்டு சாதனை படைத்த 235 மாணவ-மாணவியர்**

இந்தத் திட்டத்தின்படி இந்த ஆண்டில் 12ஆம் வகுப்புத் தேர்வில் மாவட்ட அளவில் சாதனைகள் படைத்துள்ள 96 மாணவர்களுக்கு அவர்களின் கல்லூரி பட்டப் படிப்புகளுக்கான செலவு முழுவதையும் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அதேபோல, பத்தாம் வகுப்புத் தேர்வில் இந்த ஆண்டில் சாதனைகள் படைத்துள்ள 139 மாணவர்களுக்கு, அவர்களுடைய மேல்நிலைக் கல்விக்கான செலவு முழுவதையும் இந்த அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இப்படி 10, 12ஆம் வகுப்புகளில் இந்த ஆண்டில் சாதனைகள் படைத்துள்ள மொத்த மாணவர்கள் 235 பேர் என்பதை எண்ணும்போது மகிழ்ச்சி மேலிடுகின்றது.

இஃதன்னியில், இன்னொரு செய்தியையும் உங்களுக்குக் கூற விரும்புகிறேன்; ஏற்கெனவே ஏடுகளில் வெளியிடப்பட்ட ஒரு செய்திதான்.

**கேரள மாணவருக்கு ரூ.1 இலட்சம் கல்வி நிதி**

திருவனந்தபுரம், விக்ரம் சாராபாய் விண்வெளி நிலையத்தில், பொறியாளராகப் பணியாற்றிவரும் கோவிந்தராமன் என்பவரின் செல்வன் கிருஷ்ணராம், சென்னை ஐ.ஐ.டி.யில் முதலாண்டு பி.டெக் வகுப்பிலே பயின்றுவருகிறார். அந்த மாணவர் பிற்படுத்தப்பட்ட சௌராஷ்டிரா சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவருடைய தாய்மொழி தமிழ் அல்ல. இந்த மாணவர் தமிழகத்தைச் சேர்ந்தவர் என்ற போதிலும், இவருடைய தந்தையார் கேரளாவிலே பணியாற்றிய காரணத்தால், அங்கேயுள்ள பள்ளியிலே முதல் வகுப்பிலேயிருந்து கல்லூரி புகுமுக வகுப்புவரை தமிழை முதல் மொழியாகக் கொண்டு படித்து, நல்ல மதிப்பெண்களைப் பெற்றதோடு ஏராளமான பரிசுகளையும் பெற்றிருக்கிறார். அவருடைய குடும்பத்திற்குப் போதிய நிதி வசதி இல்லாமையால், அந்த மாணவரின் ஐ.ஐ.டி. பி.டெக் படிப்பிற்கான செலவினைத் தமிழக அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அவரது கோரிக்கையை இந்த அரசு பரிவோடு ஏற்றுக்கொண்டு மாணவர் செல்வன் கிருஷ்ணராம் படிப்புச் செலவிற்காக ஒரு சிறப்பு நேர்வாகக் கொண்டு ஒரு இலட்சம் ரூபாய் கல்வி நிதியை இந்த அரசு - அவருக்கு இந்த விழாவிலே வழங்குகின்றது.

மாணவர்களுடைய ஆர்வத்தை மேலும் தூண்டுவதற்காக அவர்களை, இந்தியாவிலேயே - தமிழகத்து மாணவர்கள் மிகச் சிறந்தவர்கள், என்ற நிலைக்கு உயர்த்துவதற்காக இந்த அரசு எடுத்துள்ள முயற்சிகளிலே ஒரு சிலவற்றைத்தான் நானும் பேராசிரியர் அவர்களும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

**நாணிட வேண்டும்; நாண் - இடவேண்டும்!**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் - “ஏழ்மையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால், அதற்கு இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்” - என்று சொன்னார். ஏழ்மையின் காரணத்தால் ஒரு தமிழனுக்குப் படிப்பில்லை என்று சொன்னால் இங்குள்ள எல்லோரும் அதற்காக நாணிட வேண்டும் என்று சொன்னார். அதாவது வெட்கப்பட வேண்டுமென்று சொன்னார்.

அதற்கு நான் இந்த அரசின் சார்பாக வேறு பொருள் கொள்கிறேன். என்ன பொருள் என்றால், நாண் என்றால் வில்லிலே இருக்கின்ற நாண்; அந்த நாண் இருந்தால்தான் அம்பு பாயும். நாணிடப்பட்டால்தான் அம்பை எய்திட முடியும். மாணவர்களுடைய "கல்வி முன்னேற்றம்" என்கின்ற அம்பை எய்வதற்கு நாணிட (நாண் இட) வேண்டுமென்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கூறியதாகக் கருதி அந்த நாணிடுகின்ற பணியைத்தான் கழக அரசு செய்துகொண்டிருக்கின்றது.

### பாடமாக அமர்ந்திருக்கும் மாணவச் செல்வங்கள்

மாணவர்களுக்கு இவ்வளவு ஆர்வத்தை ஊட்டுகின்ற நிலையில் உதவிகளை, பரிசுகளை, பட்டயங்களை, அவர்களுடைய படிப்புச் செலவை ஏற்கின்ற இந்த நிலைமைகளையெல்லாம் நாம் ஏற்படுத்திக் கொடுத்தாலுங்கூட, எல்லா மாணவர்களும் உற்சாகத்தோடு, தங்களுடைய பெற்றோர் எதற்காகத் தங்களைக் கல்வி நிலையங்களுக்கு அனுப்பினார்கள் என்கின்ற அந்த அக்கறையோடு அல்லது ஆசிரியர்கள் ஏன் நமக்கு இவ்வளவு சிரமத்தோடு பயிற்சி தருகிறார்கள் என்கின்ற அந்த நிலையை எண்ணிப்பார்த்து எல்லா மாணவர்களும் இருக்கிறார்களா என்றால் - நான் மெத்த வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். இல்லை; அவர்களுக்கெல்லாம் ஒரு பாடமாகத்தான் இங்கே அமர்ந்திருக்கின்ற மாணவச் செல்வங்கள் எல்லாம் இருக்கின்றீர்கள் என்று நான் பெருமிதம் கொள்கிறேன்.

ஒரு காலத்தில் புராணத்திலே படித்திருக்கிறோம். ஆசிரியர் சொல்லிக் கொடுக்க விரும்பாவிட்டாலுங்கூட, ஒரு மாணவன், ஏகலைவன், தானாகவே வில் வித்தை கற்றுக்கொண்டு, தன்னுடைய ஆசிரியரிடத்திலே சென்று - ''வில் வித்தை கற்றுக் கொண்டேன்'' - என்று சொன்ன போது, "ஆசிரியர் அனுமதியில்லாமலேயே நீயாக என்னை நினைத்து வில்வித்தை கற்றுக் கொண்டாய், அதற்கு உன்னுடைய கட்டை விரலை காணிக்கையாகக் கொடு'' - என்று சொன்னதும், ஏகலைவன் தன் கட்டை விரலையே காணிக்கையாகக் கொடுத்தான் என்கிறது புராணம்.

ஆனால், இன்றைக்கு எந்த ஏகலைவனாவது தன்னுடைய கட்டை விரலைத் தரத் தயாராக இருக்கிறானா? என்று கேட்டால், கூடுமானவரையிலே ஆசிரியர்களுடைய கட்டை விரலைக் காணிக்கையாகப் பெறுகின்ற ஏகலைவர்கள் சிலபேர் இன்றைக்கு நாட்டிலே இருக்கின்றார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

### சென்னை மாநகரில் நடந்த அதிர்ச்சியடையச் செய்த நிகழ்ச்சி

இங்கே கல்வி அமைச்சரும், மற்ற அமைச்சர்களும், நானும் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறோம். குறிப்பாகப் பெண்கல்விக்குத் தமிழகத்திலே சிறப்பான இடம் தரப்படவேண்டுமென்று. ஆனால், அந்தக் கல்வி பயிலச் செல்கின்ற பெண்களுக்கு எப்படி சிறப்பான இடம் வேண்டுமென்று கருதுகிறோமோ அதைப் போலவே தகுந்த உரிய பாதுகாப்பும் அவர்களுக்கு வேண்டுமென்ற நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. கடந்த இரண்டு மூன்று நாட்களுக்கு முன் சென்னை மாநகரிலே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி எந்த அளவிற்கு என்னை அதிர்ச்சியடையச் செய்தது என்பதை நீங்கள் நன்கறிவீர்கள்.

கல்வி பயிலச் செல்கின்ற பெண்களைக் கல்வி பயிலுகின்ற மாணவர்களே "ஈவ்-டீசிங்" என்கின்ற பெயரால், எந்த அளவிற்குக் கொடுமைப் படுத்தியிருக்கிறார்கள் - ஒரு இளம் தளிரின் சாவுக்கு அவர்கள் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது 80,000 போலீசாரைக் கொண்ட தமிழகக் காவல்துறையால் மாத்திரம் இவை அனைத்தையும் உடனுக்குடன் கவனித்துச் சரி செய்வதென்பது இயலாத காரியம். ஆறு கோடி மக்கள் தமிழ்நாட்டிலே இருக்கிறோம். அதிலே சுமார் ஒரு கோடிப் பேர் மாணவர்கள் இன்றைக்குப் பயின்றுகொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு போலீஸ்காரரை நியமித்து அவர்களைக் காப்பாற்றுவது, பாதுகாப்பது என்பது முடியாத காரியம். எனவே, நாமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பொதுமக்களும் இப்படிப்பட்ட காரியம் நடைபெறுகின்றபோது அதைத் தடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

### 'ராகிங்' தடை செய்யக் கொண்டுவரப்பட்ட சட்டம்

சட்டத்தைத் தங்கள் கையிலே எடுத்துக்கொண்டு தடுக்கத் தேவையில்லை; அவர்களைத் தடுத்து அவர்களைப் பிடித்துக் காவல்துறையிடம் ஒப்படைக்கின்ற அந்தக் கடமையை நிறைவேற்றுபவர்களாகப் பொதுமக்களும் இருக்கவேண்டும். ஏற்கெனவே ஒரு சோகச் சம்பவம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே நடைபெற்றது; நாவரசின் நிகழ்ச்சியைத்தான் குறிப்பிடுகிறேன். அதற்காக இந்த அரசு "ராகிங்" தடை செய்யப்பட ஒரு சட்டமே கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கின்றது. அதற்குப் பிறகு பெருமளவிற்கு அது குறைந்திருக்கின்றது.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, இன்று கூட சென்னை மாநகராட்சி மன்றத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றி, அரசைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள், இந்த ''ஈவ்-டீசிங்''கைத் தடுப்பதற்கும் ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

### மக்கள் விருப்பப்படி விரைவில் சட்டம்

அவர்கள் மாத்திரமல்ல; தமிழக மக்கள் அனைவருமே அப்படி ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமென்று விரும்புகிறார்கள். இந்த அரசு அந்தச் சட்டத்தை இப்போது உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. விரைவிலே அந்தச் சட்டம் வரும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொண்டு, இந்த இனிய நிகழ்ச்சியிலே பரிசு பெறுகின்ற, பாராட்டுப் பெறுகின்ற, அரசின் உதவியைப் பெறுகின்ற எல்லா இளம் தளிர்களுக்கும் என்னுடைய அன்பான இனிய வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கிறேன்.



# அரசு ஆணைகள்

### 500 கி.மீ. நீளமுள்ள 4 மாவட்டநெடுஞ்சாலைகளை மேம்படுத்திட முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத்துறை பராமரிப்பில் உள்ள மதுரை-தூத்துக்குடி நெடுஞ்சாலையில் 131.6 கி.மீ. நீளச்சாலையும், கோவை - திண்டுக்கல் நெடுஞ்சாலையில் 158.2 கி.மீ. நீளச் சாலையும், தொப்பூர் - மேட்டூர் பவானி சாலையில் 80.6 கி.மீ. நீளச் சாலையும், பாளையங்கோட்டை - திருச்செந்தூர் நெடுஞ்சாலை மற்றும் திருநெல்வேலி - செங்கோட்டை நெடுஞ்சாலையில் 131.கி.மீ. நீளச்சாலைகளும், ஆக நான்கு பெரிய மாவட்ட நெடுஞ்சாலைகளில் ஏறத்தாழ 500 கி.மீ. நீளமுள்ள சாலைகளை தனியார் மூலதனத்தைப் பயன்படுத்தி உலகத் தரத்திற்கு இணையாக மேம்பாடு செய்திட ஐ.எல்.எப்.எஸ் என்ற தனியார் ஆலோசனை நிறுவனத்துடன், தமிழக அரசின் நெடுஞ்சாலைத்துறை, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் 20.7.98 அன்று காலை 10.30 மணிக்கு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு கையெழுத்திட்டது.

இந்த ஒப்பந்தத்தின்படி, ஐ.எல்.எப்.எஸ், நிறுவனம் சாலைகள் அமைத்தல் - இயக்குதல் - ஒப்படைத்தல் (Build Operate and Transfer) திட்டத்தின்கீழ் மேலே குறிப்பிட்டுள்ள 4 சாலைகளையும் மேம்படுத்துவதற்குரிய சாத்தியக் கூறுகளைக் கண்டறிந்து, திட்டப் பணிகளுக்கான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதுடன், திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தகுதி வாய்ந்த வல்லுநர்களைத் தேர்வுசெய்தல், வேலை ஒப்பந்தங்களைத் தயாரித்தல், ஆகியவற்றை நிறைவேற்றி முடித்தல், பின் அவற்றைப் பராமரித்தல் ஆகிய பணிகளில் நெடுஞ்சாலைத்துறைக்கு உதவிபுரியும்.

### சேலம் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட புதிய பகுதிகளுக்கு, ரூ.24.84 கோடி மதிப்பில் குடிநீர் திட்டம்.

சேலம் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட புதிய பகுதிகளுக்கு ரூ.24.84 கோடி மதிப்பிலான குடிநீர்த் திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது. காவிரி ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு தற்போது உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டத்தின் பிரதான நீரேற்றுக் குழாய்களிலிருந்து 447 கி.மீ. நீளம் கொண்ட பகிர்மானக் குழாய்கள் மூலமும், 131 இலட்சம் லிட்டர் மொத்தக் கொள்ளளவு கொண்ட 11 மேல்நிலைத் தொட்டிகள் மூலமும் குடிநீர் விநியோகிக்கப்படும்.

மேலும் 850 பொதுக்குழாய்கள் அமைக்கப்படவுள்ளன. ஆதிதிராவிட குடியிருப்பில் அமைக்கப்பட உள்ள 170 பொதுக்குழாய்களும் இதில் அடங்கும். கண்ணன்குறிச்சி டி.பி., ஜாகீர்அம்மாப்பாளையம், ஜாகீர்ரெட்டிபட்டி, ஜாகீர் காமநாயக்கன்பட்டி, ரெட்டியூர், அழகாபுரம், சின்னகோலப்பட்டி, அழகாபுரம்புதூர், பெரியகோவில்பட்டி, குமாரசாமிபட்டி, சொர்ணாபுரி, பேர்லேண்ட்ஸ், அன்னதானபட்டி, வடக்குஅம்மாபேட்டை, தெற்கு அம்மாபேட்டை, தடம்பட்டி, மெய்யனூர், ஜெரிகொண்டலம்பட்டி, சீலநாயக்கன்பட்டி, சிவதாபுரம், பள்ளிபட்டி, கண்டம்பட்டி மற்றும் ஆரியகவுண்டன்பட்டி ஆகிய 24 குடியிருப்புப் பகுதிகளில் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இத்திட்டத்தால் பயன்பெறுவர். வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் வழங்கும் நிதி உதவியுடன் சேலம் மாநகராட்சி இத்திட்டத்தைச் செயல்படுத்தும்.

### முத்தூர் காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து, ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த வெள்ளக்கோயில் மற்றும் காங்கேயம் ஒன்றியங்களிலுள்ள 127 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்

முத்தூர் காங்கேயம் கூட்டுக் குடிநீர் திட்டத்தில், ஈரோடு மாவட்டம் வெள்ளக்கோர்யில் ஒன்றியத்தைச் சார்ந்த 10 குடியிருப்புகள் மற்றும் காங்கேயம் ஒன்றியத்தைச் சார்ந்த 117 குடியிருப்புகளுக்கு ரூ.3.64 கோடி மதிப்பீட்டில், 30,000 மக்கள் தொகைக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டம் வள்ளிபனங்காட்டில் அமைக்கப்பட்டுள்ள தரைமட்டத் தொட்டியிலிருந்து காவிரி ஆற்று நீர் மின் இறைப்பான் மூலம் இறைக்கப்பட்டு விநியோகிக்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் 23.07 கி.மீ. நீளத்திற்கு நீருந்து குழாய்கள், 14 மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் 121 கி.மீ. நீளத்திற்குப் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்பட உள்ளது.

இத்திட்டத்தின் அமைப்புச் செலவு ரூ.3.64 கோடி மற்றும் ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.6 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் தனி நபர் திட்டச்செலவு ரூ.1,273/- மற்றும் 1,000 லிட்டர் குடிநீருக்கான செலவு ரூ.28.88 ஆகும். இத்திட்டத்தில் பயனுறும் குடியிருப்புகள் அனைத்தும் ஊரகக் குடியிருப்புகள் ஆதலால், இத்திட்டம் அரசின் முழுமானியத்துடன் செயல்படுத்தப்படுகிறது.

### திருச்சி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களுக்கு ரூ.12 கோடி மதிப்பில் குடிநீர்த் திட்டம்

புள்ளம்பாடி ஒன்றியத்தைச் சார்நத் 33 ஊரகக் குடியிருப்புகள், இலாங்குடி ஒன்றியத்தைச் சார்ந்த 5 ஊரகக் குடியிருப்புகள், ஆலத்தூர் ஒன்றியத்தைச் சார்ந்த 3 ஊரகக் குடியிருப்புகள் திருமானூர் ஒன்றியத்தைச் சார்ந்த 2 ஊரகக் குடியிருப்புகள் பயனுறும் வண்ணம் கொள்ளிடம் ஆற்றை நீராதாரமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 3 தரைமட்டத் தொட்டிகள், 85 கி.மீ. நீளத்திற்கு நீருந்து குழாய்கள், 26 மேல்நிலைத் தொட்டிகள் (மொத்தக் கொள்ளளவு 12.4 இலட்சம் லிட்டர்கள்) மற்றும் 35 கி.மீ. நீளத்திற்கு நீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் அமைப்புச் செலவு ரூ.12.05 கோடியாகும். வருட பராமரிப்புச் செலவு ரூ.24.50 இலட்சங்கள் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ஊரகப் பகுதிகளில் ரூ.14 கோடி மதிப்பில் 500 பள்ளிக் கட்டடங்கள்

1998-99ஆம் ஆண்டில், ஊரகப் பகுதிகளில் உள்ள மேல்நிலைப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு 500 பள்ளிக் கட்டடங்கள் கட்ட தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஒவ்வொரு பள்ளிக் கட்டடமும் ரூ.4 இலட்சம் மதிப்பில் கட்டப்படும். இதற்கான பணிகள் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் மற்றும் மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் 1998-99ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும்.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலரிப்புகளைத் தடுக்க உடனடி நடவடிக்கை

கன்னியாகுமரி மாவட்டத்தில் பள்ளம் துறை, பெரியவிளை, மண்டைக்காடு புதூர், மார்த்தாண்டம் துறை, வள்ள விளை, தூத்தூர், பூத்துறை, இறையுமன்துறை, இணையம், மிடாலம் ஆகிய 10 கடலோரக் கிராமங்கள் கடலரிப்புக் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தக் கிராமங்களில் 160 வீடுகள் சேதமடைந்துள்ளன. இச்சேதங்கள் குறித்தும், சேதாரத்தின் அபாயம் குறித்தும் கவலையுடன் சிந்தித்து, அந்த மாவட்டத்தில் ஏற்படும் கடலரிப்பைத் தடுப்பதற்காக முதல் கட்ட உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1 கோடி ரூபாய் அனுமதித்து, பணிகளை மிக விரைவில் தொடங்க ஆணையிட்டுள்ளார்.

## கோயம்புத்தூரில் வழக்கறிஞர்களுக்கான அறைகள் கட்ட 1.65 கோடி ரூபாய் அனுமதி

தமிழகத்தில் உள்ள மாநகராட்சிப் பகுதிகள் அனைத்திலும் வழக்கறிஞர்களுக்கான அறைகள் (Law Chambers) ஏற்படுத்தப்படும் என்றும், அதன் முதற்கட்டமாகக் கோவை, மதுரை ஆகிய இடங்களில் வழக்கறிஞர் அறைகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் தமிழகச் சட்டப்பேரவையில் அரசின் சார்பில் கடந்த ஆண்டில் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த அறிவிப்பின்படி, மதுரையில் வழக்கறிஞர்களுக்கான அறைகளைக் கட்டுவதற்காக 31.7.97 அன்று 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது கோயம்புத்தூரில் வழக்கறிஞர்களுக்கான அறைகளைக் கட்டுவதற்காக 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் அனுமதித்து 14.7.98 அன்று முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

## நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள 1154 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 9 பேரூராட்சிகளுக்கு ரூ.61.41 கோடியில் குடிநீர்த் திட்டம்

நாமக்கல் மாவட்டம் பட்டணம், சீராப்பள்ளி, ஆர்.புதுப்பட்டி ஊரகப் பேரூராட்சிகளுக்குக் குடிநீர் வழங்கவும், 3 பிற ஊரகப் பேரூராட்சிகள், 858 வழியோரக் குடியிருப்புகள் மற்றும் சேலம் மாவட்டத்திலுள்ள 6 ஊரகப் பேரூராட்சிகள், 296 வழியோரக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க ரூ.61.41 கோடி மதிப்பிலான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு 13.7.98 அன்று அனுமதி வழங்கியுள்ளது. கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒடுவத்தூர் அருகே காவிரி ஆற்றிலிருந்து நீர் எடுக்கப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தினால் பயன்பெறும் மக்கள் தொகை 7.26 இலட்சமாகும். இத்திட்டத்தில் நாள் ஒன்றுக்கு 83.00 மில்லியன் தண்ணீர் காவிரி ஆற்றிலிருந்து எடுக்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் 63.00 கி.மீ. நீளமுள்ள நீருந்துக் குழாய்கள் அமைக்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் பட்டணம், சீராப்பள்ளி மற்றும் ஆர்.புதுப்பட்டி ஊரகப் பேரூராட்சிகளுக்கு 6 மேல்நிலைத் தொட்டிகளும் 27 கி.மீ. நீளமுள்ள பகிர்மானக் குழாய்களும் அமைக்கப்பட உள்ள இத்திட்டத்தின் அமைப்புச் செலவு ரூ.61.41 கோடியும், ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ.5.40 கோடியும் ஆகும். இத்திட்டத்தின் தனிநபர் திட்டச்செலவு ரூ.663/- மற்றும் 1000 லிட்டர் குடிநீருக்கான செலவு ரூ.5.53 ஆகும். இத்திட்டத்தில் பயனுறும் குடியிருப்புகள் அனைத்தும் ஊரகக் குடியிருப்புகளாதலால், இத்திட்டம் தமிழ்நாடு அரசின் முழு மானியத்துடன் செயல்படுத்தப்படும்.

## ரூ.1.05 கோடி செலவில் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு ஓய்வூதியமும், குடும்ப ஓய்வூதியமும் உயர்த்தப்படுகிறது

முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மாத ஓய்வூதியம் 175 ரூபாய் என்றும், குடும்ப ஓய்வூதியம் 100 ரூபாய் என்றும் 23.8.96 அன்று முதல்முறையாக இந்த அரசினால் நிர்ணயிக்கப்பட்டு, தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இதனை மேலும் உயர்த்தி வழங்குமாறு முன்னாள் கிராம அலுவலர்கள் அரசுக்குக் கோரிக்கை விடுத்தனர். இக்கோரிக்கையினை மிகுந்த பரிவுடன் பரிசீலனை செய்து, முன்னாள் கிராம அலுவலர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் மாத ஓய்வூதியம் 175 ரூபாய் என்பதை 250 ரூபாய் ஆகவும், அவர்களது குடும்ப ஓய்வூதியம் 100 ரூபாய் என்பதை 150 ரூபாய் ஆகவும் உயர்த்தி முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார். இந்த ஆணையின் மூலம் ஓய்வூதியம் பெறும் 9,000 முன்னாள் கிராம அலுவலர்களும், 4,000 குடும்ப ஓய்வூதியம் பெறுவோரும் பயனடைவர். இதன் மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவாகும்.

## வளர்ந்துவரும் தமிழ்நாடு காவல்துறையை நவீனப்படுத்திட ரூபாய் 2 கோடி அனுமதி

வளர்ந்துவரும் அறிவியல் புதுமைகளைத் துணையாகக் கொண்டு, சமூக விரோதசக்திகள் குற்றங்கள் புரிவதை உரிய காலத்தில் தடுத்து, நாட்டில் சட்டம் ஒழுங்கை முறையாகப் பராமரிப்பதற்கு, காவல்துறையில் பல நவீன வசதிகள் செய்யப்பட வேண்டியது இன்றியமையாததாய் உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு தமிழகக் காவல்துறை, மத்திய அரசின் உதவியுடன் படிப்படியாக நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் தமிழகக் காவல்துறையை நவீனப்படுத்துவதற்காக மத்திய அரசின் உதவியோடு தமிழக அரசு மொத்தம் 3 கோடியே 93 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அனுமதித்தது. அதேபோல, தற்பொழுது தமிழகக் காவல்துறையை மேலும் நவீனப்படுத்தும் பணிகளுக்காக மொத்தம் 2 கோடி ரூபாய் அனுமதித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

## காவலர்க்குப் பதவி உயர்வு

25.5.1998 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற காவல்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 10 ஆண்டுகள் தலைமைக் காவலர்களாகப் பணி முடித்தவர்களுக்குச் சிறப்பு உதவி ஆய்வாளர் பதவி உயர்வு அளித்து, உதவி ஆய்வாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்படும் என அறிவித்திருந்தார். இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து பதவி உயர்வு பெறத் தகுதியானவர்களின் பட்டியலைத் தயாரித்துக் காவல்துறை தலைமை இயக்குநர் அரசுக்கு அனுப்பிய அறிக்கையினைப் பரிசீலனை செய்து தகுதி வாய்ந்த 1869 தலைமைக் காவலர்களையும் அதே போல 1974 ஆம் ஆண்டில் நேரடியாக நிலை 1 (Grade-I) காவலர்களாக நியமிக்கப்பட்டு பதவி உயர்வில் தற்போது தலைமைக் காவலர்களாகப் பணிபுரிந்து வரும் 469 நபர்களையும் சேர்த்து, ஆக மொத்தம் 2,338 நபர்களுக்குப் பதவி உயர்வு வழங்கி இன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். இதனால் நடப்பு ஆண்டில் அரசுக்கு ஏற்படும் செலவினம் ரூ.1.85 கோடியாகும்.

தமிழ்நாட்டில் 9 மாவட்டங்களில், பாமாயில் மரக்கன்றுகள் பாதி விலையில் விவசாயிகளுக்கு வழங்கிட ஏதுவாக 2.25 இலட்சம் மரக்கன்றுகள் தயார் நிலையில் உள்ளன. ஏற்கெனவே பாமாயில் மரச் சாகுபடிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள திருச்சி, கரூர், பெரம்பலூர், தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய 6 மாவட்டங்களுடன் இவ்வாண்டில், தூத்துக்குடி, நெல்லை, தேனி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பாமாயில் மரச்சாகுபடித் திட்டம் அரசால் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. நெல்லை, கரூர் மற்றும் தஞ்சை ஆகிய இடங்களில் பாமாயில் எண்ணெய் பிழியும் ஆலைகள் அரசு உதவியுடன் விரைவில் அமைக்கப்படும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்





பதிவு எண் : M. 8676
Licence No. TN/MS(C)/PP-2



# தமிழரசு

ஆகஸ்ட் 1 - 15, 1998 ரூ.3









**நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.**

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98


## இந்த இதழில்


- சுதந்திரத் திருநாள் பொன்விழா ---------- 2
- சமுதாயத் திட்டங்களுடன் பொன்விழா கொண்டாட்டம் - கலைஞர் பெருமிதம் ---------- 4
- காவிரி நதிநீர்ப் பங்கீடு - தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. தர உடன்பாடு ---------- 6
- காவிரி நதிப்பிரச்சினை - உச்ச நீதிமன்ற ஆணை ---------- 9
- ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் - முதலமைச்சர் உரை ---------- 11
- காவிரி: இதுவரை நடந்தது ---------- 17
- அனைவருக்கும் மருத்துவ வசதி ---------- 20
- எங்கள் ஊர்ப் பிரச்சினை ---------- 29
- காவிரி உடன்பாடு - பத்திரிகைகள் பாராட்டு ---------- 36



**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2029
ஆடி
ஆகஸ்ட் 1-15, 1998

மலர் : 30 இதழ் : 3

விலை ரூ.3


### திருக்குறள்

*இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.*

இல்லறத்தைப் போற்றி வாழ்வது, விருந்தினரை வரவேற்று, அவர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்காகவே.

**கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...**



# சுதந்திரத் திருநாள் பொன்விழா

இந்திய சுதந்திரத் திருநாள் பொன் விழாவைச் சென்னை மாநகரில் தமிழ்நாடு அரசும், தென்னகப் பண்பாட்டு மையமும் இணைந்து எழிலுறக் கொண்டாடின.

கடற்கரையில், மாபெரும் அளவில் அந்தமான் சிறைவடிவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அழகிய அரங்கில் 11.8.98 அன்று மாலையில் விழாத் தொடர்பான நிகழ்ச்சிகள் தொடங்கின. முன்னதாக - தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், அந்தமான், புதுச்சேரி ஆகிய மாநிலங்களிலிருந்து ஏந்தி வரப்பட்ட 'சுதந்திரச் சுடர்' இளைஞர்களின் தொடர் ஓட்டத்தை, வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், போர் நினைவுச் சின்னம் அருகே தொடங்கிவைத்தார்.

காந்தியடிகளின் திருவுருவச் சிலை அருகில், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்கள் சுதந்திரத் திருநாள் ஒளிச்சுடரை ஏற்றிவைத்துப் பொன்விழா உறுதிமொழியை எடுத்துரைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.வ.முல்லைவேந்தன் அவர்களும் கலந்துகொண்டார்.

கடற்கரை நிகழ்ச்சி தொடங்குமுன் - 3 விமானங்களும், 3 ஹெலிகாப்டர்களும் வானத்திலிருந்து ரோஜா மலர்மாரி பொழிந்து சென்றன.

நிகழ்ச்சியை - மேதகு தமிழக ஆளுநர் செல்வி.எம்.பாத்திமா பீவி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர், மேதகு கர்நாடக ஆளுநர் குர்ஷித் ஆலம்கான், மேதகு புதுவை துணைநிலை ஆளுநர், ரஜனிராய் ஆகியோர் முரசு கொட்டித் தொடங்கி வைத்தார்கள். அந்த முரசொலி எங்கும் எதிரொலித்தது.

விழாவைத் தொடங்கி வைத்து மேதகு ஆளுநர் பாத்திமா பீவி பேசியதாவது : கடந்த 50 ஆண்டுகளில் இந்தியா தனது பொருளாதாரத் துயர்களிலிருந்து மெல்ல மீண்டு வந்துள்ளது. இந்திய மக்களின் ஒட்டு மொத்த முனைப்பால் இது சாத்தியமானது.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியம் உள்ள நாம், 'இந்தியத் தன்மை'யால் கட்டுப்பட்டுள்ளோம்; சட்டத்தினால் அல்ல.

"21-ம் நூற்றாண்டில் இந்தியாவின் எதிர்காலம் சிறப்பாக இருக்கிறது. அதற்கான சரியான திசையில் செல்கிறோம் என்றார் பாத்திமா பீவி.

கல்வி அமைச்சர் : தேடித்தந்த சுதந்திரத்தை நிலைநாட்ட ஜனநாயகமே சிறந்த முறை என நேரு

**அட்டைப்பட விளக்கம்**

**முதல் அட்டை :** சென்னைக் கடற்கரையில், சீரணி அரங்கையொட்டி அமைக்கப்பட்டிருந்த அந்தமான் செல்லுலர் சிறைச்சாலை வடிவக் கட்டடத்தின் முன் இருந்த அரங்கில் - இந்தியத் திருநாட்டின் 50-வது சுதந்திரத் திருநாள் நிறைவு விழா நிகழ்ச்சிகள்.

**நான்காம் அட்டை :** தருமபுரி மாவட்டத்தில் மக்கள் நலப்பணிகள் தொடக்க விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மற்றும் அமைச்சர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சி.

கீழே : ஒகேனக்கல் அருவி







## 11 தமிழ் எழுத்தாளர் குடும்பத்துக்கு தலா ரூ.5 இலட்சம் பரிவுத் தொகை!

விடுதலை உணர்வூட்டி நூல்கள் எழுதிய மறைந்த தேசியத் தமிழ் எழுத்தாளர்கள் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, ப.ஜீவானந்தம், நாமக்கல் வெ.இராமலிங்கம் பிள்ளை, மூதறிஞர் இராஜாஜி, வ.உ.சிதம்பரனார், சுத்தானந்த பாரதியார், அகிலன், ஏ.எஸ்.கே. அய்யங்கார், வ.ரா., நாவலர் சோமசுந்தர பாரதியார், கா.மு.ஷெரீப், பரலி சு.நெல்லையப்பர்,. வ.வே.சு. அய்யர், காரைக்குடி சா.கணேசன்,ச.து.சு.யோகியார் ஆகிய 15 பேரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படும் என்று ஏற்கெனவே முதலமைச்சர் கலைஞர் சட்டப் பேரவையில் அறிவித்திருந்தார்.

இவர்களில் இராஜாஜி, அகிலன் படைப்புகள் நாட்டுடைமையாக்கப்படுவதை அவர்கள் குடும்பத்தினர் ஏற்கவில்லை.

எனவே, மற்ற 13 பேருக்கும் பரிவுத் தொகையாகத் தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.655 இலட்சம் வழங்கத் தமிழக அரசு ஆணை பிறப்பித்தது.

இவர்களில் வ.ரா., ஏ.எஸ்.கே., அய்யங்கார் ஆகியோரின் வாரிசுதாரர்கள் குறித்து ஆய்வு செய்த பின்னர் வழங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.



வ.உ.சி., வ.வே.சு.அய்யர், தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர்.



ச.து.சு.யோகி, சுத்தானந்த பாரதியார், சோமசுந்தர பாரதியார், வ.ரா.



பரலி சு. நெல்லையப்பர், ஜீவா, சா.கணேசன், ஏ.எஸ்.கே. அய்யங்கார், கா.மு.ஷெரீப்.

நிலைநிறுத்திக் காட்டினார். மாநிலங்கள் மதிக்கப்பட வேண்டும் என்ற உணர்வை அண்ணா உருவாக்கினார். நாம் பெற்ற சுதந்திரம் நிறைவான சுதந்திரமாக விளங்க வேண்டும். சுதந்திரம் பெற்றுத் தந்தவர்களின் தியாகம் நம்மைத் தகுதியுள்ளவர்களாக ஆக்க வேண்டும்.

தமிழ் வளர்ச்சி - பண்பாடுத் துறை அமைச்சர் திரு.மு.தமிழ்க் குடிமகன் : அந்தமான் சிறையில் இருந்த 698 தனி அறைகளிலும் விடுதலைப் போராட்ட வீரர்கள் அடைக்கப்பட்டு, துன்புறுத்தப் பட்டார்கள். தூக்கிலிடப்பட்டார்கள். அதை நினைவுப்படுத்தும் வகையில் இக்கட்ட மைப்பை உருவாக்கி யுள்ளோம். "எங்களுக்காக இன்னுயிர் ஈந்த மக்காள், உங்களுக்காக இன்று உகுக்கின்றோம் கண்ணீர்".



இலட்சத் தீவு மக்களவை உறுப்பினர் : காந்தி படுகொலை செய்யப்பட்ட செய்தி நான்கு மாதங்களுக்குப் பிறகுதான் இலட்சத் தீவுக்குத் தெரிய வந்தது. இப்போது எல்லாத் தீவுகளிலிருந்தும் எல்லா நாடுகளுக்கும் தொலைபேசியில் தொடர்புகொள்ளும் வகையில் இந்தியா வளர்ச்சியடைந்துள்ளது.

இந்த கடற்கரை நிகழ்ச்சியில் செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் வ.முல்லைவேந்தன் வரவேற்றார். தென்னகப் பண்பாட்டு மைய இயக்குநர் கா.ராமமூர்த்தி, மத்திய அரசின் பண்பாட்டு துறைச் செயலர் ரி.வெ.வைத்தியநாத அய்யர் ஆகியோர் பேசினர்.

விழா முடிவில் செய்தித் துறைச் செயலாளர் திரு.எஸ்.ராஜரெத்தினம் நன்றி கூறினார்.

பல்வேறு பள்ளி, கல்லூரி மாணவிகள், பலதுறைக் கலைஞர்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் பல தொடர்ந்து இவ்விழாவில் இடம் பெற்றன. 13.8.98 வரை கடற்கரையில் மாலைவேளையிலெல்லாம் தொடர்ந்து நடைபெற்ற இந்த இனிய நிகழ்ச்சிகளில் வெள்ளம்போல் தமிழர் கூட்டம், வீரம் கொள் கூட்டம் திரண்டு வந்து கண்டுகளித்தது.

- 'ராஜு'

# சமுதாயத் திட்டங்களுடன் பொன்விழாக் கொண்டாட்டம்

## - முதலமைச்சர் கலைஞர் பெருமிதம் !

தென்னகப் பண்பாட்டு மையத்தின் சார்பில் சென்னை மெரினா கடற்கரை சீரணி அரங்கில் நடைபெற்ற சுதந்திரப் பொன்விழா நிறைவு விழாவின் தொடக்க நாளாம் 11-8-98 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

இன்று இந்த விழாவில் ஒரு மாநிலம்தான் பாக்கி. தமிழ் மாநிலம், கர்நாடக மாநிலம், புதுவை மாநிலம் கலந்துகொள்ளும் இந்த விழாவில் கேரள மாநிலம்தான் வரவில்லை. அதை ஓரளவிற்கு நம்முடைய தமிழ் மாநில ஆளுநர் அவர்கள் நிறைவு செய்திருக்கிறார் என்றே நான் கருதுகிறேன்.

### பிரதமர் முன்னிலையில் செய்துகொண்ட ஒப்பந்தம்

இந்த நான்கு மாநிலங்களும் அண்மையில் டெல்லியில் கூடி, ஒரு நல்ல ஒப்பந்தத்தை பிரதமர் முன்னிலையிலே செய்து கொண்டிருப்பதை இந்தப் பொன்விழா ஆண்டு நிறைவு விழாவில் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கர்நாடக மாநில ஆளுநர் மேதகு குர்ஷித் ஆலம்கான் அவர்களும் இங்கே வந்திருக்கின்ற காரணத்தால், நான் இந்தச் செய்தியை அறிவிக்கின்றபோது, அவரும் மகிழ்வார் என்பதற்காக அறிவிக்கின்றேன்.



**.. I want to inform you all, that the DRAFT for the Cauvery issue has been approved and notified by the Central Government just half an hour back. I have received the information from Delhi and I want to thank all concerned, particularly our Prime Minister of India on behalf of the people of Tamil Nadu.**

காவிரிப் பிரச்சினையின் வரைவுத் திட்டம் மத்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை உங்களுக்கெல்லாம் தெரிவிக்க விரும்புகின்றேன். அரை மணி நேரத்திற்கு முன்புதான் டெல்லியிலிருந்து எனக்கு இந்தச் செய்தி கிட்டியது.

இதிலே சம்மந்தப்பட்ட அனைவருக்கும், குறிப்பாக நம்முடைய இந்தியப் பிரதமர் அவர்களுக்கும் தமிழ்நாட்டு மக்கள் சார்பில் என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நல்ல செய்தியோடு, இந்தச் சுதந்திரப் பொன்விழா ஆண்டு நிறைவுவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சுதந்திரம் பெறுவதற்கு எவ்வளவு கஷ்டநஷ்டங்களைப் பட்டோமோ, அதைப்போலவே, இந்தக் காவிரி ஒப்பந்தத்தை - இந்தத் தீர்வை அடைவதற்கும் பல கஷ்ட நஷ்டங்களை நாம் பட்டிருக்கின்றோம்.

சுதந்திரம் கிடைக்கின்ற நேரத்தில் எவ்வளவு இடையூறுகள் இருந்ததோ, அதைப் போலவே காவிரிப் பிரச்சினை தீருகின்ற நேரத்திலும் பல இடையூறுகள் விளைந்தன.

*"தடைக் கற்கள் உண்டென்றாலும்*
*தடந்தோள் உண்டெனச் சிரிப்பாய்"*

- என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுடைய கவிதை வரிகளுக்கேற்ப தடைக்கற்களையெல்லாம் கடந்து, இன்று நதிநீர் பங்கீட்டு ஒப்பந்தத்தை நாம் உருவாக்கியிருக்கின்றோம் என்பதைப் பெருந்தன்மையோடு, பெருமிதத்தோடு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த ஒப்பந்தம் தமிழ்நாட்டிற்கு மாத்திரம் வெற்றி என்று நான் சொல்லமாட்டேன்; சொல்லவில்லை. இந்த ஒப்பந்தம் கர்நாடக மாநிலத்திற்கும், கேரள மாநிலத்திற்கும், புதுவை மாநிலத்திற்கும் - இந்த மாநிலங்களிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் கிடைத்துள்ள நல்ல செய்தி என்பதை இந்தப் பொன்விழா ஆண்டின் நிறைவு விழாவிலே, நான் பெருமிதத்தோடு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னால் பேசியவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல், இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போராடி, பாடுபட்டு, களத்தில் நின்று தியாகங்கள் செய்தவர்கள் அடைபட்டுக் கிடந்த கூண்டின் விஸ்வரூபம்தான் அந்தமான் சிறைச்சாலையாக இந்தப் பின்னணியிலே அமைக்கப் பட்டிருக்கின்றது.

எத்தனைப் பேர் சித்ரவதைக்கு ஆளானார்கள், எத்தனைப் பேர் சிறைச்சாலைக் கம்பிகளை ஆயுள் முழுவதும் எண்ணிக் கொண்டு உயிர் நீத்தார்கள், எத்தனைப் பேர் ரத்தச் சகதியிலே தங்களுடைய தலைகளைச் செந்தாமரை மொட்டுக்களாக மிதக்க விட்டார்கள் என்பவைகளையெல்லாம் எண்ணிப்பார்த்தால் இன்றைக்கு நாம் மகிழ்ச்சியோடு கொண்டாடுகின்ற இந்தச் சுதந்திரப் பொன்விழா எவ்வளவு நெருக்கடிகளைத் தாண்டி, எத்தனை நெருப்பாறுகளைத் தாண்டி, எத்தனை அக்னி எரிமலைகளைத் தாண்டி கிடைத்துள்ள வரப்பிரசாதம் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

இந்த சுதந்திரப் பொன்விழாவைத் தமிழக அரசைப் பொறுத்தவரையில், நம்முடைய ஆளுநர் நீதிபதி செல்வி பாத்திமா பீவி அவர்களுடைய ஒத்துழைப்போடும், அவர்கள் தலைமையேற்று நடத்துகின்ற இந்தத் தென்னகப் பண்பாட்டுக் குழுவினுடைய நன் முயற்சியோடும், கடந்த ஆண்டும் சரி, இடைக்காலத்திலே பல திங்கள்களிலும், பல வாரங்களிலும் மிகச்சிறப்பாக நாம் கொண்டாடி இருக்கின்றோம். அதற்குச் சிகரம் வைத்தாற்போல், இந்த விழாவை இப்போது நடத்திக்கொண்டிருக்கிறோம்.

### சமுதாயத் திட்டங்களுடன் பொன்விழாக் கொண்டாட்டம்

தமிழக அரசைப் பொறுத்தவரையில் ஓராண்டுக் காலத்தில் பல சமுதாய நலத்திட்டங்களை, ஏழை எளியோருக்கான நல்வாழ்வுத் திட்டங்களை, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், நடுத்தர மக்கள், தரித்திர நாராயணர்கள் இவர்கள் வளம் பெறுவதற்கான திட்டங்கள் பலவற்றைத் தீட்டி இந்தப் பொன்விழாவைக் கொண்டாடி இருக்கின்றோம்.

தேசத்துக்காகத் தியாகம் செய்த உத்தமர்களுக்குப் பல நினைவுச்சின்னங்களை எழுப்பியிருக்கின்றோம். இன்னும் பல நினைவுச்சின்னங்களை, மண்டபங்களை அந்தத் தியாகிகளுக்கு எழுப்ப இருக்கின்றோம்.

நினைவு மண்டபங்கள் மாத்திரமல்ல, அந்தத் தியாகிகளுடைய வாழ்வில் வளம்கொழிக்க தமிழக அரசு அந்தத் தியாகிகளுக்கெல்லாம் மரியாதை செய்வது மாத்திரமல்ல, அவர்களது வாழ்விலும் ஒளிவிளக்கேற்ற பல உதவிகளைச் செய்துவருகின்றது. இத்தகைய நிலையிலே இந்தப் பொன்விழாவை நாம் கொண்டாடுகிறோம்.

### நாட்டு மக்களுக்குக் கடமை ஆற்றச் சபதமேற்போம்

இந்தப் பொன்விழா ஓராண்டுக் கொண்டாட்டமாக முடியாமல், தொடர்ந்து இந்தத் தொண்டுகளைத் தமிழ் மக்களுக்குச் சாதாரண சாமான்ய மக்களுக்கு, குறிப்பாகவும் பொதுவாகவும் சொல்லவேண்டுமேயானால், நாட்டு மக்களுக்கு நாம் கடமையாற்ற வேண்டிய சபதத்தை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கூறி, வருகை தந்துள்ள கர்நாடக மாநில ஆளுநர் அவர்களையும், புதுவை துணைநிலை ஆளுநர் அவர்களையும் மற்றும் லட்சத்தீவினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் சயீத் அவர்களையும், அந்தமான் ஆணையர் சர்மா அவர்களையும், உங்கள் அனைவரையும் வரவேற்று மகிழ்கின்றேன்.

- இவ்வாறு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் உரையாற்றினார்.

# காவிரி நதிநீர்ப் பங்கீடு : தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. தர உடன்பாடு



## அரசிதழில் வரைவுத் திட்டம் வெளியிடப்பட்டது. உச்ச நீதிமன்றம் ஏற்றது; முதலமைச்சர் கலைஞர் பெருமிதம் !

காவிரி நதிநீரைப் பகிர்ந்துகொள்ளுவது தொடர்பாக, மத்திய அரசு ஒரு வரைவுத்திட்டம் தயாரித்திருந்தது; அதுபற்றி விவாதித்து முடிவெடுக்க மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு.வாஜ்பாய் அவர்கள், காவிரி வடிநிலப் பகுதி முதலமைச்சர்கள் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

காவிரி நடுவர் மன்ற ஆணையை அமல்படுத்தும் நோக்கத்தோடும், நீதிமன்றத்திற்கு வெளியிலேயே பேசி முடிவு காணும் நல்லெண்ணத்தோடும் மாண்புமிகு பிரதமர் கூட்டும் அக்கூட்டத்தில் பங்கேற்குமுன் - அதுபற்றிக் கலந்துபேச மாண்புமிகு கலைஞர் அவர்கள், அரசு தலைமைச் செயலகத்தில் அனைத்துக்கட்சிக் கூட்டம் ஒன்றைக் கூட்டியிருந்தார்.

டில்லியில் பிரதமர் கூட்டும் அக்கூட்டத்தில், முதல்வர் சென்று கலந்துகொள்ள இக்கூட்டம் ஒருமனதாகத் தீர்மானித்தது.

**தீர்மானம்**

தலைமைச் செயலகம் - நாமக்கல் கவிஞர் மாளிகையில் 3.8.98 அன்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழகத்தில் உள்ள 41 கட்சிகளைச் சேர்ந்த 72 பேர் கலந்துகொண்டார்கள்.

இதுவரை காவிரி நதிநீர்ப் பங்கீடு பற்றிய பேச்சு வார்த்தைகளும், டில்லியில் பேச இருப்பதும் பற்றிய விவர அறிக்கையும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் தரப்பட்டது. மேலும் இதுபற்றிக் கலைஞர் அவர்கள் விளக்கி அக்கூட்டத்தில் உரையாற்றினார்.

அதன்பின்பு, டில்லியில் நடைபெற உள்ள பேச்சு வார்த்தையில் மாண்புமிகு முதலமைச்சர் கலந்துகொள்ளலாம் என்று இந்தக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எதிர்ப்பு இல்லை.

**முதலமைச்சர் உரை**

- மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அந்தக் கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவு முழு விவரம் வருமாறு :

"அன்புடையீர்,

வணக்கம்.

எனது அழைப்பினை ஏற்று இங்கு வந்துள்ள அனைத்துக்கட்சித் தலைவர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும் முதற்கண் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திற்கும், கர்நாடக மாநிலத்திற்கும் இடையே நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கின்ற பிரச்சினை காவிரி நதி நீர்ப்







பிரச்சினை என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வினைக் கண்டிட வேண்டும் என்று 1968 முதல் 1990 வரை 26 முறை பேச்சுவார்த்தைகள் மேற்கொண்ட பின்னரும், தீர்வு ஏதும் ஏற்படவில்லை என்பதையும் தாங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்று காணவேண்டும் என்றால், அது நடுவர் மன்றம் ஒன்றினால்தான் முடியும் என்பதைத் தமிழக அரசு திடமாக நம்பியதால், 1970-ல் இருந்து நடுவர்மன்றம் ஒன்றினை அமைக்கவேண்டும் என்று மத்திய அரசை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததையும் தாங்கள் நன்கு அறிவீர்கள்.

காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்கு விரைந்து ஒரு முடிவினைக் காண மத்திய அரசு உடனடியாக ஒரு நடுவர் மன்றத்தை அமைக்க உச்ச நீதிமன்றம் ஆணை ஒன்று வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, காவிரி டெல்டா விவசாயிகள் சங்கத்தின் சார்பில் 1983ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடுத்திருந்தனர்.

இந்த வழக்கில் தமிழக அரசு தன்னையும் இணைத்துக் கொண்டு விவசாயிகள் கோரிக்கைக்கு ஆதரவாக வாதிட்டது.

1990 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26ஆம் தேதி வழக்கு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த நேரத்தில் இந்த வழக்கு 24.4.90 அன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். இதற்கிடையில் மத்திய அரசு முன்னிலையில் காவிரி நதி தீரத்து மாநில முதல்வர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு ஒரு முடிவினைக் காணலாம் என்ற அறிவுரையை உச்ச நீதிமன்றம் வழங்கியது.

உச்ச நீதிமன்றத்தின் அறிவுரைக்கு ஏற்ப, 5.4.90 அன்று, அப்போதைய தமிழகத்தின் முதல்வர் பொறுப்பிலிருந்த நானும், கர்நாடக முதல்வர் பொறுப்பில் இருந்த திரு.வீரேந்திர பட்டீல் அவர்களும், மத்திய நீர்வள அமைச்சர் முன்னிலையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம். ஆனால் அக்கூட்டத்திலும் ஒருமித்த கருத்து உருவாகாத காரணத்தால், மீண்டும் நானும் திரு.வீரேந்திர பட்டீல் அவர்களும் சென்னையில் 19.4.90 அன்று சந்தித்துப் பேசுவது என்று முடிவெடுக்கப்பட்டது.

19.4.90 அன்று சென்னையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையிலும் ஒருமித்த கருத்து உருவாகவில்லை.

இந்தப் பேச்சுவார்த்தையில் எந்தப் பலனும் ஏற்படவில்லை என்று தமிழக அரசின் சார்பில் 24.4.90 அன்று உச்ச நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. அத்தோடு 24.4.90 அன்றே தமிழகச் சட்டப் பேரவை பேச்சுவார்த்தைகள் தோல்வி அடைந்துவிட்டதை உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு திட்டவட்டமாகத் தெரிவிக்கவேண்டும் என்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது.

**உச்ச நீதிமன்றத் தீர்ப்பு**

அப்பொழுது இந்தியப் பிரதமராக இருந்த திரு.வி.பி.சிங் அவர்கள் தலைமையில் இருந்த மத்திய அரசு தம் வழக்கறிஞர் மூலம், தமிழக அரசின் கருத்தை உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்ததோடு இப்பிரச்சினை குறித்து உச்ச நீதிமன்ற முடிவுக்கே விட்டு விடுவதாகவும் தெரிவித்தது.

*'காவிரி நதிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, மத்திய அரசு ஒரு மாத காலத்துக்குள் நடுவர் மன்றம் ஒன்றை அமைத்திட வேண்டும் என்ற தீர்ப்பினை 4.5.90 அன்று உச்ச நீதிமன்றம் வழங்கியது'.*

மத்திய அரசும் 2.6.90 அன்று மூன்று நீதிபதிகளைக் கொண்ட ஒரு நடுவர் மன்றத்தை அமைத்தது.

28.7.90 அன்று நடைபெற்ற நடுவர் மன்றத்தின் முதற்கூட்டத்திலேயே, தமிழக அரசின் சார்பில் நடுவர்மன்றம் ஒரு இடைக்காலத் தீர்ப்பினை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை வைத்தது.

அவ்வாறு இடைக்காலத் தீர்ப்பினை வழங்க அதிகாரம் இல்லை என்ற ஒரு தீர்ப்பினை நடுவர் மன்றம் 5.1.91 அன்று வழங்கியது.

இந்தத் தீர்ப்பினை எதிர்த்து தமிழக அரசு 10.1.91 அன்று உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தொடுத்தது. அந்த வழக்கில் 26.4.91 அன்று நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பினை வழங்கலாம் என்ற தீர்ப்பை உச்ச நீதிமன்றம் அளித்தது.

**முக்கிய ஷரத்து**

உச்சநீதி மன்றத்தின் ஆணையை ஏற்று 25.6.91 அன்று நடுவர் மன்றம் தன் இடைக்கால ஆணையை வழங்கியது.

*ஜூன் முதல் மே வரையிலான 12 மாதங்களில் மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு வந்து சேரும்படி 205 டி.எம்.சி. நீரைக் கர்நாடகம் தனது நீர்த்தேக்கத்திலிருந்து விடவேண்டும் என்பதுதான் ஆணையின் முக்கிய ஷரத்தாகும்.*

*அந்த 205 டி.எம்.சியை மாதந்தோறும் / வாரந்தோறும் எப்படியெல்லாம் வழங்க வேண்டும் என்பதைப் பற்றியும் நடுவர் மன்றம் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது.*

*ஆனால், இன்றுவரை எந்த ஆண்டிலும் கர்நாடகம் நடுவர் மன்றத்தின் ஆணையை முழுமையாக நிறைவேற்றவில்லை என்பதுதான் உண்மை.*

1956ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் தாவா சட்டம் பிரிவு 6-ஏ யின் கீழ், நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்தும் பொருட்டு ஒரு திட்டத்தைத் தீட்டுவது மத்திய அரசின் கடமையாகும்.

ஆனால், மத்திய அரசு தன் கடமையைச் செய்யாததால், "மத்திய அரசு, அந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டும்" என்று உச்ச நீதிமன்றம் ஆணையிடவேண்டும் என்று தமிழக அரசு 1992ல் சிவில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தது.

அதுமட்டுமல்லாது கர்நாடகம் இந்த ஆணையின் அடிப்படையில் உரிய காலத்தில் எப்பொழுதெல்லாம் நீரை வழங்க முன்வரவில்லையோ அப்பொழுதெல்லாம் தமிழ்நாடு இடைக்கால மனுக்களை உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்துகொண்டு வந்தது.

1996ஆம் ஆண்டு மீண்டும் நான் முதல்வர் பொறுப்பில் அமர்ந்ததும், இந்த வழக்கினைத் துரிதப்படுத்த எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி சட்டமன்றத்தில் விளக்கிப் பேசிய பேச்சின் ஒரு பகுதியை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவது நலம் என்பதால் அதை இங்கே சுட்டிக் காட்டுகிறேன்.

*"தமிழக அரசு தொடுத்த ஒரு மனுவினை உச்ச நீதிமன்றம் 30.7.1996 அன்று விசாரித்தபொழுது தமிழ்நாட்டிற்குத் தேவையான நீரை உடன்பெற இருமாநில முதல்வர்களும் கூடிப்பேசி அதன் முடிவினை உச்சநீதிமன்றத்திற்குத் தெரிவிக்குமாறு விழைந்தது. இதற்கிணங்க 5.8.1996, 4.9.1996, 21 மற்றும் 22.9.1996, 16.10.1996 மற்றும் 5.1.1997 ஆகிய நாட்களில் ஐந்து முறை பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தைகள் மூலம் சுமுக முடிவு காண இயலவில்லை.*

**வரைவுத் திட்டம்**

*அதற்குப் பிறகுதான் இந்தப் பேச்சுவார்த்தை பயன்படாது என்று மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று "பேச்சுவார்த்தை பயன் அளிக்கவில்லை. உங்களது தீர்ப்பை வழங்குங்கள்" என்று 4.2.1997 அன்று உச்ச நீதிமன்றத்தைத் தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டது".*

இந்த வழக்கு அரசியல் சாசனப் பிரிவினால் (Constitution Bench) விசாரணை செய்யப்பட்டு வந்தபோது, 9.4.1997 ஆம் நாளன்று மத்திய அரசின் தலைமை வழக்குரைஞர் இந்த இடைக்கால ஆணையைச் செயலாக்கம் செய்ய, மத்திய அரசு ஒரு திட்டத்தைத் தீட்டி சம்பந்தப்பட்ட மாநிலங்களின் கருத்தைப் பெற்று இறுதியாக்கம் செய்யும் என்று தெரிவித்தார். அதனடிப்படையில் மத்திய அரசு ஒரு வரைவுத் திட்டத்தைத் தீட்டி அதை 30.5.1997ஆம் நாளிட்ட கடிதத்தில் மாநிலங்களின் கருத்தை அறியவேண்டி அனுப்பியது. அதற்கு 23.6.1997 அன்று இந்தத்திட்டத்தைப்பொதுவாக ஏற்றுக்கொள்வதாகத் தமிழ்நாடு, மத்திய அரசிற்குத் தெரிவித்தது.

இந்தத் திட்டமானது நடுவர் மன்றத்தின் ஆணையை அமல்படுத்தும் வகையில் தீட்டப்பட்டுள்ளது. இதில் காவிரி நதிநீர் ஆணையம் ஏற்படுத்துவது ஒரு முக்கிய அம்சமாகும். இந்த வரைவுத் திட்டத்தின் நகல் தங்களுக்குத் தனியே வழங்கப்பட்டுள்ளது.

இந்த வரைவுத் திட்டத்தை விரைவில் இறுதியாக்கி மத்திய அரசின் அரசிதழில் வெளியிட வேண்டி தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்தும், தங்களுக்கு அனுப்பியுள்ள குறிப்பில் விவரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் உச்ச நீதி மன்றத்தில் தமிழ்நாடு தொடுத்த வழக்கு பலமுறை விசாரணைக்கு வந்தபோது மத்திய அரசு ஒவ்வொரு முறையும் ஒரு காரணத்தைக் கூறி வழக்கைத் தள்ளிவைக்க முறையிட்டது. கடந்த 21.7.1998ஆம் நாளன்று இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, மத்திய அரசு 6 வாரம் அவகாசம் மேலும் வேண்டியது. ஆனால் உச்ச நீதிமன்றம் 3 வாரம் அவசகாசத்தை மட்டுமே அளித்து, இந்த ஒத்திவைப்பே இறுதியானது என்றும் கூறி வழக்கை 12.8.1998க்கு ஒத்திவைத்தது.

இப்பிரச்சினை குறித்து சட்டமன்றத்தில் விவாதம் ஏற்பட்ட போதெல்லாம் இந்த அரசின் நிலையையும், அது தொடர்ந்து எடுத்துவரும் முயற்சிகளையும் 24.7.1996, 31.7.1996, 1.8.1996, 5.8.1996, 27.8.1996, 30.4.1997, 21.3.1998 மற்றும் 23.3.1998 ஆகிய நாட்களில் விரிவாக எடுத்துரைத்துள்ளேன்.

**தேசிய நதிநீர்க் கொள்கை**

*மேலும் 15.4.1998 அன்று சட்டமன்றப் பேரவையில் இரண்டு மாநிலங்களுக்கிடையே மீண்டும் பேச்சுவார்த்தை ஏற்படுமா என்பது*

– தொடர்ச்சி 41-ஆம் பக்கம்

### காவிரி தண்ணீரைக் குடித்து வாழ்ந்தவன் நான்!

*"காவிரிப் பிரச்சினையோடு இணைந்து, வாழ்ந்து வளர்ந்தவன் நான். காவிரிப் பிரச்சினையில் தமிழர்களைக் காட்டிக் கொடுக்கக்கூடிய அளவிற்கு நயவஞ்சகம் கொண்டவன் அல்ல நான். காவிரிப் பிரச்சினை எப்போது தீரும்? எப்போது தமிழர்களுடைய கண்ணீர் துடைக்கப்படும் என்று ஏங்கியவன் நான். இன்னும் சொல்லப்போனால் காவிரி தண்ணீரைக் குடித்து வாழ்ந்த தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் நான்!"*

- 10-8-98 அன்று நடைபெற்ற மொரப்பூர் நிகழ்ச்சியில் முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.





# காவிரிப் பிரச்சினை : மத்தியஅரசுத் திட்டத்திற்கு - உச்சநீதிமன்றம் ஒப்புதல்

காவிரிப் பிரச்சினையில் பிரதமர் தலைமையில் 4 மாநில முதல்வர்கள் சுமுகத் தீர்வு கண்டு உருவாக்கப்பட்ட நடுவர்மன்ற இடைக்கால ஆணையை அமல்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டு அரசிதழில் வெளியிடப்பட்ட மத்திய அரசின் திட்டத்திற்கு உச்சநீதிமன்றத்தின் அரசியலமைப்பு பெஞ்ச் 17-8-98ல் ஒப்புதல் அளித்தது.

கடந்த 12ஆம் தேதி உச்சநீதிமன்றத்தில், காவிரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையை அமல்படுத்த உத்தரவிடக் கோரி, தமிழக அரசால் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு வந்தபோது, பிரதமர் வாஜ்பாய் தலைமையில் 4 மாநில முதலமைச்சர்கள் நடத்திய பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து இடைக்கால ஆணையை அமல்படுத்துவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, அது அரசிதழிலும் வெளியிடப்பட்டுள்ளது என்ற செய்தியை அட்டார்னி ஜெனரல் உச்சநீதிமன்றத்தில் தெரிவித்தார். மேற்கொண்டு இந்த வழக்கில் விசாரிப்பதற்கு எதுவும் உள்ளதா என்பதைக் கண்டறிய 5 நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு பெஞ்ச் ஆகஸ்ட் 17ஆம் தேதி ஆராயும் என்று உச்சநீதிமன்றம் அறிவித்திருந்தது.

**விசாரணைக்கு எடுக்கப்பட்டது**

அதன்படி, தலைமை நீதிபதி எம்.எம்.புஞ்சி தலைமையில் நீதிபதிகள் எஸ்.சி.அகர்வால், ஏ.எஸ்.ஆனந்த், எஸ்.பி.பரூச்சா, ஏ.பி.மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அரசியலமைப்பு பெஞ்ச் மேற்குறிப்பிட்ட நாளில் மத்திய அரசின் திட்டத்தை விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

அப்போது தமிழ்நாட்டுக்குக் கர்நாடகம் ஆண்டுக்கு 205 டி.எம்.சி.தண்ணீர் அளிக்கவேண்டும் என்று 1991ஆம் ஆண்டு ஜூன் 25ஆம் தேதி காவிரி நடுவர்மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணையை நிறைவேற்றுவதற்காகத் தயாரிக்கப்பட்டு, மாநிலங்களுக்கு இடையிலான தண்ணீர் தாவா சட்டத்தின் 6வது பிரிவின்கீழ் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள மத்திய அரசின் திட்டத்திற்கு உச்சநீதிமன்ற அரசியலமைப்பு பெஞ்ச் ஒப்புதல் அளித்தது.

திட்டம் அரசிதழில் வெளியிடப்பட்ட பிறகு விசாரிப்பதற்கு எதுவும் இல்லாததால் வழக்கு முடித்துவைக்கப்படுவதாக அரசியலமைப்பு பெஞ்ச் அறிவித்தது. அது வெளியிட்ட உத்தரவில் கூறியிருப்பதாவது:

*தமிழ்நாட்டின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் கே.பராசரன், திட்டம், சட்டத்தின் 6(ஏ)வது பிரிவின்கீழ் அரசிதழில் ஆகஸ்ட் 11ஆம் தேதி வெளியிடப்பட்டு விட்டதால் வழக்கை முடித்துவிடலாம் என்று யோசனை கூறினார்.*

**பிரதிவாதிகளின் எதிர்ப்பும் இல்லை**

*பிரதிவாதிகளான கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி மாநிலங்களும் எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. அதேபோல, அட்டர்னி ஜெனரல் சோலி.ஜே.சோரப்ஜியும் எதிர்ப்புத் தெரிவிக்க வில்லை; எனவே, வழக்கு முடித்து வைக்கப்படுகிறது.*

- இவ்வாறு நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

**உச்சநீதிமன்றத் தீர்ப்பு**
**முதல்வர் கலைஞர் மகிழ்ச்சி**

காவிரி நடுவர்மன்ற இடைக்கால ஆணை தொடர்பாக உச்சநீதிமன்றம் அறிவித்துள்ள தீர்ப்புக்கு மகிழ்ச்சி தெரிவித்து, முதல்வர் கலைஞர் அவர்கள் வெளியிட்ட அறிக்கை வருமாறு:

'ஏழாண்டு காலமாக முடிவு காணப்படாமல் இருந்துவந்த காவிரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையை அமல்படுத்துவது குறித்த திட்டம் பற்றி பிரதமர் முன்னிலையில் தமிழ்நாடு, கர்நாடகம்; கேரளம், பாண்டிச்சேரி ஆகிய நான்கு மாநில முதலமைச்சர்களும் செய்துள்ள உடன்பாட்டுக்கு 17-8-98 அன்று உச்சநீதிமன்றம் முத்திரை குத்தியுள்ளது. என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இவ்வாறு முதல்வர் **கலைஞர்** அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்.

# “ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் திட்டமிட்டபடி தொடங்கி நிறைவேற்றப்படும்”

- முதலமைச்சர் கலைஞர் உரை.



“தருமபுரி மாவட்டத்தில் தமிழக அரசின் சார்பில் நலிந்தோருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகின்ற இந்த விழா நிகழ்ச்சியில் எனக்கு முன்னால் பேசியவர்களெல்லாம் எடுத்துக் காட்டியதைப்போலவும்,மாவட்ட ஆட்சித்தலைவர் தன்னுடைய உரையிலே சுட்டிக்காட்டியதைப் போலவும் 102 கோடியே 63 இலட்சத்திற்கு திட்டங்களுக்கு ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்ட, நிறைவேறிய திட்டங்களைத் திறந்துவைக்கவும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவுமாக ஒதுக்கப்பட்டு அந்த இனிய விழா நிகழ்ச்சி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## இதை நலத்திட்ட உதவி மாநாடு என்றால் பொருத்தமாக இருக்கும்

நான் இங்கே குழுமியிருக்கின்ற உங்களைக் காணுகின்றேன். இந்தப் பந்தல் நிரம்பி வழிந்து வெளியிலேயும் பல்லாயிரக்கணக்கான மக்கள் சூழ்ந்து நின்று ஏறத்தாழ ஒரு மாவட்ட மாநாட்டைப்போலக் காட்சியளிக்கின்ற இந்தப் பாங்கினைக் காணும்போது - இதை நலத்திட்ட உதவி நிகழ்ச்சி என்று அழைப்பதை விட, தருமபுரி மாவட்டத்தில் நடைபெறுகின்ற நலத்திட்ட உதவி மாநாடு என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இன்றைக்கு மாத்திரம் 585 திட்டங்கள் 20 கோடியே 73 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டு அவை தொடங்கி வைக்கப்பட்டுள்ளன; அதாவது, திறந்து வைக்கப்பட்டுள்ளன. 16 கோடியே 80 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் 19 ஆயிரத்து 791 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 65 கோடியே 8 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் செலவில் 591 திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டப்படுகின்றன. எல்லோரையும் மேடைக்கு அழைத்து இந்த உதவிகளைத் தனித்தனியாக நேரடியாக இங்கே நான் தருவது என்றால் விடிந்துவிடும். எனவேதான் அடையாளத்துக்காகச் சில பேரை மட்டும் மேடைக்கு அழைத்து, அவர்களுக்கு இந்த உதவிகளை வழங்கி இருக்கின்றோம். ஏனையோர் தங்கியிருந்து அதிகாரிகள் மூலம் வழங்கப்படுகின்ற அந்த நிதி உதவிகளைப் பெற்றுச் செல்லவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுவாக ஒரு அரசு மக்களுடைய நலம் பேணுகின்ற அரசாக அமைந்திட வேண்டும் என்பதற்காகத்தான், மக்கள் தங்களுக்காக ஒரு அரசைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த நிலையில் இந்த அரசு - நான் நான்கு முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்று உங்களுக்குப் பணியாற்றுகின்றேன், ஊழியம் புரிகின்றேன் என்றாலும்கூட, நான்காவது முறையாக 96ஆம் ஆண்டு உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு சற்றொப்ப இந்த இரண்டரை அல்லது மூன்றாண்டு காலத்தில் என்னென்ன திட்டங்களை - பொதுவாகத் தமிழ்நாட்டிற்கும் - குறிப்பாகத் தருமபுரி மாவட்டத்திற்கும் வழங்கியிருக்கிறது, இன்னும் வழங்க இருக்கிறது என்பதனை விழா நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று இருக்கின்ற தம்பி முல்லைவேந்தன் மிக அழகாக, அடுக்கடுக்காக இங்கே எடுத்துக் காட்டியிருக்கின்றார்.



## வழங்கப்படும் உதவிகள் உரியவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும்

திட்டங்களை அறிவிப்பது மாத்திரம் போதாது, அறிவிக்கப்பட்ட திட்டங்கள், வழங்கப்படுகின்ற உதவிகள், அதற்காகச் செய்யப்படுகின்ற செலவு இவைகளெல்லாம் உரிய பயனைத் தரவேண்டுமேயானால், அது உரியவர்களுக்குப் போய்ச் சேரவேண்டும். இல்லாவிட்டால், யாருக்குப் பலன் கிடைக்க வேண்டுமோ அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பலன் கிடைக்காமல், இடையிலே சில பேர் இந்தப் பலனை அனுபவித்துக்கொண்டு செல்வார்கள்.

உதாரணமாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சட்டமன்றத்தில் எடுத்துச் சொன்னார். அதை நினைவூட்ட விரும்புகின்றேன். “ஒரு பெரிய பனிக்கட்டியைக் கையிலே எடுத்து, அதைப் பக்கத்திலே இருப்பவருடைய கையிலே கொடுத்து 20 பேருடைய கையிலே தொடர்ந்து அதைக் கொடுத்து, 20வது நபருக்கு போய்ச் சேரட்டும் என்று சொன்னால், அந்தப் பனிக்கட்டி 20 கை மாறி 20வது கைக்குப் போய்ச் சேருகின்ற நேரத்தில் ஒரேயொரு துளி தண்ணீர்தான் மிஞ்சும். அதற்குள்ளாக அந்தப் பனிக்கட்டி கரைந்து போய் விடும். அப்படித் திட்டங்கள் இருக்கக்கூடாது. போடுகின்ற திட்டங்கள், வகுக்கின்ற திட்டங்கள், ஏழை எளிய மக்களை, சாதாரண மக்களை, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, நலிந்த மக்களைப் போய்ச் சேரவேண்டும் என்பதிலே ஒரு அரசு, அதைப்போலவே அரசின் அதிகாரிகள் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்” என்பதை எடுத்து விளக்கினார்கள்.

அந்த அண்ணா காட்டிய வழியை இன்றைக்கும் பின்பற்றி இந்த அரசு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இத்தகைய விழாக்களில், உண்மையிலேயே நலிந்தோருக்கு, உண்மையிலேயே தேவைப் படுவோருக்கு உரிய உதவிகளை இந்த அரசு செய்துவருகிறது.

## உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தியதால் பட்டி தொட்டிகளில் மக்கள் பிரதிநிதிகள்

அரசுப் பொறுப்பேற்றபோது நான் “இன்னும் சில நாட்களிலேயே உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறும்” என்று சொன்னேன். தேர்தல் நேரத்திலேயே, தேர்தல் வாக்குறுதியாக அதை வழங்கினேன். உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் உடனடியாக நடைபெற்றால்தான், அரசாங்கத்தினுடைய திட்டங்கள், அடிப்படை வசதிகள் கிராமப்புறத்திலே, பட்டிக்காட்டிலே, குப்பைக் காட்டிலே இருக்கின்ற எளிய மக்களுடைய தேவைகள் நிறைவேற ஆங்காங்கு மக்கள் பிரதிநிதிகள் தோன்றுவார்கள். அப்படி மக்கள் பிரதிநிதிகள் தோன்றினால், அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தங்களுடைய தேவைகளை அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லவும், அவர்கள் அதற்கு மேல்படியிலே உள்ளவர்களிடத்திலே எடுத்துச் சொல்லவும், அவர்கள் அதற்கு மேலே உள்ளவர்களிடத்திலே எடுத்துச் சொல்லவும், இறுதியாக அரசின் கவனத்திற்கு வரவும், அந்தத் திட்டங்கள் நிறைவேறவும் வாய்ப்பும், வழியும் ஏற்படும் என்று கூறி உடனடியாக உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை இந்த அரசு நடத்தியதன் பயனாக, இன்று மக்கள் பிரதிநிதிகள் ஆங்காங்கு பட்டி தொட்டிகளிலெல்லாம் பரவி இருப்பதை நாம் காணுகின்றோம். அவர்கள் மூலமாக இந்த உதவிகள் ஏழை, எளிய மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இங்கே ஒரு நூறு கோடி ரூபாய்க்குமேல் நடந்து முடிந்த பணிகளுக்காகவும், நடக்க வேண்டிய பணிகளுக்காகவும் செலவிடப் படுகின்றது என்றாலும்கூட, நான் மாவட்ட ஆட்சித் தலைவரையும், மற்ற அதிகாரிகளையும் கேட்டுக்கொள்கின்றேன். ஏற்கெனவே 585 திட்டங்கள் ஆரம்பித்து முடிவடைந்து திறந்துவைக்கப்பட்டு விட்டன. புதிதாக இன்றைக்கு 591 திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டப்படுகின்றன. விரைவில் நாட்டப்பட்ட அடிக்கற்கள் எல்லாம் கட்டடங்களாக உருவாவதற்குத் துணை நிற்கவேண்டும். ஏனென்றால் சில நேரங்களிலே நாட்டப்பட்ட அடிக்கற்கள் பல மாத காலம், ஏன் பல ஆண்டுக்காலம் அப்படியே நிற்பதுண்டு. அப்படி நிற்காமல் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் அதிகாரிகள் உடனடியாகச் செயல்பட்டு அடிக்கற்கள் நாட்டப்பட்டவைகள் எந்தத் திட்டத்துக்காக அவை நாட்டப்பட்டனவோ அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

## கிராமப்புற மாணவர்களுக்கு அனைத்துத் தொழிற்கல்லூரிகளிலும் இடஒதுக்கீடு

இங்கே பேசிய அனைவரும் ஒன்றை மறவாமல் சுட்டிக்காட்டினார்கள். தம்பி துரைமுருகனும், தம்பி பொன்முடியும் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும், கிராமப்புறத்திலே உள்ள மாணவர்களுக்கு 15% தொழிற்கல்வியிலே இடம் அளிக்கவேண்டும். அது மருத்துவக் கல்வியானாலும், பொறியியல் கல்வியானாலும், வேளாண்மைக் கல்வியானாலும், சட்டக் கல்வியானாலும் இந்த தொழிற்கல்விகளிலெல்லாம் 15% இடமளிக்க வேண்டும் என்ற புதிய முறையைக் கடந்த ஆண்டு இந்த அரசு அறிமுகப்படுத்தி, கடந்த ஆண்டு மருத்துவக் கல்லூரியிலே மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டம் இந்த ஆண்டு எல்லாத் தொழிற் கல்லூரிகளுக்கும் விரிவாக்கப்பட்டு சிறந்த முறையிலே எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றுள்ளது.

அதைப்போலவே ஏழை எளியோருடைய வீடுகளிலே உள்ள பிள்ளைகள் படிக்கவேண்டும் என்பதற்காக, கிராமப்புறத்திலே உள்ள பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூட வசதியில்லை, கல்லூரி வசதியில்லை என்பதற்காக ஏராளமான திட்டங்களை இந்த இரண்டாண்டு காலத்திலே வகுத்து அதற்காகப் பல கோடி ரூபாயை இந்த அரசு செலவழித்துக் கொண்டிருக்கிறது.

என்னுடைய சொந்த அனுபவத்தையே நான் சொல்லவேண்டுமேயானால், நான் தமிழகத்தில் தஞ்சைத் தரணியில் அந்த மாவட்டத்தினுடைய ஓரத்திலே உள்ள திருக்குவளை என்ற கிராமத்தில் 1924ஆம் ஆண்டு பிறந்தேன். நான் பிறந்த பொழுதுதான் இன்றைக்குத் தீர்வு காணப்பட்டிருக்கின்ற காவிரி நதிநீர் ஒப்பந்தமே ஏற்பட்டது. 1924ஆம் ஆண்டுதான் காவிரி ஒப்பந்தமே அன்றைய வெள்ளைக்காரர்கள் ஆட்சியிலே கையெழுத்தானது.



அமெரிக்காவில் சமீபத்தில் எடுக்கப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பின்படி இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த மனிதராக மகாத்மா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்திய விடுதலைக்காக அகிம்சை வழியில் போராடிய இவரது பெயரை 8848 பேர் குறிப்பிட்டிருந்தனர். இந்த வரிசையில் 8321 பேரால் ஆதரிக்கப்பட்டு அடுத்த இடத்தைப் பெற்றவர் அன்னை தெரசா.

இந்தப் பட்டியலில் அடால்ஃப் ஹிட்லருக்கு 6-வது இடம். இரண்டாம் உலகப்போரில் இங்கிலாந்து நாட்டின் வெற்றிக்குக் காரணமான அக்காலப் பிரதமர் சர்ச்சிலுக்கு 8-வது இடம். 10-வது இடத்திற்கு மார்ட்டின் லூதர் கிங்கும், 13-வது இடத்திற்கு கோர்பச்சேவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தாமஸ் ஆல்வா எடிசன், உலகிலேயே முதன்முதலாக மாற்று இதய அறுவை சிகிச்சையைச் செய்த கிறிஸ்டியன் பெர்னாட், ஃப்ராங்லின் ரூஸ்வெல்ட், ஹென்றி ஃபோர்ட் மற்றும் பிரபல குத்துச் சண்டை வீரர் முகமது அலி ஆகியோரையும் அமெரிக்கர்கள் மறந்துவிடவில்லை !

### உடையார்கள் ஆட்சியின்போது உருவான காவிரி ஒப்பந்தம்

அப்போது அந்த மாநிலத்திற்குப் பெயர் கர்நாடக மாநிலமல்ல; மைசூர் மாநிலம். ஏற்கெனவே மைசூரை ஆண்ட மாவீரன் ஹைதர் அலியானாலும், திப்பு சுல்தான் ஆனாலும், அவர்கள் வீர விளையாட்டுக்களிலேயே தங்களுடைய காலத்தைக் கழித்து, மக்களுடைய வாழ்வுப் பிரச்சினைகளை அணுகாமல் இருந்த காலகட்டத்தில் அவர்களுடைய ஆட்சியின் முடிவிற்குப் பிறகு ஆள வந்தவர்கள் உடையார் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். அந்த உடையார்கள் ஆளவந்த பிறகுதான் ஏழை எளிய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், நடுத்தர மக்கள் கர்நாடகம். இந்த இரண்டு மாநிலங்களிலும் செய்துகொண்ட ஒப்பந்தம்தான் 24ஆம் ஆண்டு ஒப்பந்தம். நானும் அந்த 24ஆம் ஆண்டிலேதான் பிறந்தேன். எப்படி காவிரி பிரச்சினையானதோ, அதைப்போல நானும் இன்று வரையிலே பிரச்சினையாக இருக்கின்றேன் என்பதை உங்களுக்கெல்லாம் ஞாபகப்படுத்தத் தேவையில்லை. அனுபவ ரீதியாக நீங்களெல்லாம் அறிந்துகொண்டிருக்கிறீர்கள்.

இப்படி காவிரி ஒப்பந்தத்தோடு பிறந்து, வளர்ந்து இன்றைக்கு இடையிலே ஏற்பட்ட பல சிக்கல்களை எல்லாம் அறுத்து ஒரு நல்ல தீர்வைக் கண்டு காவிரி ஒப்பந்தம் இன்றைக்கு ஆகியிருக்கின்றது. அதன் காரணமாகத்

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, 636 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்ட வரைவு இன்றைக்குச் செய்யப்பட்டிருக்கின்றது. தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு நகராட்சி மன்றங்களுக்கும், 14 பேரூராட்சிகளுக்கும் அஃதன்னியில் 4101 ஊரகக் குடியிருப்புகளுக்கும் பயன்படும் வகையில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரை ஒகேனக்கல் கூட்டுக் குடிதண்ணீர்த் திட்டத்தின் மூலமாகத் தருவதற்கு இந்த 636 கோடி ரூபாய் மதிப்பீட்டின் திட்டத்திற்கு ஜப்பான் நாட்டினுடைய உதவியைப் பெறுவது என்று தீர்மானித்து அவர்களும் உதவிட முன்வந்தனர்.



நல்வாழ்விற்காகப் பல திட்டங்கள் தீட்டப்பட்டன, ஆறுகள் வகைப்படுத்தப்பட்டன. வாய்க்கால்கள் அமைக்கப்பட்டன, பாசனத்துறை அன்றைக்குப் பரவலாக ஆங்காங்கு விரிவாக்கப்பட்டது.

அந்த நேரத்தில் தமிழ்நாட்டில் ஆயக்கட்டு உரிமையோடு நம்முடைய தஞ்சை, திருச்சி, தென்னார்க்காட்டிலே ஒரு பகுதி போன்ற காவிரி தீரத்துப் பகுதிகள் பயிர் விளைவித்துக் கொண்டிருந்ததைக் கண்டு, தண்ணீர்ப் பங்கீட்டை எப்படிச் செய்வது என்பதிலே ஒரு தகராறு ஏற்பட்டு, அந்தத் தகராறைத் தீர்க்க 1892லேயே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, அது சரிவர செயல்படாமல் பிறகு அடுத்த ஒப்பந்தமாக 1924ஆம் ஆண்டு வெள்ளைக்காரர் ஆட்சியில் மைசூர், அன்றைக்கிருந்த சென்னை மாகாணம் இன்றைக்குத் தமிழ்நாடு - இன்றைக்கு அது தமிழகத்திற்கு உரிமையோடு கிடைக்கவேண்டிய தண்ணீர் இனிமேல் கிடைக்கும் என்ற மகிழ்ச்சிகரமான வேளையில் இன்று இங்கே நாமெல்லாம் குழுமியிருக்கின்றோம்.

### ரூ.636 கோடியில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

இங்கு குழுமியிருக்கின்ற நேரத்திலேதான், இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலும், அமைச்சர்கள் முல்லைவேந்தன் ஆனாலும், மணி ஆனாலும், நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆனாலும், அனைவருமே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றி இங்கே விரிவாக எடுத்துக்கூறி அதை நிறைவேற்ற வேண்டும் என்று கூறினார்கள்.

இந்தச் சூழ்நிலையில் இந்திய அளவிலும், அன்னிய நாடுகளோடும் ஏற்பட்டுள்ள ஒரு சிறு உறவிலே ஏற்பட்ட விரிசல் காரணமாகச் சற்று தயக்கம் ஏற்பட்டிருக்கின்றது. எனக்குள்ள நம்பிக்கை அந்தத் தயக்கம் விரைவிலே தீர்ந்து ஒகேனக்கல் கூட்டுக் குடிதண்ணீர்த் திட்டத்திற்கான உதவி ஜப்பான் நாட்டிலிருந்து கிடைக்கும் என்று நம்புகின்றேன். ஒருவேளை அது கிடைக்காமலே போய்விட்டால், நம்முடைய நாட்டின் பணத்தைக் கொண்டே, நம்முடைய அரசின் சார்பாகவே அந்தத் திட்டத்தைத் தொடங்கி, நிறைவேற்ற நான் தயாராக இருக்கின்றேன் என்ற உறுதியையும் உங்களுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஏழை, எளிய மக்களுக்காக இந்த அரசு இந்த மாவட்டத்தில் நிறைவேற்றியுள்ள திட்டத்தை



யெல்லாம் பலரும் எடுத்துரைத்தார்கள். ஆனால் நண்பர் மணி அவர்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டவைகளைச் சொல்லாமல், நிறைவேற வேண்டியவைகளை மாத்திரம் சொன்னார்கள். ஏனென்றால் நிறைவேற்றப் பட்டவைகளைச் சொன்னால், சில அரசியல் சிக்கல் அவருக்கு உண்டு. எனவே, நிறைவேற்றப்பட்டவைகளைச் சொல்ல அவர் தயங்கினார்.

ஆனால், என்னுடைய மாணவர் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட பாரிமோகன் எம்.பி. அவர்கள், நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும், அதற்கு நான் காரணகர்த்தாவாக காவிரிப் பிரச்சினை வரையிலே இன்றைக்கு நான் இந்த அரசின் சார்பாக ஆற்றியுள்ள கடமைகளையும், பணிகளையும் அவர்கள் இங்கே எடுத்துரைத்தார்கள்.

### இந்தப் பண்பாடு தமிழகத்தில் மேலும் வளர வேண்டும்

இந்த மேடையைப் பார்க்கும்பொழுது எனக்கு ஒரு மனநிறைவு. இன்று காலையிலேகூட இந்த மனநிறைவு எனக்கு ஏற்பட்டது. காலையிலும் ஜனதாதளக் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் பாரிமோகன், அதைப்போலவே சட்டமன்ற உறுப்பினர் வெங்கடசாமி, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருமுறை பெரியார் அவர்கள் ராஜாஜி அவர்களை எதிர்த்து ஊர்வலமாகச் சென்றபோது, அவருடைய வீட்டு வாசலில் இருந்து இறங்கி வந்து, ஊர்வலத்தில் இருந்த தந்தை பெரியாருக்கு மாலை அணிவித்தார் என்பது வரலாறு.

அதைப்போலவே ராஜாஜி அவர்கள் மறைந்த நேரத்தில், தந்தை பெரியார் அவர்கள் சுடுகாடு வரையிலே வந்து, அவருடைய தகனம் நடைபெறுகின்ற நேரத்திலே பக்கத்திலே அமர்ந்து, பொலபொலவென்று கண்ணீர் உகுத்த காட்சியைப் பெரியாருக்கு அருகிலே இருந்து பார்த்தவன் நான். இப்படிப் பல நிகழ்ச்சிகள் உண்டு, தமிழ்நாட்டு வரலாற்றில்.



இருந்ததையும், இருப்பதையும் இங்கு நினைவுகூர்ந்தார். அவர் எனக்கு மாணவராக இருந்தார் என்பதை அவர் சொல்லித்தான் நான் தெரிந்துகொண்டேன். ஏகலைவனைப்போல் இருந்திருக்கிறார். அதற்காக கட்டை விரலைக் காணிக்கையாகக் கேட்கமாட்டேன் என்ற உறுதியை அவருக்கு நான் தருகின்றேன்.

அதைப்போலவே நம்முடைய பி.சி.ராமன் அவர்களும் என்னைக் குறிப்பிடும்போது தன்னுடைய ஆசான் என்று குறிப்பிட்டார். இப்படி பல மாணவர்கள் என்னைவிட அதிக வயதிலே கூட பல பதவிகளிலே தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள். இந்த அரசு செய்துள்ள நல்ல காரியங்களையெல்லாம் நம்முடைய ஜனதா தளக் கட்சியினுடைய சட்டப்பேரவையினுடைய உறுப்பினர் வெங்கடசாமி அவர்கள் இங்கே மிக அழகாக, அடுக்கடுக்காக எடுத்துரைத்தார். அருமைச் சகோதரர் மணி இவர்களெல்லாம் திருமண விழாவுக்கு வந்திருந்தார்கள். இப்பொழுது இந்த மேடையிலும் அவர்கள் காட்சியளிக்கின்றார்கள். இந்தப் பண்பாடு தமிழகத்திலே மேலும் மேலும் வளர வேண்டுமென்பதை நான் விரும்புகின்றேன்.

தமிழகத்திலே சில கட்சிக்காரர்கள் ஒருவரையொருவர் பார்ப்பது கூடப் பாவம். ஒருவருக்கொருவர் வாழ்த்துக் கூறுவது கூட தவறு. நன்றாக இருக்கிறீர்களா என்று கேட்பது கூட அநியாயம், அக்கிரமம் என்கின்ற அளவுக்குத் தமிழ் நாட்டிலே ஒரு அரசியல் பண்பாடு, தற்காலத்தில் வந்திருக்கின்றது. முற்காலத்தில் இது இல்லை. தந்தை பெரியார், சக்கரவர்த்தி மூதறிஞர் ராஜாஜி, இருவரும் மோதிக் கொண்டதைப்போலத் தமிழ்நாட்டிலே எந்த அரசியல்வாதிகளும் மோதிக்கொண்டதில்லை.

உங்களுக்குத் தெரியும். என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் உடல் மிக நலிவுற்றிருந்தபோது, நான் 'நானும் அவருக்காகப் பிரார்த்திக்கிறேன்' என்று முரசொலியில் எழுதிய கடிதம், தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஏடுகளிலும் வெளியிடப்பட்டது உங்களுக்குத் தெரியும். ஒரு நாற்பதாண்டு காலம் நாங்கள் நெருங்கிப் பழகியவர்கள். எம்.ஜி.ஆர். அவர்களே பல மேடைகளிலே சொன்னதைப் போல் அவரை இந்த இயக்கத்திற்கு அழைத்துவந்தவன் நான். அவரே அதை ஒத்துக்கொண்டு பல மேடைகளிலே பேசியிருக்கின்றார்.

### பிரிந்திருந்தாலும் நானும் எம்.ஜி.ஆரும் நாகரிகத்தோடு பழகியிருக்கிறோம்

ஆனால், இடையிலே ஏற்பட்ட அரசியல் மாறுபாடு காரணமாக இருவரும் பிரிந்திருக்க

நேரிட்டாலும், நாங்கள் பண்பாட்டோடு பழகியிருக்கின்றோம். நாகரிகத்தோடு பழகியிருக்கிறோம். இங்கே துரைமுருகன் குறிப்பிட்டதைப்போல் - இந்தியாவிலே முதன்முதலாக ஆகஸ்டு 15ஆம் தேதி சுதந்திர நாளில் தேசியக் கொடியைப் பறக்க விடுகின்ற உரிமையைப் பெற்றுத் தந்தவர் கருணாநிதி என்று சொன்னாரே, அந்த உரிமையைப் பெற்றுத் தந்த நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றபோது, அவர் சென்னை, கோட்டை கொத்தளத்திலே ஆகஸ்டு 15ஆம் நாள் கொடியேற்றுகிறார். அந்த நிகழ்ச்சிக்கு நானும் எதிர்க்கட்சிக்காரர் என்ற முறையில் சென்றிருக்கின்றேன்.

அந்த நிகழ்ச்சியிலே கொடியேற்றும்போது, எம்.ஜி.ஆர். 'முதலில் இந்தக் கொடியேற்றுகின்ற உரிமையை இந்தியாவில் உள்ள எல்லா முதலமைச்சர்களுக்கும் பெற்றுத் தந்த என்னுடைய நண்பர் கலைஞர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்' - என்று சொல்லித்தான் கொடியை ஏற்றினார். இந்தப் பண்பாடு இன்றைக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழகத்திலே மறைந்துகொண்டிருக்கிறது. பார்க்கவே பயப்படுகிறார்கள். பார்த்தால் என்ன சொல்வார்களோ என்று அஞ்சுகிறார்கள். பார்த்தாலும் பரவாயில்லை, பார்த்துவிட்டுச் சிரிக்கவே பயப்படுகிறார்கள், சிரித்தால் என்ன ஆபத்து வருமோ என்று.

இப்படியெல்லாம் இருக்கிற இந்தச் சூழ்நிலையில் நம்முடைய அருமைச் சகோதரர் மணி அவர்களும், பாரிமோகன் அவர்களும் இந்த மேடைக்கு வந்திருப்பதும், காலையிலே மணவிழாவிலே கலந்துகொள்வதும், சில நேரங்களிலே இப்படிப்பட்ட விழாக்களுக்கு ஆளுங்கட்சிக்காரர்களேகூட வருவதில்லை. சொந்தக் கட்சிக்காரர்கள்கூட வருவதில்லை. ஆனால் இவர்கள் அப்படியில்லாமல், இது மக்களுடைய பிரச்சினை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் நாம். மக்களுக்காக நடைபெறுகின்ற ஒரு நல்ல விழாவில், நலத்திட்ட விழாவில் கலந்துகொள்ள வேண்டுமென்ற அந்த நல்ல அரசியல் மனப்பான்மையோடு, நாகரிகத்தோடு அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஜனதா தளக் கட்சி சட்டமன்ற உறுப்பினரும் கலந்துகொண்டு இருப்பதை நான் வரவேற்கின்றேன்.

இன்றைக்கு மாணவர்களுக்கு எல்லா விதமான சலுகைகளையும் வழங்குகிறோம் என்று இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். அவர்கள் பேருந்துகளில் இலவசப் பயணம் செல்ல +2 வரையிலான மாணவர்களுக்கு வசதி செய்து தருகிறோம். எட்டாவது வரையிலே படித்த ஏழைப் பெண்களின் திருமணத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் தருகிறோம். என்றெல்லாம் இங்கே சுட்டிக்காட்டினார்கள். கிராமப்புறத்து மாணவர்களுக்குத் தொழிற்கல்லூரிகளில் 15 சதவிகிதம் ஒதுக்குகிறோம் என்றெல்லாம் சுட்டிக்காட்டினார்கள்.

## நானே சின்னஞ்சிறு கிராமத்தில் பிறந்தவன்

இதற்கு என்ன காரணம் என்றால், நானே, முதலில் குறிப்பிட்டதைப்போல, ஒரு சின்னஞ்சிறு கிராமத்திலே பிறந்தவன். அந்தக் கிராமத்தில் ஒரேயொரு ஆரம்பப் பள்ளிக் கூடம்தான் நான் படித்த பள்ளிக்கூடம் 'அரிநமோத்து சிந்தம்' என்று எழுதப்பட்ட காலத்தில், இப்பொழுது த, ப என்று சுலபமாக ஆக்கிவிட்டார்களே இந்தப் படிப்பை. அப்படியில்லாமல், 'அரிநமோத்து சிந்தம்' என்று மணலைப் பரப்பி, வாத்தியார் கை விரலைப் பிடித்து, விரல் தேயத் தேய, தேய்த்த விரல் எரிய, எரிய 'அரிநமோத்து சிந்தம்' மணலில் எழுதிய அந்தக் காலத்தில் திருக்குவளை ஆரம்பப் பள்ளிக் கூடத்திலே படித்தவன் நான். அப்பொழுது உயர்நிலைப்பள்ளி அந்தக் கிராமப்புறத்திலே எந்த வட்டாரத்திலும் கிடையாது.

நான் ஆரம்பப்பள்ளி படிப்பை முடித்துவிட்டு, அந்தப் படிப்பிலேகூட ஐந்தாவது படிக்கும்போது எனக்கு டியூஷன் சொல்லிக் கொடுத்தார் அந்தப் பள்ளிக்கூடத்தினுடைய தலைமையாசிரியர். அவருக்கு டியூஷன் சொல்லிக் கொடுப்பதற்கு ஒன்றும் பெரிய சம்பளம் இல்லை. என் வீட்டுத் தோட்டத்திலே காய்க்கின்ற காய்கறிகளைக் கொண்டு போய், தினந்தோறும் கொடுக்க வேண்டும், டியூஷன் சொல்லிக்கொடுப்பதற்காக. அப்பொழுது அவர் சொன்னார், "பையனை நான் திருவாரூரில் ஹைஸ்கூலில் கொண்டு போய் எட்டாவதிலே சேர்த்துவிடுகிறேன்" என்று.

ஐந்தாவது படிக்கும்போதே டியூஷன் மூலம் எட்டாவதிலே சேர்ப்பதாகச் சொல்லி, என்னைத் திருவாரூருக்கு அழைத்துச் சென்று எட்டாம் வகுப்புத் தேர்வு எழுதச் சொன்னார்கள். ஐந்தாவது படித்த நான், எப்படி எட்டாம் வகுப்புத் தேர்வு எழுத முடியும்? கேள்வித்தாளைப் பார்த்துக்கொண்டே, வெறுந்தாளைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தேன். எட்டாம் வகுப்பிற்கும் லாயக்கில்லை. ஏழாவதிற்கும் லாயக்கில்லை, ஆறாவதுக்கும் லாயக்கில்லை. ஐந்தாவது கூட முடியுமோ முடியாதோ பார்க்கலாம் என்று சொன்னவுடன், ஓடோடிச் சென்று தலைமையாசிரியர் கஸ்தூரி அய்யங்கார் என்று ஒருவர். அவருடைய அறைக்குள்ளே சென்று "என்னை ஐந்தாவதிலே சேர்த்துக் கொள்ளுங்கள்" என்றேன். "நீ பாசாகவில்லையே" என்றார். அதற்கு நான் "சேர்ந்தே ஆகவேண்டும் இல்லாவிட்டால் பள்ளிக்கூடத்துக்கு எதிரே உள்ள குளத்திலே விழுந்து செத்துவிடுவேன்" என்று சொன்னேன். அதற்குப்பிறகு அவர் இரக்கப்பட்டு என்னை அந்தப் பள்ளியிலே சேர்த்துக்கொண்டார்.

## ஒவ்வொரு நாளும் நடந்து சென்று உயர்நிலைப் பள்ளியில் படித்தவன் நான்

ஆனால், அந்தப் பள்ளி இருந்த திருவாரூருக்கும், நான் பிறந்த திருக்குவளைக்கும் பதினைந்து மைல் தொலைவு. அதற்குப் பேருந்திலே செல்லவேண்டும். ஆனால் திருக்குவளையிலே பேருந்து கிடையாது. அல்லது ரயிலிலே செல்ல வேண்டும். திருக்குவளையிலே ரயில் கிடையாது. ரயிலில் செல்வதென்றால் ஏழு மைல் நடந்துசென்று, திருநெல்லிக்காவல் என்ற ரயிலடிக்குச் சென்று ரயிலைப் பிடிக்கவேண்டும். பேருந்தில் செல்வதென்றால் நான்கு மைல் நடந்து சென்று கச்சனம் என்ற ஊரிலே பேருந்தைப் பிடிக்க வேண்டும்.

இப்படி ஒவ்வொரு நாளும் நான்கு மைலும் பேருந்து கிடைக்காவிட்டால் அங்கிருந்து இன்னும் மூன்று மைல் ஆக ஏழு மைல் நடந்து சென்று அன்றைக்கு உயர்நிலைப் பள்ளியிலே படித்தவன் நான். அந்தக் கஷ்டத்தையும் அனுபவித்த காரணத்தினாலேதான், இன்றைக்குக் கிராமப்புறங்களிலே இருக்கின்ற மாணவர்கள் கல்லூரிப் படிப்பைப் பெற நூற்றுக்கணக்கான கல்லூரிகள் இன்று தமிழ்நாட்டில் இருக்கிறதென்றால், அன்றைக்கு ஏற்பட்ட ஆர்வம், என்னைப் போல எத்தனைப் பேர் எத்தனைக் கிராமங்களில் வாடுவார்கள் என்கின்ற அந்தக் கவலையின் காரணமாகத்தான் இன்றைக்கு இந்தச் சாதனைகளையெல்லாம் நாம் வரவேற்க முடிந்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் நினைப்பது செயல்படுவது அனைத்தும் ஏழை, எளிய, சாதாரண, சாமான்ய, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத்தான் என்ற காரணத்தினாலேதான் இந்தச் சமுதாயத்திலே பிணக்கு, பேதம், ஒற்றுமை, விரோதம் அதன் காரணமாக அமளி, கலவரங்கள் இவைகள் ஏற்படாமல் மனித நேயத்தோடு ஜாதி பேதம் இல்லாமல், மத நல்லிணக்கத்தோடு அனைவரும் வாழ வேண்டும் என்ற குறிக்கோளுடன்தான் சமத்துவபுரங்களை மாவட்டத்திற்கு இரண்டு சமத்துவபுரங்களை அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டு, அவை அமைக்கப்படுகின்றன.

> **புதுக்கோட்டை புதுமை**
>
> புதுக்கோட்டை மாவட்டத்தை முழு எழுத்தறிவு பெற்ற மாவட்டமாக்கும் இயக்கம் 1991-ல் நடைபெற்றது. அப்போது பெண்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லவும், அவர்களது தொழில் திறமை அதிகரிக்கவும் சிறு தொழில்கள் மூலம் ஊதியத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றில் சைக்கிள் ஓட்டப் பயிற்சி கொடுப்பதும் ஒன்று. இந்தத் திட்டத்தின்கீழ் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் இப்போது சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொண்டனர்.





வருகிற 17ஆம் தேதியன்று நான் மதுரையிலே கட்டிமுடிக்கப்பட்ட சமத்துவபுரத்தைத் திறக்க இருக்கின்றேன். அடுத்து, வேலூர் மாவட்டத்திலே கட்டி முடிக்கப்பட்ட சமத்துவபுரத்தைத் திறக்க இருக்கின்றேன். இந்த மாவட்டத்திலேயும் இரண்டு இடங்களிலே சமத்துவபுரப் பணிகள் தொடங்கப்பட்டு விட்டதாக அமைச்சரும், மாவட்ட ஆட்சித் தலைவரும் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள்.

சமத்துவபுரம் அமைக்கும்போது முதலிலே சந்தேகப்பட்டோம். எல்லாப் பிரிவு மக்களையும், ஐயர் ஆனாலும், ஐயங்கார் ஆனாலும், ஆதிதிராவிடர் ஆனாலும், செட்டியார் ஆனாலும், முதலியார் ஆனாலும், வன்னியர் ஆனாலும், முக்குலத்தோர் ஆனாலும் எல்லோரும் ஒரே இடத்திலே குடியிருப்பதற்குச் சம்மதிப்பார்களா என்ற ஒரு சந்தேகம் ஏற்பட்டது.

ஆனால் திட்டத்தை அறிவித்து, வீடு ஒன்று முப்பத்தைந்தாயிரம் ரூபாய். மேலும் தேவைப்பட்டால் அவர்களுக்கு ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்கித் தரப்படும். முப்பந்தைந்தாயிரம் ரூபாய் அவர்களுக்கே மானியமாக வழங்கப்படும். தேவைப்பட்டால் வசதிகளை வீட்டில் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று கேட்டால், ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்குவதற்கு உதவி செய்யப்படும். அதற்கு மேலும் அவர்களிடத்திலே வசதி இருந்தால், அந்த அளவுக்கு வீட்டைக் கட்டிக்கொள்ளலாம் என்கின்ற குறிக்கோளோடு அந்த வீடுகளெல்லாம் இன்றைக்குக் கட்டப்பட்டிருக்கின்றன.

## சமத்துவபுரத்தில் வசிப்பதற்குப் போட்டி போட்டு வருகின்றனர்

வருவார்களா அங்கே குடியமர - என்ற கேள்விக்கு இன்று இடமில்லாமல், ஒவ்வொரு சமத்துவபுரத்திலும், பிராமண சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் மற்றும் வேறு பல நடுத்தர சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், பிற்படுத்தப்பட்டோர்களும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்களும் அங்கே குடியேற போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய எண்ணம் இந்தச் சமத்துவபுரங்கள் மாத்திரமல்ல; தமிழகமே சமத்துவபுரமாக ஆகவேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம். என்னுடைய ஆசை. அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சட்டப்பேரவையின் உறுப்பினர்கள் தங்கள் தங்கள் தொகுதிகளையெல்லாம் குறிப்பிட்டு இவைகளையெல்லாம் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அதிலும் குறிப்பாக, தொடக்கத்திலே பேசிய பி.சிராமன் அவர்கள், சாலை ஆய்வாளர்கள் தருமபுரி மாவட்டத்திலே போதுமான அளவிற்கு இல்லை. அந்தப் பணியாளர்களை அதிகமாக நியமிக்க வேண்டும் என்று கேட்டார். இவைகளெல்லாம் இருக்கின்ற நிதி வசதிக்கேற்ப நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்கின்ற உறுதியை நான் இங்கே வழங்குகின்றேன்.

## கருணை அதிகமாகவும் நிதி குறைவாகவும் இருக்கிறது

இங்கே மணி பேசும்போது, "அவரே கருணைநிதி. கருணை அதிகம் உள்ளவர். எனவே இதையெல்லாம் செய்துவிடுவார். எங்களுடைய தொகுதிக்கு ஒரு தொழிற்சாலையைக் கொண்டு வருவார்" என்றெல்லாம் சொன்னார். மணி அவர்களே, கருணைநிதிதான். ஆனால் கருணாநிதி என்ற பெயரில், கருணை என்பது மூன்றெழுத்து. நிதி என்பது இரண்டெழுத்துதான். எனவே கருணை அதிகமாகவும், நிதி குறைவாகவும் இருக்கிறது. இருந்தாலுங்கூட உங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உறுதிமொழி, வாக்குறுதிகளையெல்லாம் சட்டமன்றத்திலே கொடுத்திருக்கிறேன். அவருடைய தொகுதியிலே ஒரு தொழில் வளாகம் கொண்டு வருவதற்கும் அவைகளையும் நிறைவேற்றுவதற்கும் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன பாலங்கள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், சாலை வசதிகள் இவைகளையெல்லாம் நிறைவேற்றித் தருவதற்கும் நான் என்றைக்கும் தயாராக இருக்கிறேன் என்று குறிப்பிட்டு, இந்த மாலை நேரத்திலே உங்களுடைய திருமுகங்களையெல்லாம் காண்பதற்கு நல்ல வாய்ப்புக் கிட்டியமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

*- தருமபுரி மாவட்டம் காரிமங்கலத்தில் 10-8-1998 அன்று அரசு நலத்திட்டங்களைத் தொடங்கிவைத்தும், நலத்திட்ட உதவிகளை வழங்கியும் ஆற்றிய உரை.*

# சாதனை படைக்கும் தருமபுரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்

முதல் பால்பெருக்குத் திட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட இந்தப் பால்பண்ணை கடந்த 15 வருடங்களில் காணாத ஒரு வெண்மைப்புரட்சியை 1997-98, 1998-99 வருடங்களில் கண்டுள்ளது. சற்றேறக்குறைய 1.72 இலட்சம் அங்கத்தினர்களை உறுப்பினர்களாகக் கொண்ட இவ்வொன்றியம் கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களின் வேலை வாய்ப்புக்களைப் பெருக்கி, அதன் மூலம் அவர்தம் வாழ்வில் ஒளியேற்றியுள்ளது என்பது மிகையானதன்று.

## கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி

படிப்படியாக முன்னேற்றங்களைத் தமக்குரியதாக்கும் இவ்வொன்றியம் கடந்த இரு ஆண்டுகளில் வியத்தகு வளர்ச்சியை எட்டியது. இவ்வொன்றியத்தின் நிர்வாக இயக்குநர் டாக்டர் அ. சுப்பிரமணியத்தின் சீரிய தலைமையில் தான்.

கூட்டுறவு பால் சங்கங்களைப் பொறுத்தவரையில் 1997 வரை 538 என்ற எண்ணிக்கைகளில் இருந்தது, தற்சமயம் 651 சங்கங்களாக உருவெடுத்து 20 சதவீத வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இச்சங்கங்களில் ஏறத்தாழ 1.72 இலட்சம் அங்கத்தினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளில் 60 செயலிழந்த கூட்டுறவு சங்கங்களைப் புத்துணர்வு கொடுத்துச் செயலாக்கம் செய்வதில் இந்த ஒன்றியம் மகத்தான சாதனை படைத்துள்ளது.

## மான்ய உதவி

இதனிடையில் கிராமப்புறங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்குப் பயன் தரும் வகையில் அரசு தீட்டிய திட்டங்களாகிய ஆதிதிராவிடர் நலத் திட்டம் மற்றும் 'தாட்கோ' திட்டம் ஆகியவற்றுள் மானியமாக ரூ.26 இலட்சங்களை இவ்வொன்றியம் பெற்றுத் தந்து சாதனை படைத்துள்ளது.



## பால் உற்பத்தி

நமது தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகரத்தின் தினசரி பால் தேவையைப் பூர்த்தி செய்யும் பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் தருமபுரி மாவட்ட ஒன்றியம் தலையாய பங்கு வகிக்கிறது. சராசரியாக தினசரி 1 இலட்சம் லிட்டர் பால் சென்னைக்கு அளிப்பதுடன் தன் சுயதேவையாகிய 20,000 லிட்டர் பாலையும், இவ்வொன்றியம் விற்பனை செய்து வருகிறது. அதுவல்லாது, பால்பொடி, வெண்ணை, நெய் மற்றும் பால்கோவா போன்ற சுவைமிகு பால் பொருட்களிலும் தேவையான அளவுக்கு உற்பத்தி செய்துவருகிறது.

முக்கியமாகக் கடந்த பல ஆண்டுகளாகச் சராசரியாக 90,000-லிருந்து 94,000 லிட்டர் வரை பால் உற்பத்தியாகி வந்த இந்த மாவட்டத்தில், கடந்த இரு வருடங்களில் தினசரி உற்பத்தி செய்யப்படுகின்ற பாலின் அளவு 1,50,000 இலட்சத்தைத் தாண்டியுள்ளது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

## சாதனை விருதுகள்

இவ்வொன்றியத்தின் சீரிய பணிகளைப் பாராட்டி, கடந்த வருடம் தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப் பெற்ற சிறந்த கூட்டுறவுச் சங்க விருது இவ்வொன்றியத்தைப் பெருமிதப்பட வைத்தது.

மேலும் அக்மார்க் நிறுவனத்தின் "தலைசிறந்த நெய் உற்பத்தி நிறுவன விருது" புதுதில்லியில் இருந்த சேவை மற்றும் நிர்வாகத் திறமைகளுக்கான "எக்சலன்ஸ் விருது" என்றெல்லாம் விருதுகள் பெற்று இந்நிறுவனம் பீடுநடை போடுகிறது.

## ஈட்டிய இலாபம்

கடந்த பல வருடங்களாக நட்டத்தில் இயங்கி வந்த இவ்வொன்றியம் 1997-98ம் ஆண்டில் என்றுமில்லாத சாதனையாக ரூ.1.74 கோடி உத்தேச நிகர லாபம் ஈட்டியுள்ளது என்பது ஒரு வரலாற்றுச் சாதனையாகும். ★





# காவிரி: இதுவரை நடந்தது

(1890 -1997)

1890 : புதிய பாசனத் திட்டங்களை மைசூர் சமஸ்தானம் தொடங்குகிறது.

காவிரிப் பிரச்சினையில் சென்னை மாகாணத்துக்கும் மைசூர் சமஸ்தானத்துக்கும் இடையில் முதல் ஒப்பந்தம் கையெழுத்தானது.

39 டிஎம்சி. தண்ணீரைத் தேக்கி வைக்கும் கிருஷ்ணராஜ சாகர் அணைத்திட்டத்தை, சென்னை மாகாணத்தின் ஒப்புதலுக்கு மைசூர் அனுப்புகிறது.

1911 : 11 டிஎம்சி. தண்ணீரைத் தேக்கி வைக்க அணை கட்ட சென்னை ஒப்புதல் அளிக்கிறது. அடிக்கல் நாட்டப்படுகிறது.

1921 : கிருஷ்ணராஜ சாகர் அணைத்திட்டத்துக்கான விதிமுறைகள் வகுக்கப்படுகின்றன. மைசூர் சமஸ்தானத்துக்கு இவை ஏற்புடையவை இல்லை. தொடர்ந்து பேச்சு வார்த்தை நடக்கிறது.

1924 : இரு நிர்வாகங்களுக்கும் இடையில் புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகிறது.

1931 : கிருஷ்ணராஜ சாகர் அணை கட்டி முடிக்கப்படுகிறது.

1934 : மேட்டூர் அணை கட்டி முடிக்கப்படுகிறது. 93.5 டிஎம்சி. நீரைத் தேக்கி வைக்க இது கட்டப்பட்டது.

1956 : நவம்பர்-1 : மாநில எல்லைகள் திருத்தியமைக்கப் படுகின்றன. கேரளம் உருவாகிறது. குடகு, கர்நாடகத்தின் ஒரு பகுதியாகிறது.

1956 : மாநிலங்களுக்கு இடையிலான நதி நீர்த் தகராறு சட்டம். நதி நீர் வாரியம் (River Board) சட்டம் உருவாதல்.

1958 : கபினி அணைத்திட்டம் தொடங்குகிறது. (1975ல் முடிகிறது).

1964 : ஹாரங்கி அணைத் திட்டப் பணி தொடக்கம். தமிழகத்தின் எதிர்ப்பு காரணமாக மத்திய அரசு ஒப்புதல் கொடுக்க மறுக்கிறது.

1965 : ஹேமாவதி அணை கட்டும் பணி தொடக்கம். (1976-ல் முடிவு).

1966 : கபினி, ஸ்வர்ணாவதி திட்ட விவரங்களைத் தமிழகம் கேட்கிறது. கீழ் பவானி, அமராவதி திட்ட விவரங்களை அளித்தால்தான் விவரமளிக்க முடியும் என்கிறது கர்நாடகம். தமிழகம் இந்த விவரங்களை அளித்த போதும், தனது தரப்பில் விவரம் அளிக்க கர்நாடகம் மறுக்கிறது.

1967 : ஸ்வர்ணாவதி அணை கட்டுமானப் பணி தொடக்கம். (1973ல் முடிவு)

1968 : ஹாரங்கி அணை கட்டும் பணி தொடக்கம். (1973-ல் முடிவு)

1968 ஆகஸ்ட் : மாண்புமிகு தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் கலைஞர், கர்நாடக முதல்வர் வீரேந்திர பாட்டீல் இடையில் காவிரிப் பிரச்சினை குறித்து அமைச்சர்கள் நிலையிலான முதல் பேச்சு வார்த்தை. மத்திய பாசனத்துறை அமைச்சர் கே.எல்.ராவ் தலைமை.பேச்சு வார்த்தைக்கு அழைக்கவில்லை என்று கேரளம் புகார்.

1970 : மேலும் 5 சுற்றுப் பேச்சுகள்; கேரளமும் பங்கேற்பு (1978 முதல் புதுவையும் பங்கேற்பு).

1970 : பிப்ரவரி : பேச்சுவார்த்தை மூலம் தீர்வுக்கு வாய்ப்பில்லை என்று கூறும் தமிழகம், நடுவர் மன்றத்தை உருவாக்க மத்திய அரசை வலியுறுத்துகிறது. இதே ஆண்டு ஆகஸ்ட்டில் கேரளமும் இதே கருத்தை வலியுறுத்துகிறது.

1971:நடுவர் மன்றம் அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிடக்கோரி உச்ச நீதிமன்றத்தில் தமிழகம் மனு; தஞ்சாவூர் விவசாயிகளும் அதே போன்ற மனுவைத் தாக்கல் செய்கின்றனர். கேரளமும் கோரிக்கைக்காக நீதிமன்றம் செல்கிறது.

1972:முதல்வர்கள் சந்தித்துப் பேசப் பிரதமர் இந்திரா காந்தி யோசனை; மே 29ல் கலைஞர் (தமிழகம்), தேவராஜ் அர்ஸ்(கர்நாடகம்), சி.அச்சுத மேனன்(கேரளம்) சந்திப்பு.

1972ஜூன் : காவிரி உண்மை அறியும் கமிட்டியை மத்திய அரசு நியமிக்கிறது; கமிட்டியின் முதல் அறிக்கை டிசம்பரில் சமர்ப்பிப்பு; மீண்டும் விவரங்களைப் பரிசீலிக்க முதல்வர்கள் கோரிக்கை. இதைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்றத்தில் தனது வழக்கைத் தமிழகம் வாபஸ் பெறுகிறது.

1974 நவம்பர் : வரைவு ஒப்பந்தத்தை மத்திய அரசு முன் வைக்கிறது.

1975 பிப்ரவரி: ஒப்பந்தம் குறித்து மாநிலங்களுக்கிடையில் பேச்சு; இதை ஏற்கத் தமிழகம், கர்நாடகம் மறுப்பு.

1976 ஆகஸ்ட் : திருத்தப்பட்ட வரைவு ஒப்பந்தத்தை மத்திய அரசு முன்வைக்கிறது; நீர்ப்பகிர்வு தொடர்பான வழிமுறைகளை வகுக்க கமிட்டி அமைக்கப்படும். காவிரிப் பள்ளத்தாக்கு ஆணையம் அமைக்கப்படும் என்று நாடாளுமன்றத்தில் மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் ஜெகஜீவன்ராம் ஆகஸ்ட் 27-ல் அறிவிப்பு.

1978 ஆகஸ்ட் : மாண்புமிகு முதல்வர்கள் நிலையிலான கூட்டம்; புதுவை பங்கேற்பு; 1976 வரைவு ஒப்பந்தத்தை எம்.ஜி.ஆர்.நிராகரித்தல்.

1978 செப்டம்பர் - 1980 டிசம்பர்: முதல்வர்கள் நிலையில் மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் முன்னிலையில் நான்கு சுற்றுப் பேச்சு வார்த்தை.

1983 ஏப்ரல்: மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் ராம்நிவாஸ் மிர்தா தலைமையில் கூட்டம்.

1986 ஜூன் : மத்திய அமைச்சர் பிசங்கரானந்த் முன்னிலையில் மீண்டும் பேச்சு.

1986 நவம்பர் : நடுவர் மன்றம் அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிடக் கோரி தமிழ்நாடு காவிரி நீர்ப்பாசன விளைபொருள்கள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கம் உச்சநீதி மன்றத்தில் முறையீடு: இதற்கு ஆதரவாகத் தமிழக அரசு மனு.

1987 : மீண்டும் இரு தரப்புப் பேச்சுவார்த்தை நடத்த மத்திய அரசு யோசனை; இதுவரை நடந்த பேச்சு வார்த்தைகளால் பலனில்லை என்று கூறி, திரு.எம்.ஜி.ஆர்.நிராகரிப்பு.

1988 டிசம்பர் : கர்நாடகா முதல்வருக்கும் தமிழக ஆளுநருக்கும் இடையில் பேச்சுவார்த்தை தோல்வி; நடுவர் மன்றம் அமைக்கத் தமிழக ஆளுநர் வலியுறுத்தல்.

1989 டிசம்பர் : நடுவர் மன்றம் அமைக்க மத்திய அரசிடம் தமிழகம் மீண்டும் வலியுறுத்தல்.

1990 ஏப்ரல் 24 : இதுவரை நடந்த பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு ஏற்படாததால் நடுவர் மன்றம் அமைக்க மத்திய அரசுக்கு உச்சநீதி மன்றம் ஆணை.

1990 ஜூன் 2: நடுவர் மன்றம் அமைப்பு.

1990 ஆகஸ்டு : இடைக்காலத் தீர்வு அளிக்க நடுவர் மன்றத்திற்கு ஆணையிடக்கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழகம், புதுவை மனு. இடைக்கால தீர்வுக்கு உச்ச நீதி மன்றம் உத்தரவு.

1991 ஜூன் 25: தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. தண்ணீர் விட நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பு.

1991 ஜூலை 25: கர்நாடகத்தில் 8.49 இலட்சம் ஹெக்டேர் பாசனப் பகுதியைப் பாதுகாக்க கர்நாடக அரசின் அவசரச் சட்டம்.

1991 ஜூலை - செப்டம்பர் : இடைக்காலத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் கர்நாடகம் மனு.

1991 ஜூலை 27 : கர்நாடகத்தின் அவசரச் சட்டம் செல்லுபடியாகக் கூடியதா என்று உச்ச நீதிமன்றத்தின் கருத்துக்கு, குடியரசுத் தலைவர் அனுப்புதல். உச்ச நீதிமன்றத்தின் கருத்தை அரசு கேட்பது குறித்து மத்திய அமைச்சரவையில் கருத்து வேறுபாடு: எதிர்ப்புத் தெரிவித்து வாழப்பாடி ராமமூர்த்தி ராஜினாமா.

1991 நவம்பர் 22 : கர்நாடகத்தின் அவசரச் சட்டம் அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என்று உச்சநீதிமன்றத்தீர்ப்பு.



*சேவை என்பது, கூலியை உத்தேசித்தோ தனது சுயநலத்தை உத்தேசித்தோ செய்வதல்ல; மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து மகிழ்ச்சியும், திருப்தியும் அடைவதற்காகவே செய்யப்படும் செயல்தான் சேவையாகும்!* - தந்தை பெரியார்



1991 டிசம்பர் 11 : நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு மத்திய அரசு கெஜட்டில் வெளியீடு: கர்நாடாகத்தில் பதற்றம்; டிசம்பர் 13-ஆம் தேதி பந்த் நடத்த அழைப்பு; அனைத்துக் கல்வி நிலையங்களையும் 10 தினங்கள் மூட கர்நாடக அரசு உத்தரவு.

1991 டிசம்பர் 12 : பெங்களூரில் பேரணி, 24,27-ஆம் தேதிகளில் மைசூரிலும் பதற்றம்; 27-ஆம் தேதி பந்த் நடத்த தமிழகஅரசு அறிவிப்பு, இரு மாநிலங்களிலும் நடந்த வன்முறைகளில் ரூ.17கோடி சேதமடைந்ததாக மனித உரிமைக் கமிஷன் மதிப்பிட்டது.

1991 டிசம்பர் 23 : நடுவர் மன்ற இடைக்காலத் தீர்வை எதிர்த்து பாரதீய ஜனதா கட்சித் தலைவர் எச்.என்.நஞ்சே கௌட கர்நாடக உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல்.

1992 மார்ச் 28: வி.ஆர்.கிருஷ்ணய்யர் தலைமையில் இரு மாநில விவசாயிகள் பிரதிநிதிகள் மற்றும் நிபுணர்கள் கலந்து கொண்ட கூட்டம் பெங்களூரில் நடந்தது. காவிரி தொடர்பாகக் குடிமக்களின் கூட்டுக் கோரிக்கை வெளியிடப்பட்டது.

1992 ஜூன் 5 : நடுவர் மன்றத்தின் செயல்பாடுகளையும், அதன் இடைக்கால உத்தரவையும் நிறுத்தி வைக்கக் கோரி நாடாளுமன்ற உறுப்பினர் எச்.டி. தேவெ கௌட கர்நாடக உயர்நீதிமன்றத்தில் முறையீடு.

1993 அக்டோபர் 4 : நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி தண்ணீர் விட கர்நாடகத்துக்கு உத்திரவிடக் கோரி, உச்ச நீதிமன்றத்தில் தமிழகம் முறையீடு.

1995 ஆகஸ்ட் 1 : இதே கோரிக்கையை வலியுறுத்தி தமிழகம் இரண்டாவது மனு.

1995 நவம்பர் : வாடும் பயிர்களைக் காப்பாற்ற உடனடியாக 30 டி.எம்.சி தண்ணீர் விட கர்நாடகத்துக்கு உத்தரவிடக் கோரி உச்சநீதி மன்றத்தில் தமிழகம் முறையீடு.

1995 டிசம்பர் 14 : இந்த மனு மீது உச்ச நீதி மன்றத்தில் விசாரணை. அன்றைய தினமே நடந்த நடுவர் மன்றக் கூட்டத்தில் பிரச்சினையை எடுத்துச் செல்ல நீதிமன்றம் யோசனை.

1995 டிசம்பர் 19 : தமிழகத்தின் கோரிக்கை மீது நடுவர் மன்றத்தில் விசாரணை. உடனடியாக, கூடுதலாக 11 டி.எம்.சி. தண்ணீர் விட கர்நாடகத்துக்கு ஆணை. இதைச் செயல்படுத்த வலியுறுத்தி கர்நாடக முதல்வர், பிரதமருக்குத் தமிழக முதல்வர் கடிதம்.

1995 டிசம்பர் : உச்சநீதிமன்றத்தில் மீண்டும் தமிழகம் மனு. 28-ஆம் தேதி விசாரணை செய்த நீதிமன்றம், முதல்வர்கள் கூட்டத்தை 2 தினங்களுக்குள் கூட்டி, தீர்வு காண நீதிமன்றம் யோசனை.

1995 டிசம்பர் 30 : பிரதமர் நரசிம்மராவ் தலைமையில் முதல்வர்கள் கூட்டம், பேச்சுவார்த்தை தோல்வி.

1996 ஜனவரி 1 : தினசரி 1 டி.எம்.சி. வீதம் 6 டி.எம்.சி. தண்ணீர் விட கர்நாடகத்துக்குப் பிரதமர் கடிதம்.

1996 ஜனவரி 23 : மீதி 5 டி.எம்.சி. தண்ணீர் விட கர்நாடகத்துக்கு ஆணையிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் தமிழகம் முறையீடு. மார்ச் 12க்கு விசாரணை ஒத்திவைப்பு. ஏப்ரல் 9,11 தேதிகளில் விசாரணை முடிவு; தீர்ப்பு ஒத்திவைப்பு.

## தெரிந்து கொள்வோம்!

| | | |
|---|---|---|
| தொழுநோய் ஒழிப்புநாள் | : | ஜனவரி 30 |
| தாய்மார்கள் நாள் | : | பிப்ரவரி 14 |
| உலக நுகர்வோர் நாள் | : | பிப்ரவரி 15 |
| காசநோய் ஒழிப்பு நாள் | : | பிப்ரவரி 25 |
| உலகப் பெண்கள் நாள் | : | மார்ச் 18 |
| உலகக் காடுகள் பாதுகாப்பு நாள் | : | மார்ச் 20 |
| உலகச் சுகாதார நலநாள் | : | ஏப்ரல் 7 |
| பூமி பாதுகாப்பு நாள் | : | ஏப்ரல் 22 |
| உழைப்போர் நாள் | : | மே 1 |
| அகில உலகச் செவிலியர் நாள் | : | மே 12 |
| உலகப் புகைப்பிடிக்கா நாள் | : | மே 31 |
| சுற்றுப்புறச் சூழ்நிலை நாள் | : | ஜூன் 3 |
| தந்தையர்கள் நாள் | : | ஜூன் 19 |
| போதை மருந்து ஒழிப்பு நாள் | : | ஜூன் 26 |
| சர்க்கரை நோய் ஒழிப்பு நாள் | : | ஜூன் 27 |
| தாய்ப்பால் சிறப்பு நாள் | : | ஆகஸ்ட் 1 |
| ஆசிரியர்கள் நாள் | : | செப்டம்பர் 5 |
| இந்தியப் புகைப்பிடிக்கா நாள் | : | அக்டோபர் 11 |
| பார்வை இழந்தோர் நாள் | : | அக்டோபர் 15 |
| உலக உணவு நாள் | : | அக்டோபர் 16 |
| ஐக்கிய நாடுகள் நிறுவன நாள் | : | அக்டோபர் 24 |
| ஏழ்மை ஒழிப்பு நாள் | : | நவம்பர் 1 |
| குழந்தைகள் நாள் | : | நவம்பர் 14 |
| உலக எய்ட்ஸ் நோய் நாள் | : | டிசம்பர் 1 |
| உலக ஊனமுற்றோர் நாள் | : | டிசம்பர் 3 |
| 'சார்க்'கின் பெண் குழந்தைகள் நாள் | : | டிசம்பர் 8 |
| மனநல நாள் | : | டிசம்பர் 8 |
| உலக மனித உரிமை நாள் | : | டிசம்பர் 10 |

*தகவல் : கோபி*

1996 ஜூன் : நடுவர் மன்றத் தலைவர் சித்தாதோஷ் முகர்ஜி ராஜினாமா.

1996 ஜூலை 8 : தண்ணீர் இல்லாததால் விவசாயப் பணிகள் தொடங்காத நிலையில் இடைக்கால உத்தரவை அமல்படுத்த கர்நாடகத்துக்கு உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழகம் மீண்டும் மனு.

1996 ஜூலை 31 : மனுவை விசாரித்த தலைமை நீதிபதி, இரு மாநிலங்களும் பேசித் தீர்த்துக்கொள்ள யோசனை.

1996 செப்டம்பர் -1997 ஜனவரி : தமிழக முதல்வர் கலைஞர் - கர்நாடக முதல்வர் ஜே.எச். பாடீல் இடையில் 5 சுற்றுப் பேச்சு; பேச்சு தோல்வி. இனி பேச்சுவார்த்தை இல்லை என்று கலைஞர் அறிவிப்பு.

1996 டிசம்பர் : உச்சநீதிமன்ற நீதிபதி என்.பி.சிங் நடுவர் மன்றத் தலைவராக நியமனம்.

1997 ஜனவரி 7-10 : நடுவர் மன்றத்தில் மீண்டும் விசாரணை தொடக்கம். கர்நாடகம் பங்கேற்பு.

*நன்றி : "தினமணி"*

# "அனைவருக்கும் மருத்துவ வசதி என்கிற இல்க்கைத் தமிழக அரசு நிச்சயம் நிறைவேற்றும் !"

**- டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தில் முதலமைச்சர் கலைஞர் உரை**

சென்னை கிண்டியில் அமைந்துள்ள டாக்டர்.எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகக் கட்டடத் திறப்புவிழாவில் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவச் சிலையினைத் திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

"ஒன்றை முதலில் நினைவு கூர்ந்திட விரும்புகிறேன்; 1977-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாள் இந்திய நாடு விடுதலை பெற்ற விழா, நாடு முழுவதும் கொண்டாடப்பட்ட போது, அன்று சென்னை தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில், தேசியக் கொடியை முதலமைச்சர் என்ற முறையில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஏற்றி வைத்தார். அப்பொழுது, அவர் உரையாற்றும்போது சொன்னதை நினைவூட்டுகின்றேன்.

"எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், வேறு எந்த நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தாலும் அவர்கள் நாட்டுக்கு நல்லது செய்தால், அவர்களைப் போற்ற வேண்டியது மனிதத்தன்மை உள்ள ஒவ்வொருவருடைய கடமையாகும்.



சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, இந்தச் சுதந்திரக் கொடியை இங்கே ஏற்றிவைப்பது மேதகு ஆளுநர் என்ற முறையில் இருந்தது. அந்த முறையை மாற்றவேண்டும் என்று கோரி, அதற்காகப் போராடி எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் 'அந்த உரிமையைப் பெற்றுத் தந்த கலைஞர் கருணாநிதி அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்".

- இது அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த விழாவிலே குறிப்பிட்ட வாசகம்.

**கேள்விக்குறியும் பெருமூச்சும்**

அரசியலிலே எத்தனை வேறுபாடு இருந்தாலும், எதிர்எதிர் முனையிலே இருந்தாலும் அவரவர்களுக்குத் தரவேண்டிய மரியாதையை எண்ணிப் பார்த்து அரசியல் நடைபெற்றது அந்தக் காலம். ஆனால், இந்தக் காலம் கேள்விக்குறிதான்; பதில் பெருமூச்சுதான். இந்தச் சூழ்நிலையிலே தான் என்னுடைய அன்புக்கினிய நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலையை இந்தப் பல்கலைக்கழகத்தினுடைய வளாகத்தில் திறந்து வைக்கின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கின்றேன்.

எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரால் பல்கலைக்கழகம் ஒன்றைத் தொடங்குவது என்று எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக



இருந்தபொழுதே திட்டமிடப்பட்டு, சட்டமாக சட்டப்பேரவையிலே கொண்டு வரப்பட்டது. அதன்பின்னர் எம்.ஜி.ஆர். அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்த சூழலில், 1989-ஆம் ஆண்டு நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன் அந்தப் பல்கலைக்கழகத்தைத் தொடங்கவேண்டும் என்ற முனைப்போடு முயற்சித்து, அந்த முயற்சிக்கு உறுதுணையாக அன்றைக்கு இருந்த துணைவேந்தரும், மற்றவர்களும் இருந்து, அன்றைய குடியரசுத் தலைவர் ஆர்.வி. அவர்களை அழைத்து, அந்தத் தொடக்க விழாவை நடத்தினோம். அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கலந்துகொள்கின்ற அரிய வாய்ப்பை நான் பெற்றிருக்கின்றேன்.

> **மாணவர்களிடையே சேவை உணர்ச்சி, கட்டுப்பாடு ஆகியவற்றை வளர்ப்பது ஆசிரியர்களின் கடமையாகும்.**
>
> - டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன்

**வடிவம் அமைத்துக் கொடுத்தேன்**

1989-ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்தைத் தொடங்கிவைத்தேன். அன்றைய பல்கலைக்கழகத் தொடக்கவிழா உரையை அன்றைய ஜனாதிபதி ஆர்.வி. ஆற்றினார் என்றாலுங்கூட, இந்தக் கட்டடங்களுக்கு அன்றைக்கு நான்தான் அடிக்கல் நாட்டினேன். இன்றைக்கு முதலமைச்சராக நான் இருக்கும்போது, அதைத் திறந்து வைக்கின்ற அரிய வாய்ப்பை நமக்கெல்லாம் நம்முடைய இந்தியத் துணைக்கண்டத்தினுடைய குடியரசு துணைத்தலைவர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள்.

இந்தப் பல்கலைக்கழகத்தினுடைய கட்டட வடிவமைப்பைக்கூட நானேத்தான் அமைத்துக் கொடுத்தேன் என்பதை - என்னுடைய நண்பருடைய நினைவுச்சின்னமாக அமைத்துக்கொடுத்தேன் என்பதால் பெருமையோடு சொல்லிக்கொள்கின்றேன்.

**எம்.ஜி.ஆர். சிலையைத் திறந்துவைக்கும் வாய்ப்பு**

1990-ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். பல்கலைக்கழக முதல் பட்டமளிப்பு விழாவில், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு நான் உரையாற்றினேன். அதற்குப் பிறகு, 1997-ஆம் ஆண்டு இந்தப் பல்கலைக்கழகத்தின் 7-வது பட்டமளிப்பு விழா உரையையும் நானேதான் ஆற்றியிருக்கின்றேன். இன்றைக்கு எம்.ஜி.ஆர். அவர்கள் சிலையையும் திறந்துவைக்கின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கின்றேன். இந்தக் கட்டடத்தைத் திறந்துவைக்க வந்துள்ள நம்முடைய மேன்மை தங்கிய இந்திய குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் நமக்குப் புதியவர் அல்ல. சொல்லவேண்டுமேயானால், நம்முடைய தமிழகத்திலே சில நாட்கள் ஆளுநராக இருந்தது மாத்திரமல்ல, கடந்த 1997-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 22-ஆம் நாள் சட்டப்பேரவையிலே ஆளுநர் உரையை அவரேதான் ஆற்றியிருக்கின்றார்.

இந்த நேரத்திலே, அன்று அவர் ஆற்றிய உரையினுடைய ஒரு பகுதியை நினைவுபடுத்துவது என்னுடைய கடமை என்று கருதுகின்றேன்:

"அனைவருக்கும் அடிப்படை சுகாதாரம் அளித்தல், கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை உறுதி செய்யும் நோக்கத்துடன் வட்ட மருத்துவமனைகளுக்கும், ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும் தேவையான கருவிகளையும் பிற வசதிகளையும் பெருமளவில் அளித்துள்ளோம். ஏற்கெனவே, அறிவித்தபடி, 300 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ரூ.16 கோடி செலவில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 97-98 ஆம் ஆண்டில் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்படும். கிராமப்புற மக்களுக்கு நாள்முழுவதும் மருத்துவ வசதி கிடைக்கும் வகையில், மாநிலம் முழுவதும் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் இயங்கும்படி ஆணையிடப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் ஒரு மாபெரும் போலியோ தடுப்புத் திட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றது. அனைவருக்கும் மருத்துவ வசதி என்ற இலக்கை கி.பி.2000-ஆம் ஆண்டுக்குள் அடைந்துவிட வேண்டுமென்பதில் இந்த அரசு உறுதிபூண்டுள்ளது".

- என்று அன்றைக்கு நம்முடைய இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் அவர்கள், தமிழகத்தின் ஆளுநராக வீற்றிருந்தபொழுது, ஆற்றிய உரையைத்தான் இங்கே நினைவுபடுத்தினேன். அவர் ஆற்றிய உரையிலே தெரிவிக்கப்பட்டுள்ள அந்த விருப்பத்தை, இந்த அரசு நிச்சயமாக நிறைவேற்றும். நிறைவேற்றுவதற்கு இங்கே குழுமியிருக்கின்ற உங்கள் அத்தனைப் பேருடைய ஒத்துழைப்பும் தேவை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மீண்டும் ஒருமுறை சொல்கின்றேன். இன்றைக்கு ஏதோ திடீரென்று புதிதாக அருமை நண்பர் எம்.ஜி.ஆருடைய பெயரால் உள்ள பல்கலைக்கழகத்தினுடைய திறப்புவிழாவை இந்த அரசு நடத்தவில்லை. இங்கே அமர்ந்திருக்கின்ற தம்பி திருநாவுக்கரசு, அறந்தாங்கியிலே என்னை அழைத்து எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலையை திறந்துவைக்கச் செய்தார். இங்கே இருக்கின்ற நம்முடைய அருமைச் சகோதரர் ஆர்.எம்.வீ. கோபிச்செட்டிப்பாளையத்திலே என்னை அழைத்து எம்.ஜி.ஆர். சிலையை திறக்கச் செய்தார். யாரும் அழைக்காமல் நானே எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் எம்.ஜி.ஆர். சிலையை திறந்துவைத்திருக்கின்றேன். அடுத்து இன்னும் சில இடங்களிலே சிலை திறப்பு விழாவிற்கான அழைப்புக்கள் வந்துகொண்டிருக்கின்றன என்பதை எடுத்துச்சொல்லி என்னுடைய நீண்ட கால நண்பரும், நானும் அரசியலில் எவ்வளவு மாறுபாடுகள் இருந்தாலுங்கூட, நாற்பது ஆண்டு கால நண்பர்கள் என்கின்ற முத்திரையோடு பழகிய நாங்கள், இடையிலே எங்களுக்குள் ஏற்பட்ட மனக்கசப்புகளையெல்லாம் பொருட்படுத்தாமல், நாகரிகத்தோடு, தமிழகம் கட்டிக் காக்க வேண்டிய கலாச்சாரத்தோடு எப்படிப் பழகினோமோ, அந்தப் பண்பாட்டைத் தமிழர்கள் அனைவரும் பெறவேண்டும்.

- இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டார்

நிகழ்ச்சித் தொகுப்பு : பி.எல்.ஆர்.

★ ★ ★



# பார் புகழும் பன்னிருவர் !

அந்நிய ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறை தர்பாரை எதிர்த்து நின்று - "என்று தணியும் இந்தச் சுதந்திரத் தாகம்" என்று - அன்று குரல் கொடுத்தோர், கொதித்தெழுந்தோர், கண்டனங்களுக்கும், கசையடி போன்ற தண்டனைகளுக்கும் ஆளானோர் ஏராளம், ஏராளம்! அவர்களில் பலரும் கடுஞ்சிறை ஏகினர்; சொத்து சுகங்களையெல்லாம் தியாகம் செய்தனர்; இன்னுயிர் துறக்கவும் முன்னின்று, நாமெல்லாம் ஆனந்த சுதந்திரத்தை அடைந்திடச் செய்தனர். இந்திய அளவிலே மட்டுல்ல; தமிழ்நாட்டளவில் பார்த்தாலும் அத்தகைய சுதந்திரப்போர் வீரர்களின் பட்டியல் நீளும்; அத்தகையவர்களில் குறிப்பாகப் பன்னிருவரை மட்டும் இரத்தினச் சுருக்கமாக நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார் கட்டுரையாசிரியர்.

### *வீரபாண்டிய கட்டபொம்மன்*

வீரபாண்டிய கட்டபொம்மன் 3-1-1760ல் பிறந்து, 2.2.1790ல் 96 கிராமங்களைக் கொண்ட பாஞ்சாலங்குறிச்சி பாளையத்தின் அரசனாகி அந்நியருக்கு வரிசெலுத்த மறுத்துப் போர் புரிந்தான்;

பிறகு நயவஞ்சகரால் காட்டிக் கொடுக்கப்பட்டான். 16-10-1999ல் கயத்தாறில் தூக்கிலிடப்பட்டான்.

39 ஆண்டுகளே வாழ்ந்த அவன், அடக்குமுறைக்குச் சிறிதும் அடிபணியாமல் துடித்தெழுந்து கொக்கரித்தவன். தோள்தட்டியவன் இந்திய விடுதலைக்கு வித்திட்டோரில் முதல் குரல்கொடுத்தவனாகத் திகழ்ந்தான். மானத்தை இழந்து வாழ்வதைக் காட்டிலும் வீரத்தோடு போரிட்டுச் செத்துமடிவதே மேல் எனக் கடைசி மூச்சுவரையில் கர்ஜித்தான். அதேபோல் வாழ்ந்தும் காட்டினான்.



இன்றில்லையெனினும், பாஞ்சாலங் குறிச்சியில் அரசு எழுப்பியுள்ள புதிய கோட்டை, என்றும் அவன் பேர் சொல்லும்!

### *மாவீரன் பூலித்தேவன்*

உயிரிழக்க நேர்ந்தாலும் சரி; ஒரு மணி நெல்கூட வெள்ளையனுக்கு வரியாகச் செலுத்த முடியாது என்று ஆதிக்க ஆட்சிக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய மாவீரன் பூலித்தேவன்; நெல்கட்டும் செவ்வலில் பிறந்த பூலித்தேவன் வீரமறவன். போர்க்குணம் படைத்தவன்; நேர்மை, ஒழுக்கத்தில் சிறந்தவன்; ஏழைப் பங்காளன் என்றெல்லாம் பாராட்டப்பட்டவன்.

"ஆங்கிலேயர்கள் ஆயிரம் வலிமை படைத்தவர்களாக இருக்கலாம். ஆனால் என் நெஞ்சில் உரமும், நேர்மைத் திறமும் இருக்கும் வரையிலே தாய்நாட்டிற்காகப் போராடியே தீருவேன்; அடிமை விலங்கை அறுத்தே வீசுவேன்" எனச் சூளுரைத்தவன் பூலித்தேவன்.

முதன் முதலாக 1755ஆம் ஆண்டே, கொள்ளையராம் வெள்ளையராட்சிக்கு எதிராகக் குமுறும் எரிமலைபோல் வெடித்த, அவன் எழுப்பிய வீரமுழக்கம்தான் மற்ற எல்லோருக்குமே வழிகாட்டியாகி, ஆங்கிலேயரை எதிர்த்து நிற்குமளவிற்கு எழுச்சிகொள்ளச் செய்தது.

மாவீரன் பூலித்தேவன் எல்லோருடைய நெஞ்சிலும் மட்டுமல்ல; இந்தியாவின் விடுதலைப்போர் வரலாற்றிலும் நிலைத்து நிற்பான்..

### *கம்மந்தான் யூசுப்கான்*

இராமநாதபுரம் மாவட்டம் பனையூரில் பிறந்தவன் யூசுப்கான். பிறப்பால் இந்துவாக இருந்த அவன், முகமதியனாக மதம் மாற்றப்பட்டதால் யூசுப்கான் என்று அழைக்கப்பட்டான்.

நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று எல்லாம் அவனிடம் மேலோங்கி இருந்த காரணத்தால், ஆங்கிலேயர் அவனுக்குப் பட்டம் பதவியெல்லாம் கொடுக்க முன்வந்தும் கூட, அவர்களிடமிருந்து விலகி, தாய்நாட்டிற்காக அவர்களை எதிர்த்துப் போரிட்டான். 1764 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ஆம் நாள் - எந்த ஆங்கிலேயர்களால் பாராட்டும் பரிசும் தருவதாக ஆசைகாட்டப்பட்டானோ, அவர்களாலேயே யூசுப்கான் தூக்கிலிடப்பட்டான்.

### *வீரமங்கை வேலுநாச்சியார்*

மதுரையை ஆண்ட ராணி மங்கம்மாளுக்குப் பிறகு 18ஆம் நூற்றாண்டில் தோன்றிய வேலுநாச்சியார் தமிழகத்தின் வீரமங்கையாக விளங்கினார். வடக்கே ஜான்சிராணி தோன்றுவதற்கு முன்பே, தமிழகத்தில் தலைநிமிர்ந்து நின்ற வீரப்பெண்மணி வேலுநாச்சியார்.

ஏறக்குறைய 22 ஆண்டுகள் சிவகங்கைச் சீமையை முத்துவடுகநாதர் ஆண்டு வந்தார். அவருக்கு உதவியாக வாளேந்திப் போர்புரிவதில் வல்லவராக விளங்கியவராக மட்டுமன்றி



நல்லாட்சி நடைபெற இவர் துணைபுரிந்தார். தாய்நாட்டுப் பற்றும், மக்கள் நலம் நாடும் மனப்பாங்கும் கருத்தில் கொண்டு செயல்பட்டார்.

இந்திய விடுதலையின் தொடக்க கால வரலாற்றை ஆராயும்போது, கர்னல்ஸ் மித்துடன் வீரமங்கை வேலுநாச்சியார் செய்தபோர், ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடும் வீரம்மிக்க பெண்மணி ஒருவரைத் தமிழகம் பெற்றுவிட்டது என்ற பெருமை மிக்க வரலாற்றினை உருவாக்குவதாக இருந்தது.

### *தில்லையாடி வள்ளியம்மை*

சொந்தவாழ்க்கையைப் பெரிதெனக் கருதாமல், தாய்நாட்டுப் பற்றின் காரணமாக காந்தியடிகள் தலைமையில், பொதுத் தொண்டில் ஈடுபட்டு பதினாறு வயதிலேயே தன் வாழ்க்கையை முடித்துக் கொண்ட தில்லையாடி வள்ளியம்மை அவர்களின் வாழ்க்கை வரலாறு காலத்தால் அழிக்கமுடியாத வீரகாவியம் ஆகும்.

இவருடைய பெற்றோர், பிழைப்புக்காகத் தென்னாப்பிரிக்காவில் ஜோகன்ஸ்பர்க் என்னும் நகரில் வாணிபம் செய்யச் சென்றிருந்தபோது அங்கு பிறந்த பெண்தான் இவர். தஞ்சை மாவட்டம் தில்லையாடி இவர்களுக்குச் சொந்த ஊர்.

அச்சமயம், தென்னாப்பிரிக்காவை ஆண்ட வெள்ளையர்கள் கறுப்பரையும், இந்தியரையும் கொடுமைப்படுத்தினர். அதை எதிர்த்து காந்தியடிகள் நடத்திய அறப்போராட்டத்தில், பதினாறு வயது இளமங்கை வள்ளியம்மை கலந்து கொண்டு பலரும் வியக்கும் வண்ணம் போராடினார். போராட்டத்தின்போது வெள்ளையன் ஒருவன் காந்தியைச் சுடமுயன்றபோது, வள்ளியம்மை காந்தியின் முன்நின்று தன்னைச் சுடுமாறு வீரமுழக்கமிட்டார். காந்தியடிகளோடு அறப்போராட்டத்தில் கலந்துகொண்டு வள்ளியும் சிறை சென்றார். சிறையில் நடந்த கொடுமையால் நோய்வாய்ப்பட்டு 1914ஆம் ஆண்டு பிப்ரவரி 22ஆம் நாள் இவர் மரணமடைந்தார்.

### *வீரநெஞ்சன் வாஞ்சிநாதன்*

அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு மக்களைக் கொடுமைப்படுத்திய திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷ்துரையை மணியாச்சி ரயில் நிலையத்தில் துப்பாக்கியால் சுட்டுக்கொன்று, தன்னையும் மாய்த்துக் கொண்டவன் வீரவாஞ்சிநாதன்.

நாட்டுப்பற்றும், விடுதலை வேட்கையும் கொண்ட காரணத்தால் தாம் பார்த்துவந்த அரசுப் பணியையும் விட்டுவிட்டு, விடுதலைப்போரில் ஈடுபட்டு, வ.வே.சு ஐயரிடம் துப்பாக்கி சுடும் பயிற்சி பெற்றவர்.

அப்போது திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் பொறுப்பிலிருந்த ஆஷ்துரை, இந்திய மக்களுக்கு இழைத்த கொடுமைகள் கணக்கிலடங்காது. வ.உ.சி. மீது குற்றம் சுமத்தி நாற்பதாண்டு சிறை தண்டனை விதிக்கக் காரணமாக இருந்தவன் ஆஷ்துரை, ஆட்டுத்தோலைக் கையால் கழுவும் கடினமான வேலைகளையெல்லாம் செய்வதற்குச் சுப்பிரமணிய சிவாவுக்கு ஆணையிட்டவன்; அவருக்குப் பத்தாண்டு சிறைத்தண்டனை விதிக்கக் காரணமாக இருந்தவன்.

இதுபோன்ற பல கொடுமைகளைப் பொறுக்காத நிலையிலேதான் வாஞ்சிநாதன் துப்பாக்கியேந்தினான். "உயிர் எனக்கு வெல்லமல்ல" என்று சொல்லாமல் சொல்லி, விடுதலைக்காக வீரமரணமடைந்த "அஞ்சா நெஞ்சன் வாஞ்சிநாதன்" இந்திய சுதந்திர வரலாற்றின் வீரச்சின்னம்.

### *மூதறிஞர் இராஜாஜி*

"மூதறிஞர்" எனப் போற்றப்படும் ராஜாஜி, சேலத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி, பின்பு சேலம் நகராட்சித் தலைவரானார். தீண்டாமை ஒழிப்பு கலப்புத் திருமணம் போன்றவற்றில் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

காந்தியடிகள் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து, தடை உத்தரவை மீறி வெள்ளையர்களால் சிறையிலடைக்கப்பட்டார். 1930ஆம் ஆண்டு தமிழகத்தில் - வேதாரண்யத்தில் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி, நடத்தியதால் சிறையிலடைக்கப் பட்டார். தமிழகம், கர்நாடகம், கேரள, ஆந்திரா ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய சென்னை மகாணத்திற்கு 1937ல் முதலமைச்சரானார். 1939ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போரின் போது, அமைச்சரவையைக் கலைத்துவிட்டு



ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பிரச்சாரம் மேற்கொண்டதால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.

1947ஆம் ஆண்டு இந்தியா விடுதலை பெற்றதும் இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரல் ஆனார். பொதுவாழ்வில் நேர்மையைக் கடைப்பிடித்தவர். சிறந்த எழுத்தாளர். செயல் திறன் மிக்கவர். 'பாரத ரத்னா' விருது பெற்றவர்.

1972ம் ஆண்டு டிசம்பர் 25ம் நாள், ராஜாஜி தமது 94வது வயதில் இயற்கை எய்தினார்.

### *தேசியகவி பாரதியார்*

திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தில் பிறந்த பாரதியார், நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் பெற்று, எழுச்சியூட்டும் கவிதைகளை இயற்றி, தமிழகத்தை விழிப்புறச் செய்தமையால் "தேசிய கவி" என அழைக்கப்பெற்றார்.

ஒரு தாயின் வயிற்றில் பிறந்த நாமெல்லாம் சகோதர பாசத்தோடு வாழவேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

"சுதேசமித்திரன்", "இந்தியா" போன்ற நாளிதழ்களில் பணியாற்றி, கனல்தெறிக்கும் கட்டுரைகளும் எழுதி மக்களிடையே விடுதலை உணர்வை வளர்த்தார். விடுதலை இயக்கத்தில் தீவிரப் பங்குகொண்டு ஆங்கிலேயரின் அடக்குமுறைக்கு இலக்காகி, கடலூரில் கைதுசெய்யப்பட்டு 34 நாட்கள் சிறையிலிருந்தார்.

தமிழ் உயராதவரை தமிழர்களால் உயர்வடைய முடியாது, தமிழில் பிற மொழி கலப்பது தீது என்றெல்லாம் கரும்புநிகர் கவிதைகளில் அவர் கூறியிருப்பதிலிருந்தே அவருடைய தமிழ்ப்பற்றும், தமிழ்நாட்டுப்பற்றும் எத்தகையது என அறியலாம்.

1921ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11ஆம் நாள், தனது 39ஆம் வயதில் சென்னை மாநகரில் இயற்கை எய்தினார்.

### *தந்தை பெரியார்*

தமிழகத்தின் முற்போக்குச் சிந்தனையாளர்களின் முன்னோடியான தந்தை பெரியார். ஜாலியன்வாலாபாக் படுகொலையைக் கண்டித்து தாம் ஏற்றிருந்த ஈரோடு நகராட்சித் தலைவர் பதவியினையும் துறந்து, காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து சிறைபுகுந்த பெருமையாளர். கதரியக்கத்திலும் முன்நின்று பாடுபட்டவர். மதுவிலக்குக் கொள்கையை ஆதரித்து, தமக்கு உரிமையான தென்னந்தோப்பிலிருந்த 500க்கும் மேற்பட்ட தென்னைமரங்களை வெட்டித் தள்ளச் செய்தார்.



பெண்ணுரிமைக்குக் குரல் கொடுத்தார். மூட நம்பிக்கைகளைக் களைந்தார். கலப்புத் திருமணத்தை ஆதரித்தார். தமக்குச் சரியெனப்பட்டதை எதிர்ப்புகளுக்குக் கவலைப்படாமல் துணிவுடன் எடுத்துரைத்தார்.

மனிதர்கள் எல்லோரும் சமம் என்பதை வலியுறுத்த, கேரளத்தில் உள்ள வைக்கத்திற்குச் சென்று போராடி, "வைக்கம் வீரர்" என்று புகழ்பெற்றார். "வெண்தாடி வேந்தர் என்றும், பகுத்தறிவுச் சிங்கம்" எனவும் புகழ்பெற்ற பெரியார் 1973ஆம் ஆண்டு தமது 94ம் வயதில் இயற்கையெய்தினார்

## கொடிகாத்த குமரன்

நாட்டுப்பற்று மிக்கவர் திருப்பூர் குமரன். குடும்பச் சுமையும், பொறுப்பும் ஒருபக்கம் இருப்பினும் விடுதலை வேட்கையால் உந்தப்பட்டுத் திருப்பூரில் தொடங்கப்பெற்ற அறப்போராட்டத்தில் பங்கேற்று, பின்னர் போராட்டக் குழுவிற்கே தலைமை ஏற்றார்.

காந்தியடிகள் 1932ஆம் ஆண்டு சனவரி 4ஆம் நாள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, திருப்பூரில் பெற்றோரையும் இளம் மனைவியையும் பிரிந்து கையில் கதர்க்கொடி ஏந்தி, தொண்டர் படைக்குத், தலைமை தாங்கிச் சென்று வெள்ளையர்களுக்கு எதிராகக் கோஷம் போட்டுக்கொண்டு திருப்பூர் வீதிகளில் இருபக்கமும் திரண்ட மக்களின் நடுவில் சென்றார்.

தொண்டர்படையைக் கண்டதும் காவலர்கள் முறைப்படி எச்சரிக்கை ஏதும் செய்யாமல், எடுத்த எடுப்பிலேயே தடியால் தாக்கத் தொடங்கினர். குமரன் தலையில் பலத்த அடி விழுந்தது. தேசியக் கொடியைக் கையில் ஏந்தியவாறே அவர் மயங்கி கீழே விழுந்தார். எனினும், கொடி அவர் கரத்திலிருந்து நழுவவில்லை. இரத்தம் சொட்டச் சொட்டக் குமரனை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர்; பயனில்லை. 1932 ஆம் ஆண்டு சனவரி 11ஆம் நாள் கொடிகாத்த குமரன் உயிர்நீத்தார்.

நாட்டின் விடுதலை வரலாற்றிலிருந்து அந்த வீர இளைஞன் பெயர் என்றும் மறையாது.

## பொதுவுடைமைச் செம்மல் ஜீவானந்தம்

நாட்டுத் தொண்டுக்காகக் காந்தியடிகளையும், சமூகத் தொண்டிற்காகப் பெரியாரையும், வழிகாட்டிகளாகக் கொண்டு பொதுத் தொண்டாற்றியவர் பஜீவானந்தம்.

தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் கொண்டவர். பல்வேறு நூல்களைப் படித்து அறிந்தவர்; இலக்கியப் பேருரைகள் நிகழ்த்தியவர்.

சுதந்திரப்போரில் ஈடுபட்டு அந்நியர் ஆடைகளைப் புறக்கணிக்கும் போராட்டத்தில் இறங்கி, தான் கட்டியிருந்த அந்நிய ஆடைகளைக் கழற்றித் தீயில் எறிந்தவர். அன்று முதல் அவர் கதராடையையே உடுத்தத் தொடங்கினார்.

அவர் அன்னையார் இறந்தபோது அவருக்குக் கட்டுவதற்காகக் கதராடை கொடுக்காமல், மில் ஆடை கொடுத்தனர். அதனால் அவர் கொள்ளி வைக்கவே மறுத்துவிட்டார்.



1932ஆம் ஆண்டு சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டு, தடையுத்தரவை மீறியதற்காகக் கைதாகி சிறையில் அடைக்கப் பட்டார். பிற்காலத்தில் தீவிர கம்யூனிஸ்ட் ஆக வாழ்ந்த அவர், எளிமையின் சின்னமாகவும், நேர்மையின் உறைவிடமாகவும் திகழ்ந்தார்.

எல்லாக் கட்சியினரும் போற்றிப் பாராட்டும் வண்ணம் தூய வாழ்க்கை வாழ்ந்த ஒழுக்கசீலர் ஜீவா, 1963ஆம் ஆண்டு சனவரி 18ஆம் நாள் தமது 56 வயதில் இயற்கை எய்தினார்.

## பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர்

முத்துராமலிங்கத்தேவர் இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் என்ற சிற்றூரில் பிறந்த காரணத்தால், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் என்று அழைக்கப்பட்டார்.

இவர் பேச்சும், மூச்சும் விடுதலை முழக்கமாகவே இருந்தது. இவருடைய நாட்டுப்பற்று, துணிவு, அஞ்சாநெஞ்சத்தைக் கண்ட சத்திய மூர்த்தி, அந்நாளில் இவருக்கு "காங்கிரஸைக் காத்தான்" என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

தம் வாழ்நாளில் ஐந்தில் ஒரு பங்கைச் சிறையில் கழித்தவர் இவர். நம்நாடு விடுதலை அடைவதற்கு முன்பும், பின்பும் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் தொகுதிக்குச் சொல்லாமலேயே மக்களின் பெருவாரியான ஆதரவைப்பெற்று இருமுறை நாடாளு மன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆங்கில ஆட்சியில் மக்களை அடக்கி ஒடுக்கக் கொண்டுவரப்பட்ட "குற்றப் பரம்பரைச் சட்டம்" கைவிடப்படவேண்டும் என இறுதிவரை போராடி வெற்றிபெற்றார்.

தாம் கற்ற கல்வியும், பெற்ற செல்வமும் பிறர்க்குதவும் பொருட்டே என்ற பெரு நோக்குடன் வாழ்ந்தவர்.

வசதியற்ற ஏழைகட்குத் தம்முடைய நிலங்களைக் குறைவான குத்தகைக்குக் கொடுத்ததுடன், பலரிடம் குத்தகை வாங்காமல் வாழவைத்தார். நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்று கொண்ட இவரின் புகழ், சுதந்திர இந்தியாவில் சுடர்விடுவதாகும்.

- ஆர்.வி.எஸ்.மணியன்

### செய்ய வேண்டிய கடமை

*முதலில் பணியக் கற்றுக்*
*கொள்ளுங்கள்; பிறகு*
*எஜமானன் ஆவதற்கான*
*தகுதியைப்*
*படைத்தவர்களாவீர்கள்!*

*பொறாமையை நீக்குங்கள்;*
*இதுவரை நீங்கள்*
*செய்திருக்காத மகத்தான*
*காரியங்களைச் செய்வீர்கள்!*

- விவேகானந்தர்



1-7-98 இதழின் தொடர்ச்சி

24689.

# விமோசனம்

பேராசிரியர் மா.ரா. அரசு

மதுவிலக்குப் பிரசாரப் படங்களை ஒவ்வொன்றாக விரித்து விளக்கு வெளிச்சத்தில் ஒருவர் காட்ட, இன்னொருவர் அதைச் சுட்டிக்காட்டி விளக்கிப் பேசியது கிராமவாசிகளின் மனதில் நன்றாகப் பதிந்தது.

விமோசனத்தில் வெளியான படத் தொகுதிகளில் ஒரு குறிப்பிட்ட தொகுதியைக் கிராம வாசிகள் - முக்கியமாகப் பெண்கள் - மிகவும் ரசித்துச் சிரிப்பார்கள். அந்தப் படத்தொகுதியில் சட்டைபோட்ட மனிதன் ஒருவன் ஒரு சாராயப் புட்டியை முதலில் ஒரு குதிரையிடம் நீட்டுகிறான். குதிரை குடிக்க மாட்டேன் என்கிறது. பிறகு மாட்டிடம் போகிறான். மாடும் வேண்டாம் என்கிறது. பிறகு நாய் குடிக்க மறுக்கிறது. பன்றிகூட வேண்டாம் என்று மறுதளிக்கிறது. கடைசியில் அந்தச் சட்டைக்காரன் ஒரு கிராமத்துக் குடியானவனிடம் கொண்டுபோய் புட்டியை நீட்டுகிறான். அவன் அதை வாங்கிக் குடிக்கிறான்.

"நாயும், பன்றியும் கூட விஷம் என்று குடிக்க மறுக்கும் மதுவை மனிதன் குடிக்கிறான், பார்த்தீர்களா? என்று படத்தைச் சுட்டிக் காட்டிப் பிரசங்கி சொன்னதும் கூட்டத்தில் உள்ள ஸ்திரீகள் எல்லாரும் சிரிப்பார்கள். ஆண்களில் சிலர் சிரிப்பார்கள். இன்னும் சிலர் "ஆமாம், அது வாஸ்தவம்தானே?" என்பார்கள்.

இப்படியெல்லாம் கிராமவாசிகளின் மனதில் படும்படி பிரசாரம் செய்யும் முறை ராஜாஜியின் மனதிலேதான் முதன் முதலாக உதித்தது. மேற்படி மதுவிலக்குப் படங்கள் பின்னால் அச்சிடப்பட்டு, தொகுதி தொகுதியாகப் பல இடங்களுக்குப் பிரசாரங்களுக்காக அனுப்பப்பட்டன.

### உப்புப் போரில் கருத்துப் படங்கள்

ராஜாஜியின் தலைமையில் 13-4-1930ல் திருச்சியிலிருந்து திருமறைக்காட்டிற்கு (வேதாரண்யம்) உப்பு எடுக்கப் புறப்பட்ட அறப்போர்க்குழு வழிநடைப் பயணத்தில் மதுவிலக்குப் பணியிலும் ஈடுபட்டது.

ஸ்ரீமான் ஆச்சாரியார் அவர்களுக்குப் பிராணன் போலுள்ள மதுவிலக்குப் பிரசாரம் எல்லாவற்றிலும் முதன்மையாகச் செய்யப் பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் போய்த் தங்கியவுடன் காந்தி ஆசிரமத்தார் வெளியிட் டிருக்கும் மதுவிலக்குப் படங்களை வரிசையாகக் கட்டித் தொங்க விடுவது வழக்கம். படங்களை கட்டினவுடனே ஜனங்கள் கூடி அதிக ஆவலுடன் அவைகளை ஒன்றன்பின் ஒன்றாய்க் கவனித்துப் பார்ப்பார்கள். அவர்களுக்கு அப்படங்களை விளக்கி மதுபானத் தீமைகளைத் தொண்டர்கள் எடுத்துச் சொல்வார்கள்.

கிராமத்தில் எல்லோரும் இந்தப் பிரசங்கங்களைக் கேட்கவும் மதுவிலக்குப் படங்களைப் பார்க்கவும் மிக்க ஆவலுடனும் உற்சாகத்துடனும் காத்திருந்தார்கள். முக்கியமாக ஆதிதிராவிடச் சகோதரிகளும், குழந்தைகளும் திரள்திரளாகச் சித்திரை மாதத்து வெயிலையும் கவனியாது இக் கூட்டங்களுக்கு வந்திருந்தார்கள். பிரசங்கத்தின் முடிவில் அனேகமாய் எல்லா இடங்களிலும் ஒருசிலராவது, 'இன்று முதல் கள், சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களைத் தொடுவதில்லை' என்று ஆண்டவன் சாட்சியாகச் சத்தியம் செய்து கொடுத்து வந்தனர்".

குடித்துக் கெட்டவன் குடும்பத்தின் அவலட்சணமான காட்சியும், யோக்கியமாய் இருந்த குடும்பத்தின் சந்தோஷமும் தேஜசும் விளக்கிக் காட்டும் படங்களென்ன? மதுபான வகைகள் அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கணக்கைத் தெரிவிக்கும் படங்களென்ன! இன்னும் மதுவிலக்கு சம்பந்தமாகப் பொதுஜனங்கள் மனத்தில் என்னென்ன விஷயங்கள் பதிய வேண்டுமோ அவற்றைச் சுலபமாக மனத்தில் பதியும்படி புகட்டக் கூடிய முறையில் படங்கள் வரையப் பட்டிருந்தன.

தலைவர் ராஜாஜி படங்கள் கட்டியிருந்த இடத்திற்கு வந்து ஒவ்வொரு படத்திலும் உள்ள தாத்பரியங்களை எடுத்து விளக்கிவந்தார்.

### மதுவிலக்குப் படங்கள்

விமோசனத்தில் வெளியிடப்பட்ட கருத்துப்படங்களின் நடைமுறைப் பயன்பாடு இன்னொரு விதத்திலும் அமைந்தது. அந்தக் கருத்துப் படங்கள் விற்பனைக்கு உரியனவாகவும் ஆக்கப்பட்டன; மதுவிலக்குப் பிரசாரத்திற்கு அவை ஊன்றுகோலாயின.

கருத்துப் படங்கள் (மதுவிலக்குப் படங்கள்) பற்றி விமோசனத்தில் (இதழ் 8, இதழின் பின்அட்டை வந்த அறிவிப்பு அறிய வேண்டிய ஒன்றாகும்).

கல்வியறிவு அதிகமில்லாத நாட்டில் எவ்விதப் பிரசாரமும் செய்வது மிகவும் கஷ்டமான காரியம். புத்தகங்களும், துண்டுப் பிரசுரங்களும் சொற்ப அளவேதான் நமது நாட்டில் பயன்படக்கூடும். ஆனால், சித்திரப் படங்கள் காட்டிப் பிரசாரம் செய்வதில் நல்ல பயன் உண்டாவது அனுபவத்தில் தெரிய வந்திருக்கிறது.

விளக்கப் படங்கள் காட்டிப் பிரசாரம் சில இடங்களில் நடைபெறுகின்றது. மங்கலாய்த் தோன்றும் இவ்விளக்குப் படங்கள் கிராமவாசிகளுக்குத் தெளிவாய் விளங்குவதில்லை. கருவிகள் நடுவில் கெட்டுப் போனாலோ எல்லாம் நிறுத்த வேண்டியதுதான்.

நமது கிராமங்களில் நல்ல பயன்தரக்கூடிய முறை, பெரிய படங்கள் காட்டிப் பிரசாரம் செய்வதேயாகும். இதற்கு உபயோகமான மதுவிலக்கு வர்ணப்படங்கள் இப்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. சீக்கிரத்தில் அவை விற்பனைக்குத் தயாராகும். சுமார் 30 படங்கள் கொண்ட ஒரு தொகுதியின் விலை ரூ.15-0-0. படங்களைத் துணியில் ஒட்டி, அவைகளை மாட்டுவதற்குரிய சட்டம், கம்பி முதலியவைகளுடன் சேர்ந்து வேண்டுமானால் விலை ரூ.30-0-0. விலாசம் காந்தி ஆசிரமம், திருச்செங்கோடு.

விமோசனம் இதழ் வெளிவந்து, இன்று ஏறக்குறைய எழுபது ஆண்டுகள் ஆகின்றன. இன்றளவும் மதுவிலக்குப் பிரசாரம் என்பது தவிர்க்க இயலாததொரு சமுதாயத் தேவையாகவே இருந்து வருகிறது. கடந்த காலத்தில் ராஜாஜியின் சிந்தனையில் முகிழ்த்து விமோசனத்தில் மலர்ந்த கருத்துப் படங்கள் நிகழ்காலப் பயன்பாட்டிற்கும் உரியனவாகி விற்பனைக்குக் கிடைக்கின்றன.

எங்கெல்லாம், எப்போதெல்லாம் 'குடி' சமுதாயத்தில் ஊடுருவுகிறதோ அங்கெல்லாம், அப்போதெல்லாம் விமோசனக் கருத்துப் படங்கள் உயிர்த்தெழும் என்பதையே அவற்றின் இன்றைய விற்பனை உணர்த்துகிறது .

மதுவின் பிடியில் சிக்குண்டு சிதைந்து கொண்டிருந்த ஏழை மக்களின் வாழ்க்கையை மீட்க, ஒல்லும் வகையெல்லாம் செயல்பட்ட ராஜாஜி, இதழின் ஒரு பகுதியாக விளங்கும் கருத்துப் படங்களைப் பல புதிய கோணங்களில் அணுகியுள்ளமை வியப்பையும் மலைப்பையும் ஏற்படுத்துகிறது.

# வி மோ ச ன ம்

| தொகுதி 1 | சுக்ல ஹு ஆவணி மீ | பகுதி 1 |
|---|---|---|



ஜய பேரிகை கொட்டடா—கொட்டடா
ஜய பேரிகை கொட்டடா!
காந்தியின் ஒளியிடைக் குளித்தோம்—கள்ளின்
மாயத்தைப் பழித்துக் கண் விழித்தோம்!
தீர்ந்தது தரித்திரம் தொலைந்தது துயரம்
தீய கள் அரக்கனை மடித்தோம்! (ஜய)

[பாரதியாரின் இசை]

விமோசனம் இதழை நடத்திக் கொண்டிருந்தபோதே சிறுசிறு வெளியீடுகளைத் தயாரித்து அவற்றை விற்பனைக்கு உரியனவாக்கினார். "பார்த்தாயா தம்பி!" ''குடிப்பது கள்ளல்ல!' என்னும் தலைப்புகளில் அமைந்த இரு வெளியீடுகள் இங்குக் குறிக்கத்தக்கன. இரண்டுமே விமோசனத்தில் வெளிவந்த இரு கருத்துப் படங்களின் தலைப்புகள் (இதழ் ஒன்று, ப.27; இதழ் மூன்று ப.92).

"சித்திரப் படங்கள் உள்ள மேற்படி துண்டுப் பிரசுரங்கள் ஓரளவிற்குட்பட்டு மதுவிலக்குத் தொண்டர்களுக்கு இலவசமாய் அனுப்பப் பெறும்" என்னும் அறிவிப்பில் உள்ள 'சித்திரப் படங்கள் உள்ள மேற்படி துண்டுப் பிரசுரங்கள்' என்னும் பகுதி கருதத்தக்கது. இந்த அறிவிப்பு மட்டுமே இதழ்கள் எட்டு, ஒன்பது, பத்து ஆகியவற்றில் மட்டுமே இடம் பெற்றுள்ளது.

ஒன்று முதல் ஏழு வரையிலான இதழ்களில் வெளிவந்த கருத்துப் படங்களின் தொகுப்பாகவே இவ்விரு வெளியீடுகளும் அமைந்திருக்க வேண்டும். இந்தக் கணிப்புப் பொருந்துமாயின், இதழில் வெளி வந்த கருத்துப் படங்களைத் தொகுத்து நூலாக வெளியிட்ட முதல் இதழாளர் (தமிழ் இதழ்களைப் பொறுத்த வரையில்) என்ற பெருமைக்கு உரியவராவார் ராஜாஜி.

கருத்துப்படம் என்பது ராஜாஜியைப் பொறுத்தவரையில் ஒரு தொடர் சிந்தனையாகவே இருந்து வந்தது. விமோசனம் நின்ற பிறகும், கால ஓட்டத்தில் பல்வேறு சூழல்களில் பல்வேறு பணிப்பொறுப்புகளில் இருந்தபோதும் மதுவிலக்கு என்பது அவர் நினைவில் நிலைத்திருந்தது. மதுவிலக்குத் தொடர்பான கட்டுரைகளும் நூல்களும் தமிழிலும், ஆங்கிலத்திலுமாக அவரால் எழுதப்பட்டு வந்தன. வாய்ப்பு அமைந்தபோதெல்லாம் விமோசனம் வெளியிட்ட கருத்துப் படங்களை அவற்றில் பயன்படுத்திக் கொண்டார். இதழ் மறைந்தும், இதழ் வழி வந்த கருத்துப் படங்கள் அழியாத தன்மை பெற்றன.



'கள் ஒழிக' என்னும் நூலில், 'மதுவிலக்கு' என்னும் கட்டுரையின் தொடக்கத்தில் விமோசனத்தின் அட்டை ஓவியம் இடம் பெற்றுள்ளது. (ப.1) 'பொருள் நஷ்டம்' என்னும் கட்டுரையில் 'இது சீசா, அல்ல; மனைவி மக்களைச் சாகடிக்கும் யமன்' என்ற கருத்துப் படம் இடம் பெற்றுள்ளது. (பக்.15) இது விமோசனம் இரண்டாவது இதழில் (ப.41) உள்ளது. 'மிதக் குடிப்பேச்சு' - இந்தக் கட்டுரையில், இதழ் இரண்டில் (ப.64) 'மிதமாகக் குடிப்பவன் கதி' என்னும் தலைப்போடு அமைந்த கருத்துப் படம் பயன்படுத்தப்பட்டுள்ளது (ப.33). விமோசனம் இதழ் மூன்றில் வந்துள்ள 'வீட்டுக்குப் புட்டி வருவதற்கு முன்', 'புட்டி வந்த பின்' என்ற கருத்துப் படம் (ப.108), அபினி, கஞ்சா என்ற கட்டுரையில் எடுத்தாளப்பட்டுள்ளது. (ப.45). 'திருட்டுக் கள்ளும் பகிரங்கக் கள்ளும்' என்னும் கருத்துப்படம் (இதழ் நான்கு, ப.141), 'விதண்டா வாதங்கள்' கட்டுரையில் (ப.60) சேர்க்கப்பட்டுள்ளது.

'PROHIBITION' - மதுவிலக்குப் பற்றிய ஆங்கில நூல், ராஜாஜி எழுதியது. இதன் அட்டைப் படம், விமோசனத்தின் கருத்துப் படமாகும். (இதழ் மூன்று ப.81). மதுப்புட்டியை நோக்கி ஓடும் குடும்பத்தலைவனை அவன் மனைவியும் குழந்தைகளும் பின்னோக்கி இழுப்பதாக அமைந்த கருத்துப் படம் அது.

விமோசனத்தின் கருத்துப் படங்கள் இதழின் ஒரு பகுதியாக அமைந்து படிப்பவர் கவனத்தை ஈர்த்தன; அளவில் பெரியனவாக, வரையப்பட்டு கிராமம் கிராமமாக எடுத்துச் செல்லப்பட்டு மக்களுக்கு நேரடியாகக் குடியின் தீமையை விளக்குவதற்குப் பயன்பட்டுச் சிறந்தன; நாடு தழுவிய நிலையில் மதுவிலக்கு ஆர்வலர்களுக்குப் பயன்படும் நோக்கில் விற்பனைக்கு உரியனவாக்கப்பட்டு கருத்துப் படங்களை இவ்வாறெல்லாம் கூடப் பயன்படுத்த முடியும் என்று உலகிற்கு உணர்த்தி நின்றன; விமோசனம் வெறும் இதழாக இல்லாமல் இயக்கமாகச் செயல்படுவதற்கு முதன்மைக் காரணமாக அமைந்தன; அதனால் வரலாறு படைத்தன; கருத்துப்பட வரலாற்றில் தனித்துவத்தோடு நிலைத்தன.

## சிறுகதைகள்

விமோசனத்தின் பத்து இதழ்களிலும் மொத்தம் இருபத்தியொரு கதைகள் வெளிவந்துள்ளன. இவற்றில் ஆறு கதைகளில் எழுதியவர் பெயர் இல்லை என்றாலும், ஆறில் மூன்று ராஜாஜி எழுதியவை என்று வேறு புறச்சான்றுகளின் மூலம் அறிய முடிகின்றது. எஞ்சிய பதினைந்து கதைகளை ஒன்பது பேர் எழுதியுள்ளனர். இவர்களில் கல்கிரா.கிருஷ்ண மூர்த்தியும், திஜரவும் குறிப்பிடத்தக்கவர்கள். கல்கி ஆறு கதைகளும், தி.ஜ.ர. ஒன்றும் எழுதியுள்ளனர்.

விமோசனம் வெளிவந்த காலம் இந்திய விடுதலைப் போராட்டத்திலும் தமிழ்ச் சிறுகதை வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க காலகட்டமாகும். இதில் சிறுகதை படைத்தவர்களில் ராஜாஜி, கல்கி, தி.ஜ.ர. மூவரும் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் தடம் பதித்தவர்கள். ஏறக்குறைய சமகாலத்தில் எழுதத் தொடங்கியவர்கள்; பின்னாட்களில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்கள்.

இருபதுகளில் எழுதத் தொடங்கியவர்கள் இவர்கள். அது தமிழ்ச்சிறுகதையின் ஆரம்ப காலம். வ.வே.சு.ஐயர், மாதவையா, பாரதியார் போன்றவர்கள் தமிழுக்குப் புதிய இலக்கிய வடிவமாகிய சிறுகதையை அறிமுகம் செய்த காலம். சிறுகதை இலக்கியவடிவம் முழுமையாகப் புரிந்து கொள்ளப்படாத தொடக்க காலத்திலேயே சிறுகதை எழுதியவர்கள் இவர்கள் என்பது நினைவில் இருத்த வேண்டிய செய்தியாகும். அந்தக் காலகட்டத்து உணர்வோடு பார்க்கப்பட வேண்டியவை இவர்கள் விமோசனத்தில் எழுதிய சிறுகதைகள்.

பத்து இதழ்களாக நானூறு பக்கங்களில் வெளிவந்த விமோசனத்தில் சிறுகதைக்கு ஒதுக்கப்பட்ட பக்கங்கள் 106 (102+4; சிறுகதை 102, புத்தஜாதகக் கதை 4) பத்து ஆசிரியர்களின் படைப்புகளாக 18 கதைகள் இடம் பெற்றுள்ளன. 3 கதைகளில் படைப்பாளர் இல்லை. புத்த ஜாதகக் கதை ஒன்றும் வெளியாகியுள்ளது. விமோசனம் இதழின் அடிப்படை நோக்கமான மதுவிலக்கின் பின்னணியிலேயே கதைகள் அனைத்தும் உருப்பெற்றுள்ளன.

விமோசனத்தில் வெளிவந்துள்ள இருபத்தியொரு கதைகளில் நல்ல கதைகள் பல உண்டு. அவற்றுள்ளும் 'ஜெயராமன் பள்ளிக்கூடம் போன கதை' (ராஜாஜி), 'தெய்வயானை' (கல்கி) 'குப்பனின் பணி' (தி.ஜ.ரா.) ஆகிய மூன்றும் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் இடம்பெற்றவை. கதைப் பொருளாலும் உத்திகளாலும் காலம் கடந்து நிற்பவை.இந்த மூன்று கதைகளையும் வெளியிட்டதன் மூலம் விமோசனம் இதழ், சிறுகதை இலக்கியத்திற்கும் தொண்டாற்றியுள்ளது என்று பெருமை கொள்ளலாம்.

## கவிதைகள்

இந்த நூற்றாண்டின் எல்லா இலக்கிய வகைகளிலும் வடிவங்களிலும் ஏதாவது ஒரு வகையில் அறத்திறன் - நீதி போதனையின் ஆட்சியை உணரமுடியும். குடியால் நலிந்த குடும்பங்களுக்கு விமோசனம் உண்டு என்ற இனிய செய்தியை ஒலிக்கப் புறப்பட்ட விமோசனம் இதழும் இதற்கு விதிவிலக்கு அன்று. கவிதைகள் மூலமாகவும் குடிவேண்டாம் என்னும் நீதியை உணர்த்தும் பணியைச் செய்வதில் முனைப்பாக ஈடுபட்டது விமோசனம்.

## நாடகங்கள்

விமோசனத்தில் ஐந்து நாடகங்கள் வெளிவந்துள்ளன. ராஜாஜி ஒன்றும் கல்கி ஒன்றும், க.சந்தானம் இரண்டுமாக எழுதியுள்ளனர். ஒரு நாடகத்தில் எழுதியவர் பெயர் இல்லை.

ராஜாஜியும், கல்கி, சந்தானம் போன்றவர்களும் காந்தி ஆசிரமத்தில் வாழ்ந்த போது, ஆசிரமம் அமைந்திருந்த 'புதுப்பாளைய'த்திலும் அதை ஒட்டிய கிராமப் பகுதிகளிலும் வாழ்ந்த கல்வி அறிவு அற்ற பாமரமக்களின் அல்லல்கள் நிறைந்த வாழ்க்கையை நேரில் கண்டவர்கள்; ஆசிரமத்திலும் அதற்கு வெளியேயும் வாழ்ந்த மக்களோடு கலந்து பழகியவர்கள்; உள்ளும் புறமுமாக அவர்களை உணர்ந்தவர்கள்.

அந்த ஏழை எளிய அப்பாவி மக்களின் வாழ்க்கையை அலைக்கழித்துச் கொண்டிருந்த குடியின் பிடியிலிருந்து மீண்டால் அன்றி அவர்கள் வாழ்க்கையில் இன்பம் மலராது என்ற உண்மையை நன்கு அறிந்தவர்கள்; இவர்கள் கள், சாராயம் தொடர்பான தொழில ரீதியான தகவல்கள் பலவற்றைத் தெரிந்து வைத்திருந்தனர். இவர்களுடைய இந்த அனுபவங்களும் அனுதாபங்களுமே விமோசனத்தில் பல்வேறு கலை வடிவங்களாக உருவெடுத்தன. கதைகளிலும், கவிதைகளிலும், நாடகங்களிலும் இவர்கள் கருத்து கள் வெளிப்பட்டன. கருத்துக்கே முதலிடம் தந்து எழுதப்பட்டவை



அடிமைத் தனத்தை ஒழிக்க வேண்டுமென்றால் - மக்களுடைய மனத்திலும், உடம்பிலும், குடி கொண்டுள்ள சோம்பலைப் போக்கி, அவர்களுடைய புத்தி நுட்பத்தையும், ஆக்கத் திறனையும் தட்டியெழுப்ப வேண்டும்!

- அண்ணல் காந்தியடிகள்

என்றாலும், எழுதியவர்களின் ஆற்றலால் அவற்றில் சில கலைநயத்தோடும் அமைந்தன; இலக்கிய வரலாற்றிலும் இடம்பெற்றன.

**தலையங்கம்**

தலையங்கம் என்பது செய்தி ஒன்றினைப் பற்றி எழுதப்படும் கருத்துக் கோவை; வாசகர்களுக்கு அதுபற்றித் தெளிவான நோக்கு ஏற்படும்படி எழுதப்படுவது; அது உண்மைகளை ஒட்டி ஆசிரியரின் கருத்தைக் கொண்டு அமைவது; ஆசிரியரின் கருத்து சில நாட்களிலோ அல்லது சிறிது காலம் கழித்தோ நடைமுறைக்கு உகந்ததாக இருப்பதை வாசகர்கள் உணரச்செய்வது; நாட்டினை ஆள்வோர், அல்லது நிறுவனங்களோடு தொடர்புடையவர் பத்திரிகையின் கருத்து என்ன என்று ஆர்வத்தோடும் கவலையோடும் எதிர்பார்க்கும் பகுதி.

விமோசனத்தின் பத்து இதழ்களிலும், தலையங்கம் இடம் பெற்றுள்ளது. மதுவிலக்கோடு தொடர்புடைய செய்திகள் தலையங்கப் பொருளாயின. 'மதுவிலக்கு ஏன்?' என்ற முதல் தலையங்கம் மதுவிலக்கின் தேவையை மிகத்தெளிவாக எடுத்துரைக்கின்றது.

ஆகையால், பூரண மதுவிலக்குக் சட்டம் அமெரிக்காவில் போல் நம்முடைய நாட்டிலும் நிறைவேற வேண்டுமென்று விடா முயற்சியுடன் பெருங்கிளர்ச்சி செய்ய வேண்டும். மதுவை ஒழிக்க விடாமுயற்சியும் பெருங்கிளர்ச்சியும் தேவை என்று வற்புறுத்துகின்றது தலையங்கம்.

தொடர்ந்து போராடி மதுவை எப்படியும் ஒழித்தேதீர வேண்டும் என்று நீண்ட உறக்கத்தில் - மது உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தவர்களையும், அதைப் பற்றிய கவலை இல்லாமல் ஒதுங்கிக் கிடந்தவர்களையும் தட்டியெழுப்பும் வகையில் அமைந்துள்ள இத்தலையங்கம் ராஜாஜியின் தீவிரத்தைப் புலப்படுத்தும்.

ஏறக்குறைய, எல்லாத் தலையங் கங்களுமே இதே தீவிரத் தன்மையோடும் நியாய உணர்வோடும் எழுதப்பட்டனவாகவே உள்ளன. அவற்றின் தலைப்புகள் சுட்டத் தக்கன; 'புட்டிச் சரக்கு', 'தாமதிக்கக்கூடாது', 'ஹிம்சை', 'அபிப்பிராயம் கேட்டல்', 'ஆத்ம நஷ்டம்', 'தபாலைத் தடுத்தால் துக்கம் தீருமா?' 'போர் துவக்கம்', 'தக்க சமயம்', 'நமது ஆசிரியர்'. இந்தத் தலைப்புகளே அவற்றின் உள்ளடக்கத்தை விளக்கும் தன்மையன. தலையங்கங்களாலும், விமோசனம், மது விலக்கு என்னும் தன்னுடைய நோக்கத்தை நிமிர்ந்து நின்று பறை சாற்றியது. இருபத்தியொரு பக்கங்களில் தலையங்கச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.



**ச**முதாயத்துறைக்குப் பாடுபடுவதுதான் உண்மையான அரசியல் தொண்டாகும்.

ஒழுக்கம் என்பது என்ன ? மற்றவர்களிடமிருந்து நாம் எதை எதிர்பார்க்கிறோமோ, மற்றவர் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறோமோ, மற்றவர் நம்மிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று நினைக்கிறோமோ, அப்படியே நாம் மற்றவரிடத்தில் நடந்து கொள்ளவேண்டும். அதுதான் ஒழுக்கம்.

- தந்தை பெரியார்

**கடற்கரைக் கிளிஞ்சல்கள்**

இன்றைய இதழ்களில் 'துணுக்கு', 'பெட்டிச் செய்தி', 'செய்திக் குறிப்புகள்' என்ற தலைப்புகளில் வரும் செய்திகளைப் போன்ற பல்வேறு விவரங்களை ராஜாஜி 'கடற்கரை கிளிஞ்சல்' என்ற அழகிய தலைப்பில் தொகுத்து வழங்கியுள்ளார். பத்து இதழ்களிலும் இந்தப் பகுதி இடம் பெற்றுள்ளது. எல்லா இதழ்களிலும் (முதல் இதழ் நீங்கலாக) இது கடைசி சில பக்கங்களிலேயே தரப்பட்டுள்ளது. மூன்று பக்கங்களிலிருந்து (இதழ் பத்து) அறு பக்கங்கள் வரையில் (இதழ்கள் ஒன்று, இரண்டு) இந்தப் பகுதிக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

பத்து இதழ்களிலுமாக மொத்தம் நாற்பத்தேழு பக்கங்களைப் பெற்றுள்ள இந்தப் பகுதி காலத்திற்கு ஏற்ற, நோக்கத்திற்கு ஏற்ற, நெஞ்சையும் அறிவையும் ஒருங்கே தொட்டுத் துலங்கவைக்கும் கனமான செய்திகளைத் தாங்கி நிற்கிறது.

இப்பகுதியில் இடம் பெற்றுள்ள செய்திகளின் தகுதி நோக்கியும் தேவை கருதியும் ஏ.கே.செட்டியார் தம்முடைய குமரி மலர் இதழ்களில் சிலவற்றைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

**மதுவிலக்கு வினா ? விடை !**

இதுவும் விமோசனத்தின் குறிப்பிடத் தக்க பகுதிகளில் ஒன்றாகும். மதுவிலக்குத் தொடர்பான வினாக்கள் எழுப்பப்பட்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. மிகவும் பயனுள்ள கருத்துக்கள்; எளிமையான சொற்றொடர்கள்; படிப்படியாகச் செய்திகளைப் புரியவைக்கும் பாங்கு; தர்க்க ரீதியான வெளிப்பாட்டுத் திறன் - இவை மதுவிலக்கு வினா விடையின் சிறப்பியல்புகள்.

இப்பகுதி எல்லா இதழ்களிலும் இடம்பெறவில்லை. ஐந்து இதழ்களில் (இதழ்கள் ஒன்று, நான்கு,ஐந்து,ஏழு,பத்து) மட்டுமே அமைந்துள்ளது. இருபத்து மூன்று பக்கங்களில் அமைந்துள்ள மதுவிலக்கு வினாவிடையின் செய்திகள் படித்து மகிழத்தக்கன.

**அட்டை**

முன்பக்க அட்டையின் மேல் பகுதியில் சாராயப் பீபாவும், கள் பானையும், சீமைச்சரக்கு அடங்கிய புட்டியும் பொதுமக்களால் விரட்டப்படுவதாகப் படம் ஒன்று வரையப்பட்டுள்ளது. ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் இடம் பெற்றுள்ள அப்படத்தில் ஆண்கள் கால்களால் எட்டி உதைக்கிறார்கள். ஒருவர் காலிலிருந்து செருப்பு ஒன்று பறந்து சென்று சாராயப் புட்டியைத் தாக்குகின்றது. ஒரு பெண்ணின் கையில் துடைப்பமும், இன்னொரு பெண்ணின் கையில் முறமும் உள்ளன. சிறுவர்களில் ஒருவன் காலால் எத்துகிறான்; ஒருவன் கையில் கோல் இருக்கின்றது. கதிரவன் வருகையும் காட்டப்பட்டுள்ளது.

அதன் கீழ் விமோசனம் என்று பெரிய எழுத்துக்களில் இதழின் பெயர் தரப்பட்டுள்ளது. அதை அடுத்து 'ஒரு மாதப் பத்திரிகை' என்னும் குறிப்பும், ஆசிரியர் பெயரும் உள்ளன. அதன்கீழ் வெளிவந்த ஆண்டும் மாதமும் (தமிழ் ஆண்டு, தமிழ் மாதம்) தரப்பட்டுள்ளன. அதனை அடுத்து இதழின் முகவரி அமைந்துள்ளது. இறுதிப் பகுதியாகச் சந்தா விவரம் தரப்பட்டுள்ளது.

முன் அட்டையின் உட்புறம் பொருளடக்கம் அமைந்துள்ளது. விமோசனம் இதழைப் பெறுவதற்கான வழிமுறைகள் அதன்கீழே தரப்பட்டுள்ளன.

பின்புற அட்டையின் உள்ளேயும் வெளியேயும் பெரும்பாலும் விளம்பரங்கள் - மதுவிலக்கு விளம்பரங்கள் இடம் பெற்றுள்ளன. 'மதுவிலக்குப் பிரசுரங்கள்', 'மதுவிலக்குப் பற்றிய படங்கள்'. விளம்பரங்கள் வந்துள்ளன. ஒரே வழி கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

மதுவின் வயப்பட்டு வாழ்வென்னும் போர்க்களத்தில் தோற்று நின்ற ஏழைமக்களின் புண்களுக்கு மருந்திட்டு ஆற்றும் பணியைச் செய்வதற்காகத் தொடங்கப்பட்ட இதழ் விமோசனம். மக்களைத் துயரத்தின் பிடியினின்றும் மீட்பதையே நோக்கமாகக் கொண்டு செயலாற்றிய விதத்தில் தனிச்சிறப்பு பெறுவது விமோசனம்.



# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை:**

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம் ஆக்கனூர் அஞ்சல், இடைச்செருவாய் கிராமம் எங்கள் ஊராகும். எங்கள் ஊர் மக்கள் மானாவாரி புஞ்சை நிலங்களை நம்பிதான் விவசாயம் செய்து வருகிறோம். எங்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை என்னவென்றால் "வெலிங்டன்" நீர்த் தேக்கத்தில்தான். வெளிங்டன் நீர்த் தேக்கத்தில் இப்பொழுது சுமார் 30 அடி நீர் பிடித்து வைத்துள்ளார்கள். இதனால் எங்களுக்குச் சொந்தமான "பட்டா" நிலங்களில் உள்ள அனைத்துப் பயிர்களும் நீரினால் மூழ்கி விட்டது. இது சுமார் 100 ஏக்கர் நிலங்களாகும்.

வெலிங்டன் ஏரி பல வருடங்களாகத் தூர் எடுக்காத காரணத்தால் ஏரியின் ஆழம் தூர்ந்துவிட்டது. இதனால் ஏரியில் தேங்கி நிற்க வேண்டிய நீர் எங்கும் பரவிவரும்போது எங்களுக்குச் சொந்தமான பட்டா நிலங்களில் உள்ள பயிர்கள் நீரினால் மூழ்கிவிடுகிறது. எங்களுடைய பட்டா விளைநிலம் நல்ல தரமான நிலங்களாகும். நல்ல நிலம் இருந்தும் எங்களால் விவசாயம் செய்ய இயலவில்லை. செய்த பயிர்களும் கைகூடி வரமுடியவில்லை.

இந்தப் பிரச்சினை எங்கள் ஊருக்கு மட்டும் இல்லை. "வெலிங்டன்" ஏரியைச் சுற்றி உள்ள கிராமங்களுக்கும் இதே நிலைதான். இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*- பொதுமக்கள், இடைச்செருவாய் கிராமம்,*
*கடலூரர் மாவட்டம்.*

**தீர்வு:**

*இடைச்செருவாய் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் மனு தொடர்பாக, திட்டக்குடி வட்டம் வெலிங்டன் ஏரியின் தண்ணீர் முழு நீர் மட்டம் 29.72 அடியாகும். முழு நீர் மட்டம் இருக்கும்போது அதன் கொள்ளளவு 25.80 அடியாகும். இது வெலிங்டன் ஏரியின் நீர்பிடிப்புப் பகுதியிலேதான் உள்ளது. 4-12-97ல் முழு நீர் மட்டம் வந்த நிலையில் 5-12-97ல் பாசனத்திற்கு மதகு மூலம் கரையின் தன்மை கருதி வடிகால் வழியாகவும் தண்ணீர் வெளியேற்றப்பட்டது. 11-12-97ல் தண்ணீர் 25 அடியாகக் குறைக்கப்பட்டது. இதனால் பட்டா நிலங்களை எந்த வகையிலும் பாதிக்காது. ஏரியினை ஆக்கிரமிப்பு செய்து பயிர் வைத்திருந்தால் மட்டுமே பாதிக்க வாய்ப்பு உள்ளது என்று பொதுப்பணித்துறையினரால் தெரிவிக்கப் பட்டுள்ளது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*- சி.பாவாடைசாமி,*
*வட்டாட்சியர்,*
*திட்டக்குடி*

**பிரச்சினை:**

மயிலாடுதுறையில் பெரியார் அரசு பொது மருத்துவமனை பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ளது. எனினும் மயிலாடுதுறை கும்பகோணம் மெயின் ரோட்டிலிருந்து மருத்துவமனைக்குச் செல்லும் சாலை குண்டும் குழியுமாக உள்ளது. மழைக்காலங்களில் எப்போதும் நீர் தேங்கி மருத்துவமனை வளாகமே அசுத்தமாகிவிடுகிறது. அவசரச் சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் இந்த மோசமான சாலைகளால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். மேலும், மருத்துவமனையைச் சுற்றியுள்ள பகுதிகள் குப்பை மேடாகக் காட்சியளிக்கின்றன. குப்பைகளை அகற்றி, சாலையைச் சீர்படுத்தி நோயாளிகளுக்கு உதவிட தாங்கள் தக்க நடவடிக்கை எடுக்கப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

*- பொதுமக்கள் சார்பாக,*
*ஜெ.ரஜினி ராம்கி,*
*மயிலாடுதுறை.*

**தீர்வு:**

*மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவமனைச் சாலை தற்போது தேசிய நெடுஞ்சாலைத் துறையினால் சீரமைக்கப்பட்டு வருகிறது. மேலும் மருத்துவமனையைச் சுற்றியிருந்த மேடுபள்ளங்கள் சரி செய்யப்பட்டு அன்றாட குப்பைகள் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது குப்பை மேடுகள் ஏதும் இல்லை.*

*ஆணையாளர்,*
*மயிலாடுதுறை நகராட்சி.*



**பிரச்சினை:**

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டத்தில் உள்ள சுந்தரபாண்டியம் என்பது எங்கள் கிராமம். இங்கு சுமார் 25,000 மக்கள் உள்ளனர்.

தினமும் பள்ளி, கல்லூரி செல்லவும், வியாபார நிமித்தமாகவும் அருகில் உள்ள திருவில்லிபுத்தூர், இராசபாளையம் போன்ற நகரங்களுக்கு மாணவர்கள், சிறு வியாபாரிகள் மற்றும் பணிபுரிவோர் செல்ல வேண்டியுள்ளது.

இராசபாளையத்திலிருந்து எங்கள் ஊருக்குத் தினமும் 2 நகர்ப்புறப் பேருந்துகள் வருகின்றன. தினமும் 7 டிரிப்புகள் வரவேண்டும். ஆனால் பெரும்பாலும் இவை சரியாக வருவதில்லை. திடீர் திடீரென்று நிறுத்தப்பட்டும் விடுகின்றன. எனவே மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

*- ஊர்ப் பொதுமக்கள்,*
*விருதுநகர் மாவட்டம்.*

**தீர்வு:**

*இராசபாளையத்திலிருந்து சுந்தரபாண்டியம் கிராமததிற்கு இயக்கப்படும் இரண்டு பேருந்துகள் பயணத் தடை இல்லாமல் உரிய நேரத்திற்கு இயக்க நடவடிக்கை எடுத்து தற்பொழுது இயக்கிக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

*- மேலாண்மை இயக்குநர்,*
*தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,*
*மதுரை - கோட்டம் V - லிட்*



**பிரச்சினை:**

*குடியாத்தம்-பரவக்கல் (வழி-செட்டிகுப்பம், ராஜாகுப்பம், கோகுலபுரம்) வழித்தடத்தில் சாலைப் போக்குவரத்து வசதி கோரி பலமுறை மனு செய்தும் எவ்விதப் பலனும் இல்லை. மேற்படி வழித்தடத்தில் இருதனியார் பேருந்துகள் இயக்கப்படுவதாகத் தமிழக அரசுக்குத் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் மூலம் தவறான தகவல் தரப்பட்டுள்ளது. இவ்வழித்தடத்தில் தற்போது ஜி.15ஏ என்ற ஒரே ஒரு நகரப்பேருந்து மட்டும் இயக்கப்படுகிறது. எனவே மேற்படி பேருந்து வழித்தடத்தில் காலை 8-15, பகல் 12-15, மாலை 17-15, இரவு 21-15 நேரத்தில் கூடுதல் நகரப்பேருந்து இயக்கி எங்கள் பிரச்சினையைத் தீர்க்குமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.*

*- யாதவர் நற்பணி மன்றம்,*
*குடியாத்தம் வட்டம்,*
*வேலூர் மாவட்டம்.*

**தீர்வு:**

*பரவக்கல்-கிராமத்திற்குத் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழக நகரத்தடம், குடியாத்தத்திலிருந்து தினசரி 8 நடைகள் கால அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நேரப்படியும் நடை இழப்பின்றியும் இயக்கப்பட்டு வருகிறது எனத் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.*

*இதுதவிர, தனியார் பேருந்துகள் கீழ்க்கண்டுள்ள விவரப் படி பேருந்து தினசரி இயக்கப்படுவதாக வேலூர் வட்டாரப் போக்குவரத்து. அலுவலர் பார்வை-3ல் குறிப்பிட்டுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளரார்.*

*டி.என்.231எ-5959*

*1. வேலூர்-பரவக்கல் 8 நடைகள்*

*2. குடியாத்தம்-பரவக்கல் 2 நடைகள்*

*3. வேலூர் - குடியாத்தம் - 2 நடைகள்*

*மேலும் டிஏவி 3767 என்ற தனியார் பேருந்து வேலூர்-சயனகுண்டா செல்லும் வண்டியானது இரண்டு முறை பரவக்கல் கிராமத்திற்கும் சென்று வருவதாகவும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் தெரிவித்துள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*- ரா.சிவகுமார், இ.ஆ.ப.,*
*மாவட்ட ஆட்சியர்,*
*சத்துவாச்சாரி, வேலூர்.*

**பிரச்சினை :-**

நீலகிரி மாவட்டத்தில் இயங்கும் தமிழ்நாடு பொது நூலகத்துறையின் கீழ், ஐந்து ஊர்ப்புற நூலகம் திறப்பதற்கு 27.3.1996-ஆம் ஆண்டு மாவட்ட நூலக அலுவலர் மூலம் அரசு ஆணை பெறப்பட்டு, உடன் எங்கள் ஊர் / கிராம கமிட்டி மூலமாக இந்த ஐந்து ஊர்களிலும் தேவையான அதாவது இலவச நிலம், புரவலர்கள், உறுப்பினர்கள் ஆகியவை மற்றும் இலவசக் கட்டடம் தளவாடப் பொருட்கள் அனைத்தும் செய்தும் இன்னும் ஊர்ப்புற நூலகம் திறக்கப்படவில்லை. எனவே, 1.கிண்ணக்கொரை 2. குறுத்துக்குளி 3. கேத்தி - பாலாடா 4. டில்லிகம்பை 5.கம்பட்டி ஆகிய ஐந்து ஊர்களிலும் ஊர்ப்புற நூலகம் திறக்க தக்க நடவடிக்கை எடுத்து, ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

*- ஐந்து ஊர்ப் பொது மக்கள்,*
*நீலகிரி மாவட்டம்.*



**தீர்வு :**

*சின்னக்கொரை ஊர்ப்புற நூலகத்திற்கு நியமனம் செய்யப்பட்ட நூலகர் விருப்பமின்மை காரணமாகப் பணியில் சேரவில்லை. மேலும் ஊர்ப்புற நூலகர்கள் பணியிடம் இது. சுழற்சி முறைப்படி நியமனம் செய்யப்பட்டமையால் ஏற்கெனவே பணிபுரிந்து வந்த பகுதிநேர நூலகர்கள் நான்கு பேர் தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப் பாயத்தில் வழக்குக் கொடுத்து நான்கு பணியிடத்தைக் காலியாக வைக்க தீர்ப்பாயத்தில் ஆணை வழங்கப் பட்டுள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட ஊர்ப்புற நூலகங்கள் தற்காலிகமாகத் திறக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. எனினும் விரைவில் மேற்படி ஊர்ப்புற நூலகங்கள் திறக்கத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*- பொது நூலக இயக்குநர்,*
*சென்னை.*

**பிரச்சினை :**

மதுரை மாவட்டம் மேலூர் தாலூகாவில் உள்ளது மேலவளவு கிராமமாகும். இவ்வூரில் உள்ள டிரான்ஸ்பார்மரில் இருந்து நிறைய வீடுகளுக்கு மின்சாரம் செல்வதால் போதிய மின்சாரம் கிடைப்பதில்லை. ஆதலால் மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை சிம்னி விளக்கைக் காட்டிலும் குறைந்த அளவே வெளிச்சம் தெரிகிறது. டேப்ரெக்காடர்கள் இயங்குவதில்லை. இக்குறைகளைச் சம்பந்தப்பட்டவர்களிடம் பலமுறை கூறியும் பயனில்லை. இனியாவது கூடுதல் டிரான்ஸ்பார்ம் அமைப்பார்களா?

*- த இந்திரஜித்*
*மேலவளவு, மேலூர்*

**தீர்வு :**

*மேலவளவு கிராமப்பகுதிக்கு மின்விசை வழங்கும் மின்பாதைக் கம்பிகள் பழுதடைந்த காரணத்தினால் குறைந்தழுத்தம் ஏற்பட்டது கண்டறியப்பட்டு, அக்கம்பிகளை மாற்றி புதிதாக 'ACSR' கம்பிகள் அமைப்பதற்கான மதிப்பீடு அனுமதியளிக்கப்பட்டும், அதன்பின் பணிமேற் கொள்ளப்பட்டு, மின்பாதைக்கான புதிய கம்பிகள் இணைக்கப்பட்டும் தற்போதும் சீரான மின்விசை வழங்கப்படுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.*

*- மேற்பார்வைப் பொறியாளர்*
*மதுரை மின்பகிர்மான வட்டம்.*

★ ★ ★


PLI NEWS

# மத்திய அரசு - அஞ்சல் துறை

அஞ்சலக ஆயுள் காப்பீடு
(113 வருட சிறப்பான சேவை)

PLI
பாலிசிதாரர்களுக்குப்
புத்தாண்டு பரிசு
1995-96 ஆண்டிற்கான
போனஸ் பற்றிய
அறிவிப்பு

INDIA POST

50ம் வருட
சுதந்திர தினப்
பொன்விழா - பரிசு
புதிய திட்டம் அறிமுகம்
(YUGAL SURAKSHA)
கணவன் மனைவி இருவருக்கும்
ஆயுள் காப்பீடு

| முழு ஆயுள் | என்டோவ்மென்ட் | மணி பேக் பாலிசி |
|---|---|---|
| 95 | 76 | 76 |

(ஆண்டு ஒன்றுக்கு ரூ.1000 பாலிசிக்கு)

அரசு/அரசு சார்ந்த நிறுவன ஊழியர்களே !

ஊதியக் குழு மூலம் கிடைத்திடும் உயர் வருமானத்தை மத்திய அரசின், அரசு ஊழியர்களுக்கான நலத்திட்டத்தில் சேமித்து கீழ்காணும் பலனைப் பெறுங்கள்.

1. குறைவான பிரிமியம் மற்றும் அதிக போனஸ்
2. வருமான வரிச்சலுகை
3. குறைந்த வட்டியில் கடன் வசதி (10%)
4. ஆயுள் காப்பீடு மற்றும் சம்பளப் பட்டியல் பிடித்தம்
5. கமிஷன் ஏஜெண்ட் இல்லாத நேரடி சேவை
6. கணிப்பொறி மூலம் கணக்குகள் நிர்வகிப்பு

*மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்க :*

1. உங்கள் பகுதி டெவலப்மெண்ட் ஆபீஸர் (PLI)
2. அனைத்து தலைமை அஞ்சலகங்கள்

வெளியீடு :
முதன்மை அஞ்சல் துறைத் தலைவர்
(அஞ்சல் ஆயுள் காப்பீடு)
தமிழ்நாடு வட்டம்
சென்னை - 600 002.

## தீரன் சின்னமலை

ஆசிரியர் : புலவர் அ.தயானந்தம்,
வெளியிட்டோர் :
ராஜராஜேஸ்வரி பதிப்பகம்,
7-ஏ, வி.நகர், சாலை எண் : 8,
இராசிபுரம் - 637 408

பக்கம் : 246 விலை : ரூ.40

*இந்திய சுதந்திரப் போரில் இணையற்ற வீரம் காட்டி, நிகரற்ற தியாகம் புரிந்த பெருமையாளன் தீரன் சின்னமலை; அந்த மாவீரனின் முக்கிய வரலாற்றுச் சம்பவங்களை வகைபட இணைத்து . இனிக்கும் புதினமாக்கித் தந்திருக்கிறார் நூலாசிரியர்.*

## தமிழுக்குத் தோள் கொடுத்தோர்

ஆசிரியர் : புலவர் கோ.இராசேந்திரன்
வெளியிட்டோர் :
அறிவண்ணல் பதிப்பகம்,
9, கோவிந்தசாமிப் பிள்ளைத் தெரு,
கீழ்ப்பெரும்பாக்கம், விழுப்புரம்.

பக்கம் : 80 விலை : ரூ.20.

*நல்லாசிரியர் விருது பெற்றவரான நூலாசிரியர், அறுசுவை தோன்ற எழுதிய ஆறு கற்பனை நாடகங்களின் தொகுப்பே இந்த நூல்; படிக்காசுப் புலவர், அறிஞர் அண்ணா, காஞ்சி சிவப்பிரகாசர், மகாகவி பாரதியார், அருட்கவி தாதி, நாராயண தீட்சிதர் ஆகிய அறுவரும் நாடகங்களின் கருப்பொருள் ஆக்கப்பட்டுள்ளனர்.*

## இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள்

பதிப்பாசிரியர் : இ.சுந்தரமூர்த்தி,
மா.ரா.அரசு

பக்கம் : 464 விலை : ரூ.100

*இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில், நாட்டு மக்கள் உள்ளத்திலே எழுச்சித் தீ மூட்டிய இதழ்கள் பலவாகும். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் மொழித்துறையில், அந்த ஏடுகள் ஒவ்வொன்றும் பற்றிய அரிய தொடர் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. இந்திய விடுதலைப் பொன்விழா ஆண்டில் நடந்த அக்கருத்தரங்க. ல் 16 இதழ்கள் பற்றி இடம்பெற்ற அற்புதமான கருத்துரைகளின் தொகுப்பே இந்த நூல். தமிழறிஞர்கள், இதழியல் துறை ஆய்வாளர்கள், இறந்தகால இதழ்த் துறை பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வமுடையோர் விரும்பி வரவேற்பார்.*

# நூல் நயம்



## குற்றாலநாத சுவாமிகோயில் வரலாறும் பண்பாடும்

ஆசிரியர் :
முனைவர் சொ.சுப்பிரமணிய கவிராயர்

பக்கம் : 272 விலை ரூ. : 60

*புராணங்களின் கூற்றுப்படி, சிவபெருமான் நடனமாடிய பஞ்ச சபைகளில் ஒன்றான திருக்குற்றாலம் பற்றியும், திருக்குற்றாலநாதர் பற்றியும், அங்குள்ள கோயில் - அதுபற்றி இதுவரை வெளிவந்த தமிழ். ஆங்கில நூல்கள் பற்றியும் ஆய்வுசெய்து வெளியிடப்பட்டுள்ள நூல் இது. சிறப்புற உருவாக்கப்பட்டிருக்கிறது.*

## காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் - ஓர் ஆய்வு

ஆசிரியர் : முனைவர் சி.இரத்தினம்

பக்கம் : 256 விலை : ரூ.60

*சான்றோர் நிறைந்த தொண்டை நாட்டுக் காஞ்சி, புனிதத் தலங்களுள் ஒன்று எனப் போற்றப்படுவதாகும். நூலாசிரியர், காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவிலை தமது பட்ட ஆய்விற்காக எடுத்துக்கொண்டு செய்த ஆய்வுரையே அருமையான இந்த நூலாக வெளிவந்துள்ளது.*

*மேற்கண்ட 3 நூற்களையும் வெளியிட்டோர் :*

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை - 600 113.

## கலைஞரின் முரசொலி

ஆசிரியர் : பி.எல்.ராஜேந்திரன்
வெளியிட்டோர் : பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை - 600 004.

பக்கம் : 95 விலை : ரூ.18

*தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தம் இளமைக்காலத்தில் - 1942ல் கையெழுத்தேடாகத் தொடங்கிய 'முரசொலி'யின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி அந்த ஏடு தொடர்பான முக்கிய வரலாற்றுச் சம்பவங்களுடன் தெரிவிக்கும் நூல் இது.*

## பாவலர் நெஞ்சில் பேராசிரியர்

ஆசிரியர் : முனைவர் கடலூர் மணிமாறன்
முனைவர் கருவூர் கன்னல்
வெளியிட்டோர் : விடியல் வெளியீட்டகம்,
109 மேலைத்தெரு,
கிருட்டிணராயபுரம் - 639 102

பக்கம் : 96 விலை : ரூ.20

*இனமானப் பேராசிரியர், மாண்புமிகு கல்வியமைச்சர் க.அன்பழகனாரின் 76ஆம் பிறந்தநாள் அன்று வெளியிடப்பட்ட கவிதைத் தொகுப்பு நூல். புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் கவிதை முதலாக 76 தமிழ்க் கவிஞர்கள் எழுதியுள்ள கனிநிகர் கவிதைகள் - குறிப்பாக மரபுக் கவிதைகள் இதில் உள்ளன; சுவைத்து இன்புறலாம்.*

## பிஞ்சு நிலா

ஆசிரியர் : தளவை இளங்குமரன்,
வெளியிட்டோர் : கண்மணி பதிப்பகம்,
ஈ.உ.அரசு அலுவலர் குடியிருப்பு,
செங்கற்பட்டு - 603 001.

பக்கம் : 144 விலை : ரூ.40

*இனிய எளிய சிறுவர் பாடல்கள் 72 இந்நூலில் கைகோத்துக்கொண்டு காணப்படுகின்றன; ஒவ்வொன்றும் கனியிடை ஏறியசுளையாய், கவின் மலர்த் தேனாய் இனிக்கின்றன. சரளமான நடையில், தடுமாறாத சந்தத்தில் உருவான இளைஞர் இலக்கியமாய்த் திகழும் இதை மாணக்கர் உலகம் மகிழ்ந்து வரவேற்கும்.*



# காவிரி உடன்பாடு
## தலைவர்கள் பாராட்டு

காவிரி நதிப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். அரசியல்வாதிகளால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்ற என் கருத்தினை (கலைஞர்) தாங்கள் பொய்ப்பித்து விட்டீர்கள். இந்த முடிவின் மூலம் இலட்சக்கணக்கான விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுள்ளீர்கள்.

**- சி.சுப்பிரமணியம்**
முன்னாள் ஆளுநர்

★ ★ ★

காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை தொடர்பாகப் பிரதமர் முன்னிலையில் நான்கு மாநில முதல்வர்கள் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள உடன்பாட்டினை மார்க்சிஸ்ட் கட்சி வரவேற்கிறது. இந்த உடன்பாடு சிறப்பானதொரு ஏற்பாடு என்று மார்க்சிஸ்ட் கட்சி கருதுகிறது.

காவிரிப் பிரச்சினை தொடர்பாக இப்பொழுது ஏற்பட்டுள்ள உடன்பாடு மற்ற மாநிலங்களுக்கிடையிலேயான நதிநீர் தாவாக்களைத் தீர்க்கவும் ஒரு முன்மாதிரியான உடன்பாடாக விளங்குகிறது.

இந்த உடன்பாட்டின்படி நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்புக்கேற்ப தமிழகத்திற்குக் காவிரியில் 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட கர்நாடகம் ஒப்புக்கொண்டுள்ளது. இது ஒரு முக்கியமான அம்சம். தமிழ்நாட்டிற்கு 205 டி.எம்.சி. தண்ணீர்விடக் கூடாது என்று கர்நாடகச் சட்டமன்றத்தில் இரண்டுமுறை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதை மனதில் கொண்டு பார்த்தால், இதன் முக்கியத்துவம் புரியும்.

**- சங்கரய்யா**
இ.கம். (மார்க்சிஸ்ட்)

★ ★ ★

காவிரி நதி நீர்ப் பங்கீடு குறித்து, பாரதப் பிரதமர் வாஜ்பாய் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்களோடு நடத்திய சமரசப் பேச்சுவார்த்தையின் விளைவாக நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த முப்பதாண்டுகளுக்கும் மேலாக எவ்வித உடன்பாட்டிற்கும் வர முடியாத தமிழக மற்றும் கர்நாடக அரசுகள் சில அடிப்படையான விஷயங்களில் மனமொத்த கருத்துக்களை ஏற்படுத்திக் கொண்டிருப்பது, இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் முக்கியமான மைல்கல்.

இந்த அரசியல் நிர்ப்பந்தங்களைக் கடந்து, தங்கள் நிலைகளிலிருந்து சம்பந்தப்பட்ட அனைவரும் சற்று இறங்கி வந்து எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வினை உருவாக்க நல்ல முயற்சிகளை மேற்கொண்ட பிரதமர் வாஜ்பாயையும், தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியையும், கர்நாடக முதல்வர் ஜே.எச்.பட்டேலையும் மற்றும் கேரள, புதுவை மாநிலங்களின் முதல்வர்களையும் தமிழ்மாநில காங்கிரஸ் சார்பாக நெஞ்சாரப் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

**- ஜி.கே.மூப்பனார்**
த.மா.கா.

★ ★ ★

பாரதப் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நடைபெற்ற தமிழகம், கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி முதல்வர்கள் பேச்சுவார்த்தையில் காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்கு ஒரு சுமூகமான தீர்வு கண்டறியப்பட்டிருக்கிறது. தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழக விவசாயிகள், பொது மக்களின் உணர்வுகளை மிகத் தெளிவாக எடுத்துக் கூறி சுமூகமான தீர்வுக்கு வழிகாட்டியிருக்கிறார். தமிழக முதல்வருக்குத் தமிழக மக்கள் பாராட்டும் நன்றியும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

**- அப்துல் சமது**
இந்திய யூனியன் முஸ்லிம் லீக்

★ ★ ★

தமிழக, கர்நாடக மாநிலங்களுக்கிடையே நீண்ட நாட்களாக நிலவி வந்த காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்குச் சுமூகமான தீர்வு கிடைத்திருப்பது தமிழகத்திற்கு மகிழ்ச்சியான செய்தியாகும். உச்சநீதி மன்றத்தின் ஆணையின் வழியிலேயே தீர்மானம் கிடைத்திருப்பது மிகவும் நல்லதாகும். இந்த விஷயத்தில் முதல்வர் கலைஞர் நமது பாராட்டுக்குரியவராவார்.

**-திண்டிவனம் இராமமூர்த்தி**
தமிழ்நாடு காங்கிரஸ்

★ ★ ★

பல்லாண்டு காலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. மாநிலங்களில் பயன்படுத்துவது போக மீதி தண்ணீரைக் கால்வாய் மூலம் இணைத்து அக்கால்வாய்க்குச் சுதந்திரக்

கால்வாய் என்று பெயர் சூட்டும் திட்டத்தையும் மேற்கொள்ள வேண்டும்.

- குமரி அனந்தன்
தமிழ்நாடு காங்கிரஸ்

★ ★ ★

காவிரி டெல்டா பகுதியில் வாழும் விவசாயப் பெருங்குடி மக்களும், தஞ்சை வாழ் மக்களும் காவிரிப் பிரச்சினையில் வெற்றி கண்டு தமிழக மக்களின் உரிமைகளை மீட்டுத் தந்த கலைஞரை நெஞ்சார வாழ்த்துகிறார்கள்.. அவர்களோடு இணைந்து தமிழ் மாநில முஸ்லிம் லீக் சார்பில் எங்களின் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

- தமிழ் மாநில முஸ்லீம் லீக்.

★ ★ ★

காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பான 205 டி.எம்.சி. தண்ணீரை, தமிழகம் பெறுவதற்கு உறுதி செய்து கொடுத்த இந்தியப் பிரதமர் அவர்களையும், இந்த உறுதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை உச்சநீதி மன்றத்தின் மூலம் மேற்கொண்டு, தொடர்ந்து, நடுவர் மன்றம் அமைவதற்கும், இடைக்காலத் தீர்ப்பைப் பெறுவதற்கும் இப்பொழுது இடைக்காலத் தீர்ப்பைச் சட்டப்படி நிறைவேற்றுவதற்கும் முயற்சிகள் மேற்கொண்டு தன்னுடைய ஆட்சிக்காலத்தில் வெற்றி பெற்று, தமிழகத்திற்கு நன்மையைப் பெற்றுத் தந்த தமிழக முதல்வர் கலைஞர் அவர்கட்கு, பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆர்.எம்.வீரப்பன்
- எம்.ஜி.ஆர். கழகம்.

★ ★ ★

காவிரி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவது தொடர்பாக கர்நாடகம், தமிழ்நாடு மாநிலங்களுக்கிடையே ஏற்பட்டிருக்கும் உடன்பாட்டைத் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வரவேற்கிறது.

1924-ஆம் ஆண்டு ஏற்பட்ட உடன்பாடு 1974-ஆம் ஆண்டுடன் முடிவடைந்து விட்டது. இனி தமிழ்நாட்டிற்குக் காவிரி நீர் பெறுவதில் உரிமை இல்லை என்று கர்நாடகம் கூறிவந்த நிலையில் இந்த ஒப்பந்தத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கும் உரிமை உண்டு என்ற உத்தரவாதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழகக் காவிரி பாசன விவசாயிகள் அமைதியாக நடத்திவந்த வலுவான போராட்டங்களுக்குக் கிடைத்த பலனாகும். மேலும் அண்டை மாநிலங்களுடன் நல்லுறவும் தேச ஒற்றுமையும் வலுவடைய இந்த ஒப்பந்தம் துணை புரியும்.

காவிரிப் படுகை விவசாயத்தை நம்பி வாழும் இலட்சக்கணக்கான விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் மகிழ்ச்சியடைவார்கள்.

- தமிழ்நாடு
விவசாயிகள் சங்கம்

★ ★ ★

நீண்டகாலமாக உள்ள காவிரி பிரச்சினை பிரதமர் வாஜ்பாயினால் தீர்ந்து உள்ளது. முதல்வர் கருணாநிதி வெற்றி பெற்றார். இது தமிழகத்திற்குக் கிடைத்த வெற்றி. இதை பிரதமர் வாஜ்பாய் செய்து சாதனை படைத்து உள்ளார்.

- இல. கணேசன்
பா.ஜ.க.

காவிரிப் பிரச்சினையில் சுமுகத் தீர்வு ஏற்பட்டிருப்பது முதல்வர் கலைஞரின் விடா முயற்சிக்கும், அணுகுமுறைக்கும் கிடைத்த வெற்றி.

- பேராயர் எஸ்றா சற்குணம்
இந்திய சமூக நீதி இயக்கம்.

★ ★ ★

காவிரி நீர் தாவா பிரச்சினை குறித்து நடுவர் மன்றத் தீர்ப்பை அமல் படுத்துவது சம்பந்தமாக டில்லியில் பிரதமர் தலைமையில் 6.8.98 அன்று தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் மற்றும் பாண்டிச்சேரி மாநில முதலமைச்சர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வரவேற்கக் கூடியதாகும். கடந்த பல்லாண்டுகளாக இருந்துவந்த பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவு எட்டப்பட்டது குறித்துத் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பிரதமர் தலைமையில் 4 மாநில முதலமைச்சர்களும் கொண்ட ஆணையம் அமைக்கப்பட்டு 205 டி.எம்.சி. தண்ணீர் உத்தரவாதம் செய்வது என்று தீர்மானித்திருப்பது தமிழ்நாடு விவசாயத்தைப் பாதுகாக்கப் பெரிதும் உதவும். மேலும் இந்த முடிவு சம்பந்தப்பட்ட மாநில மக்களின் ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்கும் அதிகம் உதவுவதாக இருக்கும் என்பதுடன், சுமுகமான நிரந்தரத் தீர்வுக்கு நம்பிக்கை தரும் விதத்தில் அமைந்துள்ளதும் வரவேற்கத்தக்கதாக உள்ளது.

வி.ஏ.கருப்புசாமி
- விவசாயிகள் சங்கம்.



★ ★ ★

காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்குச் சுமுகத் தீர்வு ஏற்பட்டுள்ளது தமிழக மக்களுக்குக் கிடைத்துள்ள மகிழ்ச்சியான செய்தியாகும். நீண்ட நெடுங்காலமாகத் தீர்க்கப்படாத காவிரி நதிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது என்று எண்ணும் போது ஏதோ ஆச்சரியம் நிகழ்ந்துள்ளதாகத் தோன்றுகிறது. முயன்றால் எதையும் சாதிக்கலாம் என்ற பெருமைக்கும் பெருந்தன்மைக்கும் உரிய சாதனையாளராகத் திகழ்கின்றார் தமிழக முதல்வர் கலைஞர்.

தமிழக வரலாற்றில் காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு கண்டு வரலாற்றில் பொன்னெழுத்தில் பொறிக்கக்கூடிய புதிய சரித்திரத்தைப் படைத்துள்ளார் தமிழக முதல்வர் கலைஞர். நல்ல உள்ளம் கொண்ட அனைத்துக் கட்சித் தலைவர்களின் துணையோடு அவர் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது.

வை.பாலசுந்தரம்
- அம்பேத்கர் மக்கள் இயக்கம்.

★ ★ ★

காவிரி நதி வளநாட்டின் விவசாயிகளுக்கு வாழ்வு அளிப்பதோடு, தமிழ்நாட்டின் வளமார் - வரலாற்றிலும் தமிழர்தம் இலக்கிய வாழ்விலும் நடு நாயகமாக விளங்கி வருவதை எல்லோரும் அறிவர். இந்நிலையைக் கேள்விக்குறியாக்க, செய்யப்பட்ட முயற்சிகள் அனைத்தையும் பொன்னியின் செல்வர் கலைஞர் முறியடித்து உள்ளார். எத்தனையோ வகையில் தமிழ்நாட்டுக்குத் தொண்டாற்றி உள்ள கலைஞர் அவர்கள் விடா முயற்சியும், விவேகமும் நிறைந்தவர் என்பதற்குக் காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் தமிழ்நாட்டுக்கு அவர் தேடித்தந்துள்ள இந்த வெற்றி வரலாற்றில் இடம் பெறக்கூடிய ஒன்று.

-எம்.ஏ.லத்தீப்
இந்திய தேசிய லீக் தலைவர்.

★ ★ ★

கடந்த 7 ஆண்டுக் காலமாக நிறைவேற்றப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருந்த காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பான 205 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைத்திட பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நடைபெற்ற மாநில முதல்வர்கள் கூட்டத்தில் திறம்படச் செயலாற்றி, சாதுர்யமாக முதற்கட்ட வெற்றியைப் பெற்று வந்துள்ள தமிழக முதல்வர் கலைஞர் அவர்களையும் அதற்கு ஒத்துழைப்பு நல்கி பேச்சுவார்த்தைக்கு அனுப்பி வைத்த தமிழகத்தின் அனைத்துக் கட்சி மற்றும், அனைத்துச் சமுதாய, விவசாயச் சங்கங்களைச் சார்ந்தவர்களுக்கும் செயற்குழு பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது. காவிரி நதி நீரில் தமிழ்நாட்டின் உரிமையை முதற்கட்டமாக வெற்றியுடன் பெற்றுத்தந்த தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்குப் பா.ம.க. (2) மாநிலச் செயற்குழு "காவிரி கொண்டான்" என்னும் பட்டத்தைப் பெருமையுடன் வழங்கிப் பாராட்டுகிறது.

- தீரன்
பா.ம.க.(2)

★ ★ ★

தீரவே தீராது என்று பலராலும் கருதப்பட்ட காவிரி நதிநீர்ப் பிரச்சினை நல்ல முறையில் தீர்ந்திட வழிவகை பிறந்துள்ளது.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களது விவேகத்திற்கும், கர்நாடக முதல்வர் பட்டேல் அவர்களது இணக்கமான அணுகுமுறைக்கும் நல்ல பயன் கிட்டியிருக்கிறது.

பிரச்சினைக்கு ஏதாவது சுமுகத் தீர்வு வேண்டுமென்று ஒன்பது மணி நேரத்திற்கு மேல் தீர்க்கமாகச் செயல்பட்ட பிரதமர் வாஜ்பாய் அவர்களையும் நாம் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளோம்.

- திருவாரூர் தங்கராசு

★ ★ ★

நீண்டகாலமாகத் தீர்வு ஏற்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்த காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வழியில் ஒரு மைல்கல்லாக இம்முடிவு ஏற்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

தொடர்ந்து பல ஆண்டுகளாகப் போராடி வந்த காவிரிப் பாசன விவசாயிகளுக்கு நம்பிக்கை தருவதாகும். இரு மாநில விவசாயிகள் நலனும் பாதுகாக்கக் கூடிய வகையில் தீர்ப்பை அமலாக்கக் காவிரி நதி நீர் ஆணையம் ஏற்பட்டுள்ளது.

காரைக்கால் உள்ளிட்ட தமிழ்நாட்டுக்கு 205 டி.எம்.சி தண்ணீர் வழங்க வேண்டுமென்ற நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பைக் கர்நாடக அரசு அங்கீகரிக்காமல் இருந்தது. இந்த முடிவின்படி நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பை ஒத்துக்கொண்டிருப்பது தமிழக விவசாயிகளின் சாகுபடிக்கு உத்தரவாதமளிப்பதாக அமைந்துள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும். தமிழ் நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு, மிகக் கடுமையான பிரச்சினையாக இருந்துவரும் காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் அனைத்துத் தரப்பினர் கருத்தறிந்து, இடைவிடாத முயற்சிமேற்கொண்ட தமிழக முதல்வர் கலைஞரின் அக்கறையும், தமிழ்நாடு அரசின் செயல்பாடும் இந்த உடன்பாடு ஏற்பட முக்கியக் காரணமாகும். இதனை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயற்குழு வரவேற்கிறது.

- இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடு மாநிலச் செயற்குழு

★ ★ ★

கடந்த முப்பது ஆண்டுகளாகத் தீராமல் இருந்த காவிரி நீர்ப் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு காண்பதற்கு முயன்ற பிரதமர் வாஜ்பாயையும் நான்கு மாநில முதல்வர்களையும் பாராட்டுகின்றோம். காவிரிப் பிரச்சினையில் தமிழக முதல்வர் கருணாநிதி அரசியல் ஆதாயக் கண்ணாடி அணிந்து தமிழர்களின் உணர்வுகளை உசுப்பிவிடும் தவறான நோக்கில் தன் பார்வையைச் செலுத்தாமல் தேசிய நலன் சார்ந்த பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டது அவருடைய அரசியல் முதிர்ச்சியைக் காட்டுகிறது.

- லோக்சக்தி

8 ஆண்டுகளுக்குப் பிறகு நடுவர் மன்ற இடைக்கால உத்தரவு நிறைவேற்றப்பட்டிருப்பதை வரவேற்கிறோம்.

- எஸ்.திருநாவுக்கரசு
எம்.ஜி.ஆர். அ.தி.மு.க

★ ★ ★

தமிழகத்தின் உயிர்நாடி பிரச்சினையான காவிரி நதிநீர்ப் பிரச்சினையினை, எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல், தனது அரசியல் முதிர்ச்சியாலும், தமிழக விவசாயிகளைக் காப்பாற்றுகின்ற வகையில், ஒரு முடிவுக்குக் கொண்டு வந்த விவசாயிகளின் பாதுகாவலனாக இருக்கும் தமிழக முதலமைச்சரை வாழ்த்தி தமிழக விவசாயிகள் சார்பாகவும், உழவர் உழைப்பாளர் கட்சி தனது பாராட்டையும், நன்றையையும் தெரிவித்துக் கொள்கிறது.

ஆர்.பி.ராமசாமி
- உழவர் உழைப்பாளர்க் கட்சி.

# காவிரி உடன்பாடு :

# பத்திரிகைகள் பாராட்டு

காவிரி நடுவர்மன்றத்தின் 1991-ஆம் ஆண்டு இடைக்கால உத்தரவை அமல்படுத்துவதற்கான "திட்டம்" குறித்து முதலமைச்சர்கள் கூட்டத்தில் ஏற்பட்டுள்ள விரிவான ஒப்பந்தம் பிரச்சினைக்குரிய மாநிலங்கள் எதார்த்த உணர்வுடன் செயல்பட்டுள்ளன என்பதைக் காட்டுவதால் பாராட்டுக்குரியது. குறிப்பாகக் கர்நாடக மாநிலம் தேவையில்லாமல் 7 ஆண்டுகளாக நீடித்து வந்த மோதலுக்குத் தீர்வு காண்பதில் எதார்த்த உணர்வை வெளிப்படுத்தியுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மிகவும் ஆக்கபூர்வமான அம்சம், இதுவரை அங்கீகரிக்க மறுத்துவந்த நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணைக்கு மதிப்பளிக்கக் கர்நாடகமே உறுதி அளித்துள்ளது. இதற்கு நடைமுறை அர்த்தம் தமிழ்நாட்டுக்கு ஆண்டுதோறும் 205 டி.எம்.சி. தண்ணீர் தருவதற்குக் கர்நாடகம் ஒத்துக் கொண்டுள்ளது என்பதாகும்.

தமிழ்நாட்டின் தரப்பில் இது ஒரு "லாபம்" ஆகும். மேல்நிலை தீர மாநிலம் (கர்நாடகம்) நீதித்துறை ஆணையத்திற்குக் கீழ்ப்படியாமை என்று கருதக்கூடிய, நடுவர்மன்ற ஆணையை நிறைவேற்றுவதில்லை என்ற தெளிவாக ஏற்றுக்கொள்ள முடியாத நிலையிலிருந்தும், அந்த ஆணையை அமல்படுத்துவதற்கான எந்த அமைப்பை உருவாக்குவதையும் எதிர்த்து வந்த நிலையிலிருந்தும் பின்வாங்கியுள்ளது. தன்னுடைய முந்தைய எதிர்மறை மனோபாவத்திலேயே கர்நாடகம் தொடர்ந்து பிடிவாதத்துடன் இருந்திருந்தால், மாநிலத்தின் உண்மையான வெற்றிக்கான அறிகுறிகளைத் தவறான பகுதிக்குத் தள்ளி, தற்போது நடைபெற்றுவரும் வழக்கில் அதற்குத் தீமையை விளைவித்திருக்கும்.

டெல்லி கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள திட்டத்தின் அமைப்பு ஏற்கெனவே மத்திய அரசால் கூறப்பட்ட திருத்தப்பட்ட வரைவுத் திட்டத்திலிருந்து மாறுபட்டுள்ளது. இதில் காவிரி நதி ஆணையம் அதிகாரிகளும், வல்லுநர்களும் அடங்கிய பிரதிநிதித்துவ அமைப்புக்குப் பதிலாக பிரதமரையும் (தலைவர்) காவிரி தீர முதலமைச்சர்களையும் கொண்ட அரசியல் தோற்றம் கொண்டுள்ளது. இந்த ஆணையத்திற்கு உதவியாகச் சட்டபூர்வமல்லாத 'கண்காணிப்புக் குழு' சம்பந்தப்பட்ட மாநிலங்களால் நியமிக்கப்படும் அதிகாரிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

தங்களுடைய அறிவிக்கப்பட்ட நிலைகளில் கண்காணிப்புக்குழுவின் பங்கு மற்றும் நடைமுறைச் செயல்பாடுகள் குறித்து கடுமையான வேறுபாடுகள் இருந்தபோதிலும், கர்நாடகமும் தமிழ்நாடும் அதிக பரபரப்பின்றி அதை ஒத்துக்கொண்டுள்ளன. இதன் மூலம் இடைக்கால ஆணையைச் செயல்படுத்து வதற்கான திட்டம் ஒன்றை உருவாக்கி, அதை அரசிதழில் வெளியிடும் தன்னுடைய சட்டபூர்வக் கடமையை நிறைவேற்ற மத்திய அரசு தயார் நிலையில் உள்ளது. கண்காணிப்புக் குழுவுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் பற்றிப் பரிசீலிக்கும்போது, அது, வழக்கமான புள்ளி விவரங்கள் சேகரித்தல், நன்கு வடிவமைக்கப்பட்ட நீர் மற்றும் வானிலை இணைப்பு அமைப்பை (நெட்வொர்க்) தீரத்தில் உருவாக்குதல் என்ற அளவிலேயே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அனைத்து முடிவுகள் எடுத்தல் மற்றும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அதிகாரங்கள், கட்டுப்படுத்தும் அமைப்புக்குப் பதிலாக ஆணையத்தில் பிரதிநிதிப்படுத்தப்பட்டுள்ள அரசாங்கங்களின் அரசியல் நிர்வாகிகளிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. தனது செயல்படும் முறைகளைத் தாங்களே வகுத்துக் கொள்ளச் சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ள - அதன் முடிவுகள் ஒருமித்த கருத்தின் அடிப்படையிலேயே இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன - ஆணையம், இணக்கமான நிர்பந்தமற்ற அமைப்பாக இருக்கும்.

- இந்து (10.8.98)

மத்தியில் உள்ள கூட்டணி அரசுக்கு இது ஒரு சிறப்புச் சேர்க்கும் நல்ல செய்தி. காவிரி பேச்சு வார்த்தையில் சாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் வெற்றியின் மூலம், நதிதீர மாநிலங்களுக்கு இடையிலான தாவாவால் தொடர்ந்து வந்த அச்சுறுத்தலிலிருந்து விடுதலை கிடைத்துள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியதன் மூலம் ஒரு அரசியல் சிக்கல் தவிர்க்கப்பட்டுள்ளது. காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாக உச்சநீதிமன்றம் விதித்த கெடுவுக்குள் பிரச்சினையைத் தீர்க்க இந்த ஒப்பந்தம் அரசுக்கு உதவியுள்ளது. குறிப்பாகப் பொறுமையான தொடர்ந்த முயற்சிகளின் பின்னணியில் பிரதமர் கொண்டிருந்த அரசியல் உறுதி குறிப்பாகப் பாராட்டுக்கு உரியது.

பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் தனிப்பட்ட தலையீடு மாநில அரசியலால் தொடர்ந்து நிலவி வந்த தேக்க நிலையிலிருந்து, விடுவிக்க நிச்சயமாகத் துணை புரிந்துள்ளது. காவிரி நதிநீர் தாவா நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை அமல்படுத்துவது தொடர்பான 7 ஆண்டு மோதலுக்கு ஒரு முடிவு ஏற்பட்டுள்ளது என்ற முக்கியத்துவத்தை அலட்சியப் படுத்திவிடக்கூடாது. அதை அமல்படுத்துவதற்குக் காவிரி தீர ஆணையம் அமைக்க



ஒப்புக்கொண்டதன் மூலம் கர்நாடகம் கடைசியாக அந்தத் தீர்ப்புக்கான கொள்கை ரீதியான ஒப்புதலை வெளிப்படுத்தியுள்ளது. தமிழ்நாடு தனது பங்குக்கு, மேல்நிலை நதிதீர மாநிலத்திற்குக் கடுமையான சட்ட அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதால் தனது முந்தைய வற்புறுத்தலை விட்டுக்கொடுத்து காவிரி தீர ஆணையம் உருவாக வாய்ப்பளித்துள்ளது. இந்த ஒப்பந்தம் கேரளா மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களின் நலன்கள் புறக்கணிக்கப் படாமல் பார்த்துக் கொண்டுள்ளது.

- இந்தியன் எக்ஸ்பிரஸ் (10.8.98)

காவிரிப் பிரச்சினையில் முதல் முறையாக ஆக்கபூர்வமான முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. பிரதமர் தலைமையில் நான்கு மாநில முதல்வர்கள் கூடி, நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதற்கான திட்டத்தை இறுதி செய்தது பாராட்டத்தக்க சாதனை.

தமிழகத்துக்கு 205 டி.எம்.சி. நீர் அளிக்க கர்நாடகம் சம்மதித்திருக்கிறது. பாசன அணைகளின் மீதான கட்டுப்பாடு பறிபோய் விடுமோ என்ற கர்நாடக விவசாயிகளின் அச்சம் நீக்கப்பட்டு விட்டது. இரு மாநில விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதற்காக நடத்திய பேச்சு தோல்வி யடைந்தபோதிலும் இம்முறை அம்முயற்சியில் வெற்றி கண்டுவிட்டனர்.

விவசாயிகளுக்குக் கிடைத்த சுதந்திரப் பொன்விழாப் பரிசாக இந்த உடன்பாட்டைக் கூறலாம். நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பை நிறைவேற்றுவதிலும் இதுபோன்ற அணுகுமுறை மேற்கொள்ளப்படும் என்ற நம்பிக்கை துளிர்விட்டுள்ளது....

- தினமணி (10.8.98)

காவிரி நடுவர் மன்றம் 1991-இல் அளித்த இடைக்காலத் தீர்ப்பை அமலுக்குக் கொண்டுவர ஏழு ஆண்டுகள் ஆகியிருக்கின்றன!

காவிரி கண்காணிப்புக் குழுவுக்கு இந்த இடைக்காலத் தீர்ப்பு வழங்கிய அதிகாரங்கள் கர்நாடக மாநிலத்துக்கு ஏற்புடையனவாக இல்லை. 205 டி.எம்.சி தண்ணீர் தமிழகத்துக்குத் தந்தே ஆக வேண்டும்; அவ்வாறு தராவிட்டால், கண்காணிப்புக் குழு கர்நாடக மாநிலத்தில் பலவந்தமாகச் செயல்பட்டு, தண்ணீரைத் திறந்துவிடச் செய்யலாம் என்கிற அளவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இடைக்காலத் தீர்ப்பின் இப்பகுதியைத்தான் கர்நாடகா அரசு பலமாக எதிர்த்தது. இதில் வியப்பில்லை.

ஆட்சேபணைக்குரிய இதுபோன்ற பகுதிகளை மாற்றி, காவிரி நதி ஆணையம் ஒன்றை நிறுவி, அதற்கு இந்தியப் பிரதமரைத் தலைவராக்க, சம்பந்தப்பட்ட நான்கு மாநிலங்களும் ஒப்புக்கொண்டுள்ளன. உச்சநீதி மன்றத்தின் தலையீட்டினாலும் அது நிர்ணயித்த ஆகஸ்ட் 12 கெடுவினாலும்தான் இக்காரியம் நிகழ்ந்திருக்கிறது.

காவிரி பிரச்சினைக்குப் பிறந்துள்ள 'தீர்வை' பி.ஜே.பி. ஒரு வெற்றியாகவே கொண்டாடுகிறது; தமிழக முதல்வர் அதை நன்றியுடன் வரவேற்றிருக்கிறார்; எதிர்பார்த்தது போலவே ஜெயலலிதா, புதிய காவிரி பகிர்வுத் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்துச் சாடியிருக்கிறார்.

நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அப்படியே அமல்படுத்தியிருந்தால் என்ன ஆகியிருக்கும்...?

இதற்கென்றே காத்திருந்தது போல பிரச்சனையை அரசியலாக்கி, உள்ளூர் தமிழர்களை 'உண்டு - இல்லை' என்று பண்ணிவிட கர்நாடகத்தில் வன்முறைக் கூட்டம் காத்திருக்கிறது. இலட்சக்கணக்கான தமிழர்களின் உயிர், உடைமைக்கும் வேலை வாய்ப்புக்களுக்கும் பெரும் கேடு உண்டாகும்.

எவ்வகையில் அணுகித் தீர்க்கப்பட்டிருந்தாலும் காவிரிப் பிரச்சனையானது ஏதேனும் ஒரு தரப்புக்கு அதிருப்தியையும் ஏமாற்றத்தையுமே அளித்திருக்கும். தற்போது கண்டுள்ள தீர்வு இருதரப்புக்கும் அதிருப்தியைக் குறைந்தபட்சமாக ஆக்கியிருக்கிறது என்று சொல்லலாம். எனவே எதிர்க்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக இந்தத் திட்டத்தை ஜெயலலிதா எதிர்ப்பதென்பது அவருக்குக்; கௌரவத்தைச் சேர்க்கப்போவதில்லை, குறைக்கவே செய்யும்.

- கல்கி (23.8.98)

ஒரே ஒரு சொல்-காவிரி. ஆனால் அது எழுப்பும் நினைவலைகள் எத்தனை! கரிகாலன், ராஜராஜன், இளங்கோ, கம்பன், ஞானசம்பந்தர், ஆழ்வார்கள், தாயுமானவர், தியாகய்யர், அருணாச்சல கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதி, ஊத்துக்காடு வெங்கட சுப்பையர், உ.வே.சா., மாயூரம் வேதநாயகம் பிள்ளை, கல்கி, நபிச்சமூர்த்தி, தி.ஜானகிராமன் கால வெள்ளத்தில் கரைந்து போகாத கல்வெட்டாய் நிலை கொண்ட பெயர்கள். அனைத்திற்கும் வளம் சேர்த்தவள் காவிரி. தமிழர்களுக்குக் காவிரி தண்ணீர் அல்ல, தாய்ப்பால். கலாச்சாரத் தொட்டில். இசை, இலக்கியம், பக்தி, சரித்திரம், ஞானம், புத்திக்கூர்மை என்று எத்தனையோ முத்திரைகளின் முகவரி.

காவிரி நீர் இனித் தமிழர்களுக்குக் கானல் நீராக ஆகி விடுமோ என்ற அச்சம் கடந்த வாரம் தீர்ந்தது. நெருடலாகத் துவங்கிய பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்தது குறித்து மகிழ்ச்சி அடையாதவர்கள் இருக்க முடியாது. அக்கறை, அனுபவம், சீண்டப்படுகிற நேரத்திலும் சிதறி விடாத பொறுமை, என்ற தங்கள் பலங்களைப் பயன்படுத்தி மூத்த தலைவர்கள் இந்தத் தீர்வினைக் கண்டிருக்கிறார்கள்.

- குமுதம் (20.8.98)

காவிரிப் பிரச்சினையில் இருக்கும் சிக்கல்கள் குறைவதற்கு, பல வருடங்கள் கழித்து இப்போது ஒரு வாய்ப்பு உருவாகி இருக்கிறது. பிரச்சினை தீர்ந்து விட்டது என்று நினைப்பது சிறுபிள்ளைத்தனமாக இருக்கும்; அதே சமயத்தில் பிரச்சினை தீர்வதற்கான பாதை போடப்பட்டிருக்கிறது என்பதை உணர மறுப்பது வெறும் அடாவடித்தனமாகத்தான் இருக்கும்.

பலரும் சேர்ந்து இரு மாநிலங்களுக்கிடையே உணர்ச்சிகளைக் கிளப்பி விட்டு, ஒரு குரோத பாவத்தை வளர்த்துவிட்ட நிலையில், பேச்சு வார்த்தைகள் மூலம் இந்த அளவு ஒருமித்த கருத்து ஏற்பட்டதே ஒரு சாதனைதான் என்பதில் சந்தேகமில்லை. இதற்காகக் கடும் முயற்சி செய்த பிரதமர் வாஜ்பாய், அரசியல் விவேகத்தைக் காட்டிய தமிழக முதல்வர் கருணாநிதி, துணிவுடன் செயல்பட்ட கர்நாடக முதல்வர் பட்டேல் ஆகிய மூவரும் அரசியல் ஆதாயங்களுக்கு அப்பாற்பட்டு நின்று, இரு மாநில மக்களுக்கும் நன்மை செய்ய முயற்சித்திருக்கிறார்கள்.

"காவிரி ட்ரிப்யூனலின் இடைக்கால உத்தரவின்படி 205 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்க வேண்டிய கர்நாடகம், அதற்குச் சற்றுக் குறைத்துக் கொடுக்க ஒப்புக் கொண்டாலும், தமிழகம் அதை ஏற்று, பிரச்சினைக்கு முடிவு காண வேண்டும்" என்பதுதான் நமது கருத்தாக இருந்து வந்திருக்கிறது. இப்போதோ தமிழகம் இப்படி விட்டுக் கொடுப்பதற்குக் கூட அவசியம் இல்லாமல், 205 டி.எம்.சி. தண்ணீர் தர கர்நாடகம் இசைந்துள்ளது. ஏழு ஆண்டுகளாகத் தான் காட்டி வந்த பிடிவாதத்தை, இப்போதுதான் முதன் முறையாகக் கர்நாடகம் தளர்த்தி இருக்கிறது.

காவிரிப் பிரச்சினை தீர்ந்துவிட்டதாக நாம் கூறவில்லை. ஆனால் நாம் ஏற்கெனவே சொன்ன மாதிரி அதற்கான பாதை போடப்பட்டிருக்கிறது. அதில் பயணம் செய்யும்போது ஆங்காங்கே தடங்கல்கள் வரத்தான் செய்யும். அவ்வப்போது பேச்சு வார்த்தை மூலம்தான் அந்தத் தடங்கல்களைத் தீர்த்து கொள்ள வேண்டும். தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. என்ற உத்திரவை, கர்நாடகம் ஏற்கிறது என்பது - ஏழு வருங்களாக நடக்காத அதிசயம். அவர்கள் இதில் விட்டுக் கொடுத்திருக்கும் போது தமிழகமும் கொஞ்சம் விட்டுக் கொடுத்து, அவ்வப்போது ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தீர்த்துக் கொண்டால், அதில் தவறில்லை.

இரு மாநில மக்களிடையே விரோதத்தை வளர்த்துக்கொண்டிருந்த ஒரு விவகாரத்தில், ஒரு உடன்பாடு ஏற்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்க விஷயம். வாஜ்பாய், கருணாநிதி, பட்டேல், மற்றும் கேரள, பாண்டிச்சேரி முதல்வர்கள் பாராட்டுக் குரியவர்கள்.

- துக்ளக் (19.8.98)

அப்பாடா, நினைக்கும்போதே உள்ளத்தில் காவிரி பாய்கிறது, எத்தனை ஆண்டுகள்! எத்தனைப் போராட்டங்கள்! எத்தனைப் பிடிவாதம்! எத்தனை அரசியல்! எல்லாமே முடிந்து போய் இப்போது சுபம்.

காவிரி வரட்டும்; பயிர்களுக்கு விளைச்சல் தரட்டும். பூமித்தாய் தாகத்தைக் காவிரித்தாய் தீர்க்கட்டும். பார்த்துப் பரவசப்படுவோம்.

வயிற்றுக்குக் கிருஷ்ணா நீர், வயலுக்குக் காவிரி நீர் என்று கொண்டு வந்தவர் கலைஞர் என்று வரலாறு குறித்துக் கொள்வதை விட, அவருக்குப் பெரிய பாராட்டு விழா வேறு என்ன இருக்க முடியும்!

- சாவி (20.8.98)

பிரதமர் தலைமையில் புதிதாக ஒரு காவிரி ஆணையம், அதை அடுத்துக் கண்காணிப்புக் குழு உருவாகப் போகிறது. இடைக்காலத் தீர்ப்பாக 205 டி.எம்.சி. காவிரி நீர் தமிழகத்துக்குத் திறந்து விடப்படுகிறது. ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு தீர்ப்பு அமலாகிறது!

"காவிரிப் பிரச்சினையை வெறும் அரசியல் ஆக்க விடாமல், நியாய உணர்வோடு அணுகுவோம்... முழு உடன்பாடு காணுவோம்" என்று இரு மாநிலத்திலும் மக்கள் சுமுகமாக நினைத்தாலேயே பிரச்சினை தீர்ந்துவிடும்.

சுதந்திரப் பொன்விழா கொண்டாட்டங்கள் முடிவடையும் இத்தருணத்தில் காவிரிப் பிரச்சினையும் ஒரு முடிவுக்கு வந்தால், அதுவே நமக்கெல்லாம் சிறந்த பொன்விழாப் பரிசு!

- ஆனந்த விகடன் (16.8.98)

பல வருடங்களாகத் தீராமல் இருந்த காவிரிப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைத்திருக்கிறது. ஒரு மவுன யுத்தம் முடிவுக்கு வந்திருக்கிறது. மக்கள் மத்தியில் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

தனது அரசுக்குக் கிடைக்கும் வாக்குகளை விட, வாக்குறுதியை மதிப்பவர் என்பதை பிரதமர் வாஜ்பாய் நிருபித்திருக்கிறார். அரசியலமைப்புக்கு உட்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமரும், மற்ற நான்கு மாநில முதலமைச்சர்களும் கூடிப்பேசி, விவாதித்து எடுத்த முடிவு இது. புதிய வரைவுத்திட்டம் உடனடியாக அரசிதழில் மத்திய அரசால் வெளியிடவும் பட்டிருக்கிறது. பத்திரிகைகள், பொது மக்கள் உட்பட எல்லோரும் இதை வரவேற்றுக் கொண்டாடுகிறார்கள்.

- குங்குமம் (21.8.98)

காவிரிப் பிரச்சினையில் புதிய திருப்பம் கிடைத்திருக்கின்றது. தமிழ்நாட்டுக்குப் பெரும் வெற்றி - கடந்த பல ஆண்டுகாலமாக நிலுவையில் இருந்த பிரச்சினைக்கு நல்லதோர் தீர்வு கிடைத்துள்ளது - வரைவுத் திட்டத்தை உச்சநீதி மன்றத்தில் மய்ய அரசு சமர்ப்பிக்கும் என்கிற செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எல்லாம் நல்லவிதமாக அமைந்து யாரும் பாதிக்கப்படாமல் இந்தப் பிரச்சினையில் சுமுகத் தீர்வு கிட்டுமானால் அதைக்கண்டு மகிழ்ச்சி அடைவது திராவிடர் கழகமாகத்தான் இருக்கும்.

- விடுதலை (10.8.98)

பிரதமர் முன்னிலையில் தமிழக, கர்நாடக, கேரள, புதுவை முதல்வர்கள் நடத்திய பேச்சு வார்த்தையின் பலனாக நீண்ட காலமாக இருந்துவந்த காவிரி நதி நீர்ப் பங்கீட்டு பிரச்சினையில் நல்லதொரு உடன்பாடு ஏற்பட்டுள்ளது. பிரச்சினையில் தொடர்புடைய அனைத்து மாநிலங்களாலும் இந்த உடன்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி கர்நாடகம் தமிழகத்திற்கு ஆண்டொன்றுக்கு 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிடுவது என்பது இந்த உடன்பாட்டின் மூலம் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நான்கு மாநிலங்கள் தொடர்புடைய காவிரிப் பிரச்சினையை நீதிமன்ற நடவடிக்கை மூலம் மட்டும் தீர்த்துவிட முடியாது, பரஸ்பர நலனைக் கருத்தில்கொண்டு எந்த ஒரு தரப்பிற்கும் பாதகம் ஏற்படாமல் பேச்சு வார்த்தை மூலமே தீர்க்கப்பட முடியும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. இதன்படி இப்பொழுது நான்கு மாநில முதல்வர்களும் பேச்சு வார்த்தை நடத்தி நல்லதொரு உடன்பாட்டினை ஏற்படுத்தியுள்ளனர்.

- தீக்கதிர் (11.8.98)

பிரதமர் வாஜ்பாய் அவர்களின் தீவிர முயற்சி காரணமாகவும், முதல்வர் கலைஞர் அவர்களின் அறிவார்ந்த அணுகுமுறை காரணமாகவும், கர்நாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களின் முதல்வர்கள் அளித்த ஒத்துழைப்பின் காரணமாகவும் காவிரிப் பிரச்சினைக்கு நல்லதோர் தீர்வு ஏற்பட்டிருக்கிறது.

நாட்டோரும், நடுநிலையாளர்களும், ஏடுகள் பலவும் இந்த ஒப்பந்தத்தைப் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்றுப் பாராட்டியிருக்க - இலட்சக்கணக்கான விவசாயிகளின் மனங்களைக் குளிரச் செய்யும் வகையில் அமைந்துள்ள இந்த ஒப்பந்தத்தைப் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் பாராட்டியிருக்கிறார்கள்.

1968ஆம் ஆண்டு தொடங்கி சுமார் முப்பது ஆண்டுக்காலமாகக் காவிரி டெல்டாப் பகுதி விவசாயிகளைத் தவிக்கவைத்துக் கொண்டிருந்த காவிரிப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வர அரும்பெரும் முயற்சிகளை மேற்கொண்ட முதல்வர் கலைஞர் அவர்கள் மிக்க அடக்கத்துடன்,

"இந்த வெற்றியை எனது தனிப்பட்ட வெற்றியாகக் கருதவில்லை. நான்கு மாநில விவசாயப் பெருமக்களுக்குக் கிடைத்த வெற்றியாகவே இதைக் கருதுகிறேன்"

- என்று ஒருமுறை அல்ல; இருமுறை அல்ல; திரும்பத் திரும்ப இந்தக் கருத்தை வலியுறுத்தியபடியே இருக்கிறார்.

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவும், அரசியல் பகை காரணமாகவும் ஆத்திரப்பட்டு - காவிரிப் பிரச்சினையைச் சிலர் அரசியலாக்க முனைவது எந்த விதத்தில் நியாயம்?

அறுபதாண்டுக் காலத்திற்கு மேல் இந்தத் தமிழினத்திற்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு அரும்பணியாற்றி வரும் கலைஞர் ஒரு நெருப்பு. அந்த நெருப்பில் ஈக்கள் மொய்ப்பதாக - யாராவது கூறினால் அப்படிச் சொல்பவரின் புத்திசாலித்தனம் சந்தேகத்திற்குரியது என்பதை தமிழ்மக்கள் அறிவார்கள். மொத்தத்தில் சொல்லப்போனால் - காவிரிப் பிரச்சினையில் கலைஞரை குறை சொல்வது - பெற்ற தாயையே சந்தேகப்படுவதற்கு ஒப்பாகும்.

- முரசொலி (12.8.98)



# மாரடைப்பு நோய் :

## அரசு பொது மருத்துவமனையில் 'ஸ்டென்ட்' சிகிச்சை முறை

மாரடைப்பு நோய்க்கு, அறுவை சிகிச்சை இல்லாமல் 'ஸ்டென்ட் சிகிச்சை' முறையினால் இப்பொழுது குணப்படுத்த இயலும். இதற்கு, 'கார்டியாலஜிஸ்ட்' எனப்படும் இருதய நோய் மருத்துவ நிபுணர்கள் அதிநவீன 'கார்டியாக் கேத் லேப்' **(Cardiac Cath Lab)** கருவியினைப் பயன்படுத்தி சிகிச்சை அளிக்கின்றார்கள்.

இருதயத்திற்கு இரத்தம் செலுத்தும் 'கரோனரி' இரத்தக் குழாய் **(Coronary Artery)** அடைப்பினை 'பலூன் ஆஞ்சியோபிளாஸ்டி **(PTCA)** மூலம் சரி செய்தபின், ஸ்டென்ட் சிகிச்சை செய்து கரோன்ரி இரத்த நாளங்கள் மீண்டும் அடைப்பு **(Restenosis)** ஏற்படாமல் தடுக்க இயலும்.

கார்டியாலஜிஸ்ட் செய்யும் இப்புதிய ஸ்டென்ட் சிகிச்சை முறையால் பைபாஸ் அறுவை சிகிச்சை **(CABG)** செய்யும் நிர்ப்பந்தம் தவிர்க்கப்படுகின்றது. ஸ்டென்ட் முறை செய்யும்போது, நோயாளிக்கு மயக்க மருந்து கொடுக்கத் தேவையில்லை; இதனால், சிகிச்சையின்பொழுது நோயாளி முழுநினைவோடு சாதாரணமாக இருக்கலாம். மிக நூதன முறையில், மேல் தொடையில் உள்ள 'பெஃமோரல் ஆர்ட்டரி' **(Femoral Artery)** வழியாக ஒரு சிறு ஊசியின் மூலம் இந்த ஸ்டென்ட் சிகிச்சை செய்யப்படுகின்றது. மேலும் இம்முறையில் அறுவை சிகிச்சையில் ஏற்படும் காயங்கள் மற்றும் வடுக்கள் இருக்காது. பைபாஸ் அறுவை சிகிச்சைக்கு நோயாளி மருத்துவமனையில் பத்து நாட்களாவது தங்கி இருத்தல் வேண்டும். மேலும், பல பாட்டில்கள் இரத்தமும், தவிர பலவகை மருந்துகளும் தேவைப்படும். ஆனால், ஸ்டென்ட் சிகிச்சைக்கு இருநாட்கள்தான் மருத்துவமனையில் தங்கவேண்டும்.

சென்னை, அரசு பொது மருத்துவமனையிலுள்ள இருதய இயல்துறை **(Cardiology Department)** பிரிவில், முதன்முறையாக, இருதய மருத்துவ நிபுணர்களால் இந்த ஸ்டென்ட் சிகிச்சை ஒரு ஏழை நோயாளிக்கு, வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளது.

'மெட்ரானிக்' **(Medtronic)** நிறுவனத்தின் 'பிஸ்டென்ட் ஆர்ட்டிஸ்ட் **(Bestent Artist) (3mm x 15 mm)** எனப்படும் ஸ்டென்ட், இந்த நோயாளியின் கரோனரி இரத்த நாளத்தில் **(Left Anterior Descending Artery)** பொருத்தப்பட்டு அடைப்பு நீக்கப்பட்டுள்ளது.

சுமார் ரூ.65,000 மதிப்புள்ள ஸ்டென்ட் மற்றும் உபகரணங்களை இந்த ஏழை நோயாளிக்கு நன்கொடையாக வழங்கிய 'மெட்டெக்-மெட்ரானிக்' **(Medtech-Medtronic)** நிறுவனத்திற்கு எங்களது மனமார்ந்த நன்றியும், பாராட்டும் உரித்தாகுக! மேலும் இந்தச் சிகிச்சையைத், தனியார் மருத்துவமனைகளில் செய்வதானால் **(Corporate Hospitals)** சுமார் ரூ.1½ (ஒன்றரை) இலட்சம் ரூபாய் வரை செலவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பலூன், ஸ்டென்ட் உபகரணங்கள், இப்பொழுது மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் நலவாழ்வு நிதியின் **(Chief Minister's Health Fund)** மூலமாகக் கிடைக்கப்பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், வசதிமிக்க நோயாளிக்குத் தனியார் மருத்துவமனைகளில் கிடைக்கும் சிகிச்சை இப்பொழுது ஏழை, எளியவர்கட்கு அரசு மருத்துவமனைகளில் அளித்து, நலம்பெறச் செய்ய இயலும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.




**பேராசிரியர்.S.D. ஜெயராஜ்**
பேராசிரியர் மற்றும் தலைவர்,
இருதய இயல் துறை
அரசு பொதுமருத்துவமனை,
சென்னை - 600 003.




8-ஆம் பக்கத் தொடர்ச்சி

***குறித்து வினவியபோது, நான் அளித்த பதிலிலிருந்து ஒரு பகுதியை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.***

"தேசிய நதிநீர்க் கொள்கை என்பது புறக்கணிக்கப்படக்கூடிய ஒன்று அல்ல. ஆனால் அந்தக் கொள்கையையும், காவிரிப் பிரச்சினையையும் இப்போது முடிச்சுப்போட்டு, அந்தக் கொள்கையை வலியுறுத்துகின்ற காரணத்தால், காவிரிப் பிரச்சினையைத் தள்ளிப்போடுவோம் என்ற கருத்தை நாம் ஏற்பதற்கில்லை. இதை மிகத் தெளிவாகப் பலமுறை நாம் விளக்கியிருக்கின்றோம். இதிலே உச்ச நீதிமன்றம் இதுபற்றி விசாரணை நடத்திக்கொண்டு இருக்கிறது.

இடையிலே உச்ச நீதிமன்றம் தந்த ஒரு கருத்தின் அடிப்படையிலேதான் மீண்டும் ஒருமுறை கர்நாடக் முதலமைச்சரோடு



நான் பேசுவதற்கு ஒத்துக்கொண்டு 4,5 தடவை பேசிப்பார்த்து, அதிலே ஒரு முடிவு கிடைக்காத காரணத்தால், அதைப்பற்றி உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சொல்லி, பிரச்சினையை நீதிமன்றத்திற்கே விட்டுவிட்டோம்.

பிறகு, உச்ச நீதிமன்றம் மத்திய அரசிலேயிருந்து ஒரு கருத்தைப் பெற்றது. மத்திய அரசு வகுத்துக் கொடுத்த அந்தக் கருத்து மாநில அரசுகளுடைய கருத்துக்கு உடன்பட்டதா? அல்லவா? என்பதை உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென்று தமிழகம், கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களுக்கு விடுக்கப்பட்ட அந்த அறிவிப்பின் மீது, தமிழ்நாடு தன்னுடைய கருத்தை அனுப்பியிருக்கிறது. அதைப்போலவே கேரளம் தன்னுடைய கருத்தை அனுப்பியிருக்கிறது. பாண்டிச்சேரி தன்னுடைய கருத்தை அனுப்பிவைத்து இருக்கின்றது.

கர்நாடகம் மாத்திரம் ஏற்கெனவே ஐக்கிய முன்னணியினுடைய மத்திய அரசு - எடுத்த நிலைக்கு, மாறாக வேறொரு நிலையை எடுத்திருக்கிறது. 'அத்தாரிட்டி' என்ற ஒன்றை அமைக்க வேண்டும் என்பது மத்திய அரசினுடைய திட்டத்திலே ஒரு பெரும் கூறாகும். அந்த அத்தாரிட்டியினுடைய பணி என்னவென்றால் நடுவர் மன்றம் அளித்த இடைக்காலத் தீர்ப்பில் உள்ள எல்லா அம்சங்களும் அமலாக்கப்படுவதை உறுதிசெய்வதுதான்.

அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாத கர்நாடக அரசு, "அத்தாரிட்டி என்று இருக்கக் கூடாது, கமிட்டி என்று இருந்தால் போதுமானது" என்று கூறுகிறது. அதிலே நமக்கும் அவர்களுக்கும் ஒத்துவராத கருத்து இருக்கின்றது. இதைத்தான் வலியுறுத்திக்கொண்டே இருக்கின்றோம்.

7.4.98 அன்று இப்பொழுதுள்ள பிரதமர் திரு.வாஜ்பாய் அவர்களை டெல்லியிலே சந்தித்த போது கூட அவரிடத்தில் தமிழ்நாட்டின் நலனுக்காகக் கொடுக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளிலே முக்கியக் கோரிக்கையாகக் காவிரிப் பிரச்சினை பற்றிய கோரிக்கையையும் தந்து விவாதித்து இருக்கின்றேன். "இதிலே ஐக்கிய முன்னணி அரசு எடுத்த அதே நிலையைத் தான் நீங்களும் தொடர்ந்து பின்பற்ற வேண்டும், இல்லாவிட்டால், அது தமிழகத்திற்கு, தமிழக விவசாயிகளுக்குப் பேராபத்தாக முடியும்" என்பதை அவரிடத்திலே வலியுறுத்திக் கோரிக்கையாகவும் கொடுத்து இருக்கிறேன். நேரிலும் பேசிவிட்டு வந்திருக்கின்றேன்."

ஆனால், தற்பொழுது பிரதமர் அவர்கள் இந்தத் திட்டத்தை இறுதியாக்குவது குறித்து சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்களின் கூட்டத்தை 6.8.1998ஆம் நாளான்று புதுடெல்லியில் கூட்டியுள்ளதைத் தாங்கள் அனைவரும் அறிவீர்கள். இதன் முன்னோடியாக மத்திய அமைச்சரவைச் செயலர், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் தலைமைச் செயலர்களது கூட்டத்தை 29.7.1998 ஆம் நாளன்று கூட்டினார்.

### முக்கியமான மாற்றங்கள்

இக்கூட்டத்தில் ஒரு திருத்திய வரைவுத் திட்டத்தின் நகல் அளிக்கப்பட்டது. அதன் நகலும் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் திருத்திய வரைவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான மாற்றங்கள் பற்றி மட்டும் இத்தருணத்தில் எடுத்துக்கூற விழைகிறேன்.

## பவளவிழாப் பரிசு !

"எனக்கும் வாஜ்பாய்க்கும் கொள்கையிலே பல கருத்து மாறுபாடுகள் இருக்கலாம். இலட்சியத்திலே பல கருத்து மாறுபாடுகள் இருக்கலாம். இன்னும் சொல்லப்போனால் அது அடிப்படை வேறுபாடுகளாகக் கூட இருக்கலாம். ஆனால், நான் எப்போதுமே வாஜ்பாய், அத்வானி போன்றவர்களைத் தனிப்பட்ட முறையில் மதிப்பவன். அவருடைய ஆட்சியை மதிக்கிறேனா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால், அந்த ஆட்சி நடத்தினாலும், நடத்தா விட்டாலும் வாஜ்பாய், அத்வானி போன்றவர்களை நான் என்றைக்கும் மதிப்பவன்.

கொடுத்த வாக்குறுதியைத்தான் வாஜ்பாய் மதிப்பார் என்பதற்கு அடையாளமாக இந்த நல்ல செய்தி, 205 டி.எம்.சி. தண்ணீர் தரப்படும் என்ற நல்ல செய்தி கிடைத்திருக்கிறது. இதைத் தொடர்ந்து முழுமையான செய்தி. முடிவான செய்தி வரக்கூடும் என்பதைத் தெரிவித்து, இயற்கை தமிழன்னை, தமிழர்களாகிய நீங்கள் தமிழக விவசாயப் பெருங்குடி மக்களாகிய நீங்கள், கர்நாடகத்து மக்கள், கேரளத்து மக்கள், புதுவை மக்கள் அத்தனை மக்களும் சேர்ந்து கருணாநிதிக்கு அளித்த பவளவிழா பரிசு என்று எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன்.

- 10-8-98 அன்று நடைபெற்ற மொரப்பூர் நிகழ்ச்சியில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

அதாவது, காவிரி நதிநீர் நடுவர் மன்றத்தின் ஆணையம் அமையும். அதன் ஆணையை உரிய முறையில் எந்த ஒரு மாநிலமும் செயலாக்கம் செய்யாவிட்டால், காவிரி நதியிலுள்ள நீர்த்தேக்கங்களின் இயக்கத்தையும், பராமரிப்பையும், ஏற்படுத்தப்படவுள்ள ஆணையம் தன்வசம் எடுத்துக்கொண்டு தேவைப்படும் காலம் வரை இயக்கி வரும் என்ற விதி வகுக்கப்படும் - என்பதாகும்.

கர்நாடகா மற்றும் கேரளா அந்த விதியை நீக்கவேண்டும் என்று கூறியுள்ளன. இந்த விதி நமக்குச் சாதகமாக அமைந்துள்ள போதிலும், நாம் மாநில சுயாட்சியைத் தொடர்ந்து வற்புறுத்தி வருவதாலும், அரசியலமைப்புப்படியும் இந்த விதியை இத்திட்டத்திலிருந்து நீக்குவதற்கு நாம் இசைவளிக்கலாமா? என்று விவாதிக்கலாம்.

இரண்டாவதாக, காவிரி நதிநீர் ஆணையத்தின் முடிவுகளை மறுபரிசீலனை செய்ய திருத்திய வரைவுத் திட்டத்தில் மத்திய நீர் ஆதார அமைச்சரைத் தலைவராகக் கொண்டு, சம்பந்தப்பட்ட மாநில முதலமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு பரிசீலனைக் குழுவை (Review Committee) நியமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

முக்கியமான இனங்களில் எந்த ஒரு மாநில அரசிடம் இருந்து விண்ணப்பம் வரப்பெற்றாலும் இந்தக் குழுவின் தலைவர் ஆணையம் பிறப்பித்த முடிவின்மீது இடைக்காலத் தடையை வழங்கலாம். இவ்வாறு அளிக்கவிருக்கும் அதிகாரத்தால் நமது மாநிலத்துக்குப் பாதகம் ஏதாவது ஏற்படுமோ என்ற அச்சம் எழுகிறது.

மேலும் மறுபரிசீலனைக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்துகொண்டால் மட்டுமே ஆணையம் எடுத்த முடிவை மறுபரிசீலனை செய்யலாம் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் அனைவரும் கலந்துகொள்ளவேண்டும் என்பது நடைமுறையில் சாத்தியமற்றதாக அமையக்கூடும்.

எனவே கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களின் ஒருமித்த கருத்தின் அடிப்படையிலோ அல்லது இக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்களிப்பின்படியோ முடிவு செய்யலாம். எனவே, இந்த இனங்கள் குறித்தும் விவாதிக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

தற்பொழுது பிரதமர் கூட்டியுள்ள இக்கூட்டம், உச்ச நீதிமன்றத்தின் முன் நடைபெறுகின்ற வழக்கின் தொடர்ச்சியாக இருப்பதால், இக்கூட்டத்தில் கலந்துகொண்டு தமிழகத்தின் நிலையைப் பிரதமரின் முன் எடுத்துரைக்கும் வாய்ப்பைப் பெறலாமா - அல்லது வேண்டாமா - என்பது குறித்தும் தங்களின் மேலான கருத்துக்களைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்."

- இவ்வாறு கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

### நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

- இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கியத் தீர்மான *விவரம் வருமாறு :*

*இந்தியப் பிரதமர் 6-8-1998 அன்று புதுதில்லியில் கூட்டியிருக்கும் கூட்டம் உச்ச நீதிமன்றத்தின் நடவடிக்கைகளின் தொடர்ச்சியென்பதாலும், காவிரி நடுவர் மன்றத்தின் 25-6-1991 நாளிட்ட ஆணையைச் செம்மையான முறையில் செயலாக்கும் பொருட்டு, வரைவுத் திட்டத்தை இறுதிசெய்து, மத்திய அரசின் அரசிதழில் வெளியிட மேற்கொள்ளப்பட்டுள்ள சீரிய முயற்சி என்பதாலும் தமிழ்நாடு முதலமைச்சர் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளலாம்; மற்றும் காவிரி நடுவர் மன்றத்தின் 25-6-1991 நாளிட்ட ஆணையை மிகச் சீரிய முறையில் நிறைவேற்றும் பொருட்டு, மத்திய அரசு வகுத்துள்ள திட்டத்தை இறுதியாக்கி அரசிதழில் வெளியிட உரிய - மற்றும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அடிப்படையில் நடவடிக்கைகளை முதலமைச்சர் மேற்கொள்ளலாம்.*

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட 41 கட்சியினரின் ஒருமனதான ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### முதல்வர் நிறைவுரை

காவிரி நீர்ப் பிரச்சினை - அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய நிறைவு உரை :

அன்பிற்குரிய அனைத்துக் கட்சித் தலைவர்களே,

காலையிலிருந்து இதுவரையில் உணவைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல், எல்லா மக்களுக்கும் தமிழகத்திலே உணவு வேண்டும் என்பதற்கான காவிரிப் பிரச்சினை பற்றி விரிவாகப் பேசியிருக்கிறோம். இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மிக முக்கியமாகக் கருத்து அறிவிக்கப்பட்ட இரண்டு விஷயங்கள் - கடந்த கால மத்திய ஆட்சியிலே வகுக்கப்பட்ட (ஸ்கீம்) திட்டத்தைப் பற்றி ஒன்று; அவைகளைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேசி ஒரு முடிவெடுக்கப் பிரதமர் அழைத்துள்ள இந்த நிலையில் உடன்பட்டு அங்கே செல்வதா? வேண்டாமா? என்பது மற்றொன்று.

இடையிலே எவ்வளவோ கருத்துக்களைச் சொல்லியிருந்தாலும் கூட, பிரதானமாக இந்த இரண்டு விஷயங்கள் தான் முன் நிற்கின்றன.



இதிலே முதலமைச்சர் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்றும் - வேண்டாமென்றும் கருத்துக்கள் இங்கே கூறப்பட்ட போதும் - ஒரு பொதுப்பிரச்சினையில் நண்பர் ஜெகவீரபாண்டியன் குறிப்பிட்டதைப் போல - எண்ணிக்கையை மாத்திரம் வைத்து ஒரு முடிவெடுக்கக்கூடாது என்ற போதிலுங்கூட - இந்த முடிவு எடுப்பதால் ஏற்படும் சாதக, பாதகங்களைப் பற்றிச் சற்று நாம் சிந்திக்கவேண்டும்.

*எண்ணிக்கையை மாத்திரம் வைத்து முடிவெடுக்க வேண்டுமா, வேண்டாமா என்று சிந்திக்கும் நேரத்தில் - சென்றால் ஏற்படக்கூடிய விளைவுகள்தான் முக்கியம்.* இங்கே பேசிய சிலர் "செல்வதால் என்ன சாதகம்" ஏற்பட்டு விடுமென்று கேட்டார்கள். அதையே திருப்பிக் கேட்டால் "போவதால் என்ன பாதகம்" ஏற்பட்டுவிடும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கலாம். ஏனென்றால் இனிமேல் புதிதாக இழப்பதற்கு ஒன்றுமில்லை. பெறுவதற்கு ஏதாவது இருந்தால் - செல்வதால் பயன் ஏற்படக்கூடும். சென்று இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களை அழுத்தந்திருத்தமாக எடுத்துவைத்து, அதற்கு உடன்படவில்லையென்றால் - நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது, இதற்குத் தான் அனைத்துக் கட்சியிலே உள்ளவர்களில் சிலர் செல்ல வேண்டாமென்று அப்போதே சொன்னார்கள். நான் கேட்கவில்லை; 'என் புத்திக்கு வேண்டும்' என்று சொல்லிவிட்டுத் திரும்பலாமே தவிர, செல்லாமலே இருந்து - ஆகா, நீ வந்திருந்தால் மலையைப் புரட்டியிருக்கலாம்; கடலையே வற்ற வைத்திருப்போம், நீ வராததால்தான் எல்லாம் கெட்டுவிட்டது - என்று சொல்கின்ற அந்தப் பழிக்கு நாம் ஆளாக வேண்டுமா? - என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

### முதன் முதலாகப் பிரதமர்

*இன்னொன்று, இந்த முப்பதாண்டுக் காலமாக நடைபெறுகின்ற - பேச்சுவார்த்தை - இந்த ஒப்பந்தத்தைப் பற்றிய பிரச்சினைகளில் - முதன்முதலாகப் பிரதமரே முன்னின்று நடத்துகின்ற முதல் கூட்டம், இந்தக் கூட்டம்தான் என்பதை மறந்துவிடக் கூடாது. ஒவ்வொரு முறையும், பிரதமருடைய ஆலோசனையோடு மத்திய அரசிலே உள்ள யாராவது ஒரு முக்கியமான அமைச்சர்தான் கலந்துகொண்டு, மூன்று நான்கு மாநில முதலமைச்சர்களையும் அமர வைத்துக்கொண்டு - அங்கே தங்கள் கருத்துக்களை எடுத்துக்கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்த முறைதான் - முதல் தடவையாக - ஏற்கெனவே ஒரு முறை ஏற்பட்ட பூசலுக்குப் பிரதமர் நரசிம்மராவ் தலையிட்டு அதைத் தீர்த்துவைத்தார் என்றாலுங்கூட - இப்படி சம்பந்தப்பட்ட முதல் அமைச்சர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி, அடிப்படை ஒப்பந்தத்தைப் பற்றி யாருமே பேசியதில்லை. இப்பொழுது அந்த ஒப்பந்தத்தை எப்படி நிறைவேற்றுவது என்பதைப் பற்றிப் பேசுகின்ற காலக் கட்டம். அதற்காக நம்மை அழைத்திருப்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.*

நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு - அதாவது மத்திய அரசு ஏற்றுக்கொண்டு அதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதைப் பற்றி வகுக்கப்பட்டிருக்கின்ற அந்தத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள சில நிறைகுறைகளைக் கர்நாடக அரசும் கேரள அரசும் தனித்தனியாகவும் - கர்நாடக அரசும், கேரள அரசும் சேர்ந்தும் சொல்கின்ற சில திருத்தங்களைத் தமிழகம் ஏற்றுக் கொள்கிறதா என்பதைக் கேட்கவும் - தமிழகம், இப்படி எல்லா உறுப்பினர்களும் என்றிருப்பதைத் திட்டத்தில் மாற்ற வேண்டுமென்று சொல்கிறோமல்லவா? இதை அந்த இரண்டு மாநிலங்களும் ஏற்றுக் கொள்கிறதா என்பதை அறிந்துகொள்ளவும்தான் இந்தக் கூட்டத்தை அவர்கள் கூட்டியிருக்கிறார்கள். எனவே இங்கு கருத்துக் கூறியவர்களிலே பெரும்பான்மை என்ற அடிப்படையிலே அல்ல; உரிய காரணங்கள் என்ற அடிப்படையில் - நான் பெரும்பான்மை, சிறுபான்மை என்று பார்த்து - சிறுபான்மையோர் சொன்னதை ஏற்கவில்லை என்கின்ற அலட்சியப் புத்தியோடு, ஆணவத்தோடு இந்தக் கருத்தைச் சொல்லவில்லை. பொதுவாகத் தமிழக நலனை உத்தேசித்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தருமாறு உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அக்கூட்டத்தில் உரையாற்றினார்.

### பிரதமர் கூட்டம்

காவிரிப் பிரச்சினை குறித்து, மத்திய அரசின் வரைவுத் திட்டத்தை ஆகஸ்ட் மாதம் 12ஆம் தேதிக்குள் வெளியிடுமாறு ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் ஆணையிட்டிருந்தது.

அதனடிப்படையில் விவாதிக்க தமிழ்நாடு, கர்னாடகம், கேரளம், புதுவை ஆகிய 4 மாநில முதல்வர்களின் கூட்டத்தைப் பிரதமர் கூட்டியிருந்தார்.



6.8.98 அன்று, புதுடில்லியில் நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு இந்தியப் பிரதமரே தலைமை தாங்கினார். இதுவரையில், இந்தப் பிரச்சினை பற்றி மத்திய அரசு நடத்திய கூட்டங்களில் அந்தந்தத்துறை அமைச்சர்கள் மட்டும் தான் கலந்து கொண்டார்களே தவிர, பிரதமரே கலந்துகொண்டது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

காவிரிப் பிரச்சினையில், நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவது பற்றி, உச்ச நீதி மன்றம் தெரிவித்த அறிவுரையின்படி - மாறுபாடுகளைக் குறைத்து, ஒப்புக் கொள்ளக்கூடிய முடிவுகளை எடுப்பதற்காக நடந்த இக்கூட்டத்தில் - பிரதமர் அழைப்பின்பேரில் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்று கலந்துகொண்டார்.

*காவிரி நதிநீர்ப் பிரச்சினை தொடர்பாகப் பிரதமர் வாஜ்பாய் கூட்டிய முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளவும், தமிழ்நாட்டிற்குத் திட்ட ஒதுக்கீடு பற்றித் திட்டக்குழுத் துணைத் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தவும் புதுடில்லிக்கு ஆகஸ்ட் 5 ஆம் தேதி மாலை வருகைதந்த முதல்வர் கலைஞர் அவர்கள்*



*3 நாட்கள் அங்கேயே தங்கி, பேச்சுவார்த்தையில் வெற்றிகரமான நல்ல முடிவு பெற்றுக்கொண்ட பின்பே 8 ஆம் தேதியன்று சென்னை திரும்பினார்.*

டில்லியில் நடைபெற்ற கூட்டம் பற்றிய விவரம் வருமாறு :

புதுடெல்லியில் பிரதமர் ஏ.பி.வாஜ்பாய் முன்னிலையில் 7.8.98 காலை காவிரி நதிநீர் தாவா பற்றிய பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்றது. அதில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் முதல்வர்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதல்வர்களால் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

### இடைக்கால ஆணையின்படி 205 டி.எம்.சி தண்ணீர் விட முடிவு

காவிரி நதிநீர் ஆணையத்தின் இடைக்கால ஆணையையும், பின் அது தொடர்பான பிற ஆணைகளையும் செயல்படுத்துவதற்கு ஒரு திட்டம் வகுக்கப்படும். இடைக்கால ஆணையின்படி, 205 டி.எம்.சி. தண்ணீர் மேட்டூர் அணைக்கு விடுவிக்கப்பட வேண்டும்.

இத்திட்டத்தின்படி, பிரதமர், காவிரி பாயும் 4 மாநிலங்களின் முதல்வர்களும் அடங்கிய ஆணைக்குழு அமைக்கப்படும். பிரதமர் அவர்கள் இந்த ஆணைக்குழுவின் தலைவராக விளங்குவார். இக்குழு தனது செயல்முறைகளுக்கான விதிகளையும், செயல்படுத்தும் முறைகளையும் உருவாக்கும்.

ஒரு கண்காணிப்புக்குழு அமைக்கப்படும். இந்த கண்காணிப்புக் குழுவின் பங்கு செயல்முறைகள், கடமைகள், அதிகாரங்கள் ஆகியன மீது கூட்டத்தில் ஒருமித்த கருத்து உருவாகவில்லை. தமிழகமும், பாண்டிச்சேரியும் இடைக்கால ஆணையைச் செயல்படுத்தும் அதிகாரம் இந்தக் கண்காணிப்புக் குழுவுக்கு வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்தன. ஆனால், கர்நாடக மாநிலம் அக்கருத்தினை ஏற்கவில்லை. ஆணைக் குழுவிற்கு ஆலோசனை வழங்கும் அமைப்பாக மட்டுமே கண்காணிப்புக் குழு செயல்படவேண்டும் என அது வலியுறுத்தியது. கேரள மாநிலம் இப்பிரச்சினை மீது, நடுநிலை வகித்தது. ஆகையால், மத்திய அரசின் அமைச்சரவைச் செயலர் தலைமையில், காவிரி பாயும் மாநிலங்களின் தலைமைச் செயலர்களை உறுப்பினராகக் கொண்டு ஒரு வரைவுக்குழு அமைக்கப்பட்டு, அக்குழு இப்பிரச்சினை குறித்து ஆராய்ந்து, கண்காணிப்புக் குழுவின் பங்கு, செயல்முறைகள், கடமைகள், அதிகாரங்கள் ஆகியவற்றை முடிவு செய்யும்.

முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இக்கூட்டத்தில் சுமுகத் தீர்வு காண வழிவகுத்த பிரதமர் அவர்களுக்கும், திட்டக்குழுவின் துணைத் தலைவர் ஜஸ்வந்த் சிங் அவர்களுக்கும், மத்திய மாநில அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்தார்.

மேலும், சென்னையில் 3.8.98 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டு, ஆதரவு அளித்த அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் தமிழக முதலமைச்சர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

### அரசிதழில் செயல்திட்டம்

பிரதமர் வாஜ்பாய் தலைமையில் புதுடில்லியில் நடந்த மாநில முதல்வர்களின் கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட அம்சங்களின் அடிப்படையில் செயல்திட்டம் இறுதி செய்யப்பட்டது. "காவிரி நீர்" (நடுவர் மன்றத்தின் 1991 ஆணை மற்றும் அது தொடர்பான ஆணைகளைச் செயல்படுத்துதல்) திட்டம் என்று அத்திட்டம் குறிப்பிடப்படும். நடுவர் மன்ற இடைக்கால உத்தரவைச் செயல்படுத்த மத்திய அரசுக்கு ஆணையிடுமாறு தமிழகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவைத் தொடர்ந்து, 12.8.98க்குள் அத்திட்டத்தை இறுதி செய்யுமாறு மத்திய அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளம், புதுவை ஆகிய மாநில முதலமைச்சர்கள் மாநாட்டை மாண்புமிகு இந்தியப் பிரதமர் கூட்டிக் கலந்துபேசி நல்லதோர் முடிவெடுத்தார்.

அதன்படி, காவிரி நடுவர்மன்ற இடைக்கால உத்தரவைச் செயல்படுத்துவதற்கான செயல்திட்டம், மத்திய அரசின் அரசிதழில் 11.8.98 செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது. இது உடனடியாக அமல்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. உச்ச நீதிமன்றத்திற்கும் இம்முடிவு முறைப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுக் காலமாக எட்டப்படாதிருந்த இந்த நல்ல முடிவு கிட்டச் செய்த கலைஞருக்கு அனைத்துக்கட்சித் தலைவர்களும் புகழாரம் சூட்டினர்.

### உச்ச நீதிமன்ற முடிவு

உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு தொடர்ந்து இருந்து காவிரி நீர் வழக்கு கடந்த 12-ந் தேதி விசாரணைக்கு வந்தபோது மத்திய அரசு வக்கீல் சோலி சோராப்ஜி, புதிய வரைவு திட்டத்தை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். தலைமை நீதிபதி பூஞ்ச்சி தலைமையில் 3 நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச் அந்த வரைவுத் திட்டத்தை, 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சட்ட பெஞ்ச்சின் முடிவுக்கு அனுப்பி வைத்தனர். இந்த வழக்கைப் பற்றி அரசியல் சட்ட பெஞ்ச் இறுதி முடிவு எடுக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.



இந்த வழக்கு 17.8.98 அன்று அரசியல் சட்ட 'பெஞ்ச்' முன்பு விசாரணைக்கு வந்தது. தலைமை நீதிபதி எம்.எம்.பூஞ்ச்சி, நீதிபதிகள் எஸ்.சி. அகர்வால், ஏ.எஸ். ஆனந்த், எஸ்.பி.பருச்சா, ஏ.பி. மிஸ்ரா ஆகிய 5 பேர் இதை விசாரித்தனர். வரைவுத் திட்டநகல் அவர்முன் தாக்கல் செய்யப்பட்டது.

காவிரிப் பிரச்சினையில் உடன்பாடு ஏற்பட்டு விட்டதால் தமிழக அரசு தாக்கல் செய்து இருந்த வழக்கை முடிவுக்கு கொண்டு வரலாமா என்று 4 மாநில வக்கீல்கள் மற்றும் மத்திய அரசு வக்கீல்களிடம் நீதிபதிகள் கருத்து கேட்டனர்.

அதற்குச் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

### நல்ல தீர்ப்பு

இதைத் தொடர்ந்து தமிழக அரசின் வழக்கை முடிவுக்குக் கொண்டு வருவதாக நீதிபதிகள் தீர்ப்புக் கூறினார்கள். தீர்ப்பு விவரம் வருமாறு :-

மாநிலங்களுக்கு இடையேயான நதி நீர் தாவா சட்டம் 6-வது பிரிவின் கீழ் காவிரி நடுவர் மன்ற இடைக்கால உத்தரவை அமல்படுத்துவதற்கான வரைவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் அரசிதழிலும் வெளியிடப்பட்டு விட்டது. இதனால் பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்து விட்டன.

வரைவுத் திட்டம் அரசிதழில் வெளியிடப்பட்டு விட்டதால் இந்த வழக்கை முடிவுக்குக் கொண்டு வரலாம் என்று தமிழக அரசின் வக்கீல் பராசரன் கூறியுள்ளார். கர்நாடகா, கேரளா, புதுச்சேரி மாநிலங்களும் இதில் தங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்துள்ளன.

அதேபோல அட்டர்னி ஜெனரல் (மத்திய அரசு வக்கீல்) சோலி ஜே.சோராப்ஜியும் ஆட்சேபணை இல்லை என்று கூறி இருக்கிறார். எனவே முறைப்படி இந்த வழக்கு முடிவுக்கு வருகிறது.

இவ்வாறு தீர்ப்பில் கூறப்பட்டு இருந்தது.

நீதிபதிகள் வேறு உத்தரவுகள் ஏதும் பிறப்பிக்கவில்லை.

இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து மத்திய அரசின் புதிய வரைவு திட்டத்தை சுப்ரீம் கோர்ட்டின் அரசியல் பெஞ்ச் ஏற்றுக் கொண்டு தனது அங்கீகாரத்தை வழங்கி உள்ளது. கடந்த 7 ஆண்டுகளாக நீடித்து வந்த காவிரி நீர் நடுவர் மன்ற உத்தரவு பிரச்சினையும் இவ்வாறு ஒரு முடிவுக்கு வந்தது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பெருமகிழ்ச்சி தெரிவித்தார்.

"இது, சுதந்திரத் திருநாள், பொன்விழா நிறைவு விழாவில் கிடைத்த நல்ல செய்தியாகும்" என்று, சென்னையில் நடைபெற்ற சுதந்திரப் பொன்விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய கலைஞர் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியும், இதற்குத் துணையிருந்த அனைவருக்கும் நன்றியும் தெரிவித்தார்.

"நான்காவது முறையாகத் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள கலைஞர் அவர்களின் புகழ் மகுடத்தில், இந்த ஏற்பாடு ஒரு நன் முத்தாகப் பதிக்கப்பட்டுச் சுடர்விடுவதாகும்' என நாடும், நன்னெஞ்சங்களும் அவரைப் பலபடப் போற்றிப் புகழ்பாடுகின்றன !

- பி.எல்.ராஜேந்திரன்

## உயிரியல் முறையில் ஆரஞ்சு - எலுமிச்சை வேர் - நூற்புழுக் கட்டுப்பாடு

*தமிழ்நாட்டில் ஆரஞ்சு மற்றும் எலுமிச்சை பயிரிடும் எல்லாப் பகுதிகளிலும் இந்த வேர் நூற்புழுவின் பாதிப்பு, பரவலாகக் காணப்படுகின்றது. இந்த வேர் நூற்புழுவைக் கட்டுப்படுத்த சூடோமோனா ஃபுளூரசன்ஸ் என்ற பயிர்வளர்ச்சியை ஊக்குவிக்கும் பாக்டீரியா பயனுள்ளதாக இருப்பது ஆராய்ச்சிகள் மூலம் அறியப்பட்டது.*

*இந்த பாக்டீரியா கலவையை, மரத்திற்கு 20 கிராம் வீதம் நான்கு மாதத்திற்கு ஒரு முறை மரத்தைச் சுற்றி 15 செ.மீ, ஆழத்தில், 50 செ.மீ. இடைவெளியில், மணலுடன் கலந்து இடவேண்டும். இந்த பாக்டீரியா புதிதாகத் தோன்றும் வேர்களின் மேல் நன்கு வளர்ந்து, நூற்புழுக்களை வேர்களில் உட்புகாமல் தடுக்கின்றன. மேலும் இந்த பாக்டீரியாவிலிருந்து உருவாகும் பல வேதிப்பொருட்கள் மண்ணில் உள்ள நூற்புழு முட்டைகள் அழிந்து போகவும் காரணமாய் இருக்கின்றன.*

*இதனால், நூற்புழுக்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து, ஆரஞ்சு மற்றும் எலுமிச்சையில் இந்நூற்புழு பாதிப்பினால் தோன்றிய வெளிறிய, மஞ்சள் நிறத்துடன் இருந்த இலைகள் 20 சதவிகிதமாகக் குறைந்து காணப்பட்டன. இந்த பாக்டீரியா கலவையை, ஒரு மரத்திற்கு வைக்க ஆகும் செலவு ஆண்டிற்கு ரூ.8.10 மட்டுமே. இந்த சூடோமோனாஸ் ஃபுளூரசன்ஸ் பாக்டீரியா கலவையினை, கிலோ ஒன்றுக்கு ரூ.45/- என்ற விலையில், பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை - 3 என்ற முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.*

- எஸ். ராஜேஸ்வரி, எ.சாந்தி மற்றும் எம்.பி.மணி, நூற்புழுவியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை 641 003.

# தியாகசீலர் தீர்த்தகிரி



முதறிஞர் ராஜாஜியோடும் - தமிழ்த்தென்றல் திருவி.க., கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., பாலகங்காதார திலகர், பாரதியார், சுப்பிரமணிய சிவா, வாஞ்சிநாதன் ஆகியோருடனும் நெருங்கிய தோழமை கொண்டிருந்தார் தீர்த்தகிரியார்.

சுவாமி விவேகானந்தரையே தருமபுரிக்கு அழைத்துவந்து சொற்பொழிவாற்றச் செய்த சிறப்பினர், இவர். காந்தியடிகளையும், முதன்முதல் இவ்வாறே இவர்தான் அவ்வூருக்கு அழைத்துவந்தார்.

காந்தியார் மீதிருந்த மாறாத பற்றுதலால் தன் மகளுக்கே 'காந்திமதி' என்று பெயரிட்டவர் தீர்த்தகிரியார்.

பேச்சிலும், செயலிலும் மிக வேகமாக இருந்தவர் இவர்; இதன் காரணமாகவே, சுப்பிரமணிய சிவா இவருக்கு 'எம்டன்' என்று பெயர் வைத்திருந்தார்.



தருமபுரி மாவட்டம் - அரூர் மாவட்டத்தில் அமைந்திருக்கிறது தீர்த்த மலை; ஏராளமான கோயில்கள் இங்குள்ளன.

'தக்கனின் யாகத்தை அழித்த பிறகு, இறைவன் தவம்புரியத் தேர்ந்தெடுத்த இடம் இது; அதனால்தான் இந்த மலையே லிங்க வடிவில் இருக்கிறது' என்கிறார்கள் பக்தர்கள்.

என்றும் வற்றாத ஐந்து தீர்த்தங்கள் - அதாவது, அருவிகள் இந்த மலையில் உண்டு; இதில் நீராடினால் பல நோய்களும் தீருமாம்; சொல்கிறார்கள். மலையடிவாரக் கோயிலின் முன் மண்டபம், பிற்காலச் சோழ மன்னர்களில் பெரும்புகழ் பெற்றவனான முதலாம் இராசேந்திர சோழனால் புதுப்பிக்கப்பட்டது.

இத்தனைப் பெருமை மிக்க தீர்த்தகிரி உள்ள மாவட்டம் என்பதாலேயே பலருக்கும் இப்பகுதியில் 'தீர்த்தகிரி' என்று பெயர் சூட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.

இந்தப் பெயரில் - தருமபுரி மாவட்டம் அன்னசாகரத்தில் பிறந்து வாழ்ந்த தேசியவாதி தீர்த்தகிரி முதலியார் குறிப்பிடத்தக்கவர்; இந்திய விடுதலைப்போரில் ஈடுபட்டு ஒன்பதாண்டுகாலச் சிறை தண்டனை பெற்றவர்.

தருமபுரி நகரமன்றத் திடல், 'தியாகி தீர்த்தகிரியார் சதுக்கம்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. தருமபுரியில் கைத்தறி நெசவாளர் குடியிருப்புப் பகுதியில் தியாக சீலர் தீர்த்தகிரியாரின் மார்பளவுச் சிலையொன்று, அப்போதைய குடியரசுத் துணைத்தலைவராக இருந்த மேதகு ஆர்.வெங்கட்ராமன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

- பி.எல்.ஆர்.



# பசுமைப் புரட்சியில் பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் பங்கு !

அகில இந்திய ரீதியில் தேசிய வேளாண் ஆராய்ச்சித் திட்டத்தினை 1981ஆம் ஆண்டு ஆரம்பித்து, இந்தியாவை 153 வேளாண் தட்பவெப்ப மண்டலங்களாகப் பிரித்தனர். இதன்படி தமிழகத்தை மொத்தம் ஏழு வேளாண்மை தட்பவெப்ப மண்டலங்களாக பிரித்துள்ளனர். அதில் வடமேற்கு மண்டலத்தில் தலைமை இடமாகக் கொண்டு செயல் படுவதுதான் பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையம். இது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கம். இம்மண்டலம் தருமபுரி, சேலம், நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு நீங்கலாகவும், திருச்சி மாவட்டத்தின் பெரம்பலூர் பகுதியையும் உள்ளடக்கியது. இம்மண்டலம் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் ஏற்படும் வேளாண்மை பிரச்சினைகளுக்கு, பகுதிக்கு ஏற்ப ஆய்வுகளை மேற்கொண்டு, அவைகளுக்குத் தீர்வு கண்டு, கண்ட தீர்வுகளை மாநில வேளாண் விரிவினைத்துறை மூலம் குறிப்பாக அப்பகுதி மக்களுக்குச் சென்று அடையச் செய்வது இம்மண்டல ஆராயச்சி நிலையத்தின் பணி.

இம் மண்டலத்தில் மொத்தம் 10.15 இலட்சம் எக்டேர் பரப்பில் முக்கியப் பயிர்களான சிறுதானியங்கள், நெல், தோட்டப்பயிரான மா, தென்னை, கரும்பு மற்றும் எண்ணெய் வித்துப் போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

இம்மண்டலத்தில் சுமார் 80 சதம் செம்மண் மேலோட்டமான நிலவாகுவைச் சேர்ந்தது. இது ஈரப்பிடிப்பும், வளமும் மிகவும் குறைந்த வண்ணப்பட்டி என்ற மண்பிரிவைச் சார்ந்தது.

## ஆராய்ச்சியின் நோக்கங்கள்:

சோளம், ராகி, வரகு, சாமை மற்றும் சிறுதானியங்கள், பயறுவகைகள் மற்றும் எண்ணெய்வித்துக்களில் வறட்சியைத் தாங்கவல்ல புதிய இரகங்களை உருவாக்குதல். ஈரத்தன்மை பிடிப்பற்ற, வளம் குன்றிய மண்வாகில் பயிர் விளைப்பதற்கான மானாவாரி சாகுபடிக்கேற்ற தொழிற் நுட்பங்களை உருவாக்குதல். அதிக இலாபம் தரக்கூடிய பயிர்த் திட்டங்களை உருவாக்குதல். இம்மண்டலத்திற்கேற்ற தோட்டக்கலைப் பயிர்களில் ஆய்வுகளை மேற்கொள்ளுதல். பயிர் பாதுகாப்பிற்கான ஒருங்கிணைந்த பூச்சி, நோய்க் கட்டுப்பாடு முறைகளை உருவாக்குதல்.

கண்டுபிடிக்கப்பட்ட வேளாண் தொழிற்நுட்பங்களை மண்டல ஆராய்ச்சி மற்றும் விரிவினைக் குழுக் கூட்டங்கள், மண்டல பணிமனைக் கூட்டங்கள் மற்றும் கருத்துக் காட்சி, கருத்தரங்கு மற்றும் பயிற்சி போன்றவற்றின் மூலம் வேளாண்மைத்துறை மற்றும் விவசாயிகளுக்குச் சென்றடையச் செய்தல் ஆகியவைகள் இம்மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வு மற்றும் விரிவினை நோக்கங்களாகும்.

## ஆராய்ச்சித் திட்டங்கள்:

தற்பொழுது இந்நிலையத்தில் மொத்தம் 73 ஆராய்ச்சித் திட்டங்கள் 11 துறைகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகளின் முக்கியக் கண்டுபிடிப்புகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.




## ஆய்வின் சாதனைகள் - நெல்:

தருமபுரி மாவட்டத்தில் பின்சம்பா பருவத்தில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற நெல் இரகத்தினை கண்டறிய மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஐ.ஆர்.45, 95-54-1-13 என்ற வளர்ப்பு ஒரு எக்டருக்கு சராசரியாக 5933 கிலோ தானியமும், 12990 கிலோ வைக்கோலும் மகசூலாகக் கொடுத்துள்ளது. இது எம்டியு-4 என்ற இரகத்தை விட 8.3 சதம் கூடுதல் மகசூல் கொடுத்துள்ளது. மேலும், இந்த வளர்ப்பு புகையான் தாக்குதலுக்கு மிதமான தாங்கும் தன்மையையும் பின்சம்பாவில் நிலவும் கடுங்குளிரையும் தாங்கவும் வல்லது. பின்சம்பா பருவத்திற்கு ஏற்ற இரகமாக வெளியிடப்பட உள்ளது.

குறுகிய காலத்தில் சாகுபடி செய்ய ஏற்ற நெல் இரகங்களில் மேற்கொண்ட ஆய்வில் டிபிஜி-2502 என்ற 110-லிருந்து 112-நாள் வயதுடைய சிறந்த, அதிக மகசூல் தரக்கூடிய சன்ன இரகமாக நெல் இரகம் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வளர்ப்பு ஏ.எஸ்.டி. இரகத்தைவிட 25.8 சதமும், ஏடிடி.36 இரகத்தைவிட 7.1 சதமும் கூடுதல் மகசூல் தரக்கூடியது. வெள்ளை நிறமுடைய நடுத்தர நீளம் கொண்ட சன்ன இரக அரிசியைக் கொண்டது. இதன் மகசூல் திறன் எக்டருக்கு 5900 கிலோ தானியம் ஆகும். இந்த வளர்ப்பு முன்சம்பா, பின்சம்பா, நவரை மற்றும் சொர்ணவாரி ஆகிய பருவங்களிலும் பயிரிட ஏற்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

வருந்துகிறோம்

திருவாரூர் மாவட்டச் செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர் திரு.வி.பாலசுப்பிரமணியம் அவர்கள், 14.8.1998 அன்று இயற்கை எய்தினார். செய்தி - மக்கள் தொடர்புத்துறை சார்பிலும், 'தமிழரசு' சார்பிலும் அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தார்க்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

- ஆசிரியர்.

நீண்ட நாட்கள் வயதுடைய (150 நாள்) அதிக மகசூல் கொடுக்கக் கூடியதும், களர், உவர் நிலத்தில் தாங்கி வளரக்கூடியதுமான எஸ்.ஏ.டீ.இடீ-2118 என்ற நெல் வளர்ப்பு வடமேற்கு மண்டலத்திலுள்ள களர், உவர் நிலங்களுக்கு சாகுபடி செய்ய ஏற்றது எனக் கண்டறியப் பட்டுள்ளது. இது எக்டருக்கு 5,846 கிலோ தானிய மகசூல் கொடுக்கக் கூடியது. இது கோ-43 என்ற இரகத்தைவிட 32.2 சதம் அதிக மகசூல் தரக்கூடியது.

**ராகி:**

நடுத்தர வயதுடைய டீபிஜு.-1862 என்ற ராகி வளர்ப்பு, பையூர்-1 இரகத்தைவிட 17 சதம் அதிக தானிய மகசூல் கொடுத்துள்ளது. இது அனுசரனை ஆராய்ச்சியில் உட்படுத்தப் பட்டுள்ளது. டி.பி.ஜு.2134 மற்றும் 1894 ஆகிய இருவளர்ப்புகளும் தற்பொழுது பலவித பரிசோதனை ஆய்வில் உள்ளது.

**கொள்ளு:**

பையூர்-2 என்ற கொள்ளு இரகம் மானாவாரியில் இரண்டாம் போக சாகுபடிக்கு ஏற்றது. இது ஜனவரி 1998-ல் உழவர்களின் சாகுபடிக்காக பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வெளியிடப்பட்டது. இது 100 முதல் 105 நாட்கள் வயதுடையது. எக்டருக்கு 879 கிலோ பயறு மகசூல் கொடுக்கக் கூடியது. இது பையூர்-1ஜ விட 19.6 சதமும், கோ-1ஜ விட 26.8 சதம் கூடுதல் மகசூல் ஆகும்.

**பயறுவகைப் பயிரில் களை நிர்வாகம்:**

மானாவாரி பயறுவகை சாகுபடியில் களையைத் திறம்பட கட்டுப்படுத்த களைக் கொல்லி இட்டு செய்த ஆய்வில், களை எடுக்க கூலியாட்கள் தட்டுப்பாடு உள்ள பகுதியில் புளுகுளோரலின் என்ற களைக் கொல்லியை எக்டருக்கு 1 லிட்டர் என்ற அளவில் நட்ட மூன்றாம் நாள் தெளித்து பிறகு 35-ம் நாள் ஒரு கைக்களை எடுப்பதினாலும், கூலி ஆட்கள் தட்டுப்பாடு இல்லாத இடங்களில் விதைத்த 15 மற்றும் 35-ம் நாட்களில் இரு கைக்களை எடுப்பதின் மூலம் மானாவாரி தட்டைப்பயறு மற்றும் பாசிப் பயறில் அதிக மகசூல் அடையலாம்.

**ஒருங்கிணைந்த உர நிர்வாகம்:**

மானாவாரி சோளத்தில் அதிகபட்ச மகசூலையும் 1498 கிலோ எக்டேர் என்ற அளவில் பரிந்துரைக்கப்பட்ட இரசாயன உரம் மற்றும் தொழுஉரம் இடுவதினாலும் அல்லது 75 சதம் பரிந்துரைக்கப்பட்ட இராசாயன உரம் மற்றும் உயர் உரங்கள் இடுவதினாலும் அடையலாம். மானாவாரி இராகியில் அதிகபட்ச தானிய மகசூலாக 1598 கிலோ/எக். பரிந்துரை செய்யப்பட்ட இரசாயன உரத்துடன் ஊட்டமேற்றிய தொழுஉரம் இட்டதில் கிடைத்துள்ளது.

மானாவாரி தட்டைபயரில் டி.ஏ.பி.2 சத கரைசலை பூக்கும் தருணத்தில் ஒரு முறையும், 15-நாள் இடைவெளியில் இரண்டாவது முறையும் தெளிப்பதன் மூலம் அதிக பயறு மகசூல் பெற்று லாபம் பெறலாம்.

இறவை ராகியில் அதிக மகசூல் அடைய இம்மாவட்ட செம்மண் நிலங்களுக்கு 75 சதம் செயற்கை உரமாகவும், 25 சதம் இயற்கை உரமாக இட்டதில் 22.69 குவிண்டால் அதிக மகசூலாக கிடைத்துள்ளது.

பையூர்-2 சோளத்தில் 75 சதம் செயற்கை உரமாக இடும்போது 24.66 குவிண்டால் அதிக மகசூலாக கிடைத்துள்ளது. இது பொதுபரிந்துரை மூலம் கிடைக்கும் மகசூலைவிட 11.9 சதம் அதிக மகசூல்.

பையூர்-1 பாசிப்பயிறு ஒரு கிலோ விதைக்கு 20 கிராம் சூப்பர் பாஸ்பேட் விதை நேர்த்தி செய்வதுடன் 25 சத மணிச்சத்தை (18.75 கிலோ/எக்டருக்கு) என்ற அளவில் மண்ணில் இடுவதன் மூலமும் மிக அதிக மகசூலாக எக்டருக்கு 1577 கிலே பயறு மகசூல் பெறலாம்.

பையூர்-1 நெல்லில் தூர் கட்டும் மற்றும் புடை பருவம் ஆகிய நிலைகளில் டைஅமோனியம் 2 சத கரைசலுடன் ஒரு சத யூரியா கரைசல் சேர்த்துத் தெளிப்பதன் மூலம் குளிரைத்தாங்கி எக்டருக்கு 3750 கிலோ தானிய மகசூல் கொடுப்பது அறியப்பட்டுள்ளது.

**பயிர்ப் பாதுகாப்பு:**

**பூச்சியியல்:**

சோளத்தில் தட்டைப்பயறு ஊடுபயிர் செய்தால் (4:1) தண்டு துளைப்பானின் தாக்குதல் 1.4 சதவிகிதமாகக் குறைகிறது.

துவரையில் எள்ளை ஊடுபயிராகச் செய்தால் தேமல் நோய் அதிகமாகக் காணப்படுகிறது. டைக்கோபால் 18.5 இசி. தெளிப்பதன் மூலம் இலைப்பேனைக் கட்டுப்படுத்தி தேமல் நோயைக் குறைக்கலாம்.

**தோட்டக்கலை:**

இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து 24 'மா' வீரிய ஒட்டு இரகங்கள் கொண்டுவரப்பட்டு தேர்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளது.

சீத்தாவில் இதுவரை 11 இரகங்கள் மற்றும் வீரிய ஒட்டுக்கள் சேகரிக்கப்பட்டு சிறந்தவைகளைத் தேர்வு செய்வதற்காகப் பாரமரிக்கப்பட்டு வருகிறது. இதைப்போன்று திராட்சைகளில் ஒட்டு இரகங்களைத் தேர்வு செய்வதற்காக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**சமூகவியல்:**

தோட்டக்கலைப் பயிர்களில், தக்காளி, பீன்ஸ், மா மற்றும் கொய்யா ஆகியவற்றில் தொழில் நுட்பத் தாக்கங்களில் ஆய்வு செய்வதில் ஒசூர் மற்றும் தேன்கனிக்கோட்டா ஆகிய இடங்களில் தக்காளியில் மட்டும் 96.6 சத தொழில் நுட்பத் தாக்கங்கள் (Technology Intervention) உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

வேளாண்மையில் அறுவடைக்குப் பின்செய் நேர்த்தி, பயிர்ப்பாதுகாப்பு மற்றும் விற்பனை ஆகியவற்றிலும், தோட்டக்கலையில், காய்கறி விதை உற்பத்தி மற்றும் ஒட்டுச் செடி உற்பத்தி, பால் பண்ணையத்தில், பால் மாடுகளை வாங்குதல் மற்றும் பாலைப் பதப்படுத்துதல் ஆகியவை வேளாண் மகளிரின் பயிற்சி தேவை எனக் கண்டறியப்பட்டது.

**வேளாண் பயிற்சி மற்றும் விரிவினைப் பணிகள்:**

ஒவ்வொரு மாதமும் மாவட்ட வேளாண் விரிவினைப் பணியாளர்களுக்குப் பயிர்ச் சாகுபடித் தொழில் நுட்பங்களில் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

மாதந்தோறும் 7-ந் தேதி ஆண், பெண் மற்றும் விவசாயிகளுக்கும் சுயதொழிலை ஏற்கும் வகையில் காளான் வளர்ப்பில் செயல்முறைப் பயிற்சி வழங்கப்படுகிறது.

தேசிய வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் மேலாண்மைக் கழகத்தின் 10- இளம் வேளாண் விஞ்ஞானிகளுக்கு வயல்வெளிப் பயிற்சியின் அடிப்படையில் பிரச்சனைகளைக் கண்டறிந்து ஆராய்ச்சித் திட்டங்களை வகுப்பதற்கு ஒரு மாதம் சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டது.

தருமபுரி மாவட்ட மேம்பாடு திட்ட வளர்ச்சியின் மூலம் 200 விவசாயிகளுக்குச் சுயதொழில் ஏற்கும் வகையில் உயிரியல் முறையில் பூச்சிக் கட்டுப்பாடு மற்றும் காளான் சாகுபடி பற்றிய பயிற்சிகள் கொடுக்கப்பட்டது.

இந்நிலையத்திலிருந்து ஒட்டு மாங்கன்றுகள், கொய்யா, மாதுளை, தென்னங் கன்றுகள், கறிவேப்பிலை, முறுங்கை போன்ற செடி வகைகளும், வல்லுநர் வித்துக்கள், நெல், பயறுவகை, சிறுதானியம் ஆகியவற்றிலும் நெல், சோளம், கொள்ளு போன்றவற்றில் விதைகளும் விவசாயிகளுக்கும், வேளாண் துறையினருக்கும் அபிவிருத்திக்காக வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், வயல்வெளிப் பிரச்சனைகளுக்கு வேளாண் விரிவினைப் பணியாளர்களுடன் இம்மண்டல விஞ்ஞானிகளும் ஒருங்கிணைந்து சென்று தீர்வு கண்டு பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்படுகின்றன. ❑

*ஆசிரியரும் வெளியிடுபவரும் : க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு. சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.*

*தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906.*



தூய பட்டு

தூய சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்


Licence No. TN/MS(C)/PP-23


தமிழரசு
1998 ரூ.3







**நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.**

**அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.**

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# இந்த இதழில்...


| | | |
|---|---|---|
| சுதந்திரத் திருநாள் | ... | 2 |
| இந்தியத் திருநாடே சமத்துவபுரமாகட்டும் - முதலமைச்சர் கலைஞர் | ... | 6 |
| முதல் சமத்துவபுரம் | ... | 7 |
| அரசு ஆணைகள் | ... | 11 |
| ஓமந்தூரார் நூற்றாண்டு விழா | ... | 12 |
| கணினி வளர்ச்சியில் பெருமை மிக்க இடம் | ... | 16 |
| திண்டுக்கல் மேம்பாலம் திறப்பு விழா | ... | 19 |
| யாருடைய கடமை? | ... | 22 |
| உணவுமுறைகளும் கண்பாதுகாப்பும் | ... | 26 |
| சுதந்திரப் போராட்டம் : தமிழ்நாட்டில் சில பொன்னான நேரங்கள் | ... | 28 |
| மனிதநேயம் | ... | 32 |
| கல்லக்குடி சமத்துவபுரம் | ... | 33 |
| பூம்புகார் | ... | 37 |
| தருமபுரி மாவட்டம் : நீர்வள ஆதார ஆக்கப்பணிகள் | ... | 39 |
| குப்பையை உரமாக்குவோம் | ... | 40 |
| மத நல்லிணக்கம் காணுவோம் | ... | 43 |


**தமிழரசு**
திருவள்ளுவர் ஆண்டு 2029
ஆடி - ஆவணி
ஆகஸ்ட் 16-31, 1998
மலர் : 30 இதழ் : 4
விலை ரூ.3

## அட்டைப்பட விளக்கம்

**முதல் அட்டை:**

சென்னை கோட்டைக் கொத்தளத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றுதல்.

**நான்காம் அட்டை:**

மதுரை மாவட்டம் - மேலக்கோட்டையில் முதல் சமத்துவபுரம் திறப்பு விழா

# சுதந்திரத் திருநாள்



இந்திய சுதந்திரத்திற்கு இன்று ஐம்பது ஆண்டு நிறைவு பெறுகிறது.

இந்த வீர செல்வத்தைப் பெற்றிட விழுப்புண் பெற்றோர் - விழிகளை இழந்தோர் - உயிரினைத் துறந்தோர் - உடைமைகளைப் பறிகொடுத்தோர் - செக்கிழுத்தோர் - கஞ்சிக் கலயம் ஏந்தியோர் - கல்லறையாக மாறியோர் - துப்பாக்கிக் குண்டுக்கு இரையானோர் - தூக்குக் கயிறை முத்தமிட்டோர் அனைவரது காலடிகளிலும், அன்றலர்ந்த மல்லிகை தூவி வணங்குகிறோம்!

1947 ஆகஸ்டு 15ஆம் நாள் சுதந்திர நாளைப் பற்றியும், இதனை இன்ப நாளாகக் கொண்டாட வேண்டுமென்பது பற்றியும் 1947 ஆகஸ்டு 10ஆம் நாள் அறிஞர் அண்ணா அவர்கள் ''திராவிட நாடு'' இதழில் பின்வருமாறு எழுதினார்.

அது, இது:

"அன்னிய ஆட்சி ஒழிந்து, புதிய சுதந்திர ஆட்சி உதயமாகும் இதே நாள், அன்னிய ஆட்சியின் விளைவுகளாக இருந்துவரும் தொல்லைகளையும், அல்லல்களையும், நீக்கி, மக்களுக்கு நலன் ஏற்படும்படியான ஆட்சி நடத்தும்படி, கேட்கும் உரிமையும், பலமும், வசதியும், மக்களுக்குத் தானாகவே பிறக்கிறது.

அன்னிய ஆட்சியுடன் போரிட்டு விடுதலை பெறுவதற்காக முயற்சி எடுத்துக்கொள்ளப் படுவதால், வேறு பல முக்கியமான சமூக, பொருளாதார, அறிவுத் துறைகளிலே, மக்களுக்கு ஏற்ற காரியங்களைச் செய்வதற்கு நேரமில்லை, நினைப்பில்லை, வசதியில்லை, வழியில்லை என்று கூறி, பிரச்சினைகளுக்கெல்லாம் வாய்தா போட்டுவந்த காலம் ஆகஸ்டு 15ஆம் தேதியோடு முடிவடைகிறது. அன்று முதல், இங்கு மக்களின் நலன், நாட்டுப் பாதுகாப்பு ஆகியவைகட்குப் பொறுப்பு இங்குள்ளவர்களிடம் வந்துசேருகிறது.

நாம், அன்னிய ஆட்சியாகிய ஆங்கில ஆட்சி கூடாதென்பதை வலியுறுத்தி வந்திருக்கிறோம். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி கடுமையாக நடைபெற்ற நேரத்திலேயே, சென்னையில், நடைபெற்ற, மாகாண ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில், பூரண சுயேச்சைத் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம்.

நாங்கள் காங்கிரசை எதிர்க்கிறதாலேயே, சுதந்திரத்துக்கு விரோதிகள் அல்ல - அன்னிய ஆட்சியை விரும்புபவர்கள் அல்ல என்பதை ஆயிரமாயிரம் மேடைகளிலே பேசியிருக்கிறோம்.

நாட்டு மக்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்படுவதும், மக்களின் பிறப்புரிமையுமாகிய சுதந்திரத்திற்காக, தாங்கள் சரி என்று கொண்ட திட்டங்களின்படி நடந்து, அதனால் ஏற்பட்ட கஷ்டநஷ்டங்களை, சிறைவாசத்தை, தீவாந்திர சிட்சையை, தூக்குமேடையைக் கூட மனமுவந்து ஏற்றுக்கொண்ட தியாகிகளுக்கு - வீரத்தை, தியாகத்தைக் கொண்ட கொள்கைக்காகக் கஷ்ட நஷ்டம் ஏற்க வேண்டும் என்ற கோட்பாட்டை மதிக்கும் நாம், வீர வணக்கம் செலுத்தவேண்டும்.

சுதந்திரப் போராட்டம் என்ற உடனே, சூதுமதியினரான சிலர் அந்தச் சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு சுயநல வேட்டையாடியதும், முரண்பட்ட கொள்கைகள், திடீர் மாறுதல்கள், பண மூட்டைகள் சுரண்டுபவர் ஆகியோர் மட்டுமேதான் நமது கண்களுக்குத் தெரியவேண்டும் என்பதில்லை.

நாட்டு விடுதலைக்காக - சிறையிலே வாடியவர்கள், தீவுகளுக்குத் துரத்தப் பட்டவர்கள், மண்டை பிளக்கப் பட்டவர்கள், குடும்பச் சுகத்தை இழந்தவர்கள், தடியடியால் இறந்த குமரன், தூக்குமேடை ஏறிய பகத்சிங், சொத்தைப் பறிகொடுத்த சிதம்பரம் பிள்ளை ஆகிய வீரத் தியாகிகள் தோன்றுவர் - தோன்றுவதால் - அவர்களுக்கு வீர வணக்கம் செலுத்த வேண்டுவதே முறை. ஆகஸ்டு 15ஆம் தேதி அப்படிப்பட்ட எண்ணற்ற வீரர்களின், கனவுகள் நனவான நாள்".

- என்று அறிஞர் அண்ணா 50 ஆண்டுகளுக்கு முன்பு எழுதியதை இந்தப் பொன்விழா ஆண்டு நிறைவு நாளிலும் நினைவிற் கொண்டு, நமது நீண்ட நெடிய பயணத்தைத் தொடர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பயிர் நடுவே களையின்றிப் பாதுகாப்பதற்கும் - நெல் மணிகளைப் பதராகாமல் பார்த்துத் தடுப்பதற்கும் - நேரம் பார்த்து நீர் பாய்ச்சுவதற்கும் - நோய் நொடிகள், பூச்சிப் புழுக்கள் அணுகாமல் விரட்டுவதற்கும் - இந்த ஐம்பது ஆண்டுகள் இடைவிடாது பணியாற்றியுள்ளோம்.

1972ஆம் ஆண்டு இந்திய சுதந்திரத்தின் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டபோதும் - 1997ஆம் ஆண்டு தொடங்கி சுதந்திரப் பொன்விழா கடந்த ஓராண்டாகக் கொண்டாடப்பட்டு வரும் வேளையிலும் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்து தொண்டாற்றும் பெரும் பேற்றை எனக்கு வழங்கியுள்ள தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு உளமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.



நம் நாடு சுதந்திரமடைந்து 50 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ள வேளையில் - நாம் அடைந்த வளர்ச்சிகளைத் தேசிய அளவில் கணக்குப் பார்த்தோமேயானால் - உலக அரங்கில் நமது நாடு குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சிகளைப் பெற்றுள்ளது என்பது விளங்கும். இடையிடையே அரசியல் சூறாவளிகள் சுழன்றடித்த போதிலும், அணையாமல் அகல்விளக்காய்ச் சுடர்பரப்பி - உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு எனும் பெருமையை நிலைநாட்டியுள்ளது. பல மொழிகள், பல மதங்கள், பல்வேறு பழக்கவழக்கங்கள் உள்ள நாடு நம் இந்திய நாடு என்ற போதும், உரிமைக்குக் குரல் கொடுத்தும் உறவுக்குக் கைகொடுத்தும் வாழும் ஒப்பிலாச் சமுதாயமாக உலகத்திற்கொரு பெருமையாக இந்திய சமுதாயம் படிப்படியாக முன்னேறி முத்திரை பதித்து வருகிறது.

தொழில் வளர்ச்சி பெருகி, தொலைதூர நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதிகள் மிகுந்து வருகின்றன.

கணிப்பொறித் தொழில் நுட்பத்தில் இந்திய இளைஞர்கள் உலகம் முழுதும் பரவிப் புகழ் படைத்து வருகின்றனர்.

தமிழக அரசைப் பொறுத்தவரை, இந்திய சுதந்திரத்திற்காகத் தமது இன்னுயிரீந்த வீரர்களையும், எடுத்தியம்பவொண்ணா இன்னல்களுக்கு இலக்காகிய தீரர்களையும் போற்றிப் பாராட்டிப் பொருந்திய முறையில் புரந்து வருகிறது!

1966ஆம் ஆண்டில், சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு ஒய்வூதியம் வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. 1967 பிப்ரவரியில் கழக அரசு அமைவதற்கு முன்வரை தமிழகத்தில் 5 தியாகிகளுக்கு மட்டுமே ஒய்வூதியம் வழங்கப்பட்டிருந்தது.

கழக அரசு சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்குத் தாராளமாக ஒய்வூதியம் வழங்கிப் பாராட்டியதன்

விளைவாக - 1976ஆம் ஆண்டு ஜனவரி 31 அளவில் 8172 சுதந்திரப் போராட்டத் தியாகிகள் ஓய்வூதியம் பெற்று மகிழ்ந்தனர்.

அவர்களில் மறைந்தவர்கள் போக இன்னும் வாழ்பவர்கள் 5068 பேர் தியாகிகளுக்கான ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்.

அதேபோல, மறைந்த விடுதலைப் போராட்டத் தியாகிகளின் வாரிசுகள் 1892 பேர் மாநில அரசின் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்.

தியாகிகள் மறைவெய்தும்போது ஈமச்சடங்குகளுக்கு 1000 ரூபாய் நிதியுதவி வழங்கிடவும், மரணமடையும் விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்குத் தாசில்தார் தகுதிக்குக் குறையாத அரசு அலுவலர் நேரில் சென்று அரசின் சார்பில் மரியாதை செலுத்தவும் ஆணைகளிட்டோம்.

தியாகிகளின் விதவைகள், அவர்களின் சட்டபூர்வமான வாரிசுகளுக்கு இலவசப் பேருந்துச் சலுகை, இலவச மருத்துவ உதவிகள் ஆகியவைகளும் வழங்கப்படுகின்றன.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் சிறையிலிழுத்த செக்கினைத் தேடிக் கண்டுபிடித்து - 1972ஆம் ஆண்டில் சென்னையில் பொதுமக்கள் பார்வைக்கு வைத்தோம்.

வீரபாண்டிய கட்டபொம்மனுக்குப் பாஞ்சாலங் குறிச்சியில் புதிய கோட்டையை நினைவுச் சின்னமாய் உருவாக்கி அவரது வாரிசுகள் 204 பேருக்கு இலவச வீடுகள் கட்டித் தந்தோம். கட்டபொம்மனின் படைத்தளபதியாய் விளங்கிய வீரன் சுந்தரலிங்கம் பெயரில் புதிய நகரை உருவாக்கி, அங்கு அவரது வாரிசுகள் 200 பேருக்கு 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் வீடமைத்துக் கொடுத்தோம்.

ஆப்பிரிக்க நாட்டில் அண்ணல் காந்தியடிகளுடன் இணைந்து - காந்தியடிகள் போற்றிப் பாராட்டும் வகையில் வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் புரிந்த வள்ளியம்மை பிறந்த தில்லையாடியில் அவருக்கு நினைவுச் சின்னம் அமைத்தோம்.

மூதறிஞர் இராஜாஜியும், பெருந்தலைவர் காமராஜரும் மறைந்த பொழுது, சென்னையில் அப்பெருமக்களுக்கு - அண்ணல் காந்தியடிகள் நினைவு மண்டபத்தின் இருமருங்கிலும் அழகிய நினைவுச் சின்னங்களை ஏற்படுத்தினோம்.

எட்டையபுரத்தில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தை நினைவுச் சின்னமாக்கியதுடன் - திருவல்லிக்கேணியில் பாரதி வாழ்ந்த இல்லத்தினைக் கடந்த ஆண்டு புதுப்பித்துள்ளோம்.

நாமக்கல் கவிஞர் மாளிகை எனத் தலைமைச் செயலகக் கோட்டைக்குள் பத்துமாடிக் கட்டடம் ஒன்றை எழுப்பியுள்ளோம்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.க்குத் தூத்துக்குடியிலும், சென்னையிலும் சிலைவைத்துச் சிறப்பித்தோம்.

மதுரையில் பசும்பொன் தேவருக்குச் சிலை வைத்ததுடன், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் மருதுபாண்டியருக்கு நினைவகம் அமைத்தோம்.

இந்தப் பொன்விழா ஆண்டில் -

திருச்சிராப்பள்ளியில் இருந்து வேதாரண்யம் வரை சென்ற, "உப்புச் சத்தியாகிரக"ப் போராட்டத்தை நினைவுகூரும் வகையில் யாத்திரை ஒன்றை 8-8-97 அன்று திருச்சியில் நான் தொடங்கிவைத்தேன்.

டெல்லியில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் பொன்விழாப் பேரணியில் பங்குபெறச் சென்ற 50 தியாகிகளுக்குச் சென்னை இராஜாஜி மண்டபத்தில் வழியனுப்பு விழா நடத்தப்பட்டு, அந்தத் தியாகிகள் ஒவ்வொரு வருக்கும் அரசின் சார்பில் கதராடையைப் போர்த்தி, பொற்கிழி வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் நெற்கட்டும்செவ்வுல் எனும் ஊரில் பூலித்தேவன் மாளிகை 50 இலட்ச ரூபாய் செலவில் அமைக்கப்படுகிறது.

தியாகச் செம்மல் கக்கன் அவர்களுக்கு 31-8-97 அன்று மதுரையில் சிலை வைத்ததுடன், வீரத்தியாகி விசுவநாததாஸ் வாழ்ந்த திருமங்கலம் வீட்டினை, அவர் நினைவைப் போற்றும் வகையில், 60 இலட்சம் ரூபாய் செலவில் திருமண மண்டபம், நூல் நிலையம் ஆகியவைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

சுதந்திரப் பொன்விழாவை யொட்டி, சென்னையில் தியாகிகள் மணி மண்டபம் ஒன்றை அமைத்திட முடிவு செய்து அதன் கட்டுமானப் பணிகளை நிறைவேற்றி வருகிறோம்.

சுதந்திரத் திருநாள் பொன்விழாவின் நினைவாக, போர் நினைவுச்சின்னம் அருகில் பொன்விழா நினைவுச் சின்னம் அமைத்தோம்.

பொதுவுடைமை வீரர் ஜீவாவுக்கு நாகர்கோவிலில் நினைவுச் சின்னம் உருவாக்கினோம்.

நேதாஜி நூற்றாண்டை ஒட்டி சென்னையில் எழுச்சியூட்டும் நேதாஜியின் முழுஉருவச் சிலையமைத்தோம். இவை மட்டுமல்ல!

வெள்ளையர் ஆதிபத்தியத்தை எதிர்த்துத் தமிழ்நாட்டில் வேலூரில் 1806ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் சிப்பாய்க் கலகத்தின்போது உயிர்நீத்தோர் தியாகத்தைப் போற்றிட வேலூரில் நினைவுத் தூண் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

எழும்பூரில் ருக்மணி லட்சுமிபதிக்குச் சிலை திறந்து - அவர் வாழ்ந்த மார்ஷல் சாலைக்கு அவர் பெயரிட்டோம். ருக்மணி லட்சுமிபதிக்கும் - சர்தார் வேதரத்தினம் பிள்ளைக்கும் அஞ்சல் தலை வெளியிடச் செய்தோம்!

முன்னாள் முதல்வர் பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு நினைவகம் அமைத்தோம். முன்னாள் முதல்வர் பி.எஸ்.குமாரசாமி ராஜாவின் நூற்றாண்டு விழாவை இராஜபாளையத்தில் கொண்டாடி, சென்னையில் அவர் வாழ்ந்த கிரீன்வேஸ் சாலைக்கு அவர் பெயர் சூட்டினோம்.





1995ஆம் ஆண்டிலேயே கொண்டாடி இருக்கவேண்டிய முன்னாள் முதல்வர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஆகஸ்டு 25 அன்று சென்னையில் சிறப்பாகக் கொண்டாட இருக்கிறோம்.

தமிழகம் முழுவதிலும் சாதி சமயப் பிணக்குகள் நீங்கித் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு வாழ்வதற்கு வழி வகுக்கக்கூடிய வகையில் பல்வேறு சாதிசமயப் பிரிவுகளைச் சார்ந்தவர்கள் கூடி வாழும் சமத்துவபுரக் குடியிருப்புகள் மாவட்டந்தோறும் அனைத்து அடிப்படை வசதிகளுடனும் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டு, முதல் சமத்துவபுரக் குடியிருப்பு வரும் 17-8-1998 அன்று மதுரைக்கு அருகில் திறந்துவைக்கப்படவுள்ளது என்பதனையும் இவ்வேளையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி நினைவுச் சின்னங்களும், சிலைகளும் எடுப்பித்து தியாகிகளைப் போற்றி வருவதுடன் தம்முடைய படைப்பாற்றல்கள் மூலம் சுதந்திர உணர்வுகளை வளர்த்த பல்வேறு அறிஞர் பெருமக்களின் நூல்களை அரசுடைமை ஆக்கியும் அப்பெருமக்களுக்குச் சிறப்புகள் செய்யப்படுகின்றன.

தமிழ்த் தென்றல் திரு.வி.க., பேராசிரியர் கல்கி ஆகியோர் நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு அவர்கள் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 20 இலட்ச ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

விடுதலை உணர்வூட்டி, நூல்கள் எழுதிய மறைந்த தேசிய எழுத்தாளர்கள் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, ப.ஜீவானந்தம், நாமக்கல் கவிஞர், வ.உ.சிதம்பரனார், சுத்தானந்த பாரதியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், கவி.கா.மு.ஷெரீப், வ.வே.சு.அய்யர், பரலி சு.நெல்லையப்பர், காரைக்குடி சா.கணேசன், எஸ்.டி.எஸ்.யோகி ஆகிய 11 அறிஞர் பெருமக்களின் நூல்களை அரசுடைமையாக்கி குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 5 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 55 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகையாக இன்று இந்தக் கொடி நிழலில் வழங்கப்படுகிறது.

தியாகிகளைப் பாராட்டுவது மட்டுமல்லாமல் - இந்தத் தியாக தீபங்களால் நாடு எய்திய சுதந்திரத்தின் பயன்களை - நாட்டு மக்கள் அனைவரும் - குறிப்பாக நலிந்த பிரிவு மக்கள் அனைவரும் நுகரும் வகையில், எண்ணற்ற பல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது இந்த அரசு.

மாநில அளவில் மட்டுமின்றி தேசிய அளவிலும் எல்லா மக்களின் நலன்களும் பாதுகாக்கப்படுவதற்கு இந்த அரசு முயற்சிகள் எடுத்து முனைந்து பாடுபடுவதுடன், அண்டை மாநிலங்களுடன் உறவை வளர்த்துக் கொள்ளும் வகையிலும் அணுகுமுறைகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் அடையாளம் தான் ஆந்திர மாநிலத்திலிருந்து கிருஷ்ணா தண்ணீர் தமிழகத் தலைநகராம் சென்னைக்கு வருவதாகும். அதேபோல 30 ஆண்டுகாலச் சிக்கலுக்கு முடிவுகட்டி - ஏழாண்டுக் காலமாக மறுக்கப்பட்டு வந்த காவிரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையை நிறைவேற்றுவதற்காக ஒரு உடன்பாடு இந்தியப் பிரதமர் முன்னிலையில் கர்நாடகம், தமிழகம், கேரளம், புதுவை ஆகிய நான்கு மாநில முதல்வர்களால் உருவாக்கப்பட்டது.

அத்துடன் முல்லைப் பெரியார் அணைப் பிரச்சினைக்கும் தமிழக அரசும் கேரள மாநில அரசும் கூடிப் பேசி எடுத்துள்ள தொடக்க முயற்சியும் மகிழத்தக்க ஒன்றாக விளங்குகிறது.

ஏனவே, இந்தச் சுதந்திர நாளில் இந்தியத் திருநாட்டில், பல்வேறு இனம், மொழி மக்களிடையே வேற்றுமையில் ஒற்றுமை கண்டு சுதந்திரத்திற்காகப் பாடுபட்டோருக்கும் - போரிட்டோருக்கும் மாத்திரமல்ல - இந்தச் சுதந்திரத்தின் பயனை அனுபவிக்க வேண்டிய ஏழை எளிய சாதாரண சாமான்ய மக்களுக்கும் நாம் கடமைப்பட்டவர்கள் என்ற சூளுரையை மேற்கொள்வோம்.

*- 15.8.1998 அன்று சென்னை புனிதஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக்கொடியை ஏற்றிவைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.*

# இந்தியத் திருநாடே சமத்துவபுரம் ஆகட்டும்!

மதுரை மாவட்டம் - திருமங்கலம் - மேலக்கோட்டையில் தமிழகத்தின் முதல் சமத்துவபுரத்தை 17.8.98 அன்று திறந்து வைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை!

என்னுடைய சிந்தனையில் விளைந்த - தமிழ்ச் சமுதாயம் ஒரே சமுதாயமாக வாழ வேண்டும் என்கிற குரல் மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக வெற்றி பெற வேண்டுமென்பதற்காக கண்டுள்ளது தான் இந்த சமத்துவபுரம் திட்டமாகும். இந்தத் திட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறைவேற விருக்கின்றது. அதிலே முதல் மாவட்டம் என்கிற அந்த வாய்ப்பை மதுரை மாவட்டம் பெற்றிருக்கின்றது.

நான் எண்ணியதை விட அதிகமாக - நான் நினைத்ததை விட மேலாக மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் காசிவிசுவநாதன் அவர்கள் இங்கே எல்லாப் பிரிவு மக்களுக்கான வீடுகளை மாத்திரமல்ல; அவர்களுடைய பல்வேறு



தேவைகளை நிறைவு செய்யக் கூடிய அளவிற்கு மருத்துவமனை, பள்ளிக்கூடம், நூலகம், சமுதாயக் கூடம் என்று பல்வேறு விதமான வசதிகளை யெல்லாம் இங்கே உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்.



இந்த சமத்துவபுரம் மற்ற மாவட்டங்களில் உருவாக இருக்கின்ற சமத்துவபுரங்களுக் கெல்லாம் ஒரு வழிகாட்டியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் காசி விசுவநாதன் அவர்கள் மதுரை மாவட்டத்திற்கு மாத்திரம் இத்தகைய சமத்துவபுரத்தை உருவாக்கினார் என்று இல்லாமல் மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்கும் இந்த சமத்துவபுரம் உருவான செய்தியைச் சொல்லி என்னென்ன திட்டங்கள் இங்கே நிறைவேற்றப் பட்டிருக்கின்றது என்பதையெல்லாம் எல்லா மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும் எடுத்துக் கூறி ஆங்காங்கு இதுபோன்ற சமத்துவபுரங்கள் உருவாக முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று நான் அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அவரை நான் வாழ்த்துகிறேன்; பாராட்டுகின்றேன்; அவருடைய இந்த அரும் பணியினை மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களும் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடே - இந்தியத் திருநாடே சமத்துவபுரமாக ஆகட்டும்

இங்கே குடிபுகவிருக்கின்ற தாய்மார்கள், எவ்வளவு சிரமத்திற்கிடையே எவ்வளவு நல்ல நோக்கத்தோடு பல்வேறு பிரிவு மக்களையெல்லாம் ஒன்றாக்குகின்ற சமத்துவம் முகிழ்க்க வேண்டுமென்பதற்காக இந்தத் திட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கின்றது என்பதை எண்ணிப்பார்த்து - இதைப் பயன்படுத்துகின்றவர்கள் நல்ல தூய்மையை இங்கே வளர்க்கவும் நல்ல அறிவினை இங்கே வளர்க்கவும், நல்ல பிள்ளைகளை இங்கே தயாரிக்கவும் எங்களோடு - இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்று அனைவரையும் கேட்டுக் கொண்டு, சமத்துவ புரத்திலே குடியேறுகின்ற நீங்கள் காட்டுகின்ற இந்த ஒற்றுமை இந்த மாநிலத்திற்கே, இந்த நாட்டிற்கே வழிகாட்டியாக அமையட்டும் என்று கேட்டுக் கொண்டு - சமத்துவபுரங்கள் வளரட்டும், வளரட்டும், தமிழ்நாடே சமத்துவபுரங்களாக ஆகட்டும், இந்தியத் திருநாடே சமத்துவபுரமாக ஆகட்டும் என்று கூறி விடைபெறுகிறேன்.



# மதுரை மாவட்டம் : மேலக் கோட்டையில்... முதல் சமத்துவபுரம்

"சாதிகள் இல்லையடி பாப்பா"

- மகாகவி பாரதியார்

ஆ.மு.காசிவிசுவநாதன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்
மதுரை

தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்ற தேசத்தந்தை அண்ணல் காந்தியடிகளின் எண்ணத்தையும், சாதி, மத வேறுபாட்டை அறவே நீக்கவேண்டும் என்ற தந்தை பெரியாரின் சிந்தனையையும், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணவேண்டும் என்ற பேரறிஞர் அண்ணாவின் விருப்பத்தையும் நிறைவேற்றுகின்ற வகையில், பாரதத்தின் விடுதலைப் பொன்விழா ஆண்டில் பல்வேறு சாதி, மதத்தைச் சார்ந்தவர்கள் ஒரே இடத்தில் குடியிருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தீட்டப்பட்ட திட்டம் தான் சமத்துவபுரம் திட்டம். இந்தத் திட்டம் தமிழகத்தில் பலகாலமாக வேரூன்றியுள்ள தீண்டாமை எனும் கொடிய நோயினை அகற்ற உதவும் திட்டமாகும். ஒவ்வொரு சமத்துவ புரத்திலும், 100 குடியிருப்புகள் அமைக்கப்படும். மேற்படி 100 குடியிருப்புகளில் ஆதிதிராவிடர் களுக்கு 40 வீடுகளும், பிற்பட்ட வகுப்பினர் களுக்கு 25 வீடுகளும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வர்களுக்கு 25 வீடுகளும், இதரசாதியினருக்கு 10 வீடுகளும் ஒதுக்கீடு செய்யப்படும்.

## நிலத் தேர்வு

மதுரை - கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை -7ல், திருமங்கலத்திலிருந்து சுமார் 6 கி.மீ. தூரத்தில் மேலக்கோட்டை எனும் இடத்தில் சமத்துவபுரம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டது. இந்த இடத்தின் மொத்தப் பரப்பு 10.02 ஏக்கர் ஆகும்.

## பயனாளிகள் தேர்வு

சமத்துவபுரத்தில் வீட்டுமனை பெறுவதற்கு விண்ணப்பம் பெறப்படும் என்ற விவரத்தினைப் பத்திரிகைகள் மூலமும், கிராமங்களில் 'டாம்டாம்' மூலமும், ஊராட்சி அலுவலக விளம்பரப்பலகையிலும் விரிவான விளம்பரம் செய்யப்பட்டது.

பெறப்பட்ட மனுக்களை எடுத்துக்கொண்டு மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், வட்டாட்சியர், ஊராட்சிமன்றத் தலைவர் ஆகியோர் சம்பந்தப்பட்ட கிராமங்களுக்குச் சென்று கிராமசபைக் கூட்டத்தினைக் கூட்டி, பயனாளிகளைத் தேர்வு செய்தனர். அனைத்துப் பயனாளிகளும் வறுமைக் கோட்டிற்குக் கீழ்நிலையில் உள்ளவர்களாகவே தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர், முகவரி ஆகியவை அந்தந்த ஊராட்சியின் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டு, பயனாளிகள் தேர்வில் ஏதாவது அதிருப்தியோ அல்லது ஆட்சேபனையோ இருப்பின் அதுபற்றி 15 நாட்களுக்குள் திருமங்கலம் வட்டாட்சியரிடம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. முடிவில் பல்வேறு சாதி, மதத்தைச் சேர்ந்த கீழ்க்கண்ட பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

ஆதிதிராவிடர்கள் 40, மருத்துவர் 8, ராஜகம்பளம் 7, வண்ணார் 6, குலாலர் 2, பிரமலைக்கள்ளர் 2, டொம்மரா 1, அகமுடையார் 9, கவுண்டர் 6, நாயுடு 7, கம்மாளர் 3, நாடார் 1, பிள்ளைமார் 1, பத்மசாலியர் 1, செட்டியார் 3, ரெட்டியார் 1, முஸ்லீம் 1, பிராமணர் 1 (ஆகமொத்தம் 100 நபர்கள்).

## சமத்துவபுரம் வரைபடம்

சமத்துவபுரத்திற்குத் தேர்ந்து எடுக்கப்பட்ட நிலத்தில் தலா 5 சென்டு வீதம் 100 வீட்டுமனைகளும் பூங்கா, பள்ளி, சமுதாயக்கூடம் போன்ற அடிப்படை ஆதார வசதிகளுடன் வீட்டுமனை வரைபடம் நகரமைப்பு விதிகளுக்கு ஒப்ப மாவட்ட நகரமைப்பு உதவி இயக்குநரால் தயார் செய்யப்பட்டது.

## பயனாளிகளுக்கு வீட்டுமனை ஒதுக்கீடு

தேர்வு செய்யப்பட்ட 100 பயனாளிகளையும், 3.12.97ஆம் தேதி திருமங்கலத்திற்கு அழைத்து, மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், வட்டாட்சியர், ஊராட்சி ஒன்றிய ஆணையர், திருமங்கலம் சட்டமன்ற உறுப்பினர், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர், சிற்றூராட்சித் தலைவர்கள் ஆகியோரது முன்னிலையில் பயனாளிகள் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் சமத்துவபுரம் பற்றியும், அனைத்துச் சாதி மதத்தைச் சேர்ந்த பயனாளிகள் ஒரே இடத்தில் சேர்ந்து குடியிருப்பது பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. அனைத்துப் பயனாளிகளுமே சாதி, மத பேதங்களை மறந்து ஒருவருக்கொருவர் சகோதர உணர்வுடன் கூடியிருக்க ஒப்புக் கொண்டனர். பிறகு குலுக்கல் முறையில் பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒதுக்கீட்டு உத்தரவு வழங்கப்பட்டது.

சமத்துவபுரத்தில் ஒவ்வொரு சாதியைச் சார்ந்தவர்களுக்கும் வீடுகள் மாறிமாறி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக முதலாவது வீடு ஒரு ஆதிதிராவிடருக்கும், இரண்டாவது வீடு ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், மூன்றாவது வீடு ஒரு மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினருக்கும், நான்காவது வீடு ஒரு ஆதிதிராவிடருக்கும் என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## வீட்டுமனை மற்றும் வீடு பற்றிய விவரம்

சமத்துவபுரத்தில் 100 பயனாளிகளுக்கும் தலா 5 சென்ட வீதம் வீட்டுமனை பிளாட்டுகள் ஒதுக்கப் பட்டுள்ளது. மேற்படி 5 சென்டு இடத்தில் 259 சதுர அடி இடத்தில் வீடுகள் கட்டப்பட்டுள்ளது. மேற்படி வீட்டில் 13 X 10ல் ஒரு அறை, 8 X 5ல் ஒரு சமையலறை மற்றும் 5 X 5ல் ஒரு கழிப்பறை அமைக்கப்பட்டுள்ளது. கூரை ஆர்.சி.சி. காங்கீரிட் போடப்பட்டுள்ளது. மேற்படி வீட்டில் இரண்டு கதவுகள், மூன்று ஜன்னல்கள் வைக்கப்பட்டுள்ளன. கதவுகள் தரமான மரத்தினால் ஆனது. அறையில் கப்போர்டு வசதியும் செய்யப்பட்டுள்ளது.

## வீடுகட்ட அரசு மானியம்

சமத்துவபுரத்தில் 100 பயனாளிகளுக்கும் தலா ரூ.35,000 வீதம் மொத்தம் ரூ.35 இலட்சம் வீடுகட்ட மானியமாக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

சமத்துவபுரத்தில் செய்யப்பட்டுள்ள அடிப்படை வசதிகள்

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. தெருக்களில் 13 இடங்களில் குடிநீர் விநியோகக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. குடிநீர் விநியோகக் குழாய் மேல்புரத்தில் டைல்ஸ் பதிக்கப் பட்டிருப்பது ஒரு சிறப்பு அம்சமாகும். அதே போன்று, குடிநீர் குழாயிலிருந்து, கழிவு நீர் தெருக்களில் ஓடாமல் தடுக்கக் குடிநீர்க் குழாய் அருகே பள்ளம் தோண்டப்பட்டு கழிவுநீர் சேகரிக்கப்படுகிறது.

## சமுதாயக் கூடம்

சமத்துவபுர மக்கள் அனைவரும், அவர்களுடைய குடும்ப நிகழ்ச்சிகள் அனைத்தையும், ஒரே இடத்தில் நடத்துவதற்கு ஏற்ப 1,500 சதுர அடியில் ஒரு பிரம்மாண்டமான சமுதாயக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

## பள்ளிக்கூடம்

சமத்துவபுரத்தில் குடிபுகும் பயானிகளின் குழந்தைகள் கல்விபயிலும் வகையில் சுமார் 985 சதுர அடியில் ஆரம்பப்பள்ளிக் கட்டடம் கட்டப் பட்டுள்ளது. இப்பள்ளியில் பயிலவரும் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்க 2 ஆசிரியர்களையும் அரசு நியமனம் செய்துள்ளது. பள்ளிக்கு முன்பு தேசியக்கொடி ஏற்றுவதற்கு வசதியாகக் கொடிக்கம்பம் அமைக்கப் பட்டுள்ளது.

## கிளை நூலகம்

மதுரை மாவட்டத்திலேயே 800 சதுர அடி கொண்ட மிகப்பெரிய கிளை நூலகக் கட்டடம், கழிப்பறை வசதியுடன் இங்கு கட்டப் பட்டுள்ளது. இந்த நூலகத்தில் இரண்டு அறைகள் உள்ளன. ஒரு அறையில் புத்தகங்கள் வைத்துக்கொள்ள அலமாரிகள் வைக்கப் பட்டுள்ளது. மற்றொரு அறையில் அமர்ந்து படிப்பதற்கான பெஞ்சுகள் போடப்பட்டுள்ளது. அலமாரியிலிருந்து புத்தகங்களை எடுத்துக் கொண்டு அடுத்த அறையில் அமர்ந்து புத்தகங்களை வாசிப்பதற்கு ஏற்றவாறு நல்ல காற்றோட்டத்துடன் இக்கட்டடம் கட்டப்பட்டுள்ளது.








## துணைச் சுகாதார நிலையம்

சமத்துவபுரத்தில் வாழும் மக்கள் ஆரம்ப மருத்துவச். சிகிச்சைக்காக எங்கும் போகாத அளவில் சமத்துவபுரத்திலேயே அனைத்து. வசதிகளையும் கொண்ட துணைச் சுகாதார நிலையம் கட்டப்பட்டுள்ளது.

## நியாய விலைக்கடை கட்டடம்

சமத்துவபுரத்தில் மொத்தம் 100 வீடுகளே இருப்பினும், அனைத்து வசதிகளும் கொண்ட மாதிரிக் கிராமமாக அமைக்கப்படுவதால், ஒரு நியாயவிலைக்கடை கட்டடம் கட்டப் பட்டுள்ளது. இந்தக் கடை ஆரம்பத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடையாக இயங்கும்.

## சத்துணவுக் கூடம்

சமத்துவபுரத்தில், குழந்தைகள் சத்துணவுடன் கூடிய கல்வி கற்பதற்காக 375 சதுரஅடி கொண்ட சத்துணவுக் கூடம் கட்டப்பட்டுள்ளது. சத்துணவுக் கூடத்தில் ஒரு வகுப்பறையும், ஒரு சமையலறையும், பொருட்கள் வைப்பறை ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. குழந்தைகளைக் கவரும் வண்ணம் சுவர்களில் வண்ணப்படங்கள் வரையப்பட்டுள்ளன.

## தொலைக்காட்சி அறை

86 சதுர அடி கொண்ட தொலைக் காட்சி அறை ஒன்று கட்டப்பட்டுள்ளது. வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

## மின்வசதி மற்றும் தெருவிளக்குகள்

ஒவ்வொரு வீட்டிற்கும் அரசு செலவில் மீட்டர் பொருத்தப்பட்ட மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 19 குழல் தெரு விளக்குகளும், நான்கு சோடியம் வேப்பர் விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி தெருவிளக்குகள் மூலம் சமத்துவபுரத்தில் எந்தவொரு இடத்திலும் இருள் இல்லாத வகையில் சிறப்பாக அமைக்கப் பட்டுள்ளது.

## பூங்கா மற்றும் விளையாட்டு மைதானம்

சமத்துவபுரத்தில் பெரியவர் முதல் குழந்தைகள் வரை அனைவரும் மாலைநேரங்களில் ஓய்வெடுப்பதற்குப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. பூங்காவில் அமர்வதற்கு சிமெண்ட் பெஞ்சுகள் அமைக்கப்பட்டுள்ளன. பூங்காவின் நடுவில் நீருற்று அமைக்கப் பட்டுள்ளது. குழந்தைகள் விளையாட்டுச் சறுக்கல் அமைக்கப்பட்டுள்ளது. சமத்துவபுரத்தில் விளையாட்டினை ஊக்கப்படுத்துவதற்காக விளையாட்டு மைதானம் ஒன்றும் அமைக்கப் பட்டுள்ளது.

## தார்போட்ட சாலை வசதி

மொத்தம் 1,570 மீட்டர் நீளத்திற்குச் சமத்துவபுரத்திலுள்ள 10 தெருக்களிலும் தார்போடப்பட்ட சாலை வசதி செய்யப் பட்டுள்ளது.

## தெருக்களின் பெயர்கள்

சமத்துவபுரத்தில் 10 தெருக்கள் உள்ளன. ஐம்பெரும் காப்பியங்களான சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி ஆகிய பெயர்களும், ஐஞ்சிறும் காப்பியங்களான உதயண குமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி ஆகிய பெயர்களும் இந்தப் பத்து தெருக்களுக்கும் சூட்டப்பட்டுள்ளது.

## நிழற்குடை

சமத்துவபுரம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதால், சமத்துவபுரத்தில் வசிக்கும் மக்களுக்கு வசதியாக, பேருந்துகள் நின்று செல்ல ஒரு பயணியர் நிழற்குடை அமைக்கப் பட்டுள்ளது.

## மரங்கள் வளர்த்தல்

சமத்துவபுரத்திலுள்ள பூங்கா, தெரு ஓரங்கள், பள்ளி வளாகம், சமுதாயக்கூட வளாகம், கழிவுநீர் வாய்க்கால் பகுதி போன்ற இடங்களில் 400க்கும் மேற்பட்ட வேம்பு, புங்கன், நாவல் போன்ற பல்வேறு வகையான மரங்கள் நடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வீட்டிற்கும் பின்புறமுள்ள காலியிடங்களில் கொய்யா, பப்பாளி, சப்போட்டா மரங்கள் நடப்பட்டுள்ளது. மரங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க பாதுகாப்புச் சுவர்கள் கட்டப்பட்டுள்ளன.

*"சமத்துவத்தை நாடவேண்டுமானால் சாதிகள் தொலைந்திட வேண்டும்"*

*- பேரறிஞர் அண்ணா*

**பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கக் கட்டடம்**

சமத்துவபுரத்தில் குடிபுகும் 100 பயனாளிகளில், கறவை மாடுகள் வளர்க்க விருப்பம் தெரிவித்த சுமார் 30 நபர்களுக்குக் கறவை மாட்டுக் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உற்பத்தியாகும் பாலினை மதுரை ஆவின் நிறுவனத்திற்கு வழங்கவும் ஒப்புக் கொண்டுள்ளனர். எனவே, சமத்துவ புரத்தில் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்காகத் தனியாக ஒரு கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

**மயான வசதி செய்து கொடுத்தல்**

சமத்துவபுரத்தில் குடியிருக்கும் பயனாளிகள் இறக்க நேரிட்டால் சடலங்களைப் புதைக்க சமத்துவபுரத்தின் அருகாமையில் உள்ள கமண்டல ஆற்றின் கரையில் ஒரு பொது மயானம் தேர்வு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி மாயனத்தில் இந்து, முஸ்லீம் ஆதிதிராவிடர் மற்றும் இதர சாதியினர் சடலங்களைப் புதைக்க ஒப்புக் கொண்டுள்ளனர். விரும்பினால் ஒரே இடத்தில் அனைத்துச் சடலங்களையும் எரிக்க ஒப்புக்கொண்டிருப்பதும் சமத்துவபுரத் திட்டத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்

**தோரணவாயில்**

சமத்துவபுரம் நுழைவிடத்தில் பொன்விழா நுழைவாயில் அமைக்கப் பட்டுள்ளது. வெளிநபர்களோ அல்லது ஆடு, மாடுகளோ சமத்துவபுர கிராமத்திற்குள் நுழையாத வண்ணம் சமத்துவபுரத்தைச் சுற்றி இரும்பு முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

**பேருந்து வசதி**

மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து சமத்துவபுரத்திற்கு (மேலக்கோட்டை) நகரப் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் சாதி, மத வேறுபாடு முற்றிலும் களையப்படவேண்டும் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்ட திட்டம்தான் சமத்துவபுரத் திட்டம். இந்த சமத்துவபுர மாதிரி கிராமம், பாரதத்தில் ஒரு முன்மாதிரி கிராமமாகத் திகழும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

*"சமத்துவம் வாழட்டும்;*
*சமத்துவம் வெல்லட்டும்"*
**- கலைஞர்**

**பயனாளிகளின் உறுதிமொழி**

சமத்துவபுரத்தில் குடிபுகும் பயனாளிகள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடப்பதாக ஐந்து ரூபாய் மதிப்புக் கொண்ட பத்திரத்தில் உறுதிமொழி எடுத்துக்கொண்டு, கையொப்பம் இட்டுள்ளனர்.

**உறுதிமொழிகள் :**

★ சமத்துவபுரத்தில் குடிபுகும் நான், சாதி சமயப் பாகுபாடில்லாமல் அமைதியாகவும், ஒற்றுமையாகவும் இருப்பேன்.

★ சமத்துவபுரத்தில் குடிபுகும் நான் அங்கு அமையவுள்ள சமுதாயக்கூடத்தில் வழிபாடு, திருமணம் போன்ற சடங்குகளைச் செய்துகொள்வேன். ஒவ்வொரு சாதிக்கும், மதத்திற்கும் பொது இடத்தில் விழிபாட்டுத் தலங்கள் தனித்தனியாக அமைத்துக்கொள்ள மாட்டேன்.

★ என் இல்லத்தில் இறப்பு நேரிட்டால், சடலங்களைப் புதைக்க விரும்பினால் சமத்துவபுரத்தில் அமையவுள்ள பொது இடுகாட்டினையும், எரிக்க விரும்பினால் பொது சுடுகாட்டினையும் பயன்படுத்திக் கொள்வேன். ஆக ஒரு இடுகாடு, ஒரு சுடுகாடு என்ற வழிமுறையினைக் கடைப்பிடிப்பேன்.

★ சாதி, சமயத் தலைவர் சிலைகளைச் சமத்துவபுரத்தில் வைக்க முயற்சிக்கவோ, சம்மதிக்கவோ அல்லது அனுமதிக்கவோ மாட்டேன்.

★ சமத்துவபுரத்தில் குடிபுகுவோர் ஒவ்வொரு சாதியும், மாறி மாறி - உதாரணமாக, முதலாவதாக ஒரு ஆதிதிராவிடர், இரண்டாவது ஒரு பிற்பட்ட வகுப்பினர், மூன்றாவது ஒரு மிகவும் பிற்பட்ட வகுப்பினர், நான்காவது ஒரு ஆதிதிராவிடர் எனக் குடியிருக்கவேண்டும் என்பதனை அறிவேன். குடியிருப்பு மனைகள் ஒதுக்கீடு செய்யும்பொழுது இதுபோன்ற ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

★ சமத்துவபுரத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட 5 செண்டு நிலத்தையும், அதில் கட்டப்பட்ட வீட்டினையும் குறைந்தது 15 ஆண்டுகளுக்கு எவருக்கும் அடமானமோ விற்பனையோ செய்யமாட்டேன்.

★ எனக்கு ஒதுக்கீடு செய்யப்படும் வீட்டில் நானே குடியிருப்பேன். வேறு ஒருவருக்கும் வாடகைக்கு விடவோ அல்லது வேறு எவ்வகையிலேனும் வில்லங்கப்படுத்தவோ மாட்டேன்.

★ சமத்துவபுரத்தைச் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக்கொள்வேன்.

★ எனக்கு ஒதுக்கப்பட்ட மனையிடத்தில் குறைந்தது இரண்டு மரங்களையாவது வளர்ப்பேன்.

★ சமத்துவபுரத்தில் ஒதுக்கப்பட்டுள்ள பொது இடத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யமாட்டேன். வேறு எவரையும் ஆக்கிரமிப்புச் செய்யவும் அனுமதிக்க மாட்டேன்.

★ சமத்துவபுரத்தில் அமைக்கப்படும் குடிநீர், பூங்கா, தொலைக்காட்சி போன்ற பொதுவசதிகளைப் பயன்படுத்துவதில் சாதி, மத வேறுபாடு இன்றிப் பயன்படுத்திக் கொள்வேன்.

★ மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில், அரசு வழங்கிய 5 செண்டு நிலத்தையும், அதிலுள்ள கட்டடத்தையும் அரசு திரும்ப எடுத்துக்கொள்ளச் சம்மதிக்கிறேன். மேலும், மேற்படி மனையிடத்தில் அரசு வழங்கிய மானியத்தொகையைத் தவிர, எனது சொந்தச் செலவில் ஏதேனும் அபிவிருத்தி செய்திருந்தால் அந்த அபிவிருத்திச் செலவுத் தொகையினை அரசிடமிருந்து கேட்கமாட்டேன்.

★ அரசோ அல்லது மாவட்ட ஆட்சியரோ அவ்வப்போது விதிக்கும் சட்ட திட்டங்களுக்குக் கட்டுபட்டு நடப்பேன். ●



# அரசு ஆணைகள்

## நீதித்துறை

★ வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

★ தருமபுரி மாவட்டம், பென்னாகரத்தில் ஒரு மாவட்ட உரிமையியல் குற்றவியல் நீதிமன்றம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

★ திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

★ திருவாரூர் மாவட்டம் திருவாரூரில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

★ காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகத்தில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

★ ★ ★

## சட்டக் கல்வி

★ திருச்சிராப்பள்ளி அரசினர் சட்டக் கல்லூரிக்கு மகளிர் விடுதி கட்டுவதற்கு நிதி ஒதுக்கி ஆணை வெளியிட்டுள்ளது.

★ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டத்திற்கென நிதி ஒதுக்கி ஆணை.

★ ★ ★

## காவல்துறை

புதிய காவல் நிலையங்கள் அமைத்தல்

| | |
|---|---|
| பெரம்பலூர் மாவட்டம் | வெங்கனூர் |
| நாமக்கல் மாவட்டம் | தேவூர் |
| தூத்துக்குடி மாவட்டம் | தாளமுத்து நகர் |
| தருமபுரி மாவட்டம் | மகேந்திரமங்கலம் |
| தருமபுரி மாவட்டம் | உத்தன்னபள்ளி |
| ஈரோடு மாவட்டம் | காஞ்சிக்கோயில் |
| ஈரோடு மாவட்டம் | ஆப்பக்கூடல் |
| புதுக்கோட்டை மாவட்டம் | ரெகுநாதபுரம் |
| திருவண்ணாமலை மாவட்டம் | பொன்னூர் |
| திருவண்ணாமலை மாவட்டம் | தச்சம்பட்டி |
| பெரம்பலூர் மாவட்டம் | இரும்புலிக்குறிச்சி |
| சேலம் மாவட்டம் | சுங்கவல்லி |
| விழுப்புரம் மாவட்டம் | கண்டாச்சிபுரம் |
| மதுரை மாவட்டம் | பாலமேடு |
| மதுரை மாவட்டம் | சாடங்கோயில் |
| விருதுநகர் மாவட்டம் | மல்லி |
| கடலூர் மாவட்டம் | விருத்தாச்சலம் (போ.வ.கா.நி) |
| கரூர் மாவட்டம் | கரூர் நகர் (போ.வ.கா.நி) |

★ ★ ★

| | |
|---|---|
| செங்கை கிழக்கு மாவட்டம் | திருவேற்காடு |
| கோயம்புத்தூர் மாவட்டம் | வடக்கை பாளையம் |
| பெரம்பலூர் மாவட்டம் | வி.களத்தூர் |
| வேலூர் மாவட்டம் | பாகாயம் |
| திருநெல்வேலி மாவட்டம் | சாம்பவர் வடகரை |

ஆகிய புறக்காவல் நிலையங்கள் முழு காவல் நிலையங்களாக, தரம் உயர்த்த அரசு ஆணையிட்டுள்ளது.

★ ★ ★

## ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் நூற்றாண்டு:

இன்று வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறுகின்ற இந்த விழா சீரும் சிறப்பும் வாய்ந்த சீலமிக்க - முன்னாள் முதல்வர் - ஒழுக்கசீலர் - உத்தமர் - ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுடைய நூற்றாண்டு விழா என்று கூறப்பட்ட போதிலும் நம்முடைய நீதியரசர் கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல் நூறாவது ஆண்டு விழா, குறித்த காலத்தில் நடைபெறாமல், காலம் கடந்து மூன்றாண்டுகளுக்குப் பிறகு நடைபெறுகின்றது.

காலம் கடந்து நடைபெறுவதற்குக் காரணம் - ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் காலங்களைக் கடந்தவர். காலங்களைக் கடந்த அளவிற்கு தமிழ் மக்களுடைய நெஞ்சிலே நிலையாகப் பதிந்திருப்பவர்.

எனவேதான், காலம் கடந்து இந்த விழா நடைபெறுகிறது என்று நான் கருதுகிறேன்.

முன்னால் பேசியவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல் தமிழக முதலமைச்சராக இருந்தவர்கள் எவ்வளவோ அருஞ்செயல்களை ஆற்றியிருக்கலாம். ஆனால் நான் அத்தகைய செயல்களை ஆற்றினேனோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் அந்த முதலமைச்சர்கள் எல்லாம் பெறாத பல வாய்ப்புகளை நான் பெற்றிருக்கிறேன்.

**“அரசினர் தோட்டம் இனி ஓமந்தூரார் அரசினர் தோட்டம் என்று அழைக்கப்படும்!”**

**- முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு!**

### அண்ணா - தலைவர்களுக்கு நினைவு மண்டபங்கள்

இன்னும் நீண்ட காலம் இருந்திருக்க வேண்டுமென்று நாம் எண்ணினாலுங்கூட, அதற்கு மாறாக நம்மை விட்டுப் பிரிந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்திலே முதலமைச்சராக இருந்தார். அவருடைய மறைவிற்குப் பிறகு அவர் நினைவைப் போற்றுகின்ற அளவிற்கு அவர் வழியில் நின்று ஆட்சி புரிவது மாத்திரமல்ல; எத்தனையோ நினைவு மண்டபங்கள் நினைவுச் சின்னங்கள் அவர் பெயரால் என்றைக்கும் அவர் பெயரை எண்ணிக்கொள்ளக்கூடிய அளவிற்கு நினைவகங்களைத் தமிழகத்திலே உருவாக்கும் வாய்ப்பை நான் பெற்றேன்.



அதைப்போலவே பெருந்தலைவர் காமராஜர் அவர்கள்– அவரும் இன்னும் பல காலம் இருந்து நமக்கு அறிவுரைகளை வழங்கியிருக்க வேண்டியவர். அவர் மறைந்து என்றைக்கும் மறையாத உருவமாக நம் உள்ளத்தில் இருப்பார் என்ற அந்த வகையில் அவருக்கு நினைவு மண்டபம் கட்டுகின்ற அந்த வாய்ப்பும் - அந்தப் பெரும் பேறும் எனக்கேதான் கிட்டியது.

அதைப்போலவே மூதறிஞர் இராஜாஜி அவர்கள் - இரண்டு முறை தமிழகத்தில் முதலமைச்சாராக இருந்தவர் - அகில இந்திய அரசியலிலே நிரந்தரமாக இடத்தைப் பிடித்திருந்தவர். என்னிடம் தனிப்பட்ட முறையிலே அன்பு கொண்டவர். அவர் மறைந்த பிறகு அவருடைய நினைவு நிலைத்திருக்கும் வகையில் நினைவகம் எழுப்பிய பெருமையும் எனக்குத்தான் வாய்த்தது.

பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கும் எனக்கும் அரசியல் ரீதியாக எத்தனையோ கருத்து மாறுபாடுகள், வேறுபாடுகள் இருந்தாலுங்கூட, நிர்வாகத் துறையிலே அவருடைய அரும்பணிகள் இன்றைக்கும் நான் நிர்வாகத் துறையிலே கடைப்பிடிப்பதற்கேற்ற வகையிலே எனக்கு ஆசானாக அமைந்தது என்பதைப் பலமுறை நான் கூறியிருக்கிறேன். அத்தகைய பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு நினைவு மண்டபம் எழுப்புவதற்குரிய பாக்கியமும், வாய்ப்பும், பேறும் எனக்கேதான் கிட்டியது.

அதைப்போல தியாக சீலராக வாழ்ந்த தமிழகத்தினுடைய முன்னாள் முதல்வர்களிலே ஒருவரான, குமாரசாமி ராஜாவின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியும் இராஜபாளையத்திலே நடைபெற்றபோது அதிலே கலந்து கொள்ளவும், அவருடைய பெயரால் பல நினைவுச் சின்னங்களை எழுப்பிடவும் அத்தகைய பேறும் பாக்கியமும் வாய்ப்பும் எனக்கேதான் கிட்டியது.

ஒரு குறை இருந்தது. தாடி இல்லாத பெரியார் என்று தமிழக மக்களால் போற்றப்பட்ட ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு நூற்றாண்டு விழா - அவர் பெயரால் நினைவுச் சின்னங்கள் அமைக்கின்ற வாய்ப்பு நமக்கு கிட்டவில்லையே என்று நான் எண்ணியதுண்டு. அந்த வாய்ப்பும் உனக்கே இருக்கட்டும் என்று கடந்த கால ஆட்சியாளர்கள், அவர்களுடைய பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டு - அந்த வாய்ப்பையும் எனக்கே அளித்துவிட்டார்கள்.

### உரியவர்களுக்குத்தான் வாய்ப்பு கிடைக்கவேண்டும் என்பது நியதி

யாருக்கு அந்த வாய்ப்பு உரியதோ அவர்களுக்குத்தான் கிடைக்க வேண்டும் என்பது நியதி. அந்த நியதியின்படி, எனக்கு அந்த வாய்ப்பு கிடைத்தது. நம்முடைய நீதியரசர் அவர்களும், நம்முடைய மூப்பனார் அவர்களும், நம்முடைய ராமமூர்த்தி அவர்களும் நீங்கள் இதைச் செய்திருக்கிறீர்கள் என்று என்னைத் திரும்பிப் பார்த்துச் சொன்னார்கள். எனவே இந்த வாய்ப்பை நான் பெற்று இந்த விழாவை அரசின் சார்பில் வள்ளுவர் கோட்டத்தில் நடத்துகின்ற இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்துள்ள நீதியரசர் ரெட்டியார், மூப்பனார், ராமமூர்த்தி ஆகியோருக்கும் உங்கள் அனைவருக்கும், உங்களையெல்லாம் அன்போடு வரவேற்ற தம்பி கே.கே.எஸ்.எஸ்.ஆருக்கும், இந்த நிகழ்ச்சியைக் குறுகிய காலத்திலே ஏற்பாடு செய்த தம்பி அமைச்சர் முல்லைவேந்தனுக்கும் நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்த நினைவு எப்போது ஏற்பட்டதென்றால் - இதற்காகத் திட்டமிட்டு, பத்துபேர் கூடி அமர்ந்து பேசி இந்த முடிவை எடுக்கவில்லை. இராஜபாளையத்தில் குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழா நடைபெற்றபோது, மேடையில் நான் குமாரசாமி ராஜா பற்றிய மலர் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தேன். அந்த மலரில் குமாராசாமி ராஜா அவர்கள் இராஜபாளையத்தில் நடத்திய காங்கிரஸ் கட்சி மாநாட்டிற்கு அவரே வரவேற்பாளராக இருந்தாரென்றும் - அந்த மாநாட்டில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரும், பெருந்தலைவர் காமராஜரும், மற்றவர்களும் கலந்துகொண்டார்கள் என்றும் ஒரு செய்திக்குறிப்பு இருந்தது.

அப்போதுதான், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரின் நூற்றாண்டு விழா எப்போது நடைபெற்றிருக்கவேண்டுமென்று திரு.மூப்பனார் அவர்களிடத்திலே நான் கேட்டேன். அவர்கள் 103 ஆண்டுகளாகிவிட்டது என்று சொன்னார்கள். அப்போதே இந்தத் தேதியை அந்த மேடையிலேயே நிச்சயம் செய்து அதிலே கலந்துகொள்ள வேண்டுமென்று மூப்பனார் அவர்களையும் நான் கேட்டுக்கொண்டு அதன் தொடர்பாக இந்த நிகழ்ச்சிகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

95ஆம் ஆண்டிலேயே இந்த நூற்றாண்டு விழாவை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இன்னும் சொல்லப்போனால் - அரசின் கோப்புகளைப் பார்க்கும் வாய்ப்புள்ளவன் என்பதால் - இதற்காக மூன்று இலட்சம் ரூபாய் 95ஆம் ஆண்டில் நிதி கூட ஒதுக்கப் பட்டிருக்கின்றது.

நிதி ஒதுக்கப்பட்டதே தவிர, நடத்த வேண்டுமென்று விதி ஏற்படவில்லை. புராணீக பாஷையிலே சொல்ல வேண்டுமென்றால் - அந்த விதி எனக்குத்தான் இருந்திருக்கின்றது. அந்த விதிப்படி இந்தக் காரியம் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

**கள்ளங்கபடமற்ற - கிராம விவசாயியின் முகம்**

ஓமந்தூரார் அவர்களை தமிழ்நாட்டு மக்கள் தங்களிலே ஒருவராகக் கருதுகின்ற அளவிற்கு உருவம் படைத்தவர். உள்ளம் படைத்தவர். நீங்கள் இந்தப் படத்தைப் பார்த்தாலே தெரியும். ஒரு கள்ளங்கபடமற்ற கிராமத்து விவசாயியின் முகம்தான் ஓமந்தூரார் முகம் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அப்படிப்பட்ட எளியவர் - இனியவர் - ஏழைப் பங்காளர் - விவசாயிகளின் தோழர். விவசாயத்தை விஞ்ஞான ரீதியாக வளர்க்க வேண்டுமென்று பெருவிருப்பம் கொண்டு பணிகளை ஆற்றியவர். அத்தகையவர் ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இரண்டாண்டு காலம்தான் இருக்க முடிந்தது என்பது இந்த மாநிலத்தின் வாய்ப்புக் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். அவர், நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னால் முதலமைச்சர் பொறுப்பையேற்றார். அவர் முதல்வராக இருந்தபோதுதான் நாடு சுதந்திரம் பெற்றது.

**ஓ.பி.ஆர். பற்றி அண்ணா எழுதிய கட்டுரை**

அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றபோது அவரைப் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு இதழிலே ஒரு கட்டுரை எழுதினார். அந்தக் கட்டுரையின் தலைப்பு - "காந்தி ராமசாமியும் - பெரியார் ராமசாமியும்" என்பதாகும். அதிலே அண்ணா குறிப்பிடுகிறார்.

"கள்ளம் கபடமற்ற கிராமவாசி; அரசியல் சூதாட்டத்திற்கு அப்பாற்பட்டவர்; தியாக முத்திரையை அரசியல் சந்தையிலே விற்கத் துணியும் வணிகராக இருக்க மறுப்பவர். சொந்த வாழ்க்கையையும், நலனையும் மிக மிகக் குறைவான அளவினதாக ஆக்கிக்கொண்ட துறவு மனப்போக்கினர். நெடுங்காலமாக, நாட்டுப்புற வாழ்வை நேரடியாக, அவருடன் பழகியது மட்டுமன்று, அவர்களில் ஒருவராக இருந்து அறிந்து கொண்டவர். உள்ளொன்று வைத்து வெளி ஒன்று கொண்டுழலும் உலுத்தர் போலன்றி, ஊருக்கு உழைப்பேன், அதனால் வந்துறும் இன்னலைப் பொறுப்பேன் - என்ற உறுதி பயிடத்த உள்ளத்தினர். எளிய வாழ்க்கையும், சீரிய குணங்களும் கொண்டவர். இவரே நம் முதலமைச்சர் என்று சொன்னால் ஒழிய, யாராலும் அவ்வளவு பெரிய பதவியில் அமர்ந்து இருப்பவர் என்று கண்டதும் உணரக்கூடிய விதமான உருவமோ, உடையோ, நடையோ கொண்டவர் அல்லர். தன்னடக்கம் உள்ள தமிழர் ஓமந்தூரார்" என்று எழுதினார் அண்ணா!

**தனித்தமிழராக - தன்மானமுள்ளவராய் தமிழகத்தை ஆண்டவர்**

நம்முடைய நீதியரசர் அவரை தெலுங்குத் தமிழர் என்றார். ஆனால் எங்கள் அண்ணா அவரைத் தன்னடக்கம் உள்ள தமிழர் என்றே சொல்லியிருக்கிறார். அவர் தனித் தமிழராகவே - தன்மானம் உள்ள தமிழராகவே இந்தத் தமிழ் மாநிலத்தை ஆண்டிருக்கிறார். தமிழகத்திலே உலவியிருக்கிறார். தமிழகத்திலே பணியாற்றியிருக்கிறார்.

இன்றைக்கு தமிழ்நாடு அரசாங்கத்தின் சின்னமாக இருக்கிறதே, இந்தக் கோபுரச் சின்னம் - இந்தச் சின்னத்தை யார் உருவாக்கினார்கள் என்று பலருக்குத் தெரியாது. நம்முடைய பள்ளிக்கூட மாணவர்கள்கூட அதை அறிந்திருக்க இயலாது. அவைகளையெல்லாம் அரசின் கல்வித்துறை சார்பில் மாணவர்களுக்கு அறிவிக்க வேண்டும். அதனை நான் இப்போது தெரிவிக்க விரும்புகிறேன்.

**அரசாங்க இலச்சினை உருவாக்கி வழங்கியவர்**

சென்னை அரசாங்கத்திற்கு ஒரு இலச்சினை வேண்டும் - இலச்சினை என்றால் அடையாளச் சின்னம் - வேண்டுமென்று விரும்பியபோது - இப்போதிருக்கின்ற இந்தச் சின்னத்தை உருவாக்கி, இப்படி இருக்கட்டுமென்று வழங்கியவர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்.

இதை அவர் அறிவித்தவுடன், இது ஒரு குறிப்பிட்ட சமயத்தாரின் சின்னம். எனவே, இது சமயச்சார்பற்ற அரசுக்கு நல்லதல்ல - கோபுரச் சின்னம் கூடாது என்றும் இதை இந்திய அரசு அனுமதிக்கக்கூடாது என்றும் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள்.

உடனே நேரு பெருமகனார் தனக்கு இத்தகைய முறையீடுகள் வந்திருப்பதைச் சுட்டிக்காட்டி ஓமந்தூராருக்கு விளக்கம் கேட்டு எழுதினார். உடனே ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் என்ன பதில் எழுதினார் தெரியுமா ?

*"கோபுரம் என்பது சயமச் சின்னம் அன்று; இந்த மாநிலத்தின் தனிச்சிறப்பாக விளங்கும் திராவிடக் கட்டடக்கலையின் அடையாளம். காந்தி அடிகளின் இனிய நண்பரும், கிறிஸ்துவப் பெருமகனுமான மேனாட்டார் சி.எப்.ஆண்ட்ரூஸ் என்ற வணக்கத்துக்குரிய மத குருவின் ஆதரவோடு வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் கோபுரத்துடன் கூடிய தேவாலயம் கட்டப்பட்டிருப்பதையும் இந்தியப் பிரதம மந்திரிக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்."*

என்று நேருவிற்குத் துணிச்சலாக அன்றைக்கே கடிதம் எழுதி நேருவினுடைய மௌனத்தை அதற்குப் பதிலாகப் பெற்றார்.

**அஞ்சாநெஞ்சத்திற்கும் ஆற்றலுக்கும் எடுத்துக்காட்டு**

அவருடைய அஞ்சாநெஞ்சத்திற்கும் ஆற்றலுக்கும் இன்னொரு எடுத்துக்காட்டு சொல்ல வேண்டுமேயானால் - புதுவையை அடுத்த சொர்ணாவூரில் காங்கிரஸ் மாநாடு ஒன்றை அவர் ஏற்பாடு செய்தார். அந்த மாநாட்டில் குழிகள் தோண்டப்பட்டு மரங்கள் நடப்பட்டு அதிலே காங்கிரஸ் கொடிகளைப் பறக்க விடக்கூடாதென்று ஆங்கிலேய சர்க்கார் ஆணை பிறப்பித்தது. சரி. குழிகள் தோண்டி, மரங்கள் நட்டு,



கொடிகளைக் கட்டக்கூடாது என்கிறாய்; பரவாயில்லை என்று காங்கிரஸ் கொடிகளையெல்லாம் அங்கேயிருந்த பனை மரங்கள், தென்னை மரங்கள் மற்ற மரங்களின் கிளைகளில் எல்லாம் கட்டி அந்த மாநாட்டை அஞ்சாநெஞ்சத்தோடு, ஆற்றலோடு நடத்தியவர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்.

1934-ஆம் ஆண்டிலேயே மேல் சாதி, கீழ் சாதிக் கொடுமை கூடாது என்பதற்காக ஆதி திராவிடர்களையெல்லாம் அழைத்துக் கொண்டு சிதம்பரம், ஓமந்தூர் போன்ற இடங்களில் உள்ள ஆலயங்களுக்குள் ஆலயப் பிரவேசம் செய்து காட்டியவர் ஓமந்தூரார்.

உப்புச் சத்தியாகிரகத்திலே ஈடுபட்டு அந்த யாத்திரையில் வேதாரண்யம் வரையில் ராஜாஜியின் தலைமையிலே சென்று சிறைபட்டார். பலமுறை சிறைப்பட்டார். 42-ஆம் ஆண்டு "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்திலும் கலந்துகொண்டு 15 மாதங்கள் வேலூர், தஞ்சை, திருச்சி ஆகிய சிறைகளிலே தண்டனையை அனுபவித்தார்.

ஆனால் அவருடைய குடும்ப வாழ்க்கை; இளமையிலேயே மனைவியை இழந்தார்; அடுத்து தன் பெண் குழந்தையை இழந்தார்; அதற்குப் பிறகு வாலிப வயது வரையிலே வளர்க்கப்பட்ட தன்னுடைய மகன் சுந்தரத்தையும் இழந்தார். சோகமயமான வாழ்க்கை அவருடைய குடும்ப வாழ்க்கை. ஆனால் அதைப்பற்றிக் கவலைப்படாமல் மகன் பெங்களூரிலே இறந்து விட்டான் என்று கேள்விப்பட்ட பிறகும் கூட, அதற்குச் செல்லாமல், அவனுடைய அடக்கத்தை அங்கேயுள்ளவர்கள் செய்து முடிக்க, செய்தியை மாத்திரம் கேட்டுக் கொண்டு அரும் பணிகளிலே ஈடுபட்டவர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்.

**பாரதியாரின் நூல்களை நாட்டுடைமை ஆக்கியவர் ஓமந்தூரார்.**

அவருடைய மகன் இளம் பிராயத்தில் சேரன்மாதேவி குருகுலத்தில் சேர்க்கப்பட்டிருந்தான். வ.வே.சு. அய்யரால் நடத்தப்பட்ட அந்தக் குருகுலத்தில் சாதிப்பாகுபாடு; உயர் சாதிக்காரர்கள்; உயர் சாதி அல்லாதவர்கள் என்று பிரிக்கப்பட்டு - உயர்சாதிக்காரர்கள் குடிக்கின்ற தண்ணீர்ப் பானையிலேகூட தண்ணீர் மொண்டு மற்றவர்கள் குடிக்கக் கூடாது என்கின்ற அளவிற்கு விதிமுறைகள் அங்கே இருந்தன. அதன் காரணமாக அங்கே கிளர்ச்சி ஏற்பட்டது. தந்தை பெரியார் அவர்கள் முன்னின்று அந்தக் கிளர்ச்சியை நடத்தினார் என்பதெல்லாம் வரலாறு. அந்த வரலாற்றின் அடிப்படையில் ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன்.

அவருடைய மகன் சுந்தரம் தந்தை ஓமந்தூராரைச் சந்தித்து "அப்பா, அங்கே தண்ணீர் பானை தனித்தனியாக வைத்திருக்கிறார்கள்; எங்களுக்கொரு பானை, உயர் சாதிக்காரர்களுக்கு ஒரு பானை என்று வைத்திருக்கிறார்கள்; நான் உயர்சாதிக்காரர்களுக்காக வைக்கப்பட்ட பானை என்று தெரியாமல், அதிலிருந்து ஒரு குவளை தண்ணீர் மொண்டு பாதி தண்ணீர் குடிப்பதற்குள் அங்கே வந்த உயர்சாதிக்கார ஆசிரியர் என் கன்னத்திலே பளார் என்று அடித்து விட்டார். அந்தப் பானையைத் தீட்டாக்கி விட்டாயே என்று கேட்டு அடித்தார். அப்பா, தீட்டு தீட்டு என்று சொல்லி அடித்தாரே, தீட்டு என்றால் என்ன அப்பா ?" என்று கேட்டான்.

அதைக் கேட்டதும் ஓமந்தூராருடைய முகம் சிவந்தது. தாங்க முடியாத வேதனைப்பட்டார். அதன் விளைவாகத் தான் பெரியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு.வி.க. இவர்களோடு ஓ.பி.ஆரும் சேர்ந்து சேரன்மாதேவி போராட்டத்திலே கலந்துகொண்டதின் காரணமாகத் தன்னுடைய மகனையே அங்கிருந்து வெளியேறச் சொல்லி வேறு பள்ளியிலே சேர்க்கச் செய்து - சேரன்மாதேவி குருகுலத்திற்கே ஒரு முடிவுரையை எழுதினார்கள் அந்தக் காலத்தில்.

அவர்தான் பாரதியார் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டதற்குக் காரணமும் ஆவார். பலபேருக்கு இது தெரியாது. பாரதியாரின் நூலை நாட்டுடைமையாக ஆக்க அன்றைக்கு 15,000 ரூபாய் பரிவுத் தொகை வழங்கி, 12.3.1949-ல் சுப்பிரமணிய பாரதியாருடைய நூல்களையெல்லாம் நாட்டுடைமையாக ஆக்கி ஆணை பிறப்பித்தார் ஓமந்தூரார். இன்றைக்கு நாங்கள் பல நூல்களையெல்லாம் நாட்டுடைமையாக ஆக்குகிறோமென்றால், அதற்கெல்லாம் அன்றைக்கு வழிகாட்டியாக அமைந்தவர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்.

**கிருஷ்ணா நீர் வர ஆரம்ப கர்த்தாவாக இருந்தவர் ஓமந்தூரார்**

அந்தக் காலத்திலேயே கீழ் பவானி அணை இவரால்தான் கட்டப்பட்டது. வீடூர் அணைக்கு ஒப்புதல் அளித்தார் - ஆனால் கட்டி முடிக்கவில்லை. பிறகு வந்த ஆட்சியாளர்கள் அதைக் கட்டி முடித்தார்கள். இன்னும் சொல்லப் போனால் கிருஷ்ணா, பெண்ணையாறு இரண்டையும் இணைத்து சென்னைக்கு குடிநீர் வழங்குகின்ற ஒரு திட்டத்தை மத்திய அரசுக்கு அன்றைக்கே ஓமந்தூரார் அனுப்பி வைத்தார். கிருஷ்ணா, பெண்ணையாறு சேர்ந்து வராவிட்டாலும் இன்றைக்கு கிருஷ்ணா நீர் வர ஆரம்பக் கர்த்தாவாக இருந்தவரே, ஓமந்தூர் இராமாசாமி ரெட்டியார்தான் என்று சொன்னால் அது மிகையாகாது.

அப்படிப்பட்டவருடைய நினைவை இன்றைக்கு நாம் போற்றிக் கொண்டிருக்கிறோம். இங்கே மேடையிலே கோரிக்கை வைக்கவில்லையே தவிர, தம்பி. கே.கே.எஸ்.எஸ். ஆரும், மற்றும இந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் என்னை வீட்டில் சந்தித்து ஓமந்தூரார் பெயரால் சென்னையிலே ஒரு சாலைக்குப் பெயரிட வேண்டுமென்று கேட்டார்கள்.

நான் எந்தச் சாலைக்கு அவர் பெயர் வைக்கலாம் என்று யோசித்துப் பார்த்தேன். சாலைக்குப் பெயரிடுவது எனக்குப் பொருத்தமாக தோன்றவில்லை. இன்றைய தினம் சட்டமன்ற உறுப்பினர் விடுதிகள் எல்லாம் இருக்கின்ற பகுதி - ராஜாஜி மண்டபம் இருக்கின்ற பகுதி - அந்த வளாகத்திற்கு தற்போது பெயர் "அரசினர் தோட்டம்" என்பதாகும். இனிமேல் அந்த அரசினர் தோட்டம் - "ஓமந்தூரார் அரசினர் தோட்டம்" என்று வழங்கும் என்று கூறி, இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்ட உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*- வள்ளுவர் கோட்டத்தில் 25.8.98 அன்று நடைபெற்ற முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.* ★

# கணினி வளர்ச்சியில், நம்முடைய ஆட்சியில்

# தமிழ் பெருமைமிக்க இடத்தைப் பெறும்

- முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

நாமெல்லாம் செய்தி யுகத்தின் விடியலிலே இன்றைக்கு இருக்கிறோம். எதிர்காலத்தினுடைய இணையற்ற தொழில் நுட்பமாகச் செய்தி பரப்புகின்ற வழிமுறைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

இவ்வகைத் தொழில் நுட்பத்தில் மாபெரும் பங்குபெறும் செயற்கைக்கோள் இணைப்பு, ஒருங்கிணைந்த வீடியோ, குரலோசைகள் ஆகியவை இந்த உலகத்தில் அங்கிங் கெனாதபடி எங்கும் பரவியுள்ளன. மலரவிருக்கும் 2000-ஆம் ஆண்டில் உலக அளவில் தகவல் தொழில் நுட்பத் துறையின் உற்பத்தி மதிப்பு 1,300 பில்லியன் அமெரிக்க டாலர் அதாவது 1,300 இலட்சம் கோடி ரூபாய் அளவை எட்டக் கூடுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்தியாவிலே ஆண்டு ஒன்றுக்கு எட்டு சதவிகித கூடுதல் மதிப்பீட்டுடன் வளரும் மின்னணு தொழில் துறையின் உற்பத்தி மதிப்பு 2000-ஆம் ஆண்டில் 20 பில்லியன் அமெரிக்க டாலர் அதாவது 20 இலட்சம் கோடி ரூபாய் அளவை அடையக்கூடுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

அண்மைக் காலமாக தமிழ்நாடு பல தொழில் முதலீடுகளைக் குறிப்பாகப் பல வெளிநாட்டினரின் முதலீடுகளை ஈர்த்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். அமெரிக்க நாட்டின் ஃபோர்டு மோட்டார் நிறுவனம், கொரியாவின் ஹூண்டாய் நிறுவனம், ஜப்பானிய மிட்சுபிஷி நிறுவனம், பிரெஞ்சு நாட்டின் செயின்ட் கோபைன் நிறுவனம் ஆகியவை இங்கே முதலீடுகள் செய்து தங்கள் தொழில்களைத் தொடங்கியுள்ள விவரங்களையும் நீங்கள் உணருவீர்கள்.



## தமிழகத்தின் தொழில் கொள்கைதான் தொழில் வளர்ச்சிக்குக் காரணம்

தமிழகம் தொழில் முதலீட்டாளர்களுக்காக உருவாக்கியுள்ள அரிய தொழில் கொள்கைகள்தான் இந்த முன்னேற்றத்திற்கு - இந்த வளர்ச்சிக்குக் காரணமாகும். தரமான பொறியியல் கல்வி வழங்குவதில் முன்னணி நிறுவனங்களாக விளங்குகின்ற அண்ணா பல்கலைக்கழகம், சென்னை ஐ.ஐ.டி., கோவை பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரி போன்றவைகளிலிருந்து ஆண்டுதோறும் தகுதியும், திறமையும் வாய்ந்த ஏறத்தாழ 23,000 பொறியியல் பட்டதாரிகள் உருவாகின்றார்கள். இவர்களில் ஏறத்தாழ 13,000 மாணவர்கள் தகவல் தொழில் நுட்பத் துறையில் ஆற்றல் படைத்தவர்களாகத் திகழ்கின்றார்கள்.

இந்தத் தகவல் துறை தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்கும் இந்த மனித வளத்தின் துணையோடு இத்துறையை மிகுந்த மதிப்புடையதாக உலக அரங்கத்தில் உருவாக்கி வருகிறோம். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் சாப்ட்வேரில் (மென்பொருள்) தேர்ச்சி பெற்றோர் எண்ணிக்கை அதிகம் என்பதை எனக்கு முன்னால் இங்கே உரையாற்றியவர்கள் எல்லாம் எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள்.

தமிழகத்தில் ஏறத்தாழ 120 சாப்ட்வேர் தொழில் நிறுவனங்களில் ஏறத்தாழ 15,000 வல்லுநர்கள் பணிபுரிகின்றார்கள். இந்த நிறுவனங்களிலிருந்து ஆண்டுதோறும் 1,100 கோடி ரூபாய் மதிப்புடைய சாப்ட்வேர், ஹார்டுவேர் பொருள்கள் ஏற்றுமதியாகின்றன என்பதை இங்கே தலைமையேற்றுள்ள தம்பி முரசொலி மாறன் சுட்டிக்காட்டினார்.

தொழில்நுட்ப மேம்பாட்டின் முக்கியத்து வத்தை நன்கு உணர்ந்து, இந்த அரசு தகவல் தொழில் நுட்பப் பூங்காக்களை அமைத்திட முன்வருவோருக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகின்றது. விற்பனைத் தலங்கள், குடியிருப்புகள் எல்லாம் இத்தகைய அறிவியல் பூங்காக்களில் அடங்கியிருக்கும்.

அதே நேரத்தில் - சுற்றுப்புறத்தை மாசு படுத்தாத அளவில் ஹார்டுவேர் தொழில் நுட்ப ஏற்பாடுகளும் இந்தத் தொழில் வளாகங்களில் அமையுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

97-98ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அரசினுடைய தகவல் தொழில் நுட்பவியல் கொள்கையின்படி (இன்பர்மேஷன் டெக்னாலஜி பாலிசி) இந்த அரசு தகவல் தொழில் நுட்பவியலில் ஏற்பட்டுவரும் வளர்ச்சியைக் கருத்திலே கொண்டு, பல்வேறு சலுகைகளை வழங்கி வருகின்றது. அவை சென்னை, திருச்சி, கோவை, மதுரை ஆகிய இடங்களில் தகவல் தொழில் நுட்பவியல் வளாகங்களை அமைக்க முடிவு செய்துள்ளது என்பதும் ஒன்றாகும்.

## தொழில் முனைவோருக்கு நிலம் - முழு வரி விலக்கு

அவ்வாறு அமைக்கப்படும் வளாகங்களில் தொழில் முனைவோருக்கு நிலம் வழங்குதல்; நீர், மின்சாரம், சாலை வசதிகள் செய்து தருதல், தொலைத் தொடர்புத் துறை மூலமாகக் கேபிள் மற்றும் விண்வழிக்கோள் இணைப்பு பெறத் தேவையான உதவிகள் செய்தல்; இடம் தேர்வு செய்வோர் கட்டடம், இடம் ஒதுக்கீடு பெறுவோர் வசதிக்காக முத்திரைக் கட்டணம் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணம் ஆகியவற்றில் முழுமையான வரி விலக்கு வழங்குதல் முதலிய பல்வேறு உதவிகளை அரசு வழங்கிவருகின்றது,

மாசுக்கட்டுப்பாடு தொடர்பான நிபந்தனைகளைக் கணிப்பொறித் தொழில்களுக்கு விதிக்கப்படுவதில்லை. தொழில் வளாகத்தின் உட்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் வேலை ஒப்பந்தத்திற்கும் முழுமையான வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

நான் நிலத்தைப் பற்றிக் குறிப்பிட்டேன். இன்று இந்த அரசில் என்னுடைய துறைகளில் ஒன்றாகத் தொழில் துறையும் இருக்கின்ற காரணத்தால் ஒவ்வொரு நாளும் நான் கையெழுத்திடுகின்ற கோப்புகளில் மிக அதிகமான கோப்புகள் இன்னின்ன தொழில் வளாகங்களுக்காக நிலம் கையகப்படுத்தப்படுகிறது என்கின்ற கோப்புகள்தான் என்பதை மகிழ்ச்சியோடும் பெருமையோடும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## ரூ.280 கோடியில் உருவாக இருக்கும் பிரம்மாண்ட கட்டடம்

இந்த அரசின் தகவல் தொழில் நுட்பவியல் கொள்கைகள் அடிப்படையில் எல்காட் நிறுவனமும், டிட்கோ நிறுவனமும் இணைந்து டைடல் பார்க் என்னும் புதிய தொழில் வளாகத்தை இங்கே உருவாக்குகின்றன. இத்தொழில் வளாகம் தகவல் தொழில் நுட்பத் தொழிற்சாலைகள் பலவற்றை ஏற்படுத்துவதற்காக பத்து இலட்சம் சதுர அடியில், சென்னை தரமணியில் 280 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப் படுகின்றது. இன்று விழாவிற்காக ஒரு பந்தல் அமைத்து அமர்ந்திருக்கின்ற நாம் வெகு விரைவில் 280 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக இருக்கின்ற பிரம்மாண்டமான கட்டடத்தை இதே இடத்திலே காணவிருக்கிறோம். அங்கே பணியாற்ற தேனீக்களைப் போல வந்து செல்கின்ற பத்தாயிரத்திற்கு மேற்பட்டவர்களையும் கண்டு மகிழவிருக்கிறோம்.

இந்த வளாகத்தில் தொழில் தொடங்குபவர்களுக்கு மற்ற தொழில்களுக்கு வழங்கப்படும் மானிய உதவிகள், சலுகைகள் முதலிய அனைத்தும் வழங்கப்படும். இங்கு மின்வெட்டுக்கு விலக்கு அளிக்கப்படும். 110 கிலோவாட் மின் உற்பத்தி செய்யும் துணை மின்நிலையம் ஒன்றும் இங்கு அமையவிருக்கின்றது. விதேஷ் சஞ்சார் நிகாம் லிமிடெட் (வி.எஸ்.என்.எல்.) எனப்படும் மத்திய அரசின் தொலைத் தகவல் தொடர்பு நிறுவனத்தின் உதவியோடு சாட்டிலைட் தொடர்புகளும் ஏற்படுத்தப்படும். வீடியோ வசதிகளோடு கருத்தரங்கக் கூடம், நெட்வொர்க் வசதிகள் முதலியன ஏற்படுத்தப்படும். டைடெல் பார்க் என்னும் இத்தொழில் வளாகத்திற்கு இன்று அடிக்கல் நாட்டப்படுகின்ற நேரத்தில் எனக்கு முன்னால் இங்கே எடுத்துச் சொன்ன பல நல்ல கருத்துக்களையெல்லாம் செயலாக்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக நம்முடைய விட்டல் அவர்கள் பேசும்போது அதைத் தொடர்ந்து தம்பி மாறனும் சுட்டிக்காட்டியவாறு, பள்ளிகளிலேயே கணினி பயிற்சியையும், கணினியின் பணியையும் அதிக அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார். அதற்கான முயற்சிகள் இன்றுமுதலே தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு, படிப்படியாகவும் பரவலாகவும் அது நிறைவேறும், நிறைவேற்றப்படும் என்பதை நான் இங்கே உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.





**கல்வியறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.**

**- தந்தை பெரியார்**

### கணினி வளர்ச்சியில் தமிழ் பெருமை மிக்க இடத்தைப் பெறும்

கணினியில் தற்போதே தமிழ் இருந்தபோதிலும், அதை மேலும் அதிக அளவிற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்ட திருவிட்டல் அவர்கள் உ.வே.சாமிநாதய்யர் எப்படி அச்சு உருவத்தில் தமிழை ஏற்றினாரோ அதைப்போல கணினி வளர்ச்சியிலும் நம்முடைய காலத்திலே தமிழின் ஆதிக்கத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டார். வரலாற்றில் 2000 ஆண்டிற்குள் கணினி வளர்ச்சியில் தமிழ் பெருமை மிக்கதோர் இடத்தைப் பெறும் என்று நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரே ஆண்டிற்குள் இந்தத் தொழில் வளாகம் அமைக்கப்பட்டு - 99 டிசம்பருக்குள் இங்கே தகவல் தொழில் நுட்பத் தொழில் கூடங்கள் பல செயல்படத் தொடங்கும் என எனக்கு தொழில்துறை செயலாளர் சீனிவாசன் அவர்களாலும், டிட்கோ தலைவர் கோபாலன் அவர்களாலும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

### மென்பொருள் துறையில் ஆற்றல் படைத்தவர்களுக்கு உதவிட நிதி

இத்துடன் ஆற்றல் படைத்தவர்களுக்கு உதவிட சிறப்பு நிதி அமைப்பை (வெஞ்சர் கேபிடல்) உருவாக்கவும் இந்த அரசு எண்ணியுள்ளது. சாப்ட்வேர் தொழில் வல்லுநர்கள் பல புதிய தயாரிப்புகளை உருவாக்கி உள்ளனர். அவர்களுக்கு ஊக்கமளிப்பது மிகமிக அவசியமான ஒன்றாகும். சிலர் மிகுந்த சிறந்த தொழில் நுட்பத்தோடு விளங்குகின்றார்கள். ஆனால், அவர்கள் பொருளாதாரத்தில் வசதி குறைந்தவர்களாக இருக்கிறார்கள். அத்தகைய திறமையாளர்களுக்கு, நிபுணர்களுக்கு அதாவது வல்லுநர்களுக்கு உதவுவதற்காக சிட்பி, ஐ.எல்.எப்.எஸ். போன்ற நிறுவனங்களின் துணையோடு முப்பது கோடி ரூபாயுடன் ஒரு சிறப்பு மூலதன நிதி 98-99ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டு "வெஞ்சர் கேபிடல்" உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதியிலிருந்து இந்த ஆண்டு செப்டம்பர் திங்கள் முடிவிற்குள் சில சாப்ட்வேர் நிறுவனங்களுக்கு நிதிஉதவி வழங்கப்படுமென டிட்கோ நிறுவனம் எனக்கு உறுதி அளித்துள்ளது. அப்படி உறுதியளித்தவாறு அந்த உதவி வழங்கப்படும். அதன்படி ஐந்து கோடியே ஐம்பது இலட்ச ரூபாய் நிதிஉதவி வழங்குவதற்கு மூன்று சாஃப்ட்வேர் நிறுவனங்களை டிட்கோ தேர்வு செய்துள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலே தமிழகம் இன்றைக்கு தொழில் வளர்ச்சியில் - தொழில் வளத்தில் முன்னேற்றத்தில் மூன்றாவது இடத்திலே இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. தோற்றத்திற்கு மூன்றாவது இடம் என்றாலும் இரண்டாவது இடத்திலேதான் இருக்கிறது என்று கணிக்கப்பட்டிருக்கின்றது. இருந்தாலும் கூட முதல் இடத்தை நோக்கி நாம் வேகமாக, விரைவாக விவேகத்தோடு செல்லவேண்டுமென்ற உணர்வோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

தமிழகத்தைப் பொறுத்து கடன் தொகை - வைப்புத் தொகை விகிதாச்சாரத்தில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதல் இடத்திலே இருக்கின்றது என்ற ஒரு புள்ளி விவரத்தை "டைம்ஸ் ஆப் இந்தியா" ஏடு, 6-7-98 தேதிய நாளிதழில் வெளியிட்டிருக்கின்றது. இந்த ஏட்டில் வந்த செய்தி வருமாறு:

### கடன் தொகை - வைப்புத் தொகை விகிதாச்சாரத்தில் தமிழகம் முதலிடம்

அண்மையில் கிடைத்த புள்ளி விவரப்படி தமிழ்நாடு, ஆந்திரா, மகாராஷ்டிரா மற்றும் மணிப்பூர் மாநிலங்கள் நாட்டிலேயே கடன் தொகை - வைப்புத் தொகை விகிதாச்சாரத்தில் (கிரடிட் டெபாசிட் ரேஷியோ) உயர்நிலையில் உள்ளதாக தெரிய வந்துள்ளது.

97-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கடைசி வெள்ளிக்கிழமை நிலவரப்படி அனைத்து வர்த்தக வங்கிகளின் ஒட்டுமொத்த அனைத்திந்திய சராசரி கடன்தொகை வைப்புத் தொகை விகிதாச்சாரம் 55.5 சதவிகிதம் என்றால் தமிழகத்தில் அப்போது விகிதாச்சாரம் 92.3 சதவிகிதமாகும். அதற்கடுத்து ஆந்திர மாநிலம் 74.2 சதவிகிதம் பெற்று இரண்டாம் நிலையிலும், அதைத் தொடர்ந்து மராட்டிய மாநிலம் 68.7 சதவிகிதம் பெற்றும், மணிப்பூர் 59 சதவிகிதம் பெற்றும் உள்ளன. தேசத்தின் தலைநகரமான டெல்லி யூனியன் பிரதேசத்தில் இந்த விகிதாச்சாரம் 70.9 சதவிகிதம். அதையொட்டியுள்ள சண்டிகர் பகுதியில் 69.1 சதவிகிதம். இதைத் தவிர இதர மாநிலங்கள் மற்றும் இதர யூனியன் பிரதேசங்களின் கடன் வைப்புத் தொகை விகிதாச்சாரம் அகில இந்திய சராசரிக்கு குறைவாகவே உள்ளது என்பதை எண்ணிப் பார்க்கும்போது நாம் முன்னணியிலே இருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைய முடிகின்றது.

The States of Tamil Nadu, Andhra Pradesh, Maharashtra and Manipur have recorded the highest credit deposit ratios (CDR) in the country, according to the latest data available.

Against an all-India average CDR of 55.5 percent of all scheduled commercial banks (as on the last Friday of December 1997), Tamil Nadu's CDR was an astounding 92.3 percent.

Andhra Pradesh recorded the second highest CDR of 74.2 percent, followed by Maharashtras 68.7 percent and Manipur's 59 percent. The National Capital Territory (NCT) of Delhi registered a CDR of 70.9 percent, close to the Union territory of Chandigarh's 69.1 percent.

The CDR of all other States/Union Territories is below the all-India average.

நான் இதைக்கூறுவது - இது போதும் என்று திருப்தி கொள்வதற்காக அல்ல. இந்த உற்சாகத்தோடு மேலும் ஊக்கத்தோடு நம்முடைய பணிகளையாற்றி தமிழகம் இந்தியாவிலேயே முதலிடத்தைப் பெற்றது என்கின்ற வரலாற்றை உருவாக்கவேண்டும். அதற்கு தொழில் முனைவோர் அனைவரும் துணைநிற்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

- சென்னை, தரமணியில் 'டைடெல்' மென்பொருள் பூங்காவிற்கு 21-8-98 அன்று அடிக்கல் நாட்டி முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை ★



# கட்சி வேறுபாடு தேவையில்லை:

# சாதி மதங்களுக்கிடையே பாலங்கள் கட்டப்பட வேண்டும் !

திண்டுக்கல் மேம்பாலம் திறப்பு விழாவில் 16.8.98 அன்று முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை :

"நீண்ட காலமாக இந்தப் பகுதிக்குத் தேவைப்பட்ட இரயில்வே மேம்பாலத் திறப்பு விழா நிகழ்ச்சி இந்நிகழ்ச்சி. அத்துடன் திறப்பு விழாவிற்கு என்றும், அடிக்கல் நாட்டு விழாவிற்கென்றும் தீட்டப்பட்டுள்ள ஏறத்தாழ 28 கோடி ரூபாய் திட்டத்திற்கான நிகழ்ச்சியாகவும் இந்த நிகழ்ச்சி இன்றைக்கு அறிவிக்கப்பட்டு அதற்கான திறப்பு விழா நிகழ்ச்சியும், தொடக்க விழா நிகழ்ச்சியும் இன்றைக்கு நிறைவேறியிருக்கிறது.

### நன்மைகளைச் செய்ய வேண்டும் என்ற கொள்கைக் கோட்பாடு

குறிப்பாக ஒரு அரசு மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை மக்களின் வரிப்பணத்தைக் கொண்டும் வேறு வகையான நல்லவிதமான வருமானங்களைக் கொண்டும் நிறைவேற்ற கடமைப்பட்டிருக்கிறது. மக்களால், மக்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நடைபெறுகிற மக்களின் ஆட்சியில் மக்களின் நன்மைகளைத் தவிர வேறு எந்தச் சிந்தனையும் ஆட்சியில் அமர்ந்திருப்பவர்களுக்கு இருத்தல் ஆகாது. அத்தகைய கொள்கைக் கோட்பாட்டுடன் நடைபெறுகின்ற ஆட்சிதான் இன்றைக்கு உங்களால் உருவாக்கப்பட்ட இந்த ஆட்சி.

இங்கே பேசிய திருமதி. பொன்னம்மாள் அவர்களும், ஆண்டி அம்பலம் அவர்களும், மற்றும் நண்பர்களும், அமைச்சர்களும் எனக்கு நல்வாழ்த்துக் கூறினார்கள். இன்னும் நீண்ட காலம் வாழ்ந்து மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்றெல்லாம், ஆண்டவன் மீது நம்பிக்கை உள்ளவர்களெல்லாம் ஆண்டவனைக் கேட்டுக்கொண்டார்கள். மற்றவர்கள் இயற்கையைக் கேட்டுக் கொண்டார்கள். யார் எப்படி கேட்டுக்கொண்டாலும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு முடிவு உண்டு. எப்படி ஆரம்பம் உண்டு என்பது நிச்சயமோ அதைப் போல முடிவு உண்டு என்பதும் நிச்சயம். நான் நூறாண்டுக் காலம் வாழ வேண்டும் என்று திருமதி. பொன்னம்மாள் இங்கே, வாழ்த்தினார். அவர் என்னை காணும் போதெல்லாம் எந்த நேரமானாலும் வாழ்த்துவதை வழக்கமாகக் கொண்டவர் நீண்டகாலம் நான் வாழ வேண்டும் நோய் நொடியின்றி நான் வாழவேண்டும் என்றெல்லாம் வாழ்த்துவார்கள். அதே வாழ்த்தினை இங்கே பல்லாயிரக்கணக்கில் குழுமியிருக்கின்ற மாநாடு போன்ற இந்த மகத்தான நிகழ்ச்சியிலும் அவர்கள் இங்கே வழங்கினார்கள்.

### எண்ணற்ற காரியங்களைச் செய்யும் ஆர்வம்

எத்தனை ஆண்டுக்காலம் இன்னும் நான் வாழவேண்டும் அல்லது வாழ்ப்போகிறேன் என்பதல்ல முக்கியம். வாழ்கின்ற நாட்களுக்குள் இந்தச் சமுதாயத்திற்கு, மக்களுக்கு ஏதாவது செய்யவேண்டும். இருக்கின்ற ஆட்சிப்பொறுப்பின் வாய்ப்பைப்

## திண்டுக்கல் மேம்பாலம் திறப்பு விழாவில் முதலமைச்சர் கலைஞர் வேண்டுகோள்



பயன்படுத்திக் கொண்டு முடிந்ததையெல்லாம் செய்யவேண்டும் என்கிற ஆர்வத்தோடுதான் நான் பணியாற்றிக் கொண்டிருக்கின்றேன். நான் வாழ்வது பல ஆண்டுக் காலம் என்றாலும், அல்லது சில ஆண்டுக் காலம் என்றாலும், அல்லது சிலர் சொல்வதைப் போல என் நாட்கள் எண்ணப்படுகின்றன என்றாலும், அந்த எண்ணப்படுகின்ற நாட்களுக்குள் எண்ணற்ற காரியங்களைத் தமிழ்மக்களுக்குச்செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தோடு நான் வேகவேகமாகப் பணியாற்றி வருகிறேன். அப்படி ஆற்றுகின்ற பணியின் ஒரு கட்டம்தான் இன்று திண்டுக்கல்லில் நடைபெறுகின்ற இந்த விழா நிகழ்ச்சிக்கு உரிய கட்டமாகும்.

இங்கே உரையாற்றியவர்களெல்லாம் எடுத்துச் சொன்னார்கள் குறிப்பாக நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் தம்பி தா. கிருட்டிணனும், பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகனும் இன்றைக்கு இங்கே இந்தப் பாலம் கட்டப்படுவதற்கான சிந்தனை எப்பொழுது எழுந்தது, கோரிக்கை எப்பொழுது எழுந்தது, அதற்கான முயற்சி எப்பொழுது முகிழ்த்தது, இன்றைக்கு அது எப்படி முகிழ்த்திருக்கிறது என்ற விவரங்களையெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

1989-90 ஆம் ஆண்டு சிந்தித்து, ஆட்சி கலைக்கப்பட்ட காரணத்தால் அதற்குப் பிறகு வந்த ஆட்சியிலே 93-ஆம் ஆண்டு டெண்டர் விடப்பட்டு 96-லே வேலை தொடங்கப்பட்டு ஓராண்டுக் காலம் அல்லது ஒன்றையாண்டுக் காலத்தில் பணி முடிக்கப்பட்டு இன்றைக்குப் பாலம் திறக்கப்பட்டிருக்கிறது. இதைப்போலப் பல பணிகள் இன்றைக்குத் தொடங்கப்பட்டும் - வேறு சில பணிகள் தொடங்கப்படுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டும் ஆக மொத்தம் ஏறத்தாழ 28 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் இன்றைக்கு இந்த மாவட்டத்தில் இந்த வட்டாரத்தில் இன்றைக்கு அறிவிக்கப்பட்டு உங்களையெல்லாம் இந்நிகழ்ச்சியில் நான் காணுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன்.

இந்தப் பாலத்திற்குச் சற்றொப்ப 4 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது. இதைத் தவிர மூன்று பாலங்கள் மேலும் கட்டி முடிக்கப்பட்டு, ஏறத்தாழ அதற்கு 2 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது. மருத்துவம், பொதுச் சுகாதாரத்துறையின் மூலம் 7 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள மிக முக்கியமான தீவிர இருதய சிகிச்சைப்பிரிவுக் கட்டடமும்இன்றைக்குத்திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

40 இலட்ச ரூபாய் செலவில் நான்கு புதிய பேருந்துகள் இந்த விழாவிலே இயக்கி வைக்கப்பட்டுள்ளன. இப்படி 12 கோடி ரூபாய்க்கான திறப்பு விழா நிகழ்ச்சிகள், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் ஏறத்தாழஐந்தரைக்கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொடைக்கானல், அம்மைய நாய்க்கனூர் ஆகிய இரண்டு இடங்களில் துணை மின் நிலையங்கள் கட்டுவதற்காகவும் இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன.

## அரசு உடனடியாக நிறைவேற்றிய ஏ.எஸ்.பொன்னம்மாள் கோரிக்கை

நீண்டகாலமாக நிலக்கோட்டையில் **அரசினர் மகளிர் கலைக்கல்லூரி** வேண்டுமென்று ஒவ்வொரு முறை சட்டமன்றத்தில் பேசும் போதும் நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர் பொன்னம்மாள் இதை வலியுறுத்தி வந்திருக்கிறார். அது எந்த மானிய விவாதமாக இருந்தாலும் சரி, அது ஆதிதிராவிட நலத்துறைமானியமாக இருந்தாலும் சரி, பொதுமானியத் துறை மானியமாக இருந்தாலும் சரி, கல்வி மானியமாக இருந்தாலும் சரி ஏன் காவல்துறை மானியமாக இருந்தாலும் சரி;எந்த மானியமாக இருந்தாலும் அக்காள் பொன்னம்மாள் பேச எழுந்தால் நிலக்கோட்டையிலே அரசினர் மகளிர் கலைக்கல்லூரி வேண்டும். அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லத் தவறியதே இல்லை. அந்தக் கோரிக்கை ஒரு நிபந்தனையோடு ஏற்கப்பட்டது. அதற்கான முதல் உதவியாக ஒரு பெருந்தொகையை வசூலித்துத் தரவேண்டும். சட்டமன்ற உறுப்பினருக்காக ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து தன்னுடைய பெரும் முயற்சியினால் ஏறத்தாழ 85 இலட்ச ரூபாய் அதற்கு வழங்க வேண்டும் என்று நிபந்தனை போடப்பட்டு அதிலே பெரும் பகுதியாக 80 இலட்ச ரூபாய்க்கு மேல் அவர்கள் கட்டிவிட்டு அந்தக் கலைக்கல்லூரியைக் கேட்டுப் பெற்றிருக்கிறார்கள். அதற்கான அடிக்கல் நாட்டு விழா இன்றைக்கு நடைபெற்றிருக்கிறது. அடிக்கல் நாட்டிய காரணத்தினால் அடிக்கல் அப்படியே இருக்காது, விரைவிலே அந்தக் கட்டடம் எழும்பும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கட்டடம் எழும்புவதற்குள்ளாகவே இப்பொழுதே கல்லூரி தொடங்கப்படுகிறது என்பதையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பெரும்பாலான அணைத் திட்டங்கள் - இவ்வாட்சியில்தான்

இதைப்போல வேறு பல திட்டங்கள் கூட்டுறவுத் துறை மூலமாக 18 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் நான்கு மண்ணெண்ணெய் பங்குகளை அமைப்பதற்கும் இன்றைக்கு ஆரம்ப விழா நடத்தப்பட்டு உள்ளது. அம்மாபட்டி மான்கரை இடையே மஞ்சளாற்றின் குறுக்கே சந்தான வர்த்தினி ஆற்றின் குறுக்கேயும் புதிய பாலங்கள் கட்டுவதற்கும் இன்றைக்கு அடிக்கல்



நாட்டப்பட்டுள்ளது. இந்தப் பாலங்கள் தம்பி துரைமுருகன் எடுத்துக் காட்டியதைப்போலப் பெரிய அணைகளானாலும் பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக்குப் பிறகு தமிழகத்திலே பெரும்பாலான அணைகள், நீர்த்தேக்கங்கள் பாசன வசதிக்கான சாத்தியக்கூறுகள் அனைத்தும் தி.மு.க. ஆட்சியிலேதான் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

அதுமாத்திரமல்ல; பாலங்கள் மேம்பாலங்கள் என்று எடுத்துக்கொண்டால் சென்னை மாநகரத்திலே புகழ் பெற்ற அண்ணா மேம்பாலம், சேலத்தில் இரண்டு மேம்பாலங்கள், திருப்பூரில் ஒரு மேம்பாலம், கோவையிலே அடுக்கு மேம்பாலம், அதைத் தவிர கோவையில் கிராஸ் கட் ரோட்டில் இன்னொரு மேம்பாலம், திருச்சி பாலக்கரையில் ஒரு மேம்பாலம், திருவாரூரில் ஒரு மேம்பாலம், மயிலாடுதுறையில் ஒரு மேம்பாலம், நெல்லையில் திருக்குறள் ஈரடி போல ஈரடுக்கு மேம்பாலம்,அந்தப் பாலத்திற்கு வள்ளுவர் மேம்பாலம் என்று பெயர். மதுரையிலே மூன்று மேம்பாலம், திருமானூரில் ஒரு பாலம், புலித்தலையில் முசிறியில் நீண்ட பாலம், சென்னையிலே மணலி மேம்பாலம், தண்டையார்பேட்டையில் ஒரு இரயில்வே மேம்பாலம், காட்பாடியில் இரயில்வே மேம்பாலம், அரக்கோணத்தில் இரயில்வே மேம்பாலம், தாம்பரத்தில் புலியூர் மேம்பாலம், இராயபுரத்தில் மேம்பாலம் உருவாகியதிலிருந்து மேலும் ஏழெட்டு மேம்பாலங்கள் உருவாகுவது குறித்து நம்முடைய தென்னக ரயில்வேயின் பொதுமேலாளர் கீர்த்திவாசன் அவர்கள் இங்கே விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள்.

## ஏழெட்டுப் பாலங்கள் விரைவில் கட்டப்படும்

இத்தனைப் பாலங்கள் இந்த ஆட்சிக் காலத்தில்தான் முயற்சி எடுக்கப்பட்டு அமைந்திருக்கின்றன. மேலும் அமைய இருக்கின்றன. ஏறத்தாழ 30 அல்லது 35 பாலங்கள் பெரும்பாலானவை கட்டி முடிக்கப்பட்டும், இன்னும் ஏழெட்டுப் பாலங்கள் கட்டி முடிக்கப்படுகின்ற சூழ்நிலையில் இருப்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பாலங்கள் மாத்திரம் போதாது; கார்கள் செல்ல, வண்டிகள் செல்ல, பயணிகள் செல்லக் குறிப்பாகத் துரித வண்டிகள் செல்கின்ற இடத்தைக் கடக்கக் கட்டப்படுகின்ற பாலங்கள் மாத்திரம் போதாது, பாலங்கள் நமக்கிடையிலேயும் கட்டப்பட வேண்டும்.

## ஜாதி மதங்களுக்கிடையே பாலங்கள் கட்டப்பட வேண்டும்

ஜாதிகளுக்கிடையே பாலங்கள் கட்டப்பட வேண்டும். மதங்களுக்கிடையே பாலங்கள் கட்டப்பட வேண்டும்; செட்டியாருக்கும், முதலியாருக்குமிடையே பாலம் கட்டப்பட வேண்டும். ஐயருக்கும் ஆதிதிராவிடருக்குமிடையே பாலம் கட்டப்பட வேண்டும். இஸ்லாமியருக்கும் இந்துவுக்குமிடையே பாலம் கட்டப்பட வேண்டும். அத்தகைய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டால்தான், அந்தப் பாலங்களில் போக்குவரத்து சுகமாக நடைபெற்றால்தான், சச்சரவு இல்லாமல் நடைபெற்றால்தான் பாலங்கள் கட்டப்பட்ட பிறகும் மோதிக் கொள்ளாமல் பயணம் நடைபெற்றால்தான் நான் மகிழ்ச்சியடைவேன். இந்தப் பாலங்களால் மாத்திரம் மகிழ்ச்சியடைய மாட்டேன். அந்தப் பாலங்கள் கட்டப்பட்டாக வேண்டும். அந்தப் பாலங்களைக் கட்டுகின்ற முயற்சியிலேதான் இன்றைக்கு அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஈடுபட்டிருக்கின்றோம்.

அதிலே கட்சி வேறுபாடு தேவையில்லை. உத்தமர் காந்தியடிகளும் அந்தப்பாலம் கட்டப்படவேண்டுமென்று பாடுபட்டார்; தந்தை பெரியார் அவர்களும், பெருந்தலைவர் காமராஜரும், பேரறிஞர் அண்ணா அவர்களும், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரும், டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களும் அந்தப் பாலம் கட்டப்பட வேண்டுமென்பதற்காகப் பாடுபட்டார்கள்.

## கட்சி வேறுபாடின்றிப் பாடுபட்ட தலைவர்கள்

ஆனால், அந்தப் பாலத்தைக் கட்டுகிற நேரத்தில் எத்தனைச் சிரமங்கள் இன்றைக்கு நாட்டிலே ஏற்படுகின்றதென்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆண்டவன் அனைவருக்கும் பொது என்கிறோம். அந்த ஆண்டவனின் படைப்புதான் எல்லா மனிதர்களும் என்று சொல்கிறோம். ஆனால் அந்த ஆண்டவனே நம்மை வெவ்வேறாகப் படைத்திருக்கிறான் என்றும் நம்புகின்றோம். அந்த ஆண்டவன் ஒருவனைக் கீழ் ஜாதிக்காரன் என்றும், இன்னொருவனை மேல் ஜாதிக்காரனாகவும் படைத்திருக்கிறான். இதற்குக் காரணம் ஆண்டவனின் முகத்திலே பிறந்தார்கள் சில பேர், அவர்கள் உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்றும்! தோளிலே பிறந்தார்கள் சிலபேர்கள், அவர்கள் அடுத்த ஜாதிக்காரர்கள் என்றும் தொடையிலே பிறந்தார்கள் சிலபேர், அவர்கள் அடுத்த ஜாதிக்காரர்கள் என்றும், காலிலே பிறந்தார்கள் சில பேர், அவர்கள் தாழ்ந்த ஜாதிக்காரர்கள் என்றும் ஆண்டவனையே குற்றம் சொல்லி ஆண்டவன் நம்மை இப்படியெல்லாம் தலையிலும், தோளிலும், தொடையிலும், காலிலும் பெற்றெடுத்திருக்கிறார்கள் என்று ஆண்டவனுக்கே நாம் களங்கம் கற்பித்துக் கொண்டிருக்கிறோம். அப்படியே அந்தக் கதை, அந்தப் புராணம் உண்மை என்று வைத்துக் கொண்டாலும் கூட, நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அத்தி மரத்தைப் பார்த்திருப்பீர்கள். அந்த அத்தி மரத்தில் வேரிலும் காய் காய்க்கும்; கிளையிலும் காய் காய்க்கும். கொப்பிலும் காய் காய்க்கும்; உச்சியிலும் காய் காய்க்கும். அதைப்போலப் பலா மரத்தைப் பார்த்திருக்கிறோம்.

பலா மரத்தின் வேரிலும் காய் காய்க்கிறது, தண்டிலும் காய் காய்க்கிறது, கிளையிலும் காய் காய்க்கிறது. எல்லாக் காயும் பலாக் காய்தான். எல்லாக் காயும் அத்திக்காய்தான். கிளையிலே காய்த்தது புடலங்காய்; தண்டிலே காய்த்தது அவரைக்காய். வேரிலே காய்த்தது பாகற்காய் என்று யாரும் சொல்வதில்லை. பலா மரத்தில் காய்க்கின்ற எல்லாக் காயும் பலாக்காய் என்பதைப்போல; அத்தி மரத்திலே காய்க்கின்ற எல்லாக் காயும் அத்திக்காய் என்பதைப்போல ஆண்டவன் தன்னுடைய உடம்பிலே தோளிலும், தொடையிலும், காலிலும் பல பிரிவு மக்களைப் பெற்றிருக்கின்றான் என்பதை வாதத்திற்கு வைத்தாலும் கூட, எல்லோரும் ஆண்டவனின் படைப்புதான், எல்லோரும் மனிதர்கள்தான் என்கின்ற அந்த எண்ணம் உருவாக வேண்டும்; உதயமாக வேண்டும். அதற்கான பாலத்தைத்தான் நாம் கட்டிக்கொண்டிருக்கிறோம்.

## அனைத்து மக்களும் ஒன்றுசேர்ந்து கட்டி முடிக்க வேண்டிய பாலம்

அது நான்கு கோடி ரூபாய் செலவிலே கட்டப்படுகின்ற பாலம் அல்ல, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே ஆறு கோடி மக்களும் கட்ட வேண்டிய பாலம்; இந்தியாவைப் பொறுத்தவரையில் 96 கோடி மக்களும் கட்ட வேண்டிய பாலம். அந்தப் பாலத்தைக் கட்டி முடிப்போம். அதுவரையில் நம்முடைய பணி முடியப்போவதில்லை. அதுவரையில் நாம் வாழ்கிறோமோ இல்லையோ, நாம் வாழ்ந்து முடிந்த பிறகு நம்முடைய முயற்சியால் அந்தப் பாலங்கள் கட்டப்பட வேண்டும் என்கின்ற ஆசையை வெளியிட்டு இந்த இனிய விழாவில் சமுத்திரம்போல் குழுமியிருக்கின்ற இந்த வட்டாரத்துப் பெருமக்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இவ்வாறுமுதல்வர் **கலைஞர்** அவர்கள் உரையாற்றினார்.

★ ★ ★

# யாருடைய கடமை?

என்.எச்.எம்.ஷேக்தாவூத்
தொழிலாளர் இணை ஆணையர் (நலம்), சென்னை - 6.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 24ன் படி அபாயகரமான தொழில்களில் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வேலையில் அமர்த்தக்கூடாது என்றும், பிரிவு 39(ஏ) வயதுக்கு ஒவ்வாத வேலைகளில் குழந்தைகளை வைக்கக் கூடாது என்றும், பிரிவு 39(எப்)ன் படி குழந்தைகளின் மானம் மற்றும் பொருளாதாரத் தீங்குகளிலிருந்து அவர்கள் தடுக்கப்பட வேண்டும் என்றும், பிரிவு 45ன் படி, 14 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும், இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறுகின்றது.

1959ஆம் வருடம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க, அவர்களுக்கு வசதி வாய்ப்புகள் வழங்கப் பொதுத் தீர்மானம் நிறைவேற்றியது. 1974ல் குழந்தைகள் பற்றி தேசியக் கொள்கை நிர்ணயம் செய்யப்பட்டது. குழந்தைகளுக்கு 14 வயது வரை கட்டாயக் கல்வி அளிக்கப்பட வேண்டும், அவர்களுக்கு உடல் நலம், உணவு, கல்வி அவர்களைப் பொருளாதார சமூகக் கொடுமைகளிலிருந்து பாதுகாப்பது ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

எத்தனை - எத்தனையோ சட்டங்கள், எத்தனை - எத்தனையோ திட்டங்கள். அன்று முதல் இன்று வரை நிறைவேற்றப்பட்டும் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறையவில்லையே ஏன்?

அவர்களுக்கு அளிக்கப்படும் கொடுமைகள் மாறவில்லையே ஏன்?

தொழிற்சாலைகள் சட்டம், பீடி சுருட்டு தொழிலாளர் சட்டம், உணவு நிறுவன சட்டம், கடைகள் நிறுவனச் சட்டம், மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம், தோட்டத் தொழிலாளர் சட்டம் என்ற அனைத்துச் சட்டங்களும், இறுதியாக 1986ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட குழந்தைத் தொழிலாளர் (தடுப்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் நிறைவேற்றப்பட்டும், குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை குறைந்தபாடு இல்லை. அவர்களுடைய அவல நிலை மறைந்த பாடும் இல்லையே ஏன்?

### தாய்மார்கள் குறை

குழந்தைத் தொழிலாளர்களின் தாய்மார் சொல்லுகின்றனர் - "எங்களிடம் சொத்து, பத்து எதுவும் இல்லீங்க. 3 பொட்ட புள்ளைங்க. ஒரு பையன். எனக்கு 55 வயசாகுது. என் வீட்டுக்காரருக்கு 60 வயசாகுது. வீட்டுக்காரரால என்ன வேலை செய்ய முடியும்? குடித்து விட்டு படுத்துக் கிடக்கறாரு. நானோ ஒண்டிக்கட்டை! என்ன பண்ண முடியும்?".

"பொட்ட புள்ளைங்க படிச்சி என்ன கலெக்டரு, டாக்டரு வேலையா பாப்பாங்க? கடைசியாகத் தீப்பெட்டி ஆலைக்குப் போயிடுவாங்க. சின்ன வயசிலேயே வேலை செஞ்சாலும் தொழில் கத்துக்குவாங்க. அவங்க கலியாணத்துக்கு கொஞ்சம் சேமிச்சி வைக்கவேணாமா? அவங்க வேல செய்யலைன்னா ஒரு வேளை கஞ்சி கூட கிடைக்காது."

"தீப்பெட்டி ஆபிசுக்கு அனுப்பினா பொறுப்பா வருவாங்க. இல்லாட்டி போக்கிரியா போய் விடுவாங்க. படிப்பு தான் ஏறலை. வேலையாவது செய்யட்டுமே."

- தாய்மார்களே! சொல்லுவது எல்லாம் உண்மையே. நீங்கள் படிக்காததால் தான் தற்போது குச்சி அடுக்குகிறீர்கள். உங்க காலத்தில் படிக்க வசதி இல்லை. அதனால் படிக்கல. இப்பதான் எல்லா ஊர்லேயும் பள்ளி இருக்குதே. படிக்கக் கட்டணம் இல்லை, இலவச பஸ் பாஸ், இலவசப் புத்தகம், இலவசப் பகல் உணவு. மேலு படித்தால் திருமண நன்கொடை. 5 வயது வரையும் பிள்ளைகளை வேலை செய்ய அனுப்புவதில்லையே. பிள்ளைகளின் வருமானம் இல்லாமலே அதுவரை சமாளிக்கின்றீர்களே. 5 வயசுக்குப் பிறகு தான் பணக் கஷ்டமா?

ஏம்மா, பக்கத்து வீட்டு பாப்பா பள்ளிக்குப் போவுதே, அவங்களுக்குப் பணக் கஷ்டமில்லையா? உம் மாதிரிதானே அவங்களுக்கும் சொத்து, பத்து இல்லை. வீட்டுக்காரரு குடிக்கிறாரே அதை நிறுத்தினாலே மாசம் ரூ.300 மிச்சமாகுமே. கலெக்டரா, டாக்டரா போகவேண்டாம். அட்லீஸ்ட் கல்வி கிடைக்குதில்லே. அதன் குழந்தைக்கு அது சொல்லிக் கொடுக்குமே. அதற்குக் கண்ணை அளித்த நீ, அதனை நீயே குருடாக்கலாமா? கல்விக் கண் அளிக்க வேண்டாமா? எவ்வளவு அனாவசியச் செலவுகள். திருவிழா என்றும், பண்டிகை என்றும், சினிமா என்றும், டி.வி. என்றும், பீடி, சிகரெட், டீ, விருந்து ஆகியவற்றில் சிக்கனம் காட்டினாலே, சிரமம் ஏதம்மா உனக்கு?

குழந்தைக்குக் கல்வி இன்றைய முதலீடு அல்லவா? நாம் இருவர், நமக்கு இருவர் என இந்த அரசு ஆண்டாண்டு காலமாக விளம்பரம் செய்கிறதே, அதைக் கடைப்பிடித்தால் ஏனம்மா இந்தக் கஷ்டம்? பட்டு வேஷ்டியைக் கட்டிக்கிட்டுப் பகட்டா மினுக்கிக்கிட்டு வேலை செய்யாம





> மனிதன் மறைந்துவிடலாம்; அவனை மக்கள் கூட மறந்துவிடலாம். ஆனால், அவன் உருவாக்கிய உணர்வுகள் என்றென்றும் பயன்படக்கூடிய வகையிலே அமைந்திட வேண்டும்!
>
> - கலைஞர்

திரிகின்றாரே உன் கணவர், அவரை வேலைக்கு அனுப்பினா, இந்தக் குழந்தைங்க வேலை செய்ய வேண்டியதில்லையே!"

### என்மேல் என்ன குறை?

பட்டாசு உரிமையாளர் கூறுகிறார், "நானா! குழந்தைகளை, வாங்க, வாங்கன்னு சொல்லி அழைக்கிறேன். அவங்க அப்பா, அம்மாதான் இங்கே வந்து கெஞ்சி, கூத்தாடி, அய்யா! அப்பான்னு! வேலை கேட்கிறாங்க. நாங்க யார் வந்து வேல செஞ்சாலும் கூலி கொடுக்கப் போறோம். நாங்க வேல கொடுக்கலைன்னா அந்தக் குடும்பம் தெருவில தான் நிக்கும். அல்லது வேறே வியாபாரம், விவசாயம் ஏதாச்சும் இருக்கா? டவுனுக்குப் போயி வேல செய்யவா போறாங்க?. நாங்களும் அங்கே இங்கே கடன் வாங்கிப் போட்டுத்தான் வேலை கொடுக்கிறோம். அப்படியிருந்தும், நீங்க எங்களைக் குறை சொல்றீங்களே. இனிமே எல்லாத்தையும் நிப்பாட்டிர்றோம். நீங்க சாப்பாடு கொடுப்பீர்களா? நாங்க வேலை கொடுக்கலைன்னா அந்த ஊரே சீரழிஞ்சிடும்",

"ஐயா, நீங்க் சொல்வது சரிதான். வேல கொடுக்கறது வாஸ்தவம் தான். நீங்களும் வேலை செய்யச் சொல்லி கட்டாயப்படுத்தறதில்லை. ஆனால் அந்தக் குழந்தைகள் பேரைப் பதிவேட்டிலே எழுதுகிறீர்களா? இல்லையே, அவர்களுக்கு ஈ.எஸ்.ஐ. இல்லை, பி.எப். இல்லை, லீவு சம்பளம் இல்லை, பென்ஷன் இல்லை, போனஸ் இல்லை, கிராசுவிட்டி இல்லை, ஓ.டி. இல்லை, அரசு நிர்ணயம் செய்த குறைந்தபட்சக் கூலியையாவது கொடுக்கிறீர்களா? அதுவும் இல்லை. பாதி சம்பளம் தான், எப்ப வேணாலும் வேலையில் வைக்கலாம். எப்ப வேணுமென்றாலும் நிப்பாட்டிக்கலாம்.

ஏன்? என்று கேட்க யாருக்கும் நாதியில்லை. அவர்களுக்கு யூனியன் ஏதுமில்லை. உட்கார் என்றால் உட்காருவார்கள். நில் என்றால் நிப்பாங்க. "வைச்சா குடுமி, செறிச்சா மொட்டை". ஐயோ! பாவம் ஆடு நனையுதேன்று ஓநாய் அழுததாம். அந்தக் கதை தான், உங்க கதை. உங்க குழந்தை குட்டிகளைப் பள்ளிக்கு அனுப்பாம, தீப்பெட்டி ஆலைக்கு அனுப்பினீங்களா? உங்களுக்கு ஒரு நியாயம், ஊராருக்கு ஒரு நியாயமா?. நீங்க நியாயவாதி என்றால் எல்லாக் குழந்தைகள் பேரையும் பதிவேட்டிலே எழுதுவது தானே? பதிவேட்டிலே எழுதுவதில்லை. அவர்களுக்கு எந்த உரிமையும், சலுகையும் கொடுப்பதில்லை. அப்படியிருக்கையில், நீங்க அவர்களுக்காக எப்படிப் பரிந்துரைக்க முடியும்? குழந்தைகள் வேலை செய்யாவிடில், அந்த வேலையைப் பெரியவர்களுக்கு அளிப்பீர்கள் இல்லையா? அந்த நன்மையை நீங்க செய்ய வேண்டாமா?"

### வழக்கும் சட்டமும்

தொழிற்சாலை மற்றும் தொழிலாளர் ஆய்வர் கூறுகிறார்.

"எங்களுக்கு எல்லா சட்டமும் ஒண்ணுதான். எல்லா சட்டத்திலும் கேஸ் போடுவது ஈஸியாக இருக்கும். குழந்தைத் தொழிலாளர் பற்றிக் கேஸ் போடுவதுதான் ரொம்பக் கஷ்டமாக இருக்கு. அவங்க பெயர் எந்தப் பதிவேட்டிலும் இருப்பதில்லை. அவர்களுக்கு எந்த ரெக்கார்டும் இருப்பதில்லை. குழந்தைகளின் வாக்குமூலம் கேட்டால் முதலாளிக்குப் பயந்து ஒன்றும் சொல்லமாட்டோம் என்கிறார்கள். சில பேர் அழ ஆரம்பித்துவிடுகிறார்கள். சில பேர் ஓட ஆரம்பித்துவிடுகிறார்கள். அவர்கள் பின்னால் ஓடி துரத்திப் பிடிச்சி ஸ்டேட்மெண்ட் வாங்கவா முடியும்? பேரு கேட்டா பேரு சொல்லுறதில்ல. வயசு கேட்டா வயசு சொல்லுறது இல்லை. பிறந்த நாள் சர்டிபிகேட்டும் வைக்கிறதில்லை. எப்படி எங்களுக்கு வயசு அறிய முடியும்? முதலாளி சொல்லுறதைக் கேட்க வேண்டியுள்ளது. குழந்தைக்குப் படிக்க வேற தெரியாது. முதலாளிங்க, குழந்தைங்க பதில் சொல்றதுக்கு முன்னாலேயே பதில் சொல்லிடறாங்க. அப்புறம் அந்தக் குழந்தையை வேலைக்கு வச்சக் கொள்வதில்லை.

மேலும் முதலாளி சொல்றாங்க : "குழந்தைங்க அவங்களோட அம்மா, அப்பா கூட துணைக்கு வருவாங்க. நாங்க எந்த வேலையையும் அவங்களை செய்யச் சொல்லுவதில்லை. நாங்க எந்த சம்பளமும் எதுவும் கொடுக்கறதில்லை. அவங்க யாரும் எங்களுடைய தொழிலாளியே இல்லை. அவங்களை வேலைக்கு வச்சிக்கிட்டு அபராதம் கட்டணும்னு என்ன தலையெழுத்தா? நீங்க, குழந்தையோட அப்பா, அம்மா கிட்டேயே கேளுங்க. குழந்தையின் அப்பா, அம்மாவும் அதனை எதிர்க்கிறாங்க.

குழந்தையை மிரட்டி ஸ்டேட்மெண்ட் வாங்கினாலும் கோர்ட்டிலே கேஸ் ஜெயிக்கிறதில்லை. வயதை நிரூபிக்க எங்களுடன் ஆய்விற்கு டாக்டர் வருவதில்லை. டாக்டரிடமும் குழந்தையை உடனே எங்களால் கூட்டிப் போக முடிவதில்லை. உரிமையாளரும் டாக்டரிடம் எங்களுடன் அனுப்ப மாட்டேங்கறாங்க. வந்தா கூட்டிக் கொண்டு போங்க என்கிறார்கள். குழந்தை வரமாட்டேங்குது. குழந்தை வந்தாலும் டாக்டர் இருப்பதில்லை. அந்தா, இந்தா என்று டாக்டரிடம் 14 வயதுக்குள் என்று சர்டிபிகேட் வாங்கினாலும், உரிமையாளர்கள் வேறு அரசாங்க டாக்டரிடம் 14 வயதுக்கு மேல் என்று சான்று வாங்கி அனுப்பி விடுகிறார்கள். கேஸ் நடக்கும்போது குழந்தை அதில் வேலை செய்வதில்லை. குழந்தையை சாட்சியாகக் கொண்டுசெல்ல முடியல. குழந்தையை சாட்சியாக வைக்கவில்லை என்றால் கேஸ் தள்ளுபடி ஆயிடுது. சரி, டாக்டரும் சாட்சி சொல்லும்போது ஊகத்தின் அடிப்படையில் சொல்கிறார். கூடவோ, குறையவோ 1,2 வருடம் இருக்கலாம் என்றும் கூறிவிடுகிறார். அந்த விஷயத்திலும் கேஸ் தள்ளுபடி ஆகிறது.

அபராதம் ஜாஸ்தி என்பதால் எல்லோரும் எதிர்த்து வாதாடுகிறார்கள். தோத்தா டிபார்ட்மெண்ட்டிலே ஆக்ஷன் எடுக்கிறார்கள். அங்கு வேலைப் பார்க்கும் சக தொழிலாளிகள் ஸ்டேட்மெண்ட் எதுவும் கொடுக்க மாட்டேங்கறாங்க. மத்த கேஸ்ல ரிக்கார்டு உண்டு. அதனால் கேஸை ஈஸியாக ஜெயிக்கலாம். இதுலே வயதை நிரூபிக்கிறது ரொம்ப கஷ்டம். சட்டத்தை மாற்றி, அபராதத்தைக் குறைத்தாலே ஒழிய கேஸ் ஜெயிக்கிறது ரொம்ப கஷ்டம். எங்களுக்கு யாரும் ஒத்துழைக்கிறதில்லை. முதலாளி, குழந்தைத் தொழிலாளர், பெற்றோர், ஊர் ஜனங்கள், சக தொழிலாளி யாரும் ஸ்டேட்மெண்ட் கொடுக்க முன் வருவதில்லை."

சரிங்க. இன்ஸ்பெக்டர் சொல்றது எல்லாம் சரிதான். கொலை நடக்குது, திருட்டு நடக்குது, அதுக்கெல்லாம் சாட்சியை வைத்துக்கொண்டா திருடுகிறார்கள். கொலை செய்கிறார்கள், அதுக்கெல்லாம் கோர்ட்டிலே நிரூபித்து தண்டனை வாங்கிக் கொடுக்கறதில்லையா? உங்க ஏரியாவிலே எத்தனைக் குழந்தைத் தொழிலாளிங்க வேலை செய்யறாங்க? எத்தனை கேஸ் போட்டிருக்கீங்க? எத்தனை கேஸ் ஜெயிச்சிருக்கு? எத்தனை கேஸ் தோத்திருக்கு? ஆயிரக்கணக்கான குழந்தைத் தொழிலாளி வேலை செய்ற இடத்திலே 5,10-ன்னு கேஸ் போடுகிறார்கள். அதில் 1,2

ஜெயிக்குது. 1,2 தோக்குது. தோக்குறதாலே கேஸ் போடாம இருந்துற முடியுமா! திருட்டுக்குற்றம் தோக்கறதாலே திருடனைப் பிடிக்கக் கூடாது என்கிறீர்கள். கொலைக் கேசு தோக்குது என்பதால் கொலைகாரனைப் பிடிக்கக் கூடாது என்கிறீர்கள்.

### நினைக்க வேண்டுமே?

இன்ஸ்பெக்டர் நினைச்சா, குழந்தைத் தொழிலாளியின் பிறந்த ஊர், அட்ரஸ், பள்ளி அட்ரஸ், பெற்றோர் அட்ரஸ், வாங்கி சரியான பிறந்த தேதியைப் பெற முடியாதா? தொழிற்சாலை உரிமையாளரைத் தன் பிடிக்குள் கொண்டு வர முடியாதா? மற்ற சட்டங்கள் மீறலுக்கு வழக்குத் தொடர்ந்து, அதை வைத்து இதனை அமல்படுத்த முடியாதா? கேஸ் தோத்தாலும், ஜெயித்தாலும், கேஸ் நடத்த உரிமையாளருக்கு ஆயிரக்கணக்கில் ரூபாய் செலவாகும். அதுக்குப் பயந்து குழந்தைகளை வேலைக்கு வைக்க மாட்டாங்களே. அபராதம் குறைவாக இருந்தபோது கூட்டு என்றீர்கள். கூட்டினால் குறைக்கச் சொல்கிறீர்கள். என்ன நியாயம் உங்கள் வாதம்? கேஸ் ஜாஸ்தியா போடாமலே கேஸ் தோக்கும். தோக்கும் என்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது. இன்ஸ்பெக்டர் நினைச்சா எதையும் சாதிக்கலாம். இன்ஸ்பெக்டர் நினைக்க வேண்டும். அதுதான் முக்கியம். நீங்க அடிக்கடி ஒழுங்கா ஆய்வு செய்தாலே, பாதி முதலாளிகள் பயந்து போய் குழந்தைகளை வேலையிலிருந்து நிறுத்தி விடுவார்கள்.

தொழிற்சங்கத் தலைவர் கூறுகிறார், "எங்களுடைய சங்க உறுப்பினர்கள் கூட சங்கத்திற்கு சந்தா தருவதில்லை. குழந்தைகள்கிட்டேயா நாங்க சந்தா வாங்க முடியும்! எங்களுக்கு அவங்களால் என்ன நன்மை? குழந்தைகளை வைத்திருக்கக் கூடாது. நியாயம் தான். ஆனால் வறுமை. அதனால் வேலை செய்ய வேண்டிய நிலை. என்ன செய்ய முடியும்? குழந்தைகள் எந்தக் கேஸ்களுக்கும் வருவதில்லை. அவங்க பெற்றோரும் வருவதில்லை. அதனால் அவர்களுக்காக எந்தக் கேஸூம் நடத்த முடியறதில்லை. குழந்தை வேலை செய்வது பற்றி மற்ற தொழிலாளர்களுக்கு அக்கறை இல்லை. நாங்க தொழிலாளர்களுக்குப் பொதுக் கோரிக்கைதான் வைக்க முடியும். குழந்தைகளுக்கு என்று தனியாக எதுவும் செய்ய முடியாது. சமுதாயமும் ஆதரவாக இல்லை. நாங்க என்ன செய்ய முடியும்?"



தலைவர் ஐயா, நீங்க சொல்வது எல்லாம் சரிதான். குழந்தைகளால் பிரயோசனம் இல்ல. சரிதான். பிரயோசனம் இருந்தால் தான் பாடுபடுவீர்களா? தொழிலாளர்களுக்கு வேலை கொடு, வேலை கொடு, என்று வாய் கிழியக் கத்துகிறீர்கள். பெரியவங்க செய்யற வேலையைக் குழந்தைங்க செய்றாங்க. குழந்தைத் தொழிலாளிங்க இல்லையென்றால், அந்த வேலை அனைத்தையும் பெரியவங்க செய்வாங்க. பெரியவங்க வேலை இல்லாமைக்குக் காரணம் இந்தக் குழந்தைத் தொழிலாளிதான். அவங்களுக்குக் குறைந்த கூலி, அதிக வேலை. அதனால் குழந்தையை வச்சுக்கிறாங்க. அந்தக் குழந்தைத் தொழிலாளி வேலை செய்யற இடத்திலே பெரியவங்க வேலை செய்தா, உங்க சங்க உறுப்பினர் எவ்வளவு கூடும். எண்ணிப் பாருங்க. பெரியவங்களுக்கு இ.எஸ்.ஐ., இ.பி.எப்., உண்டு. போனஸ் உண்டு. ஓ.டி.உண்டு. லீவு சம்பளம் உண்டு. முழு சம்பளம் உண்டு. அப்படியானால் அவர்களது ஊதியம் எவ்வளவு உயருது. அதனால் வறுமை எப்படி நீங்குது! இது உங்களுக்கு தெரியாததில்லை தலைவரே. உங்க சங்கத்திலே தீர்மானமா போடுங்க. குழந்தைத் தொழிலாளியை நீக்கப் போராடுங்க. உங்களால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை.

### படிக்காத குழந்தைகள்

பள்ளி ஆசிரியர் கூறுகிறார், "இங்கே நிறையப் பள்ளிக்கூடங்கள் இருக்கு. குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க வேண்டியது பெற்றோர்களின் கடமை. பள்ளியில் சேராத குழந்தைகளை, நின்ற, குழந்தைகளை நாங்க கண்டுபிடித்துச் சேர்க்கவா முடியும்? அல்லது படிக்க விரும்பாத குழந்தைகளை நாங்க படிக்க கட்டாயப்படுத்தவா முடியும்? மேலும் மத்த மாணவர்கள் எல்லாம் படிக்கும்போது இந்தக் குழந்தைகள் ஏன் படிக்கக் கூடாது? எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி, சீருடை, புத்தகம், மதிய உணவு எல்லாம் தான் கொடுக்கிறோம். இருந்தாலும், என்ன செய்ய முடியும்? பெற்றோர் தான் தங்கள் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்க்கணும்" பிள்ளைகளைக் கண்டித்து படிக்க வைச்சா அடிக்கிறார் என்கிறார்கள். கண்டிக்கலைன்னா, சரியா படிப்பு சொல்லிக் கொடுக்கறதில்லை என்கிறார்கள். கண்டிக்காத, படிக்காத பிள்ளைங்க பள்ளிக்கு வருவதில்லை. நின்றுவிடுகிறார்கள். பள்ளியிலிருந்து நின்னுகிட்டா நாங்க என்ன செய்யறது? படிக்காத குழந்தைகளை வேலைக்கு அனுப்பிவிடுகிறார்கள்.

அது சரிதான். மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்லி அப்பா, அம்மாவிற்கு அடுத்த ஸ்தானத்திலே ஆசிரியர்களை வைத்துள்ளார்கள். அந்தக் காலத்திலே, ஆசிரியருக்கும், மாணவனுக்கும் அதிக நெருக்கம், உறவு இருந்தது. ஆசிரியருக்குப் பிள்ளைகளைப் பத்தித் தெரியும். அவர்கள் அப்பா, அம்மா, அவர்களின் தொழில், வருமானம், கஷ்டம் எல்லாம் தெரியும். ஆசிரியர் கவனம் எடுத்துச் சொல்லிக் கொடுப்பார். பையன் பள்ளிக்கு வரலைன்னா, ஏன் பள்ளிக்கு வரலைன்னு விசாரிப்பார். பள்ளிக்கு ஏன் குழந்தையை அனுப்பவில்லை என்று பெற்றோரிடம் வந்து விசாரிப்பார். ஏதாவது கஷ்டம் என்றால் அதற்கு வழி சொல்லுவார். எந்தெந்தக் குழந்தைக்கு எப்படி, எப்படி சொல்லிக் கொடுக்கணும். எப்படி எப்படி நடத்தணும் என்று அந்தக் காலத்திலே ஆசிரியர்கள் நல்லா தெரிந்து வைத்திருந்தார்கள். இந்தக் காலத்திலே பையன் பள்ளிக்கு வந்தாலும், வரவில்லை என்றாலும் ஆசிரியர்கள் கவலைப்படுதில்லை. ஏன்? எதற்கு என்றும் கேட்பதில்லை. கல்வி அளிப்பதில் கசப்பு, கடுமை காட்டப்படுகிறது. எனவே பையனுக்கு அது பிடிக்காததால் பள்ளிக் கூடத்தை விட்டு நின்றுவிடுகிறான். பள்ளியில் சேரும் அனைத்துக் குழந்தைகளும் படிக்க வேண்டும் என்று தான் சேருகிறார்கள். இடையில் நின்றுவிடுகிறார்கள் என்றால் எதற்கு? காரணம், கசப்பான கல்வி, கடுமையான ஆசிரியர், தன்மையான, இனிமையான ஆசிரியர்கள் இருந்து ஆரோக்கியமான சூழ்நிலை இருந்தால் எந்தப் பையன் வராமல் இருப்பான்? பையனை அறிவாளி ஆக்குவதும், அறிவிலி ஆக்குவதும் ஆசிரியர் கையிலே. பல்லக்கில் ஏற்றுவதும், பாதாளத்தில் தள்ளுவதும் ஆசிரியரே!

### மக்கள் கருத்து

மிஸ்டர் பொது ஜனம் கூறுகிறார். "குழந்தைத் தொழிலாளர் வேலைநீக்கமாம். ஒழிப்பாம். அதற்காக ஊர்வலமாம். போக்கத்த மக்களின் வேலையற்ற வேலை. ஏதோ வறுமையின் கொடுமை. அதனால் குழந்தை வேலை செய்யறான். வறுமையை நீக்க வழி வகை இல்லை. அவனவன் ஊர்வலம் நடத்துறதைப் பொழப்பாக்கிட்டானுங்க".

அதனைக் கூறும்போது பையிலிருந்து, பீடியை எடுத்து வாயில் வைத்து தீப்பெட்டியிலிருந்து குச்சி எடுத்து, அதனை ஒரு மாதிரியாக உரசிப் பற்ற வைத்து ஒரு தம் இழுக்கின்றாரே! என்ன அழகு! எத்தனை அருமை! அந்த பீடி மடித்த பிஞ்சு விரல் எவ் விரல்கள் என்பதை அவர் உணர்வாரா? அந்த பீடித் தூளில் நச்சுத் தன்மை அக்குழந்தையின் உடலை எந்த அளவிற்குப் பாதித்தது என்பதை அவர் உணர்வாரா. ஒருவரின் கஷ்டத்தில் மற்றவருக்கு மகிழ்ச்சியா?

"என் வீட்டுக் குழந்தை எவ்வளவு அழகாகப் பட்டாசு கொளுத்துகிறது!" என்று ஆனந்தப்படுகிறார் அதே பொதுஜனம். இந்தக் குழந்தை ஆனந்தப்பட அந்தக் குழந்தை என்ன பாபம் செய்தது. இந்தக் குழந்தைக்குத் தெரியுமா? அந்தக் குழந்தை பட்ட பாடு. கையிலே, மூக்கிலே, முகத்திலே வெடி மருந்து. நெஞ்சு என்று கூற முடியாத எலும்புக் கூடு. இவர்களை மகிழ்விக்க, அந்தக் குழந்தை தன் மகிழ்ச்சியை இழக்கவேண்டுமா? இவர்களை சிரிக்க வைக்க அவர்கள் தம் வாழ்வைச் சீரழிக்க வேண்டுமா?

### அவர் அறிவாரா?

"என்ன அழகாக இருக்கின்றது இந்தத் தோடு! அசல் வைரம் மாதிரியே இருக்கின்றதே!" என்று செயற்கை வைரத் தோட்டை தன் மகளுக்குப் போட்டு பூரிப்படைகின்றார் மிஸ்டர் பொது ஜனம். இந்தச் செயற்கை வைரத்திற்கு ஒளி கொடுக்க முயன்று தன் விழி ஒளியை இழந்த கண்கள் எத்தனை என்பதை அறிவாரா இவர்! 12 வயதினிலே அதனைச் செய்த சிறுவன் கண்ணொளி இழந்துவிட்டான் என்பதை அறிவாரா? ஒளிகொடுக்க ஒளியை இழந்த அச்சிறுவன் யாரென்று தெரியுமா இவருக்கு!

படுக்கையில் எழுந்ததிலிருந்து மீண்டும் படுக்கும் வரை, விடியலிருந்து இரவு வரை, தாம் உண்டு, உடுத்திட, உறங்கும் ஆயிரக்கணக்கான பொருள்களில் எத்தனைக் குழந்தைகளின் வியர்வை படிந்துள்ளது என்பதை நினைக்கும் அக்காலம், எத்தனைக் குழந்தைகளின் வாழ்வைப் பாழாக்கியுள்ளது என்பதை நாம் எண்ணும் அக்காலம் குழந்தைத் தொழிலாளியின் நற்காலம்.

சமூக நல ஊழியர் கூறுகிறார். "கொலை, களவு, கற்பழித்தல், சாராயம் குடித்தல், விபச்சாரம், சூது ஆகிய எல்லாத்தையும் சமுதாயம் தப்பா நினைக்குது. கொலை, திருடுதல், சாராயம் குடித்தல், சூதாட்டம் ஆகிய தீமைகளில் யாராவது ஒரு வகையினருக்குப் பாதிப்பு இருக்கு. பொருளைத் திருடக் கொடுத்தவன் காவல் நிலையத்தில் புகார் அளிக்கிறான். கொலை செய்யப்பட்டவனின் குடும்பம் ஆத்திரம் கொண்டு அளிக்கின்றனர் புகாரை அல்லது பழிவாங்க துடிக்கின்றார். சாராயத்தின் கொடுமை இருதயத்தில் தெரிந்து விடுகின்றது. விபச்சாரத்தின் விளைவு உடல் உறுப்புகளை விபரீதமாக்கிவிடுகின்றது. சூதாட்டத்தால் பணத்தை இழந்து தெருவில் நிற்கிறது குடும்பம். ஆனால் குழந்தைத் தொழிலாளி என்ற சமூகக் கொடுமையின் விளைவு, அவன் பெரியவன் ஆன பிறகல்லவா தெரிகின்றது. ஆனால் குழந்தைத் தொழிலாளர் என்கிற முறையில் உடன் பாதிப்பு யாருக்கும் கிடையாது. பாதிப்பு பின்னால் தான் தெரியவருகிறது. படிக்காத குழந்தைத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு, விளைவுகள் பற்றி பின்னால் தான் அவர்களால் உணரமுடியும். அதனால் அதை யாரும் ஒரு சமுதாயத் தீமையாகக் கருதுவதில்லை. மாறாக, வறுமையை நீக்கும் கருவியாகக் கருதுகிறார்கள். சமுதாயமே அதை எதிர்க்காததினாலே நாங்களும் அதைத் தட்டிக் கேட்க முடியவில்லை.

ஆம், வழி பிறக்கும். அவரவர் தம் கடமையைச் செய்தால் புற்றீசல்போல் தொண்டு நிறுவனங்கள் இருந்தும், பணத்திற்காகவே இயங்கும் தொண்டு நிறுவனங்கள்தான் அதிகம் உள்ளன. குற்றம் குறை கண்டுபிடிப்பதில் அதிக ஆர்வம் காட்டும் தொண்டு நிறுவனங்கள் குறைகளை நீக்குவதில்அதிக அக்கறை காட்டுவதில்லை. நாள் ஒன்றுக்கு ஒரு குழந்தைத் தொழிலாளி வீதம் பள்ளியில் சேர்க்க இந்தத் தொண்டு நிறுவனங்கள் உறுதி எடுத்திருந்தால், இந்தக் குழந்தைத் தொழிலாளி என்ற அரக்கனை ஓரளவு அடக்கியிருக்கலாம். குழந்தையை சந்தித்து, பெற்றோரை ச் சந்தித்து, பிரச்சினையை விளக்கி, தீமையை எடுத்துக் காட்டி குழந்தைத் தொழிலாளியை வேலையை நீக்க எத்தனை த் தொண்டு நிறுவனங்கள் முயற்சிக்கின்றன. சர்வே எடுப்பதும், விழிப்புணர்ச்சி முகாம் நடத்தினால் மட்டும் போதுமா? பணத்திற்காக மட்டுமல்லாமல் குழந்தைத் தொழிலாளர் நிலையை ஒழிக்கப்பட வேண்டும் எனத் தொண்டு நிறுவனங்கள் உறுதி கொண்டால், அவர்களால் சாதிக்க முடியாததா?

வறுமையைப் போக்குவது எப்போது? குழந்தைகளுக்குக் கல்வியைக் கட்டாயமாக்குவது எப்போது? குழந்தைத் தொழிலாளர்களை அகற்றுவது எப்போது? யாருடைய கடமை இது?

அமெரிக்க அதிபர் ஜான்கென்னடி கூறியதுபோல், "நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்பதை விட நீ நாட்டுக்கு என்ன செய்தாய்" என்பது போன்று, குழந்தைத் தொழிலாளர் நிலை தவறு என்பதும் அகற்றப்பட வேண்டியது என்பது அனைவரும் ஏற்றுக் கொண்ட உண்மை.

> **சிலருடைய தயாள குணத்தினால் மட்டுமே ஒரு பெரிய கூட்டத்தில் வளர்ந்து வரும் தொல்லைகளைப் போக்கிவிடமுடியாது!**
>
> - அறிஞர் அண்ணா

### நல்விதை

வறுமையைக் காரணம் காட்டி வாழாமல் இருந்துவிடுவதும், அறியாமை என்ற காரணத்தைக் காட்டி, செயல் இழந்து நிற்பதும் சட்டத்தை அமலாக்கம் செய்ய முடியவில்லை என்று கூறி அயர்ந்துவிடுவதும், சமுதாயத்திற்கு ஏற்பட்ட இந்தக் கொடிய வியாதியைத் தற்போது கண்டுகொள்ளாமல் இருப்பதும், தன்னைத் தானே அழித்துக் கொள்வதற்குச் சமமாகும். நல் வித்தை யாரும் அழிப்போமா? இவ்வித்து இப்போது அழிந்துவிட்டால், எப்பயிர் எப்போது முளைக்கும்?

பெற்றோர்கள் தங்களுக்குத் தற்போது ஏற்படும் இன்றைய இழப்பை விட பிற்காலத்தில் படிக்காத குழந்தைகளுக்கு ஏற்படும் தீமையே அதிகம் என்பதை அறிய வேண்டும். பட்டாசு, தீப்பெட்டி, பீடி மற்றும் அபாயகரமான தொழில் உரிமையாளர்கள் குழந்தைத் தொழிலாளர்கள் இருப்பதால் ஏற்படும் தற்போதைய இலாபத்தினை விட குழந்தைகளுக்குக் கல்வி அளிக்காத நிலையால் ஏற்படும் அறிவற்ற வருங்காலத் தொழிலாளர் நிலையே அதிக பாதிப்பு என்பதை உணர வேண்டும். தங்கள் குழந்தைகளுக்கு ஒரு நியதி. பிற குழந்தைகளுக்கு ஒரு நியதியா என்பதும், பிற குழந்தைகளும் தங்கள் குழந்தைகளைப் போல் பிறப்பால் அவர்கள் ஒன்று என்றும், வேறுபாடு இல்லை என்பதையும் அவர்கள் உணர வேண்டும். தங்களுக்குள் ஏற்படும் சிறிய இலாபத்தை விட்டு இந்தச் சமுதாயத்திற்கு ஏற்படும் பெரிய வியாதியை நினைத்து அனைவரும் ஒன்றுபட்டு, பெருகிவரும் வியாதியினை நீக்கப் பாடுபட வேண்டும்.

"வறுமை போக்குவோம்!

கல்வியைக் கட்டாயமாக்குவோம்!!

இன்றைய குழந்தை நாளைய மன்னர்!!!

இன்றைய தியாகம் நாளைய பலன்!!!!

★ ★ ★

# உணவு முறைகளும் கண் பாதுகாப்பும்

நமது நாட்டைப் பொறுத்த மட்டில் மக்களுக்கு ஏற்படக்கூடிய ஏராளமான நோய்களுக்குத் தவறான உணவு முறைகளும் பழக்க வழக்கங்களுமே காரணமாக உள்ளன. நோய்க்கான, காரணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, அறுபது சதவிகித நோய்களுக்குச் சத்துணவுக் குறைவே காரணம் எனப்புலப்படுகிறது. நோய் வந்த பிறகு அவதிப்படுவதைக் காட்டிலும், நோய் உருவாகாத நிலையினை ஏற்படுத்திக் கொள்ளுவதே நிம்மதியையும், மகிழ்ச்சியையும் தோற்றுவிக்கும்.

இந்தியாவில் சுமார் 90 இலட்சம் இந்தியர்கள் பார்வையற்றவர்களாக விளங்குகின்றனர். இதில் 60 இட்சம் பேர் சரியான சத்துணவு கிடைத்திருந்தால் பார்வையை இழந்திருக்கமாட்டார்கள். சரிவிகித உணவும், தகுந்த சிகிச்சையும் கிடைத்தால் கண் பார்வையைக் காப்பாற்றலாம்.

உயிரைப் பேணுவது உணவுதான் என்பதாலேயே, "உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே" என மணிமேகலை காவியம் படைத்த சீத்தலைச் சாத்தனார் பொருட் செறிவுடன் பாடியுள்ளார்.

நமது உடலில் உள்ள மிக முக்கியமான உறுப்பாகிய கண்களும், அதன் பார்வைத் திறனும் நல்ல உணவு முறைகளைப் பொறுத்து அமைகின்றது.

குழந்தைப் பருவத்திலேயே உணவில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். ஒரு குழந்தை கருவிலே உருவாகும்பொழுதே தாய் சரியான உணவு முறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். சத்தில்லாத தாய்ப்பாலை உண்ணும் குழந்தையின் கண்களும் பாதிக்கப்படும்.

நல்ல உணவு முறை என்பது மாவுச் சத்து (Carbohydrate), புரதச் சத்து (Protein), எண்ணெய்ச் சத்து (Fat), உயிர்ச்சத்து (Vitamins) மற்றும் தாதுப்பொருட்கள் (Minerals) ஆகியவற்றைக் குறிப்பிட்ட விகிதத்தில் உள்ளடக்கியது. கண்ணின் முழு வளர்ச்சிக்கும், கூர்மையான பார்வைக்கும் இந்தச் சரிவிகித உணவு முறை அவசியமானதாகும்.

மாவுச்சத்தானது அரிசி, கோதுமை, கேழ்வரகு, மக்காச் சோளம், மரவள்ளிக் கிழங்கு போன்ற மலிவான உணவுகளில் உள்ளது. தமிழ்நாட்டில் அரிசியை முக்கிய உணவாகக் கொண்டுள்ளோம். தீட்டப்படாத அல்லது கைக்குத்தல் அரிசியை உண்ணுவதே நலமாகும். தினம் ஒரு முறையாவது கோதுமை உணவை உட்கொள்ள வேண்டும். புரதச் சத்தானது முட்டை, பால், பால் பண்டங்கள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும். வசதி குறைந்தவர்கள் வேர்க்கடலை, பால், கேழ்வரகுக் கஞ்சி ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

உடலில் நோய்கள் தோன்றாமல் தடுக்கவும் நோய் தோன்றினாலும் சமாளித்து அகற்றவும் கூடிய ஆற்றலைப் பெற்றவை வைட்டமின்கள் எனப்படும் உயிர்ச்சத்துக்கள் ஆகும். இந்த உயிர்ச்சத்துக்களுக்கு Vitamins என்று ஆங்கிலப் பெயர் அளித்துள்ளனர்.

வைட்டமின் 'ஏ' எனப்படும் உயிர்ச் சத்தானது கண்பார்வைக்கு மிகவும் அவசியமானதாகும். தோலின் வளர்ச்சிக்கும், மெருகிற்கும் தேவையானதாகும். மேலும் பற்கள் பலம் பெறும். விஷக் (நச்சுக்) கிருமிகளைக் கொல்லக்கூடிய எதிர்ப்புச் சக்தியானது (Resistance) பெருகும். வைட்டமின் 'ஏ' சத்து உணவில் குறைந்தால் தாய்ப்பாலிலும் இச்சத்தானது குறைந்து விடும். வைட்டமின் ஏ பற்றாக்குறையினால் ஆண்டுதோறும் 25,000 குழந்தைகள் கண்பார்வையை இழக்கின்றனர். சுமார் 30 இலட்சம் குழந்தைகள் மாலைக்கண் போன்ற நோயினால் பாதிக்கப் படுகின்றனர்.

சூரிய ஒளியுள்ள வைட்டமின் 'ஏ' உயிர்ச் சத்தானது மரம், செடி போன்ற தாவர இனங்களால் கிரகித்துக் கொள்ளப்படுகிறது. ஆகையால் மஞ்சள் நிற, பச்சை நிற, காய்கள் பழவகைகளை மிகுதியாக உணவில் அன்றாடம் சேர்த்துக் கொண்டால், 'வைட்டமின் ஏ' பெறலாம். முருங்கைக் கீரை, தண்டுக் கீரை, சிறு கீரை, முளைக்கீரை போன்ற கீரை வகைகளில் வைட்டமின் ஏ,பி,சி போன்ற உயிர்ச்சத்துக்கள் பெரிய அளவில் உள்ளன. பச்சைக் கீரைகளில் கரோடின் என்ற பொருள் மிகுதியாக உள்ளது. இந்தப் பொருளே 'ஏ' உயிர்ச்சத்தாக மாற்றப்பட்டு ஈரலில் சேர்த்து வைக்கப்படுகிறது.

புல் பூண்டுகளையும், கீரைகளையும் மிகுதியாக உண்ணும் ஆடு, மாடு போன்ற பிராணிகளின் பாலிலும் வைட்டமின் 'ஏ' உயிர்ச்சத்து மிகுதியாக உள்ளது. கேரட், தக்காளி போன்ற உணவு வகைகளை உணவில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

ஏரி, குளம், கடல் ஆகியவற்றில் உள்ள மீன்கள் பாசி மற்றும் நீர்ப் பூண்டுகளை உண்பதால் மீன்களிலும் வைட்டமின் 'ஏ' சத்து உள்ளது. ஆரஞ்சு, மாம்பழம், பப்பாளி போன்ற பழவகைகளிலும் வைட்டமின் 'ஏ' சத்து நிரம்ப உள்ளது. பப்பாளி, கொய்யா, நெல்லிக்காய், மஞ்சள் வாழை, நாவல் பழம், இலந்தம் பழம் போன்ற அனைத்தும் விலை குறைவாகவும் அந்தந்தக் காலங்களில் மிகுதியாகக் கிடைக்கக்கூடியதும் ஆகும். இப்பழங்களை உண்டு கண்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் பல உட் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ள வைட்டமின் 'பி' கண்ணுக்கு இன்றியமையாததாகும். குறிப்பாக வைட்டமின் பி2 குறைந்தால் கண்ணினுடைய உணர்வு நரம்பு பாதிக்கப்படும். ஆதலால் பி2 வைட்டமின் அதிகமாக உள்ள தீட்டப்படாத கைக்குத்தல் அரிசி, வேர்க்கடலை, கொட்டை வகைகள் (Nuts) பருப்பு வகைகள் உணவில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

### *செயற்கை முறையில் உயிர்ச் சத்து தயாரித்தல்*

கம்பு போன்ற எளிதில் கிடைக்கக் கூடிய தானியத்தை ஈரத்துணியில் முடிந்து, ஈரம் உலராமல் வைத்திருந்தால் இரண்டு நாட்கள் முளை தோன்றி விடும். இந்த முளைக் கம்பில் வைட்டமின் 'ஏ' மற்றும் பல உயிர்ச்சத்துக்கள் உள்ளன. இதை வெல்லம் அல்லது சர்க்கரை சேர்த்து உட்கொள்ளலாம்.

உயிர்ச்சத்து உள்ள பொருட்களை அதிகமாக வேகவைக்காது, அரை வேக்காடகவோ அல்லது பச்சையாகவோ உண்பது நல்லது. உயிர்ச்சத்துகள் மட்டுமின்றி இரும்பு (Iron) துத்தநாகம் (Zinc) போன்ற சத்துகள் குறைந்தால் கண் வெளிர் நிறமுற்று ஒளியிழந்து காணப்படும். ஆகையால் உணவில் வெல்லம், பருப்பு வகைகள், கொட்டை வகைகளைச் சேர்க்க வேண்டும்.

மரு.க. ஆனந்த கண்ணன், இயக்குநர்
மரு.க. கண்மணி
அரசு கண் மருத்துவமனை,
சென்னை





சத்துணவு என்றவுடன் அது ஏதோ பொருளாதார வசதி படைத்தவர்களால் மட்டுமே முடியும் என்றும், சமுதாயத்தில் மேல்தட்டில் உள்ளவர்களாலும் நகரத்தில் வாழ்பவர்களாலும் மட்டுமே இயலும் என்றும் எண்ணி விடக்கூடாது. நமக்கு வேண்டியது சத்துணவுத் தொடர்பான விஞ்ஞான அறிவும் அனுபவ அறிவும் தான். உண்ணப்படுகின்ற உணவு உடலுக்கு நல்ல வளர்ச்சியையும், கண்களுக்கு நல்ல பார்வையையும் கொடுக்க வேண்டும். விஞ்ஞானத்தினைக் கொண்டும், அனுபவ அறிவினைப் பெற்றும் நமது உணவு முறைகளை உண்டாக்கிப் பழக்கப்படுத்திக் கொண்டால் நாம் நமது உடலையும், கண்களையும் செவ்வனே பேணிப் பாதுகாக்கலாம்.

இறைச்சி போன்ற விலையுயர்ந்த அசைவ உணவிலும், அன்னாசிப்பழம், ஆப்பிள் போன்ற விலையுயர்ந்த பழங்களில்தான் உயிர்ச்சத்து உள்ளது எனக்கருதக்கூடாது. கிராமப்புறங்களில் கிடைக்கக்கூடிய அனைத்துக் காய்கறிகளிலும், பழ வகைகளிலும் மற்ற சைவ உணவு வகைகளிலும், அனைத்துச் சத்துக்களும் உள்ளன.

ஆகையால், "கனிகளை உண்டு பிணிகளை விலக்குவோம்", "பச்சைக் காய்கறிகளை உண்டு கண்களைப் பேணுவோம்", "உண்டாலும் உறுதிப்பட உண்ணுவோம்" போன்ற பொன் மொழிகளை மனதிற் கொண்டு நல்ல உணவு முறைகளைக் கடைப்பிடித்து நமது கண்களைப் பேணிப் பாதுகாப்போம்.

### *காயங்களும் கண் பாதுகாப்பும்*

கண்கள் மிக முக்கியமான நுட்பமான உறுப்பாகும். பல்வேறு காயங்களினால் கண் பார்வையை இழக்க நேரிடுகிறது. கண்ணில் அடிபடுதல், தொழில், இரசாயனம், விளையாட்டு எனப் பல்வேறு காரணங்களால் குழந்தைகள், பெரியவர்கள் அனைவருக்குமே கண்ணில் காயமுறுவதும், பார்வை இழப்பு ஏற்படுவதும் உண்டு.

தொழில் ரீதியாக எடுத்துக்கொண்டால் பல்வேறு கூர்மையான உபகரணங்களுடன் வேலை செய்பவர், உளிகொண்டு செதுக்குபவர், கல் உடைப்பவர், கருமான் பட்டறையில் வேலை செய்பவர், வேகமாகப் பறந்து வரும் உலோக, அலோகத் துகள்களால் காயமுறுகின்றனர். இத்துகள்கள் கண் கருவிழி மேல் படிந்து ரணமாக்குவதோடு நில்லாமல் கண்ணின் உட்புறம் சென்று கண்களையே இழக்க ஏதுவாகின்றது. விவசாயத் தொழில் செய்பவர், பல்வேறு கூர்மையான கருவிகளாலும் கண்ணில் தாக்கப்பட வாய்ப்புண்டு மற்றும் அவர்கள் வேலை செய்யும் கரும்புத் தோட்டம், நெல் வயல், பல்வேறு செடிகள் கண்களில் படுகின்றன. கிராமப் புறங்களில் அடுப்பு எரிய வைப்பதற்காக முட் செடிகளை சேகரிக்கச் செல்லும் பெரியோர், சிறார்கள், கண்ணில் முட்கள் பட்டு கண்களையே இழக்கின்றனர். மற்றும் வீட்டில் வளர்க்கப்படும் ஆடு, மாடு இவற்றின் வால், கொம்பு பட்டு கண்ணையே இழப்பவர்கள் ஏராளம். ஆகையால், இத்தகைய தொழில் முனைவோர் தங்கள் முகத்திற்குத் தகுந்த பாதுகாப்புக் கவசம் அணிந்து கொண்டும், மீறி காயமுற நேர்ந்தால், தகுந்த மருத்துவ சிகிச்சையைத் தகுதி வாய்ந்த கண் மருத்துவரிடம் கால தாமதமின்றிப் பெறுவது கண் பாதுகாப்பிற்குச் சாலச் சிறந்ததாகும்.

விளையாட்டு ரீதியாக எடுத்துக் கொண்டால், குழந்தைகள் வில், அம்பு போன்ற கூர்மையான உபகரணங்களை வைத்து விளையாடுதல், கிட்டிப்புல் போன்ற விளையாட்டுகள் கண்களைப் பாதிக்கின்றன. மேலும் அபாயகரமான விளையாட்டுகளான குத்துச் சண்டை போன்றவை மற்றம் பந்துகளை வைத்து விளையாடும் விளையாட்டுகளில் பந்தோ அல்லது அடியோ படும்பொழுது கண்ணும் அதைச்சுற்றியுள்ள எலும்புகளும் உடைந்து போக வாய்ப்புள்ளன. இத்தகைய விளையாட்டுகளில் ஈடுபடுவோர் தகுந்த பாதுகாப்பு முகக்கவசம் அணிய வேண்டும்.

வீட்டில் உபயோகப்படுத்தப்படும் கழிவறை சுத்தம் செய்யும் இராசயனங்கள் (அமிலங்கள்) கண்ணில்பட்டுக் காயமுற்றோர் பலர். கைவிரல், நகம், பள்ளியில் பயன்படுத்தப்படும் காம்பஸ், டிவைவடர் போன்ற படிப்புக்கான உபகரணங்கள் குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள் கண்களைத் தாக்க வாய்ப்புகள் பலவுண்டு. குழந்தைகள், பெரியோர்கள் பறவைகள், விலங்குகள் மூலமாகக் கண்களை இழந்ததுண்டு. சமீப காலமாக (மருத்துவர்கள் உபயோகித்து எரியும்) மருந்து ஊசி போடுவதற்குப் பயன்படுத்தப்படும் ஊசிகளும், தைக்கும் ஊசியும் பட்டு கண்களை ஏராளமானவர்கள் இழக்கின்றனர். இத்தகைய பொருட்கள் குழந்தைகளிடம் இருக்க நாம் அனுமதிக்கக் கூடாது. பெரியவர்களும் தகுந்த முன்னெச்சரிக்கையோடு உபயோகிக்க வேண்டும்.

பாலிதின் பைகளில் அடைக்கப்பட்டு வரும் சுண்ணாம்பு மற்றும் அதன் சாரும் கண்களில் படுவதனால் கருவிழி பாதிக்கப்பட்டு பார்வை இழக்க நேரிடுகிறது. இதுபோன்ற இரசாயணப் பொருட்கள் கண்களைத்தாக்கும்போது உடனடியாகக் குளிர்ந்த நீரினால் கண்களை நன்கு கழுவ வேண்டும். குறைந்த பட்சம் அரை மணி நேரமாவது தண்ணீரினால் கண்களைக் கழுவுதல் மிக மிக அவசியம். அமிலம் மற்றும் இராசயணப் பொருட்கள் தண்ணீரால் அலசப்பட்டு அதனுடைய வீரியத் தன்மை குறைந்தவுடன் கண் மருத்துவரிடம் காண்பிக்க வேண்டும்.

மற்றும் நீண்ட நேரம் வெயிலில் பணிபுரியும் விவசாயிகள், தொழிலாளிகள் தண்ணீரில் இருக்கும் மீனவர்கள், சூரிய வெளிச்சத்திலிருந்து வரும் புற ஊதாக் கதிர்கள் கண்களில் பட்டு விரைவில் கண் புரை நோய் பாதிப்பிற்கு உள்ளாகிறார்கள். கண்ணின் மேற்புறம் சதை வளர்தல் (Pterigium) பொதுவாக ஏற்படுகிறது. இத்தகையோர் கண்ணிற்குக் கறுப்புக் கண்ணாடியும், தலைப்பாகையோ அல்லது தொப்பியோ அணிந்து கொள்ளுவது நலம் பயக்கும்.

ஒளி மிகுந்த நிலையில் சூரியனை, சூரிய நமஸ்காரம் செய்தல், சூரிய கிரகணம் போன்ற நிகழ்ச்சிகளில், சூரிய கிரணங்களை நேரில் வெற்றுக் கண்களால் பார்த்தல் போன்றவைகளால் கண்கள் பாதிப்புற வாய்ப்புண்டு.

### *கண் குறையின் காரணங்கள்*

| உயிர்ச்சத்து 'ஏ' | விழுக்காடு |
|---|---|
| குறைதல் | 84-88 |
| டிரோகோமா எனும் நோய் | 14.85 |
| மாறுகண் | 0.25 |
| Refractive Errors | 15.06 |

குழந்தைகளின் கண்ணில் அடிபடுவதற்குப் பலவகைக் காரணங்கள் உள்ளன.

| அவை | விழுக்காடு |
|---|---|
| கூர்மையான கருவிகள் | 13.90 |
| வில், அம்பு | 12.30 |
| விளையாட்டு | 10.71 |
| கிட்டிப்புல் | 6.07 |
| கை விரல் நகம் | 2.86 |
| பறவைகள், பிராணிகள் | 1.79 |
| இரசாயனப் பொருட்கள் | 0.36 |
| Domestic toys | 1.70 |

விழாக்கால காயங்களும் உள்ளன. ஹோலி போன்ற பண்டிகைகளில தெளிக்கப்படும் சாயப்பொருட்களில் இராசயனம் உள்ளது. தீபாவளி மற்றும் உள்ளூர் விழாக்களில் வெடிக்கப்படும் பட்டாசு மற்றும் கிணறு ஆழப்படுத்தப் பயன்படுகின்ற வெடிமருந்துகள் கண்களைப் பாதிக்கக்கூடும்.



## சுதந்திரப் போராட்டம் :

# தமிழ்நாட்டில் சில பொன்னான நேரங்கள்!

வி. சங்கரன்

தமிழ்நாடு இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் எப்போதுமே ஒரு முக்கிய இடத்தை வகித்துள்ளது.

பிரிட்டிஷாருக்கு எதிரான முதல் போராட்டமே தமிழ்நாட்டின் தென்கோடியில், ஒரு பாளையக்காரர் 18-ஆம் நூற்றாண்டில் நடத்தியதுதான். 1857-இல் இந்தியாவின் முதல் சுதந்திரப்போர் நடப்பதற்குப் பல ஆண்டுகள் முன்பே, வேலூரில் கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்திய சிப்பாய்கள் கிளர்ச்சி நடத்தினார்கள். சுதந்திரப் போராட்டத்தை நடத்திய காங்கிரஸ் இயக்கத்தைத் தொடங்கும் கருத்தே சென்னையில்தான் உருவாயிற்று. பிரம்மஞான சங்க உறுப்பினர்கள் 17 பேர் சென்னையில் கூடி எடுத்த முடிவுதான் பம்பாயில் காங்கிரஸ் நிறுவனமாக வடிவம் பெற்றது.

சுதந்திரப் போராட்ட இயக்க காலம் முழுவதிலுமே தமிழ்நாட்டில் அவ்வப்போது முக்கியமான போராட்டங்களும் கிளர்ச்சிகளும் வன்முறை நிகழ்ச்சிகளும் சத்தியாக்கிரகங்களும் நடைபெற்று வந்துள்ளன.

### *பாளையக்காரன் போர்*

தமிழ்நாட்டில் ஆங்கிலேயர்களுக்கெதிரான போராட்டம் 18-ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டது. அய்தர் அலி, திப்புசுல்தான் ஆகியோரின் படைகள் சென்னை, திருச்சி, திண்டுக்கல் ஆகிய இடங்களில் கிழக்கிந்தியக் கம்பெனியின் படைகளை எதிர்த்துப் போரிட்டன.

ஆயினும், தமிழ்நாட்டின் பாளையக்காரர் ஒருவர் ஆங்கிலேயரை எதிர்த்து நடத்திய முதல்போர் 1799 அக்டோபரில் நடந்தது. பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர் வீரபாண்டிய கட்டபொம்மன், அந்நியருக்கு வரிசெலுத்த மறுத்தார். ஆங்கிலேயர்கள் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை முற்றுகையிட்டார்கள்; ஐந்து நாட்கள் நடந்த கடுமையான போருக்குப் பின் ஆங்கிலேயர்கள் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைக் கைப்பற்றினார்கள்.



ஆனால், அதற்குமுன் கட்டபொம்மன் தப்பிச் சென்றுவிட்டார். ஆயினும் அவருடைய நன்றி மறந்த நண்பன் ஒருவரின் உதவியுடன் - ஆங்கிலேயர்கள் அவரைப் புதுக்கோட்டையில் கைது செய்து கயத்தாறுக்குக் கொண்டுச் சென்று பகிரங்கமாகத் தூக்கிலிட்டார்கள்.

மற்றொரு பாளையக்காரர் பூலித்தேவனும், வரி செலுத்த மறுத்தார். ஆங்கிலேயர்கள் அவருடைய நெற்கட்டும் செவ்வல் என்ற பாளையத்தைத் தாக்கினார்கள். பல பாளையக்காரர்கள் அவருக்குப் போரில் துணை செய்தார்கள். 17 ஆண்டுகள் போர் நீடித்தது.

இறுதியில் பூலித்தேவன் மறைந்தார்.



சிவகங்கையை ஆண்ட பெரிய மருது தமது ஜமீனின் உள்விவகாரங்களில் ஆங்கிலேயர் தலையிடுவதை எதிர்த்தார். அவர்களுடன் போர் நடத்த அவர் ஆயத்தம் செய்துகொண்டிருந்தார். ஆனால் அதற்கு முன்பே 1801 மே மாதம், ஆங்கிலேயர்கள் சிவகங்கையைத் தாக்கினார்கள்.

நான்கு மாதங்கள் அப்போர் நடந்தது. இறுதியாக ஆங்கிலேயர்கள் காளையார்கோயிலைக் கைப்பற்றினார்கள். முடிவில் பெரிய மருதுவும் அவரது சகோதரர் சின்ன மருதுவும் தூக்கிலிடப்பட்டார்கள்.

### *சுதேசிக் கப்பல்*

நாடு முழுவதிலும் சுதேசி இயக்கம் பரவியபோது மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தமது எழுச்சியூட்டும் தேசிய கவிதைகளை எழுதி வெளியிட்டார். சென்னையில் சுதேசி உணர்வுகொண்ட சில செல்வந்தர்கள் கூடி அந்நிய வங்கிகளைப் புறக்கணித்து இந்தியன் வங்கியை அமைத்தார்கள். இந்தியா, இந்து, பேட்ரியட் போன்ற பத்திரிகைகள் சுதேசி இயக்கத்தை ஆதரித்தன. இதனால் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் கோபம் கொண்டனர்.

தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் மிக முக்கியமான நிகழ்ச்சி தூத்துக்குடியில் வ.உ.சிதம்பரனார் சுதேசி கப்பல் கம்பெனியைத் தொடங்கியதாகும். இந்தக் கம்பெனி இரண்டு கப்பல்களை வாங்கி தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையே பயணிகளையும், சரக்குகளையும் ஏற்றிச் சென்று, போக்குவரத்து நடத்தியது. சுதேசிக் கப்பல் நிறுவனத்தின் வெற்றியைக் கண்டுக் கலங்கிப்போன ஆங்கிலேயர்கள் அதற்குப் பல்வேறு வகையில் தொல்லை கொடுக்கத் தொடங்கினார்கள். சுதேசி இயக்கத்தை மேலும் வளர்ப்பதற்காக வ.உ.சி. தூத்துக்குடியில் கூட்டுறவு நெசவாலை ஒன்றையும் மளிகைப்பொருள் அங்காடி ஒன்றையும் தொடங்கினார்.

சென்னையில் அவர் 'சென்னை விவசாய-கைத்தொழில்கள் சங்கம்' ஒன்றை அமைத்தார். சோப்பு, மெழுகுவர்த்தி போன்ற பல்வகைப் பொருள்களைத் தயாரிக்கும் தொழில்களை இந்தச் சங்கம் நடத்தியது.

### *புரட்சி இயக்கம்*

சூரத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்குப்பின், தீவிரவாதப்பிரிவைச் சேர்ந்தவர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புக்காகப் பாரதமாதா சங்கம், பாரதமாதா சமிதி, வெள்ளையர் ஒழிப்பு சமாஜம் போன்ற பல அமைப்புகளை நிறுவினார்கள். வ.உ.சி., பாரதி, சுப்பிரமணிய சிவா போன்ற தலைவர்கள் தீவிரவாதிகளை ஆதரித்து, சென்னையில் பொதுக்கூட்டங்களில் பேசினார்கள். திருநெல்வேலியில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியபின் வ.உ.சியையும், சுப்பிரமணிய சிவாவையும் போலீசார் கைது செய்தார்கள்.

இதைத் தொடர்ந்து நெல்லையிலும், தூத்துக்குடியிலும் கிளர்ச்சிகள் நடந்தன. வெள்ளையர்களை மக்கள் வீதிக்குக் கொண்டுவந்து அவர்கள் வாயாலேயே "வந்தேமாதரம்" என்று வலிந்து சொல்ல வைத்தார்கள். துணைக் கலெக்டர் ஆஷ் துப்பாக்கியால் சுட்டதில் நான்கு பேர் இறந்தார்கள்.



வ.உ.சி.க்கும், சிவாவுக்கும் ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் இது ஆறு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. சிதம்பரனாருக்குச் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டதும், சிறையில் அவர் கொடுமையாக நடத்தப்பட்டதும் சில தீவிரவாத இளைஞர்களின் உள்ளத்தில், பழிவாங்கும் உணர்வைத் தூண்டிவிட்டன.

வாஞ்சிநாதன் என்ற எழுச்சிமிக்க இளைஞர் மணியாச்சி ரயில் சந்திப்பில் கலெக்டர் ஆஷைத் துப்பாக்கியால் சுட்டார். பின்பு அவர் தம்மையே சுட்டுக்கொண்டு உயிர்விட்டார். காயமடைந்த ஆஷ், மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் இறந்தார்.

வாஞ்சிநாதனிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஒரு கடிதம், ஆங்கிலேயருக்கெதிராக நாடு முழுவதும் புரட்சி நடத்த மக்கள் திட்டமிட்டிருந்ததைத் தெரிவித்தது. தில்லியில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழா நடக்கும்போது



இந்தப்புரட்சி நடக்கவிருந்தது. இதை அறிந்துகொண்ட ஆட்சியாளர்கள் தீவிரவாதிகளைத் தேடிப் பிடிக்கத் தொடங்கினார்கள். ஆஷைக் கொலை செய்ததற்காகவும், பிரிட்டிஷ் ஆட்சியைக் கவிழ்க்கத் திட்டமிட்டதற்காகவும் 14 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

'திருநெல்வேலி சதி வழக்கு' எனப்பட்ட இந்த வழக்கில் நீலகண்ட பிரம்மச்சாரி, முதல் குற்றஞ்சாட்டப் பட்டவராகச் சேர்க்கப்பட்டிருந்தார்.

கிட்டத்தட்ட இதே காலத்தில் செண்பகராமன் என்ற தீவிரவாதி ஜெர்மனிக்குச் சென்று போர்ப்பயிற்சி பெற்றார். அவர் வியன்னாவில் சுபாஷ் சந்திர போஸைச் சந்தித்தார். நாட்டு விடுதலைக்குப் போராட இந்திய தேசியத் தொண்டர்படை ஒன்றை அமைக்க அவர் திட்டமிட்டார்.

முதல் உலகப்போரின்போது 'எம்டன்' என்ற ஜெர்மன் போர்க்கப்பலைச் சென்னைக்கருகே கொண்டுவந்து பீரங்கியால் சுட்டார்; இந்தக் குண்டு சென்னை உயர்நீதிமன்றக் கட்டடத்திற்கருகே விழுந்தது.

பாரதியார் தமது 'இந்தியா' பத்திரிகையில் தேச விடுதலை பற்றி எழுதிய கட்டுரைகளுக்காக, அவரைக் கைது செய்வதற்குப்,



# இந்திய சுதந்திரத் திருநாள் பொன்விழா

## இதோ சில முக்கியச் செய்திகள்!

★ *1885ல் கூடிய முதலாவது காங்கிரசில், முதல் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர் திரு.ஜி.சுப்பிரமணிய ஐயர் ஆவார்.*

★ *காங்கிரஸ் பேரியக்கத்தைத் தோற்றுவித்த ஆங்கிலேயர், சர் ஹென்றி ஏ.ஓ. ஹியூம்.*

★ *இந்திய தேசியக் காங்கிரஸ் வரலாற்றை முறைப்படி முதன்முதல் எழுதியவர், பட்டாபி சீதாராமையா.*

★ *இந்தியாதான், உலகிலேயே மிகப்பெரிய அரசியல் சட்டத்தைக் கொண்டுள்ள நாடு ஆகும்.*

★ *இந்தியாவில் முதன்முதல் அமைக்கப்பட்ட மாநில அரசியல் கட்சி, பொன்விழா கொண்டாடும் திராவிட முன்னேற்றக் கழகமேயாகும்.*

★ *1989 முதல்தான், வாக்களிக்கும் வயது 18 என நிர்ணயிக்கப்பட்டது.*

★ *இந்தியாவில், பெண்களுக்கு முதன்முதல் வாக்குரிமை அளிக்கப்பட்டது 1926ல்.*

★ *இந்திய தேசியக்கொடியை வடிவமைத்த முதல் பார்ஸி பெண்மணி, மேடம் காமா.*

★ *முதன்முதல் பாரத ரத்னா விருது பெற்றவர் மூதறிஞர் ராஜாஜி.*

★ *இந்திய தேசியக் கொடியில் உள்ள அசோக சக்கரத்தில், 24 ஆரங்கள் உள்ளன.*

★ *'கப்பலோட்டிய தமிழன்' எனப்படும் வ.உ.சிதம்பரனார், 'தென்னிந்தியத் திலகர்' என்றும் போற்றப்பட்டார்.*

★ *வ.உ.சி. விட்ட இருகப்பல்களின் பெயர்கள் லாவோ, காலியா.*

★ *இந்திய சுதந்திரப் போராட்ட வீரரான திரு.வ.வே.சு. ஐயர், 'மகரிஷி' என்று குறிப்பிடப்பட்டார்.*

★ *ராட்கிளிப் என்பவரே, இந்தியா-பாகிஸ்தான் எல்லைக்கோட்டை வகுத்தவராவார்.*

★ *ஊர்வலத்தில் தேசியக்கொடி பிடிப்பதானால், வலது தோளில்தான் தாங்கிச் செல்லவேண்டும்.*

★ *பிரிட்டிஷ் பார்லிமென்டில் இடம்பெற்ற முதல் இந்தியர் தாதாபாய் நெளரோஜி.*

★ *இந்தியா சுதந்திரம் பெற்றபின் முதல் தேர்தல் நடைபெற்றது, 1952 ஆம் ஆண்டு.*

- *வித்யா*



பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டபோது, அவர் பிரெஞ்சுப் பிரதேசமான புதுச்சேரிக்குத் தப்பிச்சென்றார். அவரைப்போலவே நீலகண்ட பிரம்மச்சாரி, மாடசாமி போன்ற சுதந்திரப்போராட்ட வீரர்களும் புதுவையில் அடைக்கலமடைந்தார்கள்.



### வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகம்

தமிழ்நாட்டில் நடந்த சுதந்திரப்போராட்டத்தில் வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகம் மிக முக்கியமான நிகழ்ச்சியாகும்.

ராஜாஜி தலைமையில் 98 பேர் 1930-ஆம் ஆண்டு தமிழ்ப்புத்தாண்டு நாளன்று திருச்சியிலிருந்து புறப்பட்டு, அன்னிய அரசின் உப்புச் சட்டத்தை எதிர்த்து வேதாரண்யத்திற்கு யாத்திரை தொடங்கினார்கள். வழியில் உள்ள கிராமங்களிலெல்லாம் ராஜாஜியும் மற்ற தலைவர்களும் பொதுக்கூட்டங்களில் பேசினார்கள். எல்லா இடங்களிலும் யாத்திரையாளர்களுக்கு மக்கள் மிகச் சிறப்பான வரவேற்பு அளித்தார்கள்.

16 நாள் பயணத்திற்குப் பின், சத்தியாக்கிரகிகள் வேதாரண்யம் போய்ச் சேர்ந்தார்கள். இவர்கள் ஒவ்வொரு நாளும் சிறு குழுக்களாகச் சென்று உப்பு எடுத்துச் சத்தியாக்கிரகம் நடத்தி, கைது செய்யப்பட்டார்கள். சத்தியாக்கிரகிகள் 98 பேர் மட்டுமின்றி, பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் வந்திருந்த தேசிய இயக்க வீரர்களும் அப்போது கைது செய்யப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பெரியார் ஈவெரா. அவர்கள் மதுவிலக்கு மறியல், தீண்டாமை ஒழிப்புப் போன்ற போராட்டங்களில் தீவிரமாக ஈடுபடலானார்.

### 'வெள்ளையனே வெளியேறு'

1942-இல் பம்பாயில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டுக்குப் பின்பு, நாடெங்கும் தேசிய இயக்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டபோது தமிழ்நாட்டு மக்கள் கொதித்தெழுந்தார்கள். மாநிலம் முழுவதிலும் சில நாட்கள் பந்த் நடைபெற்றது. மக்கள் அமைதியாக நடத்திய ஊர்வலங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் காவல் துறையினர் தடுத்ததைத் தொடர்ந்து பல இடங்களில் வன்முறைச் சம்பவங்கள் நடந்தன.

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானையில் போலீசார் சுட்டதில் 6 பேர் உயிரிழந்தார்கள்.

சென்னையில் 'பி அண்ட் சி' ஆலைத் தொழிலாளர்கள் நடத்திய ஊர்வலத்தின் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டில் 9 பேர் இறந்தார்கள்.



கோயம்புத்தூரில் விமான தளம் ஒன்று எரிக்கப்பட்டது; அப்போது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், சுமார் 30 பேர் கொல்லப்பட்டார்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பள்ளிகளும், கல்லூரிகளும் ஒரு வார காலத்துக்கு மூடப்பட்டன. குலசேகரப்பட்டினம் உப்பளத்தில் புரட்சிக்காரர்கள் வெள்ளையர் ஒருவரைக் கொன்றார்கள். சிறிது காலத்திற்குள் வன்முறைகளும் கலகங்களும் ஒரு முடிவுக்கு வந்தன என்றாலும், மாணவர்களின் கிளர்ச்சிகள் நீண்ட காலம் தொடர்ந்து நடந்தன.

தமிழகத்தில் இவ்வாறு அணையாது மூட்டப்பட்ட சுதந்திரக்கனல், 1947 ஆகஸ்ட் 15ஆம் நாள் இந்தியாவிலிருந்து வெள்ளையர்கள் வெளியேற முக்கியக் காரணங்களில் ஒன்று ஆயிற்று என்பதை விடுதலைப் போர் வீரவரலாறு என்றென்றும் மறவாது. ●

# மனித நேயம்

- கவிஞர் எழிற்பித்தன்



இருப்பதன் விளக்க மாகும்
இயக்கமே உலக மாகும்
பொறிப்புலன் களாலே ஆன
புதுப்பாண்டம் தானே யாரும்!

உறுத்துமோர் தேவை யாலே
உருப்பெற்றி லங்குவார் தம்
கருப்பொருள் தானே வாழ்க்கை
காலமோர் கவிதை யாகும்!

எழுப்புவான் பரிதி யென்னும்
இலக்கண வரம்புக் குள்ளே
உழைப்பெனும் நெம்பு கோலே
உலகினைப் புரட்டக் கூடும்!



பழுக்கின்ற கனிகள் யாவும்
படைத்தவர் பெருமை கூறும்
விழிக்கின்ற புதுக் கணக்காம்
விடியலே மனித நேயம்!

விழிப்பயன் தோயு மந்த
வியனுறு வனப்பை யெல்லாம்
எழுத்தினால் வடிக்கப் போமோ
கிழக்கு நீ விழிக்க வேண்டும்!

விழிப்பதும் இருப்பதும் நல்
விளைவுகள் ஆவ தில்லை
அழுக்கெல்லாம் கரைந்து போக
அயராத உழைப்பு வேண்டும்!





மனத்தள வாகு மிந்த
மன்பதைத் தேர்வி லெங்கும்
இனித்திடும் அன்பு ஒன்றே
இலக்கிய மாக வேண்டும்!

நிலைபெற வாழு மிந்த
நினைவுக ளாலே மண்ணில்
தலைப்படு கின்றோம்; நாளும்
தழுவுக மனித நேயம்! ★



# கல்லக்குடி சமத்துவபுரம்

திருச்சி மாவட்டத்தில் சமத்துவபுர வீடுகளையன்னியில் சிறப்புத் திட்டமாக இந்த ஆண்டு 750 சமத்துவபுர வீடுகளை உருவாக்குவது என்று திட்டமிட்டு அந்த வகையில் 200 வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழாவும், கல்லக்குடியிலே இன்றைக்கு நிறைவேறும் தருவாயில் இருக்கின்ற 100 சமத்துவபுர வீடுகளைப் பார்வையிடும் விழாவும், இதைத் தொடர்ந்து மொத்தமாக இந்த மாவட்டத்தில் 750 சிறப்பு வீடுகள் கட்டுவதற்கான அறிவிப்பு விழாவும் இணைக்கப்பெற்று அத்துடன் ஏறத்தாழ 35 கோடிக்கான அரசு நல்வாழ்வுத் திட்டங்களை வழங்குகின்ற விழாவும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## ஆதிதிராவிடர்க்கு வீடுகள் கட்டித்தரும் திட்டத்தை கொண்டு வந்தது இந்த அரசு

இன்று எல்லோரும் சமமாக வாழவேண்டும். சமத்துவ நோக்கத்தோடு, நல்ல எண்ணத்தோடு ஒற்றுமையை, உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்த சமத்துவபுரத் திட்டத்தை நாம் சிந்தித்து அரசின் சார்பாக செயல்படுத்துகின்ற சூழல் இன்றைக்கு உருவாகியிருக்கின்றது. இங்கே எனக்கு முன்னால் பேசியவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல் ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக காங்கீரிட் வீடுகளை கட்டித்தருகின்ற திட்டத்தை இந்த ஆட்சியிலே, நான் 1974-ஆம் ஆண்டு நான் அறிமுகப் படுத்தினேன். அப்பொழுது அதை பலர் கேலி செய்தார்கள். இந்தத் திட்டம் நிறைவேறுமா என்றெல்லாம் கேட்டார்கள். அதில் குறைகளை, குற்றங்களைச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு 74-ஆம் ஆண்டு தமிழகத்திலே அறிமுகப்படுத்தப்பட்ட ஆதிதிராவிடர்களுக்கான இலவச காங்கீரிட் வீடுகள் என்ற அந்தத் திட்டம் இந்திய அரசாலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்குப் பெயரும் மாற்றப்பட்டு நான் தொடங்கிய திட்டம் அதற்கு இந்திரா காந்தியின் பெயர் சூட்டப்பட்டு இந்தியா முழுமையுள்ள மாநிலங்களிலே ஆதிதிராவிடர்களுக்கான தொகுப்பு வீடுகள் கட்டப்படுகின்றன. நான் பெயர் மாறியதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அந்தக் குறிக்கோள் மாறாமல் வீடுகள் கட்டப்படுவதற்காக மகிழ்ச்சியடைகிறேன். இது தவிர வேறு மாநிலங்களில் கட்டப்படுகின்ற வீடுகளெல்லாம் கிட்டத்தட்ட ஒட்டு வீடுகள்தான். தமிழ்நாட்டில் தான் மத்திய அரசு தருகின்ற தொகையை விட அதிகமாக தொகை சேர்த்து இந்த வீடுகளையெல்லாம் இலவசமாக காங்கீரிட் வீடுகளாக கட்டித்தருகின்ற அந்தக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

## குடிசை மாற்று வாரியத்தை முதன் முதலாக ஆரம்பித்தது இந்த ஆட்சிதான்

நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற ஏழை எளிய பாட்டாளி மக்களுக்கெல்லாம் மாடி வீடுகளை கட்டித் தந்து முதல் முதலாக குடிசை மாற்று வாரியத்தை ஆரம்பித்ததும் தமிழ்நாட்டில் தி.மு.கழக ஆட்சியிலேதான் என்பதை நீங்களெல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். சென்னையானாலும், கோவையானாலும், சேலமானாலும், திருச்சியானாலும் இத்தகைய நகர்ப் புறங்களில் குடியிருப்புக்கள் குடிசைகளாக இருப்பதை மாற்றி குடிசை மாற்று வாரியம் ஏற்கனவே Slum Development Scheme குடிசைகள் மேம்பாட்டுத் திட்டம் என்று காங்கிரஸ் ஆட்சியில் இருந்தது. குடிசைகள் மேம்பாட்டு திட்டம் என்றால் குடிசைகள் இருக்கின்ற பகுதிகளில் மேம்பாடு செய்ய சாலைகள் அமைப்பது, தண்ணீர் தருவது இவைகள்தான் குடிசைகள் மேம்பாட்டுத் திட்டம் என்று இருந்தது. நாம் அதனை அறவே மாற்றி குடிசைகளை அகற்றுகின்ற திட்டம் Slum Clearance Scheme குடிசைகளை அகற்றினால் அங்கே வாழ்கின்றவர்கள் எங்கே போவார்கள் என்பதற்காக அங்கேயே மாற்றுத் திட்டமாக குடிசைகளை மாற்றுகின்ற வாரியம் குடிசை மாற்று வாரிய திட்டத்தை முதல் முதலாகக் கண்டதும் தமிழ்நாடு தான் கண்ட ஆட்சியும் கழக ஆட்சிதான் என்பதை நான் இங்கே பெருமையாகக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதனுடைய தொடர்ச்சியாகத் தான் இங்கே தம்பி துரைமுருகன் எடுத்துக்காட்டியதைப் போல் ஒரு அரசு என்றால் நிர்வாகத்திலே திறமை காட்டுகின்றோம். மக்களை ஆட்சிபுரிவதிலே திறமை காட்டுகின்றோம்; சட்ட ஒழுங்கு அமைதி காப்பதிலே கவனம் செலுத்துகின்றோம். அதே நேரத்தில் சீர் குலைவுகளுக்கு சில இடையூறுகளுக்கு எது காரணம் என்பதையும் அறிந்து தம்பி சிவா, குறிப்பிட்டதைப் போல், 'நோய்

கல்லக்குடியில் 23.8.98 அன்று நடைபெற்ற சமத்துவபுர விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...

**இந்த சமத்துவபுரத்திலே ஒரு புதுமை என்னவென்றால் இதிலே 'நமக்கு நாமே' திட்டத்தையும் கலந்திருக்கின்றார்கள். வெறும் சமத்துவபுரம் மாத்திரமல்ல; தேனொடு கொஞ்சம் பலாச்சுளையை கலந்ததைப்போல! அல்லது பலாச்சுளையோடு தேனையும் கலந்ததைப் போல! சமத்துவபுரத் திட்டத்தோடு நமக்கு நாமே திட்டத்தையும் கலந்திருக்கிறார்கள். அரசாங்கம் தருகின்ற தொகையை கொண்டு மாத்திரமல்ல; பயனாளிகளும் உழைத்து உருவானால்தான் அந்த வீடுகளிலே வசிக்கின்றவர்கள் மிகுந்த எச்சரிக்கையோடும் மிகுந்த பொறுப்போடும் அந்த வீடுகளை பராமரிப்பார்கள்.**

அந்த உடைப்பை அடைப்பதற்கு உதவி கோரவில்லை... அவர்கள் மாத்திரம் போதாதென்ற காரணத்தால் மக்களையெல்லாம் அழைத்தார். ஊர் மக்களெல்லாம் ஒன்றுகூடிதான் வைகையில் ஏற்பட்ட உடைப்பை அடைத்தார்கள் என்று புராணம் சொல்கிறது; வரலாறே சொல்கிறது. அப்படிச் சென்ற ஊர் மக்களில் ஒருவராக மதுரை சோமசுந்தர கடவுள் ஆண்டவனே கூட ஒரு கூலிக்காரனாகச் சென்று பிட்டுக்கு மண் சுமந்தான் என்று ஆண்டவனே பிட்டுக்கு மண் சுமந்து மண்ணை சுமப்பதற்கு ஒரு கை பிட்டு கொடுத்தால் போதுமென்று அதை கூலியாகப் பெற்றுக் கொண்டு ஆண்டவனே மண் சுமந்தான் என்றால், அப்பொழுதே நமக்கு நாமே திட்டம் புராண காலத்திலேயே மதுரையம்பத்தியிலே பாண்டியனால் அறிமுகப்படுத்தப்பட்டு அதில் மக்கள் மாத்திரமல்ல; அதில் மகேசனேகூட கலந்து கொண்டிருக்கிறான் என்றால் நாம் கலந்து கொள்ளக்கூடாதா? நாம் அந்தத் திட்டத்திலே பங்கு பெறக்கூடாதா என்பதுதான் உங்களைப் பார்த்து நான் விடுக்கின்ற வேண்டுகோளாகும்.

இந்த வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கின்ற வகையிலே இந்த மாவட்டத்து பெருமக்கள், இந்தப் பகுதி பெருமக்கள் அதிலும் என்னுடைய வாழ்க்கை வரலாற்றிலே ஒரு முக்கியமான அத்தியாத்தை பிடித்துக் கொண்டிருக்கின்ற கல்லக்குடி பகுதியிலுள்ள பெருமக்கள் இந்தப் பணியிலே அயராமல் உழைத்து ஆர்வம் காட்டியிருப்பதற்காக என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## சமத்துவபுரத்தில் வாழ, ஜாதியை மறந்துவிட்டு வாருங்கள்

நான் மதுரையிலே கூறியதை தம்பி துரைமுருகன் இங்கு நினைவுபடுத்தினார். சமத்துவபுரம் என்பது மாவட்டங்களில் மாத்திரமல்ல; மாநிலம் முழுவதும் தமிழ்நாடு முழுதும் சமத்துவபுரமாக மாற வேண்டும். மாநிலம் மாத்திரமல்ல; நம்முடைய இந்தியாவே சமத்துவபுரமாக மாற வேண்டும்.

இன்றைக்கு இந்த சமத்துவபுரங்களில் நூறு விடுகள் இருக்கின்றன என்றால் அந்த விடுகளுக்கான பள்ளி, நூலகம், விளையாட்டுத் திடல், சமூகக்கூடம், பூங்கா, கிணறு, மேல்நிலை குடிநீர் தொட்டி, பால் வழங்கும் நிலையம், காய்கறிக் கடை, மருந்தகம், கால்நடை மருந்தகம், இப்படி இவ்வளவு வசதியோடு இருக்கிறதென்று அழைக்கும்போது வருகிறவர்கள் ஜாதியை மறந்துவிட்டு வாருங்கள். எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிலை, எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற அந்தக் குறிக்கோளை எய்திட இங்கே வாருங்கள்; வருகின்றவர்கள் ஐயராக இருக்கலாம், ஆதிதிராவிடராக இருக்கலாம், செட்டியாராக இருக்கலாம், வன்னியராக இருக்கலாம், முதலியாராக இருக்கலாம், தேவராக இருக்கலாம், யாதவராக இருக்கலாம், பிள்ளைமாராக இருக்கலாம், யாராக இருந்தாலும் அவர்களெல்லாம் தமிழர்கள் அல்லது இந்தியர்கள் என்று மாத்திரமல்ல; மனிதர்கள் ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் என்று சொல்கிறோம்.

ஆனால் ஆண்டவனை ஏற்றுக் கொள்கிறோம். ஆண்டவன் படைப்பிலே எல்லோரும் சமம் என்பதை மாத்திரம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறோம் என்றால் அப்படி மறுக்கின்றவர்கள்தான் ஆண்டவனுக்கு விரோதிகள், உண்மையான நாத்திகர்கள் என்பதை நான் எடுத்துச் சொல்லி, அந்த ஆண்டவன் விரும்புகின்ற சமத்துவத்தை நிலைநாட்ட, சமதர்மத்தை நிலை நாட்ட சமத்துவபுரங்கள் நாடெல்லாம் உருவாகட்டும். நான் இன்னும் ஒருபடி மேலே சென்று சொல்ல விரும்புகின்றேன். தமிழகம், இந்தியா என்ற இந்தப் பகுதி மாத்திரமல்ல; நம்முடைய மனம் அதற்குப் பக்குவப்பட்டாக வேண்டும். நாம் அத்தனைப் பேரும் சமத்துவத்தை விரும்புகின்றவர்களாக மாறுவோம். வெறும் வாய் அளவிலே இல்லாமல் செயல் அளவிலே சமத்துவத்தை நாம் காட்டுவோம்; சமதர்மத்தை நிலை நாட்டுவோம். அதை இந்த விழாவிலே ஒரு சூளுரையாக எடுத்துக் கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★



பூம்புகார் என்று புகழ்பெற அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் 1.8.1973 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்களால் பெயரிட்டு துவக்கப்பட்டு, தற்பொழுது, 'வெள்ளிவிழா' ஆண்டினை 21.8.1998 அன்று கொண்டாடியது. புகழ்பெற்ற சோழ மன்னர்களின் துறைமுகத்தின் பெயரைத் தாங்கிய இந்நிறுவனம், 25 ஆண்டுகளை வெற்றிகரமாகக்கடந்துள்ளது. இந்தியத் திருநாட்டின் சுதந்திரதினப் பொன்விழாவினைக் கொண்டாடும் நேரத்தில், பூம்புகாரும் தனது வெள்ளிவிழாவினைக் கொண்டாடுவது என்பது இந்நிறுவனத்திற்கு மேலும் பெருமை அளிக்கிறது.

இந்த 25 ஆண்டுகளில இந்நிறுவனம் தனது திறமையான செயல்பாட்டால் படிப்படியாக வளர்ந்து இன்று தமிழக அரசு நிறுவனங்களிலேயே நன்றாகச் செயல்படும் ஒரு நிறுவனமாக விளங்குகிறது. இந்நிறுவனத்தின் புகழ் இன்று நாடு முழுவதும் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் பரவியுள்ளது.

வெள்ளிவிழாக் காணும் இந்நிறுவனம், படைத்துள்ள சாதனைகளில் சில;

- ⌘ 1973ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சங்களாக இருந்த இந்நிறுவனத்தின் விற்பனைச் சாதனை தற்போது ரூ.1100 இலட்சங்களாக உயர்ந்துள்ளது.
- ⌘ அகில இந்திய அளவில் கைத்திறத் தொழில் நிறுவனங்களிலும் விற்பனையில் முதல் மூன்றில் இந்நிறுவனம் ஒன்றாகும்.



# பூம்புகார்

- ⌘ மொத்தம் 20 விற்பனை நிலையங்கள்தான் உள்ளன. இந்தியாவிலேயே அனைத்து கைத்திறத் தொழில் நிறுவனங்களையும் விட அதிக விற்பனை நிலையங்களைக் கொண்ட நிறுவனம் இது.

அரசு கைத்திறத் தொழில் நிறுவனங்களிலேயே ஆண்டுதோறும் அதிக எண்ணிக்கையிலான கண்காட்சிகளை நாடு முழுவதும் பூம்புகார் நடத்துகிறது.

இந்தியாவிலேயே கைவினைப் பொருட்களுக்கென விற்பனை நிலையங்கள் மட்டுமின்றி,சொந்தமாக 9 உற்பத்திநிலையங்களையும் கொண்டுள்ளது.

இந்த 25 ஆண்டுகளில், தமிழக அரசிடமிருந்து பெற்ற கடன் தொகையை வட்டியுடன் திருப்பிச் செலுத்திவருவதுடன் தன்னிறைவு அடைந்து, செயல்பட்டு வருகிறது.

இந்தியாவில் கைத்திறத் தொழில் நிறுவனங்களில், பூம்புகார் மட்டுமே கோவில் சிறப்புப் பணிகளான மர/வெள்ளி/தங்க ரதங்கள், வாகனங்கள், கவசங்கள், மணிகள் மற்றும் பித்தளைவரிசைக் கம்பிகள் ஆகியவற்றை செய்து வழங்குகிறது. பூம்புகார் செய்து வழங்கிய புகழ்வாய்ந்த பணிகளில் சில :

- ⌘ திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு 21½ அடி உயரமுள்ள தங்கத்தேர்.
- ⌘ இராமேஸ்வரத்திலுள்ள திருக்கோயிலுக்கு கருங்கல்லில் இரண்டாவது பிரகாரம்.
- ⌘ பெங்களூரிலுள்ள கன்னிகா பரமேஸ்வரி கோயிலுக்கு 22 அடி உயரத்தில் வெள்ளிரதம்.

இந்த வெள்ளிவிழா ஆண்டில் இந்நிறுவனம் கீழ்க்கண்ட இலக்குகளை எட்டத் திட்டமிட்டுள்ளது.

இவ்வருடம் விற்பனையை ரூ.15 கோடிக்கு உயர்த்துவது.

மயிலாப்பூரிலுள்ள அருள்மிகு கபாலீசுவரர் கோயில், மாங்காட்டில் உள்ள காமாட்சியம்மன் கோயில் மற்றும் மருதமலை முருகன் கோயில் ஆகியவற்றிற்குத் தங்கரதம் செய்து வழங்கும் சிறப்புப் பணிகளை நிறைவேற்றுதல்.

சென்னை அண்ணாசாலையில் அமைந்துள்ள இந்நிறுவனத்தின் முதன்மை விற்பனை நிலையத்தை ரூ.1 கோடி செலவில் விரிவுபடுத்தி, உள் அலங்காரம் செய்து, குளிர்சாதன வசதி செய்தல்.

இந்நிறுவனத்தின் ஏற்றுமதி விற்பனையை ரூ.15 கோடியாக உயர்த்துதல் (இது முந்தைய ஆண்டைவிட 100 சதவிகிதம் உயர்வாகும்).

ஏற்றுமதிக்கான பொருட்கள் பற்றிய புத்தகங்கள் வெளியிடுதல் மற்றும் வெளிநாட்டில் நடத்தும் கண்காட்சிகளில் பங்கேற்றல்.

மேற்கண்ட இலக்குகளை அடைந்து, வரும் ஆண்டுகளில் மேலும் வளர்ந்து தனது பொன்விழா ஆண்டை நோக்கி பூம்புகார் நம்பிக்கையுடன் பீடுநடை போடுகிறது.

# வாசகர் இதயம்

அரசு ஆணைகளைத் 'தமிழரசு' இதழில் தொடர்ந்து வெளியிடுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது; தொடரட்டும் இப்பணி.

- ப.சுதாகர்,
நடுப்பட்டி.

தளபதி சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்களின் வரலாற்றை மிகவும் அற்புதமாகவும், சுருக்கமாகவும் அளித்திருந்தீர்கள்; நன்றி.

- மு.செல்வம்
கீரப்பாளையம்.

தருமபுரி மாவட்டச் சிறப்பிதழ் கண்டு மகிழ்ந்தேன்; அந்த மாவட்டத்தைச் சேர்ந்த நான் 'தழைத்தோங்கும் தருமபுரி மாவட்டம்' என்ற கட்டுரையால் களிபேருவகை கொண்டேன்.

-கே.மீனாம்பாள்.
சென்னை - 4.

'கலைஞர் சிறந்த நிர்வாகி, மக்கள் தலைவர்' என்றெல்லாம் கவர்னர் பேசியதை வெளியிட்டிருந்தீர்கள்; இதைப் படித்துவிட்டு, அன்றாடம் வேறொரு அம்மையார் கலைஞர் மேல் அவதூறு சொல்லி வருவதைப் பார்க்கிறபோது எங்களுக்கெல்லாம் சிரிப்புத்தான் வருகிறது.

- எஸ்.இன்பராஜ்,
நா. சுரேந்திரன்,
தஞ்சாவூர்.

அரசு செய்திகள், நலத்திட்டங்கள் பற்றி அறிவதற்கான வாய்ப்புகள், கவிதைகள், சிங்காரச் சிறுகதைகள், பயன்தரும் கட்டுரைகள், சாதனையாளர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் இவற்றோடு இலக்கியத் தாகமுள்ள வாசகர்களையும் திருப்திகொள்ளச் செய்யும் தமிழரசை வாழ்த்துகிறேன்.

- வேணு புருஷோத்தமன்
சென்னை - 94.

'விமோசனம்' பத்திரிகை பற்றிய ஆய்வுக்கட்டுரை அந்தக்காலச் செய்திகள் பலவற்றையும் கொண்ட அற்புதக் களஞ்சியமாக இருந்தது. இப்படிப்பட்ட கட்டுரைகளைத் 'தொடரும்' போடாமல் ஒரே இதழில் முடித்தால் நன்றாயிருக்குமே!

- புலவர் தாமரை
திருக்காட்டுப்பள்ளி.

எப்போதாவதுதான் வேளாண்மைச் செய்தி வெளியிடுகிறீர்கள்; தொடர்ந்து அந்தந்தப் பருவத்திற்கேற்பச் செய்திக் கட்டுரைகள் போட்டால் என்போன்ற விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

-எம். பிச்சையா
திருநெல்வேலி.

கலைமாமணி விருதுபெற்ற செய்திகளைப் படங்களோடு போட்டிருக்கக் கூடாதா?

-ப.பிரமீளா
திருச்சி.

உலகக் கோப்பைக் கால்பந்தாட்டப் போட்டி பற்றிய கட்டுரை வெளியிட்ட ஆசிரியர் குழுவுக்கு நன்றி. இந்தியா அதில் இடம் பெறவில்லையே என்ற எங்கள் ஏக்கத்தையும் அதில் குறிப்பிட்டிருந்த கட்டுரையாளருக்கு எங்கள் இரட்டிப்பு நன்றி.

-ஆர்.மகாலிங்கம்
கரூர்.

குமாரசாமி ராஜா பற்றிய முதலமைச்சர் கலைஞர் சொற்பொழிவு பிரமாதம்.

- பா.முத்து,
புதுச்சேரி.



# தருமபுரி மாவட்டம் : நீர்வள ஆதார ஆக்கப்பணிகள்

கடந்த இரண்டு ஆண்டுகளில் (1996-97 மற்றும் 1997-98) கீழ்காணும் திட்டங்கள் மூலமாக தருமபுரி மாவட்டத்தில் புதிய பணிகள் மற்றும் ஏற்கெனவே உள்ள திட்டங்களைப் புனரமைத்து மேம்படுத்தும் பணிகள், பாசனப் பரப்பை விரிபடுத்தும் வகையில் பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பின் கீழ் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**பெரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டப் பணி**

அரூர் வட்டம், வள்ளிமதுரை கிராமத்தின் அருகில் வரட்டாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு ரூ.2,112 இலட்சங்களுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தினை நான்கு ஆண்டுகளில் (1997-98 முதல் 2000-2001) முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை விரைந்து முடிக்கும் வகையில் இதற்கென ஒரு கோட்ட அலுவலகமும், மூன்று உபகோட்டங்களும் 9-7-98 முதல் துவக்கப்பட்டு, இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தால் 2858.30 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறும்.

**உலக வங்கி நிதியுதவியுடன், ஒருங்கிணைந்த நீர் மேலாண்மைத் திட்டப்பணிகள்**

இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்திலுள்ள பெரிய மற்றும் நடுத்தர நீர்த்தேக்கத் திட்டங்களைப் புனரமைத்து மேம்படுத்த ரூ.1076.48 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கிருஷ்ணகிரி, வாணியாறு, பாம்பாறு, தூளகிரி சின்னாறு போன்ற நீர்த்தேக்கம் மற்றும் ஈச்சம்பாடி அணைக்கட்டு ஆகிய புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதர இரண்டு பணிகளான நும்பலஹள்ளி நீர்த்தேக்கம் மற்றும் பாரூர் பெரிய ஏரி முறைமை ஆகியவைகள் நடப்பாண்டில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதன் மூலம் 38,864 ஏக்கர் பாசனம் உறுதி.

**சிறப்புச் சிறுபாசனத் திட்டப் பணிகள்**

இத்திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்தில் ஆறு பணிகள் மேற்கொள்ள ரூ.135.05 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் பெறப்பட்டது. இப்பணிகளில் நான்கு பணிகள் முடிவுற்றன. இதர இரண்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகளால் இம்மாவட்டத்தில் சுமார் 556.50 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி அளிக்கப்பட்டுள்ளது.

## 200 ஏரிகள் தூர்வாரும் திட்டப்பணிகள்

மாண்புமிகு முதலமைச்சரின் வழிகாட்டுதலில் - ஏரிகள் தூர்வாரும் திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்தில் 10 ஏரிகள் தூர்வாரும் பணிக்கு ரூ.84.30 இலட்சம் அரசால் நிதி வழங்கப்பட்டுள்ளது. இவைகளில் எட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் 2359.11 ஏக்கர் பாசனம் உறுதி செய்யப்படுகிறது.



**மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டப்பணிகள்**

இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் உள்ள சித்தேரி மலையில் இரண்டு பணிகள் ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் அரசு ஒப்புதல் பெறப்பட்டது. இவைகளில் ஒரு பணி முடிவுற்றது மற்றொரு பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. இதன் மூலம் 310.50 ஏக்கர் பாசன வசதி பெறும்.

**மாநில ஏரிகள் நீர்ப்பாசனத் திட்டப்பணிகள்**

இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் உள்ள 19 முன்னாள் ஜமீன் ஏரிகள் ரூ.33 இலட்சம் மதிப்பளவில் மேற்கொள்ள அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 12 பொதுப்பணித்துறை ஏரிகள் ரூ.20 இலட்சம் மதிப்பளவில் மேற்கொள்ள அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவைகளில் நான்கு பணிகளைத் தவிர 27 பணிகள் முடிவுற்றன. இதன் மூலம் 2,359.11 ஏக்கர் பாசனம் உறுதி செய்யப்படுகிறது.

**நபார்டு திட்டப்பணி**

இத்திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் ஒரு பணி ரூ.10 இலட்சம் மதிப்பளவில் மேற்கொள்ள அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டது. இப்பணி தற்போது நடைபெற்று வருகிறது; விரைவில் முடிக்கப்படும். இதனால் 55.42 ஏக்கர் பாசன வசதி பெறும்.

இவைகளைத் தவிர, நடப்பாண்டில் (1998-99) அரசால் ஒப்புதல் பெறப்பட்டு மேற்கொள்ளப்பட உள்ள பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:

சிறப்புச் சிறுபாசனத் திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் மூன்று பணிகளுக்கு ரூ.75.60 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும். இவைகளினால் 154.33 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறும்.

**மலைவாழ் மக்கள் நலத்திட்டப் பணி**

இத்திட்டத்தின்கீழ் சித்தேரி மலையில் ஒரு பணிக்கு ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது; இப்பணி நடப்பாண்டில் துவக்கப்பட்டு முடிக்கப்படும்.

**ஏரிகள் தூர்வாரும் திட்டப்பணிகள்**

இம்மாவட்டத்தில் நடப்பாண்டில் 11 ஏரிகள் தூர்வாரும் பணிகளுக்கு என ரூ.127 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதல் தற்போது பெறப்பட்டுள்ளது. இப்பணிகள் நடப்பாண்டில் மேற்கொண்டு முடிக்கப்படும். இதனால் 976.49 ஏக்கர் பாசன உறுதிபெறும்.

கழிவுப் பொருட்களில் இருந்து பயனுள்ள உரங்கள் உற்பத்தி செய்து, விளைநிலங்களுக்கு இட்டு மகசூலைப் பெருக்கும் வழக்கம் தொன்றுதொட்டு நம்நாட்டில் நிலவி வருகிறது. இருப்பினும் விஞ்ஞான அபிவிருத்தியினால் உற்பத்தி செய்யப்பட்ட அதிக மகசூல் தரவல்ல உயர்விளைச்சல் ரகங்களை நாம் தொடர்ந்து பயிர் செய்யும் நிலத்தின் பயிர்ச்சத்து மற்றும் உற்பத்தித்திறன் குறைய வாய்ப்பு இருக்கிறது. இதை நிவர்த்தி செய்ய அங்கே உரங்களை நாம் அதிகமாக நிலத்திற்கு இட்டு விவசாயம் செய்யும்போது நிலத்தின் வேதியியல் மற்றும் இயற்பியல் தன்மைகள் பயிரிடுவதற்கு உகந்ததாகப் பாதுகாக்கப்படுவதுடன் பயிர்விளைச்சலும் அதிகரிக்கப்படுகிறது.

இந்தியாவில் வேளாண்கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள் மற்றும் நகரக் கழிவுகள் எனப் பலவகையான கழிவுகள் மிகுதியான அளவில் ஆண்டுதோறும் கிடைக்கின்றன. இவற்றைப் பயனுள்ள அங்கக உரங்களாக மாற்றுவதன் மூலம் ஆண்டிற்கு 7.1 டன் தழைச்சத்து 3.0 டன் மணிச்சத்து மற்றும் 7.6 டன் சாம்பல் சத்துகள் பாதுகாக்கப்படுகின்றன.

**கம்போஸ்ட் உரம் தயாரித்தல்:**

அங்ககக் கழிவுப் பொருட்களை நுண்ணுயிர்களின் உதவிகொண்டு பாதுகாக்கப்பட்ட சூழ்நிலைகளில் மட்கச் செய்து, இரசாயன மற்றும் இயற்பியல் தன்மைகளில் நிலையான குணங்களைப் பெற்ற அங்கக உரமாக்கும் தொழில்நுட்பத்தையே கம்போஸ்ட் உரம் தயாரித்தல் எனக் கூறுகிறோம். இந்தக் கம்போஸ்ட் உரம், இடப்படும் மண்ணில் கேடு ஏதும் விளைவிக்காமல் பயிர்ச்சத்துக்களான தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை அதிகரிப்பதுடன் மண்ணில் ஹியுமஸ் எனப்படும் அங்கக மட்குப் பிரிவை அதிகரித்துப் பயிர் விளைச்சலை அதிகரிப்பதுடன் மண்ணின் வளத்தையும், உற்பத்தித் திறனையும் மற்றும் நீர்ப்பிடிப்புத் தன்மையையும் பாதுகாக்கிறது.

கரும்புச் சோகை, சருங்கக் கூறின் அங்ககக் கழிவுகளைப் பயனுள்ள ஹியுமஸாக மாற்றும் உயிரியல் முறையே கம்போஸ்ட் தயாரித்தலாகும்.

# குப்பையை உரமாக்குவோம்

**அங்கக உரமிடுவதனால் நிலத்திற்கு ஏற்படும் நன்மைகள்:**

மண்ணின் இயற்பியல் தன்மையைப் பாதுகாத்து மண்வளத்தைப் பாதுகாப்பதில் அங்கக மட்டுப்பகுதியே (ஹியூமஸ்) முக்கியப் பங்காற்றுகிறது. இதன் அளவு மண்ணில் குறைந்துவிடாமலிருக்க மிகுந்த அங்கக எருக்களை இடவேண்டும்.

அங்கக எருக்கள் மண்ணின் இயற்பியல் தன்மை, மண்ணின் அமைப்பு, நீர்ப்பிடிப்புத் தன்மை, காற்றோட்டத் தன்மை மற்றும் பொதுபொதுப்புத் தன்மை ஆகியவற்றையும் மேம்படுத்தி மண்வளத்தைப் பாதுகாப்பதுடன் மண் அரிப்பையும் கட்டுப்படுத்துகிறது.

அங்கக எருக்கள் மண்ணின் இயற்பியல் தன்மை, மண்ணின் அமைப்பு, நீர்பிடிப்புத் தன்மை, காற்றோட்டத் தன்மை மற்றும் பொதுப்புத் தன்மை ஆகியவற்றையும் மேம்படுத்தி மண்வளத்தைப் பாதுகாப்பதுடன் மண் அரிப்பையும் கட்டுப்படுத்துகிறது. அங்கக எருக்கள் மங்குவதனால் உற்பத்தி செய்யப்படும் ஹியூமிக் அமிலம், பல்விக் அமிலம் மற்றும் பசைத் தன்மையுள்ள கூட்டுச் சர்க்கரைப் பொருட்கள் மண் துகள்களின் கட்டமைப்பை மேம்படுத்தி வேரின் ஊடுருவலுக்கும் வளர்ச்சிக்கும் மேலும் வேருடன் தொடர்புடைய நன்மைகள் பலதரவல்ல நுண்ணுயிர்களின் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவுகின்றது.

இந்தியாவின் இண்டூர் மற்றும் பெங்களூர் ஆகிய இருமுறைகளில் கம்போஸ்ட் உரம் தயார் செய்யப்படுகின்றன. இண்டூர் முறையில் அங்ககக் கழிவுகள் சாணக் கரைசலினால் நனைக்கப்பட்டு ஆறு மீட்டர் நீளமும், ஒரு மீட்டர் அகலம் மற்றும் ஒரு மீட்டர் உயரம் உள்ள படுக்கையாகப் பரப்பப்படுகின்றன. பதினைந்து நாட்களுக்கொரு முறை நீர் தெளிப்பதுடன், எருவை நன்றாகக் கிளறிவிடுவதனால் மட்குதல் துரிதப்படுத்தப்படுகிறது. இம்முறையில் தயார் செய்யப்படும் கம்போஸ்ட் எருவில் சுமார் 0.8 சதம் தழைச்சத்து, 0.3 சதம் மணிச்சத்து மற்றும் 1.5 சதம் சாம்பல் சத்து இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

பெங்களூர் முறையில் நகரக் கழிவுகளும், மனிதக் கழிவுகளும் உரமாக மாற்றப்படுகிறது. இம்முறையில் ஒருமீட்டர் அகலமும், ஒரு மீட்டர் ஆழமும் மற்றும் கழிவுகள் அளவுக்குத் தகுந்தபடி நீளமும் உடைய குழிகள் ஒன்று முதல் ஐந்து மீட்டர் வரை இடைவெளியிட்டு தோண்டப்பட்டு, அதில் நகர மற்றும் மனித கழிவுகள் 15 செ.மீ. உயரம் உள்ள படுக்கையும் அதன்மேல் 1.5 செ.மீ. உயரம் உள்ள கால்நடைக் கழிவுகளும் மாறிமாறி அடுக்கப்படுகின்றன.

நிலமட்டத்திற்கு மேலும் 15 செ.மீ. உயரம் வரை கழிவுகளை அடுக்கி அதன்மேல் களிமண் கொண்டு பூசவேண்டும். இம்முறையில் காற்றற்ற நிலையில் மட்குதல் நடைபெறுகிறது. எனவே, கழிவுகள் மட்கத் தாமதமாகிறது. இருப்பினும் இதில் விரயம் ஏதும் இல்லாமல் அதிக அளவு கம்போஸ்ட் உரம் கிடைக்கிறது.



**கரும்புச் சோகை கம்போஸ்ட் உரம் தயாரித்தல்:**



ஒரு டன் கரும்புசோகையை 8 முதல் 10 செ.மீ. நீளமுள்ள துண்டுகளாக வெட்டி ஒவ்வொன்றும் 100 கிலோ எடையுள்ள 10 குவியல்களாகப் பிரித்து வைத்துக்கொண்டு பண்ணையில் ஓரமான நிழற்பாங்கான இடத்தில் 3 மீட்டர் என்ற பரப்பில் ஒரு குளியல் கரும்புச் சோகையைப் படுக்கையாகப் பரப்பி அதன்மேல் ஒரு பாட்டில் பிளிரோட்டஸ் காளான் வித்தைச்சீராகத்தூவி தண்ணீர் தெளிக்கவேண்டும் (60 சதம் நீர்ப்பதம் வரும் வரை). இதன்மேல் அடுத்த 100 கிலோ சோகையைப் படுக்கையாகப் பரப்பி 1 கிலோ யூரியாவைச் சீராகத் தூவி நீர் தெளிக்கவேண்டும். பின்பு மூன்றாவது படுக்கையைப் பரப்பி அதன்மேல் ஒரு பாட்டில் டிரைக்கோடெர்மா பூஞ்சானத்தைச் சீராகத் தூவி, தண்ணீர் தெளிக்கவேண்டும். இதே மாதிரி மாற்றி மாற்றிப் படுக்கைகளின் மேல் பிளிரோட்டஸ், யூரியா, டிரைக்கோடெர்மா என இட்டு அனைத்துப் படுக்கைகளையும் தயார் செய்து மேற்பரப்பில் 250 கிலோ எடையுள்ள வண்டல் மண்ணைச் சீராகப் பரப்பி தண்ணீர் தெளிக்கவேண்டும்.

பத்து நாட்களுக்கொரு முறை இந்தக் கம்போஸ்ட் குவியலை நன்கு கிளறிவிடுவதுடன் நீர் தெளித்தல் வேண்டும். நாற்பத்தைந்து நாட்களில் நன்கு மட்கிய உரம் தயாராகிவிடும். இதன் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து மேலும் கரிம தழைச்சத்து விகித அளவுகள் தொழு உரத்திற்கு நிகராக இருப்பதனால் நாம் குறைந்த செலவில் கம்போஸ்ட் உரம் தயார் செய்ய முடிகிறது.

**தென்னை நார்க்கழிவு உரம்:**

தென்னை நார்க்கழிவு பெரும்பாலும் நார்த் தொழிற்சாலைகளின் அருகே பெரும் குவியல்களாகக் குவிக்கப்பட்டு அந்த இடத்தையும் சுற்றுப்புறச் சூழ்நிலையையும் பெருமளவு பாதிக்கிறது. சுமார் 17 இலட்சம் டன் வரை தமிழகத்தில் உபயோகப்படுத்தப்படாமல் இருக்கின்றது. இவற்றை மக்கச் செய்து கழனியில் இயற்கை உரமாகப் பயன்படுத்தலாம்.

ஒரு டன் நார்க்கழிவை மக்கவைக்க 5 கிலோ யூரியாவும், 5 பாட்டில் பிளிரோட்டஸ் வித்தும் தேவைப்படுகின்றது. நிழலடியில் 5மீ x 5மீ பரப்புள்ள இடத்தில் 100 கிலோ நார்க்கழிவைச் சீராகப் பரப்பவேண்டும். அதன்மீது ஒரு பாட்டில் காளாண் வித்தினைத் தூவிவிடவேண்டும். பிறகு 1 கிலோ யூரியாவைத் தூவிவிட வேண்டும். பிறகு நார்க்கழிவு, பூஞ்சாண வித்து, நார்க்கழிவு யூரியா என்று மாற்றி மாற்றி 10 அடுக்குகள் தென்னை நார்க்கழிவைப் பரப்பிவிடவேண்டும்.

ஈரப்பதம் சுமார் 60 விழுக்காடு இருக்குமளவிற்குத் தண்ணீர் தெளிக்கவேண்டும். ஒரு மாதம் கழித்து, மக்கிய நார்க்கழிவு உண்டாகும். இதன் கொள்ளளவும் சுமார் பாதியாகக் குறைந்து பழுப்பு நிறத்திலிருந்து கரும் பழுப்பு நிறமாக மாறிவிடும்.

**மக்கிய தென்னை நார்க்கழிவு உபயோகிப்பதால் ஏற்படும் நன்மைகள்:**

- மண்ணின் பொது பொதுப்புத் தன்மை அதிகரிக்கிறது.
- மண்ணின் நீர்ப்பிடிப்பு வைக்கும் தன்மை அதிகரிக்கிறது.
- பயிர் விளைச்சல் சுமார் 20 விழுக்காடு அதிகரிக்கிறது.
- நீர் உபயோகிப்புத் திறன் அதிகரிக்கிறது.
- களர் உவர் நிலம் சீரமைக்க உதவுகின்றது.
- கரிசல் நிலங்களில் விரிசல் குறைகின்றது.
- மண்ணின் பௌதிகக் குணங்களை மேம்படுத்துகிறது.
- களைச் செடிகளின் அடர்த்தியைக் குறைக்கின்றது.
- நார்க்கழிவைக் கோழிப் பண்ணைகளில் சிறந்த தரை விரிப்பாகப் பயன்படுத்தும்போது கோழி எச்சத்தின் உரத் தன்மையை மேம்படுத்துகிறது.

**பார்த்தீனியம் நச்சுச்செடியை உரமாக்குதல்:**

பார்த்தீனியம் நச்சுக்களைச் சாகுபடி மற்றும் தரிசு நிலங்களில் கணிசமான அளவு வேகமாகப் பரவி பயிர் விளைச்சலைப் பாதிப்பதோடு மனிதனுக்கும், கால்நடைகளுக்கும் தீங்கு ஏற்படுத்துகிறது. மனிதனுக்குத் தோல், அரிப்பு, ஆஸ்துமா போன்ற வியாதிகளை உண்டாக்குகிறது.

பார்த்தீனியத்தை ஒழிக்க அதை மக்கச்செய்து உரமாக்குதல் ஒரு வழியாகும். பார்த்தீனியத்தில் கரிமம் நைட்ரஜன் விகிதம் 43 ஆக உள்ளது. இதைக் குறைக்கவேண்டும்.

பார்த்தீனியம் மக்கச் செய்ய மேடான, நிழலான இடத்தைத் தேர்ந்தெடுத்து, பார்த்தீனியம் செடியை 10-15 செ.மீ. அளவு வெட்டி 100 கிலோவை 515 மீட்டர் அளவு நிலத்தில் பரப்பிவிட வேண்டும். பின் மக்கச்செய்யும் நுண்ணுயிர்க்கலவை

(பிளிரோட்டஸ் டிரைகோடெர்மா) ஒரு குடுவை அளவில் அதன்மீது சீராகப் பரப்பிவிடவேண்டும். இதன்மேல் 100 கிலோ பார்த்தீனியம் செடி துண்டுகளைப் பரப்பிவிடவேண்டும்.

பிறகு இப்பரப்பின் மீது ஒரு கிலோ யூரியாவைச் சீராகத் தூவிவிட வேண்டும். இம்மாதிரி பார்த்தீனியம், நுண்ணுயிர்க்கலவை, பார்த்தீனியம் யூரியா என்று அடுக்குகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக்கொண்டே வரவேண்டும். சுமார் ஒரு மீட்டர் உயரம் வரை இவ்வாறு அடுக்கவேண்டும்.

ஈரப்பதம் 50 முதல் 60 விழுக்காடு வரை இருக்க, பூவாளி மூலம் நீர் தெளிக்கவேண்டும். கடைசியில் சிறிதளவு மண்கொண்டு மேலே பூசவேண்டும். மக்கும்பொழுது ஈரப்பதம் 50-60 விழுக்காடு இருக்கவேண்டும். மக்கிய பார்த்தீனியம் கம்போஸ்ட் 40 முதல் 50 நாட்களுக்குள் தயாராகிவிடும்.

தொழு உரத்தைக் காட்டிலும் பல மடங்கு அதிக அளவு உரச்சத்துக்கள் இவற்றில் உள்ளன. இரசாயன உரங்களோடு பார்த்தீனியம் கம்போஸ்ட் அளிப்பதன் மூலம் அதிகம் பயிர்விளைச்சலும் கிடைக்கும்.

**நகரக் கழிவுகளை உரமாக்குதல்:**

நம்நாட்டில் மிகப்பெரிய நகரங்களான கல்கத்தா, மும்பை, டெல்லி மற்றும் சென்னை ஆகியவை நாள் ஒன்றுக்கு சுமார் 2,000 டன் நகரக் கழிவுகளை வெளியேற்றுகின்றது. தற்பொழுது இக்கழிவுகள் கம்போஸ்ட் உரமாக மாற்றப்பட்டு விவசாயத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

சராசரியாக நகரத்தில் வாழும் தனிமனிதன் ஒருவன், நாள் ஒன்றுக்கு 750-1000 கிராம் கழிவினை உற்பத்தி செய்கின்றான். இவைகள் சமையலறைக் கழிவுகள் மற்றும் செல்லுலோஸ் நிறைந்த காகிதக் கூலங்களையே அதிகம் உள்ளடக்கியிருப்பதால் செல்லுலோஸை மக்கச் செய்யும் நுண்ணுயிர்களின் மேல் கவனம் செலுத்தப்படுகின்றது.

> **நிர்வாகப் படகில் ஏறி, தூய்மை என்னும் துடுப்பு கொண்டு - அதனை நேர்மையாக - வேகமாகச் செலுத்தி, இலட்சியக் குறியை அடைவோம்.**
>
> **- கலைஞர்**

ஒரு டன் நகரக் கழிவுகளை உரமாக மாற்ற 5 பாட்டில்கள் பிளிரோட்டஸ் சோஜா - காஜீ மற்றும் 5 கிலோ யூரியாவும் தேவைப்படுகின்றது. மண்புழுக்கள் நகரக் கழிவினை மட்கச்செய்து சிறந்த உரமாக மாற்றுகின்றன. இவ்வகையான உரங்கள் 'மண் தொழுஉரம்' என்று அழைக்கப்படுகிறது.

அங்கக கம்போஸ்ட் உரங்களின் நன்மைகள் மிகப்பல. இவற்றைத் தயார் செய்யும் முறைகளைத் தெரிந்துகொண்டு திறம்படச் செய்யும்போது நாம் குறைந்த செலவில் அதிகச் சத்துக்கள் மிகுந்த அங்கக உரங்களை நமது பண்ணையிலேயே தயார் செய்துவிடலாம். இதனால் எருக்களைப் பல இடங்களிலிருந்து பண்ணைக்கு எடுத்துவரும் செலவு குறைகிறது. இந்தக் கம்போஸ்ட் உரங்கள் தயார் செய்யப் பயன்படுத்தப்படும் நுண்ணுயிரிகள் (பாக்டீரியா மற்றும் பூஞ்சாணம்) கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள சுற்றுச்சூழல் பிரிவில் தயார் செய்து விற்கப்படுகின்றன. தேவையுள்ள விவசாயிகள் பேராசிரியர் மற்றும் தலைவர், சுற்றுச்சூழல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*தகவல்* : **மு. சாகுல்அமீது மற்றும் கு.இராமசாமி**
சுற்றுச்சூழல் அறிவியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை.

## தெரிந்து கொள்வோம்!

**முப்படைத் தளபதிகள் ஓய்வு பெறும் வயது**

தரை படை, கடற்படை, விமானப்படை ஆகிய முப்படைகளின் தலைமைத் தளபதிகள் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பது பற்றி மத்திய அரசு பரிசீலித்துவந்தது. தற்போது முப்படைத் தளபதிகளும் 60 வயதில் அல்லது 3 ஆண்டு பதவி வகித்ததும் ஓய்வு பெறுகிறார்கள். இந்த நிலையில் முப்படைத் தளபதிகளின் ஓய்வுபெறும் வயது 62ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, 62 வயதை அடைந்தாலோ அல்லது 3 ஆண்டு பணி முடித்த உடனேயோ, முப்படைத் தளபதிகள் ஓய்வு பெறுவார்கள்.

**ரஷியாவில் இந்தியர் சாதனை**

இந்தியாவைச் சேர்ந்தவர் உதய் மகாதேவ் டால்வாகன் (வயது 39). ரஷியத் தலைநகர் மாஸ்கோவில் உள்ள இந்தியத் தூதரகத்தில் பணியாற்றுகிறார். இவ்ரது பொழுதுபோக்கு, டைப்ரைட்டர் மூலம் ஓவியங்கள் வரைவது ஆகும்.

தற்போது அதுவே இவர் கின்னஸ் சாதனையாளர் வரிசையில் இடம்பெற உதவி உள்ளது.

டைப்ரைட்டர் மூலம் இவர் வரைந்த லதாமங்கேஷ்கர் உருவப் படம் இவரை உலகப் புகழ் பெறச் செய்துவிட்டது. 21 அடி 4 அங்குலம் நீளமும், 13 அடி 3 அங்குலம் அகலமும் உள்ள அந்த ஓவியத்தை வரைந்து முடிக்க இவருக்கு 236 மணி நேரங்கள் பிடித்ததாம். டைப்ரைட்டர் கருவியில் காகிதத்தை நகர்த்தாமலே ஓவியம் வரையும் திறமை படைத்தவர் இவர். காந்தி, நேரு, ராதாகிருஷ்ணன், டால்ஸ்டாய், லெனின், ஸ்டாலின் ஆகியோரது உருவப் படங்களையும் வரைந்து உள்ளார் இவர்.

**ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த ஊனமுற்ற நீச்சல் வீரர்**

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த நீச்சல் வீரர் ஜான்மேக்லின். 36 வயது நிரம்பிய இவர் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு டிரையத்லான் போட்டிக்குப் பயிற்சி செய்துகொண்டிருந்தார். அப்போது பின்னால் வந்துகொண்டிருந்த லாரி இவர் மீது மோதியது. இதில் அவருடைய கால்கள் செயல் இழந்துவிட்டன.

இந்த நிலையில் ஆகஸ்டு 14ஆம் தேதி ஆங்கிலக் கால்வாயைக் கடக்கும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் அப்போது மோசமான தட்பவெப்பம் இருந்ததால் அந்த முயற்சியைத் தள்ளிவைத்தார்.

பின்னர் மீண்டும் ஆங்கிலக் கால்வாயைக் கடக்க முயற்சி மேற்கொண்டார். அதன்படி 12 மணி நேரத்தில் அந்தக் கால்வாயைக் கடந்து சாதனை படைத்தார். கால் ஊனமுற்ற வீரர் ஒருவர் ஆங்கிலக் கால்வாயைக் கடந்து சாதனை படைப்பது இதுதான் முதல் முறையாகும்!



# மத வேற்றுமைகளைக் கடந்து நல்லிணக்கம் காணுவோம்!

**- முதலமைச்சர் கலைஞர்**



"மத நல்லிணக்கம் காணவும், மாநில உரிமைகளை நியாயமாகப் பெறவும், தீண்டாமை என்னும் தீயை அணைக்கவும் ஐந்து கட்சிகளைக் கொண்ட செயல்வீரர்கள் ஓடி ஆடி உழைத்து, மிகச்சிறப்புற, சீருற, ஏற்றமுற, எழுச்சியுற நடத்திக்கொண்டிருக்கின்ற இந்த மாநாட்டில் பல்லாயிரக்கணக்கில் குழுமியிருக்கின்ற உங்களையெல்லாம் காணுகிற நல்ல வாய்ப்புப் பெற்றமைக்காக மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். பெருமையடைகிறேன். ஐந்து கட்சிகள் இன்றைக்கு ஒரே மேடையில். ஐந்து கட்சிகள்தானா? போதுமா? என்று யாராவது கேட்டால், அவர்களுக்கு நான் சொல்கிற பதில் - கையிலிருப்பது ஐந்து விரல்கள்தான்.

அந்த ஐந்து விரல்களையும் மடக்கினால் முஷ்டியாகும். முஷ்டி - தீண்டாமையை, மதவெறியை, மாநில உரிமைகளைத் தடுக்கின்ற சக்திகளைக் குத்துகின்ற முஷ்டி. குத்தி வெற்றி பெறுகிற முஷ்டி. ஐந்து விரல்களும் மடங்கினால் முஷ்டியாகும். அடுத்தடுத்து கட்சிகள் வந்தால் பத்தானால் என்ன செய்வது? பத்து விரல்கள் இரண்டு குத்து. இந்த விபரீதங்களை வீழ்த்துவதற்குத் தீண்டாமையை வீழ்த்துவதற்கு, மதவெறியை வீழ்த்துவதற்கு, மாநில உரிமைகளைப் பெறுவதற்கு, அதற்கான தொடக்கமாக மதுரை மாநகரில் இந்த ஐந்து கட்சிகளுடைய மாநாடு இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மத நல்லிணக்கத்தைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய அனைவரும் வெகு விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

**இந்துக்களும் முஸ்லிம்களும் இணைந்து நடத்திவரும் பேரணி**

ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். மத ஒற்றுமையை வளர்க்கின்ற வகையில், Phool Walon Ki Sair என்று அழைக்கப்படுகின்ற பூக்காரர்களுடைய பேரணி ஒன்று ஆண்டுதோறும், புதுடெல்லியில் நடத்தப்பட்டு வருகின்றது. அந்தப் பேரணிக்குப் பெயர் அந்த மொழியில் சொல்லவேண்டுமானால் பூல் வாலோன் கி சாயர், பூக்காரர் பேரணி ஒவ்வொரு ஆண்டும் புதுடெல்லியில் இப்போது நடத்தப்படுகின்றது. இந்த விழா மொகலாயர் காலத்திலிருந்து நடத்தப்பட்டு வருகின்ற விழாவாகும். டெல்லிக்கு அருகிலுள்ள மெஹ்ருலி என்ற கிராமத்தில் நடத்தப்படும் சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த விழா இந்து முஸ்லிம் ஒற்றுமையைக் கருதியும், தேசிய ஒருமைப்பாடு மற்றும் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையிலும், பேரரசர் அக்பர் அவர்களால் (கி.பி.1556-1605) துவக்கி வைக்கப்பட்டது.

இந்த விழாவில் முஸ்லிம்களும், இந்துக்களும் சகோதர உணர்வுடன் தங்களுக்கிடையில் எந்தவித வேறுபாடுகளும் இல்லாமல், மத ஒற்றுமையுடனும் பெருமளவில் கலந்துகொள்வார்கள். இவ்வாறு மிக ஒற்றுமையோடு இந்துக்களும், முஸ்லிம்களும் கலந்துகொண்டு விழா எடுப்பதைக் குலைத்திடும் வகையில், வஞ்சக எண்ணத்தோடு 1942ஆம் ஆண்டு பிரித்தாளும் சூழ்ச்சி கொண்ட ஆங்கிலேய அரசு அந்த விழாவையே தடை செய்தது. இந்துக்களும், முஸ்லிம்களும் ஒருசேர எடுத்த விழாவை 42-ஆம் ஆண்டு வெள்ளைக்கார சர்க்கார் தடை செய்தது.

அதற்குப் பிறகு சுதந்திரம் பெற்றதும் 1961-ஆம் ஆண்டு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்து முஸ்லிம்

ஒற்றுமையினை மேன்மேலும் வளர்க்கக் கருதி, தடை செய்யப்பட்ட அந்தப் பூக்காரர் பேரணிக்குப் புத்துயிர் ஊட்டினார்.

இந்துக்களும், முஸ்லிம்களும் அவரவர்களது மத உணர்வைப் பேணி அவரவர் மத உணர்வுகளுடனேயே ஒற்றுமையாக இணைந்து கொண்டாடும் ஒரே விழா இந்த மலர்ப் பேரணி விழாவாகும்.

பழம்பெருமை மாறாமல், அதன் மரபுகள், முறைகள் அப்படியே இன்றைக்கும் அந்த விழாவிலே கடைப்பிடிக்கப் பட்டு வருகின்றன.

விழா நாளன்று இந்துக்களும், முஸ்லிம்களும் - முஸ்லிம்கள் தர்க்காவிலிருந்தும்; இந்துக்கள் காளிகோவிலில் இருந்தும் அணி வகுத்து ஒன்றாகச் சென்று இறைவனைப் பிரார்த்தித்து நலம் வேண்டுவார்கள்.

இந்து முஸ்லிம் இணைந்து செல்லும் இந்தப் பேரணியின் முன்னால் வனப்பு மிக்க வெல்வெட்டால் அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த வண்ணப்பூக்களால் அலங்கரிக்கப்பட்ட பெரிய விசிறிகள் (பங்கா) எழிலோடு எடுத்துச் செல்லப்படும்.

இதைத் தொடர்ந்து கலைக்குழுவினர் கலை நிகழ்ச்சிகள் நடத்தியபடியே செல்வார்கள்.

இந்த மலர் விசிறிகள் புதுடெல்லி மெஹ்ரூலியில் உள்ள அக்பர் காலத்திய முகாலாயக் கோட்டைக்கு எடுத்து வரப்படுகின்றன.

ஆண்டுதோறும் நடைபெறும் இந்த விழாவிற்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் தங்கள் பங்காக்களையும், அதற்குரிய விசிறிகளையும் கலைக் குழுக்களையும் அனுப்பி பங்கேற்கச் செய்கின்றார்கள்.

ஒருவார காலம் நடைபெறும் இந்த விழாவில், இறுதி நாளன்று கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

1961-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு பங்காக்கள் மற்றும் கலைக்குழுக்களை அனுப்பி, இந்த விழாவிலே பங்கேற்கச் செய்கின்றது. சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பங்காவுக்கும் கலை நிகழ்ச்சிக்குமெனப் பெரும்பாலான ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்குப் பரிசுகள் கிடைத்திருக் கின்றன.

கடந்த ஆண்டுகூட இந்தப் பூக்காரர் பேரணியில், இரண்டு பங்காக்கள் எடுத்துச் செல்லப்பட்டு - அதிலும் குறிப்பாக மதுரையைச் சேர்ந்த டாக்டர் சோமசுந்தரம் குழுவினரின் கலைநிகழ்ச்சியும் நிகழ்த்தப்பட்டது.

இந்தக் கலை நிகழ்ச்சிக்கு மதுரை சோமசுந்தரத்திற்கு முதல் பரிசும், அந்தக் கலைக்குழுவை அனுப்பியதற்காக முதலமைச்சர் என்ற முறையிலே எனக்கு டெல்லி மாநில ஆளுநர் மற்றும் முதலமைச்சர் பாராட்டுக் கடிதமும் கிடைத்தது.

இந்த ஆண்டும் அக்டோபர் 11-ஆம் நாள் பூக்காரர் பேரணி புதுடெல்லியில் நடைபெற உள்ளது. இந்த விழாவிலே கலந்துகொள்ள இந்த ஆண்டும் கலைக்குழுவை அனுப்ப கோரிக்கை அனுப்பி நமக்கு அங்கிருந்து செய்தி வந்துள்ளது. அந்தக் கோரிக்கையை ஏற்று, அந்தக் கலைக்குழுவை அங்கே அனுப்பவும் இந்துக்களும், முஸ்லிம்களும் ஒன்றாகச் சேர்ந்து அந்தப் பூக்காரர் பேரணியை நடத்தவும், அதற்கென்று தமிழக அரசின் சார்பாக 55 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதை இங்கே தெரிவிப்பதன் காரணம் - அக்பர் காலத்திலேயே இந்துக்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையாக இருந்திட வேண்டும் என்கின்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அதற்காக இந்தப் பூக்கார விழா ஏற்பாடு செய்யப்பட்டு, அது இடைக்காலத்தில் வெள்ளைக்கார சர்க்காரால் தடை செய்யப்பட்டு, நேரு பெருமான் இந்தியாவின் பிரதமர் பொறுப்பை ஏற்றிருந்த காலத்தில், 61-ஆம் ஆண்டு முதல் மேலும் தொடர்ந்து நடத்தப்பெற்று, இப்பொழுதும் நடைபெற்று வருகின்ற விழாவாகும்.

ஆனால், டெல்லியில் மாத்திரம் இந்த விழா நடத்தப்படுகின்றது. இந்தப் பூக்காரர் விழாவை ஒவ்வொரு மாநிலத்தின் தலைநகரத்திலும் நடத்தவேண்டும். தமிழ்நாட்டில் சென்னை தலைநகரத்திலே மாத்திரமல்ல, மதுரை நகரத்திலும், திருச்சியிலும் நடத்தவேண்டும். இப்படி இந்துக்களும், முஸ்லிம்களும் மத வேற்றுமை இல்லாமல் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள் என்றாலும், மன ஒற்றுமையுடன் பழகுகிற அந்த உணர்வு வளர்ந்திட வேண்டும்.

**விநாயகர் ஊர்வலத்தை வரவேற்ற முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும்**

பத்திரிகைகளில் ஒரு செய்தி பார்த்தேன், நம்முடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் நல்லக்கண்ணு குறிப்பிட்டதைப் போல, விநாயகர் சதுர்த்தி விக்னேஸ்வரர் ஊர்வலம் பல இடங்களில் நடைபெற்ற நேரத்தில், நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். காயல்பட்டிணம் - அது முஸ்லிம்கள் மாத்திரமே வாழ்கின்ற நகரம். நான் பலமுறை அந்த ஊருக்குச் சென்றிருக்கிறேன். பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் பெருமக்கள் அங்கு வாழ்கின்றார்கள். அந்தப் பகுதியில் விநாயகர் ஊர்வலம் சென்றபோது, முஸ்லிம் பெருமக்களும், தாய்மார்களும், பெரியோர்களும் அந்த ஊர்வலத்தை வரவேற்று மாலை மரியாதை செய்து தங்களது ஆதரவை, வரவேற்பை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

காயல்பட்டினத்தில் மாத்திரமல்ல; பழனியிலே அந்த விநாயகர் ஊர்வலத்தில் முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்திருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், கோவையை அடுத்துள்ள பல்லடத்தில் இந்த விநாயகர் ஊர்வலம் வந்தபோது, அந்தப் பகுதியில் உள்ள கிறிஸ்துவப் பெருமக்கள், இஸ்லாமியப் பெருமக்கள், பெரியவர்கள் இளைஞர்கள் இவர்கள் எல்லாம்





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30.8.1998 அன்று தேனி மாவட்டம் - பெரியகுளம் அருகில் உள்ள சோத்துப்பாறை நீர்த்தேக்கத்தின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டார்.

கூடி நின்று அந்த ஊர்வலத்தை வரவேற்று, வந்தவர்களோடு நல்ல முறையிலே பழகி, பாராட்டி மகிழ்ந்து களித்திருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது.

இது, சிலருக்கு கடவுளை வணங்கினார்களா ? அந்த மதத்தின் கடவுளை வணங்கினார்களா ? என்று கேள்வி எல்லாம் எழுப்பக்கூடும். இரு மதத்தாரும் ஒரு கடவுளை வணங்கினார்கள் என்று அதைக் கருணாநிதி வரவேற்றுப் பேசலாமா என்று கேட்கக்கூடும்.

நான் நாத்திகன், ஆத்திகன் என்பதை இரண்டாவதாக வைத்து - நாத்திகரோ, ஆத்திகரோ அவர்கள் இருவரும் ஒன்றாக இருக்கிறார்களே என்பதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். விநாயகர் சதுர்த்தியை இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் வரவேற்று மகிழ்வதும், அதைப்போலவே அடுத்து ஒருநாள் இஸ்லாமியப் பண்டிகையில் இந்துக்கள் கலந்துகொள்கிற நிலைமை ஏற்படுவதும், முன்னுக்குப்பின் முரண் என்று யாராலும் கூறமுடியாது.

நாம் இங்கு பேசிக்கொண்டிருக்கிறோமே மத நல்லிணக்கம். அங்கு நல்லிணக்கத்திற்கு ஏற்ற ஒரு வழி என்பதை இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மத நல்லிணக்கம் இன்று நேற்றல்ல; எத்தனையோ வேறுபாடுகளுக்கிடையே எப்படியெல்லாம் வளர்ந்து வலுப்பெற்றது என்பதை திரு.வி.க.அவர்கள் இளைஞர்களுக்கு... என்று எழுதிய ஒரு கட்டுரையிலே குறிப்பிடுகிறார்.

**தமிழ்த்தென்றல் திரு.வி.க.வின் வேதனை வினா**

அவர் சொல்கிறார்: "தமிழன் யார் ? தொன்றுதொட்டுத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவரும், தமிழ்நாட்டில் குடியேறி நிலைத்து வாழ்வு பெற்றவரும் தமிழராவர் என்று கூறலாம். இவருள் சைவரிருக்கலாம்; வைணவரிருக்கலாம்; அருகரிருக்கலாம்; (அருகர் என்பது ஒரு மதம்), புத்தரிருக்கலாம்; ஆத்திகரிருக்கலாம்; நாத்திகரிருக்கலாம். இவரனைவரும் தமிழர் என்பதை மட்டும் மறத்தலாகாது. ஈண்டுச் சங்கத்தார் காலநிலை நினைவிற்கு வருகிறது. அவர் அனைவரும் ஒரு கொள்கையுடையவரல்லர். அதாவது சங்கத் தமிழ்க்காலம், அந்த சங்க காலம் நினைவுக்கு வருகிறது. சங்க காலத்திலே உள்ள அனைவரும் ஒரே கொள்கை உடையவர் அல்லர். அவருள் சைவர், வைணவர், அருகர், புத்தர் முதலியோரிருந்தனர். அவரனைவருஞ் சகோதர நேயத்துடன் வாழ்ந்து போயினர். காரணமென்ன ? அவர்தங் கருத்து, சமய வேற்றுமை மீதும், பிற வேற்றுமை மீதும், சென்றதில்லை. அவர் தம்மைத் தமிழர் - சகோதரர் - என்று எண்ணி, ஒருமையுள்ளங்கொண்டு, தமிழ்த் தாய்க்குச் சேவை செய்தனர். சேரன் செங்குட்டுவன், இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார் இவர் மூவரும் ஒரு சமயக் கொள்கையுடயவரா ? இல்லை. ஒருவர் சைவர்; மற்றொருவர் அருகர்; இன்னொருவர் புத்தர்; இவர்களுக்குள் எத்தகைய ஆன்மநேய ஒருமைப்பாடு நிலைத்திருந்தது.

தமிழ் மாணாக்கர்களே! சிந்தியுங்கள், சேரன் செங்குட்டுவனும், இளங்கோவடிகளும், ஒரே தாயின் வயிற்றில் பிறந்த சேய்கள். ஆனால் அவர்கள் வெவ்வேறு சமயக்கொள்கையுடையவர்களாக வாழ்ந்தனர். அவரிடையே எறி,' பகை, பூசல் இருந்தனவா ? ஆன்ம நேயமன்றோ ஊடுருவியிருந்தது ? உண்மைத் தமிழன்புக்கு முன், சிறு சிறு வேற்றுமைகளெல்லாம் ஞாயிறு முற்பட்ட பனிப்படலம் போலாகும். அவரைப் போல் ஏன் இக்காலத் தமிழர் வாழ்தலாகாது ?'' என்று இன்று இக்காலத் தமிழர்களைப் பார்த்துக் கேட்கின்றார். சங்க காலத்தில்

இருந்து எவ்வளவோ வேற்றுமைகளுக்கிடையே இருந்து ஒற்றுமையோடு தமிழர்கள் வாழ்ந்தார்களே! அந்த வாழ்க்கையை இன்று எப்படி வாழ மறந்தார்கள்?'

- என்று தமிழ்த் தென்றல் திரு.வி.க.கேட்கிறார்.

அவர் கேட்டுப் பல ஆண்டு காலமாகிவிட்டது. ஆனால் இன்னமும் நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த மேடையிலே நானும் மற்றும் நான்கு இயக்கங்களுடைய தலைவர்களும் இதைத்தான் இன்றைக்குக் கேட்கிறோம். இன்னமும் கிராமப்புறங்களில் தீண்டாமை தலைவிரித்தாடுகிறதே! இது நியாயம்தானா? என்று கேட்கிறோம். நாகரிகத்தின் வளர்ச்சிப் பகுதிகள் என்று குறிப்பிடுகிற நகர்ப்புறங்களில்கூட தீண்டாமை இன்னும் தீர்ந்தபாடில்லையே என்ன காரணம்? என்று காரணத்தை அறிய விரும்புகிறோம். அதை வீழ்த்துவதற்கு நாம் எடுக்கின்ற முயற்சிதான் இந்த மாநாடு. மதுரையில் ஒரு மாநாடு நடத்திவிட்டால் மத நல்லிணக்கம் வந்துவிடுமா? தீண்டாமை ஒழிந்துவிடுமா? மாநில அதிகாரங்கள் குவிந்துவிடுமா? என்று யாராவது கேட்பார்களானால் அதற்காகத் தொடங்காமலே இருந்துவிடலாமா என்ற கேள்வியைத்தான் நாம் கேட்கவேண்டும். நாம் தொடங்குவோம்; தொய்வு ஏற்படாமல் தொடங்குவோம் - அதைத்தான் என்னுடைய அருமை நண்பர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் சங்கரய்யா இங்கே பேசும்போது குறிப்பிட்டார்.

"நான் கருணாநிதியைச் சந்தித்துப் பேசினேன். திரு.மூப்பனாரை சந்தித்துப் பேசினேன். அவர்களெல்லாம் இணக்கமாக இருக்கிறார்கள்" என்று சங்கரய்யா குறிப்பிட்டார். "எல்லோரும் சேர்ந்து இந்தப் பிரச்சினையில் வெற்றி காண உங்கள் கொள்கையிலே வெற்றிகாண, பயணம் போவோம்" என்று குறிப்பிட்டார்கள். அந்தப் பயணத்திற்குத் தி.மு.கழகமும் தயாராக இருக்கிறது என்பதை நான் இங்கே உறுதிபட எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

அவரே இங்கே எடுத்துச் சொன்னதைப் போலத் தி.மு.கழகம் என்கின்ற இந்த இயக்கம் திராவிட இயக்கத்தினுடைய ஒரு கூறு. தந்தை பெரியார் அவர்கள் சாதியை வீழ்த்த, மதவெறியை மாய்க்க போர்க்கோலம் பூண்டவர். அணுகுமுறையில் மாத்திரம் சிறு மாற்றங்களைச் செய்துகொண்டு எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களை வழி நடத்தியவர். எனவே எங்களைப் பற்றி இந்தப் பிரச்சினையிலே உள்ள கொள்கை உறுதியைப் பற்றி சங்கரய்யா அவர்களானாலும், நம்முடைய நல்லக்கண்ணு அவர்களானாலும், நம்முடைய வடிவேலு அவர்களானாலும், திரு.மூப்பனார் அவர்களானாலும் மிக நன்றாக அறிவார்கள். எனவே உறுதியோடு நடைபோட உங்களோடு வரத் தயாராக இருக்கிறோம்.

மத நல்லிணக்க மாநாட்டோடு இணைக்கப்பட்டுள்ள மாநிலங்களுக்கு உரிமைகளைப் பற்றியும் மிகக் கடுமையாக வீராவேசமாக நம்முடைய தோழர் சங்கரய்யா அவர்கள் இங்கே முரசு கொட்டியிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி கலைக்கப்பட்டு விடும் என்றெல்லாம் பயமுறுத்தப்படுகின்ற நேரத்திலே எழும்புகின்ற கோஷமல்ல - மாநில சுயாட்சிக் கோஷம்.

நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்து, 1969ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் சில வாரங்களுக்கெல்லாம் டெல்லிக்குச் சென்றேன். டெல்லியில் 69 மார்ச்சுத் திங்கள் 17ஆம் தேதி - ஐம்பதுக்கு மேற்பட்ட இந்திய மாநிலங்களிலே உள்ள பல்வேறு பத்திரிகைச் செய்தியாளர்கள் - என்னைச் சந்தித்து 'உங்களுடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார்களே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் - அதைப்பற்றி என்ன செய்யவிருக்கிறீர்கள்' என்று கேட்டபோது - நான் அவர்களுக்கு அளித்த பதில்தான் - "மைய - மாநில உறவுகள் குறித்து ஆராய்ந்து மைய அரசிலிருந்து மாநிலங்களுக்கு மாற்றப்படக் கூடிய அதிகாரங்களைப் பரிந்துரைப்பதற்காக நிபுணர் குழு ஒன்றினை அமைப்பதுபற்றி நான் ஆலோசித்துவருகிறேன்" என்று குறிப்பிட்டேன்.

குறிப்பிட்டது மாத்திரமல்ல; டெல்லியிலிருந்து திரும்பியவுடன் 1969 ஆகஸ்ட் 19ஆம் நாள் டாக்டர் பி.வி.இராஜமன்னார் அவர்களைத் தலைவராகவும், டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் அவர்களையும், சந்திரா ரெட்டி அவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட மூவர் குழு ஒன்றை அரசின் சார்பில் அமைத்தேன்.

## மாநில சுயாட்சித் தீர்மானத்தை ஆதரித்தது மார்க்சிஸ்ட் கட்சி

அந்தக் குழுதான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும். என்னென்ன வகையிலே அளிக்கப்பட வேண்டும் என்பதை ஆராய்ந்து ஒரு நீண்ட அறிக்கையைத் தந்தது. அந்த அறிக்கையை முரசொலிமாறன், இரா.செழியன் இருவர் தலைமையிலே இயங்கிய குழு ஆராய்ந்து அதை அமைச்சரவையிலே வைத்து விவாதித்து, 1974ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையிலே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும், மாநில சுயாட்சி வேண்டும், 356வது பிரிவு அறவே அகற்றப்பட வேண்டும் - அரசியல் சட்டத்திலிருந்து; என்ற இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்தபோது அதை ஆதரித்த கட்சி அன்றைக்கு சட்டப்பேரவையிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்வேன்.

இதிலே ஒரு வரலாற்று உண்மையை யாரும் மறந்துவிடக் கூடாது. இந்திய சுதந்திரத்திற்கு முன்பே தோழர் ரணதிவே தலைமையிலே நடைபெற்ற - அன்றைக்குக் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றாக இருந்த அந்தக் காலக்கட்டத்திலே - இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி - மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும். மாநில சுயாட்சி வேண்டும் என்பதை வலியுறுத்தி தீர்மானத்தை நிறைவேற்றிய கட்சிதான்.



அது மாத்திரமல்ல; இந்திய சுதந்திரத்திற்கு முன்பு அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி கூட - நேரு பெருமான் தலைமையிலே இருந்த காங்கிரஸ் கட்சி மாநில சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்ற கொள்கையை ஒத்துக்கொண்ட கட்சிதான்.

அதற்குப் பிறகு சில மாற்றங்கள் காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுவிட்டன. எனவே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தருகின்ற அந்தக் கொள்கையிலே தளர்ச்சி ஏற்பட்டது. ஆனால் அன்று முதல் இன்று வரை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் திராவிட முன்னேற்றக் கழகமும் இன்றைக்குத் தமிழகத்திலே உருவாகி வளர்ந்துவருகிற - வளர்ந்து வந்திருக்கின்ற நம்முடைய மூப்பனார் தலைமையிலே உள்ள தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், ஜனதா தளமும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற இயக்கங்களாகும்.

## சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மாநில சுயாட்சித் தீர்மானம்

74-ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையிலே இராஜமன்னார் குழு அந்த அறிக்கையின் அடிப்படையில் ஒரு தீர்மானத்தை நான் முன்மொழிந்து சட்டப்பேரவையிலே அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம் இதுதான்:-

"மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் பற்றியும் தமிழ்நாடு அரசின் கருத்துரைகளையும், இராஜமன்னார் குழுவினர் அறிக்கையையும் இப்பேரவை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, பல்வேறு மொழி, நாகரீகம், பண்பாடு ஆகியவைகளைக் கொண்ட இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக்காக்கவும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில ஆட்சிகள் தடையின்றிச் செயல்படவும்.

மாநில சுயாட்சி பற்றியும், இராஜமன்னார் குழுவின் பரிந்துரைகள் மீதும் தமிழ்நாடு அரசு அளித்திருக்கும் கருத்துக்களை மத்திய அரசு ஏற்று - மத்தியில் கூட்டாட்சி, மாநிலங்களில் சுயாட்சி கொண்ட உண்மையான கூட்டாட்சி முறையை உருவாக்கும் அடிப்படையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும் என்று இப்பேரவை முடிவு செய்கிறது" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

- என்று 74-ஆம் ஆண்டு 16.4.74 அன்று சட்டப்பேரவையிலே என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அன்றைய இந்தியப் பிரதமர் அன்னை இந்திராகாந்தி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

அதற்கு முன்பே இராஜமன்னார் குழுவின் அறிக்கையைப் பிரதமர் இந்திராகாந்திக்கு 71-ஆம் ஆண்டு நான் அனுப்பி வைத்தபோது, அதைப் பெற்றுக்கொண்ட பிரதமர் இந்திராகாந்தி 1971-ஆம் ஆண்டு நான் அனுப்பிவைத்தபோது, அதைப் பெற்றுக்கொண்ட பிரதமர் இந்திராகாந்தி 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22ஆம்தேதி எனக்கு எழுதிய கடிதத்தில் -

Dear Thiru Karunanidhi

I have received your letter of the 15th June with which you have sent me a copy of the report of the Centre-State-Relations Inquiry Committee. Your Government will probably examine the recommendations of this report. As you know the Administrative Reforms commission also went into the question and has already submitted a report which is under our consideration. If the views of your Government on this matter are made available to us, they will also be taken into account. These are important issues and we intend to consult all the Chief Ministers.

With regards,

Yours Sincerely,

(Sd.) INDIRA GANDHI

அன்புள்ள திரு. கருணாநிதி

நீங்கள் ஜூன் 15-ஆம் தேதி அனுப்பிய கடிதம் கிடைத்தது. மத்திய மாநில உறவுகள் ஆய்வுக்குழுவின் அறிக்கையின் நகல் ஒன்றைக் கடிதத்துடன் அனுப்பியுள்ளீர்கள். அறிக்கையின் பரிந்துரைகளை உங்களது அரசாங்கம் ஆய்வு செய்யுமென்று எண்ணுகிறேன். நிர்வாகச் சீரமைப்புக் குழுவும் இப்பிரச்சினை பற்றி ஆராய்ந்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். அக்குழு அளித்துள்ள அறிக்கை எங்களது ஆய்வில் உள்ளது. இது குறித்து உங்கள் அரசின் கருத்துக்களையும் அனுப்பி வைத்தால் அவற்றையும் சேர்த்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்வோம். இவை முக்கியமான பிரச்சினைகள் என்பதால் எல்லா முதலமைச்சர்களுடன் இதுகுறித்து கலந்து ஆய்வு செய்ய எண்ணியுள்ளோம்.

தங்கள் அன்புள்ள,

(ஒம்) இந்திரா காந்தி

- என்று 71-ஆம் ஆண்டு எனக்குப் பதில் அனுப்பினார்கள்.

ஆனால் அதற்குப் பிறகு சர்க்காரியா கமிஷன் குழு என்று மத்திய மாநில உறவுகளைப் பற்றி ஆராய்ந்திட ஒரு குழுதான் போடப்பட்டதே தவிர, அரசியல் சட்டத்திலே ஒரு புதிய மாற்றத்தைக் கொண்டுவந்து மாநிலங்களுக்கு அதிக

அதிகாரங்களை அளிக்கவேண்டுமென்ற அந்தக் கொள்கையை நிறைவேற்ற இன்னமும் இடையிலே வந்த மத்திய அரசுகளும் சரி, இன்றைக்கு இருக்கின்ற மத்திய அரசும் சரி - முன்வரவில்லை என்பதுதான் நம்முடைய ஆதங்கம்.

அந்தக் காரணத்தினால்தான் இங்கே மத நல்லிணக்கம், தீண்டாமை ஒழிப்பு என்ற தீர்மானங்களோடு மிக முக்கியமான - மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற கருத்தமைந்த - மாநில சுயாட்சி என்கின்ற பெயரில் இல்லாவிட்டாலும் அந்தக் கருத்து அமைந்த தீர்மானத்தை இங்கே நிறைவேற்றியிருக்கிறோம்.

**மாநில சுயாட்சித் தத்துவம் பற்றி அண்ணா விளக்கம்**

மாநிலங்கள் இன்றைக்கு எப்படி இருக்கின்றன? என்பதைப்பற்றிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நினைவுபடுத்த விரும்புகிறேன் -

"நமக்கிருக்கிற கவலை எல்லாம் தூக்கமுடியாத பாரத்தை மத்திய ஆட்சியினர் விரும்புகிறார்களே என்பதுதான்.

மத்திய அரசின் வலிவு என்பது மாநிலங்கள் ஒவ்வொன்றின் தனித்தனி வலிவையும் கூட்டியதால் ஏற்பட்ட மொத்த வலிவுதான் என்றால் வாதத்திற்கு ஏற்றது, அரசியலுக்கு நல்லது, காரியத்திற்கும் உகந்தது.

ஆனால், மத்திய அரசுதான் எல்லா உரிமைகளையும், பலத்தையும் வைத்திருக்கும், மாநிலங்கள் தத்தித் தத்தி நடக்கும் அதிகாரம்தான் வைத்திருக்கும் என்றால் அது எதற்கும் பொருத்தமுடையதல்ல.

மாநில அதிகாரங்களை எல்லாம் எடுத்து மத்திய அரசு குவித்து வைத்துக்கொள்வதால் மாநிலங்கள் பலகீனமடையும் என்பது மட்டுமல்ல, மத்திய அரசுக்கென்று புதிய வலிவு ஏதும் ஏற்பட்டுவிடாது.

நாட்டுப் பாதுகாப்பு தவிர, மற்ற அதிகாரங்கள் அனைத்தையும்பற்றிச் சிந்திப்போம். மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களை மாநிலங்கள் எடுத்துக் கொள்ளட்டும். பின்னர் மாநிலங்கள் விரும்பித் தருகின்ற மீதியுள்ள அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொள்ளட்டும்.

மக்களின் சுகதுக்கத்தோடு பின்னிப் பிணைந்திருப்பது மாநில அரசு தானே தவிர - மத்திய அரசு அல்ல. ஆகவே வலிவான மத்திய அரசுதான் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பது தவறு. மாநில சுயாட்சி தரத் தயக்கம் காட்டுவார்களேயானால் அளவுக்கு மீறிய அதிகாரங்களைத் தாங்கித் தாங்கிப் பாதுகாப்புப் போன்ற பெரிய விஷயங்களில் சோடை போய்விடுவார்களோ என்பதுதான் எங்கள் சந்தேகம்.

மேல் அதிகாரம் அனைத்தும் டில்லியில் இருப்பதை மாற்றிடத்தான் மாநில சுயாட்சித் தத்துவம் பிறப்பித்துள்ளது".

- என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அந்த அடிப்படையிலேதான் நடைபோடுகின்றோம். அதற்கேற்ற வகையில்தான் இங்கே இந்த மாநாட்டில் ஒரு அருமையான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

*- மதுரையில் 29.8.1998 அன்று நடைபெற்ற*
*மத நல்லிணக்க மாநாட்டில்*
*முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.*


# த மி ழ ர சு

படிக்க... பயன்பெற... பாதுகாக்க...

சந்தா விவரம்

"தமிழரசு" தமிழ்

(மாதம் இருமுறை)

ஆண்டுச் சந்தா.... ரூ.72

"தமிழரசு" ஆங்கிலம்

(மாதம் ஒருமுறை)

ஆண்டுச் சந்தா.... ரூ.36

சந்தாத் தொகையை -

மணியார்டர் அல்லது

பாங்க் டிராப்ட் மூலம்

*அனுப்ப வேண்டிய முகவரி :*

துணை இயக்குநர் (வெ)
"தமிழரசு" அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை,
சென்னை - 600 002.



*ஆசிரியரும் வெளியிடுபவரும் : க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.*
*சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.*
*தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002.*
*தொலைபேசி : 568926,568927,564906*





தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்





பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு




# தமிழரசு

செப்டம்பர் 1–15, 1998 ரூ.3





**நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.**

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு, நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98




## இந்த இதழில்...


- தொழில்துறையில் தனி முத்திரை பதித்துவருகிறது தமிழ்நாடு ..... 2
- அரசு ஆணைகள் ..... 4
- நேர்மையான நிர்வாகம் ..... 7
- அண்ணா நினைவகம் ..... 9
- காஞ்சி-சட்டமன்ற உறுப்பினர் சந்திப்பு ..... 10
- களைகட்டி வரும் காஞ்சி நகராட்சி ..... 14
- முன்னேறி வரும் இம்மாநிலத்தில் முதலீடு செய்வதின் மூலம் இலக்கு அடிப்படையிலான எம்முயற்சிகளில் பங்கு பெறுக-முதல்வர் அழைப்பு . 17
- நமக்கு நாமே ..... 20
- சிறுசேமிப்பு ..... 22
- அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ..... 25
- தமிழ்நாடு அரசின் வீடியோ செய்திப்படங்கள்: சென்னைத் தொலைக்காட்சியில் 30 நிமிடம் இலவசமாக ஒதுக்கித் தரவேண்டும் ..... 33
- புராணங்களில் காஞ்சி ..... 38
- செவ்வாழை(சிறுகதை) -**அறிஞர் அண்ணா** ..... 41
- சட்டமன்றத்தில் **அண்ணா** ..... 46



# தமிழரசு

திருவள்ளுவராண்டு 2029
ஆவணி
செப்டம்பர் 1-15, 1998
மலர் : 30 இதழ் : 5
விலை ரூ.3


**திருக்குறள்**

*இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்*
*செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.*

**ஒருவர் வாயிலிருந்து வரும் சொல் அன்பு கலந்ததாகவும், வஞ்சனையற்றதாகவும், வாய்மையுடையதாகவும் இருப்பின் – அதுவே இன்சொல் எனப்படும்.**

**– கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...**

## அட்டைப்பட விளக்கம்

**முதல் பக்க அட்டைப் படம்:**

அண்ணா அருங்காட்சியகம் – சென்னை

**கடைசிப் பக்க அட்டைப் படங்கள்:**

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திறப்புவிழா
திருநெல்வேலி மாவட்டம் – பொன்னாக்குடி சமத்துவபுரம் திறப்பு விழா

# தொழில் துறையில் தனிமுத்திரை பதித்துவருகிறது தமிழ்நாடு

## தகவல் தொழில்நுட்ப நிறுவனத் தொடக்க விழாவில் கலைஞர் பெருமிதம்!

“டானிடெக்”கைப் (தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பப் நிறுவனம்) பொறுத்தவரையில், நான் ஒரு சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகம் தொழில் துறையில் தனி முத்திரையைப் பதிக்கின்ற வகையில் வியக்கத்தகுந்த முன்னேற்றம் கண்டு வருவதை நீங்கள் எல்லோரும் மிக நன்றாக அறிவீர்கள்.

இந்தியாவிலேயே தொழில்துறையில் தமிழகம் இப்பொழுது மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

இந்த முன்னேற்றத்தைத் தொடர்ந்து காப்பாற்றுவதோடு நின்றுவிடாமல், தேவையான கட்டமைப்பு வசதிகள், மேம்பட்ட வேலைத்திறன், திறமை வாய்ந்த மனித வளம் ஆகியவற்றைத் தொழில் தொடங்குவோருக்கு அளிப்பதுடன் – ஒளிவுமறைவற்ற – சாதகமான தொழில் கொள்கையை இந்த அரசு தொடர்ந்து கடைப்பிடிப்பதன் மூலம் தொழில் துறையில் தமிழகம் முதலிடத்தை எட்டிப்பிடிக்கும் என்பதில் நான் உறுதியுடன் இருக்கிறேன்.

தகவல் தொழில்நுட்பத் தொழில் முன்னேற்றத்திற்காக இந்த அரசு தனது முழு ஒத்துழைப்பினை வழங்கி வருவதோடு – “புதிய தகவல் தொழில் நுட்பக் கொள்கையை” அறிமுகம் செய்து தமிழகத்தில் இத்தொழிலைத் தொடங்க முன்வருவோருக்கு மிகப் பெரிய அளவில் சலுகைகளையும், ஊக்கத்தினையும் வழங்கி வருகிறது.

- முத்திரைத்தாள் கட்டணம், சொத்துவரி மாற்றம், கட்டமைப்பு வசதிக்கான பதிவுக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து முழு விலக்கு.
- விற்பனை வரி விலக்கு
- மின்வெட்டிலிருந்து விலக்கு
- நகர அமைப்பு விதிமுறைகளிலிருந்து விலக்கு

போன்ற எண்ணற்ற சலுகைகளை இந்த அரசு வழங்கிவருகிறது.

**14.5.98** அன்று தொழில் மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்து நான் பேசியபோது

“

*காஞ்சிபுரம் மாவட்டத்தில் பெரும் தொழிற்சாலைகள் பல இந்த இரண்டாண்டு காலத்தில் வேரூன்றியுள்ளன, 11.1.1998ல் அந்த வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது டானிடெக்.*

*மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர், முன்னாள் மத்தியத் தொழில் துறை அமைச்சர் திரு.முரசொலிமாறன் ஆகியோரும் அவ்விழாவில் கலந்து கொண்டனர்.*

”






“இந்த மையம் நிறுவ தொழில் நிறுவனங்களின் உதவிகளுக்காகவும், நடைமுறை வசதிகளுக்காகவும், இந்திய நிறுவனங்கள் சட்டம் **56**ன் பிரிவு **25**ன் கீழ் தமிழ்நாடு தகவல் தொழில் நுட்ப மையம் பதிவு செய்யப்பட்டுள்ளது – என்றும்

“இந்த மையம் முதலில் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயல்பட்டு பின்னர் படிப்படியாக சுயநிதிப் பல்கலைக்கழகமாக வளர்ச்சியடையும்.” என்றும் குறிப்பிட்டேன். அதன்படி, இந்தத் தமிழ்நாடு தகவல் தொழில் நுட்ப மையம் (டானிடெக்) இன்று தொடங்கி வைக்கப்படுகிறது.

### முன்னணி மாநிலம்

தகவல் தொழில் நுட்பவியல் துறையில் தேவைப்படும் மனித வளத்தை உருவாக்குவதில் தமிழகம் இந்தியாவில் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது.

மத்திய அரசின், மின்னணுவியல் துறை தொடர்பாக ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள விவரங்கள்படி

- மின்னணுவியல்
- தகவல் தொடர்பு
- கணிப்பொறி அறிவியல்

ஆகிய பாடப் பிரிவுகளில் அகில இந்திய அளவில் ஆண்டுதோறும் தகுதிபெறும் மாணவர்கள் எண்ணிக்கை **16,355.**

அவர்களில் தமிழகத்தைச்சேர்ந்தவர் மாத்திரம் **8,448** மாணவர்கள் என்பதை நான் மிகுந்த பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது **51** விழுக்காட்டினர், கணிப்பொறி, தகவல் தொழில் நுட்பம், மின்னணுவியல் ஆகிய பாடப்பிரிவுகளில் ஆண்டுதோறும் தமிழ்நாட்டிலே தேர்ச்சிபெற்று வெளிவருகிறார்கள்.

### முளைவிட்டிருக்கும் முயற்சி

இந்த அரிய முயற்சி இன்றைக்கு முளைவிட்டிருக்கின்றதென்றாலுங் கூட, இது பெரு விருட்சமாக மாறி, தமிழகத்தைத் தொழில் வளம் நிறைந்த பூமியாகவும், தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தை வீழ்த்துகின்ற நிலையை உருவாக்குகின்ற ஒரு கருவியாகவும் இன்றைக்கு நாம் தொடங்குகின்ற இந்த முயற்சி அமையுமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

இதற்கான நல்ல ஆக்கத்தையும், ஊக்கத்தையும் அளிக்கின்ற வகையிலே பல நிபுணர்கள் நமக்கு உதவிக்கரம் நீட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களில் முதன்மையானவராக நம்முடைய விட்டல் அவர்கள் விளங்குகிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் சார்பில் மட்டுமல்ல; தமிழக மக்களின் சார்பாக இதை அறிவிக்கின்றேன்.

# அரசு ஆணைகள்

தமிழக முதல்வர் **கலைஞர்** அவர்கள் முன்னிலையில் 7-9-98 அன்று தமிழ்நாடு அரசுக்கும் - "வேர்ல்ட் டெல்" (World Tel) நிறுவனத்துக்கும் இடையே ஒப்பந்தம் ஒன்று உருவாகியுள்ளது.

ஒப்பந்தத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் தலைமைச் செயலாளர் திரு.ஏ.பி.முத்துசாமி, இ.ஆ.ப., அவர்களும், "வேர்ல்ட் டெல்" நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் திரு.சாம் பிட்ரோடா அவர்களும் கையெழுத்திட்டுள்ளனர்.

இதன்படி, தமிழகம் முழுவதிலும் சமுதாய இண்டர்நெட் மையங்கள் நிறுவப்படும்; இதன் மூலம் தமிழக மக்கள் தகவல் தொடர்பு வசதிகளை எளிதாகப் பெற்றுப் பயனடைய முடியும். இது, மக்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கு உதவும். இந்த மையங்கள் 2 முதல் 20 தனி கணிப்பொறிகளைக் கொண்டு செயல்படும்.

இம்மையங்களைப் பயன்படுத்தும் பொதுமக்களிடம் நியாயமான கட்டணங்களை வசூலிக்கலாம். இத்துடன் இந்த மையங்கள் தொலை நகலி (FAX), தெலைபேசி (PCO), நகலி (PHOTO COPYING), ஈ.மெயில் (E-Mail), ஈ-காமர்ஸ் முதலிய நவீன தகவல் தொழில் வசதிகளையும் அமைத்துக் கொண்டு இயங்கும்.

இந்த சமுதாய இண்டர்நெட் மையமங்கள், மற்ற நவீன தகவல் தொடர்புப் பயன்பாட்டுகளுடன் கல்வி, சுகாதாரம், பொதுவிநியோகம் முதலிய அரசுத்துறைகள் செயல்படுத்தும் பல்வேறு திட்டங்கள் தொடர்பான தகவல்களை மாநிலம் முழுவதிலும் பரப்புவதற்கும் பெரும் துணைபுரியும்.

ஜவுளித்துறை, தோல்பதனிடுதல், இரயில் பெட்டி தயாரித்தல், கனரக வாகனங்களை உற்பத்தி செய்தல், தகவல் தொழில்நுட்பத்துறையில் புதிய தொழிற்சாலைகளை உருவாக்குதல், உயர்தர விவசாய மற்றும் உணவு பதப்படுத்துதல் மற்றும் கனிம வேதியியல் தொழில்களைத் தமிழகத்தில் - சிங்கப்பூர் இந்தியா வர்த்தகத் தொழில் மற்றும் அமைப்பின் மூலம் புதிதாகத் தொடங்கவும், தற்போதுள்ள தொழில்களை மேம்படுத்தவும் உதவிட மாண்புமிகு தமிழக முதல்வர் **கலைஞர்** அவர்களின் முன்னிலையில் தலைமைச் செயலகத்தில் சிங்கப்பூர் இந்திய வர்த்தகத் தொழில் அமைப்புடன் இம்மாதம் முதல் வாரத்தில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்தியாவில் உள்ள அமெரிக்க வர்த்தக ஆலோசனைக் குழுவும் (ABC), அமெரிக்காவில் உள்ள இந்திய வர்த்தக ஆலோசனைக் குழுவும் (USIBC) இணைந்து 1999-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 20, 21 ஆகிய தேதிகளில் சென்னை மாநகரில் 'தென்னிந்தியாவை நோக்கி" என்ற தலைப்பில் தொழில் கருத்தரங்கம் ஒன்றைப் பெரிய அளவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளன.

சுமார் 75 அமெரிக்க நிறுவனங்கள் பங்குகொள்ளுட இக்கருத்தரங்கின் முன்னேற்பாடுகள் குறித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் **கலைஞர்** அவர்களை சென்னையில் உள்ள அமெரிக்கக் கான்சல் ஜெனரல் திருமதி. மிச்சல் சிசன், இந்திய அமெரிக்கக் கூட்டு வர்த்தக ஆலோசனைக் குழுத் தலைவர் திரு.என்.சங்கர், அமெரிக்க வர்த்தக ஆலோசனைக் குழுத் தலைவர் திரு.சாம்சிங், மகேந்திரா போர்டு நிறுவனத்தின் தலைவர் திரு.பார்க்கர் ஆகியோர் தலைமைச் செயலகத்தில் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

தலைமைச் செயலர் திரு.ஏ.பி.முத்துசாமி, தொழிற்துறைச் செயலர் திரு.எம்.எஸ்.சீனிவாசன் ஆகியோர் இச்சந்திப்பின்போது உடன் இருந்தார்கள்.



தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (4வது படிவத்தின்படி) கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி அமைப்புகளுக்கான இருபத்தி ஒன்பது இனம் சார்ந்த உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகளில் முதல் தவணையாக வேளாண்மை முதலாகப் பல அரசு ஆணைகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுவிட்டன.

தற்போது கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகளில் உள்ள உபரி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் தனியான மூலதனப் பணிகளுக்குக் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மாவட்ட ஊராட்சி/ ஊராட்சி ஆய்வாளர் (மாவட்ட ஆட்சித்தலைவர்), ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் அரசால் ஒப்புதல் அளிக்கக்கூடிய நிதி வரம்பினை நிர்ணயம் செய்து சில நிபந்தனைகளுடன் அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் குறுவைப்பருவத்தில் இணைக் கொள்முதல் நடைமுறையைப் பின்பற்றுவது என்று முடிவெடுக்கப்பட்டது.

மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலையுடன் கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் இடைநிகழ் செலவாகக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.35 வழங்குவதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

மேலும் தரக்கட்டுப்பாடு குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் ஐந்தாக இருக்குமென்றும் முடிவெடுக்கப்பட்டது.

ஒப்பந்தப் புள்ளிகளை இறுதி செய்வதிலும், பணிகளைத் தொடங்குவதிலும் ஏற்படும் நீண்டகால தாமதத்தைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளை அமைச்சரவை ஆய்வு செய்து மேற்பார்வைப் பொறியாளர் ஒப்பந்தப்புள்ளி கருத்துருவை ஒப்பந்தப் புள்ளிகள் பெற்ற நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தலைமைப் பொறியாளருக்கு அனுப்ப வேண்டுமென்றும், தலைமைப் பொறியாளர், மேற்பார்வைப் பொறியாளர்களிடமிருந்து பெற்ற ஒப்பந்தப் புள்ளி கருத்துருவை அரசாங்கத்திற்கு ஏழு நாட்களுக்குள் அனுப்பவேண்டுமென்றும், அரசாங்கம் அதன் மீது முடிவெடுத்து 15 நாட்களுக்குள் ஆணைகள் வழங்கவேண்டுமென்றும், ஆணைகள் பெறப்பட்ட பதினைந்து நாட்களுக்குள் ஒப்பந்தம் கையெழுத்திட்ப்பட்டு பணிகள் தொடங்கப்படவேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது.

தொழில்நுட்ப அனுமதி வழங்குவதில் தற்போதுள்ளதை விட மூன்று மடங்கு அதிகமாக நிதி அளவை உயர்த்துவதென்றும் முடிவெடுக்கப்பட்டது. இதன்படி செயற்பொறியாளருக்கும், கோட்டப் பொறியாளருக்கும் ஆறு இலட்சம் ரூபாயும், மேற்பார்வைப் பொறியாளருக்கு முப்பது இலட்சம் ரூபாயும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறே ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்கும் அதிகார அளவையும் மூன்று மடங்காக உயர்த்தி, பொறியாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேலான பணிகளைப் பத்திரிகைகளில் கட்டாயம் விளம்பரப்படுத்த வேண்டுமென்றிருப்பதை தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கவேண்டுமென்ற நோக்கத்திற்காகப் பத்து இலட்சம் ரூபாய்க்குமேல் உள்ள பணிகளை மட்டும் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தால் போதுமென்றும் அதற்குக் கீழே உள்ள பணிகளை விளம்பரக் கையேடுகள் மற்றும் விளம்பரப் பலகைகளின் மூலமாகவும் விளம்பரம் செய்தால் போதுமென்று முடிவெடுக்கப்பட்டது.

சென்னை மாநகரிலே அடுக்கு மாடிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அனுமதி வழங்குவது பற்றி அமைச்சரவையில் ஆய்வு செய்யப்பட்டு, இந்தியாவில் உள்ள மற்ற மாநகரங்களில் உயர் மாடிக் கட்டடங்கள் கட்டுவதற்கு - மாடிகளின் எண்ணிக்கைகளைப் பொறுத்தோ உயரத்தைப் பொறுத்தோ எந்தவிதமான உச்ச வரம்பும் கிடையாது. இதனைக் கருத்தில்கொண்டு சென்னை மாநகரில் அடுக்கு மாடிக் கட்டடங்கள் கட்டுவதற்கு 40 மீட்டர் உயரம் என்ற உச்ச வரம்பை 60 மீட்டர் வரை அனுமதிக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

சென்னை மாநகரில் அனுமதி அளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதலாக, அனுமதியின்றி விதி மீறல்களுடன் கட்டப்பட்ட கட்டடங்களை வரைமுறை செய்ய இணக்கக் கட்டணமோ (Compounding Fee) அல்லது அபராதமோ விதித்து சட்டத் திருத்தம் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது.

பெரிய தொழில்களுக்கு விற்பனைப் வரியை பத்தாண்டுகளுக்கு ஒத்திப் போடுதல் அல்லது ஐந்தாண்டுகளுக்கு விற்பனை வரியைத் தள்ளுபடி செய்தல் என்ற சலுகைகள் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு சலுகைகளில் ஏதாவது ஒன்றைப் பெறுவதற்குத்தான் இதுவரை பெரிய தொழில்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வந்தது. தற்பொழுது பெரிய தொழில்களில் நிலவிவரும் தேக்க நிலையை மனதில்கொண்டு மராட்டிய மாநிலத்தில் உள்ளதைப் போல ஒரு தொழிற்சாலைக்குப் பத்தாண்டுகாலம் வரை விற்பனை வரி ஒத்திவைப்பு அனுமதிக்கப்பட்டு இந்த வரி ஒத்திவைப்பு அமலில் இருக்கும்போதே இடையிலே அவர் விற்பனை வரி தள்ளுபடிச் சலுகையினை கோருவாரேயானால் அதற்கு அனுமதி வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சலுகை 1.10.98 முதல் அமலுக்கு வரும்.

# காஞ்சிபுரம் மாவட்டம்




காஞ்சிபுரம் மாவட்டம் காஞ்சிபுரம் செங்கற்பட்டு, மதுராந்தகம் ஆகிய மூன்று வருவாய்க் கோட்டங்களையும்- தாம்பரம், திரும்பெரும்புதூர், காஞ்சிபுரம், உத்திரமேரூர், மதுராந்தகம், செய்யூர், செங்கற்பட்டு, திருக்கழுக்குன்றம் ஆகிய 8 வட்டங்களையும், 13 ஊராட்சி ஒன்றியங்களையும் கொண்டது. இதன் பரப்பளவு 3368.90 ச.கி.மீ. மொத்தம் மக்கள் தொகை 26,11,485. இதில் ஆண்கள் - 13,32,650, பெண்கள்-12,78,835 பேர்.







# நேர்மையான நிர்வாகம்

**வெ. இறையன்பு இ.ஆ.ப.,**
**மாவட்ட ஆட்சித் தலைவர்**

காஞ்சிபுரம் மாவட்டம் சென்னைக்கு அடுத்ததாக நகர்மயமான மாவட்டம். சென்னையை ஒட்டி 3 நகராட்சிகளும், 14 நகரப் பஞ்சாயத்துக்களும் அமைந்திருக்கின்ற காரணத்தால் ,சென்னை மாநகராட்சிக்கு ஒப்ப பொதுமக்கள் குடிமை வசதிகளை எதிர்பார்க்கும் மாவட்டம். எனவே, மற்ற மாவட்டங்களிலிருந்து நிர்வாகம் முற்றிலும் மாறுபட்டதாக விளங்குகின்ற இம்மாவட்டத்தை இன்னபிறவற்றோடு ஒப்பிட இயலாது.

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரை வருவாய்த்துறையில் நிறைய நில எடுப்பு, நில உரிமமாற்றம், நகர்ப்புற நிலவரி, தொழிற் பூங்காங்களுக்கு நிலம் கையகப்படுத்துதல், நெடுஞ்சாலை விரிவாக்கம், அணுமின் நிலையத்திற்கு நிலம் தேர்வு செய்தல் போன்ற பணிகள் மாவட்டத்தின் வளர்ச்சியை மட்டுமின்றி மாநிலத்தின் தொழில் முதன்மைக்கு வழிவகுக்கிற பணிகளாய் விளங்குகின்றன.

விழிப்புணர்வு மிகுந்த மாவட்டம் என்பதாலும், தலைநகருக்குத் தலைமாட்டிலேயே



ஏகாம்பரேசுவரர் திருக்கோயில் – காஞ்சிபுரம்



சாதி மதங்களே பிறப்பு அடிப்படையிலான ஏற்றத் தாழ்வின் நிலைக்களன்கள்; இவற்றைத் தகர்க்க வேண்டும்; அப்பொழுதுதான் நாம் உருப்படுவோம்; இந்த நாடும் உருப்படும்.

**தந்தை பெரியார்**

இருப்பதாலும், வளர்ச்சித்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, மின்துறை, சுகாதாரத் துறை, சிறுதொழில்துறை போன்ற எல்லாத் துறைகளுமே மிகுந்த பொறுப்புணர்வுடன் செயல்பட்டால்தான் அரசுத் திட்டங்களை முழுவதுமாக மக்கள் அனுபவிக்க முடியும் என்கிற யதார்த்தம் இம்மாவட்டத்தில் எப்போதும் உண்டு.

சுற்றுலாத்தலங்கள் நிறைந்திருப்பதால் வருடத்தில் பல நாட்கள் முக்கியப் பிரமுகர்கள் வருகையைச் செவ்வனே கவனிப்பது இன்றியமையாத ஒரு பணி.

இந்தப் பின்னணியை மனதில் வைத்து காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த இரு ஆண்டுகளாக நடைபெற்ற பணிகளைப் பார்க்க வேண்டும்.

சென்னையில் நடக்கின்ற அனைத்துக் கட்டடப் பணிகளுக்குமான மணல் வேண்டுமா? — காஞ்சி மாவட்டத்தின் மடியில்தான் கை வைக்க வேண்டும்— கருங்கல் வேண்டுமா — எங்கள் மாவட்ட மலைகளின் வகிடுகளிலிருந்துதான் வழித்தெடுக்க வேண்டும்— செங்கல் வேண்டுமா — எங்கள் ஏரிகளிலிருந்துதான் சவுடு மண்ணைச் சலித்தெடுக்க வேண்டும்.

ஆனால் அதே நேரத்தில் குடிநீர் ஆதாரங்கள் கெடாமல், ஏரிக்கரைகள் பலவீனப்படாமல் கள்ளத்தனமாக அவை கடத்தப்படாமல் பாதுகாக்கிற பொறுப்பு மாவட்ட நிர்வாகத்தின் தோள்களின் மீது பொறுப்பாகச் சுமத்தப்படுகிறது.

கல் உடைக்கும் தொழிலில் கொத்தடிமைகள் இருப்பதைத் தடுப்பதும், பட்டுத்தொழிலில் உள்ள சிறார் தொழிலாளர்களை விடுவிப்பதும் கல்வியை இனிமையான அனுபவமாக மாற்றும் முயற்சியும், நகர்ப் பஞ்சாயத்துக்களில் குடிநீர் வசதியை மேம்படுத்துவதும், மழை அதிகமாகப் பொழியுமிடங்களில் வடிகால் வசதி ஏற்படுத்துவதும், ஏரிக்கரைகளைப் பலப்படுத்துவதும் நீர்வரத்துக் கால்வாய்களைத் தூரெடுப்பதும், சுற்றுலாத்தலங்களைச் சுற்றி சாலைகளைச் செப்பனிடுவதும், குளங்களை வளப்படுத்துவதும், தொல்பொருள் ஆராய்ச்சித் தலங்களைச் சீர்கெடாமல் பாதுகாத்தலும், நகர்ப்புறத்திற்கு அருகில் இருப்பதால் நிலமதிப்பைக் கருத்தில் கொண்டு பேராசையுடன் நீளும் ஆக்கிரமிப்புகளை அவ்வப்போது அகற்றுவதும், தனியார்ப் பள்ளிகளுக்கு இணையாக ஏழை எளியவர்கள் மட்டுமே பயிலுகிற அரசுப் பள்ளிக்கட்டடங்களை மேம்படுத்துவதும், மலைக்குன்றுகளில் கிராம மக்களின் ஒருங்கிணைப்போடு மரம் நட்டு வனங்களை மறுபடியும் படரவிடுதல், பூமியில் மறைந்துபோன கால்வாய்களைக் கண்டுபிடித்தல் போன்ற எண்ணற்ற பணிகள் மாவட்டத்தில் முழு வீச்சில் நடந்துகொண்டிருக்கின்றன.

ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் நடக்கும் பணிகள் தரத்துடன் நடைபெறுகின்றனவா என்பது தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன.

"Paver" மூலமாகச் சாலைப்பணிகள் நடைபெறுவது மக்களுக்கு மிகுந்த திருப்தியைத் தந்திருக்கின்றது.

சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் பல ஆக்கப்பூர்வமான பணிகள் நடைபெறுகின்றன.

மாவட்டம் சிறுசேமிப்பில் மாநிலத்தில் முதல் இடம் பெற்றிருக்கிறது. செங்கல்பட்டு, மதுராந்தகம், வாலாஜாபாத், திருப்பெரும்புதூர், திருக்கழுக் குன்றம் பேருந்து நிலையங்கள் விரைவில் புதுப்பிக்கப் படவிருக்கின்றன.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மூலம் கிராமங்களில் கூட சோடியம் ஆவி விளக்குகள், கிராமப்பள்ளிகளிலும் அருமையான ஆய்வுக்கூடங்கள் என 2005 ஆம் ஆண்டிற்கான தேவைகளையும் அனுமானித்துப் பணிகள் செய்யப் பட்டிருக்கின்றன.

"நமக்கு நாமே" திட்டத்தின் கீழ் பல அரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வால் பல்வேறு வினாக்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன.

திறந்த நிர்வாகம் (Transparency) இன்றைய கட்டாயமாக மாறியிருக்கின்றது.

"தமிழக அரசு" பல்வேறு நிலைகளில் நேரடியாக நடத்துகிற ஆய்வின் பயனாக மிகுந்த பொறுப்புணர்வோடு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இம்மாவட்டத்தில் நேர்மையான நிர்வாகம் நடத்த வேண்டுமெனக் காட்டுகின்ற அதீத விருப்பம் இம்மாவட்டத்தை நிச்சயம் மேம்பட்ட ஒரு மாவட்டமாக இன்னும் சில ஆண்டுகளில் மலரச் செய்யும் என்பது உறுதி.





# அண்ணா நினைவகம்




பைந்தமிழ்த் தேர்ப்பாகனாகவும், செந்தமிழ்த் தேனீயாகவும் விளங்கி, தந்தை பெரியாரின் கொள்கைகளுக்குப் பட்டை தீட்டிச் சுடர்விடச் செய்த பெருமையுடையவர் **பேரறிஞர் அண்ணா** அவர்களாவார்.

அவர் பிறந்து வளர்ந்த பெருமையுடைய ஊர் காஞ்சிபுரம்.

கூட்டுறவுச் சங்கங்கள், அரங்கங்கள், அரசு நிறுவனங்களுக்கு மட்டுமல்ல; இவ்வூரில் உள்ள பல தனியார் அமைப்புகளுக்கும் கூட, அகிலப் புகழ்பெற்ற அண்ணா பெரியடப்பட்டிருப்பதைக் காணலாம்.

அவர் பிறந்த இல்லம் உள்ள சின்ன காஞ்சிபுரம். வரகுவாசல் தெரு, இப்போது - 'முதலமைச்சர் அண்ணாதுரை தெரு' என்று பெயர் மாற்றப்பட்டு புதுப்பொலிவோடு விளங்குகிறது.

தமிழகத்தைத் தன் எழுத்தாலும் பேச்சாலும் விழிப்புறச் செய்திட்ட அந்த எழுஞாயிறு மறைந்த பின் - அந்த இல்லம் தமிழக அரசால் பெற்ப்பட்டு - பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் ஆக்கப்பட்டது.

இப்போது மாண்புமிகு முதல்வர் **கலைஞர்** அவர்களின் ஆலோசனைப் படி - அவ்வில்லத்தில் அண்ணா பிறந்து வளர்ந்த காலம் முதல் - அரசியல் ஈடுபாடு - அரசுப் பதவி - அயல்நாட்டுப் பயணம் - அறிஞர் பெருமக்கள் சந்திப்பு - உடல் நலக் குறைவு - அமெரிக்காவில் சிகிச்சை சென்னையில் மறைவு.... போன்ற பல்வேறு வாழ்க்கை நிகழ்ச்சிப் படங்கள் வரிசையுற வனப்புற வைக்கப்பட்டுள்ளன.

வண்ணம் பூசல் போன்ற மராமத்துப் பணிகளும் செய்யப் பட்டிருக்கின்றன.

இவ்வாறான செலவுகளுக்காக - கலைஞர் அரசு ரூ.4.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்திருந்தது; எல்லா வகையான நினைவகக் குறை பாடுகளும் அந் நிதி மூலம் சீர் செய்யப்பட்டு விட்டன.

அண்ணா அவர்கள் உடுத்திய வேட்டி - சட்டை, பயன்படுத்திய பேனா முதலான பொருட்கள், அவர் நடத்திய "திராவிட நாடு" - "காஞ்சி" ஆகிய பத்திரிகைகள். அவர் எழுதி வெளிவந்த புத்தகங்கள் எல்லாம் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

அவர் தொடர்பாகப் பிறர் எழுதிய நூற்கள் பல (தனியார் வெளியீடுகள்), விலைக்கு என வெளியே வைக்கப் பட்டிருக்கின்றன:

# "எல்லா சாலைகளும் சரி செய்தாச்சு, இனிமே புதுசா ரோடு போட்டாத்தான் உண்டு!"

**திரு.பி.முருகேசன், எம்.எல்.ஏ., பெருமிதம்**

காஞ்சிபுரம் மாவட்டத் தலைநகரான காஞ்சி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு.பி.முருகேசன் அவர்களைப் போய்ப்பார்த்து — "மாவட்ட மலர் போடவிருக்கிறோம்; தொகுதி மேம்பாடு பத்தி ஏதாவது சொல்லுங்களேன்?" என்றோம்.

"முன் கூட்டி தெரிவிக்காமெ இப்பிடி திடும்னு வந்து நின்னா எப்பிடிங்க?" என்று சிரிப்போடு கேட்டுவிட்டுப் "பரவாயில்லை உட்காருங்க" என்றார்.

பெருமூச்சோடு அவர் எதிரே அமர்ந்தோம் நாம்.

"இந்த ஊர்ல முன்னேல்லாம் குடிநீர்தாங்க நீண்டகாலப் பிரச்சினை. தேர்தல் காலத்துல ஓட்டு கேட்கப் போனா...வேற ஒண்ணும் பண்ணவேணாம்; மொதல்ல நல்ல தண்ணி கிடைக்க வழி பண்ணுங்கம்பாங்க. 1989 வரைக்கும் அந்த நிலைமைதான். அந்தச் சமயத்துல, உலக வங்கி ஒரு ஐந்து நகராட்சிங்களைத் தேர்ந்தெடுத்து. இது மாதிரி விஷயங்கள்ல நிதிஉதவி பண்றதா அறிவிப்பு வந்தது. தலைவர் கலைஞரைப் போய்ப்பார்த்து அந்த அஞ்சோட எங்க காஞ்சிபுரத்தையும் சேர்த்தே ஆகணும்னு கெஞ்சினேன். அவரும் சம்மதிச்சி...காஞ்சிபுரம் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கறதுக்குன்னு பன்னிரெண்டு இலட்சம் ரூபாய் அனுமதிச்சார். அப்பாடான்னு வந்து வேலையைத் துவங்கினா...செலவு பதினெட்டு இலட்சத்துல போயி நின்னுது. மக்கள்கிட்டேயும் வசூலிச்சி, சமாளிச்சி, நல்ல விதமா அதைச் செய்துமுடிச்சேன். இன்னம் ஒரு இருபது இருவத்தஞ்சி வருஷ காலத்துக்கு. இந்த ஊர்ல குடிதண்ணீர்த் தட்டுப்பாடே வராதுங்க".



"காஞ்சிபுரத்துக்கு எங்கேயிருந்துங்க குடிநீர் வருது?"

"திருப்பாற் கடல்லேர்ந்து வருது" என்று அவர் சொல்லவும் — அவருடைய தலைமையில் இயங்கும் காஞ்சிபுரம் கைத்தறிக் கூட்டுறவுச் சங்க அலுவலர் ஒருவர் உள்ளே வரவும் சரியாக இருந்தது. "கொஞ்சம் பொறுப்பா, அப்புறம் பார்ப்பம்!" என்று வேகமாகச் சொல்லிவிட்டு எம்.எல்.ஏ., நம்பக்கம் திரும்பினார்.

"எம்.எல்.ஏ. தொகுதி மேம்பாட்டு நிதி மூலமா நீங்க செய்யறதையெல்லாம் கூட சொல்ல லாம்க" என்றோம் நாம்.

"சொல்றேன், சொல்றேன். தொகுதி மக்களோட இன்னொரு நீண்ட காலப் பிரச்சினை பாலாற்றுப் பாலம். ஆத்துல தண்ணி பெருகினா, இந்தப் பக்கம் இருந்து அந்தப் பக்கமோ அந்தப் பக்கம் இருந்து இந்த பக்கமோ யாரும் வர முடியாது. தலைவருக்கும் இது தெரியும். ஆகவே, நான் இதுபத்தி கோரிக்கை வெச்சதுமே 20 கோடி ரூபாய்ல அந்தப் பாலாற்றுப் பாலம் கட்டிமுடிக்க ஏற்பாடாயிட்டு. இன்னொரு மேம்பாலமும் 18 கோடி ரூபாய்ல — என் தொகுதியில இந்த ரெண்டு பாலத்துக்கும் அரசு நிதி ஒதுக்கீடு செய்தாச்சு. சீக்கிரமே கால்கோள்



காஞ்சிபுரம் மாவட்டச் சிறப்பிதழ்

விழா நடத்தப்போறோம். அப்புறம், பாசன வசதிக்காக ஒரு பதினஞ்சாயிரம் ஏக்கருக்குப் பாலாற்றிலிருந்தும், சென்னை யிலிருந்தும் தண்ணீர் வரத்துக்கு ஏற்பாடு செய்யறதா



காஞ்சிபுரம் புதிய பேருந்து நிலையம்

கலெக்டர் ஒத்துகிட்டிருக்கார். எம்.எல்.ஏ. நிதிபத்திக் கேட்டீங்களே? அதுல — பாலாற்றிலிருந்து அவலூர் ஏரிக்கும், செவிலிமேட்டுக்கும், முரசவாக்கத்துக்கும், தாமல் ஏரிக்கும்னு ஏழெட்டு நீர்வரத்துக் கால்வாய்களை வெட்டித் தூர்வாரி முடிச்சிருக்கேன்; கலைஞர் உதவியால் செஞ்ச இந்த வேலையையெல்லாம் பார்த்துட்டு காஞ்சி மாவட்ட ஜனங்க அதிசயிச்சுப் போறாங்க சார்!"

"மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகே ஒரு பால வேலை நடக்குதுங்களே?"

"ஆமாம். அது வேகவதி ஆறு. வீராணம் ஏரிக்குன்னு பண்ணின பெரிய பெரிய பைப்புங்களெ உபயோகிச்சு அந்த வேலை நடந்து கிட்டிருக்கு. அப்புறம் 96—97ல் பதினெட்டு இலட்ச ரூபாய் செலவுல ஒரு மேம்பாலம் கட்டி முடிச்சம்."

"சாலை வசதி எல்லாம்?..."

"பிரமாதமா பண்ணிகிட்டி ருக்கமே! சாதாரண நெடுஞ் சாலைகளை யெல்லாம் தேசிய நெடுஞ்சாலை தரத்துக்கு அருமையா மாத்திருக்கமே

தூர் எடுக்கப்பட்ட கம்பக்கல் கால்வாய்



பார்க்கலே?" என்று கேட்டு அவர் பெருமிதப்பட —

"பார்த்தோம், பார்த்தோம்!" என்று நாமும் மகிழ்வோடு சொன்னோம்.

"இதுமாதிரி வேலைங்களுக்கெல்லாம் — இப்ப இருக்கிற கலெக்டர் இறையன்பும் சரிங்க முன்னே இருந்த கலெக்டர் ராஜமாணிக்கமும் சரி. நல்லா ஒத்துழைச்சாங்கிறதெ நான் கட்டாயம் சொல்லி யாகணும்க. அவர் இருந்தப்ப...இங்கே சென்னை — காஞ்சிபுரம் ரோடு சந்திப்புல அடிக்கடி ஆக்ஸிடெண்ட் நடக்கும்; ரெண்டு மூணு நாளைக்கு ஒரு தரம் ரெண்டு மூணு பேரு சாவாங்க. ஒரு தடவை ஆறு பேரு, சுமோ கார் ஆக்ஸிடெண்ட் ஆகி செத்துட்டாங்க. உடனே போயி ராஜமாணிக்கம் கலெக்டர் கிட்ட சொன்னேன்; இதுக்கு ஏதாவது செய்யணும்னு முந்தியே பல தடவை சொல்லிருக்கேன். உடனே அவர் எஸ்.இ.கிட்டே சொல்லி...அந்த இடத்துல ரவுண்டானா மாதியா கட்ட வழி பண்ணினார். அப்புறம் தாங்க அந்த விபத்தெல்லாம் குறைஞ்சிது. இப்பகூட இந்த ரோடு அங்கே போயி சேர்ற இடத்துல, இந்தப் பக்கமும் அந்தப்பக்கமும் மரங்கள் அடர்த்தியா இருக்கிறதால அந்த ரோட்ல வர்ற போற வண்டிங்க சரியாத் தெரியறதில்லை. இப்ப இருக்கிறவர்கிட்ட சொல்லி அஞ்சாறு மரங்களை வெட்டச்

சொல்லனும்: அப்படிப் பண்ணினா அங்கே விபத்து நடக்கவே சான்ஸ் இருக்காது!"

"சொல்ல வேண்டியதுதானே!"

"சொல்லனும். இவர்கூட ராத்திரி பகல்னு பார்க்காமெ எங்க கூட ஒத்துழைக்கிறாரு. எங்கே என்ன வேலை நடந்துகிட்டிருந்தாலும் சரி; நேரம் காலம் பார்க்க மாட்டாரு — 'டோம்'முன்னு வந்து நிப்பாரு. குறிச்ச காலத்துல, வேலை நடக்கலேன்னா விடமாட்டாரு. இப்ப இருக்கிற பஸ் ஸ்டாண்டை 'இத்தனெ அற்புதமா. இறையன்பு கலெக்டர் தானுங்களே அக்கறை எடுத்துகிட்டு கட்டி முடிச்சாரு. அதுமட்டுமா? நீங்க பார்த்திருப்பீங்க ...பொன்னேரிக்கரை பை பாஸ் ரோடு? அதை அகலமாக நேராக்கி — விபத்துங்களைத் தவிர்க்கனும்கிறது அண்ணா கண்ட கனவுங்க. அதை இப்ப இருக்கிற கலெக்டர் தான் நிறைவேத்தினாரு. அந்த ரோடு அருமையா மாறிட்டுப் பார்த்தீங்களோ?".

"பார்த்தோம்" என்றோம். நாம்.

"இனிமே சாலை சீரமைப்புக்கு அரசாங்கம் நிதி ஒதுக்குனா... இந்தக்



தாமல் கிராமத்தில் பட்டு நெசவு

காஞ்சிபுரம மாவட்டத்துல சீரமைக்க வேண்டிய சாலைங்க ஒண்ணுகூட இல்லைங்க — புதுசா ரோடு போட்டாதான் உண்டு!" என்று கூறிச் சிரித்தார் திரு.பி.முருகேசன். எம்.எல்.ஏ. "அதேமாதிரி பஸ் ரூட்டுங்களும். பஸ் போகாத ஊரே இந்த மாவட்டத்துல இல்லேங்க!".

"இது நேசவாளர் நிறைஞ்ச ஊராச்சே. அதுபத்தி எதுவும் நீங்க சொல்லலியே!"

"ஆமாமா. மூணு மாசத்துக்கு முந்தி வரைக்கும் அவங்க பாடு அவஸ்தைதாங்க; பல கோடி ரூபா அளவுக்கான கைத்தறித் துணிங்க தேங்கிட்டதுதான். அதுக்குக் காரணம். கலைஞர் கிட்ட போயி நிலைமையை விளக்கிச் சொன்னேன். செய்த வேலைக்குப் பலன் இல்லாததால...அவர்களெல்லாம் வேலை வெட்டி இல்லாமே வேதனை பட்டுகிட்டிருக்காங்கன்னேன். கோ—ஆப்டெக்ஸ்ஸெல்லாம் இவங்ககிட்ட ஏராளமான அளவுக்குத் துணி வாங்கனும்னு உடனே ஒரு ஆர்டர் போட்டாரு. ஒரு கோடி ரூபாய்க்கு மேலான துணிங்க அவங்க வாங்கினாங்க. அதுக்கப்புறம்... நெசவாளிங்க இப்ப நிம்மதியா குடும்பம் நடத்தறாங்க. இதுமட்டுமா? கலைஞர் அரசுலதான் கைத்தறி நெசவளார்களுக்கும். அரசு ஊழியர்களுக்கு தர்றாப்ல ஓய்வூதியம் தரப்படும்னு அறிவிச்சாங்க. பார்வை பழுதானா...அதுக்குன்னு சிகிச்சைக்கு 190 ரூபா தர்றாங்க. தறி கெட்டுப் போச்சுன்னா அதைச் சீர்பண்றதுக்காக எட்டாயிரம் ரூபா...அதாவது கடனா நாலாயிரமும். மானியமா நாலாயிரமும் இந்த அரசுதாங்க தருது. கேட்டதெல்லாம் கிடைக்குது. ஜென்ம ஜென்மத்துக்கும் கலைஞர் அரசை மக்கள் மறக்கமாட்டாங்க" — என்று சொல்லிவிட்டு எழுந்தார். எம்.எல்.ஏ.வான திரு.பி.முருகேசன்.

**– சோழராஜா**

## வாய்-மையே வென்றது!

**கழக அரசு 1967-ல் பெருவெற்றி பெற்று ஆட்சி அமைத்தபோது அறிஞர் அண்ணா அவர்கள் பத்திரிகையாளர்களைச் சந்தித்தனர். ஒருவர் கேட்டார்:**

**"இந்த மாபெரும் வெற்றிக்கு மூலகாரணம் எது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?**

**"வாய்மையே காரணம்!" என்று புன்னகையோடு பதில் கூறினார் அண்ணா.**

**"வாய்மை என்றால்?"**

**"முன்பிருந்த ஆட்சியின் அலங்கோலத்தைப் பட்டிதொட்டியெங்கும் போய் வாய்மூலம் பேசியும், படித்தவர்களுக்கு மை மூலம் எழுதியும் மக்களுக்கு எடுத்துச் சொன்னோம். அதுவே இந்த வெற்றிக்கான காரணமாகும்!**

**- அறிஞர் அண்ணாவின் சொல்நயம் அனைவரையும் வியக்க வைத்தது.**





# குளங்களிலும் தூர் எடுப்பு

ஆறு, ஏரி, வாய்க்கால் ஆகியவை மட்டுமல்ல; காஞ்சிபுரம் மாவட்டத்தில், முக்கிய இடங்களில் உள்ள குளங்களும் தூர்வாரி அழகுபடுத்தப்பட்டு வருகின்றன.

காஞ்சி நகருக்குள் உள்ள விளக்கடி கோயில் தெருவில் இருக்கும் ரங்கசாமி குளம் அவ்வகையில்



விளக்கடி கோயில் தெரு, ரங்கசாமி குளம்

குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குகிறது.

அக்குளம் ஆழப்படுத்தித் தூர் எடுக்கப்பட்டது மட்டுமல்ல; படிக்கட்டுகளும், சுற்றுச் சுவரும் அமைக்கப்பட்டுள்ளன.

இது மட்டுமல்ல; சுற்றுப்புறச் சுவர்களில் – உள்ளே 30 – வெளியே 30, வண்ண ஓவியங்கள் வரையப்பட்டு வசீகரப்படுத்தப்படுகிறது. புகழ்பெற்ற ஓவியர் 'கோபன்' – அந்த அழகோவியங்களைத் திறம்படத்தீட்டி வருகிறார். ஐவகை நிலங்கள், காஞ்சிபுரம் மாவட்டச் சுற்றுலாத் தலங்கள் முதலான ஓவியங்கள் அச்சுவற்றில் இடம் பெறுமாம்!

"குளத்திற்கு வருவோர் மட்டுமல்ல; சாலையில் போவோர் வருவோரும், காஞ்சிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளும் நின்று கண்டுகளித்து நெஞ்சம் மகிழவே இந்த ஏற்பாடு என்றார் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு.கிருஷ்ணசாமி.

இதேபோலப் பாலுசெட்டி சத்திரம் குளமும் தூர்வாரிச் சுவரெழுப்பி அழகுபடுத்தப்பட்டுள்ளது.




# களைகட்டி வரும் காஞ்சி நகராட்சி

நூறாண்டுகளைக் கடந்த பழமை வாய்ந்த நகராட்சியாக விளங்குகிறது காஞ்சிபுரம் நகராட்சி. ஒரு காலத்தில் அறிஞர் அண்ணா அவர்களே பணிபுரிந்த இந்த நகராட்சி மன்றம் 1866ல் தோற்றுவிக்கப்பட்டதாகும்.

பெண் உறுப்பினர்கள் 15 பேரும், ஆண் உறுப்பினர்கள் 30 பேரும் உடைய இந்நகராட்சி மன்றத்தின் 15வது தலைவராகத் திரு.எஸ்.எஸ்.திருநாவுக்கரசு .இருக்கிறார். துணைத்தலைவர் திரு.ஜி.கருணாநிதி.

"காஞ்சிபுரம் நகராட்சி மன்றத்தின் இரண்டாண்டு காலச் சாதனைகள் பற்றிச் சொல்லுங்களேன்?" என்று கேட்டாலும் கேட்டோம் — பக்கத்தில் உதவியாளரையும், இரண்டு மூன்று நகராட்சி மன்ற உறுப்பினர்களையும் வைத்துக்கொண்டு — "இத்தனை இலட்சத்தில் அத்தனை இலட்சத்தில்" என்று அடுக்கினார் அவர்.

இடையிடையே உதவியாளரும், உறுப்பினர்களும் "இது எம்.எல்.ஏ. நிதி", "இது எம்.பி. நிதியில் நடக்கிற வேலை", என்று அவ்வப்போது குறுக்கே குரல் கொடுத்தனர். சில இடங்களில் "இதுக்கு கலெக்டரே அரும் பாடுபட்டு சாங்ஷன் வாங்கித் தந்தார்...உதவி பண்ணினார்" என்று நகராட்சி மன்றத் தலைவரே கூறினார்.

அவ்வாறு அவர் தெரிவித்தவற்றை இங்கே தொகுத்துத் தருகிறோம்.

எஸ்.வி.என்.பிள்ளைத் தெருவிலிருந்து தொடங்கி, வந்தவாசி சாலையில் போய்ச்சேரும் 'பைபாஸ்' சாலை; நகராட்சிப் பாடசாலைக் கட்டடங்கள் 10 பழுது பார்க்கப்பட்டுள்ளன. வைகுண்டம் — ஆ. பள்ளிக் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது; புதிதாக ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டிருக்கிறது; ஆனந்தா பேட்டையில் 2 பாலங்கள் கட்டப் பட்டிருக்கின்றன; பிள்ளையார் பாளையத்தில் புதிய பள்ளிக் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது; அங்கேயே ஒரு சத்துணவுக்கூடக் கட்டடமும், ஒரு மேனிலைப்பள்ளிக் கட்டடமும் கட்டப்பட்டுள்ளது; திருவீதி பள்ளம் அருகே ஒரு கால்வாய் தூர் எடுத்து ஆழப் படுத்தப்பட்டது. யாகசாலைப் பள்ளி புதுப்பிக்கப்பட்டது.







திரு. எஸ்.எஸ்.திருநாவுக்கரசு, நகர்மன்றத் தலைவர்

பத்து இலட்சம் ரூபாய் செலவில், அண்ணா அரங்கம் அழகுற புதுப்பிக்கப்படவிருக்கிறது; டெண்டர்விட்டாயிற்று; விரைவில் அதற்கான பணிகள் துவக்கப்படும்.

கேளம்பாக்கத்தில்ல உள்ள கழிவுநீர்க் கால்வாயினை — அகலப்படுத்தி, ஆழப்படுத்தும் பணி நடந்து கொண்டிருக்கிறது; நகருக்குள் ஓடும் மஞ்சள் நீர்க் கால்வாய் தூர் எடுக்கப்பட்டிருக்கிறது; நகரை ஒளி மயமாக்க 350 சோடியம் லைட்டுகளும், 350 டியூப் லைட்டுகளும் போடப்பட்டிருக்கிறது; ராஜாஜி மார்க்கட் புதுப்பிக்கப்பட்டது; குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் வெள்ளகுளம் பகுதியில் அடுக்குமாடி வீடுகள் கட்டப்படவிருக்கின்றன; சுற்றுலா நகர் இது என்பதால் — சுற்றுலாத்துறை மூலமும் நிதியுதவி பெற்று, அத்துடன் நகராட்சி நிதியையும் சேர்த்து, நகரில் உள்ள முக்கியக் கோயில்களைச் சுற்றித் தார்ச் சாலை போட ஆயத்தநிலையில் இருக்கிறோம்; சட்டமன்ற உறுப்பினர் நிதி மூலமும், மாவட்ட ஆட்சித்தலைவலரின் பரிபூரண ஒத்துழைப்பினாலும் காஞ்சிபுரம் பேருந்து நிலையம் பிரமாதமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

மொத்தத்தில் நாம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்த காஞ்சிபுரத்திற்கும், இப்போது புதுப்பொலிவோடு காணப்படும் காஞ்சிக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது என்பதை நாம் உணர்ந்தோம்.

அடுத்த வருஷம் வந்து பாருங்க, இந்த ஊர் இன்னம் பிரமாதமா இருக்கும்" என்று மிகுந்த மகிழ்ச்சியோடு கூறி முடித்தார், காஞ்சிபுரம் நகராட்சியின் தலைவராக இருக்கின்ற திரு.எஸ்.எஸ். திருநாவுக்கரசு.



தூர் வாரப்பட்ட மஞ்சள் நீர்க் கால்வாய்



அண்ணா கண்ட கனவான காஞ்சிபுரம் பொன்னேரிக்கரை சாலை அகலப்படுத்தப்பட்டுள்ளது.

நகராட்சிமன்றத் துணைத்தலைவரான திரு.ஜி.கருணாநிதியைப் பார்த்துப் பேசியபோது — "வேற கட்சிக்காரர் தலைவரா இருக்கிற நகராட்சிங்கிற பாரபட்சம் துளிக்கூட இல்லாமெ கலைஞர் அரசு எங்க நகராட்சிக்கு ஏராளமாகவே நிதியுதவி செய்துகிட்டிருக்கு சார்" என்று பெருமித்த்தோடு சொன்னார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:

"இன்னம் விவரமா சொல்லணும்னா... முன்னே இருந்த ஆட்சியில செய்தும் செய்யாமலும் பாதியில விட்டுட்டுப் போன அஞ்சாறு ரோடு உட்படப் பல பணிகளையெல்லாம் இப்ப — இந்த ஆட்சி வந்தப்புறம் பண்ணின நிதி ஒதுக்கீட்லதான் செய்து முடிச்சம்; யாரோ தொடங்கினது தானேங்கிற பேதமெல்லாம் பார்க்கலைங்க. மொத்த ஊராட்சிகளுக்கும், நகராட்சிக்கும் கலைஞர் தரும் நிதியைக் கணக்குப் பார்த்தீங்கன்னா, எங்க காஞ்சிபுரத்துக்குச் செய்ற உதவிதானுங்க அதிகமாயிருக்கும். "ஊருக்கு நல்லது செய்வேன்" என்ற கொள்கையோடு செயல்பட்டுவரும் கழக அரசு, இது அண்ணா பிறந்த ஊர்ங்கிறதாலயோ என்னவோ, எங்க நகராட்சி மூலமா நாங்க ஓய்வே இல்லாமெ மக்களுக்காக உழைக்கிற அளவுக்கு உதவி பண்ணி வர்றதை யாராலயும் மறுக்கவோ — மறக்கவோ முடியாதுங்க. நகராட்சி ஆணையர் பெரோஷ்கான், மாவட்ட ஆட்சித்தலைவர் இறையன்பு, எல்லோருமே எங்க வேகத்துக்கு ஒத்து வர்றாங்க; நாங்களும் அவங்க வேகத்துக்கு ஒத்துப் போறோம்" — என்றார்.

'தமிழரசின் இலவச வெளியீடான 'அரசு செய்தி' மூலம் அரசின் சாதனைகள் மிக எளிதில் மக்களைச் சென்று அடைவதாகக் கூறிய அவர், தன் அறையிலேயே ஒட்டிவைத்திருந்த அந்த வார 'அரசு செய்தி'யையும் மகிழ்வோடு நமக்குக் காட்டினார்.



திரு. ஜி.கருணாநிதி, நகர்மன்றத் துணைத்தலைவர்

நகர்மன்றத் தலைவரும், துணைத் தலைவரும் வெவ்வேறு கட்சியினராயினும், ஊருக்கு நல்லது செய்வதில் ஒற்றுமையோடு பாடுபட்டு வருகிறார்கள்.

— ராஜி



# "முன்னேறிவரும் இம்மாநிலத்தில் முதலீடு செய்வதின் மூலம், இலக்கு அடிப்படையிலான எம்முயற்சிகளில் பங்குபெறுக!"

## முதல்வர் அழைப்பு



தகவல் தொழில்நுட்பத் தொழிலதிபர்களின் கூட்டம் 4–9–98 அன்று தலைமைச்செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
கலைஞர் **மு.கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை வருமாறு:

"இந்தியாவின் தலைசிறந்த தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் தலைவர்களை நான் சந்திக்கும் இன்றைய தினம் ஒரு முக்கியமான நாளாகும்.

தமிழகம் தொழில் துறையில் தனி முத்திரையைப் பதிக்கின்ற வகையில் வியக்கத் தகுந்த முன்னேற்றம் கண்டு வருவதை நீங்கள் எல்லோரும் நன்கு அறிவீர்கள். இந்தியாவிலேயே தொழில் துறையில் தமிழகம் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. இந்த முன்னேற்றத்தைத் தொடர்ந்து காப்பாற்றுவதோடு நின்றுவிடாமல், தொழில் துறையில் முதல் இடத்தை எட்டிப்பிடித்திட தேவையான கட்டமைப்பு வசதிகள், மேம்பட்ட வேலைத் திறன், திறமை வாய்ந்த மனித வளம், இணக்கமான சூழ்நிலையோடு, தொழில் தொடங்குவோருக்கு எளிவுமறைவற்ற-சாதகமான தொழில் கொள்கையை இந்த அரசு தொடர்ந்து கடைப்பிடிப்பதன் மூலம் தொழில் துறையில் தமிழகம் முதலிடத்தை எட்டிப் பிடிக்கும் என்பதில் நான் உறுதியுடன் இருக்கிறேன். இன்றைய நிலையில் தகவல் தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிக்கிறது.

எழுபதுகளின் தொடக்கத்தில் சாதாரண கருத்துப் படிவமாக விளங்கிய தகவல் தொழில்நுட்பம், இன்றைய தினம் உலகெங்கும் வியாபித்துள்ளது. எந்தத் தொழிலாக இருப்பினும் அதன் ஒவ்வொரு பிரிவும் தகவல் தொழில் நுட்பத்தோடு தொடர்புகொண்டுள்ளது மட்டுமின்றி, அதன் மூலமாகவே பயிற்றுவிக்கப்படுகிறது. தொண்ணூறுகளில் உலகப் பொருளாதாரத்தில் இத்தகவல் தொழில் நுட்பமே பிரதானப் பங்கு வகிக்கிறது. மனித வளத்தை மேம்படுத்துவதில், நிதி, இருப்புக் கணக்கு, மேலாண்மை, சந்தை, வங்கி மற்றும் மூலதனச் சந்தை ஆகியவைகளில் ஏராளமான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. இன்றைய நிலையில். தகவல் தொழில்நுட்பம் இன்றி எந்த ஒரு தொழிலும் இயங்கமுடியாது என்பதே உண்மை. அளவில் பெரியதும் மக்கள்தொகை மிகுந்ததுமான நாடுகளில் மேம்பட்ட இத்தகவல் தொழில்நுட்பமே முக்கியத்துவம் பெறுகிறது. அரசின் செயல்பாடுகளை மேம்படுத்துவதிலும், மக்களுக்குத் தேவையான கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளைச் சீரிய முறையில் வழங்குவதிலும், சட்டதிட்டங்களைச் சிறந்த முறையில் செயல்படுத்தி, அமைதியாகவும் ஒழுங்கு முறையோடும் மக்கள் வாழ்வதை உறுதி செய்வதிலும் இத்தகவல் தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிக்கிறது என்றால் அது மிகையாகாது.

தமிழகத்தின் தகவல் தொழில்நுட்பம் சீரான வளர்ச்சியைக் கண்டு வருகிறது. 1994-95ல் மென்பொருள் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு 36 கோடி ரூபாய் என்கிற அளவில் இருந்தது, ஆனால், 1997-98ல் 425 கோடி ரூபாய் என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது. கணினி ஹார்டுவேர் சாதனங்களை 750 கோடி ரூபாய்க்கு தமிழகம் ஏற்றுமதி செய்துள்ளது.

கல்விக்கும், தொழிலுக்கும் தேவையான கட்டமைப்பு வசதிகளுக்கு உகந்த உள்ளார்ந்த உந்துணர்வை நாம் அளிப்பதன் மூலம் தமிழகத்தை இத்தகவல் தொழில் நுட்பத்தில் உயர்ந்த இடத்திற்குக் கொண்டு சென்றிட முடியும், இந்த அடிப்படை நோக்கத்தில், இந்த அரசு எடுத்துள்ள முயற்சிகளின் பலனாக, உள்நாட்டு மற்றும் வெளிச்சந்தைகளிலும் தமிழகம் முதன்மை மென்பொருள் மையமாகத் திகழும்.

தகவல் தொழில் நுட்பத்தின் முன்னேற்றத்திற்காக இந்த அரசு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பத் தொழில் முன்னேற்றத்திற்காக இந்த அரசு தனது முழு ஒத்துழைப்பினை வழங்கி வருவதோடு, "புதிய தகவல் தொழில்நுட்பக் கொள்கையை" அறிமுகம் செய்து, தமிழகத்தில் இத்தொழிலைத் தொடங்க முன்வருவோருக்கு மிகப்பெரிய அளவில் சலுகைகளையும், ஊக்கத்தினையும் அளித்துவருகிறது.

முத்திரைத்தாள் கட்டணம், சொத்துவரி மாற்றம், கட்டமைப்பு வசதிக்கான பதிவுக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து முழு விலக்கும், விற்பனை வரி விலக்கு, மின்வெட்டிலிருந்து விலக்கு, நகர அமைப்பு விதிமுறைகளிலிருந்து விலக்கு போன்ற எண்ணற்ற சலுகைகளை இந்த அரசு வழங்கி வருகிறது.

உங்களுடைய விருப்பத்திற்கேற்ற வகையில் இந்த அரசின் தகவல் தொழில்நுட்பக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. இது உங்களிடையே மிகுந்த வரவேற்புக்குள்ளாகும் என்பதை அறிவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

முதலாவதாக, திறமையான மனிதவளத்தை மேம்படுத்துவதில் இந்த அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் ஆண்டுதோறும் 23 ஆயிரம் பொறியியல் பட்டதாரிகள் தேர்ச்சி பெறுகிறார்கள். அதில் 13 ஆயிரம் பட்டதாரிகள் இத்தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதன் தொடர்புடைய பாடங்களில் - அண்ணா பல்கலைக்கழகம், இந்தியத் தொழில்நுட்பவியல் நிறுவனம், கோவை பி.எஸ்.ஜி.தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் திருச்சி பிராந்தியப் பொறியியல் கல்லூரி போன்ற சிறந்த நிறுவனங்களிலிருந்து தேர்ச்சி பெறுகிறார்கள்.

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் மிக அதிக அளவில் 22 ஆயிரம் மென்பொருள் வல்லுநர்கள் பணிபுரிகிறார்கள். இத்தொழில்நுட்பத்தை மேலும் மேம்படுத்தும் வகையில் 70 கோடி ரூபாய் முதலீட்டில் இந்த அரசு அண்மையில் "தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனம் (டானிடெக்)" என்ற அமைப்பை உருவாக்கியுள்ளது. இப்பயிற்சி நிறுவனம் உலகின் முன்னணி பயிற்சி நிறுவனங்களுக்கு இணையான தரத்துடன் அமையத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தை ஒரு தொழில் சார்ந்த அமைப்பாக மாற்றுவதே எங்கள் நோக்கமாகும். இதன் அடிப்படையில் தேர்ந்த தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் இந்நிறுவனத்தின் மூலதனத்தில் பங்கு கொள்வதுடன், அதன் செயல்பாடுகளான ஆய்வுக்கூடம் நிறுவுதல், ஊக்கத்தொகை அளித்தல் போன்றவற்றில் பங்குகொள்ள வேண்டுமென்று அழைக்கிறேன். இந்நிறுவனத்தின் மூலம் முதுநிலை பட்டயப் படிப்பு நேற்றைய தினம் தொடங்கப்பட்டுள்ளது என்பதை அறிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், முதுநிலை பட்டப்படிப்பு வரும் கல்வி ஆண்டு முதல் தொடங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுள்ள "டைடெல்" தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதும் எங்கள் நோக்கமாகும். இத்தகைய தொழில்நுட்பப் பூங்கா - பத்து இலட்சம் சதுர அடி பரப்பளவில், உலகத்தரம் வாய்ந்த மென்பொருள் தொழில்நுட்பத்தைக் கொண்ட அலுவலக வளாகங்களை நியாயமான வாடகையில் நகர எல்லைக்குள் கொண்டிருக்கும். மேலும், சென்னையில் இருந்து 25 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கேளம்பாக்கத்தில் நேர்த்தியான கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட 200 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் தொடங்கவுள்ள தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் தங்கள் வசதிக்கேற்ப நிறுவனங்களை அமைத்துக் கொள்ளவும் - பணியாளர்களுக்குத் தேவையான வீட்டுவசதிகளை ஏற்படுத்திக்கொள்ள ஏதுவாகவும் இந்த இடம் இருக்கும்.

உலகளாவிய இந்தத் தகவல் தொழில்நுட்பத் தொழிலை மேம்படுத்தவும், அங்கீகரிக்கவும் இந்த அரசு

## நாட்டின் இலக்கணம்

*"வெளிச்சம் மங்காமல், குறையாமல், அணையாமல் இருப்பது நல்ல விளக்கு. ஓட வேண்டிய அளவு, ஓட வேண்டிய நேரத்தில் நீர் ஓடுவதுதான் நல்ல ஆறு! மழைக் காலத்தில் ஒழுகாமலும், வெயில் காலத்தில் வியர்க்காமலும், காற்றோட்டமும், வெளிச்சமும் உள்ளவீடு நல்ல வீடு! வீட்டுக்கு உள்ள இலக்கணம்தான் நாட்டுக்கும்! 'நல்ல ஆட்சி என்றால் எப்படி இருக்க வேண்டும்' - நல்ல விளக்குக்கு வெளிச்சம் எப்படியோ, நல்ல வயலுக்கு விளைச்சல் எப்படியோ - அப்படித்தான் நல்ல ஆட்சியில் மக்களுக்கு நிம்மதி வேண்டும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் சொல்லி யிருக்கிறார் - 'பசி, பிணி, பகை இல்லா திருப்பது நல்ல நாடு' என்று".*

**- "அறிஞர் அண்ணாவின் மாதுளை" என்ற நாலிலிருந்து...**



டிட்கோ (TIDCO), சிட்பி (SIDBI), ஐ.எல்.எப்.எஸ்.(ILFS) ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து தொழில் முனைவோர்க்கு உதவிட முதலீட்டுத் தொகையாக 30 கோடி ரூபாயை முதற்கட்டமாக இந்த அரசு ஒதுக்கியுள்ளது.

இத்தொகையின்மூலம் புதிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைத் தொடங்குவதற்கும் நடத்திவரும் கம்பெனிகளை விரிவாக்கவும் மற்றும் மென்பொருள் உற்பத்தியை வடிவமைத்துப் பெருக்குவதற்கும் இத்தொகை வழங்கப்படுகிறது. இவ்வசதிகளைத் தொழில் தொடங்கும் நிறுவனங்கள் பயன்படுத்திக்கொள்ளும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இத்தகவல் தொழில் நுட்பம் முன்னேற்றம் காண்பதற்கு, தரம் வாய்ந்த தொலைத் தொடர்பு வசதி மிகவும் இன்றியமையாதது. இவ்வசதிகளைத் தமிழகத்தில் மேம்படுத்தும்பொருட்டு, தமிழகத்தை மகாநகர் டெலிகாம் நிகாம் லிமிடெட் (MTNL) என்ற அமைப்பில் கொண்டுவர மத்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளோம். இன்னும் ஓரிரு மாதங்களில் இவ்வசதி கிடைப்பதன் மூலம் தமிழகம் தேர்ந்த தொலைத்தொடர்பு வசதியை பெறும் என்பதில் ஐயமில்லை.

ஏற்கெனவே நான் குறிப்பிட்டவாறு, அரசு, மக்களுக்கு அளிக்கும் பணிகளை மேம்படுத்தத் தகவல் தொழில் நுட்பவியல் மிகச் சிறந்த இடம் வகிக்கிறது. அரசு வழங்கும் சேவைகளில் தகவல் தொழில் நுட்பவியலை மிகுந்த அளவில் பயன்படுத்துவதை நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். நாங்கள் யாருக்குப் பணிபுரிகிறோமோ, அம்மக்களுக்கு நெருக்கமாகச் சென்றடையும் வகையில் பணிகளை அளிக்க முடிவு செய்துள்ளோம். அடுத்த 24 மாத கால அளவில் மாநிலத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் சமுதாய இணையம் மையங்களை அமைத்திட திரு.சாம் பிட்ரோடாவுடன் செப்டம்பர் 7ஆம் நாளன்று ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடுகிறோம். இது அடிநிலை மக்கள் வரை தகவல் தொழில் நுட்பவியலைப் பற்றிய சிறந்த விழிப்புணர்வை விரைந்து ஏற்படுத்தும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஒவ்வொருவரும் இதனை உணர்ந்து, அதன் முக்கியத்துவத்திற்கேற்பப் பயன்படுத்திக் கொள்ள இது மிகவும் உதவும்.

அடுத்த பத்தாண்டுகளில் தமிழ்நாட்டை 100 சதவிகித எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் உள்ள மாநிலமாக மாற்றுவதோடு மட்டும் நாங்கள் மனநிறைவை அடையப் போவதில்லை. எங்கள் குறிக்கோள் இதைவிடவும் அதிகமானது. அடுத்த 10 ஆண்டுகளில் எங்கள் மாநிலத்தில் உள்ள அனைவரையும் கணினியைப் பயன்படுத்த அறிந்தவர்களாகச் செய்ய வேண்டுமென்பதே எங்கள் விருப்பமாகும். எனவே அடுத்த கல்வி ஆண்டில் இருந்து பள்ளி, கல்லூரி படிப்பில் தகவல் தொழில்நுட்பவியலை ஒரு பாடமாக வைக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

## கரித்துண்டுகள்

நீ -
தீயில் கரிந்தவன்
நான் -
பசியில் எரிந்தவன்!
எனினும்
இருவரில் சில வேறுபாடே
நீ மரக்கரித்துண்டு!
நான் -
மனிதக் கரித்துண்டு!

—எஸ்.விநாயகமூர்த்தி

இப்பணியில் தனியார் துறையைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைப் பெரிய அளவில் ஈடுபடுத்த நாம் கருதியுள்ளோம்.

இன்று நாம் மிகவும் பரப்பரப்பான காலகட்டத்தில் வாழ்ந்து வருகிறோம். விரைந்து வளர்ந்து வரும் சமுதாயத்தின் அங்கங்களாக; வரலாற்றின் ஆற்றல் வாய்ந்த தொழில்துறையின் உறுப்பினர்களாக இருந்து வரும் நாம் தகவல் - அறிவு என்ற புதியதோர் புரட்சிகரமான மாற்றத்தையும் கண்டுவருகிறோம். தகவல் தொழில்நுட்பத் துறைக்குத் தலைமை ஏற்று நடத்தும் பொறுப்போடு அதனை வழிகாட்டி நடத்துவதும் நமது குறிக்கோளாகும்.

நமது தகவல் தொழில்நுட்பத்துறை தொடர்பாகவும், நம் குழந்தைகளின் கல்வித் தொடர்பாகவும் நாம் அளிக்கக் கருதியுள்ள வழிகாட்டுதல் குறிப்புகள் குறித்து உங்களுடைய மிகச் சிறந்த எண்ணங்களையும், தெளிந்த கருத்துகளையும் அளிக்கும்படி உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் இன்றைய குழந்தைகளிடம்தான் நாளைய எதிர்காலம் உள்ளது. இக்குழந்தைகள் போட்டிமிக்க உலகில் வெற்றிபெற்று அதனைத் தக்க வைத்துக்கொள்ள அவர்களுக்கு நாம் சிறந்த முறையில் அறிவூட்டி கல்வி அளிப்பது நம்முடைய கடமையாகும். வருங்காலம் தகவல் தொழில்நுட்பவியலைச் சார்ந்தே உள்ளது. எனவே, இருபத்தொன்றாம் நூற்றாண்டில் நமக்குரிய இடத்தைப் பெறுவதற்கு உகந்த எல்லா முயற்சிகளையும் நாம் மேற்கொள்ளக் கருதுகிறோம். முன்னேறிவரும் இம்மாநிலத்தில் முதலீடு செய்வதன்மூலம், இலக்கு அடிப்படையிலான எமது முயற்சிகளில் பங்கு பெறுமாறு உங்கள் அனைவரையும் அழைக்கிறேன்.

# நமக்கு நாமே

நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 1997–98ஆம் ஆண்டிற்குக் காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் தலா ரூ.1 இலட்சம் வீதம் 13 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.13 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. 38 பணிகள் எனக்கூறி முடிக்கப்பட்டுள்ளது.

1998–99க்கு இம்மாவட்டத்தில் 151 பணிகள் எடுக்கப்பட்டு அவற்றில் 132 இத்திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்டுள்ளது.

1998–99 க்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் 161 பணிகள் எடுத்துச் செய்ய நிர்ணயம் செய்ப்பட்டுள்ளது. மேற்படி பணியில் 10 பணிகள் முழுக்க முழுக்கப் பொதுமக்களின் முழுப்பங்களிப்போடு ரூ.29,11,000/– செலவில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தாமல் பொன்னியம்மன்பட்டரை கிராமத்தில் ஒரு புல் பண்ணை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட உட்கட்டமைப்பின் கீழ் பால் உற்பத்தியாளர் சங்கம் மூலம் அமைக்கப்பட்டுள்ளது.



## சட்டமன்ற உறுப்பினர்த் தொகுதித் மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் (1998–99) கீழ் அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரத்தி உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.2.35 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கூடுதல் பள்ளிக் கட்டடம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மூலமும், காஞ்சிபுரம் அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கூடுதல் பள்ளிக் கட்டடம் பொதுப்பணித்துறை மூலமும், திருக்கழுக்குன்றம் பெண்கள் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் ஒரு கூடுதல் பள்ளிக் கட்டடம் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப்பணித்துறை மூலமும் திருப்பெரும்புதூர் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கூடுதல் பள்ளிக் கட்டடம் பொதுப்பணித்துறை மூலமும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இவை தவிர, காஞ்சிபுரம் சாமிநாத முதலியார் மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் பள்ளிக் கட்டடம் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி ஆணையர், காஞ்சிபுரம் மூலமும், ஆலந்தூர் நகராட்சிப் பள்ளியில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கூடுதல் பள்ளிக் கட்டடம் நகராட்சி ஆணையர், ஆலந்தூர் மூலமும், இடைக்கழிநாடு பேரூராட்சியில் முதலியார் குப்பம் உயர்நிலைப்பள்ளியில் ரூ.2.35 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு கூடுதல் பள்ளிக் கட்டடம் செயல் அலுவலர், பேரூராட்சி மூலமும் நந்தம்பாக்கம் பேரூராட்சியில்





துளசிங்கபுரம் பள்ளிக்கட்டடம் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் செயல் அலுவலர், நந்தம்பாக்கம் பேரூராட்சி மூலமும் செயல்படுத்த நிர்வாக அங்கீகாரம் வழங்கப்பட்டு, பணிகள் போர்க்கால அடைப்படையில் நடைபெற்றுவருகின்றன.

## நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

1998–99ல் செங்கல்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், திருப்போரூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ஒரு கூடுதல் கட்டடம், ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப்பணித்துறை மூலம், காஞ்சிபுரம் சேர்மன் சாமிநாத முதலியார் பள்ளிக் கட்டட, விரிவாக்கப் பணிகளுக்கு ரூ.10 இலட்சம், சின்ன காஞ்சிபுரம் யாகசாலை நகராட்சிப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் ரூ.5 இலட்சம் செலவிலும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளது. நகராட்சி ஆணையாளர், காஞ்சிபுரம் இப்பணிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளார்.



புதுப்பட்டினம் விழாவில்...

1997–98 ஆம் ஆண்டிற்கு 35 சாண எரிவாயுக்கலன்கள் எனக் குறியிடு நிர்ணயிக்கப்பட்டு 35 சாண எரிவாயுக்கலன்களும் முடிக்கப்பட்டு மக்கள் பலன் அடைந்துள்ளனர். குறிப்பாகத் தாமல் ஊராட்சியில் 4 சாண எரிவாயுக்கலன் அமைக்கப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகிறது. இதற்கான பயனீட்டுச்சான்றும் ஊரக வளர்ச்சி இயக்குநருக்குப் பணிந்தனுப்பப்பட்டது.

## மா.சிங்காரவேலர் நினைவு வீட்டுவசதித் திட்டம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள புதுகல் பாக்கம் கிராமத்தில், 'மா.சிங்காரவேலர் நினைவு வீட்டுவசதி திட்டத்தின்' கீழ், மீனவர்களுக்கு ஒரு வீட்டிற்கு ரூ.32,000 மதிப்பீட்டில் 63 தொகுப்பு வீடுகள் 1997–98 ஆம் ஆண்டு ரூ.20.16 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.



63 தொகுப்பு வீடுகளையும் பயனாளிகளே கட்டி வருகின்றனர். மேற்கூரை சமதளத்தில் அனைத்து வீடுகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. 63 தொகுப்பு வீடுகளும் அடித்தளம் வரை முடிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பயனாளிகளின் மூலமே இப்பணி நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ✿

## சிறுசேமிப்பு

# பணத்தை நாம் பாதுகாத்தால் பணம் நம்மைப் பாதுகாக்கும்

சிறுசேமிப்பைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டிலேயே முதலாவது மாவட்டம் என்ற பெருமை பெற்றிருக்கிறது, காஞ்சிபுரம் மாவட்டம்.

மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளருள் ஒருவரான திரு.வி.லோகநாதன் அவர்களிடம் இது பற்றிக் கேட்டோம்.

''இதற்குமுன் இந்த மாவட்டம் எத்தனையாவது இடத்தில் இருந்தது ?''

"96-97ல் ஆறாவது இடத்தில் இருந்ததுங்க!"

"ஒரு வருஷத்துல எப்படி திடீர்னு முதலாவது இடம்?... தனியார் நிதி நிறுவனமெல்லாம் "கவர்ச்சிகரமான வட்டின்னெல்லாம் எதைனா அறிவிக்கிறாங்களே? அப்படி ஏதாவது...''

"ஐயையோ அதெல்லாம் ஒண்ணுமில்லை; இது அரசாங்கமாச்சேங்க, அப்படியெல்லாம் முடியும்களா?"

- என்று கேட்டுவிட்டு, அவரே தொடர்ந்தார்:

"இந்தத் துறையோட வெற்றிக்குக் காரணமே கலெக்டர்தாங்க. எப்பிடின்னா... காஞ்சிபுரம் மாவட்டத்துல இருக்கிற 648 ஊராட்சி.. 6 நகராட்சி... 23 டவுன் பஞ்சாயத்து... 13 ஊராட்சி ஒன்றியங்களோட தலைவருங்களுக்கெல்லாம் சிறுசேமிப்புத் திட்டத்தை மக்கள் இயக்கமா மாத்த உதவும்படி, தானே கையெழுத்திட்டு அஞ்சாறு தடவை கடிதம்



ஜி. ரமேஷ்குமார்

அனுப்பினார். அதைத் தவிர - சின்னச் சின்ன நாடகம்... வீடியோவெல்லாம் வழக்கம்போல ஊர் ஊராப்போயி ஒட்டினம். பெயிண்டிங் மூலம், முக்கிய இடங்கள் இருக்கிற சுவர்லேல்லாம் எழுதிவச்சம். எந்த ஒரு அதிகாரி எங்கே எந்தக் கூட்டத்துக்குப் போனாலும் சிறுசேமிப்புப் பத்திப் பேசனும்னு கலெக்டரே கேட்டுகிட்டார். அவரும் எங்கே போனாலும் மக்களுக்குச் சுளுவா புரியறாப்ல சிறுசேமிப்புப் பத்திப் பேசுவார்; மாணவ மாணவிகள் மூலமெல்லாம் அந்தத் திட்டத்தை ஊர்ல பரப்பனும்பார். இப்படித்தான் இந்தக் காஞ்சிபுரம் மாவட்டத்துல சிறுசேமிப்புத் திட்டத்தை வளர்த்தம்; இதனாலதான்க இந்த தடவெ நாங்க முதலிடம் பெற முடிஞ்சது!"

சிறிது நேர இடைவெளிக்குப்பின்..... அவர் மேலும் தொடர்ந்தார்; "இத்தகைய வெற்றிக்குக் காரணமான 25 பேர்களுக்கு, சுதந்திரத்தினைத்தன்னிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், தன்கையாலேயே தங்கப் பதக்கம் வழங்கி கவுரவித்தார். அதில் சிறந்த முறையில் விளம்பரப் பணிகளை மேற்கொண்ட மாவட்டச் செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலரும் ஒருவர்!"

1997-98ல், காஞ்சிபுரம் சிறுசேமிப்பு இலக்கு ரூ.20 கோடியாகும்.

ஆனால், இங்கே மொத்தம் மற்றும் நிகர வசூல் முறையே ரூ.34 கோடி. மொத்த வசூல் ரூ.6.5 கோடி. திரும்பப் பெறப்பட்ட தொகை போக நிகர வசூல் ரூ.34.03 கோடி; அதாவது, 170 சதவிகிதம்.!

இந்த வகையில்தான் காஞ்சிபுரம் மாவட்டம், மாநிலத்திலேயே முதலிடம் பெற்றிருக்கிறது!

வேலையில்லாப் பெண்கள், வீட்டு வேலை பார்த்த பிறகு கூட சிறுசேமிப்புத் திரட்டுவதில் ஈடுபடுகிறார்கள் இம்மாவட்டத்தில். இந்த வகையில் 150 பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.



காஞ்சிபுரம் மாவட்ட சிறப்பிதழ்



**இது கோயில் அல்ல; காஞ்சி புகைவண்டி நிலையம்!**

"அவர்கள், ஒரு மாதத்திற்கு இருபத்தையாயிரம் ரூபாய் சிறு சேமிப்பிற்குச் சேர்ப்பதாக வைத்துக் கொள்ளுங்கள்; அதில் நான்கு சதவிகிதக் கமிஷன் ஆயிரத்து ஐநூறு ரூபாய் எளிதாகப் பெறமுடியும். இந்தப் பெண்கள் தவிர, ஏராளமான சிறுசேமிப்பு முகவர்களும் இங்குண்டு'' என்றார் திரு.வி.லோகநாதன்.

காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும் ஆங்காங்கே சிறுசேமிப்பு விளம்பரங்களை நாம் பார்த்தோம்.

''சேமிக்கும் பெண்கள் நாட்டின் கண்கள்''!....

''செலவினைச் சுருக்கிடுவோம்; சேமிப்பைப் பெருக்கிடுவோம்!''

''வீட்டை காக்கும் சிக்கனம் நாட்டையும் காக்கிறது!''

'ஒவ்வொரு கிராமத்தையும் சிறுசேமிப்புக் கிராமமாக மாற்றுவோம்; கிராம வளர்ச்சியில் பங்கேற்போம்!''

- என்பன போன்ற எல்லோருக்கும் எளிதில் புரியும்படியான தமிழ் விளம்பர வாசகங்களில் ஒரு தனிக்கவர்ச்சி தெரிந்தது.

பி.காம்., பி.எல்., படித்துள்ள பட்டதாரியான திரு.ஜி.ரமேஷ்குமார் என்கிற நபர் ஒருவர், வக்கீல் தொழில் செய்வதையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டுச் சிறுசேமிப்பு முகவராக ஆர்வத்தோடு செயல்பட்டுவருகிறார் என்பதறிந்து, அவரைப் போய்ப்பார்த்தோம்.

''அஞ்சலக ரெக்கரிங் டெபாசிட் கணக்குல 1994ல் நான் சேர்ந்தேன். இப்ப.. மாதந்தோறும் அறுபது ரூபா போட்டு, ஒவ்வொரு மாதமும் ஒரு கணக்கு வீதம் ஐந்தாண்டுக்கு சிறுசேமிப்புக் கணக்கு துவக்கி வர்றேன். இப்ப ஐம்பத்து நாலுமாசம் கட்டியாச்சு. இதுவே அறுபது மாசம் முடிஞ்சா - அதாவது அஞ்சு வருஷம் ஆனப்புறம் எனக்கு, 1999ல் ஒவ்வொரு மாதமும் ஐயாயிரம் ரூபாய் கிடைக்கும் சார். அதை அப்படியே கிஸான் விகாஸ்ல போடறதா இருக்கேன். இப்ப எனக்கு நாற்பத்தோரு வயசு ஆகுது; ஐம்பத்தஞ்சி வயசாகிறபோது சுமார் முப்பத்தெட்டாயிரம் ரூபாய் வீதம் கிடைக்கும். அதுக்கு மேல என்னங்க வேண்டியிருக்கு, எந்தப் பிரச்சினையும் இல்லாமெ, என்னோட ஓய்வுகால வாழ்க்கையை நிம்மதியா... மகிழ்ச்சியா என்னால கழிக்க முடியும்...''

''ஏன் நீங்க பேங்குலயோ தனிப்பட்ட நிதி நிறுவனத்துலயோ பணம் போடலாம்னு நினைக்கலே - அதிக வட்டி வருமில்ல? என்று குறுக்கிட்டோம், நாம்.

''பணத்தைச் சேர்க்கிறது ஒரு பக்கம் இருந்தாலும், அதைப் பாதுகாக்கிறதும் நம்பிக்கையும் தானுங்களே முக்கியம்? கொஞ்ச காலமாகப் பல நிதி நிறுவனங்கள்ல நடந்த மோசடி பத்தியெல்லாம் சேதி வருது பார்த்தீங்கள்ல? இதே

# அண்ணா பேசுகிறார்...

தமிழ் மக்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட நாவன்மை படைத்தவர்களுள், மிகுந்த செல்வாக்குள்ள ஒருவர் "அண்ணா". தமிழ்ப்பேச்சு முறையில் அண்ணா, உண்மை மறுமலர்ச்சியைக் கையாண்டவர். பழைமை முறையில், கூட்டத் தலைவரையும் பொதுமக்களையும் போற்றிப் போற்றி முன்னுரையை நீட்டிப் பேசும் வழக்கம் அவருக்கு இல்லை. எடுத்துக்காட்டு :



"இலட்சியங்களைச் சடுதியில் அடைவதென்பது எந்த இயக்கத்திலும் சுலபமான காரியமன்று, அதிலும் நமது இயக்க இலட்சியங்களோவெனில், பல ஆண்டுகள் போர் புரியினும், மேலும் மேலும் போர்க்களமே நமது கண்முன் தெரியும்படியான நிலைமையைத் தரவல்லது! தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பு ஆரம்பித்து வெற்றியோ தோல்வியோ அடைந்து, வெற்றி கண்டால் ஆனந்தத் தாண்டவ மாடுவதும், தோல்வி நேரிடின் கொட்டாவி விட்டுத் தூங்கப் போவதும், அரசியல் கட்சிகளின் இலட்சணமாக இருக்கிறது...

நாம், மனித சமுதாயத்திலே, சமத்துவம், சகோதரத்துவம், விடுதலை – நிலவ வேண்டுமென ஆசைப் படுகிறோம். பல நூற்றாண்டுகளாக நம் நாட்டிலே இந்நிலை இல்லை என்பதைச் சரித்திரங் கூறுகிறது. மக்கள் சமத்துவம் சகோதரத்துவம் விடுதலை பெறுவதென்பது சுலபத்திலே தீர்ந்து விடக் கூடியதன்று. இந்த இலட்சி யங்களின் சாயல்களைப் பெறுவதற்கு ஐரோப்பிய நாடுகளில் புரட்சிகள் நடந்து இரத்த ஆறுகள் ஓடி இருக்கின்றன. மக்களிடையே சமத்துவம் நிலவுவதென்றால், அதைத் தடைப்படுத்தும் கொள்கைகள் அழிக்கப்பட வேண்டும். அந்தக் கொள்கைகளைக் கொண்ட இயக்கங்களுடன் போரிடத்தான் வேண்டும். அந்தப் போரின் அவசியத்தை மக்களிடை எடுத்துக்கூறி அதில் ஈடுபடக்கூடிய அளவு பக்குவம், பலம் – இவற்றைப் பெறும்படியாக, மக்கள் தயார் செய்யப்பட வேண்டும். சுருங்கக் கூறின், அறிவுப்படை அணிவகுப்பு நமது முதற்பணி. அதில் நாம் ஓரளவிற்கு வெற்றி பெற்றுவிட்டோம்! நாம் கண்ட வெற்றிக்குப் பிறகு, அது நமக்குச் சர்வ சாதாரணமாகத் தோன்றக்கூடும்; அலட்சியமாகவும் அதை நோக்கக்கூடும். ஆனால், புராதனத்தையே புனிதமெனக் கருதும் இந்நாட்டிலே புதிய அறிவுப்படை திரட்டப்படுவதென்றால் அது ஓர் ஒப்பற்ற வெற்றி என்பதை யார் மறுக்க முடியும்?...

சமுதாய சீர்திருத்தங்களுக்கெனத் தோன்றிய சமாஜங்கள், கூடங்கள் யாவும் பெரிதும் மதப் பற்றையே தலையாகக் கொண்டிருந்தன. மதப் போர்வை இருந்ததால் மக்கள் தாராளமாகத் தங்கு தடையின்றி அவ்வியக்கங்களில் சேரவும், அவற்றிலே மட்டற்ற நம்பிக்கை வைக்கவும் ஏதுவாயிற்று. ஆனால், பரந்து விளங்கிய அவ்வியக்கங்கள், சமுதாயத்திலே பிரமாதமான மாறுதலைச் செய்து காட்டவில்லை! ஏனெனில், பெரிய மாறுதல்களிலே மக்களுக்கு ஆர்வம் எழும் வகையிலே, அறிவுச்சுடர் புகவில்லை. மதத்திலே இலயித்துள்ள எந்த இயக்கத்தாலும், மனமாற்றத்தை, மனப்புரட்சியை உண்டாக்க முடியாது! புதிய தத்துவார்த்தங்கள், புதிய குருக்கள், விருத்தியுரைகள் ஏற்படலாம். ஏதாவதொரு மதத்திற்குச் சற்றே முரணான திட்டம் ஏற்படினும், அதற்காக ஏதேனும் ஒரு பழம் ஏட்டை எடுத்து, புதிய அர்த்தம் சொல்ல வேண்டி வந்ததே தவிசமூகக் கோளாறுகளை ஒழிக்க, முதலில் கோளாறுகளின் காரணங்களைப் பட்டவர்த்தனமாக எடுத்துக்கூறும் விதத்திலே அந்த இயக்கங்கள் வரவில்லை. அடிமைத்தனத்திலுள்ளவர் தொகையே இங்கு அதிகம். ஆகவே, இத்தகையோர் அன்னியரை விரட்ட விடுதலைப் போர் தொடுத்துப் பயனில்லை என்பதைத் தோழர் ஈ.வெ.ரா. எடுத்துக் காட்டினார். 'வெளிநாட்டு விரோதியை விரட்டியடிக்கும் சக்தி நமக்கு வேண்டுமானால், இங்கு அடிமைப்படுத்துவோர் இருக்கலாகாது' என்றார். 'வெள்ளையனை ஓட்டி, சுய ஆட்சி பெறவேண்டுமென்ற ஆவலில் அதிக மக்கள் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டுமானால், அதே விடுதலை ஆர்வம் இங்கு முதலில் எழவேண்டும்' என்றார். இங்கு அக்கிரகாரத்தையும் சேரியையும் உள்ளடக்கிய ஊர்களிலே வசித்துக்கொண்டு, இங்கு வெளியே செல்ல வேண்டுமானால் பூனைக்கும் பல்லிக்கும் பயந்து வாழும் நிலையில் இருந்துகொண்டு, இங்கு விதவையை மணந்துகொண்டால் ஆண்டவன் ஆணையை மீறியதாகும் என்ற மனோபாவத்தை வைத்துக்கொண்டு, "எங்கள் ஊரை ஆட்டி வைக்கும் நீங்கள் யார், போங்கள் இந்த நாட்டைவிட்டு" என்று நாம் எங்ஙனம் சொல்லமுடியும்? சொன்னாலும் அவன் எங்ஙனம் போவான்?...பழைய ஏடுகளுக்கே, பல நூற்றாண்டுகளாக அடிமைப்படுத்தப்பட்ட நம்மை, சமூகத்தில் சிறுபான்மையினர், ஆயுத பலமின்றி 'ஆத்ம பலத்தாலேயே' ஆயிரக்கணக்கான வருஷங்களாக அடிமைப்படுத்திய நம்மைப் பிறப்பினாலேயே ஒருவன் நமக்கு மேலானவன் – பூசுரன் – என்ற மனோபாவத்தை வளர்த்துக்கொண்டே நம்மை, வெள்ளைக்காரரின் பீரங்கிப்படை அடிமைப்படுத்தியதிலே ஆச்சரியமொன்று மில்லை! ஆகவே, அடிமை மனப்பான்மையை வளர்க்கும் எதுவாயினும் அதை எதிர்த்துப் போரிட வேண்டிய அவசியம் நமக்கு ஏற்படுகிறது!".

*– மா.க.சம்பந்தன் எழுதி 'மணிவாசகர் பதிப்பகம்' வெளியிட்ட "சிறந்த பேச்சாளர்கள்" என்ற புத்தகத்திலிருந்து.*

---

காஞ்சிபுரத்துல கூட ஒரு நிதி நிறுவனம் (பெயரைச் சொல்கிறார்) ரொம்பப் படிச்சவங்கள்லாம் கூட ஆர்வத்தோட போயி அதுல சேர்ந்து, ஏராளமான பணத்தைப் போட்டு வெச்சாங்க; இப்பதான்.. போனவாரம் இந்த நிறுவனமே எல்லோருக்கும் "அம்பேல்" சொல்லிட்டுப் போயிட்டு! அவ்வளவு பேரு பணமும் காலி. எதுலயும் ஒரு நம்பிக்கையும் நாணயமும் வேணும்க. இந்த சிறுசேமிப்புல வட்டி கொஞ்சம்தான். சிறுகச் சிறுகத்தான் பணம் வரும். ஆனா, நம்பிக்கையோட சிறுகச் சேர்த்து நாணயத்தோட பெருக வாழ முடியும்களே! இப்பிடியெல்லாம் யோசனை பண்ணி பணத்தெ நாம காப்பத்துனா, வருங்காலத்துல பணம் நம்மைக் காப்பத்தும்க!' என்று உறுதிபடப் பேசினார், திரு. ரமேஷ்குமார்.

அவருடைய பேச்சு "சிறுசேமிப்பில் இன்னுமா நீங்கள் சேரவில்லை" என்று நம்மையே கேட்பது போலிருந்தது.

**– பி.எல்.ராஜேந்திரன்**





# அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

*தமிழகம் தழைத்தோங்கிட மாண்புமிகு முதல்வர் **கலைஞர்** அவர்கள் உருவாக்கிச் செயல்படுத்தி வரும் திட்டங்களில் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' நாடெங்கும் சிறப்புறச் செயல்படுத்தப்பட்டு வருகிறது; காஞ்சிபுரம் மாவட்டத்தில் இத்திட்ட வளர்ச்சி இணையற்றுத் திகழ்கிறது;*

***தாமல்:*** காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இக்கிராமத்தில் ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் 91 பணிகள் ரூ.59.24 இலட்சத்திற்குத் தொடங்கப்பட்டு 83 அவற்றில் முடிக்கப்பட்டுள்ளன. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் 12 பணிகள் 30.68 இலட்சத்திற்கு எடுக்கப்பட்டு, அவற்றில் 6 முடிக்கப்பட்டுள்ளன.

இதில் சமுதாயக்கூடம், நியாயவிலைக்கடை, கல்வெர்ட், கால்வாய், இணைப்புச்சாலை, பள்ளி விளையாட்டு மைதானம் மேம்பாடு செய்தல், மேல்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுதல், தொகுப்பு வீடுகள் கட்டுதல், சத்துணவுக்கூடம், தனியார் கழிப்பிடம், புகையில்லா அடுப்பு, பால் உற்பத்தியாளர் சங்கம் மூலம் புல் பண்ணை அமைத்தல், குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பைப்லைன் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டுதல், நீர்பாசனக்கால்வாய் ஏரிக்கலங்கள் கட்டுதல் போன்ற திட்டங்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

***உத்திரமேரூர் – சாலவாக்கம்***

இத்திட்டத்தின் கீழ், இக்கிராமத்தில் 16 பணிகள் ரூ.18.75 இலட்சத்தில் எடுக்கப்பட்டு, அதில் 14 முடிக்கப்பட்டுள்ளன.



ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ், 143 பணிகள் ரூ.74.55 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் எடுக்கப்பட்டு, அதில் 118 முடிக்கப்பட்டுள்ளன. சிறுபாலம், நெல் அடிக் களம், இணைப்புச்சாலை, மாணவர்கள் தங்கும் விடுதி, தொகுப்பு வீடுகள், தொலைகாட்சி அறை, பயணியர் நிழற்குடை, தெருவிளக்கு அமைத்தல், தனியார் கழிப்பிடம் அமைத்தல், புகையில்லாத அடுப்பு, சுடுகாட்டிற்குப் பாதை அமைத்தல், கிராமக்குளம் மேம் படுத்துதல், கூடுதல் பண்ணைக் கட்டடம், பாசனக் கால்வாய் மேம்



படுத்துதல், விசைப்பம்பு பராமரிப்பு போன்ற பணிகள் இவற்றில் அடங்கும்.

***குன்றத்தூர் (இ) படப்பை***

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 21 பணிகள் ரூ.33.12 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப் பட்டதில் 12 முடிக்கப் பட்டுள்ளன. ஒருமுகப் படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் 155 பணிகள் ரூ.47.98 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டதில் இதுவரை 84 முடிக்கப் பட்டுள்ளன.

மீன் மார்க்கெட் கட்டுதல், பாலம் அமைத்தல், சமையல் கூடம், இணைப்புச்சாலை, தெருவிளக்கு அமைத்தல், நியாயவிலைக்கடை, உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடம், விஞ்ஞானக்கூடம், கால்நடை மருத்துவமனை, தொகுப்பு வீடுகள், தனியார் கழிப்பிடம், ஜீவுன்தாரா கிணறு, தார்ச்சாலை, புகையில்லா அடுப்பு, மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, பைப்லைன் விஸ்தரிப்புப் பணிகள் இதில் அடங்கும்.

***மடிப்பாக்கம்***

தாமஸ் மலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தின் கீழ் 20 பணிகள் 52.45 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டன; அவற்றில் 15 முடிக்கப்பட்டுள்ளன. ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தில் 15 பணிகள் ரூ.37.44 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, 7 முடிக்கப்பட்டுள்ளன.

கூடுதல் பள்ளிக் கட்டடம், சத்துணவுக்கூடம், விநியோகக்கடை, நூலகக் கட்டடம், கைப்பம்பு, சாலை மேம்படுத்துதல், கழிவுநீர்க் கால்வாய், பேருந்து நிலையம் மேம்படுத்துதல், பயணியர் நிழற்கொடை, சோடியம் விளக்குகள் அமைத்தல், தனியார் கழிப்பிடம், புகையில்லா அடுப்பு, குளம் பராமரிப்பு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, மோட்டார் அமைத்தல் போன்ற பணிகள் இதில் அடங்கும்.

***மூவரசம்பட்டு.***

இவ்வூராட்சியானது தாமஸ் மலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் 17 பணிகள் ரூ.28.92 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, 11 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் 7 பணிகள் ரூ.21.27 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, அவைகளில் 4 முடிக்கப்பட்டுள்ளன.







உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடம், கழிப்பறை, தொலைக்காட்சி அறை, தார்ச் சாலை, சத்துணவுக்கூடம் பழுதுபார்த்தல், சமையல் அறை, சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல், சிறுபாலம், புகையில்லா அடுப்பு, பொதுவிநியோகக்கடை, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, பைப்லைன் விஸ்தரிப்பு, பம்ப் ரூம் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

*"அறப்போருள்ளத்துக்கு துணிவு வேண்டும்; தூய்மை வேண்டும்; தன்னல மறுப்பு மிக மிகத் தேவை; இதுதான் அறப்போரின் இலக்கணம். தாக்குவது எளிது; தாங்கிக் கொள்வது கடினம். எனினும் சீரியதோர் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் அறப்போர் உள்ளம் பெற்றாக வேண்டும். அறப்போரின் முதற்கட்டம் அவரவரும் தத்தமக்குள்ளாகவே, எழும் எண்ணங்களுடன் – எழுச்சிகளுடன் – கோப தாபங்களுடன் – ஆசாபாசங்களுடன் போரிட்டும் வெற்றி காண்பதாகும். அந்த வெற்றி அளித்திடும் அளவிடற்கரிய ஆற்றல் விளக்கிடக்கூட இயலாது; உணரத்தான் முடியும். மிக மிக நீண்ட காலம் பூமிக்கடியில் புதையுண்டு கிடக்கும் கரித்துண்டுதானே ஒளிவிடும் 'வைரம்' ஆகிறது என்கின்றனர்....?*

***– அறிஞர் அண்ணா***

***வல்லம்***

காட்டங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வல்லம் ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தின் கீழ் 16 பணிகள் 23.90 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 7 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் 106 பணிகள் ரூ.40.99 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 24 பணிகள் முடிந்துள்ளன. கல்வெர்ட் கட்டுதல், நூலகக் கட்டடம் கட்டுதல், சமையல் அறை கட்டுதல், சத்துணவு மையம் கட்டுதல், சமையல் அறை கட்டுதல், பள்ளிக் கழிப்பறை, கூடுதல் பள்ளிக்கட்டடம், தார்ச்சாலை, சாலை மேம்பாடு செய்தல், கழிவுநீர்க் கால்வாய் கட்டுதல், தொகுப்பு வீடுகள் கட்டுதல், பயணியர் நிழற்கொடை, மயானச்சாலை, தனியார் கழிப்பிடம், சாண எரிவாயுக்கலன், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்தல், பைப்லைன் விஸ்தரிப்பு போன்ற பணிகள் இதில் அடங்கும்.



***கடலூர்***

லத்தூர் ஊராட்சி ஒன்றியம் – கடலூரில் – அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 12 பணிகள் இங்கே ரூ.18.83 மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு, 8 முடிக்கப்பட்டுள்ளன. ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ், 81 பணிகள் ரூ.39.75 மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 32 முடிக்கப்பட்டுள்ளன. சத்துணவுக்கூடம் அமைத்தல், பொது விநியோகக்கடை, கைப்பம்பு அமைத்தல், மின்சார விளக்கு அமைத்தல், களம் அமைத்தல், தொகுப்பு வீடுகள் கட்டுதல், கல்வெட்டு கட்டுதல், பயணியர் நிழற்குடை, கூடுதல் பள்ளிக்கட்டடம், தனியார் கழிப்பிடம், புகையில்லா அடுப்பு, மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்தல் போன்ற பணிகள் இவற்றில் அடங்கும்.

***தூணாம்பேடு***

சித்தாமூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தூணாம்பேட்டில், அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தின்கீழ் 28 பணிகள் ரூ.38.98 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் எடுக்கப்பட்டு 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் 110 பணிகள் ரூ.27.32 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 54 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கூடுதல் பள்ளிக் கட்டடம், சமையல் அறை, குளம் மற்றும் ஏரி சீரமைத்தல், நூலகக் கட்டடம் கட்டுதல், கல்வெர்ட் கட்டுதல், தார்ச்சாலை, தரைப்பாலம், பள்ளிகளுக்கு விஞ்ஞானக்கூடம், தொகுப்பு வீடுகள் கட்டுதல், பைப்லைன, கடை, நியாயவிலைக்கடை, தனியார் கழிப்பிடம், சத்துணவுக்கூடம், தெருவிளக்கு அமைத்தல், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி



அமைத்தல் போன்ற பணிகள் இதன் கீழ் எடுக்கப்பட்டுள்ளன.

*செம்பாக்கம்*

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள செம்பாக்கத்தில் அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தின் கீழ் 7 பணிகள் ரூ.16.95 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளது – ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் 81 பணிகள் ரூ.30.21 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 67 பணிகள் முடிக்கப்பட்டிருந்தது. சத்துணவுக்கூடம் கட்டுதல், பொதுவிநியோகக். கடை கட்டுதல், கூடுதல் பள்ளிக் கட்டடம், விஞ்ஞானக்கூடம், தொகுப்பு வீடுகள், தொலைக் காட்சி அறை, பயணியர் நிழற்குடை, தனியார் கழிப்பிடம், புகையில்லா அடுப்பு, புதிய கிணறு எடுத்தல், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்தல், பைப்லைன் மற்றும் பம்பு ரூம் கட்டுதல் போன்ற பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

*நத்தப்பேட்டை*

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நத்தப்பேட்டை அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 23 பணிகள் ரூ.61,77,000 மதிப்பீட்டிலும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் 84 பணிகள் ரூ.103 இலட்சம் மதிப்பீட்டிலும் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் பள்ளிக்கட்டடம், பள்ளிக் கழிப்பறை, சத்துணவுக் கட்டடம், பொது விநியோகக் கடைக் கட்டடம், சமையற்கூடம், கல்வெர்ட், மயானப்பாதை, சோடியம் விளக்குகள், கான்கிரீட் சலை மற்றும் கழிவுநீர்க் கால்வாய் ஆகிய பணிகளும் ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் சிறுபாலம்,









சாலைகள மேம்பாடு, வடிகால் அமைத்தல், தொகுப்பு வீடுகள், தனிநபர் கழிப்பிடம், ஜீவன்தாரா கிணறுகள், குளம், பராமரிப்பு, தூளா அடுப்புகள், விசைப்பம்புகள், பைப்லைன் விஸ்தரிப்புப் பணிகள் ஆகிய பணிகளும் எடுத்துச் செய்யப்பட உள்ளன.

*இலுப்பப்பட்டு*

வாலாசாபாத் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த இலுப்பப்பட்டு அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத்தில் அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தின்கீழ் 13 பணிகள் ரூ.22,00,000 மதிப்பீட்டிலும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் 69 பணிகள் ரூ.55,00,000 மதிப்பீட்டிலும், செயற்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் பள்ளிக் கட்டடம், கழிவறை, சமையற்கூடம், பொது விநியோகக்கடை, பாலம், தார்சாலை, சோடியம் ஆவிவிளக்குகள், மயானபாதை, சிறுபாலங்கள் ஆகிய பணிகளும், ஒருமுகப் படுத்தப் பட்ட திட்டத்தின் கீழ் தெருக்கள் – மேம்பாடு மயானப் பாதை, தார்ச் சாலை, தொகுப்பு வீடுகள், ஜீவன் தாரா கிணறுகள், தனிநபர் கழிப்பிடம், குட்டை சீரமைப்பு, தூளா அடுப்புகள், விசைப்பம்பு மற்றும் பைப் லைன் விஸ் தரிப்புப் பணிகள் எடுத்துச் செய்யப் பட உள்ளது.



மாமல்லபுரம் கான்கிரீட் சாலை



### ஊரப்பாக்கம்

காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊரப்பாக்கம் அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத்தில் – அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீ, 71 பணிகள் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒருமுகப்படுத்தும் திட்டத்தின்கீழ் 71 பணிகள் ரூ.78 இலட்சம் மதிப்பீட்டிலும் செயற்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கான்கிரீட் சாலைகள், கழிவுநீர்க் கால்வாய் மற்றும் சோடியம் ஆவிவிளக்குகள் அமைக்கவும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் சிறுபாலம், சாலைகள், தொகுப்பு வீடுகள், ஜீவன்தாரா கிணறுகள், தனிநபர் கழிப்பிடங்கள், தூளா அடுப்புகள், விசைப்பம்புகள் ஆகிய பணிகள் எடுக்கப்படவும் உள்ளன.

### வல்லம்

திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வல்லம் அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத்தில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 6 பணிகள் ரூ.13 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ், 66 பணிகள் ரூ.32 இலட்சம் மதிப்பீட்டிலும் செயற்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் – தார்ச்சாலை, சமையற்கூடம், சத்துணவு மையக் கட்டடம், பொது விநியோகக்கடை, கழிப்பறை, சோடியம் ஆவிவிளக்குகள் ஆகிய பணிகளும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் சாலை மேம்பாடு, பள்ளிக் கட்டடம், நியாயவிலைக் கடை, தொகுப்பு வீடுகள், ஜீவன்தாரா கிணறு, தனிநபர் கழிப்பிடங்கள், குளம் பராமரிப்பு, தூளா அடுப்புகள் மற்றும் விசைப் பம்புகள் ஆகிய பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

### திரிசூலம்

தாமஸ்மலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த திரிசூலம் அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத்தில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 10 பணிகள் ரூ.50 இலட்சம் மதிப் பீட்டிலும், ஒருமுகப் படுத்தப் பட்ட திட்டத்தின்கீழ் 17 பணிகள் ரூ.38 இலட்சம் மதிப்பீட்டிலும் செயற்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் சாலைகள், பாலங்கள், பள்ளிக் கட்டடம், சுற்றுச்சுவர், கல்வெர்ட், பொது விநியோகக் கடை, தெருவிளக்குகள் ஆகிய பணிகளும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தில் சிறுபாலம், கல்வெர்ட், சாலைகள் மேம்பாடு, தனிநபர் கழிப்பிடங்கள், ஏரி ஆழப்படுத்துதல், தூளா அடுப்புகள், விசைப்பம்பு மற்றும் பைப்லைன் விஸ்தரிப்பு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

### பொழிச்சலூர்

தாமஸ் மலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பொழிச்சலூர் அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத்தில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 15 பணிகள் ரூ.66 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் 77 பணிகள் ரூ.68 இலட்சம் மதிப்பீட்டிலும் செயற்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.





அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கூடுதல் பள்ளிக்கட்டடம், கழிப்பறை, சமையற்கூடம், பேருந்து நிலைய மேம்பாடு, மயானப்பாதை, பொது விநியோகக்கடை, சத்துணவுக் கட்டடம், கான்கிரீட் சாலைகள், சோடியம் ஆவிவிளக்குகள் ஆகிய பணிகளும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் தார்சாலைகள், பொது விநியோகக்கடை, தனிநபர் கழிப்பிடங்கள், விசைப்பம்புகள், பைப்லைன் விஸ்தரிப்பு போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

### புதுப்பட்டினம்

திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த புதுப்பட்டினம் அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத்தில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 17 பணிகள் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் 69 பணிகள் ரூ.1.87 இலட்சம் மதிப்பீட்டிலும் செயற்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் – பள்ளிக் கட்டடங்கள், கழிப்பறைகள், சத்துணவு மையக் கட்டடங்கள், பொது விநியோகக் கடை கட்டடங்கள், கான்கிரீட் சாலை, சோடியம் விளக்குகள், மயானப்பாதை ஆகிய பணிகளும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ், தார்ச்சாலைகள், பள்ளிக் கட்டடம், குளம் பராமரிப்பு, தொகுப்பு வீடுகள், தனிநபர் கழிப்பிடங்கள், புகையில்லா அடுப்புகள், பைப்லைன் விஸ்தரிப்பு மற்றும் விசைப்பம்புகள் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

### குன்னத்தூர்

மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த குன்னத்தூர் அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத்தில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 15 பணிகள் ரூ.14 இலட்சத்திலும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் 63 பணிகள் ரூ.36 இலட்சத்திலும் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தெருவிளக்குகள், நியாயவிலைக்கடை, சத்துணவுக்கூடம், கல்வெர்ட், கதிரடிக்கும் தளம், கைப்பம்புகள் ஆகிய பணிகளும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் பேருந்து நிழற்குடை, நீர்த்தேக்கத் தொட்டி, தொகுப்புவீடுகள், ஜீவன்தாரா கிணறுகள், தனிநபர் கழிப்பிடங்கள், ஏரி பழுதுபார்ப்பு, தூளா அடுப்புகள், விசைப்பம்புகள் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

### வேடந்தாங்கல்

அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வேடந்தாங்கல் அண்ணா மறுமலர்ச்சிக் கிராமத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், 21 பணிகள் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டிலும், ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின்கீழ் 86 பணிகள் ரூ.63 இலட்சம் மதிப்பீட்டிலும் செயற்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் பள்ளிக் கட்டடம், சத்துணவுக்கூடம், கழிப்பறைகள், சமையற்கூடம், நியாயவிலைக்கடை, சோடியம் விளக்குகள், கல்வெர்ட் ஆகிய பணிகளும் ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ், தொலைக்காட்சி அறை, பேருந்து நிழற்குடை, சாலை மேம்பாடு, அங்கன்வாடிக் கட்டடம், தொகுப்புவீடுகள், ஜீவன்தார கிணறுகள், தனிநபர் கழிப்பிடங்கள், தூளா அடுப்புகள் விசைப் பம்புகள் மற்றும் பைப்லைன் விஸ்தரிப்பு போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

1998–99ல், மொத்தத்தில் – ஒருமுகப் படுத்தும் திட்டத்தில் 551 பணிகளும், அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தில் 121 பணிகளும் எடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

– இவ்வாறு அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் எல்லா வகையிலும் ஏற்றம் பெற்று வருகின்றது.

### நிகரற்ற காஞ்சி

'கி.பி.5 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர் காளிதான் – நாம் பூவெனப் படுவது பொறிவாழ் பூவே ' என்பதைப் போல – "நகரெனப்படுவது காஞ்சி நகரே" (நகேரஷு காஞ்சி) என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.

"கல்வியில் கரையிலாத காஞ்சிமா நகரம்" என்று திருநாவுக்கரசர் பாடியுள்ளார்.

"தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்று ஔவையார் பாடியிருக்கிறார்.

"மாதவம் செய்தது தொண்டை நன்னாடு" என்று சேக்கிழார் பாடியுள்ளார்!

# சோலைவனமாகும் சுடுகாடு

சுடுகாடு என்றாலே திரைப்படங்களிலெல்லாம் நாய் நரிகள் ஊளையிடுவதும், கள்ளி-சப்பாத்தி மண்டிக்கிடப்பதுமான இடங்கள் காட்டப்படுமல்லவா? காஞ்சிபுரம் மாவட்டத்தில் - குறிப்பாகக் காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள இடுகாடுகளையெல்லாம் அவ்வாறன்றிச்




ஊராட்சி மன்றத் தலைவர்

சோலைவனமாக்கும் திட்டமொன்றும் மாவட்ட ஆட்சித்தலைவரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்படி - இடுகாட்டைச் சுற்றிலும் அழகிய வண்ணப் பூச்சுடன் கூடிய சுற்றுச்சுவர்கள் எழுப்பப்படுகின்றது. சுவர் ஓரமெல்லாம் பூச்செடிகள், நிழல் தரும் மரக்கன்றுகள் நடப் படுகின்றன. இடுகாட்டின் உட்பகுதி சமன் செய்யப்பட்டு, முட் செடிகளெல்லாம் அகற்றப்பட்டு வருகின்றன.

மேற்கூறையோடு கூடிய் சுடுகாட்டு மேடைகள் கட்டப்பட விருக்கின்றன.

இவ்வாறான பணிகள் நடை பெறும் கோனேரிகுப்பம் இடுகாடு ஒன்றை நேரில் நாம் போய்ப் பார்த்தோம். சரியான எல்லையோடு சுற்றுச் சுவர் எழுப்பி முடிக்கப் பட்டு, மரக்கன்றுகள் நடப் படுகின்றன. கோனேரிகுப்பம் ஊராட்சித் தலைவர் திருமதி பி.பாத்திமா அவர்களும் வேறு சிலரும் நம்மைக் காண அங்கே வந்துசேர்ந்தனர்.

"இந்த வேலை பற்றி நீங்கள்லாம் கலெக்டரைக் கேட்டப்புறம் தான் அவர் இம்மாதிரி ஏற்பாடுகளையெல்லாம் செய்யறாரா?". என்றோம்.

"நல்லா கேட்டிங்க போங்க. இங்கே சுத்து வட்டாரத்துல இருக்கிற ஜனங்கள் எல்லாம் இங்கோ்ந்து இந்தச் சுடுகாட்டையே தூக்கணும்; திறந்த வெளியில பிணம் எரிக்கிறதெப் பார்க்கறது, அதன் வாடையுமே சகிக்கலைன்னெல்லாம் எனக்கே மனுக் கொடுத்திருக்காங்க; அதையெல்லாம் நானே மேலிடத்துல தெரிவிச்சிருக்கேன். அதுக்கப்புறம் இதுபத்தி யோசிச்சு, எங்ககிட்டேல்லாம் பேசித்தான் கலெக்டர் இந்தமாதிரி செய்யறாங்க. இப்ப, புகார் செஞ்சவங்களே வாயடச்சிப் போய்ட்டாங்க!" என்றார் அந்த அம்மையார்.




காஞ்சிபுரத்தில், சின்ன வயதில் அண்ணா படித்த பச்சையப்பன் இடைநிலைப் பள்ளி



# "தமிழ்நாடு அரசின் வீடியோ செய்திப் படங்களை சென்னைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பிட வாரந்தோறும் 30 நிமிடம் இலவசமாக ஒதுக்கித் தரவேண்டும்!"

புதுடில்லி மாநாட்டில்,
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திரு.வ.முல்லைவேந்தன் அவர்கள் கருத்துரை

"மத்திய அரசு முன்னின்று நடத்துகின்ற இந்தச் செய்தி மற்றும் திரைப் படத்துறை அமைச்சர்களின் 23-வது மாநாட்டில் தமிழ்நாடு அரசின் சார்பில் கலந்துகொள்வதிலே நான் பெருமைப்படுகிறேன்.



இந்த மாநாட்டிற்குத் தலைமையேற்கும் மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மற்றுமுள்ள பல்வேறு மாநிலங்களின் செய்தித்துறை அமைச்சர் பெருமக்களுக்கும், செய்தித் துறை அலுவலர்களுக்கும் எங்கள் மாண்புமிகு தமிழ்நாடு அரசு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சார்பில் நல்வாழ்த்தைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

திரைப்படத்துறைக்குத் தொழில் அந்தஸ்து அளித்துள்ளமைக்காக, முதலாவதாக மத்திய அரசுக்குத் தமிழக அரசின் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்; இதன் மூலம் அத்துறையானது பல்வேறு நிதி நிறுவனங்களின் நிதியாதாரங்களைப் பெற்றிட முடியும். அதுகுறித்து தமிழ்நாடு அரசு விரைவிலேயே ஒரு நல்ல முடிவெடுத்து அறிவிக்கும். திரைப்படத்துறைக்குத் தொழில்துறை அந்தஸ்து அளிக்கும் அதே நேரத்தில் அவர்கள் பல்வேறு சலுகைகள் மற்றும் மானிய உதவிகளுக்காக மாநில அரசினை நாடுவார்கள், எனவே இது தொடர்பாக மத்திய அரசு மாநில அரசுகளுக்கு இயன்ற அளவு நிதிஉதவி அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய அரசியல் சட்டத்தின் 7-வது பிரிவின் கீழ் பொது அதிகாரப் பட்டியலில் திரைப்படத் துறையைச் சேர்ப்பது குறித்து ஏற்கெனவே எங்கள் அரசு அதிருப்தி தெரிவித்திருக்கிறது. இந்தப் பரந்த இந்திய நாடு பல்வேறு வகையான கலாச்சாரம், பண்பாடு, மொழி, நாகரிகம் ஆகியவற்றைக் கொண்டது ஆகும். இதையெல்லாம் மனதில் கொண்டுதான் இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தினை உருவாக்கியவர்கள் திரைப்படத் துறையினை மாநில அரசுக்கான பட்டியலில் வைத்துள்ளனர் என்பதை உணரவேண்டும். அதை எடுத்துக்காட்டுகிற இந்த நேரத்தில் தமிழ்நாடு அரசு, திரைப்படத்துறை மேலும் வளர்ச்சி பெறச் செய்யவும், அத்துறையிலே மேலும் பல புதுமைகளை ஏற்படுத்தவும் எல்லா வகையான நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறது. இந்நிலையில், திரைப்படத்துறையைப் பொதுப் பட்டியலில் இணைக்கவேண்டிய அவசியம் என்ன? - என்று என்னால் கண்டுணர முடியவில்லை.

## அவசரச் சட்டம்

திரைப்படத் தொழில் எதிர்நோக்கியுள்ள பல பிரச்சினைகளை மிகுந்த பரிவோடு எங்கள் அரசு கவனித்து வருகிறது. தற்பொழுது படத்தயாரிப்பில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை, திரைப்படங்களை வினியோகிப்பதில் உள்ள சிக்கல்கள் ஆகியவற்றின் காரணமாகக் கேளிக்கை வரி அமைப்பை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று அண்மையில் தமிழகத்தில் உள்ள திரைப்படத்துறையின் முக்கியமானவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து முறையிட்டுக் கொண்டார்கள். அதன்பேரில் முதல்வர் கலைஞர் அவர்கள் அத்துறை வளர்ச்சிக்கான பல சலுகை களையும், குறிப்பாகக் கேளிக்கை வரிச்சட்டச் சலுகையினையும் அறிவித்தார்கள்.



அதன்படி 24.7.1998ல், மாநிலக் கேளிக்கை வரிச் சலுகைகளை வழங்கும் அவசரச் சட்டம் மாநில அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள கேளிக்கை வரியினை மேலும் குறைப்பது உள்ளாட்சி அமைப்புகளுக்கான வருவாயில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

எங்கள் மாநிலத்தைப் பொறுத்த வரையிலே இன்னொரு குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால், திரைப்படத் தொடர்பான பிரச்சினைகளைக் களைவதற்கென்றே, செய்தி–சுற்றுலாத் துறைச் செயலாளர் தலைமையில் மாநில அளவிலும், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தலைமையில் மாவட்ட அளவிலும் தனிக்குழுக்கள் அமைக்கப்பட்டு இயங்கிவருகின்றன.

### முன்னணியில் நிற்கும்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் மேலான அறிவுரைப்படி, திருட்டு வீடியோ மற்றும் காம்பாக்ட் டிஸ்க் பரவலாக்கத்தை அடியோடு தடுக்கவும், தீவிர நடவடிக்கை எடுப்பதில் எங்கள் அரசு முன்னணியில் இருக்கிறது என்பதை என்னால் பெருமையோடு சொல்லிக் கொள்ள முடியும். மத்திய அரசின் 1957–ஆம் ஆண்டு உரிமைப் பதிவுச் சட்டப்படி (Copyright Act) திருட்டு வீடியோ தயாரிப்போர் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுகிறார்கள்.

ஆனால், அதன்படி தவறிழைப்போருக்கு அளிக்கப்படுகின்ற குறைந்தபட்சத் தண்டனையையும், அபராதத்தையும் அதிகரிக்கும் வகையில் அச்சட்டத்தின் 63 மற்றும் 63A ஆகிய பிரிவுகள் திருத்தப்பட வேண்டும் அல்லது தனி ஷரத்துக்கள் சேர்க்கப்படவேண்டும். ஏனெனில், மாநில அரசு இதற்கெனத் தனிச்சட்டம் இயற்றமுடியாது.

இதற்கிடையில் அந்தச் சட்டப்பிரிவைக் கடுமையாக நடைமுறைப்படுத்தும்படி மாநிலத்தின் காவல்துறைத் தலைமை அதிகாரிக்கு அறிவுரை வழங்கப்படவுள்ளது.

இதனடிப்படையில், வேறு சில சட்டபூர்வ நடவடிக்கைகளும் தமிழ்நாடு அரசால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அதாவது, இனிமேல் புதிதாக யாரும் வீடியோ பார்லர் அல்லது வீடியோ தியேட்டர் தொடங்க அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், வீடியோ திருட்டுகளைத் தடுப்பதற்காக மாநிலத் தலைநகரான சென்னையிலும், 5 பெரிய மாவட்டங்களின் தலைநகரங்களிலும் காவல்துறை தனி கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கேபிள் டி.வி. தொடர்பான 1995 சட்டத்தின்படி, அதற்கான உரிமம் வழங்கும் அதிகாரம் அஞ்சல் துறைத் தலைவரிடமே உள்ளது; இந்நிலையை மாற்றி – சென்னை மாநகரில் காவல்துறை ஆணையாளரும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுமே அவ்வாறு உரிமம் வழங்கும் அதிகாரம் உடையவர்களாக மாற்றப்படவேண்டும் என்று முந்திய கூட்டத்தின் போதே நான் கருத்தறிவித்திருக்கிறேன். அதை இன்றுவரை ஏற்று நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானது.

இந்த மாநாட்டிற்கான நிகழ்ச்சி நிரல் பத்தி 10(1)ல் தமிழ்நாடு அரசு இதுவரை அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களை நியமிக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது; ஆனால் எங்கள் அரசு, சென்னை மாநகரைப் பொறுத்தவரை காவல்துறை ஆணையரையும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர்களையும் அதற்கென அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களாக (Authorised Officers) அறிவித்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



### கேபிள் டி.வி.பிரச்சினை

கேபிள் டி.வி. என்பது இப்போது கிராமங்கள் வரையிலும் பரவியுள்ளது. அதன் உரிமையாளர்கள் சங்கம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் இந்த எல்லைவரை ஒளிப்பரப்பலாம், இன்னொருவர் அந்த எல்லைவரை ஒளிப்பரப்பலாம் என்று அவர்களுக்குள்ளாகவே முறை வைத்துக்கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். அதன்படி, ஒருவர் ஒளிபரப்பு எல்லைக்குள் அடுத்தவர் கேபிள் டி.வி. ஒளிபரப்பமுடியாது என்ற நிலை உள்ளது, இதனால்,, அவர்கள் எந்த நிகழ்ச்சியை ஒளிபரப்புகிறார்களோ அதைப்பார்க்க வேண்டிய கட்டாயத்திற்குத்தான் அந்தந்தப் பகுதி மக்கள் ஆளாவார்களே தவிர, நுகர்வோர்களின் விருப்பத்திற்கேற்ப கேபிள் டி.வி.க்கள் இயக்கப்படுவதில்லை.

இதை நெறிமுறைப்படுத்த நாம் ஒரு வழிமுறையை வகுத்தாக வேண்டும்.

மத்திய அரசு திரைப்படப் பிரிவின்கீழ் திரைப்படங்களும், செய்திப்படங்களும் (Feature Films and Documentaries) தயாரித்து வெளியிடப்படுகின்றன. அவை மாநிலங்களின் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றுக்கு ஒத்துப்போவதாகவோ உடன்பாடுள்ளதாகவோ இல்லை. ஆகவே, அவ்வாறான படங்கள் தயாரிக்கப்படும்போது மத்திய அரசானது மாநில அரசுகளையும் கலந்தாலோசித்துச் செயல்படுவது பயனுள்ளதாக இருக்கு.

### உரிமை தருக

தமிழ்நாடு அரசின் திரைப்படப்பிரிவு ஒவ்வொரு மாதமும் வீடியோ செய்திப் படங்களைத் தயாரித்து வெளியிட்டு வருகிறது. அவை, உரிய கட்டணம் செலுத்தி சென்னைத் தொலைக்காட்சி மூலம் வெளியிடப்பட்டு வருகின்றன. அதுகுறித்து மத்திய அரசின் செய்தி ஒலிபரப்பு அமைச்சகத்தை நான் கேட்டுக் கொள்ளுவது ஒன்றுண்டு; தமிழக அரசு அவ்வாறு பெரும் செலவில் அரசு சாதனைகள் பற்றித் தயாரித்து வெளியிடும் வீடியோ மலர்களை, எல்லோரும் காணத்தக்க முக்கிய நேரத்தில் ஒளிபரப்ப வேண்டும் என்றும், இதற்காக நிரந்தரமாக வாரம் 30 நிமிட நேரத்தை ஒதுக்கித் தருமாறும் சென்னைத் தொலைக்காட்சிக்குத் தாங்கள் அறிவுறுத்திட வேண்டுகிறேன். குறிப்பிட்ட அந்த 30 நிமிட நேரத்தை விற்பனை செய்திடும் உரிமத்தையும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவுக்கே வழங்கவேண்டும்.



அறிஞர் அண்ணா, ரோமாபுரியில் போப்பாண்டவரைச் சந்தித்தல் (17–4–1968)

பொதுச் சுகாதாரம், நுண்ணூட்டச்சத்து, வேளாண்மை மற்றும் மத்திய அரசு நலத்திட்டங்கள் குறித்து தமிழக அரசு உருவாக்கும் செய்திப் படங்களைத் தொலைக்காட்சியிலே வெளியிட ஒரு 30 நிமிட நேரத்தை மாதந்தோறும் தொலைக்காட்சி எங்களுக்கு – அதாவது மாநில அரசுக்கு ஒதுக்கித் தரலாம்.

தமிழ்நாடு அரசின் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் 38 ஆண்டு காலமாகச் சிறப்புற இயங்கிவரும் ஒரு பெரும் அமைப்பு ஆகும். திரைப்படத்தயாரிப்பு தொடர்பான பல்வேறு பாடங்கள் இங்கே பயிற்றுவிக்கப்படுகின்றன.

ஆனால், அங்கே படித்து முதலிடத்தில் தேர்ச்சி பெறுகின்ற மாணவர்களுக்குக்கூட, மத்திய அரசு தொலைக்காட்சி நிலையங்களில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. அத்தகைய இளம் திறமையாளர்களுக்கும் வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும்.

அதேபோல, அனைத்திந்திய வானொலி நிலையத்திலும் ஒலிப்பதிவுப்பிரிவு போன்ற பணியிடங்களுக்குத் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மற்றும் தொலைக்காட்சி நிலையத்தில் முறைப்படி ஒலிப்பதிவு, ஒலிப்பதிவுத் தொழில் நுட்பவியல் பட்டயம் பெற்றவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று இம்மாநாட்டிலே கேட்டுக் கொள்கிறேன்.

திரைப்பட இயக்குநர், திரைக்கதை அமைப்பு, படத்தொகுப்பு, நடிப்பு போன்றவற்றிற்கான எங்கள் நிறுவனத்தில் அளிக்கப்படும் பட்டயப் படிப்புத் தேர்வு, மத்திய அரசு தேர்வாணையத்தினாலும் (UPSC) அங்கீகரிக்கப்பட்டு, மத்திய அரசு அமைப்புகளில் தக்க வேலை வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

இந்த நிறுவனத்திற்கு, அகில இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் குழு (All India Council of Technical Education) உரிய அங்கீகாரம் அளித்திட இந்த மாநாடு மூலமாகத் தொடர்புடையவர்களை நான் விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அப்படிச் செய்வதன் மூலம் – இந்த நிறுவனத்திலே பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு மற்ற தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு இணையான ஊதியம் வழங்கி உவப்படையச் செய்திட இயலும்.

இது மட்டுமல்ல; அதன் காரணமாக நவீன இயந்திரங்களைத் துறையின் வளர்ச்சி கருதி வாங்கிடவும் வழிபிறக்கும்.

நவீன இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறபோது தீர்வு மற்றும் சுங்க வரி விதிப்பு தளர்த்தப்பட வேண்டும். தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தின் மேம்பாடு கருதி இச்சலுகையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**இணைந்து செயல்படலாம்**

அரசுத் திட்ட விளம்பரங்கள் குறித்த பணிகளிலே மாநில அரசும், மத்திய அரசும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதைத் தமிழக அரசு திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறது.

இது குறித்து இம்மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோலப் பயன்மிக்கதோர் திட்டம் தீட்டிச் செயல்படுத்தியாக வேண்டும். அதே நேரத்தில் மாநில அரசுகளின் திட்டங்களும் அதுபற்றிய அறிவிப்புகளும் சமுதாயத்தின் கீழ்த்தட்டு மக்களுக்கும் சென்று சேரவேண்டுமானால் ஒரு குறிப்பிட்ட நேரம் தொலைக்காட்சியில் ஒதுக்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மத்திய அரசு பிரசார் பாரதி அமைப்பிலே மாநில அரசு பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கச் செய்திட வேண்டும்.

மத்திய அரசு – மாநில அரசுப் பிரதிநிதிகள், பல்கலைக்கழகங்கள் இன்னபிற கலாச்சார அமைப்புகளின் பிரதிநிதிகளும் ஒருங்கிணைந்து ஒரு பொதுவான குழு அமைத்து – பிரசார் பாரதி மூலம் உருவாக்கப்படும் திட்டங்களுக்குத் தக்க ஆலோசனைகள் வழங்கலாம்.

திரைப்படச் சான்றிதழ் வழங்கிடும் குழுவினால் அமைக்கப்படும் மத்திய அரசு தணிக்கைக் குழுவிலே, மாநில அரசுப் பிரதிநிதிகள் இடம் பெறாமலிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலை நீக்கப்பட்டு, மாநில அரசுப் பிரதிநிதிகளும் அக்குழுவிலே இடம் பெறச் செய்திட வேண்டும். சாகித்ய அகாடெமியில் மாநில அரசுப் பிரதிநிதிகள் இடம் பெறச் செய்வது போல – பிராந்திய தணிக்கைக் குழுவிலும் மாநில அரசுப் பிரதி நிதிகள் இடம்பெறுமாறு வகை செய்யவேண்டும்.

தமிழ்நாட்டில், சேலத்தில் அகில இந்திய வானொலி நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்ற நீண்ட கால கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படாமல் உள்ளது. இக்கோரிக்கையை நிறைவேற்ற மாண்புமிகு செய்தி–ஒலிபரப்புத்துறை அமைச்சர் அவர்கள் விரைவிலேயே நடவடிக்கை எடுத்து அப்பகுதியில் வாழும் மக்களின் விருப்பத்தினை நிறைவு செய்வார்கள் என்று நம்புகிறேன்.

**பரிபூரண ஒத்துழைப்பு**

மேலும் ஒரு கோரிக்கையினையும் உங்கள் முன் வைக்கிறேன். தமிழ்நாட்டின் மேற்குப் பகுதிகளில் உள்ள ஒசூர் போன்ற இடங்களில் அரசு தொலைக்காட்சி நிலைய நிகழ்ச்சிகள் தெளிவாகத் தெரிவதில்லை. எனவே நடப்பு நிதியாண்டிலேயே ஒசூரில் குறைந்த சக்தி தொலைக்காட்சி (கடப) அஞ்சல் நிலையம் அமைத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வானொலி – தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைத் தொடர்புச் சாதனங்கள் குறித்த பல்வேறு செய்திப் பரிமாற்றம் செய்துகொள்ளுவதற்கு, இந்த மாநாடு பெரிதும் உதவுவதாக இருந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இது தொடர்பாக மத்திய அரசால் எடுக்கப்படுகின்ற நல்ல திட்டங்களுக்காக, மாண்புமிகு கலைஞர் அவர்களின் நிகரற்ற தலைமையின் கீழ் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு தமது பரிபூரண ஒத்துழைப்பினைத் தொடர்ந்து வழங்கும் .

*– மத்திய அரசு செய்தி ஒலிபரப்புத்துறை 31–8–1998 அன்று புதுடில்லியில் நடத்திய மாண்புமிகு செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர்களின் 23–வது மாநாட்டின் முன் வைத்த கருத்துரை.*

## இதுதான் காஞ்சி

*காஞ்சியில் பிறந்த "திக்நாதர்" என்பார் புத்த சமயத்தவர்; இந்தியாவில் புத்த சமயத்தைப் பரப்பியவர்.*

*அரச வம்சத்தில் பிறந்து புத்த சமயத்தைச் சார்ந்த போதி தருமன், காஞ்சியைச் சார்ந்தவரேயாவார்; இவர், சீனா வரை சென்று புத்த சமயத்தைப் பரப்பிய பெருமையாளர்.*

□□□

*காஞ்சிக்கு அருகில் உள்ள திருப்பருத்திக் குன்றில் இரண்டு சமணக் கோயில்கள் உள்ளன. அக்காலத்தில் சமணர்கள் இங்கே தங்கித் தமது சமயத்தை பரப்பியதாக வரலாறு கூறுகிறது. சமண சமயத்தினர் இப்போதும் அப்பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள்.*

□□□

*பெரிய காஞ்சிபுரம் "சிவ காஞ்சி" என்றும், சிறிய காஞ்சிபுரம் விஷ்ணு காஞ்சி என்றும் கூறப்படுகிறது. இதன் மூலம், அந்நாளில் இவ்விரு சமயங்களும் காஞ்சிபுரத்தில் பெற்றிருந்த செல்வாக்கை நாம் உணரலாம்.*

□□□

*இந்தியாவிலேயே நிகரற்றது காஞ்சிபுரம் பட்டுத்தான்; அதற்கடுத்தது ஆரணிபட்டு. பெரிய இடத்து திருமணங்கள்காஞ்சிபுரம் பட்டினாலேயே பெருமைப் படுகிறது!*





# நிலவொளிப் பள்ளிகள்

காஞ்சிபுரம் நகரம் பட்டுத்தொழிலில் முன்னேறியுள்ள நகரம் ஆகும். இங்கு பட்டு மற்றும் இதரத் தொழில்களில் பணிபுரியும் கல்வியறிவு இல்லாத மற்றும் வயது முதிர்ந்த மாணவ-மாணவிகளின் எண்ணிக்கை அதிகம். இவர்களில் கல்வி அறிவு பெற ஆர்வமுள்ள மாணவ-மாணவிகளை ஊக்குவிக்கும் நிமித்தம் காஞ்சிபுரத்தில் கீழ்க்கண்டுள்ள நான்கு இடங்களில் 'நிலவொளிப் பள்ளிகள்' துவக்கப்பட்டு நல்லமுறையில் நடைபெற்று வருகின்றன.

நிலவுவரும் நேரத்தில் துவக்கப்படும் பள்ளிகள் ஆனதால் இந்தப் பெயர் பொருத்தம் தானே!

மொத்தம் 156 பேர் இதன்மூலம் கல்வி கற்று வருகின்றனர்.

இந்த மாணவர்களுக்குக் கல்வி பயிற்றுவிக்கும் பள்ளிகளில் குழல் விளக்குகள் மற்றும் மின்விசிறிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவ, மாணவிகளுக்குப் பாடப்புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், பலகைகள் மற்றும் எழுதுபொருட்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இப் பணியில் இருபது பகுதிநேர ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எட்டாவது வகுப்பு பயிலும் மாணவர்களில் 151 நபர்களை டிசம்பர் '98ல் நடைபெற உள்ள எட்டாம் வகுப்பு தனித்தேர்வுக்கு அனுப்பிவைப்பதற்கான நபர்வாரி விண்ணப்பங்கள் அரசுத் தேர்வாணைக் கழகத்திற்கு 'அறிவொளி இயக்கத்தின்' மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் நகரத்தின் சுற்றுப்புறப் பகுதியில் உள்ள வயது முதிர்ந்த கல்வி அறிவு பெற ஆர்வமுள்ள மாணவ, மாணவிகளுக்கெனச் செவிலிமேடு பேரூராட்சி எல்லைக்குள் ஒரு நிலவொளிப்பள்ளியைத் துவங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



பிள்ளையார்பாளையம் நிலவொளிப் பள்ளி



கைலாசநாதர் கோயில்

# புராணங்களில் காஞ்சி

யானைகளை நிறையக் கொண்டது சேரநாடு; பசிப்பிணி போக்கும் சோற்று வளத்தைக் கொண்டது சோழநாடு; முத்து வளத்தைக் கொண்டது பாண்டிய நாடு; சான்றோர்களைக் கொண்டு விளங்கியது தொண்டை நாடு. இவ்வாறு அவ்வையார் சேர, சோழ, பாண்டிய, தொண்டை முதலிய நாடுகளின் சிறப்பியல் புகளைத் தனிப்பாடலில் பாடி யுள்ளார்.

சான்றோர்கள் நிறைந்து வாழும் தொண்டை நாட்டில் அமைந்துள்ளது காஞ்சி மாநகர். இது மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முப்பெரும் பெருமைகளைக் கொண்டது. அயோத்தி, வடமதுரை, அரித்துவார், காசி, காஞ்சி, அவந்தி, துவராகை முதலிய ஏழு நகரங்கள் மக்களுக்கு முத்தியைத் தரும் நகரங்கள் என சமயச் சான்றோர் குறிப்பிடுவர். காசிக்கு இணையாக வைத்துப் போற்றப்படும் நகரம் காஞ்சிபுரம். எனவே, 'காஞ்சியில் பிறந்தால் முக்தி; காசியில் இறந்தால் முக்தி' என்ற பழமொழி பிறந்தது.

காஞ்சிபுரம் புனிதத்தலம் என்று புராணங்கள் போற்றுகின்றன. எனவே, புராணங்கள் காஞ்சி புரத்திற்கு வேறு சிறப்புப் பெயர் களையும் தந்துள்ளன.

பிரம்மதேவன் வழிபட்டதால், "பிரம்மபுரம்'' என்றும், திருமால் வழிபட்டமையால் "விண்டுபுரம்'' என்றும் உமையாள் சிவனை எண்ணித் தவம் இருந்தமையால் "தபோமயம்'' என்றும் சிவபெருமான் உமையாளுக்குக் காட்சித் தந்த இடமாகையால் "சிவபுரம்" என்றும் புராணக் கதைகள் காஞ்சிபுரத்தைக் குறிக்கும் சிறப்புப் பெயர்களைச் சுட்டியுள்ளன. காஞ்சியில் இருக்கின்ற "சக்திபீடம்" முதன்மைப் பீடம் ஆகையால் "ஆதிபீடம்" என்றும் அழைக்கப்படுகிறது.

சங்கப் பாடல்களும் காஞ்சி மாநகரின் சிறப்புகளைக் குறிப் பிட்டுள்ளன. உருத்திரங்கண்ணனார் என்ற சங்கப் புலவர் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட இளந்திரையனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பெரும் பாணாற்றுப்படை பாடியுள்ளார்.

"திருமாலின் உந்தியில் உள்ளதும் நான்முகம் இருக்கப் பெற்றதுமான தாமரைப் பொகுட் டைப் போலும் பழமையும் சிறப்பும் தூய்மையும் கொண்டது இந் நகரமாகும் என்றும், "விழாக்கள் நிறைந்த பழமையான மூதூர்'' என்றும் காஞ்சிமாநகர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சிலப்பதி காரத்திலும் மணிமேகலையிலும் காஞ்சிபுரம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மணி மேகலையில் "கச்சிமாநகர் புக்க காதை" என்ற தனிக் காதையே அமைந்து காஞ்சியின் சிறப்பை எடுத்துக் கூறுகிறது.

இவ்வாறு சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள் காஞ்சி மாநகரின் சிறப்பைக் குறிப் பிடுகின்றன. (கர்ஞ்சியில் பல்வேறு சமயத்தவர் வாழ்ந்து வந்தனர்) பௌத்தம், சமணம், சைவம், வைணவம் ஆகிய சமயங்கள், பல்வேறு காலகட்டங்களில் காஞ்சியில் சிறந்து விளங்கின. சீனப் பயணியான "யுவான்சுவாங்" அசோகர் காலப் புத்தர் தூபி காஞ்சியில் இருந்ததாகக் குறிப் பிட்டுள்ளார். ஆயின் அந்தப் புத்த தூபி இன்று இல்லை. தொல்பொருள் ஆய்வுத் துறையினர் நடத்திய அகழ்வாராய்ச்சியில் புத்த தூபி இருந்ததற்கான தடயம் உள்ளது என்றும் சுட்டியுள்ளனர்.

**ச.க.இராமர் இளங்கோ,**
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.



காஞ்சிபுரம் மாவட்ட சிறப்பிதழ்

> உச்சிக்கு மிஞ்சின நேரமும் இல்லை
> கச்சிக்கு மிஞ்சின பதியும் இல்லை.
>
> (கச்சி : காஞ்சி)

சைவ சமயப் பிரிவினராக இருந்த கபாலிகர், பாசுபதர் ஆகியோர் இந்த நகரங்களில் தங்கி, தங்கள் சமயக் கருத்துக்களைப் பரப்பினர். தேவாரம் பாடிய சுந்தரர், திருநாவுக்கரசர், சம்பந்தர் ஆகிய மூவரும் பெரிய புராணத்தைப் பாடிய சேக்கிழாரும் காஞ்சிபுரத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

பல்வேறு வகையாகப் பிரிந்திருந்த இந்து சமயத்தை ஒன்றாக்கிய ஆதிசங்கரர் காஞ்சிக்கு வந்துள்ளார். அதன் விளைவாக "காமகோடி" மடம் உருவாயிற்று, வைணவ சமயத்திற்குப் புதுநெறியை வகுத்துத் தந்த இராமானுசர் இங்கு தங்கி மடங்களைத் தோற்றுவித்தார்.

கல்வியில் கரையில்லாத, காஞ்சி மாநகரில் வடமொழிக்கும், தமிழ் மொழிக்கும் பெருமை சேர்ந்த கவிஞர்கள் தோன்றியுள்ளனர். மகேந்திர வர்மன் ஆட்சிக் காலத்தில் வடமொழி செல்வாக்குப் பெற்று விளங்கியது. "காவியதரிசனம்'' என்ற வடமொழி நூலைத் "தண்டியலங்காரம்'' என்ற பெயரில் தமிழில் எழுதிய தண்டி என்பவர் இந்த நகரத்தில் வாழ்ந்தவராவார். பாரவி என்ற கவிஞர் வடமொழி நூல்கள் பலவற்றை எழுதியுள்ளார். மகேந்திரவர்மன் வடமொழியில் "மத்த விலாசப் பிரகசனம்" என்ற நூலை எழுதியுள்ளார்.

காஞ்சி மாநகரத்தில் வாழ்ந்த வடமொழி அறிஞர்களால் வடமொழி ஏற்றம் பெற்றது. வடமொழி வரலாற்றில் காஞ்சியின் பங்கு சிறப்பானது. பதி, பசு, பாசம் என்ற சைவ சித்தாந்தக் கருத்துக்களை மக்கள் அனைவரும் எளிதில் புரியும்படி செய்த சிவஞான முனிவர் "காஞ்சி புராணம்'' என்ற நூலை எழுதினார். காஞ்சி மாநகர் சிறப்புகளை இந்நூல் வழி விளக்கியுள்ளார்.

காஞ்சியில் வாழ்ந்த, "சிவஞான முனிவரின் மாணவரான கச்சியப்ப முனிவர் "கந்தபுராணம்'' என்னும் நூலையும், அரங்கநாத முதலியார் "கச்சிக் கலம்பகம்'' நூலையும் பாடியுள்ளனர். காஞ்சியின் பெருமையை முழுமையாக விளக்குவதை முதன்மையாகக் கொண்டு மேற்குறித்த நூல்கள் தோன்றின.

பட்டினத்தார் ஏகாம்பரநாதரைப் பாட்டுடைத் தலைவராக்கி "திருவேகம்பர் திருவந்தாதி'' என்ற நூலைப் படைத்துள்ளார். 20 ஆம் நூற்றாண்டில் தமிழ் மக்கள் மத்தியில் மொழி இன உணர்ச்சியையும் சமூக மாற்றத்தையும் உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் இங்குதான் பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

காஞ்சிபுரத்தில் 82 கோயில்கள் உள்ளன. கோயில்களைச் சுற்றி நகரம் அமைந்துள்ளது. காஞ்சியில் ஏகாம்பரநாதர் கோயில், காமாட்சி அம்மன் கோயில், வரதராசப் பெருமாள் கோயில் முதலியன குறிப்பிடத்தக்கன. இவற்றில் "தேசமெல்லாம் புகழ்ந்தாடுங் கச்சித்



ஏகாம்பரேஸ்வரர் கோயில்

திருவேகம் பன்செம்பொற் கோயில்" என்று மாணிக்கவாசகரால் பாடப் பட்ட பெருமையுடைய "காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் குறிப்பிடத் தக்கது.

"காஞ்சி" என்ற சொல்லுக்குரிய பொருளை ஆய்வாளர் ரத்தினம் என்பார் பின்வருமாறு ஆராய்ந் துள்ளார்:

1) கச்சி என்பது காஞ்சிபுரத்தின் மருஉ ஆகும். காஞ்சி என்பது வடமொழியில் கஞ்சி எனத் திரிந்து, தமிழில் "கச்சி" என வழக்கில் வந்தது.

2) காஞ்சி என்னும் சொல்லுக்கு மகளிர் இடையில் அணியும் மேகலை என்பது பொருள்.

3) காஞ்சி எனும் திணைக்கு நிலையாமை என்பது பொருள். "நிலையாமைக் கருத்துக்களைக் கூறும் தத்துவவாணர்கள் நிறைந்த நகரமாகையால் இப்பெயர் பெற்றது".

4) காஞ்சிபுரத்தை "க - பிரமன், அஞ்சித்தல் - பூசித்தல், புரம் - நகரம் எனப் பிரித்து நோக்கினால் பிரம்மனால் பூசிக்கப்பட்ட நகரம் ஆகையர்ல் காஞ்சிபுரம் எனப் பெயர் பெற்றது.

5) பூவரசு மரங்களைக் காஞ்சி மரங்கள் என்று நம் முன்னோர் கூறினர். காஞ்சிபுரத்தில் பூவரசு மரங்கள் நிறைந்து காணப் படுகின்றன.

இவ்வாறு கூறப்பட்ட ஐந்து பெயர்க் காரணங்களில் இறுதி யாகச் சுட்டப்படும் காஞ்சி, மரங்கள் (பூவரசு) நிறைந்த ஊர் ஆகையால் இவ்வூர் காஞ்சிபுரம் எனப் பெயர் பெற்றது என்று ஆய்வாளர் ரத்தினம் முடிவு' கூறியிருப்பது ஏற்புடையதாக அமைகிறது.

இறைவன் எங்கும் நிறைந்தவர், நிலம், நீர், காற்று, நெருப்பு, வான் முதலிய ஐந்து பூதங்களில் நிறைந்து காணப்படுகிறார். தமிழகத்தில் உள்ள ஐந்து சிவன் கோயில்கள் தத்துவ நெறியில் அமைந்த இக்கருத்தை விளக்குகின்றன.

"ஏகாம்பரநாதர் கோயில் நிலம் (மணல்) தலமாகவும், திரு வானைக்கா கோயில் நீர்த் தலமாகவும், திருவண்ணா மலைக் கோயில் நெருப்புத் தலமாகவும், திருக்காளத்திக் கோயில் காற்றுத் தலமாகவும், தில்லை நடராசர் கோயில் வானத் தலமாகவும் விளங்குகின்றன" என்று சொல் கிறார்கள்.

ஏகாம்பரம் என்ற சொல்லுக்குப் பொருள் கூறுகையில் "ஒற்றை மாமரத்தடியில் சிவபெருமான் அமர்ந்திருப்பதால் அவருக்கு ஏகாம்பரநாதர்" என்று பெயர் வந்தது என்று கூறப்படுகிறது. பழங் காலத்தில் இறைவனை மக்கள் மரத்தடியில் வழிபட்டு வந்தனர். பின்பு சிலை அமைத்து வழிபட்டனர். இவ் உண்மையினை உணர்த்தும் வகையில் ஏகாம்பரநாதர் பெயர் விளங்குகிறது.

சிவஞான முனிவர் இயற்றிய காஞ்சிப் புராணத்தில் "கச்சி மயானம்" பற்றி ஒரு கதை உள்ளது. அக்காலத்தில் பண்டாசுரன் என்னும் அரக்கன் மக்களின் வீரியத்தை உண்ணும் வரத்தைப் பிரம்மனிடம் பெற்றான். பண்டாசுரன் தொல்லை யால் துன்புற்ற மக்கள் தேவர், அசுரர் முதலியோர் சிவனை வழிபட்டு அவ்வரக்கனை அழிக்க வேண்டினர். சிவபெருமான் பண்டா சுரன் உட்பட எல்லோரையும் யாக குண்டலத்தில் போட்டு அழித்தார். பின்னர் இவ்வுலகு தோன்ற இலளிதா தேவியைப் படைத்தார். சிவஞான முனிவர் குறிப்பிட்ட "கச்சி மயானம்" ஏகாம்பரநாதர் கோயிலில் இடம் பெற்றுள்ளது.

– முனைவர் சி.இரத்தினம் எழுதிய 'காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் கோவில் – ஓர் ஆய்வு' நூலின் அணிந்துரையிலிருந்து.

ஒளியின் பிம்பங்களாக நாம் திகழுகிறோம். நமது பண்டைப் பெருமைகளை நாம் உணர வேண்டும். நம்முடைய பரம்பரை பெரியது. நமது தமிழினம், மானமே பெரிதென மதித்த இனம், எவ்வுயிரையும் தன்னுயிர்போல் காத்து வந்தவன் தமிழன். பிறரை எதிர்பார்த்து வாழாதவன் தமிழன். பிறருக்குப் புறமுதுகு காட்டி ஓடாதவன் தமிழன். இமயத்தில் புலி பொறித்து, கடாரத்தை வென்று, ரோம் நகருக்குப் பொன்னாடை விற்றவன் தமிழன்.

ஆதாரம்: **அண்ணாவின் சொற்செல்வம்** நூலிலிருந்து.



கைலாசநாதர் கோயில் சிற்பங்கள்

**நாலந்தாப் பல்கலைக்கழகத் தலைவராக இருந்த தருமபாலர், காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவரேயாவார்!**



# செவ்வாழை

## - அறிஞர் அண்ணா

செங்கோடன், அந்தச் செவ்வாழைக் கன்றைத் தன் செல்லப் பிள்ளைபோல் வளர்த்து வந்தான். இருட்டுகிற நேரம் வீடு திரும்பினாலுங்கூட, வயலிலே அவன்பட்ட கஷ்டத்தைக்கூடப் பொருட்படுத்தாமல், கொல்லைப்புறம் சென்று, செவ்வாழைக் கன்றைப் பார்த்துவிட்டு, தண்ணீர் போதுமானபடி பாய்ச்சப்பட்டிருக்கிறதா என்று கவனித்து விட்டுத்தான், தன் நான்கு குழந்தைகளிடமும் பேசுவான். அவ்வளவு பிரேமையுடன் அந்தச் செவ்வாழையை அவன் வளர்த்து வந்தான். கன்று வளர வளர அவன் களிப்பும் வளர்ந்தது. செவ்வாழைக்கு நீர் பாய்ச்சும் போதும், கல் மண்ணைக் கிளறிவிடும்போதும், அவன் கண்கள் பூரிப்படையும் மகிழ்ச்சியால். கரியனிடம் – அவனுடைய முதல் பையன் காட்டியதைவிட அதிகமான அன்பும், அக்கறையும் காட்டுகிறாரே என்று ஆச்சரியம், சற்றுப் பொறாமைகூட ஏற்பட்டது, குப்பிக்கு.

"குப்பி! ஏதாச்சும் மாடு கீடு வந்து வாழையை மிதிச்சிடப் போகுது. ஜாக்ரதையாக் கவனிச்சுக்கோ. அருமையான கன்று – ஆமாம், செவ்வாழைன்னா சாமான்யமில்லே. குலை, எம்மாம், பெரிசா இருக்கும் தெரியுமோ? பழம், வீச்சு வீச்சாகவும் இருக்கும். உருண்டையாகவும் இருக்கும் – ரொம்ப ருசி – பழத்தைக் கண்ணாலே பார்த்தாக்கூடப் போதும்; பசியாறிப் போகும்" என்று குப்பியிடம் பெருமையாகப் பேசுவான் செங்கோடன்.

அப்பா சொல்லுவதை நாலு பிள்ளைகளும் ஆமோதிப்பார்கள் – அதுமட்டுமா – பக்கத்துக் குடிசை, எதிர்க் குடிசைகளிலே உள்ள குழந்தைகளிடமெல்லாம், இதே பெருமையைத்தான் பேசிக் கொள்வார்கள். உழவர் வீட்டுப் பிள்ளைகள், வேறெ எதைப் பற்றிப் பேசிக் கொள்ள முடியும் – அப்பா வாங்கிய புதிய மோட்டாரைப் பற்றியா, அம்மாவின் வைரத்தோடு பற்றியா, அண்ணன் வாங்கிவந்த ரேடியோவைப் பற்றியா, எதைப்பற்றி பேசமுடியும்? செவ்வாழைக் கன்றுதான், அவர்களுக்கு, மோட்டார், ரேடியோ, வைரமாலை, சகலமும்!

மூத்த பயல் கரியன், "செவ்வாழைக் குலை தள்ளியதும், ஒரு சீப்புப் பழம் எனக்குதான்' என்று சொல்லுவான்.

"ஒண்ணுக்கூட எனக்குத் தரமாட்டாயடா – நான் உனக்கு மாம்பழம் தந்திருக்கிறேன்? கவனமிருக்கட்டும் – வறுத்த வேர்கடலை கொடுத்திருக்கிறேன்; கவனம் இருக்கட்டும்" – என்று எதிர்க் குடிசை எல்லப்பன் கூறுவான்...

கரியனின் தங்கை, காமாட்சியோ, கண்ணைச்



சிமிட்டிக்கொண்டே "உனக்கு ஒரு சீப்புன்னா, எனக்கு இரண்டு தெரியுமா? அம்மாவைக் கேட்டு ஒரு சீப்பு, அப்பாவைக் கேட்டு ஒரு சீப்பு" என்று குறும்பாகப் பேசுவாள்.

மூன்றாவது பையன் முத்து, "சீப்புக் கணக்குப் போட்டுக்கிட்டு ஏமாந்து போகாதிங்க – ஆமா – பழமாவதற்குள்ளே யாரார் என்னென்ன செய்துவிடுவாங்களோ, யாருகண்டாங்க" என்று சொல்லுவான் – வெறும் வேடிக்கைக்காக அல்ல – திருடியாவது மற்றவர்களைவிட அதிகப்படியான பழங்களைத் தின்றே விடுவது என்று தீர்மானித்தே விட்டான்.

செங்கோடனின் செல்லப் பிள்ளையாக வளர்ந்து வந்தது செவ்வாழை. உழைப்பு அதிகம் வயலில். பண்ணை மானேஜரின் ஆர்ப்பாட்டம் அதிகம். இவ்வளவையும் சகித்துக் கொள்வான் – செவ்வாழையைக் கண்டதும் சகலமும் மறந்து போகும். குழந்தைகள் அழுதால், செவ்வாழையைக் காட்டித்தான் சமாதானப்படுத்துவான்! துஷ்டத்தனம் செய்கிற குழந்தையை மிரட்டவும், செவ்வாழையைத்தான் கவனப்படுத்துவான்! குழந்தைகள், பிரியமாகச் சாப்பிடுவார்கள், செவ்வாழையை என்ற எண்ணம் செங்கோடனுக்கு பண்ணை வீட்டுப் பிள்ளைகள் ஆப்பிள், திராட்சை தின்ன முடிகிறது – கரியனும் முத்துவும், எப்படி விலை உயர்ந்த அந்தப் பழங்களைப் பெற முடியும்? செவ்வாழையைத் தந்து தன் குழந்தைகளை குதூகலிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணந்தான், செங்கோடனை, அந்தச் செவ்வாழைக் கன்றைச் செல்வமாக வளர்க்கும்படிச் செய்தது. உழவன் செங்கோடனிடம், எவ்வளவு பாடுபட்டாலும், குழந்தைகளுக்குப் பழமும் பட்சணமும் வாங்கித் தரக்கூடிய 'பணம்' எப்படிச் சேர முடியும்? கூலி நெல், பாதி வயிற்றை நிரப்பவே உதவும் – குப்பியின் 'பாடு' குடும்பத்தின் பசியைப் போக்கக் கொஞ்சம் உதவும். இப்படிப் பிழைப்பு! பலனில் மிகப்பெரும் பகுதியோ, பண்ணைக்குச் சேர்ந்துவிடுகிறது. இந்தச் செவ்வாழை ஒன்றுதான் அவன் சொந்தமாக மொத்தமாக பலன் பெறுவதற்கு உதவக்கூடிய, உழைப்பு! இதிலே பங்கு பெற, பண்ணையார் குறுக்கிட முடியாதல்லவா? அவருக்காகப் பாடுபட்ட நேரம் போக, மிச்சமிருப்பதிலே, அலுத்துப் படுக்க வேண்டிய நேரத்திலே பாடுபட்டு, கண்ணைப் போல வளர்த்துவரும், செவ்வாழை! இதன் முழுப் பயனும் தன் குடும்பத்துக்கு! இது ஒன்றிலாவது தான் பட்ட பாட்டுக்கு உரிய பலனைத் தானே பெற முடிகிறதே என்ற சந்தோஷம் செங்கோடனுக்கு.

இவ்வளவும் அவன் மனதிலே, தெளிவாகத் தோன்றிய கருத்துக்கள் அல்ல. புகைப்படலம் போல, அந்த எண்ணம் தோன்றும், மறையும் – செவ்வாழையைப் பார்க்கும்போது பூரிப்புடன் பெருமையும் அவன் அடைந்ததற்குக் காரணம் இந்த எண்ணந்தான்.

கன்று வளர்ந்து கள்ளங்கபடமின்றி, செங்கோடனுக்குக் களிப்பும் வளர்ந்தது. செங்கோடனின் குழந்தைகளுக்கு இப்போது, விளையாட்டு இடமே, செவ்வாழை இருந்த இடந்தான்! மலரிடம் மங்கையருக்கும், தேனிடம் வண்டுகளுக்கும் ஏற்படும் பிரேமைபோல, அந்தக் குழந்தைகளுக்குச் செவ்வாழையிடம் பாசம் ஏற்பட்டு விட்டது.

"இன்னும் ஒரு மாசத்திலே குலை தள்ளுமாப்பா?" கரியன் கேட்பான், ஆவலுடன், செங்கோடனை.

'இரண்டு மாசமாகும்டா கண்ணு" என்று செங்கோடன்



செங்கோடனின் கண்களுக்கு அந்தச் செவ்வாழைக் குலை, முத்துவிஜயாவின் வைரமாலையை விட விலை மதிப்புள்ளதாகத்தான் தோன்றிற்று. குலை முற்ற முற்ற, செங்கோடனின் குழந்தைகளின் ஆவலும், சச்சரவும், பங்குத் தகராறும், அப்பாவிடமோ அம்மாவிடமோ 'அப்பீல்' செய்வது ஓங்கி வளரலாயிற்று. "எப்போது பழமாகும்?" என்று கேட்பாள் பெண். 'எத்தனை நாளைக்கு மரத்திலேயே இருப்பது?" என்று கேட்பான் பையன். செங்கோடன், பக்குவமறிந்து குலையை வெட்டி, பதமாகப் பழுக்க வைத்துப் பிள்ளைகளுக்குத் தர வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தான். உழைப்பின் விளைவு! முழுப் பலனை நாம் பெறப் போகிறோம் – இடையே தரகர் இல்லை – முக்காலே மூன்று வீசம் பாகத்தைப் பறித்துக் கொள்ளும் முதலாளி இல்லை. உழைப்பு நம்முடையது என்றாலும் உடைமை பண்ணையாருடையது – அவர் எடுத்துக் கொண்டது போக மீதம்தானே தனக்கு என்று, வயலில் விளையும் செந்நெல்லைப் பற்றி எண்ண வேண்டும் – அதுதானே முறை! ஆனால் இந்தச் செவ்வாழை அப்படி அல்ல! உழைப்பும் உடைமையும் செங்கோடனுக்கே சொந்தம்.

இரண்டு நாளையில், குலையை வெட்டிவிடத் தீர்மானித்தான் – பிள்ளைகள் துள்ளின



சந்தோஷத்தால். மற்ற உழவர் வீட்டுப் பிள்ளைகளிடம் 'சேதி' பறந்தது – பழம் தர வேண்டும் என்று சொல்லி, அவலோ, கடலையோ, கிழங்கோ, மாம்பிஞ்சோ, எதை எதையோ 'அச்சாரம்' கொடுத்தனர் பல குழந்தைகள், கரியனிடம்.

பாடுபட்டோம், பலனைப் பெறப் போகிறோம். இதிலே ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு ஈடு எதுவும் இல்லை. இதைப் போலவே, வயலிலும் நாம் பாடுபடுவது நமக்கு முழுப்பயன் அளிப்பதாக இருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும்! செவ்வாழைக்காக நாம் செலவிட்ட உழைப்பு, பண்ணையாரின் நிலத்துக்காகச் செலவிட்ட உழைப்பிலே, நூற்றுக்கு ஒரு பாகம்கூட இராது – ஆனால் உழைப்பு நம்முடையதாகவும் வயல் அவருடைய உடைமையாகவும் இருந்ததால் பலனை அவர் அனுபவிக்கிறார் பெரும் பகுதி. இதோ, இந்தச் செவ்வாழை நம்ம கொல்லையிலே நாம் உழைத்து வளர்த்தது – எனவே பலன் நமக்குக் கிடைக்கிறது – இதுபோல, நாம் உழைத்துப் பிழைக்க நம்முடையது என்று ஒரு துண்டு வயல் இருந்தால், எவ்வளவு இன்பமாக இருக்கும். அப்படி ஒரு காலம் வருமா! உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம் – பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக் கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா என்றெல்லாம் கூட, இலேசாகச் செங்கோடன் எண்ணத் தொடங்கினான். செவ்வாழை இது போன்ற சித்தாந்தங்களைக் கிளறிவிட்டது அவன் மனதில். குழந்தைகளுக்கோ நாக்கிலே நீர் ஊறலாயிற்று.

செங்கோடன் செவ்வாழைக் குலையைக் கண்டு களித்திருந்த சமயம், பண்ணை பரந்தாமர், தமது மருமகப் பெண் முத்து விஜயத்தின் பிறந்தநாள் விழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அம்பிகை கோயில் அபிஷேக ஆராதனை செய்வதற்காக, 'ஐயரிடம்' சொல்லிவிட்டார். கணக்கப் பிள்ளையைக் கூப்பிட்டு, 'பட்டி' தயாரிக்கச் சொன்னார். பல பண்டங்களைப் பற்றிக் குறிப்பு எழுதும்போது, 'பழம்' தேவை என்று தோன்றாமலிருக்குமா? 'இரண்டு சீப்பு வாழைப்பழம்' என்றார் பண்யையார்.

ஏனுங்க பழம் – கடையிலே நல்ல பழமே இல்லை – பச்சை நாடாத்தான் இருக்கு" என்று இழுத்தான் சுந்தரம், கணக்கப்பிள்ளை.

"சரிடா, அதிலேதான் இரண்டு சீப்பு வாங்கேன்?– வேறெ நல்ல பழமா எங்கே இருக்கு!" என்று பண்ணையார் சொல்லி முடிப்பதற்குள், சுந்தரம், "நம்ம செங்கோடன் கொல்லையிலே, தரமா ஒரு செவ்வாழைக் குலை இருக்குதுங்க – அதைக் கொண்டுக்கிட்டு வரலாம்" என்றான். 'சரி' என்றார் பண்ணையார்.

செங்கோடனின் செவ்வாழைக்குலை! அவனுடைய இன்பக் கனவு!! உழைப்பின் விளைவு!! குழந்தைகளின் குதூகலம்!!

அதற்கு மரண ஓலை தயாரித்துவிட்டான் சுந்தரம்!

எத்தனையோ பகல் பார்த்துப் பார்த்து, செங்கோடனின் குடும்பம் பூராவும் பூரித்தது அந்தக் குலையை! அதற்குக் கொலைகாரனானான் சுந்தரம். மகிழ்ச்சி, பெருமை, நம்பிக்கை இவைகளைத் தந்து வந்த, அந்தச் செவ்வாழைக் குலைக்கு வந்தது ஆபத்து.

தெருவிலே, சுந்தரமும் செங்கோடனும் பேசும்போது குழந்தைகள், செவ்வாழையைப் பற்றியதாக இருக்கும் என்று எண்ணவே இல்லை! செங்கோடனுக்குத் தலை கிறுகிறுவென்ற சுற்றிற்று – நாக்குக் குழறிற்று – வார்த்தைகள் குபுகுபுவென்று கிளம்பி, தொண்டையில் சிக்கிக் கொண்டன.



மாட்டுப் பொண்ணுக்கு பிறந்த நாள் பூஜை – என்று காரணம் காட்டினான் சுந்தரம். என்ன

செய்வான் செங்கோடன்! என்ன சொல்வான்? அவன் உள்ளத்திலே, வாழையோடு சேர்ந்து வளர்ந்த ஆசை – அவன் குழந்தைகளின் நாக்கில் நீர் ஊறச் செய்த ஆசை – இன்று, நாளை, என்று நாள் பார்த்துக் கொண்டிருந்த ஆவல் – எனும் எதைத்தான் சொல்ல முடியும்? கேட்பவர் பண்ணை பரந்தாமர்! எவ்வளவு அல்பனடா, வாழைக் குலையை அவர் வாய் திறந்து, உன்னை ஒரு பொருட்டாக மதித்துக் கேட்டனுப்பினால் முடியாது என்று சொல்லிவிட்டாயே! அவருடைய உப்பைத் தின்று பிழைக்கிறவனுக்கு, இவ்வளவு நன்றி கெட்டதனமா? கேவலம், ஒரு வாழைக் குலை! அவருடைய அந்தஸ்துக்கு, இது ஒரு பிராமதமா! – என்று ஊர் ஏசுகிறது போல், அவன் கண்களுக்குத் தெரிகிறது.



'அப்பா! ஆசை காட்டி மோசம் செய்யாதே! நான் கூடத்தான் தண்ணீர் பாய்ச்சினேன் – மாடு மிதித்துவிடாதபடி பாதுகாத்தேன் – செவ்வாழை ரொம்ப ருசியாக இருக்கும். கல்கண்டுபோல இருக்கும் என்று நீதானே என்னிடம் சொன்னாய். அப்பா! தங்கச்சிக்குக்கூட, 'உசிர்' அந்தப் பழத்திடம். மரத்தை அண்ணாந்து பார்க்கும்போதே, நாக்கிலே நீர் ஊறும். எங்களுக்குத் தருவதாகச் சொல்லிவிட்டு, இப்பொழுது ஏமாற்றுகிறாயே. நாங்கள் என்னப்பா, உன்னை கடையிலே காசு போட்டுத் திராட்சை, கமலாவா வாங்கித் தரச் சொன்னோம். நம்ம கொல்லையிலே நாம் வளர்த்ததல்லவா!" – என்று அழுகுரலுடன் கேட்கும் குழந்தைகளும், 'குழந்தைகளைத் தவிக்கச் செய்கிறாயே, நியாயமா?' என்று கோபத்துடன் கேட்கும் மனைவியும், அவன் மனக்கண்களுக்குத் தெரிந்தனர்! எதிரே நின்றவரோ, பண்ணைக் கணக்கப்பிள்ளை! அரிவாள் இருக்குமிடம் சென்றான். 'அப்பா, குலையை வெட்டப் போறாரு – செவ்வாழைக்குலை' என்று ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டு, குழந்தைகள் கூத்தாடின. செங்கோடனின் கண்களிலே நீர்த்துளிகள் கிளம்பின! குலையை வெட்டினான் – உள்ளே கொண்டு வந்தான் – அரிவாளைக் கீழே போட்டான் – 'குலையைக் கீழே வை அப்பா, தொட்டுப் பார்க்கலாம்' என்று குதித்தன குழந்தைகள். கரியனின் முதுகைத் தடவினான் செங்கோடன். "கண்ணு! இந்தக் குலை, நம்ம ஆண்டைக்கு வேணுமாம் கொண்டு போகிறேன் – அழாதிங்க – இன்னும் ஒரு மாசத்திலே, பக்கத்துக் கன்னு மரமாகிக் குலை தள்ளும். அது உங்களுக்குக் கட்டாயமாகக் கொடுத்து விடறேன்" என்று கூறிக்கொண்டே, வீட்டை விட்டுக் கிளம்பினான். குழந்தையின் அழுகுரல், மனதைப் பிளப்பதற்குள்.

செங்கோடன் குடிசை அன்று பிணம் விழுந்த இடம் போலாயிற்று. இரவு நெடுநேரத்திற்குப் பிறகுதான் செங்கோடனுக்குத் துணிவு பிறந்தது வீட்டுக்குவர! அழுது அலுத்துத் தூங்கிவிட்ட குழந்தைகளைப் பார்த்தான். அவன் கண்களிலே, குபுகுபுவெனக் கண்ணீர் கிளம்பிற்று. துடைத்துக் கொண்டு, படுத்துப் புரண்டான் – அவன் மனதிலே ஆயிரம் எண்ணங்கள். செவ்வாழையை, செல்லப் பிள்ளைபோல் வளர்த்து என்ன பலன்...!

அவருக்கு அது ஒரு பிராமதமல்ல – ஆயிரம் குலைகளையும் அவர் நினைத்த மாத்திரத்தில் வாங்க முடியும்! ஆனால் செங்கோடனுக்கு...? அந்த ஒரு குலையைக் காண அவன் எவ்வளவு பாடுபட்டான் – எத்தனை இரவு அதைப் பற்றி இன்பமான கனவுகள் – எத்தனை ஆயிரம் தடவை, குழந்தைகளுக்கு ஆசை காட்டியிருப்பான்! உழைப்பு எவ்வளவு! அக்கறை எத்துணை! எல்லாம் ஒரு நொடியில் அழிந்தன!

நாலு நாட்களுக்குப் பிறகு, வெள்ளித் தட்டிலே, ஒரு சீப்பு செவ்வாழைப் பழத்தை வைத்துக் கொண்டு, அன்ன நடை நடந்து



அழுகுமுத்து விஜயா, அம்பிகை ஆலயத்துக்குச் சென்றாள்.

நாலு நாட்கள் சமாதானம் சொல்லியும், குழந்தைகளின் குமுறல் ஓயவில்லை. கரியன் ஒரே பிடிவாதம் செய்தான், ஒரு பழம் வேண்டுமென்று. குப்பி, பழங்காலத்திலிருந்து ஒரு காலணாவை எடுத்துக் கொடுத்தனுப்பினாள், ஒரு பழம் வாங்கிக்கொள்ளச் சொல்லி. பறந்தோடினான் கரியன்.

கடையிலே செவ்வாழைச் சீப்பு, அழகாகத் தொங்கிக் கொண்டிருந்தது. கணக்கப்பிள்ளை, பண்ணை வீட்டிலே இருந்து நாலு சீப்பை முதலிலேயே தீர்த்துவிட்டான் – அவன் விற்றான் கடைக்காரனுக்கு – அதன் எதிரே, ஏக்கத்துடன் நின்றான் கரியன்! "பழம், ஒரு அணாடா, பயலே – காலணாவுக்குச் செவ்வாழை கிடைக்குமா – போடா" என்று விரட்டினான், கடைக்காரன். கரியன் அறிவானா, பாபம், தன் கொல்லையிலே இருந்த செவ்வாழை, இப்போது கடையில் கொலுவீற்றிருக்கிறது என்ற விந்தையை! பாபம்! எத்தனையோ நாள், அந்தச் சிறுவன், தண்ணீர் பாய்ச்சினான், பழம் கிடைக்குமென்று! பழம் இருக்கிறது, கரியனுக்கு எட்டாத இடத்தில்! விசாரத்தோடு வீட்டிற்கு வந்தான், வறுத்த கடலையை வாங்கிக் கொரித்துக் கொண்டே, செங்கோடன். கொல்லைப் புறத்திலிருந்து வெளியே வந்தான், வாழை மரத்துண்டுடன்.

"ஏம்பா! இதுவும் பண்ணை வீட்டுக்கா?" என்று கேட்டான் கரியன்.

"இல்லேடா, கண்ணு! நம்ம பார்வதி பாட்டி செத்துப் போயிட்டா, அந்தப் பாடையிலே கட்ட" என்றான் செங்கோடன்.

அலங்காரப் பாடையிலே, செவ்வாழையின் துண்டு!

பாடையைச் சுற்றி அழுகுரல்!

கரியனும், மற்றக் குழந்தைகளும் பின்பக்கம்.

கரியன் பெருமையாகப் பாடையைக் காட்டிச் சொன்னான். "எங்க வீட்டுச் செவ்வாழைடா", என்று.

"எங்க கொல்லையிலே இருந்த செவ்வாழைக் குலையைப் பண்ணை வீட்டுக்குக் கொடுத்துவிட்டோம் – மரத்தை வெட்டி "பாடையிலே கட்டிவிட்டோம்" என்றான் கரியன்.

பாபம், சிறுவன்தானே!! அவன் என்ன கண்டான், செங்கோடனின் செவ்வாழை, தொழிலாளர் உலகிலே சர்வ சாதாரணச் சம்பவம் என்பதை.

●

தமிழக அரசால் ரூ.37.5 இலட்சம் செலவில் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் சீரமைப்புப் பணிகள் நடைபெறுவதை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பார்வையிடுதல்.



# சட்டமன்றத்தில் அண்ணா!

- சி.ஈ.எஸ்.பெருமாள்

*(1959ல், வார இதழ் ஒன்றில் '**இவர்தான் எங்கள் எம்.எல்.ஏ.,**' கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கட்டுரை இது.)*

"அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு" - **திருக்குறள் 513**

கோவில் மலிந்த காஞ்சிபுரம். பக்தியின் பிறப்பிடம் மட்டுமல்ல; கனன்றெழுந்து வந்த புலிகேசி புல்லென மாய்க்கப்பட்ட புகலிடம் மட்டுமல்ல; அரசியல் வானிலே விழிப்பை ஏற்படுத்திய சிறப்பிடமும் ஆகும். காஞ்சியின் வானளாவிய கோபுரங்களையும், வையகமெங்கும் புகழ் பரப்பிவரும் எங்கள் எம்.எல்.ஏ., திருசிஎன்அண்ணாதுரை அவர்களையும் நான் மட்டுமல்ல; மற்ற எவராலும் மறக்கமுடியாது.



ஒரு எம்.எல்.ஏ.வுக்கு உரிய தகுதி, திறமை, நேர்மை, ஒழுக்கம் ஆகிய அத்தனையும் அமையப் பெற்றவரே எங்கள் பிரதிநிதி, சட்டசபையில் அவர் குரலுக்கு 'மவுசு' - மந்திரிகள் பாராட்டு உண்டு.

**குணங்கள்**

உருவம் குள்ளம் என்றாலும், உள்ளம் பரந்தது; படித்துப் பட்டம் பெற்று, பாட்டாளிகளின் கண்ணீரைத் துடைக்கும் பொதுப்பணியில் ஈடுபாடு கொண்ட வரலாற்றை நன்கறிவோம். "மக்களிடையே பழகி, நல்ல பல பணிகளை ஏற்று நடாத்திய கழகம், தி.மு.கழகம். நான் அந்தக் கழகத்தினன்; அதன் சார்பில் நிற்கிறேன்!" என்ற அவருடைய தேர்தல் அறிக்கையில், கட்சித் தலைவன் என்ற தருக்கையோ, தற்பெருமையையோ காட்டாத பணிவார்ந்த சொற்களே எங்களைக் கவர்ந்தவை.

எதையும் அன்பாக - அமைதியாக - ஆனால் ஆணித்தரமாகப் பேசும் குழந்தை உள்ளம், அவருடையது. பிறர்





அஞ்சுகின்ற நுணுக்கமான பிரச்சினைகளில் கலந்துகொண்டு, புரியும் விதத்தில், "பிட்டுப் பிட்டு"க் கூறுவதில் அவருக்கு இணை அவர்தான்.

மாற்றுக் கட்சிக்காரர்களின், 'சவுக்கடி'களுக்கு அவர் கூறும் பதிலடியிலிருந்தே அவர் நெஞ்சுறுதியை நிர்ணயிக்கலாம். "போற்றுபவர் போற்றினும், போற்ற மனமற்றோர் தூற்றினும், ஏற்றதொரு கருத்தை எனது உள்ளம் ஏற்றால் துள்ளாது, நில்லாது தொடர்ந்து செல்வேன்!" - இதுபோன்ற மாற்றாருக்கு அஞ்சாத - கொள்கையில் உறுதி கொண்ட பேச்சுகள் ஏராளம்! ஏராளம்!

அவருடைய பேச்சுக்கோ - சிந்தனைக்கோ அரு மருந்தாவது ஒன்றே ஒன்றுதான். அதன் பெயர்தான் பொடி. அது இல்லையென்றால் எதையும் தாங்கும் இதயம் படும் பாடு.... அப்பப்பா! சொல்லிட முடியாது.



**சென்னை மாநகராட்சியில், முதன்முதலாகக் கோலோச்சிட ஓயாது பாடுபட்டு வெற்றிக்கனி கொணர்ந்த செயல்வீரர் கலைஞருக்கு, அண்ணா கணையாழி அணிவித்தல் (1959).**

**சாதனைகள்**

அவர் எம்.எல்.ஏ, ஆனதும் முதல் காரியமாகச் செய்தது. கட்சி சார்பற்ற முறையில் தண்டலம் கிராமத்தில் மகாநாடு கூட்டி, குடிகளின் குறைகளைக் கவனிக்க வைத்தது. அந்த மகாநாட்டுக்குச் சென்னை முதன் மந்திரி திரு.காமராஜரைத் தலைமை வகித்து நடத்தச் செய்ததும் அவரே. கொட்டிய மழையைக் கூட இலட்சியம் செய்யாமல், அப்போது அவர் ஆற்றிய பணியை நாங்கள் மறந்துவிட முடியுமா?

மகாநாடு முடிந்த பின்னும் திரு.காமராஜரை எங்கள் எம்.எல்.ஏ.விட்டாரா, என்ன?

தனித்த முறையில் காமராஜரைச் சந்தித்து, காஞ்சிபுரம் பொருளாதாரத் துறையில் பின்தங்கி இருப்பதைப் 'படம்' பிடித்துக் காட்டி, "குணாளா! மணாளா! எப்படியாவது ஒரு நூற்பு ஆலை ஆரம்பிக்க வழி செய்யக் கருணை காட்டு!" - என்று வேண்டியது நினைவிருக்கிறது.

சமீப காலமாகக் குடிநீர்ப் பஞ்சம் காஞ்சிபுரமெங்கும் ஏற்பட்டு, மக்களின் 'அபயக் குரல்' எழுந்துவந்தது அல்லவா? அதைப் பயன்படுத்திக் கொண்ட சில கட்சிக்காரர்கள், "பார்த்தீர்களா? அண்ணாதுரை சட்டசபைக்குச் சென்றான்; வந்தது வினை!" என்று ஆர்ப்பரித்தனர். "என்னால்தான் இக்கேடு என்பது உண்மையானால் - அபயக் குரலை அவர்களால் அகற்ற முடியுமானால் நான் எதற்கு? எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்யவும் தயார்!" என்று தன்னுடைய வெள்ளை உள்ளத்தைத் திறந்து காட்டினார் அண்ணா.

அடிமேல் அடி அடித்தார்; ஆம். அம்மியும் நகரத்தான் செய்தது. மக்கள் குடிநீர்ப் பஞ்சத்தினின்று மீட்கப்பட்டனர். பாலாறு குடிநீர்த் திட்டம் ரூ.13 இலட்சம் செலவில் ஆரம்பிக்கப்பட்டு இரண்டாம் கட்டம் முடிவடையும் தறுவாயில் உள்ளது. 1959 ஆம் ஆண்டு எப்ரல் மாதத்திலிருந்தே குடிநீர் பயனளிக்கும் என்றால் அதற்கு மூலகாரணம் அண்ணா என்றுதான் சொல்ல வேண்டும். "வறண்ட இடங்களில் வளம் காண மைசூர் சர்க்காருடன் பேச்சுவார்த்தை நடத்தி, பாலாற்றில் நீர்விடச் செய்யவேண்டும்!" என்று சட்டசபையில் தீர்மானம் கொடுத்துத் தூண்டிவருபவரும் அவரே!

பள்ளி மாணவர் பகலுணவு அளிப்பு விழா. கல்வித் துறைத் தலைவர் திரு.என்.டி.சுந்தரவடிவேலர் தலைமையில் நடந்தபோது, தனது எம்.எல்.ஏ. சம்பளத்தில் ரூ.50 தருவதாக உறுதியளித்து, மாணவ மாணவிகளின் பாராட்டுதலைப் பெற்றவர் எங்கள் எம்.எல்.ஏ! மாணவர்களின் எதிர்கால நலனை வரையறுக்கும் முறையில், தொழிற்கல்லூரி (Poly technic) ஒன்று ஆரம்பிப்பதற்கான அரிய முயற்சி எடுத்துக்கொண்ட பலரில் அவர் முக்கியமானவர்.

மற்ற அங்கத்தினர்களைப் போல எங்கள் எம்.எல்.ஏ. சாதாரணமானவர் அல்ல. 'சந்திரரோதயம்', 'சந்திரமோகன்' முதலிய பல நாடகங்களை எழுதி, தாமே நடித்துக் காட்டிப் பச்சையப்பர் கல்லூரி போன்ற பொது நிலையங்களை அமைக்கக் காரணமாய்




ஈன்றெடுத்த மண்ணுக்கு இனிய தமிழ்ப்பெயர் சூட்டி, 'தமிழக அரசு தலைமைச் செயலகம்' எனும் பெயர்ப் பலகைத் திறப்புவிழாவில், அண்ணாவும், கலைஞரும் (14.4.1967)

இருந்தவர். மறுமலர்ச்சி எழுத்தாளர். அவர் எழுத்தைப் பின்பற்றி எழுந்த – எழுகின்ற – எழுத்தாளர்கள் ஏராளம்! ஏராளம்! சினிமாத் துறையில் அவர் புகுத்திய சீர்த்திருத்தக் கருத்துக்களை அவ்வளவு லேசில் மறந்துவிட முடியுமா?

### தோல்விகள்

"எதிர் நீச்சல்காரர்களாகிய நாங்கள், தோல்வியைக் கண்டு கதி கலங்கோம்; எதிர்ப்படுகின்ற சுழிக்கும் சுறாவுக்கும் அஞ்சினால் முத்தெடுக்க முடியாது" என்றார் எங்கள் எம்.எல்.ஏ. முன்பொரு சமயம் சென்னை பெத்தநாயகன் பேட்டையில் நகரசபைத் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றார்.

"சட்டசபையை ஊட்டிக்கு மாற்றாதீர்; அதனால் பாட்டாளிகளின் பணம்தானே பாழ்?'' என்றார். கேட்டார்களா? "சென்னைக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கத் தயங்குவது ஏன்?" என்று சட்டசபையில் கேட்டாயிற்று; மேடைதோறும் பேசியாயிற்று. பலன் கிடைத்ததா?

"எண்ணிக்கை அதிகம் இருக்கிற காங்கிரஸ்காரர்கள் துரியோதனன் கூட்டத்தைப்போல, நாங்கள் எண்ணிக்கைக் குறைவால் பாண்டவர்கள்! ஆனால் அவர்கள் எண்ணிகைக் அதிகமிருக்கிற காரணத்தால், பசுவைக் கழுதை என்று சொல்லி எதையும் அமலாக்கிக் கொள்கிறார்கள். 'கழுதை என்கிறீர்களே; பசுதானே இது. அதற்குத் தெளிவு கூறும் உறுப்புகளைப் பாரீர்" என்றாலும் எங்கள் பேச்சு சட்டசபையில் எடுபடுவதில்லை!" என்றார், எங்கள் எம்.எல்.ஏ. அது உண்மைதானே?

### கடந்த காலம்

படித்துப் பட்டம் பெற்று, அரசியலில் புகுந்த, 'அஞ்சாமை'யைச் சொல்வதா? ஐயா, (ஈ.வெ.ரா.)வோடு இருந்து சாதித்த வெற்றிகளைச் சொல்வதா? 'தந்தை'யைப் பிரிந்து 'தனிக்குடித்தனம்' எப்படி நடத்துவது என்றெண்ணிக் கண் கலங்கிய காட்சிகளைச் சொல்வதா? 'கண்ணீர்த் துளிகள்' என்று தந்தையால் பட்டம் சூட்டப்பட்டு, மாற்றாரால் கேலி பேசப்பட்டு வந்த, 'குழந்தைப் பருவத்'தைச் சொல்வதா?' 'தான் இருந்தது போதும்' என்ற தம்பிமார்களிடம் தலைமை பீடத்தை ஒப்படைத்து ஒதுங்கிய 'பரந்த மனத்தை'ச் சொல்வதா? 'மூட்டைப் பூச்சிப்போல் நசுக்கி விடுவேன்' என்று அன்று சொன்ன ராஜாஜி, அண்ணாவை அழைத்துப் பேசிய 'ரகசிய'த்தைச் சொல்வதா? எதைச் சொல்வது? எண்ண அலைகள் எழுந்தன! எதிர்காலம் எதிர்ப்படுகிறது.

### எதிர்காலம்

எதிர்காலத்தில் ஆட்சி பீடம் அவர் கைக்கு மாறும். அரசோச்சும் 'அந்த நாள்' அதி விரைவில் வந்துவிடும். இந்த நினைவு, துணிவுடன் எங்கிருந்தோ பிறக்கிறது? ஏன் பிறக்காது? அவர் கடைக்கண் காட்டினால் – வாய்திறந்தால் – மாணவர் பட்டாளம் எதையும் செய்யச் சித்தமாய் இருக்கும்போது!

மேனாட்டு அரசியலிலே ஆப்ரம்காம் லிங்கன் யார்? உலகை ஆட்டிப் படைக்கும் ஐசன்ஹவர், நாஸர் இவர்களெல்லாம் சாதாரண சிப்பாயாக இருந்து, உழைப்பால் உயர்ந்தவர்கள்தானே! 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?'.

அவ்வாறிருக்க எங்கள் அண்ணா ஆட்சிபீடமேறி அரசோச்சுவதா இயலாத காரியம்? □

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை–600 002. தொலைபேசி:568926, 568927, 564906




தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்

# தமிழரசு

செப்டம்பர் 16–30, 1998 ரூ.3













Licence No. TN/MS(C)/PP-23







நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259·98



இயக்குநர்
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
ஆராய்ச்சி
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008


## இந்த இதழில்...


- இன உணர்வுப் பேரொளி – முதல்வர் கலைஞர் ..... 2
- ரூ.200 கோடியில் சுதந்திரப் பொன்விழாக் குடிநீர்த் திட்டம் ..... 4
- மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் ..... 6
- உலக இலக்கியத்தில் பங்கேற்க ஏதுவாய் ..... 9
- தூர் வாரும் பணிகள் ..... 12
- அறிவொளி இயக்கம் ..... 15
- குடும்ப அட்டை வழங்கும் பணி ..... 16
- சமூக நலத்துறையின் சீர்மிகு பணிகள் ..... 17
- நம்பிக்கையோடு பணிகளைத் தொடருங்கள் ..... 20
- வரலாற்றில் காஞ்சி ..... 23
- கால மாற்றம் ..... 24
- ஒரு உன்னதத் திட்டம் ..... 26
- புதுக்கோட்டையில் சமத்துவபுரம் ..... 29
- அரசு ஆணைகள் ..... 33
- காஞ்சிபுரம் மாவட்டத்தில் அரசின் ஆக்க பூர்வப் பணிகள் ..... 35
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் ..... 39
- பட்டு வளர்ச்சி ..... 42
- 'திராவிட நாடு' – கிழமை இதழ் ஆய்வுக் கட்டுரை ..... 45


*செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது.*

"வாராது வந்த மாமணி" என்பது போல், "செய்யாமற் செய்த உதவி" என்று புகழத்தக்க அரிய உதவி வழங்கப் பட்டால், அதற்கு இந்த வானமும் பூமியும் கூட ஈடாக மாட்டா.

—கலைஞரின் *திருக்குறள் உரையிலிருந்து*


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2029
ஆவணி – புரட்டாசி
செப்டம்பர் 16–30, 1998
மலர்:30 இதழ்:6
விலை ரூ.3


**முதலாம் அட்டையில்...**
திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற காவலர்களுக்கு அண்ணா பதக்கம் வழங்கும் விழா.

**கடைசிப்பக்க அட்டையில்...**
புதுக்கோட்டையில் சமத்துவபுரம் திறப்பு விழா.

# இன உணர்வுப் பேரொளி!

## முதல்வர் கலைஞர்

"பயிர்போன்றார் உழவருக்குப் பால்போன்றார்
குழந்தைகட்குப் பசும்பால் கட்டித்
தயிர் போன்றார் பசித்தவர்க்குத் தாய்போன்றார்
ஏழையர்க்குத் தகுந்தவர்க்குச்
செயிர் தீர்ந்த தவம்போன்றார் செந்தமிழ்
நாட்டில் பிறந்த மக்கட்கெல்லாம்
உயிர் போன்றார்" – என்று
பாரதிதாசப் பாவேந்தன் பாடிச்சென்றான் அவரை !
"வீடுகட்டி அதற்குள்ளே வைக்கோலைத் திணிப்பதுவோ?
வீடுகட்டாமலே வைக்கோற்போர் போடலாமே
எனச் சொன்ன ஈ.வெ.ரா.நாத்திகரா?
இல்லை இல்லை!
அவர்,
இயற்கையின் புதல்வர்–இந்த மண்ணை மணந்த மணாளர்–
எதிர்காலத் தமிழகத்துப் பெருமைக்குத் தூதர்" என்று
அக்ரகாரத்து அதிசய மாமனிதர் வ.ரா. முன்பு
அழகாக வரைந்தார் ஒரு கட்டுரைதான்!
தங்கத்தின் உருக்கில் வந்த தனித்ததோர் ஒளியைப்போல
செங்கதிர் உதயமாகும் செவ்வானம் வெட்கியோடப்
பொங்கியே எழுந்தார் பெரியார், புதுமைக்காளைகள் கோடி
உறுதியாய்க் கூறி நின்றார் குருதிதான் பணயமென்று!
அங்கத்தில் பழுதென்றால் அறுத்தெறிய ஒப்புகின்றோம்,
உயிர்பிழைக்கப்
பங்கமுறு சாதிமத பேதங்களால் அல்லலுறும் – மனித
சங்கத்தின் நோய் களையத் திகைக்கின்றோம்
சரிதானா? எனக்கேட்டார்.

அந்தச்
சிங்கத்தின் குரல்கேட்டுச் சிறுநரிகள் ஊளையிட்ட
கதைதானே நடந்ததிங்கே!
வங்கத்துத் தாகூர் போல் தாடியுண்டு
பொங்குற்ற வேங்கைபோல் நிமிர்கின்ற பார்வை உண்டு.
செங்குன்றத் தோற்றம் உடலில் உண்டு – வெண்
சங்கொத்த கண்களிலே விழியிரண்டும் கருவண்டு – அதில்
சாகும்வரை ஒளி உண்டு!

பம்பரமும் ஒய்வுபெறும் சுற்றியபின் – இவரோ
படுகிழமாய்ப் போனபின்னும் பம்பரமாய்ச் சுற்றிவந்தார்.
எரிமலையாய்ச் சுடுதழலாய்
இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்கவைக்கும் இடிஒலியாய்
இனஉணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக்கட்டும்; கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதென்சுநகர் சாக்ரடீசாய்
ஏன் என்று கேட்பதிலே வைரநெஞ்ச வால்டேராய்
எம்தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார், இன்றைக்கோ
இறப்பின் மடியினிலே வீழ்ந்திட்டார்.

மதுவிலக்கு தேவை என்று மகாத்மா காந்தி சொன்னவுடன்
மதுக்கலயம் கட்டாமல் இருப்பதற்குத் தோட்டத்தில்
மண்டி நின்ற தென்னைகளை வெட்டிச் சாய்த்தார் –
வைக்கத்து வீரர் என்று யாரைச் சொன்னோம்?
"வை, கத்தி! தீண்டாமை கழுத்தில்" என்று
வரிப்புலியாய்க் களம்சென்று வாகைசூடி
வையத்து மக்கள் தந்த பட்டமன்றோ வைக்கம்வீரர்!
காங்கிரசுக் கட்சிக்கு மீகாமனாய்க்
கதர் இயக்க வெற்றிக்குத் தளபதியாய்க்
காந்தி வழி நின்றிட்ட கர்மவீரன்
கட்சிக்குள் போராடக் காலம் வந்து
காஞ்சிபுரம் மாநாட்டில் வெளிநடந்தார்.

வ.வே.சு.அய்யர் என்பார் வடிகட்டிய தேசபக்தர்
வகுப்புவாத உணர்வாலே வம்புக்கு அழைப்புத் தந்தார்.
சேரன்மாதேவி ஊரில் சிறந்ததொரு குருகுலத்தில்
ஒருகுலத்துக் கொருநீதி கடைப்பிடித்தால்
சகிக்குமா பெரியார் மனம்? சமருக்கு வில்வளைத்தார்;
சரித்திரம் படைக்கலுற்றார். அதன் விளைவாய்த்
தன்மான இயக்கத்தின் தந்தையாகத்
தமிழர் இனப்பாதுகாப்புத் தலைவராகப்
பெரியார் ஆனார் – புது
நெறியார் ஆனார்!





பிற்பட்டோர் நலனுக்கென்று நீதிக்கட்சி
பெரும்பணிகள் இயற்றிடவே முனைந்தபோதும் – அது
பித்தாபுரம் பனகல் என்று பிரபுக்கள் காலடியில்
வற்றாத செல்வந்தர் கைத்தடியில் இருந்ததாலே
அதை மாற்றி
மாளிகையில் இருந்தகட்சி மக்களிடை வருவதற்கு
மாமேதை அண்ணாவின் துணையுடனே வெற்றிகண்டார்
மந்தி கை மாலையென
இந்தி கைத் தமிழர், ஆக
வஞ்சகச் சூழ்ச்சிகள் வலையாக விரிந்தபோது
அஞ்சிடா நெஞ்சுகொண்டு அறுத்தவர் பெரியார்தானே?
அவர்,
பாதம் படாத பட்டி தொட்டி உண்டோ–அவர் பேர் கேட்டுக்
காதம் ஒடுகின்ற ஆத்திகரும் (அவர்) பேசக்கேட்டால், தமிழ்க்
கீதம் கேட்ட கிறுகிறுப்பில் மயங்கிப் போவார்.
அறிவு மழை பொழியும் எழில்
வழியும் – இருள்கழியும்
தெளிவுமிகு உரைகள் பல
ஒளிரும் திறன் மிளிரும் –
கடலின் மடை – அலையின் ஒலி – மலையின் முடி –
தழுவும் முகில் வழியும்!
அறிவு மழை பொழியும்!
ஆணவங்கள் அழியும்!
அடிமை முறை ஒழியும்!
அய்யாவின் பேச்சென்றால்
அதிரசம் தின்பதுபோல் கழகத்தவர்க்கு.
அணுகுண்டு வெடித்தது போல்
கயவர்கட்கு!
அவர் தலைமை ஏற்று நானும் அவருடனே
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தெட்டில்
ஆரூரில் மாணவனாய் இருந்தபோதே இணைந்துவிட்டேன்.

அதன்பிறகு புதுவையில் நான் தாக்குண்டபோது
அய்யாவின் கையாலே மருந்திட்டார், என் காயத்திற்கு.
குடியரசு அலுவலகக் குருகுலத்தில்
கொள்கை வழிப்பாடங்கள் பயின்றகாலை – நான்
தமிழரசுத் தலைவனாக வருவேன் என்றும், எனைவளர்த்த
தந்தைக்கு அரசு மரியாதையுடன்
இறுதி வணக்கம் செய்வேன் என்றும்,
எண்ணியும் பார்த்ததில்லை.

"பாராட்டிப் போற்றிவந்த பழமை லோகம்
ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார்!
ஈவெரா என்ற வார்த்தை இந்நாட்டு வஞ்சகத்தின்
அடிபீடம் ஆட்டுகின்ற சூறாவளியாம் – அவர்
வெண்தாடி அசைந்தால் போதும்,
கண்சாடை தெரிந்தால் போதும் –
கறுப்புடை தரித்தோர் உண்டு – கொடுமையை
நறுக்கியே திரும்பும் வாட்கள்"
ஈரோட்டுக் குருகுலத்தில் நான் இயற்றியது இப்பாடல்;
இன்றைக்கும் நினைக்கின்றேன் – பெரியார்
இளவயதில் மறையவில்லை
நிறைவயது வாழ்ந்துவிட்டே ஓய்வு கொண்டார் எனினும்,
தாஜ்மகால் திடுமெனத் தரைக்குள்ளே போய்விட்டால்
அதைக்கட்டி, ஆண்டு பல ஆயிற்றே என்று
ஆறுதல்தான் பெறுவோமா?
தஞ்சைக் கோபுரம் சாய்ந்துவிட்டால்; அதற்கு
வயது அதிகமென்று சொல்லித்
தாங்குதல்தான் எளிதாமோ? இவரோ,
தஞ்சைக் கோபுரம்போல் உயர்ந்தவர் –
தாஜ்மகால் போல் சரிதம் படைத்தவர் –
அவர் வாழ்வார் வாழ்வார் என்று வாழ்த்துகின்றேன்.
வணங்குகின்றேன்!

# ரூ.200 கோடியில் சுதந்திரப் பொன்விழாக் குடிநீர்த் திட்டம்!

## கலைஞர் அறிவிப்பு

சென்னையில் — வள்ளுவர் கோட்டம் அருகே 24–9–98 அன்று நடைபெற்ற சென்னைப் பெருநகர் குடிநீர்த்திட்டத் தொடக்கவிழா உரையிலிருந்து.

"1978 -ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியம் அமைக்கப்பட்டது. சுமார் இருபதாண்டு காலத்தில் - 96-ஆம் ஆண்டு வரையிலே இந்த வாரியத்திற்கான மொத்தச் செலவு 411 கோடி ரூபாய். 96-ல் இந்த அரசு அமைக்கப்பட்ட பிறகு, 28 மாதங்களில், இதற்காக அனுமதிக்கப்பட்ட தொகை 611 கோடி ரூபாய். இருபதாண்டு காலத்தில் சுமார் 400 கோடி ரூபாயும், 2 ஆண்டு காலத்தில் 600 கோடி ரூபாயும் செலவுகள் இந்த வாரியத்திற்காகச் செய்யப் பட்டிருக்கிறதென்றால், அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும் என்பதிலும் - அடிப்படைத் தேவைகளிலும் - அதிலே முக்கியமாக முதல் இடத்தில் இருக்கக்கூடிய பாதுகாக்கப்பட்ட குடிநீரை மக்களுக்குத் தரவேண்டும் என்பதிலும் இந்த அரசு பொறுப்பேற்றபோது அறிவித்ததற்கிணங்க தன்னு டைய க்டமைகளைச் செய்து வருகிறது என்பதற்கு இவைகள் எல்லாம் எடுத்துக்காட்டுகளாகும்.

இதைத் தொடர்ந்து, வருகின்ற ஆண்டுகளில் 1999-2000-ஆம் ஆண்டில் 458 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 2000-2001-ஆம் ஆண்டில் 504 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 2002-2003-ஆம் ஆண்டில் 301 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் இந்தப் பணிகளை விரிவுபடுத்தவும் திட்டமிட்டிருக்கிறோம்.

இந்தப் பணிகள் நிறைவேற்றப்படுவதன் மூலமாகச் சராசரி நாள் ஒன்றுக்குச் சென்னை மாநகரத்தில் ஒருவருக்கு 1999-ஆம் ஆண்டில் 110 லிட்டர் வீதம் குடிநீரை வழங்க இயலும். 2002-ஆம் ஆண்டில் 140 லிட்டர் வீதம் குடிநீரை வழங்க இயலும்.

இதே நேரத்தில் நாம் கிராமங்களையும் எண்ணிப் பார்க்கத் தவறவில்லை. சென்னை மாநகரத்தில் 100 லிட்டருக்கு மேல் குடிநீரைப் பெறுகின்ற மக்கள் வாழ்கின்றார்கள் என்கிற போது, அந்த அளவிற்கு இல்லாவிட்டாலும், அதிலே முக்கால் பகுதி அளவிற்காவது தமிழ்நாட்டில் உள்ள கிராம மக்கள் அந்தப் பயனைப் பெறவேண்டுமென்பதற்கான திட்டங்களையும் இந்த அரசு தற்போது வகுத்து, படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது.

இன்றைக்குக் காலையிலிருந்து நானும், உள்ளாட்சித் துறை அமைச்சர் தம்பி கோ.சி.மணியும் மற்றும் செயலாளர்களும், அதிகாரிகளும் கலந்து பேசி தமிழகத்திலே கிராமப்புறங்களிலே இன்றைக்கு 90 லிட்டர் அளவிற்கு குடிநீர் கிடைக்கின்ற பகுதிகள் எத்தனை சதவிகிதம், அந்த அளவிற்குக் கிடைக்காமல் அதற்குக் குறைவாகக் கிடைக்கின்ற பகுதிகள் எத்தனைச் சதவிகிதம், மேலும் 40 லிட்டருக்கும் குறைவாகக் கிடைக்கின்ற பகுதிகள் எவ்வளவு என்பதையெல்லாம் கணக்கிட்டு, படிப்படியாக, முதற்கட்டம், இரண்டாவது கட்டம், மூன்றாவது கட்டம் என்று வகுத்து விரைவில் இந்தக் குடிநீர் பற்றாக்குறையை நீக்குவதற்குத் திட்டம் வகுத்திருக்கிறோம்.



சுதந்திரப் பொன்விழாவையொட்டியும் இன்றைக்கு நடத்தப்படுகின்ற இந்த ஆட்சியின் ஆளுங்கட்சியான கழகத்தின் பொன்விழாவையொட்டியும் பொன்விழா திட்டம் என்ற ஒன்றை மனதிலே எண்ணி, அதற்கானதொரு நிதியை ஒதுக்குவதற்காக நிதித்துறைச் செயலாளரிடமும் மற்றும் நகர்ப்புறத்துறைச் செயலாளரிடத்திலும் உள்ளாட்சித்துறை அமைச்சரிடத்திலும் எடுத்துக் கூறியிருக்கிறேன். அதற்கு, வருகின்ற ஆண்டிலே அரசின் சார்பில் ஐம்பது கோடி ரூபாயும் மற்ற நிதி நிறுவனங்களின் சார்பில் 150 கோடி ரூபாயும் இணைத்து முதற்கட்டமாக 200 கோடி ரூபாய் செலவழித்து நகரங்களுக்கும், பேரூராட்சிகளுக்கும் பொன்விழாத் திட்டம் என்கிற பெயரால் - கிராமப்புற மக்களுக்குத் தரப்படுகின்ற அடிப்படை வசதிகளைப்போல - தருவதற்கு - எத்தனை நகரங்களிலே 40 லிட்டருக்குக் குறைவாகத் தண்ணீர் கிடைக்கிறது, எத்தனை நகரங்களில் 60 லிட்டருக்குக் குறைவாகத் தண்ணீர் கிடைக்கிறது என்பதையெல்லாம் கணக்கிட்டுச் செயல்படுத்த விருக்கிறோம்.

இன்றைக்குக் கிராமப்புறங்களில் ஓரளவு இந்த அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்துவருகின்ற இந்த ஆட்சி கிராமப்புறங்களுக்கும், மாநகரங்களுக்கும் இடையேயுள்ள நகரங்களுக்கும், பேரூராட்சிகளுக்கும் இந்தப் பயனைத் தருகின்ற வகையில் பொன்விழாத் திட்டம் அறிவிக்கப்பட்டு - அந்தப் பகுதிகளுக்கெல்லாம் - எந்தெந்த நகரங்களுக்கு என்னென்ன மேம்பாடுகள் தேவை என்பதை எண்ணிப் பார்த்துச் செயல்படவிருக்கிறோம். அடுத்து வருகின்ற மாதங்களில் அது அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்படும் என்பதை இந்த நல்ல விழாவிலே தெரிவித்துக் கொள்கிறேன்".



# கொத்தடிமை மீட்பு



"ஏழையென்றும் அடிமையென்றும்
எவனுமில்லை ஜாதியில்...."

— என்று பாடினார் மகாகவி பாரதியார்.

ஆனால் இங்கொருவர், அங்கொருவர் அப்படிப்பட்ட வாழ்வில் சுகம் பெறுபவர்களாகவோ, அல்லது சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பது என்றால் என்னவென்றே அறியாதவர்களாகவோ இன்றும் வயிறு வளர்த்து வருகிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

அரசு அவர்களை விடுவித்து நல்வாழ்வளிக்கத் தயாராக இருக்கிறது. எனினும், அவர்களே முன்வந்து தங்களை அடையாளம் காட்டிக் கொள்ளாதவரை யார்தான் என்ன செய்ய முடியும்?

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஒழலூரில், கொத்தடிமைகளாக இருந்து வந்த இருபது பேரை அடையாளம் கண்டுபிடித்து மாவட்ட ஆட்சித்தலைவரும், மாவட்டத் துணை ஆட்சியரும் விடுவித்திருக்கிறார்கள். கல்லுடைக்கும் தொழில் செய்யும் அவர்களை நாம் நேரில் போய்ப் பார்த்தோம். அவர்களுக்கெல்லாம் ரத்தினம்மா என்றோர் தலைவியாம்; அவரைத் தேடினோம் கிடைக்கவில்லை.

சின்னமுத்து, லட்சுமி, குழந்தைக் கவுண்டர், அமாவாசை, கிருஷ்ணம்மா என்ற பெயர்களில் கிடைத்த சிலரிடம் விசாரித்தோம்.

"எத்தனை வருஷமா நீங்கள்ளாம் கொத்தடிமையா இருந்தீங்க?"

"பத்து வருஷமாங்க!"

"உங்களுக்கெல்லாம் சொந்த ஊரு?"

"சேலமுங்க..."

"சரி, அப்ப எவ்வளவு ஓங்க சம்பாத்தியம் இருந்தது?..."

"சம்பாத்தியமாவது மண்ணாவதுங்க. அப்பப்ப வயத்துக்கு எதுனா கிடைக்கும்; காசு பணமெல்லாம்... அவங்களா பார்த்துக் கொடுத்தாதானுங்க உண்டு.

"யாருகிட்ட அப்படி அடிமையா இருந்தீங்க?"

"சுந்தரம்னு பேருங்க!... அட, கெட்ட சொப்பனம் மாதிரி அதை உடுங்க. இப்ப நல்லாருக்கம்!"

"யாருவந்து ஓங்கெள விடுவிச்சா?"

"கலெக்டரையாதானுங்க!"

"ஆமா, அவர்கிட்ட நீங்கள்ளாம் வேற எதுனா வேலை கேட்கலியா?"

"தெரிஞ்சாதானுங்களெ கேட்க!" என்று சொல்லிச் சிரித்தார் பெரியவர் குழந்தைக் கவுண்டர்.

"எங்களுக்கெல்லாம் கல் உடைக்கிற இந்த வேலை தானுங்க பழக்கம். அதனால... இங்கேயே நாங்க கல் உடைச்சிப் பொழசிக்கிறோம்னோம், சரின்னுட்டு... இதுலயே வரவு செலவெல்லாம் கவனிச்சிட்டு நல்லபடியா வாழ்ந்துட முடியுமான்னாங்க — கட்டாயம் முடியும்னோம். அப்ப சரின்னிட்டு..." என்று அமாவாசை என்ற பெண்மணி பேசிக்கொண்டே போனதற்கு — "எல்லா உரிமையும் எழுதியே குடுத்துட்டாங்க ஐயா!" என்று கூறி முற்றுப்புள்ளி வைத்தார் சின்னமுத்து என்ற இளைஞர்.



கொத்தடிமைத்தனத்திலிருந்து விடுபட்டிருந்த அவர்கள் அனைவரும் புதிய தெம்போடு காணப்பட்டனர்; அவர்களில் எவர் முகத்திலும் நம்மால் வாட்டத்தைக் காண முடியவில்லை. நம்பிக்கை ரேகைகளைக் காணமுடிந்தது.

— முத்துசாமி.
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
- காஞ்சிபுரம்

# மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

ஆண்டுதோறும் செப்டம்பர்த் திங்கள் முதல் வாரம் ஊட்டச்சத்து வாரமாக உலக அளவில் கொண்டாடப்படுகின்றது. கடந்த 1982 முதல் தேசிய ஊட்டச்சத்து வாரத்தினை இந்திய அரசு கொண்டாடுகிறது. இருப்பினும் 1996ஆம் ஆண்டிலிருந்துதான் ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட சிறந்த கருத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு தேசிய ஊட்டச்சத்து வாரம்' கொண்டாடப்படுகிறது.



இதன்படி 1996ஆம் ஆண்டு 'குழந்தை வளர்ப்பு பழக்கங்கள்' என்ற கருத்தினை மையமாகவும், 1997ஆம் ஆண்டு ஊட்டச்சத்து மற்றும் சுற்றுப்புறச் சுகாதாரம்' என்றகருத்தினை மையமாகவும், இவ்வாண்டு (1998) 'ஊட்டச்சத்து நிலையை உயர்த்துவதில் குடும்பம் மற்றும் சமுதாயத்தின் பங்கு' என்ற கருத்தினை மையமாகவும் வைத்து ஊட்டச்சத்துவார விழா கொண்டாடப்பட்டது.

இதன் நோக்கமானது குடும்ப மற்றும் சமுதாயத்தினிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திப் பெண்கள், குழந்தை நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை உயர்த்துவதில் அவர்களின் ஈடுபாட்டின் பங்கு மற்றும் கடமை என்ன என்பதை உணர்த்துவதேயாகும்.

ஊட்டச்சத்துப் பற்றாக்குறை என்பது பலவிதமான காரணங்களையும் பலவிதமான தோற்றங்களையும் உள்ளடக்கியநோயாகும். ஊட்டச்சத்துக் குறைபட்டால் உடல் வளர்ச்சியும் உள்ள வளர்ச்சியும் தடைப்படுகிறது. அதன் காரணமாகக் குழந்தையின் மூளை வளர்ச்சி - அதாவது அறிவு வளர்ச்சி முழுமை அடைவதில்லை.

போதிய வளர்ச்சி இல்லாமை மற்றும் வளர்ச்சி தடைபடுதல் போன்ற பிரச்சினைகளால், கர்ப்பக் காலத்திலோ பிரசவத்தின் போதோ எப்படிப்பட்ட ஆபத்துக்கள் ஏற்படுகிறது என்பதை பல ஆண்டு அறிந்து வருகிறோம். இருப்பினும் அண்மையில்தான் ஊட்டச்சத்துப்பற்றாக்குறை - குறிப்பாக அயோடின் மற்றும் இரும்புச்சத்துக் குறைபாடு குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் திறமைகளைப் பாதிக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்துகிறது என்பது உலகளவில் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அறிவியல்பூர்வமான கண்டுபிடிப்பு, தாய்சேய் நல முன்னேற்றத்தில் நமக்குள்ள கவலைகளை மேலும் அதிகரிக்கச் செய்தது. ஊட்டச்சத்துப் பற்றாக்குறைப் பிரச்சனையைப் போக்குவதில் தமிழ்நாடு விழிப்புணர்வுடன் செயல்பட்டு வருகிறது. இதன் காரணமாக சத்துணவுத் திட்டமானது அறிமுகப் படுத்தப்பட்டு 3 முதல் 5 வயதுடைய குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

- எஸ்.சூர்யன், இ.ஆ.ப.,
திட்ட அலுவலர்,
தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டசத்துணவுத் திட்டம்

இந்தச் சத்துணவுத் திட்டத்தின் பயனானது சமூகம் சார்ந்தவையாக அமைந்ததே தவிர, அறிவுவளர்ச்சிக்காக இயங்குவதாக அமையவில்லை. இந்தப் பிரச்சனைகளைப் போக்கும்விதமாகத் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டமானது கடந்த 1980ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தைச் சார்ந்த கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாகத் தமிழ்நாட்டில் உள்ள 318 ஒன்றியங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் -1, 1980 முதல் 1989 வரையில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்-2, 1991 முதல் 1997 வரையிலும் சுமார் 17 ஆண்டு செயல்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டமானது கடந்த டிசம்பர் மாதம் 1997ஆம் ஆண்டு முடிவுற்றது. இதன் பயன்களைக் கண்டறிய தேசிய ஊட்டச்சத்து நிறுவனம், ஐதராபாத், ஒரு ஆய்வை மேற்கொண்டது. இந்த ஆய்வு அறிக்கையின் மூலம் தெரியவருவது என்னவென்றால், 6-36 மாத குழந்தைகளிடையே காணப்பட்ட 16 சதவிகிதம் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு 3 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மிதமான மற்றும் குறைவான ஊட்டச்சத்துப் பற்றாக்குறைப் பிரச்சனைகள் இன்னும் தீர்க்கப்படவேண்டியுள்ளது. இத்திட்டம் செயல்படும் ஒவ்வொரு மாவட்டத்திலும் வெவ்வேறு விதமான பிரச்சினைகள் உள்ளது. இதனால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பிரச்சினைகளைப் போக்குவதற்குத் தனித்தனியான அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதனை இது சுட்டிக்காட்டுகிறது.

இத்திட்டத்தின் மூலம் குழந்தை வளர்ப்பில் ஆண், பெண் என்ற பாகுபாடு முற்றிலும் ஒழிக்கப்படவேண்டும் என்று பல்வேறு விதமான கல்வி முனைப்பு இயக்கத்தின் மூலம் மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட்டது. இருப்பினும் தமிழ்நாட்டில் சில இடங்களில் பெண் சிசுவதை இன்னும் தொடர்கின்றது என்பது மிகவும் வேதனையளிக்கின்றது.

இத்திட்டமானது சுகாதாரத்துறையினருடன் ஒருங்கிணைந்து கடந்த 17 ஆண்டுகளில் சிசுமரண விகிதம் 1000க்கு 103 ஆக இருந்ததை 1000க்கு 60 ஆகக் குறைக்க உதவிபுரிந்தது. தமிழ்நாட்டில் தடுப்பூசித் திட்டம் மிகவும் வெற்றிகரமாகச் செயல்பட்டுவருகிறது. இதன்மூலம் இளம்பிள்ளைவாத நோய் ஒரு இலட்சத்திற்கு 0.45 எனவும் தொண்டையடைப்பான் நோய் ஒரு இலட்சத்திற்கு 0-69 என்ற விகிதமும் குறைக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் மூலம் 24 மாவட்டங்களைச் சார்ந்த 19,500 கிராமங்களில் திட்டம் செயல்படுவதற்கான உள்ளமைப்புச் செய்யப் பட்டுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்து வதற்கு உதவிபுரியும் வகையில் கிராமங்களைச்சார்ந்த 60,000 பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. 0-36 மாதக்குழந்தைகள் சுமார் 13.5 இலட்சமும் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் சுமார் 7 இலட்சம் பேர்களும் இத்திட்டத்தில் தொடர்ந்து பயனடைந்து வருகின்றனர்.

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் இவ்வாண்டு அக்டோபர் திங்கள் முதல் ஆரம்பிக்கப் படவுள்ள 5 மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது உலக வங்கியின் நிதிஉதவியுடன் செயல்படுத்தப்படும்.

*காஞ்சிபுரம் மாவட்டத்தில் – கல்விபெறும் "கற்றலின் இனிமை" திட்டச் சிறுவர் சிறுமியர்.*



## மருத்துவத் துளிகள்

- *கால ஆணியின் மீது பப்பாளிப் பாலோ, எருக்கம் பாலோ பச்சரிசிப் பாலோ தடவிவரின் ஆணி உதிர்ந்து விடும்.*
- *தக்காளி சூப், சுவை அதிகப்பட சூப்பில் ஒருசில கேரட்டுகளை வெட்டிப் போட்டால் சூப் சுவையாக இருக்கும்.*
- *மூன்று அல்லது நான்கு பறித்த பாகற்காய்களை கனை அறுத்து அதை ஒரு கப் மோரில் கலக்கி அருந்தி வர மூலம் கட்டுப்படும்.*
- *இட்டிலி அவிப்பதற்கு முன் மாவில் சிலதுளி நல்லெண்ணெய் சேர்த்து கலக்கி விட்டுப் பின்பு போட்டால் இட்டிலி பூப்போல இருக்கும்.*
- *சுளுக்கு ஏற்பட்டால் வெள்ளைப் பூண்டை உப்புச் சேர்த்து இடித்து இந்தச் சாற்றைத் தடவினால் குணமாகும்.*
- *நன்னாரி வேரை இடித்து அரைத்துக் கொட்டைப்பாக்கு அளவு எடுத்துக் கொண்டு பசும்பாலில் கலந்து சாப்பிட்டுவர விரைவில் தலைமுடி நரைக்காது.*

*நன்றி* : **சாந்திவளாகம்**

இப்புதிய திட்டத்தில், தமிழ்நாட்டைச் சேர்த்ததன் கார்ணம், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டசசதது திட்டததின் மூலம் அடைந்த பயன்கள் மற்றும் அனுபவங்களை மற்ற மாநிலங்களுடன் பகிர்ந்து கொளவதன் வாயிலாக அம்மாநிலங்களில் திட்டச் செயல்பாட்டினை முன்னேற்ற உதவுவதேயாகும்.

இப்புதிய திட்டத்தின் மூலம்3 முக்கியக் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். அவை -

- ☐ குழந்தை வளர்ப்புப் பற்றிய பழக்கவழக்கங்கள்
- ☐ ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் சுற்றுப்புறச் சுகாதாரம்
- ☐ ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதில் குடும்பம் மற்றும் சமுதாயத்தின் பங்கு

நம் நாட்டில் உணவு பற்றாக்குறை என்பதே அரிது. அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் உணவு பற்றாக்குறை என்பது இல்லை என்பது ஆசீர்வதிக்கப்பட்ட ஒன்றாகும். இந்நிலையிலும் உணவு அளிப்பதில் ஆண், பெண் மற்றும் குழந்தைகள் என்று சரிசமமில்லாத பாகுபாட்டைக் காண முடிகிறது. இந்தப் பாகுபாடு, கலாச்சாரம் நம்பிக்கை மற்றும் பழக்கவழக்கங்கள் உணவளிப்பதில் இந்த முரண்பாடான நிலை ஏற்படுத்துகிறது. அதாவது தேசிய அளவில் அல்லது மாநில அளவில் நிறைவான உணவுப் பொருட்களை அடைந்திருப்பினும் குடும்ப அளவில் முரண்பாடான உணவு வழங்கும் நிலையை ஏற்படுத்துகிறது. இப்புதிய திட்டத்தின் மூலம் பெண்களின் நிலையை மேம்படுத்தி, அதன்மூலம் கர்ப்பம் தரித்தல், குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை, வயிற்றுப்போக்குத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு, குழந்தை நலமாக மற்றும் நோய்வாய்ப் பட்டிருக்கும்போது அளிக்கவேண்டிய உணவுமுறைகள் போன்ற பல பகுதிகளை உள்ளடக்கிய குழந்தை வளர்ப்புப் பற்றிய பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் பெண்கள் தாங்களாகவே முடிவெடுக்கும் நிலைக்குக் கொண்டுவருவதேயாகும்.

மேலும் இப்புதிய திட்டத்தின் மூலம் குழந்தையின் நலமான வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தினை மையத்தின் மூலம் செய்வதற்குப் பதிலாக வீட்டிலேயே தாங்களாகவே வளர்ச்சியினைக் கண்காணிக்கும் விதமாக வழிமுறைகள் அமைக்கப்பட்டுள்ளது. ஊட்டச்சத்து உணவு, வீடு, பொழுதுபோக்கு மற்றும் மருத்துவ வசதிகள் போன்றவை குழந்தையின் அடிப்படை உரிமை என்பதைக் குடும்பம் மற்றும் சமுதாயத்திற்கு எடுத்துரைக்க வேண்டும். ஒரு தாயானவள் ஏழையாகவோ, நலம் குன்றியவளாகவோ அல்லது அவளுக்கு எதைப்பற்றியும் தெரியாத நிலையில் தரம்மிக்க குழந்தை வளர்ப்பு முறையை அவளால் பின்பற்ற முடியாது. ஆகவே ஒரு குழந்தையின் நலமான வளர்ச்சியைத் தாய் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால், அந்தத் தாயானவள் முதலில் தன்னுடைய நலமான வளர்ச்சியைத் தெரிந்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

கர்ப்ப காலத்தில் ஏற்படும் ஊட்டச்சத்துப் பற்றாக்குறை மற்றும் இரத்தசோகையினால் குறைந்த எடையுடன் குழந்தை பிறக்க நேரிடுகிறது. இது பின் குழந்தையின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தினைப் பாதிக்கின்றது. ஆகையினால் இப்புதிய திட்டத்தின் மூலம் கர்ப்பிணித் தாய்மார்களின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையினில் மட்டும் கவனம் செலுத்தாமல் வளரும் இளம் மகளிரின் ஊட்டச்சத்து நிலையிலும் கவனம் செலுத்தப்படும். இதற்காக வளரும் இளம் மகளிர்களுக்காக இரும்புச் சத்து மாத்திரைகள் வயிற்றுப்பூச்சி நீக்க மருந்து போன்றவை கொடுப்பதோடு சுற்றுப்புறச் சுகாதாரம் ஊட்டச்சத்துத் தேவைகள், சுகாதாரம் போன்றவற்றைப் பற்றிய ஒரு விழிப்புணர்வை அவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதோடு ஒவ்வொரு மாதமும் அவர்கள் மையத்திற்கு வந்து அவர்களாகவே எடை எடுத்துப்பார்த்து அவர்களின் வளர்ச்சியினைக் கண்காணித்துக்கொள்ளும் பழக்கத்தினை அவர்கள் மனதில் ஆழப் பதிய வைப்பதாகும்.

ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, ஊட்டச்சத்துப் பற்றாக்குறையானது குழந்தையின் உடல் மற்றும் அறிவு வளர்ச்சியினை மிகவும் பாதிக்கின்றது. ஆகவே சரியான குழந்தைப் பருவ வளர்ச்சியை முன்னேற்றம் காணச் செய்வது மற்றும் முன்பருவக் கல்வியளிப்பது போன்றவை வீட்டிலும் மற்றும் மையத்திலும் அளிக்கும் விதமாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

புதிதாக உதயமாகியுள்ள மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடடுத் திட்டம் தமிழக மக்களின் வாழ்வில் ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கி - குறிப்பாக இளமகளிர்கள் மற்றும் குழந்தைகளும் மேம்பாடு அடையவும் வகை செய்யும் என்பது திண்ணமே. ●



# உலக இலக்கியத்தில் பங்கேற்க ஏதுவாய்...

- முனைவர் க.முத்தையா
உதவி இயக்குநர்,
தமிழ் வளர்ச்சித்துறை,
தருமபுரி மாவட்டம்

*"இன்னொரு தொல்காப்பியரின் வருகைக்காகத் 'தமிழ் இலக்கியம் இன்னும் எத்தனைக் காலம் தவம் இருக்க வேண்டுமோ?"*

*கா.நா.சு.வின் மேற்குறித்த கூற்று தொல்காப்பியர் தமிழர் என்பதால் மகிழ்வும் தற்காலத் தமிழ் இலக்கியத்தின் போக்கை நினைவுகூர்கையில் அவலமும் ஒருசேர நுவல்கிறது. தொல்காப்பியருக்குப் பிறகு இலக்கியத்தைக் கோட்பாட்டு அடிப்படையில் சிந்திக்கும் போக்கு இல்லாமல் போனது தமிழ் இலக்கியத்தின் தீவினைப் பயன் என்றே கருதத் தோன்றுகிறது.*



*தற்காலத் தமிழ்ப்படைப்பாளர்களுள் மூச்சுக்கு முந்நூறு பாட்டு எழுதும் அபாரத் திறமை படைத்தவர்களுக்குப் பஞ்சமில்லை. அதேபோல் நாடகம், சிறுகதை, நாவல் ஆகியன நாள்தோறும் புற்றீசல் போல் பெருகிவருவதற்கும் குறைவில்லை, என்றாலும் உலக இலக்கியத்தில் தமிழின் குரல் ஒலிக்கப்படவேயில்லையே? மகாகவிகள் உலவிய இந்தத் தமிழ் மண்ணில் ஒருவருக்குக் கூட நோபல் பரிசு கிடைக்கப் பெறவில்லையே? காரணம் என்ன? சமகால இலக்கிய ஆராய்ச்சியில் இதற்குரிய காரணங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவைகளாகும்.*

*இலக்கிய உலகில், 'உலகத்தரம்' அல்லது 'உலக இலக்கியம்' என்று கூறப்படுபவை எவை என்பது குறித்து இருநூறு ஆண்டுக்கால அளவில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளன. கதே முதற்கொண்டு கா.நா.சு.வரை இவ்விவாதக் குழுவில் இடம் பெற்றுள்ளனர். உலக இலக்கியங்கள் என்பவை உலகில் தோன்றிய அனைத்து இலக்கியங்களையும் குறிக்கும் என்றாலும் தனிப்பட்ட இலக்கியங்களிடையே காணப்படும் வேறுபாடுகள் நீங்கிய இலக்கியத் தொகுப்புக்களைக் குறிப்பதாகும். 'ஆல்பர்ட் ஜெரால்டு' இதற்கு 'அனைவராலும் பொதுவாக அனுபவிக்கப்படும் நூல் தொகுதிகளை இது சுட்டும்' என்று உலக இலக்கிய வரையறுப்புக்கு முத்தாய்ப்பு வைக்கிறார்.*

### மொழிபெயர்ப்பு முயற்சிகள்

*தற்காலத் தமிழிலக்கியப் படைப்புக்கள் உலகத் தரமற்றவை என்ற கருத்து பொதுநிலையில் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தபோதிலும், ஒரே வழி சில படைப்புக்கள் பொதுவாக அனைவராலும் அனுபவிக்கப்படும் தன்மையினவாகவும் நாடு, இனம், மொழி, எல்லை இவைகளைக் கடந்த நிலையில் மனித இனப் பொதுப்பண்பு உடையனவாகவும் இருப்பதை உலக இலக்கியப் போக்கு உணர்ந்தவர் தெளிகுவர். க.நா.சு.தம்முடைய 'உலக இலக்கியம்' என்னும் நூலில் உலகத் தரமுடைய தமிழ் இலக்கியங்களைப் பட்டியல் படுத்தியுள்ளார். அத்தகைய இலக்கியங்கள் கூட உலகத் தன்மையைப் பெறவில்லையே? காரணம் என்ன? ஓர் இலக்கியத்திற்கு உலகத்தரம் தருபவர் யார்? என்ற வினாவிற்கான விடையில்தான் முன் வினாவிற்குமான விடையும் உள்ளது.*



'உலக இலக்கியம் என்பது அனைத்து மனித இனமும் நுகர்வதாக இருக்க வேண்டும் என்றாலும், நடைமுறையில் மேலைநாட்டு நாகரீகக் குழுவினர் தம்முள் பொதுவாக நுகரும் நூல் பகுதிகளையே இது குறிக்கிறது' என்ற உலக இலக்கிய விமர்சகர் ஒருவரின் விளக்கம் யாரால் உலகத்தரம் தரப்படுகிறது என்பதை அறுதியிட்டுக் கூறுகிறது.

இப்பொழுது, தரத்தை முடிவு செய்யும் மேற்குறித்த குழுவினரின் பார்வைக்குத் தமிழ் இலக்கியம் தென்பட்டுள்ளதா? என்ற வினாவினை எழுப்பினால் 'இல்லை' என்ற பதில் எளிதாக முன்வந்து நிற்கும். நம் படைப்புக்கள் தீர்ப்புக்குழுவினரைச் சென்று அடையவில்லை என்பதுதான் முதற்குறை. எனவேதான் , பாரதி கூட 'நமக்குள்ளே பழங்கதைகள் பேசும் பழக்கத்தை விடுத்து பிறர்க்கு உணர்த்தும் பண்பு வளர வேண்டும் என்று சொன்னான். இதற்கான நம்முயற்சிகளைச் சீர்தூக்கிப் பார்க்கும்பொழுது நம்முடைய அடைவுகள் மிகச் சிலவாகத்தான் இருக்கின்றன. ஒரே ழித் திருக்குறளும் திருவாசகமும் மேலை அரங்குகளில் ஒலிக்கப் வெதற்கு உலகமொழிகளில் வை பரவலாக்கப்பட்டதே யாய காரணமாகும். எனவே, ன்றைய தரமான தமிழ்ப் டைப்புக்கள் உலக அரங்கில் இடம் பெறாமைக்கு உலக மொழிகளில் அவற்றை மொழி யர்ப்புச் செய்யாதிருப்பதே முக்கியக் காரணம். இதற்கான வழிவகைகள் செய்யப்படுவது கட்டப்பணியாகும்.

### ஒப்பீட்டு முயற்சிகள்

"ஒப்பிலக்கியம் இறுதியில் உலக இலக்கியக் கோட்பாட்டிற்கு இட்டுச்செல்கிறது" என்கிறார் தெயின். தமிழும் தமிழ் இலக்கியமும் சிறந்தன என்று நமக்குள் சொல்வதை விட்டுவிட்டு உலகுக்கு உணர்த்தும் பண்பு வளர வேண்டும். தமிழையும் தமிழ்ப் படைப்புக்களையும் உலகத்தரத்திற்குக் கொண்டு

## வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள பட்டம்- பட்டயம் பெற்றுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பத்தில் 18 வயது நிரம்பிய அனைவருக்கும் தொழிற்கருவிகள் இலவசமாக வழங்கிடும் புதிய திட்டம்

*இப்புதிய திட்டத்தின்படி,*

- வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள ஒரு குடும்பத்தில் யாராகிலும் ஒருவர் பட்டதாரியாகவோ, பட்டயதாரியாகவோ இருத்தல் வேண்டும்.
- அந்தக் குடும்பத்தில் 18 வயது எய்திய அனைவரும் ஒவ்வொரு அலகாக கருதப்படுவர். எடுத்துக்காட்டாக ஒரு பெண் பட்டதாரியாக உள்ள குடும்பத்தில் இப்பெண் உள்பட 18 வயது எய்திய மூன்று பிள்ளைகள் இருந்தால் தாய், தந்தை மற்றும் மூன்று பிள்ளைகளையும் சேர்த்து ஐந்து பயனாளிகளாகக்கருதப்படுவர். இவர்கள் செய்ய விரும்பும் தொழிற்குண்டான ஒரு கருவியின் விலை ரூ.3,000 எனில் ஐந்து நபர்களுக்கும் ரூ.3,000 வீதம் மொத்தம் ரூ.15,000 நிதியுதவி வழங்கப்படும்.
- இத்திட்டத்தின்படி குடும்ப எண்ணிக்கைக்கு ஏற்பவும் ஒரு கருவியின் விலைக்கு ஏற்பவும் வருவாய் ஈட்டக்கூடிய எந்த வகைக் கருவியையும் வாங்கலாம்.
- இந்த திட்டத்தின்படி தேர்ந்தெடுக்கப்படும் ஒரு குடும்பத்திற்கு ரூ.15,000 முதல் ரூ.50,000 வரை வழங்கப்படும். இந்தத் திட்டத்திற்கு வழங்கப்படும் தொகை முழுவதும் மானியமாக வழங்கப்பட உள்ளது. தேவையான கூடுதல் வசதிகளைப் பயனாளிகளே செய்துகொள்ள முன்வரவேண்டும்.

*எடுத்துக்காட்டாக:*

- மிதி வண்டிக் கடை வைக்க விரும்பும் ஒருவர் மிதி வண்டிகளை இத்தொகையின் மூலம் வாங்கலாம். மிதிவண்டிக் கடைக்கு வேண்டிய கட்டட வசதியைப் பயனாளிகளே தேடிக்கொள்ள வேண்டும்.
- இந்தத்திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாகச் செயல்பட உள்ளது. இதற்கான விண்ணப்பப்படிவம் ஆதிதிராவிடர் நலத் தனி வட்டாட்சியர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
- இத்திட்டத்தின் மூலம் பயன்பெற மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
- இத்திட்டம் ஆரம்பிக்கத் தேவையான மூலதனம், சாத்தியக்கூறுகள், தேவை, எதிர்பார்க்கும் இலாபம் போன்ற விவரங்கள் அடங்கிய திட்ட அறிக்கையை (பிராஜக்ட் ரிப்போர்ட்) விண்ணப்பத்துடன் அனுப்பிடல் வேண்டும்.
- இத்திட்டத்தை நல்லமுறையில் பயன்படுத்திப் பயனடைய ஆதிதிராவிடர் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- இத்திட்டத்தினால் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத்தில் பட்டதாரி மற்றும் பட்டயதாரி ஒருவரையாவது உருவாக்கி வறுமைக்கோட்டிற்கு மேல் குடும்பங்களை உயர்த்தும் முனைப்பு நிறைவேறுவதுடன் கல்வி ஆர்வமும் சமுதாயத்தினிடையே பெருகும். படித்தவர்க்கு வேலை இல்லை என்ற இக்கட்டும் குறையும் என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

★ ★



> **ஜா**தியும், ஜனநாயகமும் ஒன்றாக இருக்கமுடியாது; மூடநம்பிக்கையும் விஞ்ஞானமும் இணைந்து வாழமுடியாது.
>
> – அண்ணா

செல்ல ஒப்பீட்டு முயற்சிகள் மிகுந்த பயனளிக்கும். ஹோமரின் இலியாத், ஒடிசியை விட முருகியல் தன்மை வாய்ந்த பல வரிகள் சங்க இலக்கியத்தில் பரந்து கிடக்கின்றன. நோபல் பரிசு பெற்ற பாப்லோ நெருடாவை விடப்பல இடங்களில் பாரதிதாசன் விஞ்சுகிறார். ஷெல்லியோடு பாரதியை ஒப்பிடும்பொழுது பல இடங்களில் குருவை மிஞ்சிய சீடராகப் பாரதி காட்சி தருகிறார். தமிழோடு பிற மொழிகளை ஒப்பிட்டுக் காணும்போது தமிழின் தொன்மைச்சிறப்பும், வரையறுக்கப்பட்ட இலக்கணக் கொள்கையும், ஒலிப்புமுறையும் நெருங்கமுடியாத அளவிற்கு உயர்ந்துள்ளன. இத்தகு சிறப்புக்கள் ஆங்காங்கே சில தமிழறிஞர்களால் போகிறபோக்கில் கூறப்பட்டுள்ளன என்றாலும் இம்முயற்சியில் தமிழின் அடைவுகள் மிகச்சிலவே!

### தேசியத் தன்மைகளை நோக்கி

எந்தவொன்றையும் பிறவற்றோடு ஒப்பிடும் பொழுதுதான் அவற்றில் உயர்ந்தது, தாழ்ந்தது என்ற பகுப்புநிலை முடிவிற்கு வரமுடியும். எனவே, தமிழ் உலக அரங்கில் ஒலிக்கப்படவேண்டுமாயின் முதலில் இந்திய அளவில் அதற்குரிய தனிச்சிறப்புக்கள் நிலைநிறுத்தப்பட வேண்டும். இதற்கு இந்திய அளவிலான மொழி, இலக்கியங்களோடு தமிழை ஒப்பிட்டுத் தமிழுக்குரிய தேசியத்தன்மைகள் இனம் காணப்படவேண்டும். அடுத்ததாக இந்திய தேசிய ஒருங்கிணைப்போடு உலகத் தரத்திற்கான போட்டியில் பங்குகொள்வதாகும்.

தமிழானது ஐக்கிய தேசியத் தன்மையைப் புறக்கணித்துவிட்டுச் சர்வதேசிய மதிப்பைப் பெற இயலாது. அனைத்திந்திய அளவில் தமிழுக்கான மதிப்புக்கள் போதுமான அளவில் கிடைக்கவில்லை அல்லது தரப்படவில்லை என்ற குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. இது உண்மையும்கூட, இந்திரா பார்த்தசாரதியும், வெங்கட் சாமிநாதனும் டெல்லியில் தமிழுக்கான முயற்சியில் படும்பாட்டை செய்தித் தாள்களில் விரிவாகவே எழுதியுள்ளனர். இவர்களோடு சாலை இளந்திரையனையும் சேர்த்துக்கொள்ளலாம். தேசிய அளவில் நம்முடைய மதிப்பை நிலை நிறுத்துவதில் 'தமிழர்களின் முயற்சி குறைவான ஒன்றாகவே உள்ளது. இலக்கியத்துறையில் பாரதி, பாரதிதாசனுக்குப் பிறகு அனைத்திந்திய முக்கியத்துவத்தில் தமிழருக்கும் தமிழுக்கும் இடமில்லாத சூழ்நிலையைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. எனவே, இந்திய அளவில் தமிழுக்கான முக்கியத்துவத்தை நோக்கி நடைபோட வேண்டிய கால கட்டத்தில் உள்ளோம்.

இதற்குப் 'பாரதி-குமாரன்-ஆசான்-குர்ஜாடா அப்பாராவ் ஓர் ஒப்பீட்டாய்வு' என்பது போன்ற ஆய்வு முயற்சிகள் பலனளிக்கும். மு.வரதராசன்-காண்டேகர் போன்றோரை ஒப்பிடுவதும் இந்திய மண்ணில் தமிழுக்கான அங்கீகாரத்தை நல்கும். இதைப்போலவே ஜெயகாந்தன் - பிரேம்சந்த் ஒப்பீடும் அமையும். எனவே, தமிழுக்கான உலகத்தரம் பற்றி எண்ணும் பொழுது, இந்திய மொழிகளிலும், இந்திய இலக்கியங்களிலும் தமிழின் தனிச்சிறப்புக்கள் நிலைநிறுத்தப்படுவது உலகத்தரத்தை எட்டுவதற்கான அடுத்தகட்டப் பணியாகும். இந்திய அளவில் ஏற்கப்பட்ட தமிழ்ப் படைப்புக்களையும், தமிழ்மொழிச் சிறப்புகளையும் ஏனைய உலகப் படைப்புக்களோடும் உலக மொழிகளோடும் உரசிப்பார்ப்பது அடுத்த முயற்சியாகும். இவ்வாறு ஒப்பிடப் பெறும்பொழுது தழ் அதற்கான உலகத் தரத்தினை அதுவாகவே பெற்றுவிடும்.

### உருவம்-உள்ளடக்கம் மாற்றம் தேவை

தமிழுக்குரிய உலகத்தரம் கிடைக்காமைக்குரிய காரணங்களை மதிப்பீடு செய்யும் திறனாய்வாளர்கள் "புதிய புதிய துறைகள் இலக்கியத்தில் தோன்றும் போதெல்லாம் அவற்றை உடனே பற்றிக்கொண்டு அவற்றில் பிறரினும் மேம்பட்டுப் பிறருக்கும் வழிகாட்டக்கூடிய அளவில் ருஷ்யர்கள் முன்னேறி விடுகின்றனர். ஆனால் தமிழர்கள் அப்புதிய துறைகளை அறிமுகப்படுத்திக் கொள்வதற்கே ஒரு நூற்றாண்டாகி விடுகிறது" என்கின்றனர். புத்திலக்கியத் துறைக்கான நாவல், சிறுகதை, புதுக்கவிதை, திறனாய்வு ஆகிய துறைகள் பலவும் மேலை நாடுகளில் தோன்றிச் சில நூற்றாண்டுகளுக்குப் பிறகே தமிழுக்கு அறிமுகமாகியுள்ளன. இன்றைய இலக்கியத்துறைகளில் செல்வாக்குச் செலுத்துவனவும் மேற்குறிப்பிட்ட துறைகளேயாகும். இத்தகைய சூழ்நிலையில் தற்காலத் தமிழ்ப் படைப்புக்கள் உலகத்தரத்தை எட்டவில்லை என்பதற்கு இத்தகைய கால இடையீடும் ஒரு காரணமாகலாம்.

இந்தக் கால இடையீடு தமிழால் சமாளிக்கப்பட வேண்டும். இது அவ்வளவு எளிதன்று, ஆயினும் முடியாதவொன்றன்று. தற்காலத் தமிழ் உலகில் இன்றுவரை புத்திலக்கியத்துறைக்கு வித்தாக இருந்த முன்னுதாரணம் அற்ற முன்னோடி என்று யாரையும் குறிப்பிட்டுச் சொல்லமுடியாத அவலநிலையில் உள்ளோம். தமிழர் ஒருவர் புதுத்துறையை அல்லது புத்திலக்கிய வடிவத்தை அறிமுகம் செய்வாராயின் அவரால் தமிழின் தரம் உயரும். அப்போது, தமிழ் இலக்கியம் உலக இலக்கியமாகும். இலக்கிய உலகில் உருவம் உள்ளடக்கம் இவையிரண்டில் தமிழலக்கிய வாதிகள் உருவத்தில் மாற்றம் கொண்டுவரும் நாளே தமிழ் தலைநிமிர்ந்து நிற்கும் நாளாகும்.

### முடிவுரை

ஆக, தமிழ் இலக்கியம் உலகினரின் காதுகளுக்கு எட்டவேண்டுமாயின் 1.மேலைநாட்டுத் தீர்ப்புக் குழுவினருக்கும், ஏனைய மொழிக் குழுவினருக்கும் தமிழ் இலக்கியம் மொழிபெயர்ப்பாகச் சென்றடைய வேண்டும். 2. தமிழில் தற்சார்பு இல்லாத ஒப்பீட்டாய்வுகள் பல்கிப் பெருகி தமிழின் தரங்கள் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். 3.புத்திலக்கியப் பரிமாணங்கள் தமிழன் பரவிப் படரவேண்டும், வேண்டுமானால் புத்திலக்கிய வடிவம் உருப்பெருதல் வேண்டும். ☐

# தூர் வாரும் பணிகள்!



காஞ்சிபுரம் மாவட்டம் : தூர் வாரப்பட்டுள்ள – கிளார் முசரவாக்கம் வரத்துக் கால்வாய்

மாநிலம் முழுவதுமுள்ள ஏரிகள், குளங்கள், கால்வாய்கள், ஆறுகள் தூர்வாரி ஆழப்படுத்தப்பட்டு – எங்கும் வளம் தேங்கச் செய்திடும் மாண்புமிகு முதல்வர் **கலைஞரின்** உன்னதத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஊக்கத்தோடு செயல்பட்டு வருகிறது **காஞ்சிபுரம்** மாவட்டம்



தூர் வாரப்பட்ட மாமல்லபுரம் கோயில் குளம்

## கம்பக்கால் வாய்க்கால்

கம்பக்கால் வாய்க்கால வேலூா மாவட்டம், வாலாஜாபேட்டை அருகே உள்ள பாலாறு அணைக்கட்டில் இடது கரையிலிருந்து பிரிந்து வரும் காவேரிப்பாக்கம் . கால்வாயின கிளைப்பிரிவான கோவிந்தவாடி கால்வாயின் 25.80வது கிலோ மீட்டரில் பிரிகின்றது. இக்கால்வாய் காஞ்சிபுரம் மாவட்டம், பாலுசெட்டி சத்திரம் அருகே உள்ள தைப்பாக்கம் கிராமம அருகே பிரிந்து திருப்பெரும்புதூர் வரை சுமார் 44.36 கிலோ மீட்டர் தூரம் சென்று, இறுதியாகத்திருப்பெரும்புதூர் ஏரியைச் சென்று அடைகின்றது.

இந்தக் கால்வாய், காஞ்சிபுரம் மற்றும் திருப்பெரும்புதூர் வருவாய வட்டங்களில் முறையே 55 மற்றும் 30 ஏரிகளுக்கு நீர் விநியோகம் செய்கின்றது. இக்கால்வாயினால் பயன்பெறும் மொத்த பாசனப் பரப்பு 21,279.17 ஏக்கர் ஆகும்.

இக்கால்வாயில் பொதுவாக, வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் – அதாவது, அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் மட்டும் சுமார் இரண்டு மூன்று வார காலத்திற்கு மட்டும் நீர்வரத்து இருக்கும். இக்குறுகிய காலத்திற்குள், இக்கால்வாயின் அனைத்து ஏரிகளுக்கும் நீர் விநியோகிக்கப்பட வேண்டும். மேலும்





காஞ்சிபுரம் செவிலிமேடு ஏரி தூர்வாரும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதன் மூலம பயனபெறும ஏரிகள எல்லாம மிகவும குறைநத தனி நீர்ப்பிடிப்புப் பரப்பே உள்ளவையாக இருப்பதாலும், பெரும்பாலும் அனைத்து ஏரிகளும் இக்கால்வாயையே நம்பி உளளன.

1893ல வெட்டப்பட்ட இக்கால்வாய், போதுமான நிதி ஒதுக்கீடின்மையால் நீண்ட காலமாகப் பராமரிப்பின்றி, தூர்ந்து போயிருந்தது.

இதனுடன, கால்வாயில் ஏற்பட்ட ஆக்கிரமிப்புகள், வேலிகாத்தான மரங்கள், முட்புதர்கள் காரணமாகவும் கால்வாயில ஆங்காங்கே உடைப்பு ஏற்பட்டு, அதனால கடைமடைப் பகுதிகளுக்கு **நீர்விநியோகம்** பெறாமலும், ஆரமபப் பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு அதனால பாதிப்பும் ஏற்பட்டது.

இந்நிலையில், உலக வங்கி நிதி உதவியின கீழ், பாலாறு அணைக்கட்டுப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் அதைச் செப்பனிட முடிவு செய்யப்பட்டு, ரூ.3.60 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியது.

இதன்படி, காஞ்சிபுரம் வட்டத்திற்குள் உள்ள கம்பக்கால வாய்க்கால் பகுதியாக 18.65 கி.மீ. நீளத்தைச் சீரமைக்கவும், அதிலிருந்து பிரிந்து சென்று ஏரிகளுக்கு நீர் வழங்கும் 23 கிளைக் கால்வாய்கள் மூலக்கால்வாயில் உள்ள வீழங்கள், தலை மதகுகள், தலை மதகுகளுக்குண்டான திருகு அடைப்பான்கள் பொருத்துதல் மற்றும் சில ஏரிகளைச் சீரமைப்புச் செய்யவும் இத்துடன் கால்வாயின் வலது புறத்தில் ஒரு ஈப்புச்சாலை அமைக்கவும் ரூ.1.97 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

### திருப்பெரும்புதூரில்....

அவ்வாறே, திருப்பெரும்புதூர் வட்டத்தில் செல்லும் கம்பக்கால் கால்வாய் (25.71 கி.மீ.) பகுதியும், மேற்கூறிய புனரமைப்புப் பணிகள் போன்றே செய்ய ரூ.1.60 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவ்விரு பணிகளும் தற்போது துவங்கப்பட்டு நடந்தேறி வருகின்றன.

இவ்விரு பணிகளும் முடித்திட 18 மாத கால அவசகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்விரு பணிகளும் முடிவுறும் பொழுது. இத்திட்டத்தின்படி கடைமடைப் பகுதிகள் உட்பட காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள எல்லா ஏரிகளுக்கும் உரிய விகிதாச்சார அடிப்படையில் நீர் விநியோகம் செய்யப்படும். இப்பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் மேற்கண்ட 85 ஏரிகளும் உறுதியாக நிரம்புமென எதிர்பார்க்கலாம்.



### அண்ணாவின் மேதைமை

*அறிஞர் அண்ணா அவர்களுக்கு. அமெரிக்க நாட்டு "யேல் பல்கலைக் கழகத்தில்" ஃபெல்லோஷிப்" பட்டம் வழங்கப்பட்டபோது — அங்கே வந்திருந்த இளைஞர் சிலர் — "மிகப்பெரிய மேதையான தாங்கள் நாங்கள் கேட்கும் ஒரு சாதாரண கேள்விக்குப் பதில் சொல்கிறீர்களா பார்ப்போம் என்று சொல்லிவிட்டு —* **"Because"** *என்ற சொல் அடுத்தடுத்து மூன்று முறை வரும்படி ஒரு வாக்கியம் சொல்லுங்கள் பார்க்கலாம் என்றனர். அதற்கு உடனேயே அண்ணா சென்ன பதில் இது:*

**"No Sentence ends with because, because, because is a conjunction".**

## மடிப்பாக்கம் ஏரி சீரமைப்பு

மடிபபாககம ஏரி தாமபரம – வேளச்சேரி சாலையின வடக்குப புறத்தில் உளளது. மடிப்பாக்கம் சிறுபாசன ஏரி ஆழம் குறைவாக இருந்தபடியால மழைக்காலங்களில் ஏரியில் தணணீா வரத்து அதிகமாகி அருகில் உள்ள சாலையைக் கடநது ஆரமபப பள்ளி வளாகத்தில் புகுந்து செல்வதால், பள்ளி சீாகெடுவதோடு சுற்றுபபுறச் சுகாதாரமும் பாதிக்கப்பட்டு மக்கள அவதியுறுகிறாாகள். அந்நிலையை நிரந்தரமாகப்



தூர் வாரப்பட்ட அவலூர் – தாமல் வரத்துக்கால்வாய்

போக்கும வகையில மடிபபாக்கம சிறுபாசன ஏரியை ஆழபபடுத்தி, கரைகளை உயாத்தி மேம்பாடு செய்ய ரூ.9.60 இலட்சம 1997 – 98 ஆம ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தில வேளாணமைப பொறியியல் துறை மூலம் செய்ய அங்கீகாரம வழஙகபபட்டது.

இநதப பணி போாக்கால அடிபபடையில நடைபெற்று வருகிறது.

## வல்லம் ஈகா ஏரி

இந்த ஏரியால 777 ஏக்கா நிலப்பரப்பு பாசன வசதி பெறுகிறது. இந்த ஏரியின முன பகுதி மறறும பாசனக் காலவாயகள தூாநதுபோய இருபபதால தணணீா வரததுக குறைநது காணப பட்டதால விவசாயததிறகுத் தேவையான நீாவரத்துக குறைநதுள்ளது. அதனைப போக்கிடும வகையில ஏரியை ஆழபபடுததவும், வரததுக்காலவாயைச் சுத்தம செயயவும 1997–98 ஆம ஆணடு வேலை வாயபபு உறுதியளிப்புத் திட்டத்தின கீழ ரூ.10 இலட்சம நிதி ஒதுக்கீடு செய்யபபட்டு, பொதுப்பணித் துறையின மூலம்பணி நிறைவேறறபபட்டு வருகிறது.

## நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம்

மழைக்காலங்களில் மாவட்ட ஆட்சியா அலுவலகத்தின அருகே உள்ள வேகவதி ஆற்றில் அதிகம் வெள்ளப்பெருக்கு ஏறபடும்; இதனால் போக்குவரத்துப் பாதிபபும் உணடாகும். அதற்கு நிரந்தரமாகத் தீர்வு காணும் வகையில், 1997–98ல, நாடாளுமன்ற உறுப்பினாகள் தொகுதி மேமபாட்டுத திட்டத்தின்கீழ், மாவட்ட ஆட்சியா அலுவலகம் எதிரே உள்ள நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இந்த வேகவதி நதியின் குறுக்கே ரூ.10 இலட்சம மதிப்பீட்டில் பாலம கட்டும் பணி நெடுஞ்சாலைத்துறையிடம ஒப்படைக்கப்பட்டு இப்பணி முடியும் தருவாயில் உள்ளது.

இவ்வாறு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அத்தனைக் கால்வாய்களும் அகலமாகி ஆழமாகி மாவட்டத்தை வளமாக்க உள்ளன.

### சுயவேலைவாய்ப்புத் திட்டம்

1998–99 ஆம் ஆண்டு சுயவேலை வாயப்புத் திட்டத்தின் கீழ், காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில 38 சுயவேலை வாய்ப்புப் பயிற்சி மையத்தின் மூலம் 486 இளைஞர்களுக்கு 6 மாத காலத்திற்குக் கீழ்க்கண்ட சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள் துவக்கப்பட்டுள்ளன:

தையல் பயிற்சி, ஓட்டுநா மற்றும் டீசல் மெக்கானிக் பயிற்சி, கணிப்பொறி பயிற்சி, பிட்டா/வெல்டா பயிற்சி, மோட்டாா ரீவைண்டிங் பயிற்சி, பிளாஸ்டிக் பாயமுடைதல் பயிற்சி, தொலைக்காட்சி, வி.சி.ஆா். பழுது பாாப்பு பயிற்சி, எலக்ட்ரிஷீயன் பயிற்சி.



தூர் வாரப்படவிருக்கும் காஞ்சிபுரம் மாவட்டம் – தாமல் ஏரி

## சுடுகாட்டிற்குத் தடுப்புச் சுவர்

பமமல் பேரூராட்சிக்குட்பட்ட இடுகாட்டில் மழைக்காலங்களில் வெள்ளம் புகுந்து பாதிக்கபபட்டதைத் தொடாந்து 1997–98 மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டத்தின கீழ், மேற்படி இடுகாட்டிற்கு ரூ.5 இலட்சம் செலவில் வெள்ளத்தடுப்புச் சுவா கட்டப்பட்டு வருகிறது.



# அறிவொளி இயக்கம்

ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் 15–35 வயதுக்குள்ளான கல்வி அறிவு பெறதாவர்களின் எண்ணிக்கை 6.7 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டிருந்தது.

இவர்களுக்கு மைய அரசு மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் எழுத்தறிவு புகட்டும் நிமித்தம், அறிவொளி இயக்கம் 1994ல் தொடங்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இந்தத் தொண்டு நிறுவனத்தின் தலைவராக மாவட்ட ஆட்சியர் செயல்படுகிறார். ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் (குற்போதைய காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர்) உள்ள கல்வி அறிவு இல்லாத 15–35 வயதுள்ள 6.7 இலட்சம் நபர்களுக்கு எழுத்தறிவு அளிக்கும் பணி இரண்டாண்டுகளின் முன் துவங்கப்பட்டது.



அறிஞர் அண்ணா – கண்ணியமிக்க காயிதே மில்லத்துக்குப் பொன்னாடை போர்த்தி மகிழ்தல்

மாவட்டம் 1.1.1997ல் பிரிக்கப்பட்டபின், காஞ்சிபுரம் மாவட்டத்தில் கல்வி அறிவு இல்லாத 15–35 வயதுள்ள நபர்களின் எண்ணிக்கை 4,06,192 எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

மக்களுக்கு எழுத்தறிவு பற்றித் தெரிவித்து ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஊராட்சி ஒன்றியம் மற்றும் வட்ட அளவில் பேரணிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இக் காலகட்டத்தில் கல்வி அறிவு அளிக்கும் பணியில் 160 முழுநேர ஒருங்கிணைப்பாளர்கள், 35,000 தன்னார்வத் தொண்டர்கள், முதிர்ந்த பயிற்சியாளர்கள், கல்வி கற்பிக்கும் திறன் மிக்கவர்கள் இனம் காணப்பட்டு, கல்வி இல்லாதவர்களுக்கு கல்வி கற்பிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

வெவ்வேறு கல்விப்பயிற்சிக் காலகட்டங்களில், முந்திய காஞ்சிபுரம் மாவட்டத்தில், கல்வி கற்பிப்பதற்கென 3,65,573 கல்வி அறிவு பெறாத நபர்கள் சேர்க்கப்பட்டனர். இவர்களில் முதல்நிலைப் பயிற்சியை (அறிவொளி தீபம்–1) 2,85,145 நபர்கள் முடித்துள்ளனர். இவர்களில் 2,76,134 நபர்கள் இரண்டாம் கட்டப் பயிற்சியை (அறிவொளி தீபம்–2) 31.10.1997ல் முடித்துள்ளனர். மாவட்டத்தில் மூன்றாவது கட்டமாக அறிவொளி தீபம் –3ஐக் தொடங்குவதற்கான பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. அக்டோபர் 1998ல், இந்தப் பயிற்சியானது செயல்பாட்டிற்குக் கொணரப்படவுள்ளது.

# குடும்ப அட்டை வழங்கும் பணி

**கா**ஞ்சிபுரம் மாவட்டத்தில் புதிய குடும்ப அட்டைகள் வழங்கும் பணிகள் 6.5.97 முதல் பழைய குடும்ப அட்டைகள் வைத்திருப்பவர்களுக்கு புதிய படிவம் 4,15,800 நகராட்சி/ஊராட்சி பகுதிகளுக்கு, நியாயவிலைக் கடைகளின் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டது.

காஞ்சிபுரம்/மதுராந்தகம்/செங்கல்பட்டு போன்ற நகராட்சி பகுதிகளுக்கு, முதற்கட்டமாகப் புதிய குடும்ப அட்டைக்கானப் படிவம் வழங்கப்பட்டது. இம்மாவட்டத்தில் மொத்தம் 1,265 நியாயவிலைக் கடைகள் உள்ளன. வழங்கப்பட்ட புதிய படிவங்களைத் திரும்பப் பெற்று அரசு அலுவலர்களைக் கொண்டு வீடுதோறும் சென்று விசாரணை செய்யப்பட்டது.



அதில் தகுதியான விண்ணப்பங்கள் மொத்தம் 3,94,971 படிவங்களும், தள்ளுபடி செய்யப்பட்ட 20,829 படிவங்களும் ஆகும். இந்த தகுதியான விண்ணப்பங்களை 'எல்காட்' நிறுவனத்தின் மூலம் இரண்டு வண்ணக் குடும்ப அட்டைகளும் அச்சடிக்கப்பட்டது.

இளசிவப்பு அட்டை (ஆண்டு வருமானம் ரூ.2,50–க்குப்பட்டவை) வறுமைக்கோட்டிற்குள் உள்ளவர்களுக்கும்.

மஞ்சள் நிறம் குடும்ப அட்டை (ஆண்டு வருமானம் ரூ.2,500–க்கு மேற்பட்டவர்கள்) நடுத்தர குடும்பத்தினர்களுக்கும் இம்மாவட்டத்தில் நகராட்சிப் பகுதிகளில் 1.6.98 முதல் வழங்கப்பட்டன. அடுத்த கட்டமாக 5.6.98 முதல் ஊராட்சி/பேரூராட்சி பகுதிகளுக்குக் குடும்ப அட்டைகள் நியாயவிலைக் கடைகளின் மூலம் வழங்கப்பட்டன. இக்குடும்ப அட்டைகளுக்குக் குடும்ப அட்டைதாரர்களிடம் இருந்து ரூ.5 (ஐந்து மட்டும்) கட்டணமாகப் பெற்றுக் கொள்ளப்பட்டது. அதிகக் கட்டணம் வசூலிக்கக் கூடாது என்பதற்கான விளம்பரம் சுவரொட்டிகள் மூலம் அனைத்து நியாயவிலைக் கடைகளின் முன் விளம்பரம் செய்யப்பட்டது.

குடும்ப அட்டை இல்லாதவர்களிடம் இருந்து புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பம் 20.5.98ஆம் தேதி வரையில் 86,893 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அதனை, அரசு அலுவலர்களைக் கொண்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறது. இதற்கான குடும்ப அட்டை அச்சடிக்கும் பணி விரைவில் தொடங்க உள்ளன.

மாவட்டத்தில் மொத்தம் 8 வட்டங்கள் உள்ளன. அதில் தாம்பரம் மட்டும் மாநகராட்சிக்குட்பட்டவையாகும். மீதம் உள்ள வட்டங்களில் கீழ்கண்டவாறு புதிய அல்லது பகுதி நேரம் நியாயவிலைக் கடைகள் புதியதாகத் திறக்கப்பட்டுள்ளன:–

| வட்டத்தின் பெயர் | முழுநேரக் கடை | பகுதிநேரக் கடை | மொத்தம் |
|---|---|---|---|
| 1. காஞ்சிபுரம் | 8 | 8 | 16 |
| 2. ஸ்ரீபெரும்பதூர் | 6 | 4 | 10 |
| 3. உத்திரமேரூர் | 2 | 3 | 5 |
| 4. செங்கல்பட்டு | 7 | 7 | 14 |
| 5. திருக்கழுகுன்றம் | 6 | 1 | 7 |
| 6. மதுராந்தகம் | 1 | 5 | [illegible] |
| 7. செய்யூர் | .. | 2 | 2 |
| மொத்தம் | 30 | 30 | 60 |

மாவட்டத்தில், காஞ்சிபுரம் நகராட்சியில்/மாவட்ட தலைநகரில் குடும்ப அட்டைதாரர்களின் வசதிக்கேற்ப 5,000 குடும்ப அட்டைகளுக்கு ஒரே இடத்தில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யும் பொருட்டு புதிய இரண்டு பங்கு திறப்பதற்கு இடங்களை தேர்வு செய்யப்பட்டு, அரசின் தற்போது பரிசீலனையில் உள்ளது.

செய்யூர் வட்டத்தில் நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருள் உடனுக்குடன் ஒதுக்கீடு செய்யவும், விரைவில் கொண்டு செல்வதற்கும் சேமிப்புக் கிடங்கு (குடோன்) கட்டுவதற்குத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணியக் கழகத்தின் மூலமாக, முன்மொழிவுகள் இவ்வலுவலகத்தில் இருந்து அரசுக்கு அனுப்பப்பட்டு, பரிசீலனையில் உள்ளன.



# சமூக நலத்துறையின் சீர்மிகு பணிகள்

*சமூக நலத்துறையின் நலத்திட்ட உதவிப் பணிகள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் சீராக் நிறைவேற்றப்பட்டு வருகின்றன; கடந்த இரண்டாண்டுக் காலத்தில் இம்மாவட்டத்தில் அத்துறை மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள நிகரற்ற பணிகள், இங்கே பட்டியலிட்டுக் காட்டப்படுகின்றன:*

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ்,** எட்டாம் வகுப்பும் அதற்கு மேலும் படித்த 18 வயது நிறைவடைந்த ஏழை மகளிர்க்கு, அவர்தம் திருமணச் செலவிற்காக ரூ.10,000 உதவித் தொகையாக வழங்கப் படுகிறது. 1996-97ஆம் நிதியாண்டில் 680 பேருக்கு ரூ.68 இலட்சம், திருமண உதவித்தொகையாகவும், 1997-98ஆம் ஆண்டில் 3,249 பேருக்கு ரூ.3.25 கோடி, திருமண உதவித்தொகையாகவும் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட முழுத்தொகையையும் செலவு செய்து கடந்த 2 ஆண்டுகளில் 100 சதவீத சாதனை எய்தப்பட்டுள்ளது.

**விதவை மகள் திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ்,** கணவரை இழந்த ஏழை விதவையரின் துயர் நீக்கும் வண்ணம், அவர்தம் மகளின் திருமணச் செலவிற்காக 1998-99ஆம் ஆண்டு முதல் ரூ.5,000 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. திருமண உதவி கோரும் மகளின் வயது 18 வயது முதல் 30 வயதிற்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
இத்திட்டத்தின் கீழ் 1996-97ஆம் ஆண்டில் 36 பயனாளிகளுக்கு ரூ.2,000 வீதம் ரூ.72,000மும், 1997-98ல் 53 பயனாளிகளுக்கு ரூ.3,000 வீதம் ரூ.1,59 இலட்சமும் உதவித் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது.

**டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமண நிதிஉதவித் திட்டத்தின் கீழ்,** 20 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட ஏழை விதவையர் மறுமணத்தை ஊக்குவிக்கும் வண்ணம், இத்திட்டத்தின் கீழ் மறுமணம் செய்துகொள்ளும் தம்பதியர்க்கு ரூ.7,000 உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

1996-97ஆம் ஆண்டில், ரூ.5,000 வீதம் 10 பேருக்கும் 1997-98 முதல் ரூ.7,000 ஆக உயர்த்தப்பட்டு 3 பேருக்கு ரூ.21,000மும் அளிக்கப்பட்டுள்ளது.

**அன்னை அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதிஉதவித் திட்டத்தின் கீழ்,** ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த ஒருவரும் பிற இனத்தைச் சேர்ந்த மற்றொருவரும் செய்துகொள்ளும் கலப்புத் திருமணத்திற்குக் கடந்த ஆண்டிலிருந்து ரூ.20,000 உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் அல்லாத முற்பட்ட இனத்தவரும் பிற்பட்ட இனத்தவரும் செய்துகொள்ளும் கலப்புத் திருமணத்திற்கு ரூ.10,000 நிதிஉதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டில் 19 பேருக்கு ரூ.1.25 இலட்சமும், 1997-98ஆம் ஆண்டில் 30 பேருக்கு ரூ.2.10 இலட்சமும் உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**ஆதரவற்ற மகளிர் திருமண நிதிஉதவித் திட்டத்தின் கீழ்,** ஆதரவற்ற மகளிர் திருமணத்திற்காக ரூ.5,000 வீதம் 1.4.98 முதல் உயர்த்தப்பட்டு நிதிஉதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 18 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட (தாய்-





அன்னை அஞ்சுகம் கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், ரூ.20,000 உதவித்தொகை பெறும் பயனாளி

தந்தை இழந்த) ஆதரவற்ற பெண்கள் 5 பேர் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

**இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ்,** கணவரால் கைவிடப்பட்ட ஏழை மகளிர், ஏழை விதவைகள் மற்றும் உடல் ஊனமுற்றோருக்காக, இலவசத் தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் 1996-97ஆம் ஆண்டில் 135 பேரும் 1997-98ஆம் ஆண்டில் 120 பேரும் பயனடைந்திருக்கின்றனர்.

**ஏழை விதவையின் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு இலவசப் பாடப்புத்தகம் - குறிப்பேடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ்,** ஆரம்பப்பள்ளிகளில் பயில்வோருக்கு ரூ.50 விதமும், நடுநிலைப்பள்ளிகளில் பயில்வோருக்கு ரூ.75 விதமும், உயர்நிலைப்பள்ளிகளில் பயில்வோருக்கு ரூ.90 விதமும், மேல்நிலைப்பள்ளிகளில் பயில்வோருக்கு ரூ.100 விதமும், உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1996-97ஆம் ஆண்டில் ரூ.11,835-ம், 97-98ஆம் ஆண்டில் ரூ.54,000 -க்கும் குறிப்பேடுகள் வாங்கி இந்த மாவட்டத்தில் இத்தகு மாணவ, மாணவியர்க்கு வழங்கப்பட்டுள்ளது.

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதிஉதவி திட்டத்தின் கீழ்,** கருவுற்ற ஏழைத்தாய்மார்களுக்கு மகப்பேறு காலத்தில் உதவிடும்பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கருவுற்ற தாய்மார்களுக்கு மகப்பேறுக்கு முன்பும் பின்பும் ஆகமொத்தம் நான்கு மாதங்களுக்கு ரூ.500 வழங்கப்படுகிறது. 96-97ஆம் ஆண்டில், 9,006 பயனாளிகளுக்கு ரூ.45.03 இலட்சமும், 97-98ஆம் ஆண்டில், 9,100 பயனாளிகளுக்கு 45.50 இலட்சமும் உதவித்தொகையாகத் தரப்பட்டிருக்கிறது.

**தமிழக அரசின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ்,** இரண்டு பெண் குழந்தைகள் பிறந்து, அதன் பின்னர் கருத்தடை செய்துகொள்ளும் தாய்மார்களின் இரு குழந்தைகளுக்கும் 1997-98ஆம் ஆண்டு முதல் தலா ரூ.1,500 தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சிக் கழகத்தில் வைப்புத் தொகையாகச் செலுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 1992-93ஆம் ஆண்டு முதல் இம்மாவட்டத்தில் 2,143 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

### அரசு-குழந்தைகள் பராமரிப்பு இல்லம்

தாய் தந்தை இருவரையும் இழந்த அல்லது இருவரில் ஒருவரை இழந்த ஆதரவற்ற ஏழைக் குழந்தைகளின் நலன் காக்க, ஆதரவற்றோர் அரசு குழந்தைகள் இல்லம் மற்றும் பள்ளி காஞ்சிபுரத்தில் இயங்கிவருகிறது. 250 குழந்தைகள் சேர்ந்து படிக்க வசதியுள்ள இவ்வில்லத்தில் தற்போது ஆதரவற்ற குழந்தைகள் 178 பேர் பராமரிக்கப்படுகின்றனர். ஆதரவற்ற இக்குழந்தைகளுக்கு இலவசமாகக் கல்வியும், உணவும் உடையும், உறைவிடமும் அளிக்கப்படுகிறது.

### மகளிர் தையற் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்

அ) தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் முசரவாக்கம், காஞ்சிபுரம், பெருங்களத்தூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. தமிழக அரசின் முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயனடையும் அனைத்து மாணவ-மாணவியர்க்கும் வழங்கப்படும் இலவசச்சீருடைகள் இந்தச் சங்கங்களின் மூலம் தைக்கப்பட்டு வழங்கப்படுகிறது. 96-97ஆம் ஆண்டில், மாணவர் 2,30,635 பேரும், மாணவியர் 2,17,248 பேரும் பயனடைந்துள்ளனர். 1997-98ஆம் ஆண்டில் மாணவர் 1,20,506 பேரும், மாணவியர் 1,14,454 பேரும் பயனடைந்துள்ளனர். சீருடை தைக்கும் பணியின் மூலம் மட்டும் 1,350 மகளிர் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

### எழுதுபொருள் தயாரிப்புச் சங்கங்கள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 3 எழுதுபொருள் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிவருகின்றன. இச்சங்கத்தின் உறுப்பினர்கள் வரையறுக்கப்பட்ட பதிவேடுகள், குறிப்பேடுகள் மற்றும் சத்துணவு மையங்களுக்குத் தேவையான பதிவேடுகளைத் தயாரித்து வழங்கி வருகின்றனர். ஒவ்வொரு சங்கத்திலும் 25க்கும் மேற்பட்ட மகளிர் இதன்மூலம் பயனடைகின்றனர்.

### இணை உணவு தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில், வாலாசபாத் மற்றும் பொத்தேரி ஆகிய இடங்களில் சத்துமாவு தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு இயங்கி வருகின்றன. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள எல்லா அங்கன்வாடி மையங்களிலும் உள்ள 6 மாதம் முதல் 36 மாதம் வரையுள்ள குழந்தைகளுக்கு, இச்சங்கங்களில் தயாரித்த சத்து மாவைக் கொண்டு ஊட்டச்சத்து உருண்டை வழங்கப்படுகிறது. இதே ஊட்டச்சத்துருண்டை கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் வழங்கப்படுகிறது. இந்தச் சங்கங்களின் மூலம் 70க்கும் மேற்பட்ட மகளிர் வேலை வாய்ப்பினைப் பெறுகின்றனர். □

---

## இலகு

*விரோதியை வெல்வது*
*என்பது சிறப்பான*
*வாழ்க்கை வாழ்வதில்*
*தான் உள்ளது!*

*விரோதிகள்*
*போற்றாமல்*
*இருக்கும் வரை*
*உனது செயல்கள்*
*நியாயமானதே!*

*அர்ச்சனையை விட*
*விமர்சனங்களே*
*உன்னை*
*மகத்தான*
*மனிதனாக்கும்-*
*சாதனையாளனாக்கும்!*

*பெருமைகொள்*
*கோபுரக் கலசமாக*
*இருப்பதில் அல்ல-*
*தூணாய் இருந்து*
*தாங்கி நிற்பதில்-*

*நம்பிக்கையோடு*
*நட நண்பனே!*

*உன் சுவடுகள்*
*தடமாய் ஜனிக்கும்!*

— க.காளிமுத்து

# நம்பிக்கையோடு பணிகளைத் தொடருங்கள்

சிறந்த வீரர்களுக்கு அண்ணா பதக்கம் வழங்கி, திருச்சிராப்பள்ளியில் 30-9-1998 அன்று மாண்புமிகு முதல்வர் **கலைஞர்** உரை.

1969-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு அவர் விட்டுச் சென்ற இடத்தில் பொறுப்பேற்று ஆட்சித் தலைமை ஏற்ற நான், ஒவ்வொரு ஆண்டும் அண்ணா பிறந்த நாளில் அல்லது அந்த நாளையொட்டி செப்டம்பர் திங்களில் காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்புத்துறை, ஊர்க்காவல் படைத்துறை இதில் பணியாற்றும் நண்பர்களுக்கு அவர்களுடைய ஆற்றல், கடமையுணர்வு, அவர்களுடைய வீரச்செயல், நீண்டநாள் நல்ல பணிபுரிந்த தன்மை இவைகளையெல்லாம் எடை போட்டுப் பார்த்து, அண்ணா பெயரால் பதக்கம் வழங்குகின்ற விழா தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

இடையில் சில ஆண்டுகளில் நடைபெறாவிட்டாலும் கூட, இந்த ஆட்சி பொறுப்பேற்று நடைபெறுகின்ற நேரத்திலெல்லாம் அண்ணா பதக்கம் வழங்குகின்ற விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு காவல்துறையில் வீரச்செயல் புரிந்த பத்துப்பேருக்கும், நற்பணி புரிந்த 64 பேருக்கும், தீயணைப்புத்துறையில் நற்பணி புரிந்த 9 பேருக்கும், சிறைத்துறையில் வீரச்செயல்புரிந்த 9 பேருக்கும், ஊர்க்காவல் படையில் நற்பணி புரிந்த 5 பேருக்கும் மொத்தம் 97 பேர்களுக்கு முதலமைச்சர் காவல் பதக்க விருதுகள் வழங்கப்படுகின்றன.

இது 'முதலமைச்சருடைய காவல் பதக்க விருது' என்று அழைக்கப்பட்டாலும்கூட நான் முதலமைச்சர் என்று கருதுவது பேரறிஞர் அண்ணா அவர்களைத்தான் என்பதால் இதற்கு "அண்ணா பதக்கம்" வழங்கப் படுகின்ற விழா என்பதே சாலப்பொருத்தம் என்பது என்னுடைய கருத்தாகும். ஆகவே அந்தப் பதக்கங்களை அண்ணா பிறந்த இந்தத் திங்களில் வழங்குவதில் நான் பெருமை அடைகிறேன். பெருமிதம் கொள்கிறேன். பேருவகை அடைகிறேன்.

### அந்தக் காலத்திலேயே...

என்னைப் பொறுத்த வரையில் நான் இன்று நேற்றல்ல; ஆளுகிற பொறுப்பில் இருக்கின்ற காரணத்தால் அல்ல; என்னுடைய தலைமையில் காவல்துறை இருக்கிறதென்பதால் அல்ல; நான் பொதுவாழ்க்கையில் ஈடுபட்ட அன்று தொட்டு இன்று வரையில் காவல்துறையைக் கடமை ஆற்றுகின்ற துறையாக, சமுதாயத்திற்குத் தேவைப்படுகின்ற ஒரு துறையாக அந்தத் துறை இருந்தால்தான், எப்படி தோட்டத்திற்கு வேலி இருக்கிறதோ அதைப்போல சமுதாயத்தைக் காப்பாற்ற முடியும், சமுதாயத்திற்கு அரணாக இருக்கும் என்ற நம்பிக்கை உடையவன் நான். எனவே அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை எல்லாம் ஆராய்ந்து நான் எதிர்க்கட்சியாக இருந்த அந்தக் காலத்திலேயே காவல்துறை நண்பர்களுக்காக வாதாடி இருக்கிறேன். போராடியிருக்கின்றேன்.

அப்படி வாதாடியதற்காக நான் பல கஷ்ட நஷ்டங்களையும் ஏற்றிருக்கிறேன். அவர்களுக்காக நான் எழுதிய எழுத்துக்களெல்லாம் அந்தக் காலத்தில் இருந்த அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டிருக்கின்றன. காவலர்களுக்காக நான் எழுதிய நாடகங்களெல்லாம் ஆட்சியாளர்களால் அப்போது தடை செய்யப்பட்டிருக்கின்றன. அந்த அளவிற்கு சிரமங்களை ஏற்றுக்கொண்டு, கஷ்டங்களை ஏற்றுக்கொண்டு காவல்துறைக்காக நான் பாடுபட்டிருக்கின்றேன்.

எனவேதான், எனக்கு முன்னால் இங்கே உரையாற்றிய காவல்துறைத் தலைவர் சர்மா அவர்களும், உள்துறைச் செயலாளர் பூர்ணலிங்கம் அவர்களும் குறிப்பிட்டதைப் போல இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மத்திய அரசில் வழங்கப்படுவதற்கு ஈடாகக் காவல்துறையினர்க்கு - இன்னும் சொல்லப்போனால், அவர்களைவிட கொஞ்சம் அதிகமாக ஊதியம் வழங்குகின்ற ஒரேயொரு மாநிலம் தமிழ் மாநிலம்தான்; இந்த ஆட்சி நடைபெறுகின்ற மாநிலம்தான் என்பதை நான் கம்பீரமாக, பெருமையாகச் சொல்ல முடியும்.

நீங்கள் சற்று சிந்தித்துப் பார்த்தால், ஐந்தாண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற அந்த ஆட்சியில், அந்த அரசில் காவல் பணியாளர் ஒருவர் கூட நியமனம் செய்யப்படவில்லை. இந்தத் துறையிலே ஒருவரைக்கூட நியமிக்கப்படவில்லை. ஆனால் இரண்டாண்டுக் கால இந்த ஆட்சியில் 23,071 காவல்துறைப் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி இதுவரை நியமனம் செய்யப்பட்ட காவல் பணியாளர்களின் எண்ணிக்கை 13,400. ஏற்கெனவே அறிவித்தார்கள். ஆனால் நியமிக்கப்படவில்லை. ஆனால் இந்த ஆட்சி சொன்னதைச் செய்கின்ற ஆட்சி; செய்வதை மாத்திரமே சொல்கின்ற ஆட்சி; எனவேதான் அறிவிக்கப்பட்ட 13,400 பேர் அப்படியே திரிசங்கு சொர்க்கத்திலே இருந்தார்கள். அவர்களை எல்லாம் அந்த அரசு அறிவித்ததாயிற்றே என்று நினைக்காமல் எந்த அரசு அறிவித்தாலும், பணியில் அமர்த்தினால் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் கடமை ஆற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு 13,400 பேரை இந்த ஆட்சியிலே நியமித்தோம்.

### 23 ஆயிரம் காவல் பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவர்

அஃதன்னியில் வெகு விரைவில் நியமனம் செய்யப்பட இருப்பவர்கள் ஏறத்தாழ 10 ஆயிரம் பேர். எனவே 23 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் நியமனம் செய்யப்





படுவார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல; காவல் துறையிலே உள்ளவர்களுக்குப் பதவி உயர்வு அதிகமாக இல்லை என்ற குறையை நீக்க 25-5-98 அன்று சட்டப்பேரவையில் காவல்துறை மானியத்தில் விவாதங்களுக்குப் பதிலளித்தபோது நான் அறிவித்தேன். காவல்துறை நண்பர்க்ள் அதை மறந்திருக்க மாட்டார்கள். கூடுதல் கண்காணிப்பாளர்கள் Additional Superintendent of Police என்று எடுத்துக்கொண்டால், 55 பதவி உயர்வுகள் தரப்பட்டுள்ளன. Deputy Superintendent of Police என்று எடுத்துக்கொண்டால் 130 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Inspector of Police (Taluk) என்று எடுத்துக் கொண்டால் 255 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Inspector of Police on reserved என்று எடுத்துக் கொண்டால் 53 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Sub-Inspector of Police (Taluk) என்று 173 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Sub-Inspector of Police என்று எடுத்துக் கொண்டால் 208 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Head Constable என்று எடுத்துக் கொண்டால் 1000 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Grade 1 Police Constable என்று எடுத்துக்கொண்டால் 10,106 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. Women head Constable என்று எடுத்துக்கொண்டால் 400 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன. மொத்தம் 20,500 பதவி உயர்வுகள் தரப்பட்டிருக்கின்றன.

காவல்துறையினர் Actual Strength மொத்தம் இருப்பவர்கள் 90,325. இவர்களில் இந்தப் பதவி உயர்வு மூலமாகப் பயன்பெற்றவர்கள் 25.52 சதவிகிதம் மேலும் பதவி உயர்வு அளிப்பது என்ற அடிப்படையில் 15 ஆண்டுகள் பணிபுரிந்த காவலர்களுக்குத் தலைமைக் காவலர் பதவி உயர்வு அளிக்கப்படும் என்று சென்ற ஆண்டு இந்த அரசு அறிவித்ததைத் தொடர்ந்து 9,000 காவலர்கள் தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து இப்பொழுது தலைமைக் காவலர்கள் தங்களையும் உதவி ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு செய்யவேண்டும் என்று கோரி வருகிறார்கள்.

இதனையும் இந்த அரசு பரிவோடு கவனித்துப் பத்து ஆண்டுகள் தலைமைக் காவலர்களாகப் பணிமுடித்தவர்களுக்குச் சிறப்பு உதவி ஆய்வாளர்கள் (Special S.I.) என்று பதவி உயர்வு அளித்து மற்ற உதவி ஆய்வாளர்களுக்கு இணையான சம்பளத்தை இவர்களுக்கும் வழங்கலாம் என்று இந்த அரசு தீர்மானித்துள்ளது. இதன் மூலம் இரண்டாம் நிலைக் காவலர்களாகப் பணியில் பேரும் ஒருவர் 25 ஆண்டுகளில் உதவி ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

காவல்துறையில் ஒரு சிலர் தவறு செய்யக்கூடும். காவல்துறையிலே பணியாற்றுகிறவர்கள் எல்லோரும்

மனிதர்கள் தான். மனிதர்கள் காவல்துறையில் மாத்திரம் அல்ல; மனிதர்கள் டாக்டர்களாகவும், வழக்கறிஞர்களாகவும் பணியாற்றுகிறார்கள்; மனிதர்கள் அரசியல்வாதியாகவும் பணியாற்றுகிறார்கள்; இப்படி பல்வேறு துறைகளில் மனிதர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எல்லாத் துறைகளிலும் சிலர் தவறு செய்யக்கூடும். ஆனால் காவல்துறையில் மாத்திரம் ஒரு சிலர் தவறு செய்தால் அது எல்லோரையும் குறை கூறுகிற அளவிற்கு நாட்டிலே பேசப்படுகிறது.

சிலர் செய்கின்ற தவறுக்குப் பலர் பொறுப்பாளி ஆக வேண்டியிருக்கிறது. அதனால் அந்தச் சிலரும் தவறு செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு நமக்கெல்லாம் இருக்கிறது. தவறு கண்ட இடத்திலே கண்டித்து, தேவைப்பட்டால் தண்டித்து தவறுகளை அறவே ஒழித்து காவல்துறையைப் புடம் போட்ட தங்கமாக ஆற்றுகின்ற பணியில் இன்றைய அரசு ஈடுபட்டு இருக்கிறது. அதற்கு நல்ல ஒத்துழைப்பை என்னுடைய அருமைக் காவல்துறை நண்பர்கள் எனக்கு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### சிறப்புப் புலனாய்வுக்குழு

இந்த ஆட்சியில் கோவையில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் நான் கடந்த காலத்தையோ மற்ற மாநிலங்களையோ ஒப்பிட்டுக்காட்டி நியாயப்படுத்த விரும்பவில்லை. வெள்ளை ஆடையிலே ஒரு கறுப்பு மைத்துளி பட்டது போன்ற ஒரு களங்கம் காவல்துறைக்கும் இந்த அரசுக்கும் - ஏன் தமிழ்நாட்டிற்கும் மதவாதத்தால் - மதவாத மற்ற மண் இந்த மண் என்று பெருந்தலைவர்களால் போற்றப்பட்ட இந்த மண்ணுக்கும் ஏற்பட்டது அந்தக் களங்கம்.

அந்தக் களங்கத்திற்கும்கூட ஏற்ற நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து, தனியாக ஒரு சிறப்புப் புலனாய்வுக்குழு அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு, அந்த விசாரணை வெற்றிகரமாக நடைபெற்று 188 பேர் குற்றவாளிகள் என்று கண்டறியப்பட்டு அதிலே 165 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 8 பேர் குண்டு வெடிப்புகளில் இறந்து போயிருக்கிறார்கள். இந்த வெடிபொருட்கள் கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களில் இருந்துவந்தன என்ற விவரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது தொடர்பாகக் கேரளாவில் இருந்து 11 குற்றவாளிகளும், கர்நாடகாவிலிருந்து 2 குற்றவாளிகளும், ஆந்திராவிலிருந்து 3 குற்றவாளிகளும், கல்கத்தாவிலிருந்து 1 குற்றவாளியும் ஆக 17 குற்றவாளிகள் பிற மாநிலங்களிலிருந்து கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சி..பி.ஐ. வந்தால் தான் பிற மாநிலங்களில் கைது செய்யப்படமுடியும் என்ற வாதத்திற்குப் பதிலளிக்கத் தக்க வகையிலே விடை காணுகின்ற வகையில் நம்முடைய போலீசார்களே மற்ற மாநிலப் போலீசாரோடு தொடர்பு கொண்டு, நாம் அமைத்த சிறப்புக் காவல்துறை அவர்களோடு தொடர்புகொண்டு 17 பேரைக் கைது செய்திருக்கிறார்கள்.

### கோவையிலும், சென்னையிலும் என 2 தனி நீதிமன்றங்கள்

இந்தக் குற்றங்கள் விசாரிக்கப்பட கோவையிலே ஒரு தனி நீதிமன்றம், சென்னையிலே ஒரு தனி நீதிமன்றம் என்று 2 நீதிமன்றங்கள் இன்றைக்கு அமைக்கப் பட்டிருக்கின்றன.

கடந்த 25-ஆம் தேதி அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்போது நடவடிக்கையில் மாத்திரமல்ல; இந்த இரண்டு ஆண்டுக்காலத்திலே பல ரவுடிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். போலீசாரையே கொல்ல முயன்ற, தப்பிக்க முயன்ற ரவுடிகள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இன்னமும் அறவே ரவுடிகள் அழிந்துவிட்டதாகக் கூறமாட்டேன். தொடர்ந்து போலீசார், காவல்துறையினர் தங்கள் கடமையை ஆற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய குறைகளை நிவர்த்திக்கக் கூடிய ஒரு அரசு, உங்களை எங்களுடைய குடும்பங்களின் உறுப்பினராகக் கருதக்கூடிய ஒரு அரசு இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்ற நல்ல எண்ணத்தோடு நம்பிக்கையோடு உங்கள் பணிகளை ஆற்றுங்கள். நான் உங்கள் பின்னால் இருக்கிறேன்".

- இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.


**தமிழரசு**

படிக்க... பயன்பெற... பாதுகாக்க...

**சந்தா விவரம்**

"**தமிழரசு**" - தமிழ்
(மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ரூ.72

"**தமிழரசு**" - ஆங்கிலம்
(மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர்
அல்லது
பாங்க் டிராப்ட் மூலம்

அனுப்ப வேண்டிய முகவரி:
**துணை இயக்குநர் (வெ)**
"தமிழரசு" அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை, சென்னை-600 002.


*'தமிழரசு' இதழில் இடம்பெறும் நூல்நயம் பகுதிக்குப் புத்தகங்கள் அனுப்புவோர், ஒவ்வொரு தலைப்பின் கீழும் வெளிவரும் நூல்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு படிகள் அனுப்பிவைக்க வேண்டும்.*

**- ஆசிரியர்**





# வரலாற்றில் காஞ்சி

சென்னையிலிருந்து மேற்கு - தென்மேற்காக 72 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது காஞ்சிபுரம். தென்னிந்தியாவின் பழம்பெரும் நகரங்களில் இதுவும் ஒன்று. அரக்கோணம், செங்கற்பட்டு இருப்புப் பாதை, வேகவதி ஆற்றின் கரையில் உள்ள இந்த நகரத்தை இந்தியாவில் மற்ற நகரங்களோடு இணைக்கிறது.

"காஞ்சிப்புராணம் என்பது சிவஞான முனிவரால் இயற்றப்பட்டது. 2,742 பாடல்கள் உள்ள இது. காஞ்சித் தலத்தின் பெருமையைச் சிறப்பித்துக் கூறும் புராணம். இவர் பாடியது முதல காண்டம் என்றும் இவர் மாணவர் பாடியது இரண்டாம் காண்டம் .என்றும், சொல்லப்படுகிறது. வடமொழியில் பலரால் ''காஞ்சி மான்மியம்'' செய்யப்பட்டுள்ளது.

"காஞ்சிபுரத்தில் - ஒற்றை மாவின் கீழ் கோயில் கொண்டு விளங்குவதனாலேயே 'ஏகம்பர்' கோயில் என்று இக்கோயில் குறிக்கப்படுகிறது. மாமரம் தலமரமாகப் போற்றப்படுகிறது.

ஏகாம்பரேசுவரர் கோயில், அடுத்துக் குமரக் கோட்டம், அடுத்துக் காமாட்சியம்மன் கோயில் என்ற மூன்றும் இங்கே திரல்பட அமைந்துள்ளமை காஞ்சிபுரத்தின் தனிச் சிறப்பாகும். இவ்வாறு கோயில்களை மையமாகக் கொண்டு வளர்ச்சியுற்ற இந் நகரம் ''கோயில் நகரம்'' என்றும் கூறப்படும்.

மகாபாரதம், மகாபாடியம், அகநானூறு, குறுந்தொகை, மணிமேகலை, மூவர் தேவாரம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், பெரிய புராணம், நந்திக் கலம்பகம், தேவாரம், பொரும்பாணாற்றுப்படை போன்ற பழம்பெரும் இலக்கியங்களில் காஞ்சிபுரம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

காஞ்சிபுரம் கி.பி. 7,9 ஆம் நூற்றாண்டுகளுக் கிடையில் மேலைப் பாதாமி சாளுக்கியர்கள், இராட்டிர கூடர்களின் படையெடுப்புகளுக்கு உட்பட்டது.

சோழர்கள் காலமான கி.பி. 9ஆம் நூற்றாண்டில், காஞ்சிபுரம் சோழர்களின் பெருநகரங்களில் ஒன்றாக விளங்கியது. முதலாம் இராசேந்திரன், தனது தக்காணப் படையெடுப்பை இந்நகரிலிருந்தே தொடங்கியிருக்கிறான்.

மௌரியப் பேரரசின் அமைச்சராக விளங்கிய சாணக்கியர் பிறந்தது காஞ்சிபுரத்திலேதான் என்பர் வரலாற்றாசிரியர்.

இந்நகர் கி.பி.1310ல் இஸ்லாமியர் ஆதிக்கத்திற்கும் பிறகு மராட்டியர் ஆதிக்கத்திற்கும் உட்பட்டது. அதற்குமுன் ஒய்சாளர், காடவர், தெலுங்குச் சோழன் கண்ட கோபாலன் ஆகியோர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. விஜயநகரப் பேரரசின் ஆட்சிக் காலத்தில், இந்நகரம் தன் பெருமையினை மீண்டும் அடைந்தது.

கி.பி.1752ல் காஞ்சிபுரம் ஆங்கிலேயர் ஆளுகைக்கு உட்பட்டது. கர்நாடகப் போர்களில் தோல்வியுற்ற பிரெஞ்சுப்படை, இந்நகரின் பல பகுதிகளைத் தீயிட்டுச் சூறையாடியது. இந்நகருக்கு ஒரு தனி நகராட்சி நிறுவனம் 1866ல் தான் ஆங்கிலேயரால் தோற்றுவிக்கப்பட்டது.

– காந்தி



காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து சென்ற வண்ணம் இருக்கின்றனர்.

- மாமல்லபுரம்
- வேடன்தாங்கல்
- முட்டுக்காடு
- கோவளம்
- முதலைப்பண்ணை
- அறிஞர் அண்ணா வன உயிரியல் பூங்கா

-இவற்றுடன், திருமலைவையாவூர் போன்ற எண்ணற்ற திருக்கோயில்களும் உள்ள மாவட்டம் காஞ்சிபுரம் மாவட்டம்.

"சார்! நான் இதுக்கு முந்தி உங்களை எங்கயோ பாத்திருக்கேன்" என்றார் சீப் என்ஜினீயர் திலக்.

"அப்படியா! எனக்கு உங்களைப் பார்த்த ஞாபகமில்லை" என்று பதிலளித்தார் ஜெனரல் மானேஜர் சந்தானம்.

"உங்களுக்கு சொந்த ஊர் திப்பிராஜபுரம் தானே?" என்று மீண்டும் தொடர்ந்தார் திலக். "இல்லையே! எங்கள் பூர்வீகம் தெற்கே மார்த்தாண்டம்ங்கற ஊராம். அதை நான் பார்த்தது கூட இல்லை. இரண்டு தலைமுறையாக எங்கள் குடும்பம் டெல்லியில் தான் இருக்கிறது. ஆரம்பத்தில் கரோல் பாகிலும் பின்பு டேராடூனிலும் நான் படித்தேன்" என்று பதில் சொன்னார் சந்தானம்.

"அப்படியா! எனக்கு ஏதோ ஒரு குழப்பம்!" என்று சொல்லிவிட்டு "நான் 'ஸைட்'டுக்குப் போகிறேன்" என்று புறப்பட்டார் திலக்.

"இருங்கள்! என்னைப் பார்த்ததாகச் சொல்லுகிறீர்களே! எந்த அடிப்படையில்?" என்று விசாரித்தார் சந்தானம்.

"ஒன்றுமில்லே! என்னுடைய சொந்த ஊர் திப்பிராஜபுரம்! அங்கே எங்களுக்கு ஏகப்பட்ட சொத்து - இப்போதும் இருக்கிறது. நான் கும்பகோணத்தில் ஒரு இங்கிலீஷ் மீடியம் ஸ்கூலில் படித்தேன். தினம் குதிரை வண்டியில் போய்விட்டு வருவேன். அந்தக் காலங்களில் நான் உங்களைப் பார்த்தது போன்ற ஒரு நினைப்பு! அதான் கேட்டேன். தப்பாயிருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றான் திலக்.

# காலமாற்றம்

முக்தா சீனிவாசன்

"இதில் தப்பு என்ன இருக்கிறது - நான் இந்தப் பக்கத்தை பூர்வீகமாகக் கொண்ட போதிலும் பிறந்தது - வளர்ந்தது, எல்லாம் வட இந்தியாவிலே தான். தமிழ எழுதப் படிக்கக்கூட இங்கே வந்து தான் கத்துக்கிட்டேன்" என்றார் சந்தானம்.

'அப்ப நான் வரேன் சார்" என்று புறப்பட்டான் திலக்.

அந்த மிகப் பெரிய கன்ஸ்டிரெக்ஷன் கம்பெனிக்கு பம்பாய், டில்லி, கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களில் பிராஞ்ச் ஆபீஸ் இருந்தன. கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு மட்டுமே கான்டிராக்ட் எடுக்கும் அவர்களது சென்னைக் கிளைக்கு மானேஜர், சந்தானம். திருவான்மியூர் பகுதியில் அவர்கள் எடுத்திருந்த சில கோடி கட்டட கான்டிராக்டுக்கு ஸ்பெஷல் இன்ஜினீயராகக் கல்கத்தாவில் வேலை பார்த்த திலக்கை சென்னைக்கு அனுப்பி வைத்திருந்தது கம்பெனி நிர்வாகம். அவன் தன் சென்னை அலுவலகத்தில் இணையும்போது தான் ஜெனரல் மானேஜரான சந்தானத்தை முதன்முதலாக பார்த்தான். எங்கேயோ அவரைப் பார்த்த ஞாபகம் இருக்கிறது என்ற குழப்பத்தில் இருந்த திலக், தன் உள்ளூர் உதவியாளன் தரணியுடன் 'ஸைட்'டுக்குப் புறப்பட்டார்.

காரில் போகும்போது திலக், தரணியிடம் பேசிக்கொண்டே வந்தான்.

"மிஸ்டர் தரணி! நான் ஒரு தப்பு செய்யவிருந்தேன், தப்பிவிட்டேன்".

"என்ன என்ன தப்பு சார்?" என்று கேட்டான் தரணி.

"திப்பிராஜபுரத்தில் எங்கள் வீட்டில் துரைசாமி என்கிற குதிரை வண்டிக்காரன் இருந்தான். அவனுக்கு ஒரே பிள்ளை. சந்தானம்ன்னு பேரு. அந்த ஊர் பஞ்சாயத்து எலிமெண்டரி ஸ்கூலில் படித்துக்கொண்டிருந்தான். அவனுக்கும் என்னெ மாதிரி கும்பகோணம் போய் இங்கிலீஷ் மீடியம் கான்வென்ட்டில் படிக்கணும்னு ஆசை! இதைக் கேட்டால் எனக்கு சிரிப்பாய் வரும். பின்பக்கம் கிழிந்துபோன காக்கி டிராயரைப் போட்டுகிட்டு எந்த கான்வென்ட்டுக்கு படிக்கப் போறே நீ? என்று அவனை கிண்டல் செய்வேன். அந்தப் பையன் தான் நம் ஜி.எம். சந்தானமோ என்கிற குழப்பமாயிருந்தது. அதான் கேட்டுட்டேன்" என்றான் திலக்.

"நல்ல வேளை சார்! நீங்க குதிரை வண்டிக்காரன் மகன் தானேன்னு கேட்காம இருந்தீங்களே! அவர் வருத்தப் பட்டிருப்பார். நம்ம மானேஜர் பெரிய குடும்பத்தில் பிறந்து வட நாட்டுலேயே சிறந்த பள்ளிக்கூடமான டூன் ஸ்கூலில் படித்தவர்" என்றான் தரணி.

கார் 'ஸைட்'டை அடைந்தது.

ஆரம்பப் பணிகளை எல்லாம் பார்வையிட்ட திலக் கட்டட வேலையை மளமளவென்று தொடங்கினான்.

மூன்று மாதங்கள் கழித்து ஒரு நாள்-

வேலையின் வளர்ச்சியைப் பற்றி திலக், சந்தானத்திடம் மிகவும் அடக்க, ஒடுக்கமாக விளக்கம் தந்து கொண்டிருந்தான். அப்போது சந்தானம், "கட்டடம் போக மிச்சமுள்ள எம்பளத்தி ஏழு கிரவுண்டைச் சுற்றி இரும்பு வலை வேலி போட்டுவிடுங்களேன்" என்றார்.

"எத்துணை கிரவுண்டுக்கு?" என்று கேட்டான் திலக்.

"எம்பளத்தி ஏழு கிரவுண்டு" என்றார் சந்தானம். மெல்ல சிரித்தான் திலக்.

"ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டார் சந்தானம்.

"தஞ்சாவூர்காரங்கதான் எம்பத்தி ஏழு என்பதை எம்பளத்தேழு என்று உச்சரிப்பாங்க - நீங்க...." என்றான் திலக்.

உடனே சந்தானம், "எங்க அம்மா-அப்பாகிட்டேருந்து எனக்கு படிஞ்ச சொல் அது. நான் தஞ்சாவூர் பக்கம் போனதே இல்லை. அங்கே நிறைய கோவில்கள் இருக்கில்லே; ஒருமுறை போயிட்டு வரணும்" என்றார்.

உடனே, "நானே அழைச்சிட்டு போரேன். எங்க ஊர் திப்பிராஜபுரம் கூட போயிட்டு வரலாம்" என்றான்.



"பார்ப்போம்! முதல்லே கட்டட வேலையை முடிப்போம்" என்றார் சந்தானம்.

"ஆமாம்! உங்க ஊர் என்றால் உங்களுக்கு அவ்வளவு ஈடுபாடா?" என்று வெறுமனே ஒரு கேள்வியை போட்டுவைத்தார் சந்தானம்.

"ஆமாம் சார்! எங்க வீட்டு குதிரை வண்டிக்காரன் மகன் - உங்க பேர்தான் - அவனுக்கு! அவனைச் சீண்டிவிட்டு அவமானப்படுத்தறது என் சிறு பிராயப் பொழுது போக்கு. ஒருமுறை நான் சக்கரைப் பொங்கல் சாப்பிட்டுக்கிட்டிருந்தேன். அந்த பையன் அந்தப் பக்கமா வந்தான். அவனிடம் நான் சாப்பிட்ட எச்சத்தைக் கொடுத்தேன். தன் மானம் உள்ள அந்த ஏழை அதை தூக்கி விட்டெறிஞ்சுட்டான். நான் அவனை பளார்ன்னு அரைஞ்சு கீழே தள்ளிவிட்டுட்டேன். நெத்தியிலே அடிபட்டு கொஞ்சம் ரத்தம் கூட வந்தது. வலது பக்கம் சின்ன வடு உங்களுக்கு இருப்பது போல" என்றான் திலக். சந்தானம் தன் நெற்றியைத் தடவி, "இது டூன் ஸ்கூலிலே கிரிக்கெட் ஆடறபோது பந்து பட்டு ஏற்பட்ட காயம்" என்று பதில் சொன்னார்.

ஸைட்டுக்குப் புறப்பட்டான் திலக் தரணியுடன். தனக்கும் சந்தானத்திற்கும் நடந்த பேச்சு வார்த்தைகளை ரமணியிடம் சொன்னான்.

"நல்லவேளை இவர் எங்க குதிரை வண்டிக்காரன் மகன் சந்தானமில்லை. அப்படி இருந்திருந்தால் நான் என் வேலைக்காரன் மகனிடம் வேலை செய்ய விரும்பாமல் இந்த வேலையை ராஜினாமா செய்துவிட்டு ஓடிப்போயிருப்பேன். என்னதான் கால மாற்றம் இருந்தாலும் நம்ம வீட்டிலே 'மீனியல் வொர்க்' பண்ணவன், கீழே நாமே வேலை செய்யறதா! கேவலமில்லையா?" என்று கூறியபடியே ஆக்ஸிலேட்டரை அழுத்தினான்.

ஒன்பது மாதங்களில் கட்டட வேலைகள் பூர்த்தியாகி விட்டன. திலக் மிகச் சிறப்பாகக் குறுகிய காலத்தில் வேலையை முடித்திருந்தான். கல்கத்தா ஆபீஸ் அவனை இங்கிருந்து வேறு ஒரு கட்டட நிர்மாண வேலைக்காக பம்பாய் போகச் சொல்லியிருந்தது.

அவனுக்கு வழி அனுப்பு விழா ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார் சந்தானம். ஐந்து நட்சத்திர ஹோட்டலில் அந்த விழா நடந்தது. திலக் "என்னால் இந்த வேலை குறிப்பிட்டபடி முடிக்க ஜி.எம்.சந்தானத்தின் பேராதரவுதான் காரணம். அவருக்குக் கீழே வேலை செய்தது எனக்கு ஒரு நல்ல அனுபவம் மட்டுமல்ல; ஒரு பெரிய பெருமை" என்று கூறினான்; தொடர்ந்து, "அவரை நான் சில முறை மனவருத்தம் கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்திவிட்டேன். எங்கள் திப்பிராஜபுரம் வீட்டில் குதிரை வண்டிக்காரன் மகனை இவரோடு ஒப்பிட்டுச் சந்தேகமாகக் கேள்வி கேட்டுவிட்டேன். பெரிய குடும்பத்தைச் சேர்ந்த "டூன்" ஸ்கூலில் படித்த அவரை இப்படிக் கேட்டது தவறு. அதை அவர் பொருட்படுத்தாதது அவரது கண்ணியத்தைக் காட்டுகிறது. என் தவறுக்கு என்னை மன்னித்துவிடுங்கள் ஐயா" என்றான்.

புன்முறுவல் பூத்தார் சந்தானம். தன் மனதிற்குள் "திலக்-உனது வீட்டு வண்டிக்காரன் மகன் தானப்பா இந்த சந்தானம். என் நெற்றியில் இருப்பது நீ தள்ளிவிட்ட வடுதான். என் கீழே வேலை செய்வது உனக்கு கௌரவக் குறைவு என்று நீ வேலையைவிட்டு ஓடிவிடுவாயோ என்கிற எண்ணத்தில் ஆரம்பத்திலிருந்து உன்னை எனக்குத் தெரியாது என்று கூறிவந்தேன். உன்னிடம் அவமரியாதைப்பட்டு முனிஸிபல் எலிமெண்டரி ஸ்கூலில் படித்த நான், சென்னைக்கு ஓடிவந்து, ஒரு மடத்தில் சேர்ந்து அவர்கள் உதவியால் பெரும் படிப்பு படித்து வளர்ந்த வரலாறெல்லாம் உனக்குத் தெரிந்து என்ன பயன்? நீ கட்டடத்தைச் சிறப்பாக முடிக்கவேண்டும் என்பதற்காக என்னை நான் மறைத்துக் கொண்டேன். சரி வேலை முடிந்தது. போய் வா" என்று நினைத்துக் கொண்டார். திலக் தன் முன்பு கைகூப்பி நிற்பதைக் கண்டு, அன்போடு அவனது கைகளைப் பிரித்து விட்டுக் கன்னத்தில் தட்டிக் கொடுத்தார் சந்தானம்.

# சமத்துவபுரம்

## ஒரு உன்னதத் திட்டம்

**– தியாகி ஜி.கே.கண்ணன்**

காஞ்சிபுரம் மாவட்டம், ஏராளமான இந்திய சுதந்திரப் போராட்டத் தியாகிகள் வாழ்ந்த – வாழ்கிற மாவட்டம் ஆகும். தியாகிகளை மதித்துப் போற்றிவரும் அரசு இது என்பதனாலே, அவர்களில் யாராவது ஒருவரைச் சந்திப்பது என்கிற எண்ணத்தோடு அங்குசென்ற நமக்கு, 79 வயதுத் தியாகியான பெரியவர் திரு. ஜி.கே.கண்ணன் அவர்கள் கிடைத்தார்.

தன்னலம் கருதாத் தியாகியே அவர் என்பதற்கு, 42 ஆண்டு காலமாக அவர் வாழ்ந்து வரும் அந்தப் பழைய வாடகை வீடே சான்றுபோல் தெரிந்தது.

"இந்திய நாட்டு விடுதலைக்காக நீங்கள் பலமுறை சிறை சென்றதும், அந்தக் காலத்தில் இந்தக் காஞ்சிபுரம் நகரசபைத் தலைவராக இருந்த டாக்டர் சீனிவாசனே – உடல்நலம் இல்லாமல் நீங்கள் இருந்ததால் தனிநபர் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்காமலிருக்க விலக்கு அளிக்குமாறு காந்தியாருக்கு எழுதி அனுமதி பெற்றதும் எங்களுக்குத் தெரியும்..."

அவர் குறுக்கிட்டார் – "ஆனால், ஒரு விஷயம். அதுபோல் சவுகரியம் இல்லாமல் இருந்தபோதும் கூட .... இங்கிருந்து சென்னைவரை நானும் நடந்தே போனேன். அங்கே என்னைத் தவிர எல்லோரையும் கைது பண்ணினார்கள். இன்னொரு விஷயம்... இதில்தான் நான் கைதாகவில்லையே தவிர, 1942ல் நடந்த வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் கலந்து கொண்டு, வேலூர், கண்ணனூர், தஞ்சாவூர் சிறையிலெல்லாம் இருந்திருக்கிறேன்; என்னோடு ஆர்.வி., சஞ்சீவரெட்டி போன்ற பெரியவர்களெல்லாம் சிறையிலிருந்தார்கள் தெரியுமோ?"

"இருக்கட்டும்; இப்படிப்பட்ட தியாகியான உங்களைக் காங்கிரஸ் அரசுக்குத் தெரியாதா – அவர்கள் ஒரு சொந்த வீடு கிடைக்கக் கூடவா உங்களுக்கு உதவவில்லை?"

"இதை அப்படிச் சொல்லக்கூடாது; நானும் கொஞ்சம் அசிரத்தையாக இருந்தேன். ஒரு மகன் இரண்டு மகள் என்றெல்லாம் ஆன





காஞ்சிபுரத்தில் மிகச் சிறப்பாகப் போற்றப்படும் .கோயில்கள் 82 ஆகும். அவற்றைச் ஶைவக் கோயில்கள், வைணவக் கோயில்கள் என இரண்டாகப் பிரிக்கலாம்.



கைலாசநாதர் கோயில்

அவற்றில் குறிப்பிடத்தக்க சிறப்புடையவை - அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில், வரதராசப் பெருமாள் கோயில், காமாட்சியம்மன் கோயில், கைலாசநாதர் கோயில், வைகுண்ட பெருமாள் கோயில், குமரக் கோட்டம், சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோயில் ஆகியவைகளாகும்.

பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட கைலாசநாதர் கோயில் சிற்பங்கள் சிறப்புமிக்கவை. "பிண்டி" என்றொரு நூதனக் கல்வகையில், அவை மிக நுணுக்கமாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. இக்கோயிலில் "சொர்க்கவாசல்" நுழைவு என்பது மிகப் பிரச்சித்தம். வெளிநாட்டுப் பயணிகள் உட்பட ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இங்கே வந்து போகின்றனர்.

மாவட்ட அளவில் பார்த்தால் 108 சிவாலயங்களும், 18 வைணவ ஆலயங்களும் உள்ளன. வல்லக்கோட்டை முருகன் கோயில், ஏரிகாத்த இராமர் கோயில், திருப்போரூர் முருகன் கோயில், திருக்கழுக்குன்றம் வேதகிரீசுவர் கோயில் போன்ற பல கோயில்கள் மிகச் சிறப்புற விளங்குகின்றன !.

பிறகுதான் அந்த நினைப்பே வந்தது. அதிலும் என் மகனுக்குத் திருமணம் ஆன பிற்பாடு... ஏன் ஒரு சொந்த வீட்டுக்கு இடமாவது கேட்கக் கூடாது என்கிற எண்ணம் வந்தது. கலெக்டரைப் போய்ப்பார்த்து.. இதுபற்றிப் பேசி மனுக்கொடுத்தேன். இந்த ஜில்லாவில் அமையவிருக்கிற சமத்துவபுரத்தில் கட்டாயம் உங்களுக்கு ஒரு வீடு கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் என்றார். இப்போது அந்தப் பட்டியலில் என் பெயர் இரண்டாம் இடத்தில் இருப்பதாக அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். ஏதோ என்போன்ற தியாகிகளுக்கு... இந்த அரசும், கலெக்டரும் கொஞ்சம் இரக்கத்தோடு உதவி செய்வதாகத் தெரிகிறது. சமத்துவபுரம்கிறது ஒரு உன்னதமான திட்டம்தானுங்க..."

"அது சரி, நீங்கள் இந்த ஊரில் அண்ணாவைப் பார்த்திருப்பீர்களே.. பேசிப் பழகிய சந்தர்பபம் ஏதேனும் உண்டா?"

"நிறைய உண்டு. ஆனால் அப்போது நாங்கள் எதிரெதிர் அரசியல் முகாமில் இருந்ததால் அவ்வளவு நல்லப்பழக்கம் இருந்ததில்லை!"

"அப்படியானால்.... உங்களுக்கு அண்ணாவை அறவே பிடிக்காதா?

நாம் இப்படிக் கேட்டதும் ஈஸி சேரில் இருந்த பெரியவர் கண்ணன் சற்றே நிமிர்ந்து உட்கார்ந்தார் "அதுமாதிரி சொல்ல முடியாது. ஒரு விஷயத்துல அவரைப் பத்தி எனக்கு கவலையே ஏற்பட்டதுண்டு. அது என்னன்னா... ஒருதரம் சட்ட சபையில பேசறப்ப, நான் உயிரோட இருக்கிற வரைக்கும் கள்ளுக்கடை சாராயக்கடையைத் திறக்கவே மாட்டேன்னு சொல்லிப் பேசினார். அதே மாதிரி... கடைசிவரை இருந்த அவர் செத்துப் போய்ட்டாரேங்கிற கவலைதான் அது! என்று கூறிப் பெருமூச்செறிந்தார்.

தியாகி. கண்ணன் தனது ஒரே மகனைக் காஞ்சிபுரம் சர்வோதய சங்கம் கதர்க்கடையில் வேலைக்குச் சேர்த்துவிட்டிருக்கிறார்; மாநில அரசு தரும் ரூ.515, மத்திய அரசு தரும் ரூ.3,000 தியாகிகள் ஓய்வூதியத்தில் மிக எளிமையாகக் காஞ்சிபுரத்திலேயே குடும்பம் நடத்தி வருகிறார். கணீரென்று பேசிய அவரைவிட, அவர் மனைவி சரஸ்வதிபாய் மிகுந்த தளர்ச்சியோடு நம் கண்ணுக்குத் தெரிந்தார். ✳




- க.கு. அகஸ்தியன்
உதவிப் பொறியாளர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
காஞ்சிபுரம்.

அடுக்களையில் புகையில்லா அடுப்பு - இனி
அன்னையர் முகத்திலே சிரிப்பு;
பாத்திரத்தில் இல்லை கரி பிடிப்பு - அதைத்
தேய்ப்பதிலே இல்லை இனி அலுப்பு!

ஊதி ஊதி பட்டது பெரும் சலிப்பு - இனி
ஊதாமல் எரியுமிந்த அடுப்பு;
விறகுக்குச் செலவிங்கே குறைப்பு - தேவை
வீட்டிற்கோர் புகையில்லா அடுப்பு!

சுவாசமே பகையாகும் தவிப்பு - இனி
புகைக்கே இங்கு ஒரு தடுப்பு;
கண்களுக்கு இல்லை புகை எரிச்சல் - இனி
வாராது பார்வைக்குக் குறைச்சல்!

புகையே மனிதனுக்குப் பகையாம் - வரும்
நோய்கள் அத்தனைக்கும் துணையாம்;
நோயில்லா வாழ்வுதான் சிறப்பு - நோய்
வருமுன்னர் காப்பதுவே பொறுப்பு!

எல்லாமே நமக்கு ஓர் படிப்பு - தேவை
வீட்டிற்கோர் புகையில்லா அடுப்பு;
அமைத்திடுவீர் புகையில்லா அடுப்பு - பின்
அடைந்திடுவீர் விந்தைமிகு சிறப்பு!





# "தமிழகத்தில் துவக்கப்படும் சமத்துவபுரங்களில் இனி சாதிகளை மறந்து தமிழர்களாய் இருப்போம்!"

**- கலைஞர்**

– 30.9.1998ல் புதுக்கோட்டையில் நடைபெற்ற சமத்துவபுரம் திறப்புவிழாவில் பேசியதிலிருந்து.....

"இந்த அரசின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டத்தில் சற்றொப்ப 38 கோடி ரூபாய் அளவுக்குப் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அதிலே வேலை முடிந்து திறந்துவைக்கப்படுகின்ற திட்டங்களின் மதிப்பு 11 கோடியே 38 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய். அடிக்கல் நாட்டப்படும் திட்டங்களின் மதிப்பு 16 கோடியே 96 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய். பயனாளிகளுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்களின் மதிப்பு 9 கோடியே 82 இலட்சத்து 14 ஆயிரத்து 85 ரூபாய். ஆக இந்த விழாவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மொத்தம் 38 கோடியே 11 இலட்சத்து 56 ஆயிரத்து 85 ரூபாய் மதிப்பிலே பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றன.

இந்தச் சமத்துவபுரம் திட்டத்தைக் கடந்த ஆண்டு அறிவித்து ஒவ்வொரு மாவட்டத்திலும் இன்றைக்கு அந்தத் திறப்பு விழாக்கள் நடைபெறுகின்றன. அந்த வகையில் பார்த்தால் இது 5–வது சமத்துவபுரமாகும்.

இந்தச் சமத்துவபுரம், புதுக்கோட்டை நகராட்சி எல்லைக்கு அருகில் 12 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. புறம்போக்காக இருந்த அந்த நிலம் நத்தம் புறம்போக்காக வகை மாற்றம் செய்யப்பட்டு சமத்துவபுரம் இங்கே அமைக்கப் பட்டுள்ளது. மொத்தம் 100 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு மனையும் 5 செண்ட் என்ற அளவில் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த சமத்துவபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒரு வீட்டின் மொத்தப் பரப்பளவு 239 சதுர அடி. ஒவ்வொரு வீடும் 38,000 ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் சமையல் அறை மற்றும் சுகாதாரக் கழிப்பறை இணைத்துக் கட்டப்பட்டுள்ளது.

**குடிநீர் – சாலை – கல்வி வசதிகள்**

எதிர்காலத்தில் இதை விரிவுபடுத்திக் கட்டும் பொருட்டும் நல்ல காற்றோட்டம் மற்றும் குடியிருப்போரின் வசதிக்காகவும், முன் பக்கமும் பின் பக்கமும் வாயிற் கதவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வீட்டிலும், புகையில்லாத சோலார் அடுப்புகள் பொருத்தப் பட்டுள்ளன.

வீடுகளின் மேல் கூரையில் ஒடுகள் பதிக்கப் பட்டுள்ளன. சமத்துவபுர மக்களின் குடிநீர்த் தேவையைப் போக்கிடும் பொருட்டு 7 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சமத்துவபுரத்திலிருந்து 1.5 கிலோ மீட்டர் தூரத்தில் அதற்கான நீர் ஆதாரம் ஏற்படுத்தப்பட்டு 7.5 குதிரை சக்தி கொண்ட மின் இணைப்பான் மற்றும் பேகன் மூலம் குடிநீர் சமத்துவபுரத்திற்குக் கொண்டு வரப்பட்டு சமத்துவபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள 30 ஆயிரம் எக்டேர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்றப்படுகிறது.

இதிலிருந்து பகிர்மானக் குழாய்கள் மூலம் 2,200 மீட்டர் நீளத்திற்கு அமைத்து, அதன் மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்படவிருக்கிறது. இதற்காக 12 பொதுத் தெருக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. சமத்துவபுரத்தின் மின்சாரத் தேவைகளுக்காக 7 இலட்சம் ரூபாய் செலவில் 230 கிலோ வாட் சக்தியுள்ள மின் மாற்றி மற்றும் 48 மின் கம்பங்கள் அமைக்கப் பட்டுள்ளன. சமத்துவபுரம் தெருக்களில் 24 குழல் விளக்குகளும், 3 சோடியம் ஆவி விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

அனைத்து வீடுகளுக்கும் அரசு செலவில் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. சமத்துவபுரத்திற்குச் செல்லும் சாலையும், மற்ற சாலைகளும் 1,610 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளன. சமத்துவபுரத்திலுள்ள குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளுக்கும் அதன் அருகில் உள்ள குக்கிராமங்களைச் சேர்ந்த குழந்தை களுக்கும் கல்வி கற்பதற்கு 4.7 இலட்சம் ரூபாய் செலவில் தொடக்கப் பள்ளி ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. துவக்கப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மதிய உணவுத் திட்டத்தின் கீழ், மதிய உணவு தயாரிக்க 40 ஆயிரம் ரூபாய் செலவில் சமையல் கூடம் ஒன்றும் கட்டப் பட்டுள்ளது. பள்ளி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 32 ஆயிரம் ரூபாய் செலவில் கழிப்பிட வசதி செய்யப்பட்டுள்ளது. பள்ளிக் கட்டடத்தின் ஒரு பகுதியில் மாலை நேரங்களில் இயங்கும் வகையில் மாவட்ட அறிவொளி இயக்கத்தின் வளர் கல்வி நூலகமும், படிப்பகமும் செயல்பட உள்ளன.

**பொதுவிநியோக அங்காடி – குழந்தைகள் ஊட்டச்சத்து மையம்**

இந்த சமத்துவபுரத்தில் வாழும் மக்களின் வசதிக்காகப் பொது வினியோக அங்காடி ஒன்று

1 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் சமத்துவபுரம் உள்ளிட்ட சுற்று வட்டாரப் பகுதியில் 573 குடும்ப அட்டைதாரர்கள் பயன் அடைவார்கள். இந்த அங்காடி மூலம் அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை மட்டுமின்றி, மளிகைப் பொருட்கள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சமத்துவபுரத்தைச் சேர்ந்த குழந்தைகளின் நலன் மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக ஊட்டச் சத்து மையம் அமைத்திட 1 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

இங்கு வாழும் மக்களின் பொதுச் சுகாதாரம் மற்றும் நல வாழ்விற்குப் பகுதி நேர சுகாதார நிலையம் ஒன்றும் தாய் சேய் நல நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. இத் தேவைக்காக மருத்துவரும், கிராம சுகாதாரச் செவிலியரும் தினந்தோறும் 2 மணி நேரம் பணியிலே இருப்பார்கள். இச் சுகாதார கட்டடம் 53 ஆயிரம் ரூபாய் செலவிலே கட்டப்பட்டுள்ளது. சமத்துவபுரத்தில் சுகாதாரத்தை பேணுவதற்காகக் கழிவு நீர் வாய்க்கால் வசதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக 4 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு 1,100 மீட்டர் நீளம் உள்ள கழிவு நீர் வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது.

உலக நடப்புகளை அனைவரும் தெரிந்துகொள்ளும் வகையில் இச் சமத்துவபுரத்தில் ரூ.17 ஆயிரம் செலவில் தொலைக்காட்சி அறை கட்டப்பட்டு 15 ஆயிரம் ரூபாய் செலவில் தொலைக்காட்சிப் பெட்டி நிறுவப்பட்டு உள்ளது. ஒழுங்கான முறையிலே டெண்டர் விடப்பட்டு, ஒழுங்கான முறையில் தொலைக்காட்சிப் பெட்டிகள் அங்கே வைக்கப்பட இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### பேருந்து வசதிகள்-குழந்தைகள் பூங்கா

மத்தியப் பேருந்து நிலையத்திலிருந்து சமத்துவபுரத்திற்குத் தினந்தோறும் மூன்று முறை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து சென்று வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அஞ்சல்பெட்டி ஒன்றும் இங்கு நிறுவப்பட்டுள்ளது. சாதி மாதப் பாகுபாடுகள் இன்றி அனைவரும் பயன்படுத்தவும், சமத்துவபுரத்தில் வாழும் மக்களது குடும்பங்களின் பொது நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தும் வகையிலும் 3 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் செலவில் சமுதாயக்கூடம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கூடத்தில் குடிநீர், மின்சார வசதிகளுடன் கூடிய சமையற்கூடம், இருப்பு அறை நான்கு மற்றும் பெண்களுக்குத் தனித்தனியாகக் கழிவறை ஆகிய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பொழுதுபோக்கிற்காக 50 ஆயிரம் ரூபாய் செலவில் பூங்கா ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அங்கே குழந்தைகள் விளையாடுவதற்குப் பல்வேறு விளையாட்டுப் பொருட்களும் அமைக்கப்பட்டுள்ளன. இங்கே மற்ற சமத்துவபுரங்களில் இல்லாத சிறப்பு இயற்கையாகவே ஒரு சிறப்பு அம்சமாக ஒரு ஒடை இங்கே அமைந்திருக்கின்றது. இந்த ஒடைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஒர் பெயர் வைத்து "சமத்துவபுரக் குளம்" என்று மாவட்ட ஆட்சித் தலைவர் சமத்துவபுரக் குளத்தையே இங்கே உருவாக்கி இருக்கிறார். இதையெல்லாம் நான் கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

### சாதி மதச் சண்டைகளுக்கு இடம் தராத தமிழகம்

இந்தியாவிலேயே, குறிப்பாகத் தமிழகத்தில் மத, சாதிப் பூசல்கள் தலை காட்டியதில்லை. அதே நேரத்தில் வடபுலத்தில் அந்தப் பூசல்கள் அதிகம் உண்டு. ஆனால், பெரியார், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத், தேவர் திருமகன், அம்பேத்கர் –போன்றவர்களுடைய கொள்கைகள் தமிழகத்தில் மற்ற மாநிலங்களைவிட ஆழமாகப் பதிந்திருக்கின்ற காரணத்தால் சாதி மத பேதங்களுக்கு, சாதிச் சச்சரவுகளுக்கு இடம் தராத பூமியாக இந்த பூமி இருந்துகொண்டிருக்கின்றது.

இடையிடையே அவ்வப்போது முதுகுளத்தூர் கலவரங்கள் நடைபெற்றிருக்கலாம். இடையிடையே விழுப்புரங்கள் நடத்திருக்கலாம். அது யார் யாருடைய ஆட்சிக்காலத்திலே என்பதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள். இப்பொழுது இந்த ஆட்சிக் காலத்தில்







*மக்களுடைய*
*வாழ்க்கைக்குப்*
*பயன்படக் கூடியதும்,*
*அறிவையும், திறமையையும்,*
*தைரியத்தையும் உண்டாக்கக்*
*கூடியதும் ஆகிய சிறந்த கலைகளை*
*யெல்லாம் தமிழில் செய்வதன் மூலம்,*
*மக்களுடைய அறிவையும் தமிழ்*
*மொழியையும் செம்மை செய்வதே*
*உண்மையான தமிழ் உணர்ச்சியாகும்.*

— தந்தை பெரியார்

ஒரிரு கலவரங்கள் நடைபெற்றிருக்கலாம். ஆனால், நிரந்தரமாகக் கலவரம் நடைபெறும் பூமியாக வடபுலத்திலே சில மாநிலங்கள் இன்றைக்கும் இருந்து வருகின்றன. இந்தக் கலவரங்கள் கூட, இந்த அமளிகள் கூட தமிழகத்திலே இருத்தலாகாது என்பதற்காகத்தான் பெரியார், அண்ணா போன்ற தலைவர்களெல்லாம் அரும்பாடுபட்டார்கள். இன்றைக்கும் அவர்கள் வழிநின்று அவர்கள் எண்ணத்தை நிறைவேற்றி வைப்பதற்காக நாம் செயல் வடிவத்திலே இந்தச் சமத்துவபுரங்களைக் கண்டிருக்கின்றோம்.

### அறந்தாங்கியில் சர்க்கரை ஆலை

வரலாறுகளைத் தவறாகச் சொன்னால் எதிர்காலத்தில் அது இடிக்கும். குறிப்பாக, இங்கே அறந்தாங்கி சர்க்கரை ஆலை பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார். தம்பி திருநாவுக்கரசு அவர்கள் இந்த அறந்தாங்கி சர்க்கரை ஆலைக்காகச் சட்டமன்றத்திலே எவ்வளவு நாள் வாதாடினார், எப்போதெல்லாம் வாதாடினார் என்றெல்லாம் எனக்குத் தெரியும். இந்த ஆட்சியிலே மாத்திரமல்ல. கடந்த ஆட்சியிலும் அவர் வாதாடியிருக்கிறார். கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றை அறந்தாங்கியில் அமைக்க மத்திய அரசிடமிருந்து அனுமதி பெறப்பட்டிருந்தது. ஆனால், "அந்தப் பகுதிக்குக் கரும்பு ஆலையே தேவையில்லை" என்று முடிவெடுக்கப்பட்டு மத்திய அரசுக்கு அறிவித்தது எந்த ஆட்சி என்பதை தயவுசெய்து நீங்கள் எல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அந்தப் பகுதிக்கு சர்க்கரை ஆலையே தேவையில்லை என்று மாநில அரசு முடிவெடுத்து விட்டது என்று மத்திய அரசுக்குக் கடிதம் மூலமாக அறிவித்த ஆட்சி இந்த ஆட்சி அல்ல. இதற்கு முன்பு இருந்த ஆட்சி என்பது தம்பி திருநாவுக்கரசுக்குத் தெரியும். ஏனென்றால், அவர் நீண்டகாலமாக இந்த வட்டாரத்திலே மக்கள் பிரதிநிதியாக இருக்கிறார். அதிலும் குறிப்பாக அவருடைய தொகுதிக்காகப் பலமுறை சட்டமன்றத்தில் வாதாடியவர். அவருக்கு நன்றாக ஞாபகம் இருக்கும். மீண்டும் தம்பி திருநாவுக்கரசு சட்டமன்றத்தில் அதற்காக வாதாடியபோது, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் மத்திய அரசுக்கு நான் பரிந்துரை செய்தேன், மத்திய தொழிலமைச்சராகத் தம்பி முரசொலிமாறன் அப்போது இருந்தார். அவர் ஏற்றுக்கொண்டு தனியார் நிறுவனமான டி.ஐ.பாரி கம்பெனிக்கு அங்கே சர்க்கரை ஆலை தொடங்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

### மூடப்பட்ட நூற்பாலையைத் திறக்க ஏற்பாடு

ஆனால், அரசு மட்டத்தில் வழங்கப்படவேண்டிய அனுமதிகள் அனைத்தும் எதுவுமே நிலுவையில்லாமல் வழங்கப்பட்டு விட்டது. இடம் தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதற்கு வேண்டிய உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவரும், செய்துவருகிறார். விரைவில், இடத் தேர்வு முடிவு பெற்றதும் திருநாவுக்கரசு அழைத்து வர, அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சிக்கு நிச்சயம் நான் வருவேன்.

கூட்டுறவு நூற்பாலையைப் பற்றி இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் சொன்னார். இந்தக் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டது தி.மு.க. ஆட்சியில் அல்ல; கடந்த ஆட்சியில்தான் இந்த ஆலை மூடப்பட்டது. அந்த ஆலையை மீண்டும் திறக்க இந்த ஆட்சியில் தேவையான நிதி உதவிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதைப் பயன்படுத்தி ஆலையை மீண்டும் தொடர்ந்து நடத்திடத் தேவையான பணிகள் இன்னும் இரண்டு வாரங்களில் தொடங்கப்படவுள்ளது.

ஏற்கெனவே, இதற்கு அனுமதித்துள்ள தொகை, மொத்தமாக இந்த ஆலைகளையெல்லாம் திறக்க 145 கோடி ரூபாய். நிதி ஒதுக்கீடு இதற்காகச் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டு வாரத்திலே இந்த அறந்தாங்கி கூட்டுறவு நூற்பாலையைத் திறப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### இது உங்கள் அரசு

பொதுவாக இந்த ஆட்சியில் குறைகளைச் சொல்லுங்கள், திருத்திக் கொள்கிறோம். குற்றங்களைச் சொல்லுங்கள் உண்மையா என்பதை அறிந்து உண்மையாக இருந்தால், அந்தக் குற்றத்தில் ஈடுபடுகின்றவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

அப்படிப்பட்ட அரசுதான் – உங்களோடு இருந்து உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு உங்களுக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற அரசுதான் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஏழை எளியவர்கள், நடுத்தர மக்கள், சாதாரண சாமான்ய மக்கள் அவர்களுடைய பிரச்சினைகளை மையமாக வைத்துத்தான் இந்த அரசுச் சக்கரம் சுழன்றுகொண்டிருக்கின்றது அப்படித்தான் சுழலவேண்டும் என்பது என்னை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணாவின் ஆணை. அந்த ஆணைப்படி நடக்கின்ற காரணத்தால்தான் இன்று அவர்களுடைய அருமைக் கொள்கையான சமதர்மத்தை நிலைநாட்டப் புதுக்கோட்டையில் சமத்துவபுரம் திறந்துவைக்கப் பட்டிருக்கின்றது. ஏழை எளிய மக்களுக்கான திட்டங்கள், நடுத்தர மக்களுக்கான திட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன".

●



← வெளித் தோற்றம்

காஞ்சிபுரத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ள அன்னை அஞ்சுகம் திருமணக் கூடம்



↑ உட்புறம்



← உணவுக் கூடம்

# அரசு ஆணைகள்

ஓய்வுபெற்ற அதிகாரி திரு.எஸ்.சிவசுப்பிரமணியன் அவர்களைக் கொண்டு அமைத்த ஒரு நபர் கமிஷன், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட திருத்திய ஊதிய விகிதத்திலுள்ள முரண்பாடுகளை ஆய்வு செய்து, மத்திய அரசு ஆசிரியர்களுக்கு இணையாக மாநில ஆசிரியர்களுக்குத் திருத்திய ஊதிய விகிதம் வழங்கலாம் என்று பரிந்துரைத்தது. இதனை ஏற்று ஆசிரியர்கள் ஊதிய விகிதங்களை அரசு திருத்தி வழங்கியது. இதன் காரணமாக அமைச்சுப்பணி பதவிகளுக்கும், ஆசிரியர் பதவிகளுக்கும் இடையே ஊதிய இடைவெளி ஏற்பட்டுள்ளது என்றும், இதனை நிவர்த்தி செய்யப் பதிவறை எழுத்தர், இளநிலை உதவியாளர், உதவியாளர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகிய பதவிகளுக்குத் தற்பொழுது வழங்கப்படும் ஊதிய விகிதங்களை உயர்த்தி வழங்கவேண்டுமென்று அலுவலர் சங்கங்கள் அரசுக்குக் கோரிக்கைகள் வைத்துள்ளன.

ஆசிரியர்களுக்கு உயரளவு ஊதிய விகிதங்களைப் பரிந்துரைத்த ஒரு நபர் கமிஷன், பதிவறை எழுத்தர், இளநிலை உதவியாளர், உதவியாளர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகிய பதவிகளில் உள்ளவர்களுக்கு மட்டும் ஊதியத்தில் 5 விழுக்காடு தனி ஊதியமாக வழங்கலாம் என்று பரிந்துரைத்துள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டு, அலுவலர் சங்கங்களின் கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலித்த அரசு ஏற்கெனவே மேற்படிப் பதவிகளுக்கு, மத்திய அரசில் உள்ள பதவிகளுக்கு இணையான ஊதிய விகிதம் வழங்கப்பட்டுள்ளதால், மேலும் இவர்களது ஊதிய விகிதங்களைத் திருத்தி வழங்கச் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை அறிந்தது. இவர்களது ஊதிய விகிதங்களில் எந்த ஒரு மாற்றம் செய்தாலும் இருக்கி[illegible]தியம விகித அமைப்பைச் சீர்குலைக்கு[illegible] ஆயினும், இவர்களது கோரிக்கையைக் கவனமாக கருத்தில்கொண்டு, ஊதியத்தில் ஏற்பட்டுள்ள வித்தியாசத்தை ஈடுசெய்யும் விதத்தில், இவர்கள் அனைவருக்கும் ஊதியத்தில் 5 விழுக்காடு தனி ஊதியம் (Personal Pay) வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

இத் தனி ஊதியம் 1-1-96க்கு முன்பு.5 விழுக்காடு தனி ஊதியம் பெற்று வந்த அனைத்துப் பணியிடங்களைச் சார்ந்த பணியாளர்களுக்கும் பொருந்தும். இந்தத் தனி ஊதியம் 1-9-98 அன்று பெற்ற அடிப்படை ஊதியத்தில் கணக்கிட்டு 1-9-98 முதல் வழங்கப்படும்.

இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ.82.66 கோடி கூடுதலாகச் செலவாகும். இதனால் சுமார் 2.47 இலட்சம் அலுவலர்கள் பயனடைவார்கள்.

மத்திய அரசு 5-வது ஊதியக்குழு பரிந்துரைகளின் அடிப்படையில், தமிழக அரசு ஊழியர்களுக்கு ஊதிய விகிதங்களை 1-1-96 முதல் திருத்தி அமைத்துள்ளதன் மூலம், ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு 1,200 கோடி ரூபாய்.

இந்தப் புதிய ஊதிய விகிதங்களை நடைமுறைப்படுத்தியதால் 1-1-1996 முதல் 31-3-1998 வரை வழங்கப்படும் நிலுவைத் தொகை 2,400 கோடி ரூபாய்.

அதில் இந்த ஆண்டு மட்டும் நிலுவைத் தொகை வழங்க ஒதுக்கப்பட்ட தொகை 1,100 கோடி ரூபாயாகும்.

ஆசிரியர்களுக்கிடையிலான ஊதிய முரண்பாடுகளை ஒருநபர் கமிஷனின் பரிந்துரையின் அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளதன் காரணமாக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் கூடுதல் செலவு 75 கோடி ரூபாய்.

சத்துணவுப் பணியாளர்களுக்குப் புதிய ஊதிய விகிதங்கள் வழங்கியதன் காரணமாக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆகும் கூடுதல் செலவு 60 கோடி ரூபாய்.

1-1-96க்கு முன்பு 5 விழுக்காடு தனி ஊதியம் பெற்றுவந்த அனைத்துப் பணியாளர்களுக்கும் 1-9-98 அன்று பெற்ற அடிப்படை ஊதியத்தில் 5 விழுக்காடு தனி ஊதியம் (Personal Pay) வழங்கப்படும் என்ற அரசு ஆணையின்படி ஏற்படும் கூடுதல் செலவு 82.66 கோடி ரூபாயாகும்.

அரசு ஊழியர்களுக்குப் பழைய ஊதிய விகிதத்தில் சம்பளமாக வழங்கப்பட்ட ஓர் ஆண்டு செலவினம் 5,230 கோடி ரூபாயாகும்.

ஓய்வு ஊதியதாரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை, ஆண்டு ஒன்றுக்கு 1,250 கோடி ரூபாயாகும்.

மொத்தமாக அரசு ஊழியர்களுக்கு 7,750 கோடி ரூபாயும், ஓய்வூதியதாரர்களுக்கு 1,250 கோடி ரூபாயும் சேர்த்து இந்த ஆண்டு 9,000 கோடி ரூபாய் செலவாகும்.

இஃதன்னியில் அரசு உதவிபெறும் பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஆகும் ஆண்டு செலவு 1,166 கோடி ரூபாயாகும்.

எனவே இந்த ஆண்டு செலவு ஆகமொத்தம் 10,166 கோடி ரூபாய். ★

*தமிழகத்தில் கல்லூரிக் கல்வித்துறை தொடங்கப்பட்ட 1965ஆம் ஆண்டு முதல் இதுவரையில் நியமனம் செய்யப்பட்ட கல்லூரி ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 5,134. இவர்களில், இடஒதுக்கீடு முறைப்படி தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்காக ஒதுக்கப்படக்கூடிய 19 விழுக்காடு இடங்களில் நியமனம் செய்யப்பட்டிருக்க வேண்டிய இப்பிரிவுகளைச் சார்ந்த கல்லூரி ஆசிரியர்களின் எண்ணிக்கை 972.*

*ஆனால், தற்போது தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்புகளைச் சார்ந்த 377 ஆசிரியர்கள் மட்டுமே கல்லூரிகளில் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டுப் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்குரிய விகிதாச்சார முறைப்படி மேலும் 595 ஆசிரியர்களைக் கல்லூரிகளில் நியமனம் செய்திடத் தமிழக அரசின் சார்பில் கொள்கை அளவில் முடிவு செய்து, அதன் முதற்கட்டமாக 100 பணியிடங்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின வகுப்புகளைச் சார்ந்தவர்களைத் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வாணையத்தின் மூலம் சிறப்புத் தேர்வுகளை நடத்தி, தேர்வு செய்து காலியாக உள்ள கல்லூரி ஆசிரியர் பணியிடங்களில் உடனடியாக நியமனம் செய்திட மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். எஞ்சிய பணியிடங்களில், தாழ்த்தப்பட்ட பழங்குடியினப் பிரிவுகளைச் சார்ந்தவர்கள் முறைப்படி தேர்வு செய்யப்பட்டுப் படிப்படியாக நியமனம் செய்யப்படுவார்கள்.* ★

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ், நடைபெறும் பணிகளுக்கு மாவட்டங்களில் மக்களிடம் நல்ல வரவேற்பிருக்கிறது என்பதைக் கேட்டறிந்த முதலமைச்சர், இந்தத் திட்டங்களின் கீழ் நடைபெறும் பணிகள் மேலும் சிறப்பாகச் செயல்பட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட வேண்டுமென்றும், இத்திட்டங்களில் எந்த விதமான சுணக்கமோ, தயக்கமோ இருக்கக் கூடாதென்றும், ஏதாவது ஒரு சில மாவட்டங்களில் இப்பணிகளில் சுணக்கம் இருக்குமேயானால் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இதுகுறித்து எழுதப்பட வேண்டுமென்றும், மேலும் இத்திட்டங்கள் குறித்து கிராம மக்களுக்குத் தெளிவாக எடுத்து விளக்க வேண்டுமென்றும் அறிவுரை கூறினார்.

கிராமப் பகுதி மற்றும் நகரப் பகுதிகளில் குடிநீர்த் திட்டப் பணிகள் முன்னேற்றம் குறித்து விரிவாக ஆய்வு நடத்தப்பட்டது. நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 50 லிட்டருக்குக் குறைவாகக் குடிநீர் விநியோகிக்கப்படும் 26 நகராட்சிகள் மற்றும் 40 லிட்டருக்குக் குறைவாகக் குடிநீர் விநியோகிக்கப்படும். 104 நகரப் பேரூராட்சிகள் முதற்கட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்டு அங்கே முழு அளவிற்குக் குடிநீர் வசதி செய்துதர திட்டங்கள் தீட்டி அதற்காகும் மூலதனச் செலவில் ஒரு பகுதி மானியம் வழங்குவதற்கு அரசு மட்டத்தில் ஆய்வு செய்ய முடிவெடுக்கப்பட்டது. ★

ஆதிதிராவிட மக்களுக்கு இலவசக் காங்கிரீட் வீடுகள் கட்டித்தரும் திட்டத்தின்கீழ் — இந்த ஆண்டு அறுபதாயிரம் வீடுகள் கட்டுவதாக மாநில அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் பங்காக ஒதுக்கப்படும் தொகையைப் பயன்படுத்தி நாற்பதாயிரம் வீடுகள் மட்டுமே கட்ட இயலும். எனினும் மீதமுள்ள இருபதாயிரம் வீடுகளைக் கட்டி முடிக்கத் தேவைப்படும் ரூபாய் எழு கோடியை மாநில அரசின் சார்பில் வழங்க ஆவன செய்யுமாறு முதலமைச்சர் உத்தரவிட்டார்.

கடந்த 97—98ஆம் ஆண்டில் இருபதாயிரம் தெரு விளக்குகள் அமைக்க அரசு 7.28 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததில், இதுவரை 12,518 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 7,482 தெரு விளக்குகளையும், 98—99ஆம் ஆண்டிற்கு அனுமதித்துள்ள 30,000 தெரு விளக்குகளையும் இந்த ஆண்டுக்குள் அமைக்கப்பட வேண்டுமென்றும், அந்த விளக்குகளையும் எல்லா மாவட்டங்களிலும் பரவலாக அமைக்கப்பட வேண்டுமென்றும் முதலமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய குளங்கள் 12,993 ஊராட்சிகளில் சுமார் 126 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட வேண்டுமென்று அனுமதியளித்ததில் 8,233 குளங்களில் பணிகள் நடைபெற்றுள்ளன. மீதமுள்ள பணிகளையும் உடனடியாகத் தொடங்கி அனைத்துப் பணிகளையும் இந்த நிதி ஆண்டிற்குள் முடிக்கப்பட வேண்டுமென்று முதலமைச்சர் ஆணையிட்டார்.

தமிழகத்தில் உள்ள அனைத்துப் பஞ்சாயத்துகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தரவேண்டுமென்ற எண்ணத்துடன் இந்த அரசு சொந்தக் கட்டடம் இல்லாத அனைத்துப் பஞ்சாயத்துக்களுக்கும் கட்டடம் தர ஆணையிட்டுள்ளது. விரைவில் இந்தப் பணிகளை முடித்து, இந்த ஆண்டிற்குள் அவை பயனுக்குக் கொண்டுவரப்பட வேண்டு மென்றும் தமிழகத்திலே சொந்தக் கட்டடத்தில் இயங்காத பஞ்சாயத்துக்களே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டுமென்றும் முதலமைச்சர் கண்டிப்பாகத் தெரிவித்தார்.

*இத்துறை மூலம் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ—மாணவியருக்குப் பட்டயப்படிப்பு மற்றும் தொழிற்கல்வி பயில இலவசக் கல்விச் சலுகைத் திட்டம் சில நிபந்தனைகளுக்குட்பட்டு செயல்படுத்தப்படுகிறது. 1997—98ஆம் ஆண்டு முதல் தொழில்நுட்பப் பயிலகங்களில் 3 ஆண்டு பட்டயப்படிப்பு பயிலும் 1000 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் 1000 மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் வகுப்பு மாணவ—மாணவியருக்கு இலவசக் கல்விச் சலுகை அளிக்க ஆணையிடப்பட்டது. 1998—99ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை விவாதத்தின் போது பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சர் அவர்கள் செய்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில் 3 ஆண்டு பட்டயப்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ—மாணவியர் இலவசக் கல்விச் சலுகை பெற நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கை வரம்பு நீக்கப்பட்டு அதற்காகக் கூடுதல் செலவுத் தொகை ரூ.8 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.*

*பயனாளிகளின் எண்ணிக்கை வரம்பு நீக்கப்பட்டதால் பயனடைவோர் எண்ணிக்கை எதிர்பார்த்ததைவிட அதிகமாக இருக்கும் எனக் கருதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் ஆகியோர் ஏற்கெனவே ஒப்புதலளிக்கப்பட்ட ரூ.8 இலட்சத்திற்கும் கூடுதலாக ரூ.19.13 இலட்சம் தேவைப்படும் எனக் கோரியுள்ளனர். எனவே, அரசாணை நிலை எண்.26, நாள்:1—6—98ல் ஒப்புதலளிக்கப்பட்ட ரூ.8 இலட்சத்திற்குப் பதிலாக ரூ.27.13 இலட்சத்திற்குப் புதிய அரசாணை வெளியிடப்பட்டது.* ★



காஞ்சிபுரம் மாவட்டத்தில்

# அரசின் ஆக்கபூர்வ பணிகளின் வியத்தகு விளம்பர ஏற்பாடுகள்!

**ஒரு கண்ணோட்டம்...**

— மூ.நா. கிருட்டிணசாமி
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம் மாவட்டம்.

*சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னி வரும் சித்திரச் சேலைகளுக்குப் பெயர் பெற்றது காஞ்சிபுரம் மாவட்டம். "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டா" என்பது பழமொழி. கோயில்களின் பழமையும், புராணச் சிறப்பையும், வரலாற்றுப் பெருமையையும் தன்னகத்தே கொண்டது காஞ்சிபுரம் மாவட்டம்.*

*"கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" எனும் மந்திரத்தை அளித்துச் சென்ற பேரறிஞர் அண்ணாவை உலகுக்கு அர்ப்பணித்தப் பெருமை கொண்டது காஞ்சிபுரம் மாவட்டம் ஆகும். இத்தகு பெருமை பெற்ற காஞ்சிபுரம் மாவட்டம் பல நிலைகளில் முன்னோடி மாவட்டமாகத் திகழ்கிறது.*

*மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் நாளொரு திட்டங்கள் பொழுதொரு வண்ணமாய் உருவாக்கப்படுகின்றன. மக்களுக்காக உருவாக்கப்படும் நல்வாழ்வுத் திட்டங்கள் மக்களைச் சென்றடைவதிலும், அவற்றைத் மற்றவர்கள் அறியச் செய்வதிலும் விளம்பரப்பணி மிகவும் முக்கியப் பங்கு வகிக்கிறது. அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் விளம்பரப்பணி காஞ்சிபுரம் மாவட்டத்தில் செவ்வனே சிறப்புடன் செயலாக்கப்பட்டு வருகிறது. இவ் விளம்பரப்பணி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் அனைத்துத் துறையையும் ஒருங்கிணைத்து மக்களுக்கு அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் எடுத்துரைத்து அரசின் நல்வாழ்வுத் திட்டங்களை மக்கள் அடைவதற்கு ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்பட்டு வருகின்றது.*

*மாவட்டத்தில் நடைபெறும் அரசு விழாக்கள், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்கும் கருத்தரங்கம் — கூட்டம் போன்ற நிகழ்ச்சிகளில் அனைத்துத் துறையினராலும்*



விளம்பரப்பணி தக்கபடி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### மக்கள் குறையறியும் நாள் கூட்டம்

"முறை செய்து காப்பாற்றும்
மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

எனும் வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க மக்களுக்கு முறைசெய்ய வேண்டுமானால் முதலில் அவர்களின் குறையினை அறிதல் வேண்டும். மக்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க அலுவலர்களைத் தேடி வராமல் அலுவலர்களே மக்களின் குறைகளை நேரில் சென்று அறிந்து, அதனைத் தீர்க்க வேண்டும் எனும் முதல்வர் கலைஞரின் ஆணைக்கேற்ப மாதந்தோறும் இம்மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களாலும், மாவட்ட வருவாய் அலுவலராலும் குறுவட்ட அளவில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படுகிறது. அரசு அலுவலர்கள் மட்டுமல்லாமல் அப்பகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் ஆகியோர் முன்னிலையில் கூட்டம் நடத்தப்படுகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் மக்கள் குறையறியும் நாள் கூட்டம் நடத்தப்படுகிறது என்றாலே அப்பகுதிவாழ் மக்களிடையே தம் குறையெல்லாம் நீங்கிவிட்டாற் போன்ற மகிழ்ச்சி காணப்படும்.

சாரை சாரையாக ஆண்களும், பெண்களும் கையில் மனுக்களுடன் வருகை தருவார்கள். பெண்கள் தங்கள் கைக்குழந்தைகளுடன் இக்கூட்டத்தில் கலந்துகொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். குறைகளை தெரிவிக்க வருகைதரும் அவர்கள் அரசின் திட்டங்களை இங்கு அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடத்தப்படும் இக்கூட்டத்தில் பெறப்படும் மனுக்கள் மீதான கோரிக்கைகளை மனுதாரரிடம் உன்னிப்பாகக் கேட்டறிந்து நியாயமான கோரிக்கையாயிருந்தால் அவ்விடத்திலே முடிவு தெரிவிக்கப்படுகிறது; அம்மனுவில் பிரச்சினை இருந்தால் தொடர்புடைய அலுவலரிடம் ஒப்படைத்து 15 தினங்களுக்குள் மனுதாரர்களுக்குப் பதில் தெரிவிக்க மாவட்ட ஆட்சியரால் அறிவுறுத்தப்படுகிறது.

நலத்திட்டங்கள் கோரும் மனுக்கள் நியாயமாக இருந்தால் பரிசீலித்து, உடனடியாகக் கூட்டத்திலேயே நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும். இது தவிர, இக்கூட்டம் தொடர்பாக ஏற்கெனவே பெறப்பட்ட மனுக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

### நாட்றிந்த நலத்திட்டங்கள்

மேலும், இக்கூட்டத்தில் அனைத்துத் துறையைச் சார்ந்த அலுவலர்களும் தங்கள் துறையின்பால் செயல்படுத்தப்படும் திட்டங்கள், அதனைப் பெறும் வழிமுறைகள், தகுதிகள் ஆகியவற்றைக் குறித்து விரிவாக எடுத்துரைப்பார்கள். இதனைக் கேட்ட தகுதி வாய்ந்த மக்கள் பலர் உடனடியாக மனு எழுதி

> சமூகம் முழுவதும், கொண்டுள்ள இலட்சியத்தில் — உறுதியில், நிலைத்து நின்றால்தான் எந்தக் காரியத்திலேயும் வெற்றி பெறமுடியும்.
>
> – அறிஞர் அண்ணா

நலத்திட்டங்களைப் பெற விண்ணப்பிக்கின்றனர். 'இதுவரையில் இம்மாதிரியான திட்டங்கள் அரசிடம் உள்ளது, என்பது தெரியாமல் இருந்துவிட்டோம். இக்கூட்டத்தின் மூலம் இதனை அறிந்துகொண்டதால் நாங்களும் அரசின் திட்டங்களை அனுபவிக்க முடிந்தது' என்று மகிழ்ந்து செல்வர்.

கண்காட்சியில், 'தமிழரசின்' இலவச வார வெளியீடான 'அரசு செய்தி' சுவரொட்டிகள் ஆங்காங்கே வைக்கப்பட்டிருக்கும். குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்பு முறை, கற்றலின் இனிமை போன்ற வண்ணப்புகைப்படங்களும், மகளிர் நலம் பேணும் சமூக நலத்திட்டங்கள் அனைத்தும் ஓவியங்களாகத் தட்டிகளில் வரைந்து காட்சிக்கு வைக்கப்படும்.

மேலும், கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (டேக்ரா), கிராமப்புறச் சுகாதாரத் திட்டம், சிறுசேமிப்பு, அறிவொளி இயக்கம் போன்றவற்றைச் சித்தரிக்கும் படங்கள் மற்றும் மாடல்கள் வைக்கப்பட்டிருக்கும்.

புகையில்லா அடுப்புகள், சாண எரிவாயு ஆகியவற்றினால் விளையும் பயன்களை அடுப்புகள் அமைத்து, செயல்முறைகள் மூலம் விளக்கிக் காட்டப்பட்டு வருகின்றது. இதனால் பெண்களுக்குப் புகையிலிருந்து விடுதலையும் விழிகளுக்குப் பாதுகாப்பும் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

### எரிசக்தியின் பயன்

ஒவ்வொரு கட்டத்திலும் மக்கள் எரிசக்தியின் பயனை அறிந்துகொள்வதற்காகச் சென்னையிலிருந்து எரிசக்தி விளம்பர வாகனத்தை வரவழைத்து மக்களுக்குச் செயல்முறைகள் மூலம் விளக்கிக் காண்பிக்கப்படுகிறது. மேலும், வேளாண் பொறியியல் துறையின் மூலம் மண் பரிசோதனை வாகனம் வரவழைத்து மண் பரிசோதனைகளும் செய்யப்பட்டு அதற்கேற்ற ஆலோசனைகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.





காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும், அதன் நுழைவாயிலில் உள்ள அறிஞர் அண்ணா சிலையும்



அயோடின் கலந்த உப்பினை மக்கள் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்த – அயோடின் கலந்த உப்பினை எப்படிக் கண்டுபிடிப்பது என்பதும் செய்முறை மூலம் மக்களுக்குக் காண்பிக்கப்படுகிறது.

வேளாண் துறையின் சார்பில் வேளாண் இடுபொருட்கள், தரமான விதைகள் காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்படும் பொருட்கள் காட்சிக்கும், அந்நாளில் விற்பனைக்கும் வைக்கப்படும்.

அரசின் திட்டங்கள், சாதனைகளை அறியும் பொருட்டு 'தமிழரசு' இதழுக்கான சந்தாக்களும் சேகரிக்கப்பட்டு, சந்தாதாரர்களுக்கு முதல் பிரதி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் மேடையிலேயே வழங்கப்பட்டு வருகிறது.

### மருத்துவ முகாம்கள் மற்றும் 'விசிபி' படக்காட்சி

மாவட்டத்தில் நடைபெறும் அண்ணா மறுமலர்ச்சி திட்டத் தொடக்க விழா, 'நமக்கு நாமே' திட்டத் தொடக்க விழா, மற்றும் மக்கள் குறையறியும் நாள் கூட்டத்தில் மருத்துவ முகாம்கள் மற்றும் கால்நடை மருத்துவ முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன; நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு முந்திய நாளே மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. இம்மருத்துவ முகாம்களில் மக்கள் பெரிதும் பயன் அடைந்துள்ளனர்.

கால்நடைகளுக்குச் சிகிச்சை அளித்து தக்க மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. மேலும், நிகழ்ச்சி நடைபெறும் கிராமப் பகுதிகளில் 'வீடியோப்' படக்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அனைத்துத்துறையினரையும் ஒருங்கிணைத்து அரசின் நல்வாழ்வுத் திட்டங்கள் மற்றும் சாதனைகளைப் பாமரமக்களும் புரிந்துகொள்ளும் வகையில் செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகம் செயலாற்றி வருகின்றது.

●



சாதி முறையை நாம் எதிர்க்கிறோம் என்றால், பொருளாதார பேத நிலையை உண்டாக்கியதும், நிலைத்திருக்கச் செய்வதுமான கொடிய ஏற்பாட்டைத் தகர்க்கிறோம் என்று பொருள்; அதாவது சமதர்மத்திற்கான சூழ்நிலையை ஏற்படுத்துகிறோம் என்று அர்த்தம்.

**- அறிஞர் அண்ணா**



# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ், கடந்த இரண்டாண்டுகளில் ஏராளமான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன; அதன் விவரம் வருமாறு:

### வீட்டுமனைப் பட்டாக்கள்

1996-97ஆம் நிதியாண்டில் வீட்டுமனையற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு, இலவச வீட்டுமனை வழங்க, நிலம் கையகப்படுத்த ரூ.50 இலட்சம் பயன்படுத்தப்பட்டு, மொத்தம் 22 கிராமங்களிலுள்ள 1,849 பயனாளிகளுக்கு இலவச மாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

1997-98ஆம் நிதியாண்டிற்கு வீட்டுமனைப் பட்டா வழங்க, நிலம் கையகப்படுத்த ரூ.95 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதி இலக்கினை முழுவதுமாக எய்தியது மட்டுமல்லாமல், கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று மொத்தம் ரூ.1 கோடியே 4 இலட்சத்து 35 ஆயிரத்து 570க்கு நேரடி பேச்சுவார்த்தை மற்றும் நில எடுப்புச் சட்டம் 31/1978ன் படி நிலத்தைக் கையப்படுத்தி 32 கிராமங்களிலுள்ள 2,563 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை இலவசமாக வழங்கியது இம்மாவட்ட நிருவாகத்தின் மகத்தான சாதனையாகும்.

இதோடல்லாமல், மேற்கண்ட இடங்களுக்கு மனைப்பிரிவு தயாரிக்கப்பட்டு, அரசின் செலவிலேயே கற்கள் நடப்பட்டு, அக்கற்களில் மனையின் எண் எழுதப்பட்டு பட்டாக்கள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்க முன்னோடிச் சாதனையாகும்.

### மயானம் மற்றும் மயானப் பாதை வசதி

1997-98ஆம் நிதியாண்டில், ஆதி-திராவிடர்களுக்கு மயானம் மற்றும் மயானப்பாதை வசதி செய்து கொடுப்பதற்காக ரூ.1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதி ஒதுக்கீடு முழுவதுமாகச் செலவு செய்யப்பட்டதோடல்லாமல், கூடுதலாக நிதி ஒதுக்கீடு ரூ.2 இலட்சத்து 23 ஆயிரத்து 623, நிலம் கையகம் செய்யப் பயன்படுத்தப்பட்டு, 12 ஆதிதிராவிடர் கிராமங்களுக்கு மயானம் மற்றும் மயானப் பாதை வசதி செய்து தரப்பட்டுள்ளது.

### தையல் இயந்திரம்

1996-97ஆம் நிதியாண்டில், ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.2½ இலட்சங்களும், 1997-98ஆம் நிதியாண்டில் பயன்படுத்தப்பட்டு சிறந்த 'சிங்கர்' ரக தையல் இயந்திரங்கள் 129 ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப் பட்டன; தரமுள்ள தையல் இயந்திரங்கள் அதைப் பயன்படுத்தத் தெரிந்தவர்களுக்கு மட்டுமே வழங்கப் பட்டது குறிப்பிடத்தக்க செயலாகும்.

1997-98ஆம் நிதியாண்டில், இலவசத் தையல் இயந்திரம் வாங்குவதறகு 2½ இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியினைப் பயன்படுத்தி, தரம் வாய்ந்த 'உஷா' தையல் இயந்திரங்கள் தையல் இயந்திரங்கள் வாங்கப்பட்டன.

இந்தத் தையல் இயந்திரங்கள் வழங்க மாநிலத்திலேயே முன்னோடியாகத் தையல் இயந்திரம் கோரி விண்ணப்பித்திருந்தவர்களை நேரில் அழைத்து அவர்களுக்குத் தையல் இயந்திரத்தைப் பயன்படுத்தத் தெரிந்திருக்கிறதா என்பதைக் கண்டறிய மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், மாவட்டச் சமூகநல அலுவலர், மக்கள் குறை தீர்க்கும் குழுமம், துணை ஆட்சியர் ஆகியோர் அடங்கிய குழு அமைக்கப்பட்டு தையல் இயந்திரங்களை இயக்கத் தேர்ச்சி பெற்றவர்களின் உதவியுடன் நேரில் தைக்கச் செய்து, அதில் தகுதி வாய்ந்தவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குத் தையல் இயந்திரம் வழங்கப்பட்டது.

### இலவசச் சலவைப் பெட்டிகள்

1997-98ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட இலவசச் சலவைப் பெட்டிகள் அல்லாமல், மாவட்ட ஆட்சியர் அவர்களின் பரிந்துரையின் பேரில், பிரத்தியேகமாக 100 சலவைப் பெட்டிகள் கூடுதலாகப் பெற்று ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த சலவை யாளர்களுக்கு வழங்கப்பட்டன.

### கொத்தடிமை முறை ஒழிப்பு

இம்மாவட்டத்தில் தன்னார்வத்தொண்டு நிறுவனங் களைக் கொண்டு, 621 கொத்தடிமைத் தொழிலாளர்கள் கண்டறியப்பட்டிருந்தனர். இதில் 136 கொத்தடிமைத் தொழிலாளர்கள், கொத்தடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, அவர்களுக்கு உடனடி நிவாரணத் தொகையாகத் தலா ரூ.1,000 வீதம், ரூ.1 இலட்சத்து 36 ஆயிரமும் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு தலா ரூ.9 ஆயிரம் வீதம், ரூ.13 இலட்சத்து 60 ஆயிரமும் வழங்கப்பட்டுள்ளன. 84 குழந்தைத் தொழிலாளர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்பப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு இலவசமாக நோட்டுப் புத்தகங்கள, பாடப்புத்தகங்கள் வழங்கப் பட்டுள்ளன. இவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு, மருத்துவச் சிகிச்சையும் அளிக்கப்பட்டது.



மாவட்ட ஆட்சியர் திரு.இறையன்பு முயற்சியில்

## அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனைக்குப் புதிய நவீனக் கருவிகள்

குடல் நுண்ணோக்கி [கேஸ்ட்ராஸ்கோப்] தொண்டை மற்றும் வயிற்றுப் பகுதியின் ஏதாவது புண் அல்லது கட்டி இருப்பின் அதை உடனடியாக கண்டுபிடிக்க உதவும் ஜப்பானியக் கருவி அரசு வழங்கிய நிதியுதவி ரூ.3.5 இலட்சத்தில் வாங்கப் பட்டுள்ளது.

ஒரு இந்தியத் தயாரிப்பான ''சிகிச்சை திட்டமிடும் கருவி'' [ட்ரீட்மென்ட் பிளானிங் சிஸ்டம் – ஆன்கோபினான்] விலை ரூ.13.50 இலட்சம் செலவில் அரசால் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கருவி ரேடியோதெரபி சிகிச்சையின் அளவை தீர்மானிக்க பெரிதும் உதவும்.

காமா கேமரா ''பிளானர் புற்றுநோய் இருப்பதை முன்னதாக கண்டறியும் கருவி'' எலும்பு, கல்லீரல், கணையம், நுரையீரல், இதயம், மூளை ஆகிய பகுதிகளில் புற்றுநோய் வருவதை முன்னதாகவே கண்டுபிடித்து அதற்கான சிகிச்சையை உடனடியாகத் தொடங்குவதற்கு உதவும் கருவி ஒன்று ரூ.43 இலட்சத்தில் மும்பை போர்டு ஆப் ரேடியேஷன் மற்றும் ஐசோடோப் டெக்னாலஜி [அணுசக்தித்துறை நடுவனரசு] மூலம் நன்கொடையாகப் பெறப்பட்டுச் சீரிய முறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### ஆதிதிராவிடர் நல விடுதிகள்

1996-97ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில், 55 ஆதிதிராவிடர் நல மாணவர்கள் விடுதிகளும் 17 ஆதிதிராவிடர் நல மாணவியர்கள் விடுதிகளும் மொத்தம் 72 ஆதிதிராவிடர் நல விடுதிகள் இயங்கிவந்தன.

இந்த விடுதிகளில் முறையே 3,296 ஆதிதிராவிடர் மாணவர்களும், 894 ஆதிதிராவிடர் நல மாணவிகளும் மொத்தம் 4,190 பேர்கள் தங்கிக் கல்வி பயின்றனர்.

1997-98ஆம் ஆண்டில், (பிரிக்கப்பட்ட காஞ்சிபுரம் மாவட்டத்தில்) 30 ஆதிதிராவிடர் நல மாணவர்கள் விடுதிகளும், 9 ஆதிதிராவிடர் மாணவியர்கள் விடுதிகளும் மொத்தம் 39 விடுதிகள் இயங்கி வருகின்றன.

இந்த விடுதிகளில் முறையே 1,614 ஆதிதிராவிடர் இன மாணவர்களும், 521 ஆதிதிராவிடர் இன மாணவியர்களும், மொத்தம் 2,135 பேர்கள் தங்கிக் கல்வி பயின்று வருகின்றனர்.

1997-98ஆம் நிதியாண்டில் "பெருநகர்" என்ற இடத்தில் 50 மாணவர்கள் தங்கிப்பயில விடுதி ஒன்று புதிதாகத் திறக்கப்பட்டது.

இக்கல்வியாண்டில், மதுராந்தகம் வட்டத்தைச் சேர்ந்த அச்சிறுபாக்கம் மாணவர் விடுதியில் தங்கிக் கல்வி பயின்ற 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் அனைவருமே தேர்ச்சி பெற்றது, குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

### ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள்

ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1996-97ஆம் ஆண்டில் , 70 ஆரம்பப்பள்ளிகளும், 6 நடுநிலைப்பள்ளிகளும், 6 உயர்நிலைப்பள்ளிகளும், 2 மேல்நிலைப்பள்ளிகளும் சேர்ந்து, ஆகமொத்தம் 84 ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் இயங்கி வந்தன.

1997-98ஆம் ஆண்டில் பிரிக்கப்பட்ட இம்மாவட்டத்தில், 65 ஆரம்பப் பள்ளிகளும், 10 நடுநிலைப் பள்ளிகளும், 7 உயர்நிலைப் பள்ளிகளும், 2 மேல்நிலைப் பள்ளிகளும் ஆகமொத்தம், 84 ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள் இயங்கி வருகின்றன.

இந்தக் கல்வியாண்டில் மொத்தம் 5 ஆரம்பப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்டன. சென்ற கல்வியாண்டில் 'தையூர்' நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

### நீள இருக்கைகள் கொண்ட சாய்வு மேசைகள்

இம்மாவட்டத்தில் 1997-98ஆம் ஆண்டில், இத்துறையைச் சேர்ந்த, மீனம்பாக்கம் மற்றும் தையூர், உயர்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 35 ஆயிரம் செலவில் நீள இருக்கைகள் கொண்ட சாய்வு மேசைகள். வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

### கணினி

ஆதிதிராவிடர், மாணவ/மாணவியர்கள் பயன்பெறும் வகையில், இம்மாவட்டத்தில், கீழ்க்கண்ட 3 பள்ளிகளுக்கு 1997-98ஆம் நிதியாண்டில் 'கணினிகள்' பொருத்தப்பட்டு, அதற்கான வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

- ☐ ஈஞ்சம்பாக்கம் (ஆதிந) மேல்நிலைப்பள்ளி
- ☐ நூகல்கேணி (ஆதிந) மேல்நிலைப்பள்ளி
- ☐ கிளாம்பாக்கம் (ஆதிந) உயர்நிலைப்பள்ளி



# வாசகர் இதயம்

தருமபுரி மாவட்டச் சிறப்பிதழில் வெளியிட்ட செய்திகள் அனைத்தும் அருமை.

- டி.எஸ்.சேகர்,
தென்கடப்பந்தாங்கல்

போராட்டங்கள் பற்றிய கலைஞரின் விமர்சனம், காமராசர் பற்றி அறிஞர் அண்ணா கூறியவை மிகச் சிறப்பாக இருந்தன.

- பி.ஏ.வதூத்,
மேட்டுப்பாளையம்.

தருமபுரி மாவட்டச் சிறப்பிதழில் மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகள் கல்வி, கலை, இலக்கியம், வரலாறு, தொழில், வேளாண்மை ஆகிய அம்சங்களைப் படத்துடன் வெளியிட்டு, அம்மாவட்டத்தின் சிறப்பை அறியச் செய்தீர்கள்.

- ப.முருகேச பாண்டியன்,
கரப்பாடி, பொள்ளாச்சி வட்டம்.

அரசின் சாதனைகளுக்குத் திருவாரூர் மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள நல்ல பல செயல் திட்டங்கள் தமிழ்நாடு அரசின் தன்னிகரற்ற சாதனைகளுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாய் விளங்கின.

- கே.பிரஷ்னேவ்
வாகைக்குளம்

கலைஞர் அவர்கள் நபிகள் நாயகத்தின் சம்பவத்தை மையமாக வைத்து இன்றைய அரசியலை விமர்சித்தது நன்றாக இருந்தது.

- மு.முஸ்தாபா,
இராமேஸ்வரம்

அரசு ஏடே ஆயினும், பல அரிய செய்திகளை வெளியிட்டுவரும் 'தமிழரசை' மனமார வரவேற்கின்றோம்.

- கோ.நேரு,
ஏரவாடி.

தமிழரசில் வெளியான 'சேமிப்போம்' - சொல்லோவியம் கவிதை, 'வாழிதோழி' - அழகு தமிழில் ஆகியவை எளிய நடையில், அமைந்திருந்தன. இதேபோல இலக்கியக் கட்டுரைகள், கவிதைகள் தொடர்ந்து வெளியிட வேண்டுகிறேன்.

- கவிஞர் இடிமுரசார்,
சென்னை-5.

'தமிழரசு ஆகஸ்ட் இதழில் - பார்புகழும் பன்னிருவர்' என்ற தலைப்பில் வெளிவந்திருந்த கட்டுரை நிறைய விவரங்களை உள்ளடக்கியதாக இருந்தது.

- இரா.சுப்பிரமணியம், வாகைக்குளம்.



# பட்டு வளர்ச்சி

பட்டு நெசவுத் தொழிலில் சிறந்தோங்கி விளங்கும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பட்டு வளர்ச்சித் துறையின் திட்டங்கள் விரைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**மல்பரி விரிவாக்கம்**

கிராமப்புறத் தனியார் பட்டு விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர, அவர்களைப் பட்டுத் தொழிலில் ஈடுபடுவதற்கு ஊக்கப்படுத்தி 1996-97ஆம் ஆண்டு 5.75 ஏக்கர் பரப்பளவில் புதிய மல்பரி நடவு செய்யப்பட்டது 1997-98ஆம் ஆண்டு 10.50 ஏக்கர் ஏக்கர் பரப்பளவில் புதிய விவசாயிகள் பட்டுத் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டனர்.

**'தாட்கோ' திட்டம்**

காஞ்சிபுரம் மாவட்டம் - மதுராந்தகம் வட்டத்தில் ஜமீன் என்டத்தூர் கிராமத்தில் 'தாட்கோ திட்டத்தில் இரண்டு தனியார் பட் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி உதவித் தொகையாகத் தலா ரூ.500 வீதம் மொத்தம் 1,000 (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) 1997-98ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. பயிற்சி முடித்த 2 விவசாயிகளுக் வங்கிக் கடனுதவி அடிப்படையில் மானியம் மற்றும் விளிம்புத் தொகை ரூ.32,250 வழங்கப்பட்டுள்ளது.

**அலகுகள்**

**பட்டு விவசாயிகள் பயிற்சி மையம்**

இம்மையத்தில் தனியார் பட்டு விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பதுடன் பட்டுப் புழு வளர்ப் செய்து 1996-97ஆம் ஆண்டு 2 கிலோ பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1997-98ஆம் ஆண்டில், 202 கிலோ பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்து, காஞ்சிபுரத்தில் அரசு பட்டுக்கூடு அங்காடியில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும் இம் மையத்தின் மூலம் ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த 5 தினக்கூலிப் பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.



காஞ்சிபுரம் மாவட்டம் ஜபங்கார் குளத்தில், அரசு உதவி பெற்றுப் பயனாளிகளே கட்டியுள்ள வீடுகள்






காஞ்சிபுரத்தில் உள்ள அரசு தலைமை பொது மருத்துவமனை

**அரசு பட்டுக்கூடு அங்காடி**

தனியார் பட்டு விவசாயிகளால் உற்பத்தி செய்து எடுத்துவரும் பட்டுக்கூடுகள் இம்மையத்தின் மூலம் கொள்முதல் செய்யப் படுகிறது. 1996-97ஆம் ஆண்டில் 321 கிலோ பட்டுக்கூடுகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. 1997-98ஆம் ஆண்டில் 1337 கிலோ கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. □

# கூட்டுறவு மேம்பாடு

காஞ்சிபுரம் மாவட்டக் கூட்டுறவுத்துறை, பயன்மிக்க வகையில் பாடுபட முன்வருவோருக்கெல்லாம் பாகுபாடின்றிக் கடன் வழங்கும் பெருமை பெற்றுள்ளது.

காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து நிதிஉதவி பெற்று இம்மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் இந்த இரண்டு ஆண்டுகளில் 41,636 அங்கத்தினர்களுக்கு ரூ.52 கோடி அளவுக்குக் குறுகிய கால வேளாண்மைக் கடனும், 1,576 அங்கத்தினர்களுக்கு ரூ.1.40 கோடி அளவுக்கு மத்திய கால வேளாண்மைக் கடனும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக 31,018 அங்கத்தினர்கட்கு ரூ.32 கோடியும் காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளைகள் மூலமாக 54,856 நபர்கட்கு ரூ.57 கோடியும் நகைக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**நகையீட்டுக் கடன்**

இம்மாவட்டத்தில் உள்ள 5 பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலமாக ரூ.16.20 கோடி அளவுக்கு வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த காரியங் களுக்கு நீண்டகாலக் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வங்கிகள் மூலம் நகைக்கடனாக ரூ.12.72 கோடி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இம்மண்டலத்தில் உள்ள 5 கூட்டுறவு நகர வங்கிகள் மூலமாக 63,092 நபர்கட்கு ரூ.50.39 கோடி நகையீட்டுக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகச் சிறுதொழில் மற்றும் குடிசைத்தொழில் கடனாக 4,476 பேர்கட்கு ரூ.5.07 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. மத்தியக் கூட்டுறவு வங்கி மூலமாகச் சிறுதொழில் மற்றும் குடிசைத்தொழில் கடனாக

18 நபருக்கு ரூ.69.51 இலட்சம் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலமாக 700 நபர்களுக்கு ரூ.9.52 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக ரூ.15.49 கோடி மதிப்புள்ள 13,903 மெ.டன் இரசாயன உரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

இம்மண்டலத்தில் உள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக ரூ.1.20 கோடி மதிப்புள்ள வேளாண் பொருட்கள் கொள்முதல் செய்து விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும் இம்மண்டலத்தில் செயல்படும் நியாயவிலைக் கடைகள் மூலமாக ரூ.161.33 கோடி மதிப்புள்ள கட்டுப்பாட்டுப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் மூலமும் பண்டகசாலைகள் மூலமும் ரூ.39.26 கோடி பெறுமானமுள்ள கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மருத்துவர் மற்றும் பொறியாளர்களுக்குச் சுயதொழில் துவங்கிட நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக 93 நபர்களுக்கு ரூ.1 கோடியும் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மூலமாக 1 நபருக்கு ரூ.92 ஆயிரமும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

### ஆதிதிராவிடர்க்குக் கடனுதவி

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் அதிதிராவிட இனத்தவரை அங்கத்தினர்களாகச் சேர்த்து பங்குத்தொகைக்கு நிதிஉதவி வழங்கும் திட்டத்தின்கீழ் 1,500 நபர்களுக்கு தலா ரூ.100 வீதம், ரூ.1.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் ஆதிதிராவிட அங்கத்தினர்களின் கடன் வாங்கும் தகுதியினை உயர்த்தும் பொருட்டு வட்டியில்லாப்பங்கு மூலதனக் கடனாக 750 நபருக்குத் தலா ரூ.250 வீதம் ரூ.1.87 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவு நகர வங்கிகள் மூலமாக 142 ஆதிதிராவிட அங்கத்தினர்களுக்கு ரூ.71 ஆயிரம் வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை நிறைவேற்றும பொருட்டு 1997-98ஆம் நிதியாண்டிற்கு இம்மண்டலத்தில் செயல்படும் மூன்று தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு (முத்தியால்பேட்டை, வாலாஜாபாத், திருக்கழுக்குன்றம்) நவீன வசதிகளுடன்கூடிய வங்கிக்கட்டடம் கட்ட தலா ரூ.8.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.25.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதில் மானிய நிதி உதவியாகத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் (தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதி, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து) தலா ரூ.2.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.7.50 இலட்சம் மானியமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மேற்படி வங்கிகளுக்கு நவீன வங்கிக் கட்டடம் கட்ட கட்டுமானப்பணிகள் துவங்கப்பட உள்ளது.

### நியாய விலைக் கடைகள்

இம் மாவட்டத்தில் 1997-98ஆம் நிதியாண்டிற்கு 50 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குப் பாதுகாப்புக் கதவுகளுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்டுதல் பணிக்காகப் பதிவாளரால் தெரிவு செய்யப்பட்டு அனுமதியளிக்கப்பட்டது. இதில் ஜூலை 98 முடிய 44 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு முதல் கட்டமாகப் பாதுகாப்பு அறைகள் கட்டும் பணிகள் துவக்கும் தருவாயில் உள்ளன.

இம்மாவட்டத்தில் தற்போது 1,225 நியாயவிலைக் கடைகள் இயங்கிவருகின்றன. இதில் 831 முழுநேரக் கடைகளும், 394 பகுதிநேரக் கடைகள் ஆகும். கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் பொதுமக்களின் நலன்கருதி 26 முழு நேரக்கடைகளும், 18 பகுதிநேரக் கடைகளும் பதிவாளர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவரின் அனுமதியின்படி, திறக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் மட்டும் இதுவரையில் 29 நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடங்கள் கட்டத் திட்டமிடப்பட்டு 11 நியாயவிலைக் கடைகளுக்குப் புதியதாகக் கட்டடம் கட்டித் தரப்பட்டுள்ளது. □



காஞ்சிபுரம் மாவட்டத்தில், சட்டபுறம்பாக மணல் அள்ளிய 243 லாரிகள் பிடிக்கப்பட்டன.

அரசு இடத்தில் இருந்த ஆக்கிரமிப்பு கட்டடங்கள் பல இடிக்கப்பட்டு சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளன.



உலகத்தமிழாராய்ச்சி நிறுவனமும், சென்னைப் பல்கலைக் கழகத்

தமிழ் இலக்கியத் துறையும், டாக்டர் மா.இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையமும்

இணைந்து நடத்திய 'திராவிட இயக்க இதழ்கள்' கருத்தரங்கில்

படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை...

# 'திராவிட நாடு' – கிழமை இதழ்



திராவிடம் என்பது தென்னிந்தியப் புவிப்பரப்பைக் கொண்டது. இன்றைய தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்கள் அடங்கிய நிலப்பகுதி திராவிட நாடு ஆகும்.

### திராவிடத்தின் சிறப்பு

'மனித இனத்தின் தொட்டில், தென்னிந்தியா' என சர்.ஜான் எவான்ஸ் என்பவரும் திராவிடத்தின் தெற்கில் கடலடியில் மூழ்கிய இலெமூரியாதான் முதல் மனிதன் பிறந்த நிலம் என ஆராய்ச்சியாளர் பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த மனிதன் உணவுக்கு அலைந்தான் – வேட்டையாடினான் – உடுக்கப் பழகினான் – குடியிருப்புக் கண்டான்; கூடி வாழவும், உழவுத் தொழில் செய்யவும் முற்பட்டான்; சமையல் பழகினான் – கருவிகள் செய்தான். தமிழ் பிறந்தது – வரி வடிவம் பெற்றது, சமுதாய வாழ்வை அமைத்தான். அரசு கண்டான்; நாகரிகம் பிறந்தது; வாணிகம் வளர்ந்தது; வளம் கொழித்தது; முத்தமிழ் முழங்கிற்று. அவன் உலகோருக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கினான். இவ்வாறாகத் திராவிடத்தின் சிறப்புகளைப் பேராசிரியர் க.அன்பழகன் 'உலக அரங்கில் நாம்' – என்ற கட்டுரையில் (திராவிட நாடு 6–8–1961) விளக்கியது குறிப்பிடத்தக்கது. அவர் அக் கட்டுரையில் மேலும் குறிப்பிடுவது வருமாறு:

'தென்னக மொழிகளிலேயே பிறமொழிகள் துணையின்றியே தனித்து வளரும் ஆற்றல் பெற்றுள்ள தமிழ்தான் உலகிலேயே மிகப்பழைய மொழி என்பதும், திராவிட மொழிகட்கே மூலமாய் அமைந்தது என்பதும் மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரனார் பாடிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடற்பகுதிகளால் உணரலாம்' – என்பதாகும்.

ஏழாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பே சிறப்புற்றிருந்த ஹாரப்பா, மொகன்சதாரோ நகரச் சிந்து சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகமேயாகும் என சர்.ஜான் மார்ஷல் உலகறியச் செய்தார். தவத்திரு ஹீராஸ் பாதிரியார், தமிழ் சிந்து சமவெளிப் பகுதியில் பயன்படுத்தப் பெற்றிருக்கிறது என்ற உண்மையைக் கண்டுபிடித்துக் கூறினார்.



– முனைவர் ஏ.விவேகானந்தம்
தமிழ்ப் பேராசிரியர்.
மாநிலக் கல்லூரி, சென்னை.

### திராவிடம்

வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் இனம், அரசு இழந்து சாதி சமயப் பிரிவுகளால் பிளவுபட்டுத் தாழ்வுற்றது ஏன்? சீரழிக்கப் பெற்றது எவ்வாறு? மீண்டும் தலையெடுக்க முடியாதபடி ஆனதற்குக் காரணங்கள் யாவை? இக்கேள்விகளுக் கெல்லாம் மொத்த விடையாக உருவானதுதான் திராவிட உணர்வு.

திராவிட உணர்வு கொண்டவர்கள் ஒன்றுகூடிக் கண்டதுதான் 'திராவிட இயக்கம்'. கீழ்க்காணும் வகையில் தொகுத்துச் சொல்வது இவண் தேவையானது ஆகும்.

பின்னணி: திராவிடர்களின் அடிமை வாழ்வு; பிறப்பால் ஏற்றத்தாழ்வு; அதாவது, சாதிப்பிரிவுகள்; சமூகப் பொருளாதார மற்றும் பண்பாட்டுச் சிதைவு; வேற்றுமொழி ஆதிக்கம்;




மூடநம்பிக்கைப் பழக்க வழக்கங்கள்; பெண்ணடிமை; எல்லா இழிவுகளுக்கும் மூல காரணமாக விளங்கும் கடவுள் பெயரால் உண்டாக்கிய அநீதிகள்.

— திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அமைப்புகளின் வரலாறு திராவிட இயக்க வரலாறாக அழைக்கப் பெறலாயிற்று.

## திராவிட இயக்க இதழ்கள்

ஏராளமான இதழ்கள் தோன்றின. ஏறத்தாழ அறுபது இதழ்கள் திராவிட இயக்கத் தோழர்களால் நடத்தப் பெற்றிருக்கின்றன என்று 'கதிர்' இதழ் ஆசிரியராக விளங்கிய ப.புகழேந்தி பட்டியலிட்டுள்ளார். 'அண்ணா—இதழாசிரியர் ஓர் ஆய்வு' — என்னும் டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு நிகழ்த்திய மு.கோவிந்தராசலு திராவிட இயக்க இதழ்களின் எண்ணிக்கை 93 என வரையறுத்துள்ளார். தமிழகத்தில் தோன்றியவை அல்லாமல் கடல்கடந்த நாடுகளிலும் திராவிட இயக்க இதழ்கள் வெளியாகி யிருக்கின்றன. ஏறத்தாழ இருநூறு இதழ்கள் இருந்துள்ளன எனப் பேராசிரியர் இரா.இளவரசு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இத்தகைய எழுச்சி காரணமாகத் தமிழகத்தில் பகுத்தறிவுச் சிந்தனைகளுடன் கூடிய மறுமலர்ச்சி ஏற்பட்டது. எல்லாவற்றுக்கும் மேலாகப் பத்திரிக்கை படிப்போரின் தொகை முன்பு எப்போதையும்விட மிக வேகமாக அதிகரித்தது.

விடுதலை, திராவிட நாடு, தீப்பொறி, போர்வாள், திராவிடன், மன்றம், முரசொலி, தனியரசு, நம்நாடு, மாலைமணி, தென்றல், அறப்போர், தென்னகம், திராவிடமணி முதலானவை குறிப்பிடத்தக்க திராவிட இயக்க இதழ்களாகும்.

இவ்விதழ்கள், அவற்றை நடத்திய ஆசிரியர்கள் முதலான தகவல்கள் அவ்வப்போது திராவிட நாடு இதழ்களில் வெளியாகியுள்ளன.

"இருட்டடிப்புக்கு ஆளாகி இருந்த திராவிட இயக்கம் இன்று ஓரளவுக்குப் பொதுமக்களின் செல்வாக்குப் பெற்றிருப்பதற்குக் காரணம் மற்ற இதழ்களின் துணையைப் பெறாத நிலையை அறிந்து, நாமே இயக்க ஏடுகள் சிலவற்றையேனும் நடத்தி வருவதுதான்" (திராவிட நாடு 4.11.1956) — என்ற அண்ணாவின் வாசகம் இத்தகைய இதழ்களின் பணியை மதிப்பிடுகின்றது.

மக்கள் தொடர்புச் சாதனங்கள், மனிதனின் உள்ளத்தைப் பண்படுத்த வேண்டும். அவர்களின் அறிவு வளர்ச்சிக்குத் துணைபுரிய வேண்டும். மனித சமூகத்தின் பண்பாட்டைச் சிதைத்துச் சீரழிக்காமல் இருக்கவேண்டும். நாட்டின் மாண்பை உயர்த்தக்கூடிய விதத்தில் கலை இலக்கியங்களை வளமுறுத்தவேண்டும். மொழி மலர்ச்சியும் இலக்கிய வளர்ச்சியும், சமூக மறுமலர்ச்சியும் அரசியல் விடுதலை எழுச்சியும் காலவேகத்தில் நாட்டில் தலையெடுத்தபோது ஆற்றலும் ஆர்வமும் அக்கறையும் பெற்றிருந்த திராவிட இயக்கத்தினர் வழிகாட்ட முற்பட்டதும் வளம்படுத்த, தங்களால் இயன்றதைச் செய்து சாதனை புரிந்ததும் தாங்கள் நடத்திய சிறு சிறு பத்திரிகைகள் வாயிலாகத்தான் என்பது உறுதியாகிறது. 'திராவிட இயக்கப் பத்திரிகையாளர் சங்கம்' என்ற பெயரில் ஓர் அமைப்பு இருந்தது என்கிறார் 'கதிர்' ஆசிரியர் ப.புகழேந்தி. விடுதலை ஆசிரியர் குத்தூசி குருசாமி —தலைவர்; புலவர் கு.செல்வராசு—செயலர்; பெரியார், அண்ணா, பாரதிதாசன் ஆகியோர் — ஆலோசகர்கள். கலைஞர், பேராசிரியர், டார்பிடோ ஜனார்த்தனம் முதலானோர் — செயற்குழு உறுப்பினர்கள் — என்ற நிலைகளில் பல முன்னணித் தலைவர்கள் பங்குகொண்டு பணியாற்றியிருக் கிறார்கள். இச்செய்தி, திராவிட இயக்க வளர்ச்சிக்கு யார் யார் எப்படியெப்படிக் காரணமாக இருந்துள்ளார்கள் என்பதைத் தெளிவு செய்கிறது.

திராவிட நாடு இதழ்: வடிவமைப்பு: அட்டை; படம்; கவிதை; தலையங்கம்; திறனாய்வு; கருத்து விளக்கம்; கட்டுரை; செய்தி; கழக நடவடிக்கைகள்; மடல்; கதை; துணுக்கு; பயணக் குறிப்புகள்; கேட்டீரா செய்தி; அந்திக் கலம்பகம்; ஊரார் உரையாடல்; நாடகம்; பெட்டிச் செய்திகள்; அறிவிப்பு; மறுப்புரை — முதலானவை குறிப்பிடத்தக்கவை.



முதல் இதழ்:

தனிப்பிரதி ஒரு அணா — ஆண்டுச் சந்தா ரூ.5 — ஞாயிறு வெளியீடு — திராவிட நாடு

ஆசிரியர் : சி.என்.அண்ணாதுரை

**'தமிழுண்டு தமிழ் மக்களுண்டு — இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு'**
— (பாரதிதாசன்)

மலர்:1 இதழ்:1 8—3—1942

பாரதிதாசனுடைய கவிதை வரிகளுடன் முதல் இதழ் தொடங்குவது மிகவும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. பாரதிதாசனைப் பற்றி அண்ணா 'திராவிட நாடு' இதழ் ஒன்றில் (4—3—1956).

"இதய நாதத்தையும் இயற்கை எழிலையும், தமிழ்ப் பண்பையும் கலைச்செறிவினையும் கண்டறிந்து கவிதை வடிவாக்கித் தரும் பாரதிதாசனுக்கு..." என்று எழுதிய சொற்கள் மதிப்பு வாய்ந்தவை; பொருள் பொதிந்தவை. எவ்வளவு நாள்கள் உரையாடியிருப்பார்? எவ்வளவு தமிழின் மாண்பினை உணர்ந்திருப்பார்? அத்தகைய புரட்சிக் கவிஞர் மறைந்தபோது அண்ணா, இந்தி எதிர்ப்புப்போர் காரணமாகச் சிறையில் இருந்தார், அங்கு அவர் அடைக்கப்பெற்றிருந்த அறையில் யாரோ ஒருவர் எழுதிவைத்த 'சுவர் இலக்கியம்' ஒன்றினைக் குறிப்பிடுகிறார். அக்குறிப்பு யாதெனின்,

**"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை — எமை**
**மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!"**

— என்பதாகும்.

திராவிட நாடு இதழ் எப்படிப்பட்ட இதழ்? அதன் ஆசிரியர் பேரறிஞர் அண்ணா எத்தகைய எழுத்தாளர்? இவ்வினாக்களுக்கு விடை காண, திராவிட இதழ் ஒன்றில் அதன் ஆசிரியர் வழங்கிய கருத்துரை துணை செய்யக்கூடியதாக அமைந்துள்ளது. அக்கருத்துரை வருமாறு:

எழுத்தாளர்களின் எண்ணிக்கை பெருகினால் போதாது. அவர்களுடைய கருத்துக்கள் மக்களிடையே மனமாற்றத்தை உண்டாக்க வேண்டும் என்ற ஆவல் அவருடைய இதழ் நோக்கத்தைப் பறைசாற்றுகிறது.

> நல்லறிவாளர்களின்
> கருத்துரைகளையும்,
> நல்லுரைகளையும் நாட்டின்
> சாமனியர்களின் — ஏழை
> எளியவர்களின் — பாமர மக்களின்
> கருத்தோட்டத்தையொட்டிச் சிறிது
> விமர்சனம் செய்ய முற்படுவது நல்லதும் —
> நாட்டிற்கு நன்மை பயப்பதுமாகும்
> என்றே நம்புகின்றேன்.
> **— அறிஞர் அண்ணா**

'திராவிட நாடு' இதழின் எல்லாப் பக்கங்களையும் வாரந்தோறும் அண்ணாவே எழுதி நிரப்பினார். ஓர் இதழில் பல்வேறு ஆசிரியர்கள் செய்ய வேண்டிய வேலைகளை அவர் ஒருவரே செய்தார். அரசியல் விமர்சனங்கள் எழுதினார்; கேலிச்சித்திரங்கள் தீட்டினார்; ஓரங்க நாடகங்களை உருவாக்கினார்; சிறுகதைகள் எழுதினார்; தொடர்கதைகள் தீட்டினார்; கவிதைகளைக் கூட அவர் விட்டுவைக்கவில்லை. திராவிடர் கழகத்தை விட்டு விலகி, 1949இல் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்த வரை, முழுப்பத்திரிக்கையிலும் அவரே எழுதி நிரப்பினார் என, ப.புகழேந்தி குறிப்பிடுவது முற்றிலும் உண்மையாகும்.

இதழ் நடத்துவது குறித்து மாற்றார் பேசிய குற்றங்களை எடுத்துக்காட்டி, அண்ணா 'திராவிட நாடு' இதழில் (21.7.1957) எழுதுவதாவது:

"அலைந்து திரிந்துவரும் இவன் ஒரு இதழ் நடத்த வல்லனா, என்ற எளனக்குரல் எழுப்பியோர் எத்துணைப் பேர்? — இவன் எம்.ஏ. படித்தால் போதுமா, தமிழ் இலக்கண இலக்கியம் அறிவானோ! என்று எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசியோர் எவ்வளவு பேர்? ஈராறு திங்கள் நடமாடி, பிறகு சுனை கட்டி இருமி, இருக்குமிடம் தெரியாது போகும் என்று சாபமளித்தோரும் உண்டே! எதுகை மோனை போதுமா? எண்ணத்திலே ஒரு புதுமை, எழுதுவதிலே ஒரு தெளிவு இருத்தல் வேண்டாமா? — அஃது இவன் பெறுதல் ஆகுமோ? என்று தலை அசைத்துப் பேசினோரின் தொகை மட்டும் சிறிதா?"

—இக்குறிப்பு எவ்வளவோ வினாக்களுக்கு விடையாகி நிற்கிறது. இக்குறிப்பு ஒன்றே போதும் அவர் இதழ் நடத்திய ஆற்றலைத் தெளிவுபடுத்துவதற்கு.

அண்ணா ஆற்றிய பிற பணிகளைவிட இதழ்ப்பணி சிறந்து விளங்குவதற்குக் காரணம், அவருக்கு எல்லாத் திறங்களும் இதழ்களில் ஒரு சேர நின்று நிலவியதேயாகும். திராவிட நாடு இதழ்களில் அவர் வடிவமைத்தெழுதிய இலக்கிய வடிவங்களுள் சிறந்த வடிவமாக விளங்குவது எது?

ஒவ்வொரு வடிவமும் சிறந்து விளங்குகின்றது என்றே கூறவேண்டும். அந்திக் கலம்பகம், ஊரார் உரையாடல், கேட்டீரா செய்தி? — முதலானவை இன்றைக்கும் சில பெரிய வார இதழ்களில் வெவ்வேறு பெயர்களில் எழுதப்பெற்று வருகின்றன.

ஆனந்த விகடன்... 'அறு... அக்கா...ஆன்ட்டி'' என்ற தலைப்பிலும் — குமுதம் 'செல்ஃபோன்' என்ற தலைப்பிலும் எழுதிவருவதும் அவற்றை வாசகர்கள் விரும்பிப் படிப்பதும் கருத்தில் கொள்ளத்தக்கவை.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் அண்ணா வடிவமைத்துக் கொடுத்த உத்தி இன்றைய இதழாளர்களுக்குக் காசு சேர்க்கவும் உதவுகின்றது. அண்ணா விரும்பியது போல மறுமலர்ச்சிக்காக எழுதக்கூடிய 'நிலை எழுத்தாளர்கள்' தமிழகத்தில் இல்லையே என்ற ஏக்கத்தை ஏற்படுத்துகின்றது.

பெரும்பாலும் மக்களிடையே நிலவி வந்த மூடநம்பிக்கைகளை எடுத்துக்காட்டி, மக்கள் அவற்றைக் களைந்து பகுத்தறிவு வழி நிற்கவேண்டும் என்ற முயற்சியில்

எழுதப்பட்டவைகளோ மிகுதியாக உள்ளன. கடவுள் பெயரால் நிகழும் அநீதிகள், புராணங்களின் வழி அறிவை அடகுவைத்து வாழும் அவல நிலைகள், அவற்றுக்குக் காரணமாக விளங்கும் சமய நூல்கள் ஆகியவற்றைக் கண்டித்து எழுதிய பகுதிகள் ஏராளம். அறிவியல் கண்ணோட்டம் மக்களிடையே பரவ வேண்டும் என்றும், உழைத்துப் பிழைக்க வேண்டும் என்றும், கூடி வாழ்தல் வேண்டும் என்றும் எழுதுவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டு கட்டுரைகள் விமர்சனங்கள் முதலானவை எழுதப்பெற்றன. 'தீ பரவட்டும்' என்ற தலைப்பில் எழுதியவை தனி நூலாக வெளிவந்துள்ளது. 'ஆரிய மாயை' எழுதியதற்காக அரசாங்கம் அண்ணாவுக்குச் சிறைத்தண்டனை வழங்கியது.

'திராவிட நாடு' இதழில் அண்ணா தீட்டிய நாடகங்கள் புகழ் வாய்ந்தவை.. 'சந்திரோதயம்' என்னும் புகழ் பெற்ற நாடகத்தை எழுதி தாமே பங்கேற்று நடத்திய அனுபவம் அவருக்குண்டு. இன்னும் சொல்லப்போனால் அவருக்கிருந்த நடிகப்பித்து வேறு எந்தத் தலைவருக்கும் இந்த அளவிற்கு இருந்திருக்குமா என்பது ஐயத்திற்குரியதாகும். உரையாடல், கதைகளின் இடையே, உள்நாடகங்கள், இராச்சிய சபை பேச்சுக்கள் முதலானவை நாடக வடிவில் இடம் பெற்றிருக்கின்றன. குறும் புதினங்களும், புதினங்களும், சிறுகதைகளும், ஏராளமாக எழுதி 'திராவிட நாடு' இதழில் அண்ணா வெளியிட்டுள்ளார். இவை தவிர பயணக்குறிப்புகள், துணுக்குகள் கருத்தளிக்கும் கதைகள், கவிதைகள் முதலானவை, அவருடைய படைப்பாற்றலைப் புலப்படுத்துவனவாக உள்ளன. இவ்வாறான வடிவங்களில் எல்லாம் அவர் எழுதிய போதிலும் அவருக்கு மிக விருப்பமான வடிவம் மடல் வடிவமேயாகும். அவர் தனி நிலையில் மடல் எழுதி அஞ்சல் செய்யும் வழக்கம் மிகுதியாக இல்லாதவர். கிழமைதோறும் அவருடைய மடல் தாங்கிய 'திராவிட நாடு' இதழ்கள் அவருடைய தம்பியர்களை நோக்கி அஞ்சலில் சென்று சேர்ந்தன. எதிர்பாத்துக் காத்துக்கிடந்து, வந்ததும் வாங்கிப் படித்தவர் ஆயிரக்கணக்கானோர். அவர் தம் இயக்கம் அரசியல் கட்சியாக மாறிப் பொதுத்தேர்தலில் ஈடுபட்ட சூழலில் கடிதங்கள் வெளியாயின. ஆதலால் அவற்றின் முக்கியத்துவம் மிகுதியாயிற்று.

எந்தப் பிரச்சினை பற்றி எழுத நினைத்தாலும், அவருக்குக் கை கொடுத்து உதவியது மடல் வடிவமாகும். ஒவ்வொரு தம்பிக்கும் கட்சித் தொண்டருக்கும் தனித்தனியே எழுதிக்கொண்டிருக்க முடியாது. ஆகையால் நேர் நின்று உரைக்கும் கடித முறையைத் தேர்ந்தெடுத்து திராவிட நாடு இதழில் எழுதுவாராயினார். மடல்களின் நோக்கம் அன்றாட அரசியலை விவாதிப்பதாகும். கடிதங்களில் இடம் பெறும் அரசியல் அவர் கை வண்ணம் பட்டு இலக்கிய மெருகு பெறுவதைக் காண முடிகின்றது. கடிதத் தலைப்புகள் ஒவ்வொன்றும் அவருடைய மொழி ஆளுமையை வெளிப்படுத்துகின்றன. கடிதங்களில் இடையே கட்டுரை, மொழிப்பெயர்ப்பு, நாட்குறிப்பு, நெடுங்கதை, சிறுகதை, நாடகம், துணுக்கு, ஒரேவழி கவிதை ஆகிய வடிவங்களிலும் எழுதுவது அவருக்கேயுரிய தனித்தன்மையைக் காட்டுகின்றது. "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்ற தலைப்பில் எழுதிய தொடர்மலர்கள் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தி.மு.க.வில் இருந்து சம்பத் பிரிந்து செல்கின்ற காலகட்டத்தில் எழுதப்பெற்றதால் மிகவும் சூடும் சுவையும் கொண்டதும், திருப்புமுனையை ஏற்படுத்தியதும் ஆகும். தம்பியரை உண்மையுணரச் செய்தன. அண்ணாவுக்கு இருந்து வந்த ஆதரவு குறையவில்லை. மாறாகப் பெருகியது.



*3,500 ஆண்டுகளாக வளர்த்துப் பாதுகாக்கப்பட்டு வரும் பழமை மிக்க ஏகாம்பரநாதர் கோயில் மாமரம்*

அண்ணாவின் அரசியல் வெற்றிக்கு இன்றியமையாத காரணம் அவருடைய மடல்களேயாகும். "பல மாநாடுகளைவிட, செல்வாக்குள்ள வார இதழ் ஒன்று வல்லமையான வேலை செய்கின்றது என்று கூறவேண்டும். பல கட்டை வண்டிகளைவிட லாரி ஒன்று மிகுதியான வேலை செய்ய முடியும் அல்லவா? – என டாக்டர் மு.வ.கூறியது அண்ணாவிற்கு முற்றிலும் ஏற்புடையது. அண்ணா காட்டிய திசையில் தமிழகம் இன்றும் இயங்கிக்கொண்டிருக்கின்றது. இவ்வெற்றி அண்ணாவின் கடித இலக்கிய வெற்றியேயாகும்.

ஆகஸ்டு பதினைந்து; அக்கிரகாரத்தின் அதிசய மனிதர், வ.ரா., வாழ்க வசவாளர்கள்; கோடு உயர்ந்தது, குன்றம் தாழ்ந்தது – முதலான தலைப்புகளில் எழுதிய கட்டுரைகள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. பிற்காலங்களில் இக்கட்டுரைகளை நினைவுகூரும் வகையில் மாட்டுச்செய்து எழுதியவை சுவைமிக்க பகுதிகள். வாசகர்களைக் குழப்பங்களிலிருந்து விடுவித்து, தெளிவு உண்டாக்கி அண்ணாவின் அரசியல் தலைமைத் திறத்தை அவை மேம்படுத்தின.

*அடுத்த இதழில் முடியும்*

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை – 600 002. தொலைபேசி : 568926, 568927, 564906

218689



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



